9-25

Q234x K50,1
M85

83552

ஸர்புலிங்கலிம 1

திலப்பரகாசக் கோமகன்

காருத்தியரை ஆ. சுசீந்திரம்

செயிட்டரல் பரல் ... சென்று

148

துண பதாவது ஆக்கமாதேவு

உறுபத்தி கதி முதல்

25- ஆவது மாண்மைய கதி

முமெய்

ஒன்பதாவது

அக்கமாதேவியுற்பத்தி

கதி.

வேறு.

புரஞ்சுடு மேறுகைப் புனிதன் பாலமர்
கருந்தடங் கண்ணிதன் கலையு நந்தியும்
அருங்கண நாதரு மகனி லத்திடை
வருந்திற மறிந்தவ வருத்துக் கூறுவாம்.

(இ - ள்.) புரஞ்சுடு - திரிபுரமெரித்த—மேறுகைப்புனிதன் பால் - எருதியபுல்லியாகையையுடையபுனிதனாகிய பரமசிவனிடத்திற் பொருந்திய—அமர் - பொருந்திய—கருந்தடங்கண்ணிதன் - கரியவிசாலம்பொருந்திய கண்களையுடைய வுமையவளின்—கலையும் - சாந்தவிதழ்களையும்—நந்தியும் - நந்திகேசுரரும்—அருங்கணநாதரும் - அரியசிவகணநாதருமாகிய விவர்கள்—அகனிலத்திடை - அகன்றபூமியின்கண்—வருந்திறம் - அவதரித்ததிறத்தை—அறிந்தவா - யமக்குத்தெரிந்தவளவு—வருத்துக்கூறுவாம் - விரித்துச்சொல்லுதும். எ - று. புரமெனவே - திரிபுரமெனவும், புனிதனெனவே - பரமசிவனெனவும், கன்னியெனவே - உமையவளெனவும், கலையெனவே - ஸனவசாந்தவிதமெனவும் பெற்றாம். பெருந்தடங்கண்ணி; அன்மொழித்தொகை. இவ்வண்ணம்பெற்றது, ஐகக்குறிப்பு. ஐவரொடு விளை இயென்றுற்போதும். (௧)

பெடையொடு சுரும்பினம் பெரிது மார்ந்திடக்
கடிதட மளவுவாய்க் காவி ஞேடியே
மடையுடை மதமறை மலர்பெய் சோலைசூழ்
உடுதடை யுறுக ரொன்றுண் டாயிடை,

(இ - ள்.) பெடையொடுசுரும்பினம் - பெண்வண்டுகளுடனமைந்ளமடைய வாண்வண்டுகளும்—பெரிதுமாந்திட - மிக்கொலிக்க—கடிதட

மனவு - வாசனைபொருந்திய தடாகங்களாவும்—வாய்க்காலிலோடி - வாய்க்காலின் வழியாகவோடி—மடையுடை - மடைகளையுடைக்கத்தக்க—மதுமழைபெய்மலர் - தேன்மாரிகளைவிடாதுசொரிகின்ற மலர்களிறைந்த—சேர்லைசூழ் - சோலைகள்சூழ்ந்த—உடுதடையெனும் - உடுதடையெனவழங்கப்படும்—நகரொன்றுண்டு - ஓர்பட்டினமுண்டு—ஆயிடை - அவ்விடத்தில். எ - று. சுரும்பு - ஆண்வண்டு—இனம் - இவைபோன்ற வரிவண்டு கரிவண்டுமுதலியவற்றையெனினுமமையும். தடாகமலர்களிறைந்ததாதலின் கடியென்றது மணமென்றும். "சுட்டுநீளின்யகரமுந்தோன்றுதலென்றதனால்" ஆயிடையெனப்பட்டது. மலர்களைத்துவைக்கவெனக்குறிப்பிக்க இரைந்திடவென்றார். இரைந்திடவோடியென முடிக்கினுமமையும். மதும்மழை, இருபெயரொட்டுப் பண்பு. அல்லதுருவகமெனினு மமையும். (உ)

நன்மையென் பனவெலா முடைய னுன்மறைப்
புன்மையென் பனவெலாம் பொருந்தா னெனுந்
தன்மைதன் பெயரினா லறியத் தக்கவன்
நின்மல னெனவொரு நிகரி லாளுளன்.

(இ - ள்.) நன்மையென்பனவெலாம் - சன்மார்க்கமெனப்படுங்குணங்களனைத்தையும்—உடையன் - ஒருங்குடையவன்—நான்மறை - நான்குவேதங்களும்—புன்மையென்பனவெலாம் - அற்பமெனவிலக்கப்படுகின்றகுணங்களனைத்தையும்—பொருந்தான் - ஏலாதவன்,—எனுந்தன்மை - என்னுநிலைமையை—தன்பெயரினாலறியத்தக்கவன் - தனதியற்பெயரால் யாவரு முணரத்தக்கவன்—நின்மலனென - நின்மலனென்று—ஒருநிகரிலாளுளன் - பெயருள்ளநிகரற்றவோர்புருடனுளன். எ-று. விதிவிலக்கை, நன்மைபுன்மையென்றதென்க. வேதத்துக் கியைய வென்பார் - நான்மறையெனவும், இவனுக்குத்தருமெனக்குறிக்க - நின்மலனெனவும், இணையனரியனென்பது தோன்ற ஒருநிகரிலானெனவுங் கூறினார். (ந)

அவனெழின் மனையவ ளாடகத் தினைச்
சுவணமென் குதலெனச் சுமதி யென்பவள்
தவநிலை தன்னினுந் தலைமைத் தென்னவே
யுவமையி லில்லறத் தொழுகு நீர்மையாள்.

(இ - ள்.) அவன் - அத்தகையானது—எழின்மனையவள் - அழகியமனையாளெனப்படுவள்—ஆடகத்தினைச்சுவணமென்குதலென - ஆடகத்தைச்சுவர்ணமென்றல்போல—சுமதியென்பவள் - சுமதியென்னுமியற்பெயருடையவள்—தவநிலைதன்னினும் - மேலாயதவநிலைகளினும்—தலைமைத்தென்னவே - மேட்டிமைத்தெனயாவருங்கூறவே—உவமையிலில்லறத்து - ஒப்பின்றியில்லறநெறியின்கண்—ஒழுகுநீர்மையாள் - திரிகரணமொத்தவழாது நடக்குந்தன்மையுடையவள். எ - று. அவள்குணத்துக்கிசைந்தது சுமதியென்னும்பெயராதலின், ஆடகத்தினைச்சுவணமென்குதலெனவென்றார். உவமையிலில்லறமென்றதனால், மனைமாட்சிகுறிக்கப்பெற்றும். நீர்மை - குணம். (ச)

தூநிரு மலனுக்கச் சுமதி தன்னிடைத்
தானொரு மகளெனச் சார்ந்து தோன்றினாள்
ஆனுயர் கொடியினோ னங்கை தாங்குறு
மானுறழ் சத்துவ கலைம டந்தையே.

(இ - ள்.) தூநிருமலனுக்கு - பரிசுத்தநிருமலனென்போனுக்கு - அச்சுமதிதன்னிடை - மனைவியாகவிசைந்தவந்தச் சுமதியென்பவளிடத்தில்—தானொருமகளென - தானொருபுத்திரியாமெனக்கூற—சார்ந்துதோன்றினாள் - அவ்விடத்திற்சென்றுதித்தாள்—(அவளாரெனின்) ஆனுயர்கொடியினோன் - இடபக்கொடியையுடையபரமசிவன்—அங்கைதாங்குறு - தனதழகியகையில்தாங்காதமான்போன்றவுமையவளுக்கு—உறழ் - ஒத்த—சத்துவகலைமடந்தை - சாத்துவிதகுணப்பெண்ணுனவள், எ-று. நிருமலனனென்னும்பெயரைவிளக்கத்தூவென்றார். உமையவளைத்தாங்காததால் தாங்குறுமானென்றார். இங்கேமானென்பதுவமையாகுபெயர். அர்த்தபாகம்பெற்றவளாதலினென்க. ஆனுயர்கொடி, இடபம்வரைந்தகொடி. (ரு)

மதிபெறு கடலென மகளை யீன்றவர்
நதிபெறு சடைமுடி நம்பன் பாலுறு
கதிபெறு மதிநுதற் சுரும்பைப் பெற்றுநற்
றுதிபெறு மலையென மகிழ்ச்சி துன்னினார்.

(இ - ள்.) மதிபெறுகடலென - சந்திரனையீன்றபாற்கடலைப்போல—மகளையீன்றவர் - மகளைப்பெற்றதாய்தந்தையர்—நதிபெறுசடைமுடி - பரமசிவனிடத்திலுள்ள - கங்கைதங்கியசடாமகுடத்தையுடைய—நம்பன்பாலுறு - கதிபெறு - உச்சியிடத்தைத்தனக்கிடமாகப்பெற்ற—மதி-

அர்த்தசந்திரனையொத்த—நுதல் - நெற்றியையுடைய—கரும்பை - கரும்புபோன்றவுமையவளை—பெற்ற - முன்னர் மகளாகப்பெற்ற—நற்றவம் பெறுமலையென - நல்லபுகழ்பெற்ற மலையரசனைப்போல—மகிழ்ச்சிதுன்னினார் - மிக்ககளிப்படைந்தனர். எ - று. யாவர்க்குந்தக்க சுவையினைப் புறவளித்தலி, னுவமையாகுபெயராக்கக் கரும்பென்றார். மலையென ல், இடவாகுபெயர். (௬)

நெறிமுறை நிருமல னீறு சாத்தியே
யறிவரு மஞ்செழுத் தறைந்து மெய்யுணர்
குறியினைத் தரித்தனன் குழவி யாகிய
பொறியிகர் வுறுமொரு புதல்விக் கென்பவே.

(இ - ள்.) நெறிமுறை - வேதநெறிக்கிணங்க—நிருமலன் - நிருமலனென்போன்—நீறுசாத்தி - விபூதிதரித்து—அறிவருமஞ்செழுத்தறைந்து - கிலையினையதெனவெட்டவொண்ணாத பஞ்சாட்சரத்தையுபதேசித்து—மெய்யுணர்குறியினை - உண்மையுணரத்தக்கவிட்டலிங்கமாகிறகுறியை—தரித்தனன் - மார்பிலணிந்தனன் —குழவியாகிய - குழந்தைப்பருவமுள்ள—பொறிநிகரும் - இலக்குமியையொத்த—ஒருபுதல்விக்கு - ஒப்பற்றமகளுக்கு—என்ப - என்றறிஞர் கூறுவர். எ - று. மெய்யெனல், உடலிலெனிருமையும். குழவியாகிய புதல்வியென முடிக்க. (௭)

இந்துவார் சடையினோ னிடத்த ளேயெனுஞ்
சிந்தையான் மகளைமா தேவி யென்றொரு
சந்தநா மங்கொடு தான மைத்தனன்
தந்தையா தற்குநற் றவம்பு ரிந்தவன்.

(இ - ள்.) இந்து - சந்திரனையணிந்த—வார் - நீண்ட—சடையினோனிடத்தளேயெனும் - சடையையுடைய பரமசிவனதிடதுபாகத்திலமர்ந்தவுமையவளேயென்றெண்ணும்—சிந்தையான் - சிந்தையையுடையதந்தையானவன்—மகளை - தனதுபுத்திரியை—மாதேவியென்று - மாதேவியென்று—ஒருசந்தநாமங்கொடு - ஒர்வண்ணப்பெயர்கொண்டு—தானமைத்தனன் - தானமைத்தான் —தந்தையாவதற்கு - அவளுக்குத்தகப்பனாதற்கு—நற்றவம்புரிந்தவன் - முன்னர் நல்லதவத்தைச்செய்தவன். எ - று. உமையவளுக்குத் தேவியெனப்பெயரிருத்தலின், மாதேவியென்றார். சடையினோனிடத்தளெனல்; அருத்தாபத்தி. (௮)

அறிவரு ளாதர வடக்கம் வாய்மைமெய்த்
துறவுநல் லொழுக்கமே தூய்மை யென்றிவை
யுறவொடு குழவியா யுடன்வ ளர்ந்திட
மறுவறு சுமதிதன் மகள்வ ளர்ந்தனள்.

(இ - ள்.) அறிவு - அந்தர்முகத்தறிவையும்—அருள் - கருணையும்—ஆதரவு - நித்தியானந்தத்தையும்—அடக்கம் - பொறிவழிச்செல்லாதவடக்கமும்—வாய்மை - பொருளில்லவற்றைப் பொருளாகக்கொள்ளாதவாய்மையும் —மெய்த்துறவு - உபாதித்திரியத்தையும் பற்றெனக்கழியுமெய்த்துறவும்—நல்லொழுக்கம் - மெய்யெனுமதெனகிற்குநல்லொழுக்கமும்—தூய்மை - மும்மலங்களுக்கிலக்காகா தூய்மையும்—என்றிவையுறவொடு - என்றுகூறப்பட்டுமின்னனமாயவுறவினரோடு —குழவியாய் - குழந்தைப்பருவமாக—உடன்வளர்ந்திட - அவையுமொருங்கே வளர—மறுவறுசுமதிதன் - குற்றமற்றசுமதியென்பவனுடைய—மகள் வளர்ந்தனள்—மகளாகியமாதேவியென்பவள் வளர்ந்தாள். எ - று. உடனென்பதினால், அவையுமொருங்கே வென்றும். என்றிவையென்பதனால், இவைபோல்வன பிறவுமெனக்கொள்க. கொள்ளவே - அப்புறவுக்கிடம் பெருளெனப் பெற்றும். பெறவே, சாத்துவிதகுணமெனக்கண்டாம். (௯)

வாடிய மருங்குலம் மாயை தோன்றுநாள்
கோடிய சிலைகொடு தவங்கு லைப்பவே
யோடிய மதனன்மா தேவி யோங்குநாள்
வீடிய சிலையனாய் வீழ்ந்து மாழ்கினான்.

(இ - ள்.) வாடியமருங்குல் - சுருங்கியவிடையையுடைய—அம்மாயை தோன்றுநாள் - அந்தமாயைதோன்றுநாளில்—கோடியசிலைகொடு - வளைந்தகருப்புவில்லையெடுத்துக்கொண்டு—தவங்குலைப்பவே - மகான்களதவத்தைக்குலைப்பான்வேண்டியே—ஓடியமதனன் - உவகைகொண்டோடியமன்மதன்—மாதேவியோங்குநாள்-மாதேவிவளருநாளில் —வீடியசிலையனாய் - மனஞ்சோர்ந்தவில்லையுடையவனாய்—வீழ்ந்துமாழ்கினான் - வலிகுன்றியொன்றுந்தோன்றாது மயங்கினான். எ - று. மாயைதோன்றிய நாளில் தைரியங்குன்றாத மன்மதன், மாதேவிதோன்றியநாளில் தனது தைரியங்குன்றுதற்கேது, அறிவருளாதிய குணங்களா லென்க. (௧௦)

விழுந்தன கொடியநீ வினைப்ப ரப்பெலாம்
எழுந்தன நல்லறம் யாவுந் திங்களங்
கொழுந்தென நிருமலன் குமரி யோங்குநாள்
முழங்கின சிவாகம முற்று மெங்குமே.

(இ-ள்.) விழுந்தன - நசித்தன —கொடியதீவினைப்பரப்பெலாம் கொடிதாகியதீவினையின் பெருப்பனைத்தும் —எழுந்தன - மிக்குயர்ந்தன— நல்லறம்யாவும் - நல்லதரும பரிபாகுபாடனைத்தும் —திங்களங் கொழுந்தென - அழகியமூன்றாம்பிறைவளருமாறுபோன்று —நிருமலன் குமரியோங்குநாள் - நிருமலனென்னும் மகள்வளருநாளில்—முழங்கின- கோஷித்தன—சிவாகமமுற்றும் - சிவாகமமனைத்தும் —எங்கும் - எவ் விடத்தும். எ - று. பரப்பு-விரிவு. (௧௧)

வேறு.

ஈங்குமா தேவி யின்னண மிருப்ப வெம்பிரா னேவிய கண ங்கள், தாங்கள்வேண் டியவொவ் பதிதொறு முன்செய் தவத் தர்பா னன்மக வாகித், தீங்கிலாச் சித்த ராமையன் மாசிதே வனென் றிப்பெயர் முதலா, ஓங்குநா மங்கள் வேறுவே றுறக் கொண் டுற்றனர் நற்றவ முயன்று.

(இ-ள்.) ஈங்கு - இவ்விடத்தில்—மாதேவி - மாதேவியென்பவள்— இன்னணமிருப்ப - இவ்வாறிருக்க—எம்பிரானேவியகணங்கள் —எமது பிரானாகியபரமசிவனனுப்பியசிவகணங்கள்—தாங்கள்வேண்டிய - தாங்க ள்விரும்பிய—ஒவ்பதிதொறும் - சிறந்தபட்டணங்கடோறும் —முன்செ ய்தவத்தர்பால் - முன்பிறப்பிற்செய்ததவத்தினரிடத்தில் —நன்மகவா கி - நல்லகுழந்தையாகி—தீங்கிலா - குற்றமற்ற—சித்தராமையன்மாசி தேவனென்று - சித்தராமையனெனவும், மாசிதேவனெனவும்—இ ப்பெயர்முதலா - இடப்பட்டபெயர்முதலாக —ஓங்குநாமங்கள் - உயர் ந்தநாமங்களை—வேறுவேறுறக்கொண்டுற்றனர் - வெவ்வேறாகக்கொண் டிருந்தனர்கள்—நற்றவமுயன்று - நல்லதவங்களைச்செய்து. எ - று. கணங்கள் - சிவகணங்கள். நாமங்கள்கொண்டு - முயன்றுற்றனரெனமுடிக்க. ( )

பயக்குறு மினிய சங்கர பூசை பல்வகை நெறிபட வியற்றிச், செயற்கருஞ் செய்கை செய்தவ ரிருந்தார் தென்றிசைக் கயிலைபோற் சிறக்க, மயக்குறு மமண் வல்லிருண் மெலிய வயி

னவை மெனுமுடி மழுங்க, வியக்குறு சைவ மலரநன் னந்தி யெய்யவ னுதித்தமை யிரிப்பாம்.

(இ-ள்.) பயக்குறும் - முத்திபயக்கத்தக்க —இனியசங்கரபூசை - இனிமையாகியசிவபூசையை —பல்வகைநெறிபடவியற்றி - பலவகையாகு மாகமநெறிக்கிணங்கச்செய்து —செயற்கருஞ்செய்கைசெய்து - செய்தற் கரியசெய்கைகளைச்செய்து—அவரிருந்தார் - அத்தகைய சிவகணநாதர்களிருந் தார்கள் —தென்றிசைக்கயிலைபோற்சிறக்க - தென்றிசையானது கைலாய த்தைப்போற்சிறந்திருக்கவும் —மயக்குறுமமண்வல்லிருண்மெலிய - மாயா வசனத்தால்புத்தியைமயக்குகின்ற சமணமென்னும் கொடியவிருள்குன்ற வும்—வயினவமெனுமுடிமழுங்க - வயினவமதமென்னுமுடீசத்திரங்கட ழுமொளிகுன்றவும் —வியக்குறுசைவம் - அதிசயிக்கத்தருந்தசைவமென்னு மலர் —மலர - விகசிக்கவும் —நன்னந்தியெய்யவன் - நல்லநந்தியாகியசூ ரியன் —உதித்தமையிரிப்பாம் - அவதரித்ததைவிரிவாகச்சொல்லு வாம். எ-று. செயற்கருஞ்செய்கை - அவலாதப்பிரதிபலியாதிருத்தலை. சி றக்க மெலிய மழுங்க மலரவென்னும்வினையெச்சங்களையுதித்தவென்னும் வினைப்பகுதியோடுமுடிக்க. சிறக்கவிருந்தாரெனினுமமையும். (௧௩)

வாயின்மண் ணிட்டுக் கொண்டவன் றன்னை மதித்தநன் னுதலின்மண் ணிடாமற், பாயும்வெண் டிணாயிற் றுயில்பவன் ற னக்குப் பரிதியொன் றளித்தருண் முக்க, ணாயகன் றனையே கரு தியெண் ணீற்று னன்னுதல் விதியைய யணியுந், தூயநன் மறை யோர் தமக்கிட மாகுந் தாரிசிலா விங்குளா புரியே.

(இ-ள்.) வாயில்மண்ணிட்டுக் கொண்டவன்றன்னை - வாயின்மண்ணைப் போட்டுக்கொண்டகிருஷ்ணனை —மதித்து - ஒர்பொருளாகமதித்து —நன் னுதலின்மண்ணிடாமல் - நல்லநெற்றியிற்றிருமண்ணிடாமல்—பாயும்வெ ண்டிணாயில் - யோகநித்திரையெனும் வெள்ளையாகியவலைகளையுடையதிருப்பாற் கடலில்—துயில்பவன்றனக்கு - உறங்குமவிட்டுணுவுக்கு —பரிதியொன் றளித்தருள் - ஒர்சக்கரமீந்த —முக்கணாயகன்றனையே - முக்கண்ணனாகிய பரமசிவனையே—கருதி - சிரிகரணமொக்கச்சிந்தித்து—வெண்ணீற்றால்- விபூதியினால் —நன்னுதல்விதியையணியும் - நல்லநெற்றியாகியவிடத்தை அலங்கரிக்கும் —தூயநன்மறையோர்தமக்கு - பரிசுத்தமானநான்மறை யுணர்ந்தவந்தணர்களுக்கு—இடமாகும் - இடமாயுள்ள —தாரிசிலா - குற்றமற்ற —விங்குளாபுரி - விங்குளாபுரியென்னும்பட்டணமென்றவாறு. எ-று.

உலகையுண்டவனென்றது ; இழிவுபடற்கென்க. திருமன் - திருநாமம். இடாமலணியுமறையோரென முடிக்க. (௧௪)

கதிர்விளை செந்நெற் காடுஞ் கரும்பு சூழ்கருங் கதலியுங் கதுகும், புதுநறும் பாளைக் கமுகதுஞ் சூழ்முப் புடைப்பசுங் காயதெங் கதுரு, முதிர்கனித் தேமாந் தண்பொழில் பார்ப்பார்க் குயர்வுறு துயர்மிடி புகாம, லதிர்முர சியம்பும் வீதியந் நகரிற் கணிகள்வைத் திடுபடை காட்டும்.

(இ - ள்.) கதிர்விளை - கதிர்கள்விளைகின்ற—செந்நெற்காடு - செந்நெற்காட்டை—சூழ்கரும்பு - சூழ்ந்தகரும்புவனங்களும்—கரும்புசூழ் - அந்தக்கரும்பைச்சூழ்ந்த—கதலி - வாழைவனங்களும்—அங்கதுசூழ் - அங்கேஅந்தவாழைகளைச்சூழ்ந்த—புது - புதிய—நறும் - நல்ல—பாளை - பாளைகளையுடைய—கமுகு - பாக்குவனங்களும்—அதுசூழ் - அந்தப்பாக்குவனங்களைச்சூழ்ந்த—முப்புடை - மூன்றுபக்கத்தலையுடைய—பசுங்காய் - பசியகாய்கணிறைந்த—தெங்கு - தென்னந்தோப்புகளும்—அதுசூழ் - அந்தத்தென்னந்தோப்புகளைச்சூழ்ந்த—உதிர் - உதிருகின்ற—கனி - பழங்களையுடைய—தேம் - வாசனைபொருந்திய—தண் - குளிர்ச்சிதங்கிய—மாம்பொழில் - மாந்தோப்புகளும்—பார்ப்பார்க்கு - பார்ப்பவர்களுக்கு—உயர்வுறுதுயர் - மிக்கதுயரத்தையுடைய—மிடிபுகாமல் - தாரித்திரியமணுகாவாறு—அதிர் - ஒலிக்கின்ற—முரசியம்பும் - செயபேரிகை முழங்கும்—வீதி - வீதிகளும்—அந்நகரிற்கு - அந்தப்பட்டணத்திற்கு—அணிகள்வைத்திடு - அணிகள்வகுக்கின்ற—படை - சேனைகளைப்போல—காட்டும் - தோற்றும். எ - று. செந்நெற்காடும், கரும்பும், கதலியும், கமுகும், தெங்கும், மாம்பொழிலும், வீதிகளும், அணிகள்வகுக்கும் படைபோற்காண்டலின், அணிகள்வைத்திடுபடைகாட்டுமென்றார். இது தலிமிதுருவகமெனப்பெயர்பெறும். செந்நெற்காடுமுதல் - வீதியிறுவாயவிவ்வேழும் பார்ப்போர்க்குப் படைபோற்காட்டுமென முடிக்க. (௧௫)

விருந்திடுக் கிடுவா ரன்னமந் நகரின் வேதியர் மடந்தைய ரெல்லாம், பொருந்துமன் னத்திற் கிடுவன விருந்து புனல்வயற் செங்கம லங்கள், வருந்துறுநுண் ணிடைநன் மாதர்கைம் மலர்க்கு வண்டினைக் கொடுப்பர்பே ரின்பந், தருந்தனி நகர்சூழ் தடங்கள்வண் டிற்குத் தாண்மலர் கொடுத்திடு மன்றே.

(இ - ள்) அந்நகரின் - அந்நகரத்திலுள்ள—வேதியர்மடந்தையரெ

ல்லாம் - பிராமணஸ்திரீகளனைவரும்—அன்னம் - உணவை—விருந்திடுக்கிடுவார் - விருந்தினருக்கிடுவோர்கள்—புனல் - சலத்தையுடைய—வயல் - வயலிலுள்ள—செங்கமலங்கள் - செந்தாமரைகள்—பொருந்தும் - அவ்விடத்திற்பொருந்திய—அன்னத்திற்கு - அன்னப்பட்சிகளுக்கு—இடுவனவிருந்து - விருந்திடுவனவாம்—வருந்தும் - பாரந்தாங்வருந்தும்—நுண்ணிடை - மிகச்சுருங்கியவிடையையுடைய—நன்மாதர் - நற்குணமமைந்தமாதர்கள்—கைம்மலர்க்கு - தமதுகைகளாகியதாமரைமலர்களுக்கு—வண்டினைக்கொடுப்பர் - வளையலிடுவோர்கள்—பேரின்பந்தரும் - மிக்கசுகத்தைத்தருகின்ற—தனி - ஒப்பற்ற—நகர்சூழ்தடங்கள் - பட்டணத்தைச்சூழ்ந்ததடாகங்கள்—வண்டிற்கு - வண்டுகளுக்கு—தாண்மலர் - தண்டையுடையமலர்களை—கொடுத்திடும்-விருந்தாகக்கொடுக்கும். எ - று. அன்று - ஏ - அசைகள். அன்னம் - உணவின்பொது. கைம்மலர் - உருவகம். பேரின்பம் - மிக்கபோகம். வருந்துதற்குக்காரணம் - தனங்களாதலின்பொதுப்படப்பாரமென்றும். கைக்கென்றமையால் - வண்டினைவளையலென்றும். கொடுப்பர் - இலக்கணை. (௧௬)

இந்நகர் வாழு மறையவர் செய்யும் யாகதூ மமபடிந் தன்றே, பொன்னகர் வாணர் நிறைந்தவா யுளராய்ப் பொருந்துத லிந்நகர் மறையோ, ருன்னரு மறுவா னெருப்பினை வளர்த்திட் டொழுகுநீர் காட்டுறி னன்றிப், பின்னொரு செயலாற் கலியுகந் தன்னிற் பெருகுநீர் காணுறப் படுமோ.

(இ - ள்.) இந்நகர்வாழும் - இந்தப்பட்டணத்தில்வாழும்—மறையவர் செய்யும் - பிராமணர்கள்செய்யும்—யாகதூமம்படிந்தன்றே-யாகபுகைபடிந்தல்லவோ—பொன்னகர்வாணர் —தேவலோகத்தில்வாழ்பவர்கள்—நிறைந்தவாயுளராய் - பூரணாயுசுடையவர்களாய்—பொருந்துதல் - தங்குதல்—இந்நகர்மறையோர் - இந்தப்பட்டணத்திலிருக்கும் பிராமணர்—உன்னரும் - நினைத்தற்கரிய—மறுவால்-மநுசாஸ்திரத்தால்—நெருப்பினைவளர்த்திட்டு - யாகத்தைவளர்த்து—ஒழுகுநீர்காட்டுறினன்றி - நடத்திலைமையைக்காட்டினலல்லாமல்—பின்னொருசெயலால் - மற்றொருமுயற்சியினால்—கலியுகந்தன்னில் - கலியுகத்திலும்—பெருகுநீர் - மிக்கமழைநீர்—காணுறப்படுமோ - காணப்படுமோ. எ - று. இதனால் தேவர்களுக்குந்தீர்க்காயுளும், இந்நகர்க்குக் குறையாநீர்வளமும் வந்ததற்கேதுவமைப்புரைத்து. கலியுகத்திலுமென்றவும்மை, தொக்கது. காணுறப்பட

மோ வென்னுமோகாரம் எதிர்மறை. படிந்தன்றோ வென்னுமோகாரம் வினா. யாகத்தைச்சிறப்பிக்க கலியுகங் கூறப்பட்டது. (௧௭)

இனையமா நகரி னந்தணர்க் கெல்லா மிறைமைபூண் டோ
னொருமறையோ, நினைவெலா மரன்றா ளினுமுரை யெல்லா நி
ருமலன் றாமத்தினுஞ் செய்யும், வினையெலா மவன்பூ சனையினும்
வைத்தோன் வேதமு மொழுக்கமும் வல்லான், மனையுளா னெ
னினுந் துறந்தவர்க் கொப்பான் மற்றவ னாமமா தரசன்.

(இ - ள்.) இனையமாநகரின் - இத்தகையதாயபெரியபட்டணத்தில்—அந்தணர்க்கெல்லாம் - பிராமணர்களனைவரினும்—இறைமைபூண்டோன் - தலைமையிற்சிறந்தவனாகிய—ஒருமறையோன் - ஒருபிராமணன்—நினைவெலாம் - தனதெண்ணங்களனைத்தையும்—அரன்றாளினும் - பரமசிவனுடையதிருவடியினும்—உரையெலாம் - தனதுவசனங்களனைத்தையும்—நிருமலன்றாமத்தினும் - பரமசிவனது நாமத்தின்கண்ணும்—செய்யும்வினையெலாம் - தனதுகிருத்தியங்களனைத்தையும்—அவன்பூசனையினும் - அவனைப்பூசித்தலின்கண்ணும்—வைத்தோன் - வைத்தவன்—வேதமுமொழுக்கமும் - வேதமுணர்தலினும் அவ்வாறுவழுவின்றிநடக்குதலினும்—வல்லான் - வல்லமையுள்ளவன்—மனையுளானெனினும் - தானில்லறத்தனாயினும்—துறந்தவர்க்கொப்பான் - முற்றுந்துறந்தமுனிவரைப்போல்பவன்—மற்றவனாமம் - அவனதியற்பெயரோ—மாதரசன் - மாதரசனெனப்படுவதாம். எ - று. ஒருமறையோன், வைத்தோன், வல்லான், ஒப்பானெனமுடிக்க. மாதரசனும் என்னுமாக்கவினை தொக்குநின்றதென்க. (௧௮)

திருந்திய வனையான் றேவிதன் னாமஞ் செப்பின்மா தாம்பி
கை யென்பா, ளருந்ததி முதலாங் கற்புடை யார்த மருகிலே யூ
றின்றி முற்ற, விரந்தர மவளைக் கைகுவித் திறைஞ்சி நினைந்து
பின் பாயலிற் படிப்பார், கருந்தடங் கயற்கட் பூங்கொடி யனை
யாள் கற்பினை யாவரோ புகல்வார்.

(இ - ள்.) திருந்திய - விகாரங்களனைத்திநுநீங்கிய—அனையான்றேவிதன்நாமம் - அத்தகையானது மனைவியின்பெயர்—செப்பின் - சொல்லுமிடத்து—மாதாம்பிகையென்பாள் - மாதாம்பிகையெனப்படுபவள்—அருந்ததிமுதலாங்கற்புடையார் - அருந்ததிமுதலாகிய கற்புடைய

வர்கள்—தம் - தங்களுடைய—அருகில் - அரியசலங்காரிலமை—யூறின்றிமுற்ற - இடையூறின்றிநிறைவேறுவான்வேண்டி—நிரந்தரம் - அநுதினமும்—அவளை - அந்தமாதாம்பிகையை—கைகுவித்து - கைகூப்பி—இறைஞ்சி - வணங்கி—நினைந்து - சிந்தித்து—பின் - பின்பு—பாயலில் - தமதுசயனத்தில்—படிப்பார் - படுத்துக்கொள்வார்கள்—கரும் - கரிய—தடம் - விசாலம்பொருந்திய—கயல் - சேற்கெண்டைபோன்ற—கண் - கண்களையுடைய—பூங்கொடியனையாள் - பூங்கொடிபோல்பவளது—கற்பினை - கலங்காநிலையினை—யாவரோபுகல்வார் - யாவர்தான்சொல்லவல்லவர். எ - று. கற்புடையார்தமருகிலேமுற்றக் குவித்து, இறைஞ்சி, நினைந்துபடிப்பாரெனமுடிக்க. யாவரோவென்பதில் ஒகாரம்-வினா. ()

பூங்கொடி யனைமா தாம்பிகை பெருமை புனைந்துரை யன்
றுபட் டாங்கே, யோங்கிய பரசி வனென வேத முரைத்திடு
மருணந்தி வந்தான், றங்குற வவடன் வயிற்றிடை யதனாற் றக்
கவர் தகவில ரென்ப, தாங்கவர் பயந்த புதல்வனாற் றெளியு மொ
ழியினென் றறைகுவர் பெரியோர்.

(இ - ள்.) பூங்கொடியனை - பூங்கொடிபோன்ற—மாதாம்பிகை - மாதாம்பிகையென்பவளது—பெருமைபுனைந்துரை - பெருமைகலந்தவலங்காரவசனங்கள்—அன்றுபட்டு - அன்றுமுதல்—ஆங்கே - அவ்விடத்தில்—ஓங்கிய - சிறப்புற்றன—அபரசிவனென - அபரசிவனென்று—வேதம் - வேதமானது—உரைத்திடும் - துதிக்கத்தக்க—அருள் - கிருபையையுடைய—நந்திவந்தான் - நந்திதேவன்அவதரித்தான்—தாங்குற - சுமக்க—அவடன்வயிற்றிடை - அவளதுவயிற்றில்—அதனால் - அக்காரணத்தினால்—தக்கவர்தகவிலரென்பது - தக்கவர்தகவிலரென்னும் யோகமாம்—ஆங்கவர்பயந்த - அந்தத்தாய்தந்தைகள்பெற்ற—புதல்வனால் - புத்திரனால்—தெளிய - தெளிவுபெற—மொழியினென்று - அம்மொழிப்பிரயோகத்தை யுணர்மினென்று—அறைகுவர்பெரியோர் - சத்துக்கள்கூறுகிற்பர். எ - று. பரசிவம் - அபரசிவமென்றிருபாற்று. பரசிவமெனல், அபரோட்சத்தை. அபரசிவமெனல், பரோட்சத்தை. தாங்குறவவடன்வயிற்றிடை நந்திவந்தானெனமுடிக்க. தக்கவர்தகவிலரென்பது; தாய்தந்தையரைக்குறிக்குமென்க. புதல்வனெனல், அவரதெச்சத்தை. அனவெனல், இடைக்குறை. (௨௦)

ஐந்தொழி லொருவன் றிருவுள மகிழ மறுதொழி லாளன
மா தரசன், பைந்தொடி கொழுநற் றொழுதெழு தொழிலாள் ப

ரிந்துதீ வளர்ப்பவன் மறையோன், செந்திரு வனையாள் விருந்
தினர் வயிற்றிற் றீயவிப் பவளிவர் பெருமை, நந்தெழின் மல
ரோன் சொன்மக ளிருக்கு நாவினும் புகன்றிடப் படாதே.

(இ - ள்.) ஐந்தொழில் - பஞ்சகிருத்தியத்தையுடைய—ஒருவன் - ஒப்பற்றபரமசிவனது—திருவுளமகிழும் - திருவுளமகிழுமாறுசெய்யத்தக்க—அறுதொழிலாளன் - ஆறுகிருத்தியங்களையுடையவன்—மாதரசன் - மாதரசனென்போன்—பைந்தொடி - பசியவளையலையணிந்தவன்மனைவி—கொழுநன் - தனதுநாயகனை—தொழுதெழுதொழிலாள் - வணங்குதலையேதனதுதொழிலாகவுடையவள்—பரிந்து - விரும்பி—தீவளர்ப்பவன்மறையோன் - யாகம்வளர்க்கு மந்தணன்—செந்திருவனையாள் - இலக்குமிபோல்பவள்—விருந்தினர்வயிற்றில் - விருந்தினரதுவயிற்றில்—தீயவிப்பவள் - உதராக்கினியைத்தணிப்பவள்—இவர்பெருமை - இவ்விருவரது பெருமையானது—நந்தெழின்மலரோன் - அழகுமிக்கதாமரைமலரையுடையபிரமன்—சொன்மகளிருக்கும் - சரஸ்வதிதங்கும்—நாவினும் - நாவினாலும்—புகன்றிடப்படாது - சொல்லப்படாது. எ - று. ஐந்தொழிலாவன; சிருட்டி, திதி, சங்காரம், திரோபாவம், அநுக்கிரகம். அறுதொழிலாவன; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், என்பன. அறுதொழிலாளன், மாதரசன், தீவளர்ப்பவன், மறையோன், எனவும்; தொழுதெழுவாள், செந்திருவனையாள், தீவளர்ப்பவள் எனவும்பிரித்துக்கூட்டிப் பொருள்கொள்க. விருந்தினர்; நூதனமாகவருபவர். (௨௧)

இன்னமா தரசன் றேவிதன் வயிற்றி னிவ்வுல கெலாஞ்
செய்புண் ணியத்தான், மன்னுமா ரளிகள் விருந்துணக் காமர்
வல்லியின் மலர்மலர் வதுபோ, லென்னையா ளுடைய நந்திவா
னவன்று னெய்திவந் துதித்தன னன்று, சென்னியா லமரர் தொ
ழுதுபூ மாரி சிந்தினர் துந்துமி முழங்க.

(இ - ள்.) இன்ன-இத்தகையதாய—மாதரசன்றேவிதன்வயிற்றின் - மாதரசன்மனைவியின் வயிற்றில்—இவ்வுலகெலாஞ்செய் புண்ணியத்தால் - இவ்வுலகனைத்துஞ்செய்தபுண்ணியத்தால்—மன்னும் - பொருந்திய—ஆர் - நிறைந்த—அளிகள் - வண்டுகள்—விருந்துண - விருந்தாகவுண்ண—காமர் - அழகிய—வல்லியின்மலர் - வல்லிக்கொடியின்மலர்கள்—மலர்வதுபோல் - பூப்பதுபோல்—என்னையாளுடைய - என்னையடிமையாகவுடைய—நந்திவானவன் - நந்திகேஸ்வரன்—எய்திவந்து - கைலையினின்றுவந்து—உதித்தனன் - அவதரித்தான்—அன்று - அப்போது—சென்னியால் - சிரசினால்—அமரர் - தேவர்கள்—தொழுது - வணங்கி—துந்துமிமுழங்க - தேவதுந்துமிமுழங்க—பூமாரிசிந்தினர் - புஷ்பமாரிபொழிந்தனர். எ - று. நந்திவானவன்மலர்பூப்பதுபோல்தேவிதன்வயிற்றில்வந்துதித்தனனெனமுடிக்க. (௨௨)

எங்குரு நந்தி தோன்றுநாட் புதுமை யெஞ்சொல்வாங் க
ண்டுமுட் டென்னும், வெங்குண வமண ருளத்தெறி மழுவோன்
வேடங்கண் டஞ்சலி செய்ய, வங்கொரு நேயம் பிறந்தது திருமா
லடியவ ருளத்தினி லெங்கள், சங்கர னிறைவ னெனவொரு ஞா
னஞ் சார்ந்தது தமையறி யாமல்.

(இ - ள்.) எங்குருநந்தி - எமதுகுருவாகியநந்திதேவன்—தோன்றுநாள் - உதிக்குநாளில்—புதுமை யெஞ்சொல்வாம் - நடந்தபுதுமையையாதென்றுகூறுவோம்—கண்டுமுட்டென்னும் - கண்டுமுட்டெனக்கூறும்—வெங்குணம் - கொடியகுணங்களையுடைய—அமணர் - சமணர்கள்—உளத்து - தமதுள்ளத்தில்—எறி - எறிகின்ற—மழுவோன் - மழுவேந்திய பரமசிவனது—வேடங்கண்டு - விபூதிமுதலிய வேடங்கண்டு—அஞ்சலிசெய்ய - வணங்க—அங்கொருநேயம்பிறந்தது - அங்கோர் நேயந்தோன்றிற்று—திருமாலடியவருளத்தினில் - விஷ்ணுபத்தருள்ளத்தில்—எங்கள்சங்கரன் - நமதுபரமசிவனே—இறைவனென - மேலாயகர்த்தாவென்று—தமையறியாமல் - தங்களையறியாமல்—ஒருஞானஞ்சார்ந்தது - ஓர்ஞானமுதித்தது. எ - று. கண்டுமுட்டென்பதோடு, கேட்டுமுட்டென்பதையும் வருவிக்க, ஒன்றினைமுடித்தலென்பதினால். ()

கொலைகள வழுக்கா றவாவொடு வெகுளி கொடுஞ்சொல்
பொய் பயனில கூற, லிலையுறீஇ யொருவன் செய்நன்றி மறத்த
லிந்தனை வஞ்சனை பிறர்தஞ், சிலையுதன் மடவார் கருதலென்
றினைய தீமைக ளியாவும்போ யினவா, னலமலி தரும மூர்த்தி
யா யினன் னந்திவா னவன்புவி வருநாள்.

(இ - ள்.) கொலை - கொலையும்—களவு - களவும்—அழுக்காறு - பொறாமையும்—அவாவொடு - பிறர்பொருளையவாவுதலும்—வெகுளி - ஒழுங்கின்றிகோபித்தலும்—கொடுஞ்சொல் - கொடூரமானசொல்லும்—பொ

ய் - பொய்சொல்லலும்—பயனிலகூறல் - பயனின்றியமொழிகூறலும—நிலைபழிஇ - நிலைபிறழ்ந்து—ஒருவன்செய்நன்றி - ஒருவன்செய்தநன்றியை—மறத்தல் - மறந்துவிடுதலும்—நிந்தனை - பழிகூறலும்—வஞ்சனை - வஞ்சனைசெய்தலும்—பிறர்தம் - அயலாரது—வில்லுறுதல் - வில்லையொத்த நெற்றியையுடைய—மடவார்கருதல் - மாதரைத்தழுவவினைத்தலும்—என்று - என்றுசொல்லப்பட்ட—இனையதீமைகளியாவும் - இவ்வணமாய தீயகுணங்களனைத்தும்—நலமலி - நன்மைமிகுந்த—தருமமூர்த்தியாகிய - தருமஸ்வரூபியாகிய—நல் - நல்ல—நந்தியானவன் - நந்திதேவர்—புவிவருநாள் - பூமியிலுதித்தகாலில்—போயின - ஒழிந்தன. எ - று. ஆல் - அசை. நிலைபழிஇயென்பது; சொல்லளபெடை. (உ௪)

நாடலை தந்தெம் மையா ணந்தி தாயகட் டிலுநின்று
தரைமே லேடவிழ் மலர்வாண் முகமது தோன்ற வெழுந்தரு
ளுதன்முனங் குருவாய்க், கூடல சங்க மேசன்றாய்க் கொளித்து
க் குறுகிநன் னுதலினீ றணிந்து வீடருள் பரம சிற்கன லிங்க
மெய்யுறத் தரித்தன னம்மா.

(இ - ள்.) தாடலைதந்து - சிரமேல்திருவடிசூட்டி—இங்கு - இவ்விடத்தில்—எம்மையாணந்தி - எம்மையடிமைகொண்டநந்திதேவன்—தாயகட்டிலுநின்று - தாய்வயிற்றிலுமிருந்து—தரைமேல் - பூமியின்மேல்—ஏடவிழ் - இதழ்கள்விரிந்த—மலர் - தாமரைமலர்போன்ற—வாள் - ஒளியுள்ள—முகமதுதோன்ற - முகந்தோன்ற—எழுந்தருள்தன்முனம் - பிறப்பதற்குமுன்னரே—குருவாய் - குருமூர்த்தியாய்—கூடல்சங்கம் - கூடலசங்கமென்னுந்தலத்திலுள்ள—ஈசன் - பரமசிவன்—தாய்க்கொளித்து - தாயாருக்காகவொளித்து—குறுகி - அருகேவந்து—நன்னுதலில் - நல்லநெற்றியில்—நீறணிந்து - விபூதிதரித்து—வீடருள் - முத்திதருகின்ற—பரமசிற்கனலிங்கம் - இஷ்டலிங்கத்தை—மெய்யுறத்தரித்தனன் - மார்பிற்றரித்தனன். எ - று. அம்மா, வியப்புமொழி. கூடலசங்கமேசன், குருவாய், தாய்க்கொளித்து, குறுகி, நீறணிந்து, மெய்யுறத்தரித்தனனென, முடிக்க. தாயகட்டிலுமென்றவும்மை, புவிவருநாளெனலைத்தழுவவிந்ததுதழீயது. (உ௫)

தரித்தபின் றனது மேனிதோன் றுமற் றுயெதிர் நின்றிட
பப்பேர், திரித்துநல் வசவ மென்றுபே ரிட்டுச் சென்றனன் சி
வன்றனைக் குருவா, யொருத்தர்தம் மிடத்திற் பாவனை செய்கெ

ன் றுரைப்பவ ருரைகேட்ட தானே, யருட்குரு வடிவா வந்த
ருள் புரிந்த வாலமா ரூலபா ணியனே.

(இ - ள்.) தரித்தபின் - தரித்தபின்னர்—தனதுமேனிதோன்றால் - தனதுவடிவங்காணப்படாமல்—தாயெதிர்நின்று - தாயினெதிர்நின்று—இடப்பேர்திரித்து - இடப்பப்பேரைத்திரித்து—நல்வசவனென்றுபேரிட்டு - நல்லவசவதேவனென்றுபேரிட்டு—சென்றனன் - போயினன்—சிவன்றனை - சிவனை—பாவனைசெய்கென்று - பாவனைசெய்யக்கடவாயென்று—ஒருத்தர்தம்மிடத்தில் - ஒருவரிடத்தில்—குருவாயுரைப்பவர் - குருவாகவந்துபதேசிப்பவரது—உரைகேட்ட - உபதேசங்கேட்ட—தானே - தானே—அருள் - கிருபைதங்கிய—குருவடிவாகவந்து - குருமூர்த்தமாகவந்து—அருள்புரிந்த - அநுக்கிரகித்த—ஆலமார் - விடந்தங்கிய—சூலபாணியன் - சூலத்தைக்கையிலேந்திய பரமசிவன். எ - று. வ - சந்தை. அவற்றுளேழாமுயிரியுமென்னும் விதியால் இடபமென்றாயிற்று. அந்தவிடபமெனலைத்திரித்து வசவனெனப் பெயரிட்டதெனக. சூலபாணியன் தானேயருட்குருவாவந் தருள்புரிந்தனனென முடிக்க. அப்பிரத்தியட்சத்திற்கு வேறுவேறு பாவம். பிரத்தியட்சத்திற்கு வேண்டுமின்றெனக்குறிக்க வுரைகேட்டவென்றார். உரைகேட்டவென்பது செயவென்னும் வினையெச்சம், வந்தென்பதில் பகுதிகொண்டு முடிந்தது. தானேயென்பதில், ஏகாரந்தேற்றம். ஒருவனுக்கு மற்றொருவன் குருவாகின்று கடவுளைத் தியானஞ்செய்யென் றுபதேசித்தவிடத்தில், அப்பிரத்தியட்சத்திலாதலின் கடவுள் பாவவடிவாய் வேண்டும். கடவுளைக் குபதேசிப்பாரயின்பாவனைசெய்திற்கென்று நடந்தேனென்ற"தென்றனைக் குருவா லொருத்தர்தம்மிடத்திற் பாவனைசெய்கென் றுரைப்பவருரைகேட்டதானே யருட்குருவடிவாவந் தருள்புரிந்தாலமார் சூலபாணியனே யெனப்பட்டது." இங்ஙன்தோன்றுதற்குரியவன்பயன். (உ௬)

பிறந்தமெய்ஞ் ஞானப் பிள்ளைநன் னுதலிற் பெருகொளி
நீறுமொண் களத்திற், சிறந்தவ மலலிங் கமுங்கண் டெறிய
தவ ரனைவரும் வியந்து, மறைந்தரன் குருவா வந்தினை யி
னைந்து மகவினை வசவனென் றுருமே, ரறைந்தன னென்ன வ
விந்தன ரமல னறிவுணின் றுயிலிக்க வன்றே.

(இ - ள்.) பிறந்த - உதித்த—மெய்ஞ்ஞானப்பிள்ளை - மெய்ஞ்ஞானவடிவமானகுழந்தையின்—நன்னுதலில் - நல்லநெற்றியில்—பெருகொ

ளி - மிக்கவொளியையுடைய—நீறும் - விபூதியையும் —ஒண்களத்தில் - அழகியகண்டத்தில்—சிறந்தன - சிறப்புற்ற —அமலலிங்கமுங்கண்டு - நிர்மலமானவிஷ்டலிங்கத்தையுங்கண்டு—செறிந்தவரனைவரும் - அங்கே கூடிநின்றவரனைவரும்—வியந்து - அதிசயித்து—மறைந்து - ஒளித்துக்கொண்டு—அரன் - பரமசிவன் —குருவாய்வந்து - குருமூர்த்தமாகவந்து—இவைபுனைந்து - இவற்றைச்செய்து—மகவினை - குழந்தையை—வசவனென்றொருபேரறைந்தனன் - வசவனென்றோர்பெயரையிட்டனன்—என்னவறிந்தனர் - என்றறிந்தார்கள் —அமலன் - பரமசிவன்—அறிவுணின்றறிவிக்க - அறிவுக்கறிவாகநின்றறிவிக்க, எ-று. அன்று-எ-அசைகள், பிறந்தபிள்ளையெனமுடிக்க. செறிந்தவரனைவரும் கண்டு, வியந்து, அமலனறிவிக்கவறிந்தனரெனமுடிக்க. அரன், மறைந்து, குருவாய்வந்து, இவைபுனைந்து பேரறைந்தனனென முடிக்க. அன்றேயெனல் அல்லவாவென்றுரைகொளினுமமையும். பிறந்தபிள்ளைசெறிந்தவரென்றதனால், ஒன்றொழிபொதுச்சொல்லென்னும் விதியால் பெண்பாலாக்குக. குழந்தைபிறந்த வவசரத்தில் அவ்விடத்திலின்றோராதலின். (உஎ)

குறில்வழி லகரந் தனிநிலை யாயுங் கூடிய நகரமுன் னெ
ழுத்தென, றிரிபுறு வடிவந் திரிதல்போ னந்தி யடல்விடை
மெய்திரிந் துறினு, நறுமலர் விழியிற் கண்டவ ரெல்லா நந்தி
யே யென்றுள மகிழ்ந்தார், பெறுதவ முயன்ற வன்னையும் பி
தாவும் பெறுமுவ கையினை யாருரைப்பார்.

(இ - ள்.) குறில்வழி - குற்றெழுத்தின்முன்னின்ற—லகரம் - லகரமானது—தனிநிலையாயும் - நகரமாகத்திரிதலன்றி ஆய்தமாயும் —கூடிய - வருமொழிக்கு முதலாகவந்த —நகரமுன் - தகரத்திற்குமுன் —எழுத்தென்று - எழுத்தாக—திரிபுறுவடிவம் - திரிபுற்றவடிவம் —திரிதல்போல் - திரிந்துவருவதுபோல—நந்தி - நந்தியென்னும்—அடல் - வலம்பொருந்திய—விடைமெய் - ரிஷபவடிவம்—திரிந்துறினும் - மாறியிருந்தாலும்—நறு - நல்ல—மலர் - தாமரைமலர்போன்ற —விழியிற்கண்டவரெல்லாம் - நமது கண்களாற்கண்டவனைவரும் —நந்தியேயென்று - ந[illegible]யேயென்று—உளமகிழ்ந்தார் - உள்ளத்திற்களித்தனர்—பெறுதவமுயன்ற - பெறுதற்குத்தவஞ்செய்த—அன்னையும் பிதாவும் - தாய்தந்தையரிருவரும்—பெறுமுவகையினை - அடைந்தசந்தோஷத்தை—யாருரைப்பார் - யாவர்தாமெடுத்துச் சொல்லவல்லவர். எ-று. "குறில்

வழி லளத்தவ் வணையிறுய்த மாகவும்பெறூஉ மல்வழியானே" என்னும் விதியாற்போந்த, கல்தீது - கஃறீது, என்னுமுதாரணம்போல் ரிஷபவடிவந்திரிந்து மானிடவடிவமாயதை அறிகுறியாலுணர்ந்தனரெனக்கொள்க. தனிநிலையாயும், என்றவும்மை இறந்தது தழீஇயவெச்சவும்மை. திரிந்துறினு மென்றவும்மை இழிவு சிறப்பு. (உஅ)

நின்றநா டொடங்கிச் செய்கடன் முற்று மியற்றினன் மா
தா சன்றான், றோன்றுமோர் குழவிப் பதங்கடந் தெங்கோன்
சொல்குரு முன்னுறுங் காலை, யான்றமா மறைகண் முதலவா
த் தான்முன் னறிந்துள கலையெலா மறிந்தான், சான்றதா ம
தியமி ரவிவந் திறுப்பத் தன்கதிர் தானடை குதல்போல்.

(இ - ள்.) நின்றநாடொடங்கி - உதித்தநாள்முதல் —செய்கடன்முற்றும் - பிள்ளைக்குச்செய்யவேண்டிய வுபசாரங்களனைத்தையும் —மாதாசன்றான் - மாதாசனென்னுந்தந்தை—இயற்றினன் - செய்தனன்—தோன்றும் - உண்டாகப்பட்ட —ஓர்குழவிப்பதங்கடந்து - ஒப்பற்றகுழவிப்பருவநிலையினின்றுநீங்கி —எங்கோன் - எமதுகர்த்தனாகிய வசவதேவன்—சொல் - போதிக்கின்ற—குரு - குருவானவர்—முன்னுறுங்காலை - தனக்குமுன்னிருக்கும்போது—ஆன்ற - சிறந்த—மாமறைகண்முதலவா - மகத்தானவேதங்கள்முதலாக —தான்முன்னறிந்துள - தான்முன்படித்தறிந்த—கலையெலாமறிந்தான் - சகலகலைகளையும் விரைவிலறிந்தான்—சான்றதா - யாவருக்குஞ்சாட்சியாக—மதியம் - சந்திரன் —இரவிவந்திறுப்ப - சூரியன்தனை யிடத்துக்குவர —தன்கதிர் - தனதுபூரணகலையை—தானடைகுதல்போல் - தானடைவதுபோல. எ - று. மாதாசன் முன் செய்கடன்முற்று மீன்றநாடொடங்கிச்செய்ய, எங்கோன் குழவிப்பதங்கடந்து தான் முன்னறிந்துளகலையெலாம் சொல்குருமுன்னுறுங்காலை சான்றதாமதிய மிரவிவந்திறுப்பத் தன்கதிர் தானடைகுதல்போலறிந்தானெனமுடிக்க. இறுத்தல், சமீபித்தல். சந்திரன் தனக்கெதிரிலிரவி சிறிது சிறிது குறுகிவந்தருகியபோது தன் கலைகள் சிறிது சிறிதுவளர்ந்து முன்போற் பூரணகலைகளாவது யாவருக்குஞ்சாட்சியாய்க்காணப்படுவதுபோல இவனும் தான் முன்னறிந்துள கலைகளனைத்தையுங் குருவுக்குமுன் பூரணமா வுணர்ந்தனனென்க. (உகூ)

பரமனை யிகழ்ந்து நெறியலா நெறிபோய் பரமத யானை
யை யடக்க, வருமுறு கூர்மை யங்குச மென்ன வரனடி யாரொ

றாமையிற், கொருமழ விளங்கல் றெனவருள் வசவ னுறுரூர் ன் வளங்கொள்கல் யாண, புரமுற வமண குழாத்தொடு மிக்க புரவலன் விச்சல னிருந்தான்.

(இ - ள்.) பாமனைகழற்று - பரமவெத்தைக்கடந்து — நெறியலாநெறிபோம் - கல்யார்க்கல்லாநெறியிற்போகும் — பரமதயானையையடக்க - அன்னியசமயமாகியயானையையடக்குவான்வேண்டி — வரமுற - வரத்தாலமைந்து — கூர்மையங்குசமென்ன - கூர்மையுள்ள வங்குசம்போலவும் — அரனடியரெனுமாவிற்கு - சிவனடியார்களென்னும் பசுவிற்கு — ஒரு - ஒப்பற்ற — மழவிளங்கன்றென - மிக்கவிளமைதங்கிய கன்றுபோலவும் — அருள்வசவன் - கிருபாவடிவமாகியவசவதேவன் — ஒழுகுநாள் - முறைமுறைநடக்குநாளில் — வளங்கொள் - சகலவளப்பங்களுமமைந்த — கலியாணபுரம் - கலியாணபுரத்தில் — உற - பொருந்த — மிக்க - அதிகமாகிய — புரவலன்விச்சலன் - விச்சலனென்னுமரசன் — அமணக்குழாத்தொடிருந்தான் - சமணக்கூட்டந்தன்னைச்சூழவிருந்தனன். எ - று. வசவன் பரமதயானையையடக்க அங்குசமென்னக் கன்றென நடக்குநாளில் கலியாணபுரத்தில் விச்சலமன்னவன் அமணக்குழாத்தொடிருந்தனனென முடிக்க. நெறியலாநெறி - இயமமுதலியநெறியைமறந்தநெறியெனக்கொள்க. மழவிளமென்பது, ஒருபொருட்பன்மொழியெனினிவழாவென்னும் விதியாற்போந்த மிமிசைஞாயிறு புனிற்றிளங்கன்று என்னுமுதாரணம்போலுமென்க. உறவென்னும் நிகழ்காலவினையெச்சத்தை இருந்தானென்னும் வினைமுற்றோடு சேர்க்க. பரமதயானை - அடியாரொடுமா - உருவகம்) (௩௦)

படியில்கல் யாண புரமெனுந் நகர பரசிவ பத்தியால் விளம்பக், கொடியபுல் சமண மாகுவர் பிடித்தாங் குவலயத் திருந்திடக்கா, னடியவர் செல்ல மெனும்வச வேச னங்குடன் வந்தகா காம்பை, யுடன்வர வந்தவ் விச்சல னகரி னுற்றன னற்றவர் நெருங்க.

(இ - ள்.) படியில் - பூமியில் — கல்யாணபுரமெனும் - கல்யாணபுரமென்கின்ற — நகர - வஸ்திரத்திலமர்ந்த — கொடிய - கொடிதாகிய — புல் - அற்பத்தன்மையையுடைய — சமணமாக - சமணமதமென்னுமழுக்கு — மார்பிடித்தாங்கு - உழுமண்பற்றினாற்போல — பரசிவபத்தியால் விளம்ப - பெயத்திமேலீட்டாலவ்வஸ்திரம்வெளுத்தாற்போலும்படி —

வைத்து - பூமியில் — இருக்கிடெனான் - இருக்குமத்தானில் — அடியவர்செல்வமெனும் - அடியார்களது செல்வமெனத்தக்க — வசவேசன் - வசவதேவனென்பவன் — உடன்வந்தகாகாம்பை - கைலாயத்தினின்று தன்னோடேகூடவந்தகாகாம்பையென்பவள் — உடன்வர - தன்னைப்போலவவளுந்தொடர்ந்துவர — அந்தவிச்சலனகரின் - அந்தவிச்சலனென்பவனுடையபட்டணத்தில் — நற்றவர்நெருங்க - நல்லதவத்தினர் நெருங்கும்படியாக — உற்றனன் - இருந்தான். எ - று. புரமெனுந்தூசு - சமணமாக - உருவகம், உவர்பிடித்தாங்கு பரசிவபத்தியால்விளர்ப்ப என்பவை - உபமானம். வஸ்யம், வட்டம். வட்டித்தன்மையால் பூமியென்கும். இது குணவாகுபெயர். பூமியின்காகாம்பையுடன் வரலாவது; தன்னைப்போல வவளும் அல்லமனைப் பூமியில் தேடவரலெனக் கொள்க. இருக்கிடெனும் வினைத்தொகையாய சமயலிங்கமெனக். (௩௧)

மந்தனன் வசவ தேவனென் றுரைப்ப மன்னவன் விச்சலனறிந்து, மந்திரி யென்று மறைந்தவுட் பகையை மலிபொடி மூடிய தழலை, வெந்தழ லென்ன வறிந்திடா தெப்ப மென்கைநின் றெதலென வெதிர்போய், யுய்ந்திட வரிதாய்த் தன்மத மழிய வுடன்கொடு கோயிலுட் புகுந்தான்.

(இ - ள்.) வசவதேவன் - வசவதேவனென்பவன் — மந்தனன் - மந்தனன் — என்றுரைப்ப - என்றெவருஞ்சொல்ல — மன்னவன்விச்சலனறிந்து - விச்சலவரசனதையறிந்து — மந்திரியென்று - மந்திரியென்று — மறைந்தவுட்பகையை - மறைந்துநின்றவகப்பகையையறியாது — மலிபொடிமூடியதழலை - மிகுந்தநீறுபூத்த வக்கினியை — வெந்தழலென்னவறிந்திடாது - கொடியவக்கினியென்றறியாது — எப்ப - எடுப்பான் வேண்டி — மென்கைநின்றெதலென - மெல்லியகையாற்றொடுவதுபோல — எதிர்போய் - வசவனெதிர்சென்று — உய்ந்திடவரிதாய் - இனிமேல் நற்குணமையாய் — தன்மதமழிய - தனது சமணமதமழிக்க — உடன்கொடு - தன்னோடழைத்துக்கொண்டு — கோயிலுட்புகுந்தான் - தனதரண்மனையினுழைந்தனன். எ - று. மலிபொடிமூடிய தழலையெடுப்பதற்கென்றெதலென விச்சலமன்னவன் வசவதேவனையறிந்து மறைந்தவுட்பகையையறியாது மந்திரியென்றுன்னித் தன்மதமழியவுடன்கொடு கோயிலுட்புகுந்தானென முடிக்க. (௩௨)

பொருந்துமந் நகரி யிடைத்தவி சொன்று புரமத கோளரிக் குதவி, யிருந்திறம் புகழ்ந் தமரக்கூ வுணமே யிருந்தன

லரசனப் போதி, லிருந்திறற் றுனை காவலர் வேந்த ரமைச்சர் வெண் கவரிகொண் மாதர், நெருங்கிநிற் கரிய பேரவை யிடத் து நிகழ்ந்தமை யெடுத்துரைப்பாம்.

(இ - ள்.) பொருத்தும் - அலங்காரமமைந்த—அத்தாணியிடை - அர சிருக்கையின்கண் —ஓரிசொன்று - ஆசனமொன்றை—புதம்பகோளரிக் கு-அன்னியமதமாகிய யானைகட்கு—உதவி-கொடுத்து —இரும்-பெரிதா கிய—திறல் - பலத்தையுடைய —சிங்கஞ்சுமந்த - சிங்கஞ்சுமந்திருக்கின் ற—பூவணைமேல் - புட்பசயனத்தின்மேல் —இருந்தனனரசன்-அரசனி ருந்தான் —அப்போதில் - அந்தருணத்தில்—அருந்திறல் - மிக்கவலி மையுடைய—தானைகாவலர் - சேனாபதிகளும்—வேந்தர் - குறுநிலமன் னரும் - அமைச்சர் - மந்திரிகளும் —வெண்கவரிகொள் - வெண்சாமரை வீசுகின்ற—மாதர் —ஸ்திரீகளும் —நெருங்கிநிற்கரிய - நெருங்கிநிற்றற்கரி ய —பேரவையிடத்து - பெரிதாகிய சபையின்கண் —நிகழ்ந்தமையொன் று - விளைந்தவோரதிசயத்தை—எடுத்துரைப்பாம் - எடுத்துச்சொல்லுவா ம். எ - று. மதகோளரி ; உருவகம். (௬௩)

வேறு.

இந்திர னெதிர்நின் றுமே லிழை காதிற் செய்பொற் சுந்தர வோலை யொன்று சோர்ந்தெனச் சுருண்மு டங்க லந்தர முகட்டி னின்று மரசன்பே ரவையி டத்து வந்தெதிர் விழுந்த தொன்று மானிடர் மருண்டு நோக்க.

(இ - ள்.) இந்திரனெதிர்நின்றும் - தேவேந்திரனெதிரினின்றுமின் ற—மேலிழைகாதில் - அரம்பையினதுகாதினின்று—செய்பொன் - செ ய்தபொன்னாற்செய்த—சுந்தரவோலையொன்று - அழகியவோர்கம்மலான து—சோர்ந்தென - நழுவிவிழுந்தாற்போல —சுருண்முடங்கல் - ஓலைச்சு ருளொன்று—அந்தரமுகட்டினின்றும் - ஆகாசவுச்சியினின்றும் —அரச ன்பேரவையிடத்து - அரசனதுபெரியசபைக்கண் —வந்தெதிர்விழுந்த தொன்று-ஒன்றுவந்தெதிரில் விழுந்தது—மானிடர் - மனிதரனைவரும்— மருண்டுநோக்க - அதிசயித்துநோக்கும்படி. எ - று. மேலிழை , மன் மொழித்தொகை. சுந்தரவோலையொன்றுசோர்ந்தெனச் சுருண்முடங்க லொன்று அந்தரமுகட்டினின்றுமானிடர் மருண்டுநோக்கப்பேரவையிட த்து விழுந்ததெனமுடிக்க. (௬௪)

நின்றவ ரெடுத்து வந்து நெடுங்கையிற் கொடுப்ப வாங் கி, வென்றிகொண் மடங்க லன்னான் விரித்ததை யெழுத்து நோக்கித், தன்றலை யெழுத்தே யென்னத் தானுணர்ந் திலன் மயங்கி, வன்றிற லமண காலன் மலர்க்கையிற் கொடுத்தா னன்றே.

(இ - ள்.) நின்றவர் - அங்கிருந்தவர்கள்—எடுத்துவந்து - எடுத்துக் கொண்டுவந்து—நெடுங்கையிற் - நீண்டகையிற்கொடுக்க—வா ங்கி - வாங்கிக்கொண்டு—வென்றிகொள் - செயம்பொருந்திய —மடங்கல ன்னான் - ஆண்சிங்கம்போன்றவரசன்—விரித்ததை - அவ்வோலைச் சுரு ளைப்பிரித்து—எழுத்துநோக்கி-எழுத்தைப்பார்த்து —தன்றலையெழுத்தே யென்ன - தன்றலையெழுத்துப்போலவென்று —தானுணர்ந்திலன் ம யங்கி - தானொன்றுந்தோன்றாதவனாய்ச்சித்தங்கலங்கி - வன்றிறல் - மிக்க வலியுள்ள—அமணகாலன் - சமணர்களுக்கெமன்போன்றவசவனது—ம லர்க்கையில் - தாமரைமலர்போன்றகையில்—கொடுத்தான் - கொடுத்த னன். எ - று. அன்று - ஏ - அசைகள். நின்றவரெடுத்துவந்துகொடு ப்ப மடங்கலன்னான் வாங்கி விரித்துநோக்கி மயங்கிக் கொடுத்தானென முடிக்க. அரசனுக்கு நெடுங்கையெனவும், இவ்வுலகபாஷைகளிலொ ன்று மன்றாதலின் தன்றலையெழுத்தேயெனவுங் கூறினர். காலன் உ வமையாகுபெயர். சமணமதத்தைத் துமிசஞ்செய்தபாலனாதலி னமணகா லனெனப்பட்டது. (௬௫)

வாங்கிய முடங்க னோக்கி வசவனு மகனில் வோலை தாங்குமெய் நவிசின் மேழோர் தமனிய வைப்புண் டென்ற நோங்கிய தானஞ்செய் தோளா ரணக்குநான் காட்டு வேனென் றுய்ந்ததை யகழ்வித் தானவ் வரசர்கோ னதிச யிப்ப.

(இ - ள்.) வாங்கிய - கையில்வாங்கிய—முடங்கனோக்கி - ஓலைச்சுருளை விரித்துநோக்கி—வசவனுமகன் - வசவதேவன் —இவ்வோலை-இவ்வோ லையானது—தாங்கும் - சுமக்கின்ற—இவ்வுயிலின்கீழ் -உனதுசிம்மாசனத் தின்கீழ் —ஓர்தமனியவைப்பு - சொர்ணப்புதையலொன்று— உண்டென் றது - இருக்கின்றதெனத்தெரிவிக்கின்றது—ஓங்கிய - நீண்ட—தானஞ்செ ய் - ஸ்தம்பம்போன்ற—தோளாய் - தோள்களையுடையவரசனே—உன க்குநான் காட்டுவேனென்று - உனக்கதைப் பிரத்தியட்சமாகவிப்போதே காட்டுவேனென் றுரைத்து—அவ்வரசர்கோன் - அந்தராசாதிராசன்—

அதிசயிப்ப - அச்சரியப்படும்படி—நீங்கு - அவ்விடத்தில்—அரை - அந்தரங்கமாகனத்தை—அசங்கித்தான் - தோன்டச்செய்தான். எ-று. வசவனுயகன் கோக்கி அசந்வித்தானெனமுடிக்க. என்றெனல் சொல்லெச்சம். (௬௬)

அசும்பிட நிதியை வைப்போன் முடக பல்வரி லத்தில்
புருந்தினன் வந்து மெல்லப் புறப்படல் போலத் தோன்ற
மகிழ்ந்தன னரசர் கோமான் மற்றது கண்ட போதே
திகழ்ந்த வொன் பயமு மெக்கு நெஞ்சக களிசி யத்தான்.

(இ-ள்.) அசும்பிட - தோன்ட—நிதியை வைப்போன் து - தனப்புதையலொன்றுவைப—ஆடகமலே - சொர்ணபர்வதம்—நிலத்தில் - பாதாளத்தில்—புகுந்து - ஊடுருவிச்சென்று—இவன்வந்து - இவ்விடத்திலேயாங்கியந்து —மெல்லப்புறப்படல்போல - மெல்லப்புறப்படுதல்போல—தோன்ற - காணப்பட—அரசர்கோமான் - ராஜாதிராசன் - மகிழ்ந்தனன் - சந்தோஷித்தவனுய்—வசவனைக்கண்டபோதே - வசவனைத்தெரிசித்தபோதே—திகழ்ந்த - உண்டாகிய—ஒன்பயமுமெக்கு - நெஞ்சபயனேத்தெரிந்து—நெஞ்சகம் - தனதுமனதில்—களிசியந்தான் - மிகவுமதிசயித்தான். எ-று. அசும்பிடத் தோன்றவெனமுடிக்க. வினைமுற்றே வினையெச்சமாகவுமென்றதனால், மகிழ்ந்தனனென்றதை வினையெச்சமாக்குக. அரசர்கோமான் மகிழ்ந்து உணர்ந்து வியந்தானெனமுடிக்க. (௬௭)

பயிறுநல் வினையெ மக்குப் பயந்தவிவ் வசவ தேவன்
கயிலையின் மலைக்கி ரண்டாங் கடவுளே யென்று சொல்லி
வியறுவா மடந்தை பொய்யா னென்பதைப் புகைக்கி னுளச்
செயலினை வியப்பிற் கண்டோர் தெளிந்துளநெஞ் சமகிழ்ந்தார்.

(இ-ள்.) பயிலும் - பெரியோர்களாற்சொல்லப்பட்ட—நல்வினை - யாமுன்னரியற்றியநல்வினையானது —எமக்கு - எமக்கு—பயந்த - பயனுகத்தந்த—இவ்வசவதேவன் - இந்தவசவநாயகன்—கல் - நல்ல—கைலைமலைக்கு - கைலையங்கிரிக்கு—இரண்டாங்கடவுளேயென்று - இரண்டாவதுசிவனேயென்று—சொல்லி - விப்போதுசொல்லி—இடம் - காயவுடைய—உலைமடந்தை - சரஸ்வதி—பொய்யாளென்பதை - பொய்த்துப்போகாளென்பதை—புகைக்கினுன் - தெரிசித்தவன் —அச்செயலினை -

அத்தவதிசயத்தை—வியப்பிற்கண்டோர் - கண்டுபார்த்தவர்கள்—தெளிந்து - ஐயந்தெளிந்து—நெஞ்சகம் - தமதுமனதில்—மகிழ்ந்தார்-சந்தோஷித்தார்கள். எ-று. பயிறுநல்வினை, முன்பிறப்பிற்செய்தநல்வினையெனினுமமையும். ஒலியில்லாத்தவாறு, அறுபவங்காட்டலின் உலைமடந்தைபொய்யாளெனப்பட்டது. என்பதைப்போல் ; என்றுசான்றோர்கள்சொல்லுதெனக்கொள்க. சரஸ்வதிபொய்யாளெனும்வசனத்தை, அநுபவமாகத்தெரிவித்தனனெனப் பொருள்கொள்ளப்புகுக்கினுனென்று ரெனினுமமையும். எமக்கெனல் ஒருங்குளோரைத்தழுவலால், படர்க்கைத்தன்மைப்பன்மையெனக்கொள்க. (௬௮)

மந்திரிக் கிழமை நல்கி மரபுளி யுரிமை யாற்றி
மைந்தனைப் புரக்குந் தாய்போல் மற்றெனைப் புரத்தி யென்று
சிந்தனை களிப்ப வின்சொற் செப்பியா யிடையி ருப்ப
நந்தியைத் தொடர்பு கொண்டா னுந்தகத் தடக்கை வேந்தன்.

(இ-ள்.) மந்திரிக்கிழமைநல்கி - வசவதேவருக்குமந்திரித்தனத்தைக் கொடுத்து—மரபுளி - அதற்குரியமரபையுள்ளி —உரிமையாற்றி - செய்யவேண்டியவுரிமைகளைச்செய்து—மைந்தனைப்புரக்குந்தாய்போல் - மகனைக்காக்குந்தாய்போல—மற்றெனைப்புரத்தியென்று - என்னைக்காப்பாற்றக்கடவையென்று—சிந்தனைகளிப்ப - மனமகிழ—இன்சொல்செப்பி - இனியவசனங்கூறி—ஆயிடையிருப்ப - அவ்விடத்திருக்க—நந்தியைத்தொடர்புகொண்டான் - வசவதேவரை நட்புகொண்டான்—உந்தக - ஆகத்தக்கவாறு—தடக்கை - நீண்டகையையுடைய —வேந்தன் - அரசன். எ-று. தடக்கைவேந்தன் நல்கி ஆற்றி செப்பி நந்தியை ஆந்தகத் தொடர்புகொண்டானெனமுடிக்க. மரபுளியென்பது வசவதேவன்பிறந்த வமிசத்தை புள்ளியெனப்பொருள்கொள்க. உரிமையாற்றல் மந்திரிப்பட்டத்தைக் கொடுப்பதற்கியைந்த சடங்குசெய்தல். ஆயிடையிருப்ப வென்றல் தன்னிடத்திலிருக்கவேண்டுமெனலே. பிறரால்பாயம் வராது காத்தலே. (௬௯)

பெருந்தகை வசவ தேவன் பெருமைக்குத் தக்க வாறே
யருங்கடி மணஞ்செய் வித்தா னலங்கல்வேன் முருகனன்னுன்
விருந்திய வம்ம னத்தின் நெறிப்புகாம் விரிப்ப தென்கொல்
புரந்தனை யன்று தொட்டுப் புகன்றுகல் யாண மென்றால்.

(இ - ள்.) பெருந்தகை - சிறந்தகுணமுடையவராகிய — வசவதேவன் - வசவேஸ்வரரது — பெருமைக்குரித்தகயாதே - மகிமைக்குரித்தகப்படி — அரும் - அருமையாகிய — கடி - காவலுள்ள — மணம் - கல்யாணத்தை — அலங்கல்வேல் - மாலையணிந்தவேலாயுதத்தையுடைய — முருகனென்ன் - முருகனுக்கொப்பானவரசன் — செய்வித்தான் - செய்வித்தனன் — திருந்தியவம்மணத்தின் - சிறப்புற்றவந்தக்கலியாணத்தின் — சிறப்பு - மேன்மையை — யாம் - யாம் — விரிப்பதென்கொல் - விரிவாகச்சொல்வதெவ்வணம் — புரந்தனை - அந்தப்பட்டணத்தை — அன்றுதொட்டு - அன்றுமுதல் — புகன்றுகல்யாணமென்றால் - கல்யாணபுரியென்று சொல்லப்படுமானால். எ - று. முருகனன்னான் கடிமணஞ்செய்வித்தானெனமுடிக்க. புரந்தனையன்றுதொட்டுப் புகன்றுகல்யாணமென்றால் திருந்தியவம்மணத்தின் சிறப்புயாம்விரிப்பதென்கொல் எனவடிமாற்றிப்பொருள்கொள்க. (௪௰)

இவ்வகை கல்யா ணத்தி லிருப்பநா காம்பை யென்னுந்
தவ்வைநம் வசவ தேவன் றன்பிர சாதந் தன்னு
லெவ்வமின் முத்தி மெய்யோ டிருக்கையி னளிக்கும் வீர
சைவநன் னெறிவ ளர்க்குந் தனயனை யீன்ற ளம்மா.

(இ - ள்.) இவ்வகை - இவ்வண்ணம் — கல்யாணத்திலிருப்ப - கல்யாணகோலத்திலிருக்க — நாகாம்பையென்னுந்தவ்வை - நாகாம்பையென்னுந்தமக்கை — நம்வசவதேவன்றன் - நமதுவசவேஸ்வரருடைய — பிரசாதந்தன்னால் - பிரசாதத்தினும் — எவ்வமின்முத்தி - குற்றமற்றவைக்கியமுத்தியை — மெய்யோடிருக்கையில் - உடலோடிருக்கும்போதே — அளிக்கும் - கொடுக்கின்ற — வீரசைவநன்னெறிவளர்க்கும் - நல்லவீரசைவமார்க்கத்தைவிருத்திசெய்யும் — தனயனையீன்றாள் - புத்திரனைப்பெற்றாள். எ - று. அம்மா - அசைநிலை. வசவதேவரது பிரசாதத்தால், அவர்தமக்கை தனயனையீன்றாளெனமுடிக்க. அம்மா வியப்பெனினுமாமையும். மெய்யோடிருக்கையின்முத்தி; சீவன்முத்தியை. (௪௧)

மைந்தனை யீன்று வந்து வசவனு மம்பு னைந்தா
ணிந்தையில் கற்பு நங்கை திகழ்திரு முகங்க ளாறு
மந்தமி றலங்க ளாறு மறிவித்தற் குலகில் வந்த
கந்தனென் றன்ன வந்நா காம்பைதன் மகன்வ ளர்ந்தான்.

(இ - ள்.) மைந்தனையீன்று - புத்திரனைப்பெற்று — வந்து - சந்தோஷித்து — நிந்தையில் - நிந்தையில்லாத — கற்புநங்கை - கற்புள்ளநாகாம்பிகையென்பவள் — வசவனும்பு னைந்தாள் - வசவனெனப்பேரிட்டாள் — திகழ் - விளங்குகின்ற — திருமுகங்களாறும் - அழகியசண்முகங்களும் — அந்தமில் - அந்தமற்றதலங்களாறும் — அறிவித்தற்கு - அறிவிப்பான்வேண்டி — உலகில்வந்த - உலகத்திலவதரித்த — கந்தனென்றன்ன - சுப்பிரமணியனென்று நினைக்க — அந்நாகாம்பைதன்மகன் - அந்தநாகாம்பையினதுபுத்திரன் — வளர்ந்தான் - வளர்ந்தனன். எ - று. ஸ்தலங்களாறுவன ; பக்தஸ்தலம், மாஹேஸ்வரஸ்தலம், பிரசாதிஸ்தலம், பிராணலிங்கஸ்தலம், சரணஸ்தலம், ஐக்கியஸ்தலம். (௪௨)

வீரமா கேச மென்று மென்பயிர் வளர்க்க வந்த
மாரிபோ னிகரில் சென்ன வசவதே சிகனி ருப்ப
நேரிலா வசவ னும நெடுந்தகை மகவொன் றீன்று
சீருலாஞ் சங்க மேச தேசிக னெனப்பு னைந்தான்.

(இ - ள்.) வீரமாகேசமென்னும் - வீரத்தன்மைபொருந்தியமாகேசமென்கிற — மென்பயிர்வளர்க்க - மெல்லியபயிர்களைவளர்ப்பான்வேண்டி — வந்த - எழுந்தருளிவந்த — மாரிபோல் - மேகம்போல — நிகரில் - ஒப்பில்லாத — சென்னவசவதேசிகனிருப்ப - சென்னவசவதேசிகனிவ்வண்ணமிருக்க — நேரிலா - ஒப்பில்லாத — வசவனுமநெடுந்தகை - வசவனென்னுநாமத்தையுடையபெருந்தகையினன் — மகவொன்றீன்று - ஓர்குழந்தைபெற்று — சீருலாம் - சீர்த்திபொருந்திய — சங்கமேசதேசிகன் - சங்கமேசதேசிகனென்னும் — பெயர்புனைந்தான் - பெயரைத்தரித்தனன். எ - று. நெடுந்தகை ; அன்மொழித்தொகை. வீரமாகேசமென்னுமென்பயிர் ; உருவகம். (௪௩)

மொழியினு னினைவா னோக்கா னுமுக்கணு னடியார் வேண்டிற்
றொழிவிலா துதவித் தாய்போ லோம்பினன் புறமுந் தோராவழியெலாம் வழக்கு மாற மலிபுக ழசைவ மென்னும்
பழியிலா வழிந டப்பப் பண்ணினன் வசவ தேவன்.

(இ - ள்.) மொழியினால் - வார்த்தையினாலும் — நினைவால் - நினைவினாலும் — நோக்கால் - திஷ்டியினாலும் — முக்கணனடியார் - சிவனடியார்கள் — வேண்டிற்று - வேண்டியவைகளை — ஒழிவிலாது - தவிராதுகொ

ஒத்து—தாய்போலோம்பினன்-தாய்போலக்காப்பாற்றினன் —புறமதத் தோர்வழியெலாம் - அன்னியமதத்தோர்மார்க்கமெல்லாம் —வழக்குமா ற - வழக்கொழிந்தொழியவும்—மலிபுகழ் - மிக்ககீர்த்தியையுடைய—வைசவமெ ன்னும்பழியிலாவழி - சைவமென்னுங்குற்றமற்றமார்க்கம்—நடப்ப - வழு வின்றிநடக்கவும்—பன்னினன்வசவதேவன் - வசவதேவன்செய்தன ன். எ - று. வசவதேவன்; தாய்போலோம்பினனெனவும் மாற நடப்ப பன்னினனெனவு முடிக்க. (௬௪)

அரனடி யவர்க்குத் தேனு வாகிய வசவன் சீர்த்தி
விரிநில முழுதும் போர்ப்ப வெள்ளிவெற் பினையகன்று
நரைதிரை வந்தி ருந்த தவரொலா முணர்ந்து சென்றார்
பொருவில்கல் யாணத் திற்குப் போதல்போற் கல்யா ணத்தில்.

(இ - ள்.) அரனடியவர்க்கு-சிவனடியார்க்கு—தேனுவாகியவசவன் - காமதேனுவாகியவசவதேவனது —சீர்த்தி—கீர்த்தி —விரிநிலமுழுதும் போர்ப்ப - பூமிமுழுவதும்பரவ —நரைதிரைவந்திருந்ததவரொலாம்-பூமி யின்மேல்வந்திருந்திவர்களைங்களனைத்தும் —உணர்ந்து - அதனைத்தெரிந் து—வெள்ளிவெற்பினையகன்று - கைலைமலையினின் றுநீங்கி— பொருவி ல் - ஒப்பில்லாத—கல்யாணத்துக்குப்போதல்போல் - கல்யாணத்துக்கா கப்போவதுபோல —கல்யாணத்தில் - கல்யாணபுரியில் —சென்றார் - போயினர். எ - று. தேனுவாகியவசவன், உவமானம். தவரொலாம், சீர்த்திபோர்ப்பவுணர்ந்து, வெள்ளிவெற்பினையகன்று கல்யாணத்திற்செ ன்றாரென முடிக்க. (௬௫)

பலரொடு வரினு மெள்ளும் படிதனி வரினு மிக்க
நலமொடு வரினு மேனி நலமற வரினுஞ் சீர்சால்
மலைமகள் கணவன் றொண் [illegible] கண் ணுறின்ௌ திர்ந்து
நிலமிசை வணங்கி யஞ்சி நின் றுநன் றாற்று நந்தி.

(இ - ள்.) பலரொடுவரினும் - பலரோடுவந்தாலும் —எள்ளும்படிதனி வரினும் - இகழும்படிதனியேவந்தாலும் —மிக்கநலமொடுவரினும் - மிக் கசிறப்போடுவந்தாலும்—மேனிநலமறவரினும் - அருவருக்கத்தக்கதேக த்தோடுவந்தாலும்—சீர்சால் - சிறப்புமிருந்த —மலைமகள் - உமாதேவி யின்—கணவன் - சர்வகாரணபரமசிவனுடைய —தொண்டர்வரவுகண் ணுறின் - அடியார்வரக்கண்டால்—எதிர்ந்து - எதிரேசென்று —நிலமி

சைவணங்கி - பூமியில்வணங்கி—அஞ்சிநின்று - பயந்துநின்று —நன்று ற்றும் - நன்றுபசரிப்பன்—நந்தி - நந்திதேவன். எ - று. தொண்டர்பல ரொடுவரினும் தனிவரினும் மிக்கநலமொடுவரினும் மேனிநலமறவரினும். நந்திகண்ணுறின் எதிர்ந்து வணங்கி அஞ்சி நின்று நன்றாற்றுமெனமுடிக் க. பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிலென்னுஞ்சூத்திரவிதியா ல் நன்றாற்றுமெனவேவுயர்திணையாண்பால் படர்க்கைவினைமுற்றாக்குக.

சாதியுங் குறியு நீத்துச் சரணரைச் சிவனே யென்று
பாதபங் கயமி றைஞ்சிப் பத்திசெய் குவனன் னந்தி
தீதறு சுவைத்தீங் கண்டாம் செய்தசெங் கரும்பும் வேம்பும்
பேதமொன் றுறுமற் சாதி பெயர்விடுத் தறிதல் போல.

(இ - ள்.) சாதியுங்குறியுநீத்து - சாதியையு மாண் பெண்ணென்னுங்கு றியையுநீக்கி,—சரணரை - அடியார்களை—சிவனேயென்று - சிவசொரு பமேயென்று—பாதபங்கயமிறைஞ்சி-பாததாமரையைவணங்கி —நன்ன ந்தி - நல்லவசவேசன்—பத்திசெய்குவன்-பத்திசெய்வான் —தீதறு-குற்ற மற்ற—சுவை - மதுரத்தையுடைய —தீங்கண்டால் - இனியகற்கண்டிற ல்—செய்தசெங்கரும்பும் - செய்தவெந்தகரும்பையும்—வேம்பும் - வேப் பங்காயையும்—பேதமொன்றுறுமல் - குறியால்பேதியாமல்—சாதிபெய ர்விடுத்து - சாதிபெயரைவிட்டு—அறிதல்போல - ஒன்றென்றறிதல்போ ல. எ - று. நன்னந்தி நீத்து இறைஞ்சி தீங்கண்டாற்செய்த செங்கரு ம்பும், வேம்பும் பேதமொன்றுறுமல் சாதிபெயர்விடுத்தொன்றெனவறித ல்போலப் பத்திசெய்குவன் எனமுடிக்க. கற்கண்டினாற்செய்த கரும் புவடிவுக்கும் வேம்புவடிவுக்கும், தோற்றத்தாற்சாதிபேதங் காணப்படு வதன்றிச் சுவையாலொன்றாதல்போலத் தோற்றத்தாற் சாதியுங்குறியு மன்றிச் சிவரேயத்தாலொன்றாதலின் ச[illegible]ரைச் சிவனேயென்றுபத்தி செய்குவ னன்னந்தியெனப்பொருள்கொள்க. பாதபங்கயம்; உருவகம். ஒருவன். இசையெச்சம். (௬௭)

மாதர்க டமைய கன்ற மலிதுற வி[illegible]ரொண் ணில்லார்
கோதைய ருடனி ருந்துங் கொடும[illegible] லொண் ணில்லார்
மேதைகொ ளருச்ச னைக்கு வேண்[illegible]வை முழுதுங் கொண்டு
போதுகள் வழாம லீசன் பூசைசெய் பவரொண் ணில்லார்.

(இ - ள்.) மாதர்கடமையகன்ற - பெண்பற்றகன்ற—மலிதுறவினர் - மிக்கதுறவினர்கள் —எண்ணில்லார் - எண்ணிறந்தவரும் —கோதையரு

டனிருத்தும் - பனிவியருடன்கூடியிருத்தும் —கொலையாலிவர் - கொடி யமயக்கமற்றவர்கள்—என்னில்லார் - அளவிறந்தவரும்—மேதைகொள் அறிவாலமைந்த—அருச்சனைக்குவேண்டுவ - பூசைக்குவேண்டுபவை ள்—முழுதுங்கொண்டு - முழுவதுஞ்சேகரித்துக்கொண்டு—போதகாலய முமல் - காலந்தவறுமல் —நச்பூசைசெய்பவர் - நிவபூசைசெய்பவர்க ள்—என்னில்லார் - எண்ணிறந்தவரும். எ - று. (௪௮)

விரதங்கள் வேறு வேறு மேவிநிற் பவரொண் ணில்லார்
பரதஞ்செய் மதர ரிக்கட் பரத்தையர் மனைக டோறுஞ்
சுரதஞ்செய் பவரொண் ணில்லார் தூயநன் னந்தி நாம
வரதன்ற னன்பின் வாழும் வழுவின்மா கேச ரம்மா.

(இ - ள்.) விரதங்கள்வேறுவேறு - வெவ்வேறுவிரதங்களை—மேவிநி ற்பவர்-கொண்டுநிற்பவர்கள்—எண்ணில்லார் - எண்ணிறந்தவர்களும் — பரதஞ்செய் - பரதநடனஞ்செய்யும்—மதர் - மதர்த்த—அரி - செவ்வரி கருவரிபடர்ந்த—கண் - கண்களையுடைய —பரத்தையர்மனைகடோறும்- தாசிகள்வீடுகள்தோறும் —சுரதஞ்செய்பவர்-புணர்ச்சிசெய்பவர்—எண் ணில்லார் - எண்ணிறந்தவர்களும்—தூய-பரிசுத்தமாகிய —நல் - நல்ல— நந்திநாமவரதன்றன் - நந்தியென்னுநாமத்தையுடையமிக்கசிறப்பினை யுடையவனது—அன்பின்வாழும் - அன்பினுல்வாழப்பட்ட—வழுவில் - குற்றமற்ற— மாகேசர் - மாகேசுரராம். எ - று. அம்மா, வியப்புமொழி. எண்ணில் லாரொன்பனவைந்தும் மாகேசரொன்பதில், ஆமென்னுமாக்கவினைகொ ண்டுமுடிந்தன. (௪௯)

நீதுசெய் சமணர் முன்னர்ச் செயற்கருஞ் செய்கை காட்டி
வாதுசெய் தவர்செ ருக்கு மாய்வுசெய் திமைய மீன்ற
ருதுசெய் முலைம டந்தை துணைவனூர் தொண்டர்க் கெல்லாம்
யாதுசெய் குவனென் றேவ லியற்றுவன் வசவ தேவன்.

(இ - ள்.) நீதுசெய் - நீதிசெய்கின்ற—சமணர்முன்னர் - சமணர்க ளுக்குமுன்னே —செயற்கருஞ்செய்கைகாட்டி-செய்தற்கரியவதிசயங்கா ட்டி —வாதுசெய்தவர்செருக்கு - தர்க்கஞ்செய்தவர்களுடையகர்வத் தை—மாய்வுசெய்து - கெடுத்து—இமையமீன்ற - இமையவரசன்பெற் ற—ருதுசெய் - தாமரையரும்புபோன்ற—முலைமடந்தை - தனங்களையு டையவுமாதேவியின்—துணைவனூர்-நாயகனுகியபரமசிவனுடைய —தொ

ண்டர்க்கெல்லாம் - அடியார்களுக்கெல்லாம்—யாதுசெய்குவனென்று - யாதுதொண்டுசெய்குவனென்று—ஏவல்-அவர்களிட்டபணியை —இயற் றுவன்வசவதேவன் - வசவதேவன்செய்வன். எ - று. வசவதேவன் செய்கைகாட்டி, மாய்வுசெய்து, ஏவலியற்றுவனெனமுடிக்க. இமயம், இ டவாகுபெயர். (௫௰)

உள்ளந்தெளி சரணர் தம்மோ டிம்முறை யொழுகு நாளி
னளந்தறி வரிய சோதி யல்லமன் வரவு நோக்கி
வளங்கெழு திருக்கல் யாண வளநகர் தனில்வா னோர்க்கு
மிளம்பயிர் போலி ருந்தா னெம்மையா ளுடைய நந்தி.

(இ - ள்.) உளந்தெளி - உள்ளந்தெளிந்த—சரணர்தம்மோடு - சிவன டியார்களோடு —இம்முறையொழுகு - இவ்வாறுநடந்து—நாளும் - நாள் தோறும் —அளந்தறிவரிய - அளந்தறிதற்கரிய —சோதி - சோதிவடிவ மான —அல்லமன்வரவுநோக்கி - அல்லமனதுவரவைப்பார்த்து —வள ங்கெழு - வளமிருந்த—திருக்கல்யாணம் - திருக்கல்யாணமென்னும்—வ ளநகர்தனில் - செல்வமிருந்தபட்டணத்தில்—வானோர்க்கும் - மழைக்காக வானோர்க்குநின்ற —இளம்பயிர்போல் - இளமையாகியபயிரைப்போல— எம்மையாளுடையநந்தி-எம்மையடிமையாகவுடையநந்திதேவர் —இருந் தான் - இருந்தனன். எ - று. நந்தி ஒழுகி நோக்கி இருந்தானெனமுடிக்க.

அக்கமாதேவியுற்பத்திகதி முற்றிற்று.

ஆ கதி - ௩ - இ திருவிருத்தங்கள் - ௫௨.

பத்தாவது

அக்கமாதேவி துறவுகதி

வேறு.

தன்னைக் காண வேள்கணை பாயத் தமொறு
மன்னைக் காதுஞ் சோறெனை விட்டருண் மாதேவி
மின்னைப் போலு மல்லம தேவன் விளையாடுங்
கொன்னைக் கானிற் றேடி யடைந்தமை கூறுற்றாம்.

(இ - ள்.) தன்னைக்காண-தனதொரூத்தநிலையைக் காண்பான்வேண்டி—வேள்கணைபாய - மன்மதபாணம்பட—தமொறும் - அதனுற்றுத் தளிக்கின்ற—மன்னை - அரசனை—காதுஞ்சோறெனவிட்டருள் - வாந்திசெய்தசாதத்தைப்போலருவருத்த—மாதேவி - மாதேவியென்பவள்—மின்னைப்போலும் - மின்னலைப்போலும்—அல்லமதேவன்-அல்லமதேவர்—விளையாடுங்கொன்னை - விளையாடுமெலிமையை—கானில் - வனங்கானில்—தேடியடைந்தமை - தேடிப்பேறுபெற்றதன்மையை—கூறுற்றாம்-சொல்லத்தொடங்குதும். எ - று. சோறெனவிட்டு-சோற்றைப்போலவிக்கிரித்து—அருள்மாதேவி—இருளையுடையமாதேவியென உரையிற்கோடலென்னுமுத்தியாற்பொருள்கொள்ளலுமமையும். இதனால்மாதேவியென்பவள் தன்னைக்காணச் சோறெனவிட்டுத்தேடியடைந்ததெனக் கூட்டிமுடிக்க. மின்னைப்போலும்விளையாடுதலாவது; உபாதித்திரியத்தில் தானென்றுமல்லனேனும் அன்பர்களையாட்கொள்வான்வேண்டி யவ்வவ்வசரத்திலெடுத்தகோலங்கள். தேடியடைதலாவது; தானேதானுயநிலையை. காதுஞ்சோறெனவுவமானித்தது; அருவருப்பையுணர்த்த. கூறுற்றுமென்றல், கூறற்றுமென்றுபது விகாரத்தாலென்க. (க)

கொங்கைப் பொறையைக் கொண்டு மருங்குற் கொடிவாட
அங்கைக் குடநெய் பெய்தழ லென்ன வழகெய்தி
இங்கைக் கிணைகண் டிலமுல கெங்கணு நாமென்ன
மங்கைப் பருவ நண்ணினள் முற்றுணர் மாதேவி.

(இ - ள்.) கொங்கைப்பொறையைக்கொண்டு - தனபாரத்தால்—மருங்குல் - இடையென்னும்—கொடிவாட - பூங்கொடிசோர—அங்கைக்குடம் - அகங்கையிலுள்ளகுடத்திலிறைந்த—நெய்பெய் - நெய்சொரிகின்ற—தழலென்ன - அக்கினியைப்போல—அழகெய்தி - அழகடைந்து—இங்கைக்கு - இந்தப்பெண்ணிற்கு—உலகெங்கணும் - உலகமுழுதும்—நாம் - யாம்—இணைகண்டிலமென்ன - சமானங்கண்டிலமென்றெவருங்கூற—முற்றுணர்மாதேவி - யாவுமுணர்ந்தமாதேவியென்பவள்—மங்கைப்பருவநண்ணினள் - எழுவகையுள் மங்கைப்பருவமடைந்தனள். எ - று. மாதேவி கொடிவாட அழகெய்திப் பருவம் நண்ணினளென முடிக்க. மருங்குல்கொடி, உருவகம். இங்கையெவருமென்றல், அவளழகுகண்டோரை. மருங்குற்கொடிவாடுதற்கும், நெய்பெய்தழலென்ன வழகெய்துதற்கும் இயைந்தபருவமாதலின் மங்கைப்பருவமென்றார். அகங்கையெனல் அங்கையென்றுபது அகமுனர்ச்செவிகைவரினிடை யனகெடுமென்னும் விதியாலென்க. (உ)

வாதித் தொன்றோ டொன்றெழல் போன்முலை வந்துற்றும்
பேதைப் பெண்போற் காம முளத்திற் பிறவாமற்
பாதிப் பெண்மே னியனெனு மின்பப் பதிதன்னைச்
சாதித் தெய்துஞ் சாதன மோடு தலைப்பட்டாள்.

(இ - ள்.) வாதித்து - வழக்காடிக்கொண்டு—ஒன்றோடொன்று - ஒன்றுடனொன்று - எழல்போல் - எழுதல்போல—முலைவந்துற்றும் - தனங்கள்வளர்ந்தும்—பேதைப்பெண்போல்-பேதைமைப்பருவப்பெண்கள்போல—உளத்தில் - தன்மனதில்—காமம்பரவாமல் - சற்றுங்காமமுதியாமல்—பாதிப்பெண்மேனியனெனும் - அர்த்தநாரீஸ்வரனென்னும்—இன்பம் - ஆனந்தவடிவமான—பதிதன்னை - கடவுளை—சாதித்து - சாதனஞ்செய்து—எய்தும் - ஐக்கியமெய்துகின்ற—சாதனமோடு - சாதனத்துடன்—தலைப்பட்டாள் - முயற்சிசெய்யத்தலைப்பட்டாள். எ - று. வாதித்தலாவது; நான்முன் நான்முன்னென்று வழக்கிடலை. அதாவது, தனங்களிரண்டும் ஒன்றோடொன்று நான்முந்தியெழுகின்றேனென்முந்தியெழுகின்றேனென்று வழக்கிட்டெழல்போற்பூரித்துக்காண்டலை. மாதேவியென்பாள் முலைவந்துற்றும் காமம்பரவாமல் பதிதன்னையெய்தத் தலைப்பட்டாளென முடிக்க. பாதிப்பெண்மேனியனென்பது; பாதிபெண்வடிவமாகவும் பாதியாண்வடிவமாகவுமிருத்தலை. சாதித்தல்; இடைவிடாது நிட்டைகூடலை. (௩)

துன்னே யுயிர்த்திடை யிட்டற முக்கட் டலைவன்பாற்
பின்ன மறும்படி மேவு பெரும்பரு வப்பெண்ணைக்
கன்ன னெடுஞ்சிலை மன்மதன் வேறிக் கணைபாயு
மன்று மிளம்பரு வத்தின ளென்பர் மறைப்புற்றோர்.

(இ - ள்.) தன்னையுயிர்த்து - தன்னைத்தானயிர்த்து—இடையீட்ற - நீக்கமற—முக்கட்டலைவன்பால் - பரமசிவனிடத்தில் —பின்னமறும்படி மேவு - நவிதமற்றெய்தும்—பெரும்பருவப்பெண்ணை - நக்கபருவமமைந்தபெண்ணை—கன்னல் - கரும்பாகிய —நெடுஞ்சிலைமன்மதன் - நீண்டவில்லையுடையமன்மதனது—வேறி - தேனையுடைய —கணைபாயும் - அம்புபாயத்தக்க—மன்றும் - பொருந்திய —இளம்பருவத்தினளென்பர் - இளம்பருவத்தையுடையளென்று சொல்வார்கள்—மறைப்புற்றோர் - தெரியாதார். எ - று. பின்னமறும்படிமேவல், ஐக்கியநிலையை, புணர்ச்சியாலின்றும் வாராதலைப்பற்றி மன்றுமிளம்பருவத்தினளென்பர் மறைப்புற்றோரென்றார். கன்னனெடுஞ்சிலை - கரும்பாலாகிய நீண்ட வில்லெனக்கொள்க. (௫)

வண்டு படாதலர் சண்பக மேயென மாறுபிப்
பண்டர னோடமர் செய்மதன் வண்டு படாமேனி
கண்டிடு மொண்கட ரேயெனு மாது கவின்பொங்க
வொண்டவ நின்மலன் மாதமர் நாள்களி னோர்நாளில்.

(இ - ள்.) வண்டுபடாது - வண்டுகள் மொய்க்காமல் —அலர் - மலர்ந்த —சண்பகமேயென —சண்பகபுஷ்பமேயென்றுசொல்லும்படியாக—மாறுபி - விரோதமாகி - பண்டு - பூர்வத்தில் —அரனோடமர்செய் - சிவனோடுபோர்செய்த —மதன்வண்டு - மன்மதபாணம்—படாமேனி - படாதவடிவம்—கண்டிடும் - பார்த்தற்குரிய—ஒண்கடரேயெனுமாறு - அழகிய சூரியனேயெனச்சொல்லும்படி —கவின்பொங்க - அழகுமிக —ஒண்டவம் - சிறந்ததவத்தையுடைய—நின்மலன் - நின்மலனென்பவனது —மாது - மகள்—அமர்நாள்களில் - இருக்குநாள்களில்—ஓர்நாளில் - ஒருதினத்தில். எ - று. வண்டுபடாதலர்சண்பகமேயென மதன்வண்டுபடாமேனியெனக்கூறவந்தது; சுயம்புநெரிவிப்பான் வேண்டியெனக. நின்மலன்மாது தனதுமேனி கவின்பொங்க, அமர்நாள்களிலெனமுடிக்க.)

வீரங் குறையின் மும்மத வேழ மிசைகொண்டு
தாருந் தோளும் பொங்க மதிக்குடை தன்மேலா

மாரன் கரிமேல் வந்தன னென்ன மணிப்பொற்றே
ரூருந் தெருவிற் கௌசிக மன்ன னுலாவந்தான்.

(இ - ள்.) வீரங்குறைவில் - குறைவில்லாதவீரத்தையும் —மும்மதம் - மும்மதங்களையுமுடைய —வேழமிசைகொண்டு - யானைமேலம்பாரிகொண்டு—தாருந்தோளும்பொங்க - மாலையும்புயங்களுமிக்கொளிர —மதிக்குடைதன்மேலாம் - தன்மேனிமுற்றப் பூரணச்சந்திரனைக் குடையாகவுடைய—மாரன் - மன்மதன் —கரிமேல்வந்தனனென்ன - யானைமேல்வந்தாற்போல—மணி - அழகிய—பொற்றேர் - பொன்னாலாகியரதங்களோ—வூருந்தெருவில் - நடத்துகின்றவீதியில் —கௌசிகமன்னன் - கௌசிகராசன்—உலாவந்தான் - உலவப்புறப்பட்டான். எ - று. கௌசிகமன்னன் வேழமிசைகொண்டு தாருந்தோளும்பொங்க வுலாவந்தானென முடிக்க. மும்மதம்; கன்னமதம், கபோலமதம், கோசமதமென்பன. மதிக்குடை உருவகம். (௬)

இயங்கட ரங்க நெடுங்கட லென்ன வெழுந்தார்ப்ப
வியங்கு மருங்குன் மடந்தையர் பாடுட னேபோத
வயங்க ளிவர்ந்திளை மைந்தர் மருங்கி னடுத்தேகப்
புயங்க ளலங்கலி லங்க விசும்பிறை போல்வந்தான்.

(இ - ள்.) இயங்கள் - வாத்தியங்கள்—தரங்கம் - அலைகளையுடைய—நெடுங்கடலென்ன - நீண்டசமுத்திரத்தைப்போல—எழுந்தார்ப்ப - எழுந்தொலிக்கவும்—இயங்கு - தளபாரத்தால்வருந்துகின்ற—மருங்குல்மடந்தையர் - இடையையுடையமாதர்கள் —பாடுடன்போத - பாடிக்கொண்டுடனேசெல்லவும்—வயங்களிவர்ந்து - குதிரைகளின்மேலேறிக்கொண்டு—இளமைந்தர் - சிறுபிள்ளைகள்—மருங்கினடுத்தேக - பக்கத்திலடுத்துச்செல்லவும்—புயங்களலங்கல் - புயங்களிற்றரித்தமாலைகள் - இலங்க - பிரகாசிக்கவும் —விசும்பிறைபோல - தேவேந்திரனைப்போல—வந்தனன் - வந்தான். எ - று. மன்னவன் ஆர்ப்ப உடன்போத அடுத்தேக இலங்கவந்தானென முடிக்க. (௭)

மாறு நெடுங்கரி மீது புரந்தரனில் வந்தானைக்
காணு மடந்தைய ரோது முணர்ந்திலர் காமத்தா
லூணு மிழந்தனர் நாணு மிழந்தனர் நன்றாகும்
பூணு மிழந்தன ராயி மிழந்திவர் போனார்கள்.

(இ - ள்.) மாறும் - சிறந்த — செங்கரிமீது - கீண்டயானையின்மேல் — புரந்தனில்வந்தானை - பட்டணத்தில்வந்தவரசனை — காணுமடந்தையர் - காணுகின்றமாதர்கள் — ஏதுமுணர்ந்திலர் - யாதுமுணராதவராயும் — காமத்தால் - காமமிக்குதலால் — நாணுமிழந்தனர் - வெட்கமுமிழந்தவராயும் — தூசமிழந்தனர் - வஸ்திரமுமிழந்தவராயும் — நன்றாரும் - மிக்கவலங்காரமாயுள்ள — பூணுமிழந்தனர் - ஆபரணமுமிழந்தவராயும் — ஆவியிழந்திலர் - உயிர்மாத்திரமிழவாதவர்களாய் — போனார்கள் - உடன்போனார்கள். எ - று. மடந்தையர், ஏதுமுணர்ந்திலர், நாணுமிழந்தனர், தூசமிழந்தனர், ஆவியிழந்திலர், போனார்களெனமுடிக்க. எனவே, அவனையோகித்தலாலாயபயனை யுணர்த்தப் பெற்றாம். (௮)

நல்ல மதந்தா னொண்கவு ளின்பா னன்றுண்ணச்
செல்லு கரும்பே வெங்கரி யின்றாழ் செவியூடு
மெல்ல நடந்தே போவென மெல்ல விளம்பென்று
சொல்லி மறங்கூர் வேலன கண்ணார் துயர்கின்றார்.

(இ - ள்.) நல்லமதந்தான் - நல்லமதத்தை — ஒள் - ஒள்ளிய — கவுளின்பால் - கன்னத்தினிடத்தில் — நன்றுண்ண - நன்றாகவுண்ணும்படி — செல்லுகரும்பே - போகும்வண்டுகளே — வெங்கரியின் - கொடியயானையினது — தாழ்செவியூடு - தாழ்ந்தசெவியின்கண் — மெல்லநடந்தேபோவென - மெதுவாகநடந்துபோவென்று — மெல்லவிளம்பென்றுசொல்லி - மெதுவாகத்தெரிவியென்றுசொல்லி — மறங்கூர் - பாபமிகுந்த — வேலன - வேல்போன்ற — கண்ணார் - கண்களையுடையமாதர்கள் — துயர்கின்றார் - துயரப்படுகிறார்கள். எ - று. வேலனகண்ணார், கரும்பே, மெல்லநடந்தேபோவென, மெல்லவிளம்பென்று, துயர்கின்றாரெனமுடிக்க. தாழ்தல், தொங்குதல். மறங்கூர்வேலனகண்ணாரென்பது, பயனுவமை. (௯)

கோதையர் மால லிவ்வகை நோவக் கொடிமாட
வீதியி னூடு வருந்திறன் மன்னன் வினையில்லா
மாதவ னாரு நின்மல னுக்கோர் மகளாகுங்
காதொடு காதுங் கண்மட மாதைக் கண்டானே.

(இ - ள்.) கோதையர் - மாதர்கள் — மாலால் - மோகத்தால் — இவ்வகைநோவ - இவ்வாறுவருந்த — கொடி - கொடிகட்டிய — மாடவீதியினூடு - மாடவீதியின்கண் — வரும் - உல்லாசமாகவருகின்ற — திறல்மன்னன் - வலியுள்ளவரசன் — வினையில்லா - இருவினைகடந்த — மாதவனாருநின்மலனுக்கு - மாதவனென்றுசொல்லப்பட்டபரிசுத்தமானவனுக்கு — ஓர்மகளாகும் - ஓர்புத்திரியாகிய — காதொடுகாதும் - காதோடுபொருதுகின்ற — கண் - கண்களையுடைய — மடம் - அறியாமைபொருந்திய — மாதை - மாதேவியென்பவளை — கண்டான் - பார்த்தனன். எ - று. மன்னன், கோதையர், இவ்வகைநோவமாடவீதியில்வருகையில், மாதவன்மகளைக் கண்டானெனமுடிக்க. (௧௦)

கண்டன ளேவிலை யோவெனு முன்னங் கழைவாங்கிக்
கொண்டனன் வாளி சொரிந்தன னோடிக் கொடுமார
னுண்டிலை யோவென வாவி தளர்ந்தே யும்பன்மேல்
மண்டல மாளு மன்ன னிருந்தான் வசமற்றே.

(இ - ள்.) கண்டனளேவிலையோவெனுமுன்னம் - கண்டானேவில்லையோவென்றுனுதற்குமுன் — கொடுமாரன் - கொடியமன்மதன் — கழைவாங்கிக்கொண்டனன் - கருப்புவில்லையெடுத்து — வாளிசொரிந்தனனோடி - விரைந்தோடிப்புஷ்பபாணங்களைச் சொரிந்தனன் — உண்டிலையோவென - உண்டோவில்லையோவெனவையுறுமாறு — ஆவிதளர்ந்தே - உயிர்சோர்ந்து — உம்பல்மேல் - யானையின்மேல் — மண்டலமாளுமன்னன் - உலகாளுமரசன் — வசமற்றிருந்தனன் - பரவசப்பட்டிருந்தான். எ - று. ஓகாரமூன்றுமையம். கழைவாங்கிக்கொண்டனனென்பதை வினையெச்சமாக்குக. கொடுமாரன் கழைவாங்கினனாயோடி வாளி சொரிந்தனனென்க. மண்டலமாளுமன்னன் உம்பன்மேலாவிதளர்ந்து வசமற்றிருந்தனனெனமுடிக்க. (௧௧)

கொங்கைப் பாரத் தான்மலர் வாசங் கூடாம
லிங்கிப் பாரிற் போது மலர்க்க ணெழின்மாவோ
மங்கைக் கோலங் கொண்டு நிலத்தில் வருமின்னோ
வங்கைக் காந்தட் பொற்றொடி யாரோ வறியேனே.

(இ - ள்.) கொங்கைப்பாரத்தால் - தனபாரத்தால் — மலர் - தாமரைமலரில் — வாசங்கூடாமல் - வசித்தற்குச்சகிக்கக்கூடாமல் — இங்கிப்பாரின் - இந்தப்பிரிதிவியினிடத்தில் — போதும் - வந்த — மலர்க்கண் - தாமரைமலர்போன்றகண்களையுடைய — எழில்மாவோ - அழகியவிலக்குமியோ — மங்கைக்கோலங்கொண்டு - பெண்வடிவங்கொண்டு — நிலத்தில்வருமின்னோ - பூமியில்வந்தமின்னலோ — அங்கை - அழகியகையாகிய —

காந்தள்-காந்தள்மலரிலவதரித்த —பொற்றொடி-பொன்றொடியாகியவளையலை யுடையவள்—ஆரோ - யாவளோ—அறியேன்-அறிந்திலன். எ - று. மலருறுதியதல்றெனப் பரிற்போந்ததாகக்குறித்தல், அருத்தாபத்தி. அங்கைக்காந்தள், உருவகம். பொற்றொடி, அன்மொழித்தொகை. பொற்றொடி, மாவோ, மின்னோ, ஆரோவறியேனெனமுடிக்க. போதல், வருதல். (கஉ)

வஞ்சி நடந்தே யென்னெதிர் வந்தே மயல்செய்தா
ணெஞ்சு தளர்ந்தேன் மாலில் விழுந்தே னிலைகாணே
னஞ்சலை யென்றே யின்றிவ ளானே லனல் கானும்
பஞ்சு படும்பா டங்கச னம்பாற் படுவேனே.

(இ - ள்.) வஞ்சி - வஞ்சிக்கொடிபோல்பவள் —என்னெதிர்நடந்துவந்து - என்னெதிரில்மெல்லநடந்துவந்து —மயல்செய்தாள் - மோகம்விளைத்தனள்—நெஞ்சுதளர்ந்தேன் - அதனால்மனஞ்சோர்ந்தேன்—மாலில்விழுந்தேன் - மயக்கமாயினேன் —நிலைகாணேன் - கடக்கும்வழிகண்டிலன்—அஞ்சலையென்று-பயப்படாதேயென்று —இன்று-இப்போது— அவளையாளேல் - வந்துகூடாளாயின் —அனல்காணும் - நெருப்போடேன்பட்ட—பஞ்சுபடும்பாடு - பஞ்சுபடும்பாட்டைப்போல —அங்கசன் - மன்மதனுடைய—அம்பாற்படுவேன் - அம்பினால்வதைவேன். எ - று. ஏகாரம், ஈற்றசை. வஞ்சி, உவமையாகுபெயர். வஞ்சி, நடந்து, வந்து, மயல்செய்தாள். அதனால், தளர்ந்தேன், என்னைக்கூடாளாயின், அனல்காணும்பஞ்சுபடும்பாட்டைப்போல, அங்கசனம்பாற்படுவேனெனமுடிக்க. (கங)

என்ன நினைந்தே மன்னவன் வெந்தி யிழுதாகி
முன்னர் மருங்கே நின்ற வொருத்தன் முகநோக்கிப்
பொன்னென வந்தவ் வாய்தலி னின்று புறப்பட்ட
கன்னி யணங்கார் நீயறி கென்றான் காமுற்றே.

(இ - ள்.) என்னநினைந்து - இவ்வாறெண்ணமிட்டு—மன்னவன் - அரசன்—வெந்தி - அனலிற்பட்ட —இழுதாகி-வெண்ணெய்போலுருகி — முன்னர் - தனக்குமுன்—மருங்கேநின்ற - பக்கத்திலிருந்த —ஒருத்தன் முகநோக்கி-ஒருவனதுமுகத்தைப்பார்த்து —பொன்னெனவந்து-இலக்குமிபோல்வந்து —அவ்வாய்தலினின்றுபுறப்பட்ட-அந்தவாசற்படியினின்றுவெளிப்பட்ட—கன்னியணங்கு - தேவகன்னிபோல்பவள்—ஆர் - எ

வள்—காமுற்று - காமமேலிட்டு—நீயறிகென்றான் - நீவிசாரியென்றான். எ - று. கன்னியணங்கு, உவமையாகுபெயர். அறிக, என்றான், என்பது, அறிகென்றானென்றாயது, விகாரத்தாலெனக். காமமென்பது, காமென்றாயது, இடைக்குறை. மன்னவன், இழுதாகி, முகநோக்கி, காமுற்று, நீயறிகென்றானெனமுடிக்க. (கச)

ஓடி யறிந்தே யன்னவன் வந்தாங் குரைசெய்வா
வாடு மருங்குன் மங்கையை யின்றான் மகளென்று
நீடிய வெந்துயர் மன்ன னறிந்தென் னெறியானுங்
கூடுவ னிந்த வணங்கினை யென்று குறித்தேகி.

(இ - ள்.) அன்னவன் - அந்தவேவலாளி—ஓடி - விரைவிலோடி—அறிந்துவந்து - அவளைப்பற்றிவிசாரித்துவந்து —அங்கு - அவ்விடத்தில்தனை —வாடுமருங்குல் - சுருங்கியவிடையையுடைய —மங்கையை - பெண்ணை—இன்றான்மகளென்று—இன்றானதுபுத்திரியென்று —உரைசெய்ய - அரசனுக்குத்தெரிவிக்க—நீடிய - மிக்குற்ற—வெந்துயர் - கொடியகாமத்துயரையுடைய —மன்னனறிந்து - அரசன்கேள்வியுற்று—எந்நெறியானும் - எந்தவிதத்தாலும் —இந்தவணங்கினை - இந்தப்பெண்ணை—கூடுவனென்று - புணருவேனென்று—குறித்து - மனதில்திடமாகக்குறித்து—ஏகி - சென்று. எ - று. அன்னவன், ஓடி, அறிந்துவந்து இன்றான்மகளென்றுரைசெய்ய அதைமன்னனறிந்து எந்நெறியானுங் கூடுவனிந்தவணங்கினையென்று குறித்தேகியெனமுடிக்க. (கரு)

கோயிலின் மேவி யிருந்துயர் ஞானக் குறிகூறுந்
தூயவ ராகிய வாரியர் தாமுஞ் சுடர் செம்பொற்
சேயிழை யாரும் வலிந்துறி லின்பு செயாதென்று
வாயிலி னாலலை வேனென மன்னன் மனத்தெண்ணி.

(இ - ள்.) கோயிலின்மேவி - தனதரண்மனையிற்சென்று—இருந்து - இருந்துகொண்டு —உயர்ஞானக்குறிகூறும் - மேலாயஞானவிலக்கியார்த்தத்தைவிளக்கும்—தூயவராகியவாரியர்தாமும் - பரிசுத்தஞானவாசாரியரும்—சுடர் - பிரகாசம்பொருந்திய—செம்பொன் - சிவந்தபொன்னாலாகிய—சேயிழையாரும் - செம்மையாகவியற்றிய வாபரணங்களையுடைய மாதரும்—வலிந்துறின் - அழையாதுவந்தால்—இன்புசெயாதென்று - உபசரியாதென்று—வாயிலினால் - தூதாரணமாக—அலைவேனென - பு

னர்வேனென்று—மன்னன் மனத்தெண்ணி - அரசன்தனதுள்ளத்தி னினைத்து. எ - று. மன்னவன் மேவியிருந்து குருவும் மாதரும் வலிந்து நின் பாருமின்புசெயாரென்று தாதுகாரணமாக வலனைத்தழுவுவனென் று மனநினிவினைத்தெனமுடிக்க. குறியென்றுமினையால், இலக்கபொரு த்தமெனப்பெற்றும். அழைப்பித்துபசரித்தல்போல்வதன்றாதலின், வலித்துறியென்றார். (௧௭)

வேறு.

தூது வல்லநன் முறைக்குறை மாதரைத் துணிந்து
நீதி வல்லவ னிருமலன் மகடனை நீயிர்
தீதி லெம்மனைக் கிழத்தியாம் படியுரை செய்து
போது மின்களென் றேவினன் வியனிலம் புரப்பான்.

(இ - ள்.) தூதுவல்ல - தூதுமுடித்தலில்வல்லவராயுள்ள —நிறைமுறைக் குறை - மிக்கபேரறிவையுடைய—மாதரை - ஸ்திரீகளை—துணிந்து - தக்காரெனத்தெளிந்து—நீதிவல்லவன்-நீதிநூலில்வல்லவனாகிய —நிருமலன்-நின்மலனென்பவனது—மகடனை,- புத்திரியை—நீயிர் - நீங்கள்—தீதில்-குற்றமற்ற—எம்மனைக்கிழத்தியாம்படி /- எனதுமனைவியாமாறு—உரை செய்து - எடுத்துபோதித்து —போதுமின்களென்று - வாருங்களென்று —வியனிலம்புரப்பான் - அகன்றபூமியைக் காக்குமரசன்,—ஏவினன் - அவர்களைத்தூதாகவனுப்பினன். எ - று. வல்ல, குறிப்புப்பெயரெச்சம், வியனிலம்புரப்பான்துணிந்து, உரைசெய்து, ஏவினனென முடிக்க. கிழத்தியெனல், உரிமையின்மேனின்றது. (௧௮)

ஐய வன்னதே செய்குவ மெனப்புகன் றகத்திற்
பைய வந்துநன் னிருமலன் றிருமுகம் பார்த்து
வைய மன்னவன் கருத்தினை வருத்தனர் மறுத்துத்
தூய்ய மங்கைமீ ரெமக்கடா திதுவெனச் சொன்னான்.

(இ - ள்.) ஐய - ஐயனே—அன்னதேசெய்குவமென - அவ்வண்ணமேசெய்குதுமென்று—புகன்று - சொல்லி—அகத்திற்பையவந்து - அவனதுவீட்டில்மெதுவாகவந்து —நன்னிருமலன் - நல்லநிருமலனென்பவனுடைய—திருமுகம்பார்த்து - அழகியமுகத்தைநோக்கி—வையமன்னவன் - உலகத்தையாளுமரசனது —கருத்தினைவருத்தனர் - கருத்தைத்தெரிவித்தார்கள்—மறுத்து - அதற்குடன்படாமல்—தூய்யமங்கைமீர்- பரிசுத்தமானஸ்திரீகளே—இது - இக்காரியம் —எமக்கடாதெனச்சொன்னான் - எங்களுக்குத்தகாதென்று சொல்லினன். எ - று. தூதுவல்ல

மாதர்கள், புகன்று வந்து பார்த்து வருத்தனரெனவும், நிருமலன் மறுத்து எமக்கடாதிதுவெனச்சொன்னானெனவு முடிக்க. ஐயவெனல்; விளி.

வேந்தன் மாமனை நும்மக ளாயினவ் வேந்தன்
சார்ந்த வாழ்வெலா நுமவென வறிதிரீர் தானே
போந்த வோர்திரு மகள்வர வினைப்புறம் போக்கு
மாந்தர் யாருள ரென்றுமங் கையர்சொல வருப்பான்.

(இ - ள்.) வேந்தன் - அரசனது—மாமனை - சிறந்தமனைவி—நும்மகளாயின் - உமதுபுத்திரியானால்—அவ்வேந்தன்சார்ந்தவாழ்வெலாம் - அவ்வரசன்றனக்குரிமையாகப்பெற்றவாழ்வனைத்தும்—நுமவெனவறிதிரீர் - உமக்குரியனவாமெனவுணரவறிதிரீர் —தானேபோந்த - வலியவந்த—ஓர் - ஒப்பற்ற —திருமகள்வரவினை - சீதேவிவரவை —புறம்போக்குமாந்தர் - காலாலுதைத்துத்தள்ளுமனிதர்—யாருளரென்று - யாரிருக்கின்றனரென்று—மங்கையர்சொல - ஸ்திரீகள்சொல்ல—வருப்பான் - அதற்குவிடையாகச்சொல்லுவன், எ - று. மங்கையர்சொல அவன்வருப்பானெனமுடிக்க. வாழ்வெலாமென்பது பன்மையாதலின், நுமவெனக்கூறினர். (௧௯)

இம்மை சேர்பயன் கருதியே தகாதவ ரிடத்திற்
கொம்மை வார்முலை மகட்கொடை நேர்ந்தவக் கொடியா
ரம்மை யாழ்நிரை யத்திடை வீழ்ந்தன ரழுந்தித்
தம்மை நோக்குந ரொருவரு மின்றியே தளர்வார்.

(இ - ள்.) இம்மைசேர்பயன் - இம்மைக்குரியபயனை —கருதியே - நினைத்தே—தகாதவரிடத்தில் - முறைவழுவுவோரிடத்தில் —கொம்மை - அழகிய—வார் - ரவுக்கையையணிந்த—முலை - தனங்களையுடைய —மகட்கொடை - மகளைக்கொடுத்தற்கு—நேர்ந்த - சம்மதித்த—அக்கொடியார் - அந்தப்பாவிகள்—அம்மை - மறுமையில் —ஆழ் - ஆழ்ந்த—நிரயத்திடை - நரகத்தில்—வீழ்ந்தனரழுந்தி - விழுந்தழுந்தி —தம்மைநோக்குநர் - தம்மைநோக்கியிரங்குபவர் —ஒருவருமின்றியேதளர்வார் - ஒருவருமில்லாமல்வதைவார்கள், எ - று. அக்கொடியார் நிரயத்திடை விழுந்து அழுந்தி தளர்வாரெனமுடிக்க. ஆழென்றவிலேசானே, நரகவாதியென்றும். (௨௦)

நமக்க டாதது செய்துயிர் வாழ்வது தன்னிற்
சுமைக்க டாதமெய் விடுத்தலே நன்றெனச் சொல்வ

னமக்க டாதது புகன்றனிர் மங்கைமீ ரிச்சொ
னுமக்க டாததென் றியம்பனு மங்கையர் நுவல்வார்.

(இ - ள்.) தமக்கடாததுசெய்து - ஒருவன்தனக்குத்தகாத காரியத்தைச்செய்து—உயிர்வாழ்வதுதன்னில் - உயிரோடேயின்றுவாழ்வதினும்—சுமைக்கடாத - சுமத்தற்குத்தகாத—மெய்விடுத்தலே - தேகத்தைவிடுதலே—நன்றென - நன்மையென்று—சொல்வர் - அறிவுடையோர்சொல்வார்கள்—(இங்ஙனமிருக்க) எமக்கடாதது - எமதுகுலத்துக்கடாதகாரியத்தை—புகன்றனிர் - சொன்னீர்கள்—மங்கைமீர் - ஸ்த்ரீகளோ—இச்சொல் - இந்தவசனம்—நுமக்கடாததென்றியம்பலும் - உங்களுக்குத்தகாததென்றுநிருமலன்சொல்லவும்—மங்கையர்நுவல்வார் - அதற்குஸ்த்ரீகள்சொல்வார்கள். எ - று. தகாதவரிடத்திலென்பதில் உம்மைதொக்குநின்றது. அறிஞர்; தோன்றாவெழுவாய். இயம்பலுமென்பதில், நின்மலனைவருவிக்க. தன்னிலென்பது. சாரியை. (உக)

உறையில் வாளொடு மாவழங் குறுவனத் தோடி
மறவ னோர்பொரு டருகென விரத்தலை மாலு
மிறைவன் வாழ்குடி தன்னிலொன் றொருபொரு ளிரத்த
லறவ னுகிய நீயிதை யறிந்திலை யந்தோ.

(இ - ள்.) உறையில் - உறையினின்றுருவிய—வாளொடு - வாளாயுதத்தோடு—மறவன் - மறவனென்னுஞ்சாதியான்—மாவழங்குறு - மிருகங்கள்சஞ்சரிக்கும்—வனத்தோடி - காட்டில்விரைந்துசென்று—ஓர்பொருள்தருகென - வழிச்செல்வோரை யோர்பொருடருகென்று—இரத்தலைமாலும் - இரத்தலுக்கொப்பாகும்—இறைவன் - அரசன்—வாழ்குடிதன்னிலொன்று - தனதாளுகையில்வாழ்கின்றவோர்குடித்தனக்காரனிடத்தில்—ஒருபொருளிரத்தல் - ஒருபொருளையிரந்துகேட்டலென்பது—அறவனுகியநீ - நீதிவழிவலுகியநீ—அந்தோ - ஐயோ—இதை - இக்காரியத்தை—அறிந்திலை - தெரிந்திலைபோலும். எ - று. இறைவன் தனதுகுடிகளிலொருவரிடத்தொருபொருளிரத்தல், மறவன் வாளொடு வனத்தோடி வழிச்செல்வோரையோர்பொருடருகெனவிரத்தலை மானுமென முடிக்க. (உஉ)

என்று மாதரார் கூறலு நிருமல னெங்கண்
மன்றல் வார்குழற் பேதையோ வல்லனும் மனத்தைச்

சென்று கூறுமி னவண்மன மிசைந்துமை செய்யி
னன்று போமினென் றியம்பின னவர்மன நயந்து.

(இ - ள்.) என்று - இங்ஙனமாக—மாதரார்கூறலும் - ஸ்த்ரீகள்சொல்லவும்—நிருமலன் - நிருமலனென்போன்—எங்கள் - எங்களுடைய—மன்றல் - வாசனைபொருந்திய—வார்குழல் - நீண்டகூந்தலையுடைய—பேதையோ - பெண்ணோ—வல்லன் - யோசனையில்மிக்கவலியுள்ளான்—நும்மனத்தை - உங்கள்கருத்தை—சென்று - அவளிடத்திற்போய்—கூறுமின் - சொல்லுங்கள்—அவள் - அந்தப்பெண்—மனமிசைந்துமைசெயின் - மனமிசைந்துசொல்வாளாயின்—நன்று - எமக்குடன்பாடு—போமினென்று - போங்களென்று—இயம்பினன் - சொன்னான்—அவர் - அந்தஸ்திரீகள்—மனநயந்து - மனமகிழ்ந்து. எ - று. நிருமலன் இயம்பினன் எனமுடிக்க. (உ௩)

மங்கை பாலடைந் தறைகுவர் மதன்வலி மாயக்
கொங்கை மாமுகிழ்ப் பூங்கொடி நீயருள் கூர்ந்தே
யெங்கள் கோமக னுயிர் நிறுத்தினை யெனி—
லங்கண் மாநிலத் துயிர்க்கெலா மன்னையா குவையால்.

(இ - ள்.) மங்கைபாலடைந்து - மாதேவியினிடத்திற்போய்—அறைகுவர் - சொல்வார்கள் (அதாவது) மதன்வலிமாய - மன்மதனதுவலி குன்ற—கொங்கை - தனங்களென்னும்—மா - பெரிதாகிய—முகிழ் - மொக்கையுடைய—பூங்கொடி - பூங்கொடிபோல்பவளே—நீயருள்கூர்ந்து - நீகிருபைவைத்து—எங்கள்கோமகன் - எங்களரசனது—ஆருயிர் - நிறைந்தவுயிரை—நிறுத்தினையென்னில் - போகாமனிறுத்துவையாயின்—அங்கண் - அழகியவிடத்தையுடைய—மாநிலத்து - பெரியவிந்தப் பூமியில்—உயிர்க்கெலாம் - எல்லாவுயிர்களுக்கும்—அன்னையாகுவை - தாயாகுவை. எ - று. ஆல் - அசை. பூங்கொடி; உவமைத்தொகைப்புறத்துப்பிறந்த வன்மொழித்தொகை. எனவே, அவனுக்கு மனைவியாகுதியெனக்குறிக்கப்பெற்றும், மதன்வலிமாய நீயருள்கூர்ந்து மன்னனுயிர் நிறுத்தினையென்னில், உயிர்க்கெலாமன்னையாகுவையென முடிக்க. ()

என்ன வோதலு நிருமல னின்றரு ளென்றும்
மன்ன னுண்மனை துறக்குமோர் சூழ்ச்சியை மதித்துப்
பொன்ன னீரர செனக்கொரு சூளினைப் பொருந்திப்
பன்னு மாயினீர் பணிந்தது நன்றெனப் பகர்ந்தாள்.

(இ - ள்.) என்னவோதலும் - என்றஸ்த்ரீகள்சொல்லவும் —நிருமலனீன்றருள் - நிருமலன்பெற்ற—என்றாய் - எனதுதாயாகியமாதேவியானவள்—மன்னனால் - அரசனால்—மனைதுறக்குமோர்சூழ்ச்சியை - குடும்பத்தைத்துறக்கவேண்டுமென்கிறவோராலோசனையை —மதித்து - நிர்மாணித்து—பொன்னனீர் - இலக்குமிபோன்றவர்களே—அரசு - இராசன்—எனக்கொருளினை - எனக்கோர்சபதத்தை—பொருந்தி - சம்மதித்து—பன்னுமாயின் - விடைதருவனாயின்—நீர்பணித்தது - நீங்கள்கட்டளையிட்டதை—நன்றென - நன்கேற்பனென்று—பகர்ந்தாள் - சொல்லினள். எ - று. என்தாய் மதித்துப் பகர்ந்தாளெனவும்; நீர்பணித்தது நன்றாமெனவு முடிக்க. சூழ்ச்சி; உபாயமெனினுமமையும். (உ௫)

தூது சென்றவர் பொற்கொடி சொல்லிய சொல்லாற்
காதல் கொண்டன னென்றுளந் தெரிந்துதாங் கருதி
மாது நின்பெருங் கருணைசெய் வதற்கெங்கண் மன்னன்
யாத றைந்தனை யதுசெயத் தக்கவ னென்று

(இ - ள்.) தூதுசென்றவர் - தூதாகச்சென்றமாதர்கள்—பொற்கொடிசொல்லியசொல்லால் - மாதேவிசொல்லியசொல்லினால் —காதல்கொண்டனனென்று - சம்மதித்தானென்று—உளந்தெரிந்து - மனதில்தெரிந்துகொண்டு—மாது - தாயே —எங்கண்மன்னன்-எங்களரசன்—நின்பெருங்கருணைசெய்வதற்கு - உனதிட்டத்தின்படிநடப்பதற்கு —தாங்கருதியாதறைந்தனை - தாங்கள்நினைத்துயாதுமொழிகின்றனையோ—அதுசெயத்தக்கவனென்று - அதனைத்தவறாதுசெய்வனென்று சொல்லி. எ-று. தூதுசென்றவர் உளந்தெரிந்து சொல்லி யெனமுடிக்க. பொற்கொடி; அன்மொழித்தொகை. (உ௬)

உள்ள மார்வமோ டேகியம் மடந்தைய ருரைப்ப
வள்ள லாகிய மன்னவன் மனநனி மகிழ்ந்து
தெள்ளு மாரமு தனையவ ளிருந்துழிச் சென்றா
னெள்ளு காமநோய் கொண்டவ னென்செய வினையான்.

(இ - ள்.) உள்ளமார்வமோடு - மனக்களிப்போடு —ஏகியமடந்தையர் - திரும்பிச்சென்றஸ்த்ரீகள்—உரைப்ப - அரசனிடத்திற்சொல்ல — வள்ளலாகியமன்னவன் - நாதாவாகியவரசன்—மனநனிமகிழ்ந்து - அதைக்கேட்டுமிகவுமனமகிழ்ந்து—தெள்ளும் - தெளிவாகிய —ஆர் - நிறைந்த—அமுதனையவள் - அமிர்தம்போல்பவளாகியமாதேவியென்பவள்—இருந்துழிச்சென்றான் - இருந்தவிடத்திற்சென்றான்—எள்ளும் - இகழ்தற்கியைந்த —காமநோய்கொண்டவன் - காமநோய்மிக்கவன் —என்செயவினையான் - என்னசெய்தற்குச்சம்மதியான். எ - று. மன்னவன் மகிழ்ந்து சென்றானெனவும், அம்மடந்தையர் ஏகி உரைப்பவெனவும், காமநோய்கொண்டவன் என்செயவினையானெனவுமுடிக்க. என்செயவினையானென்பது; என்னகொடுரஞ் செய்யச்சம்மதியானெனப்பொருள்கொளநின்றது. (உ௭)

வல்லி கொங்கையைப் பொன்மலை யென்னவே மதியா
னில்லு றுங்குட மாகவே யுண்ணினை னுதலை
வில்லெ னும்படி நினைத்தனன் வெண்பிறை யென்னான்
சொல்லு வன்றனக் ககப்படு மடந்தையாய்த் துணிந்து.

(இ - ள்.) வல்லிகொங்கையை - வல்லிபோன்றவளதுதனங்களை—பொன்மலையென்னவேமதியான் - மேருமலையென்றுமதியாதவனாய்—இல்லுறுங்குடமாகவே-வீட்டிலுள்ளகுடமென்றே —எண்ணினன் - நினைத்தனன்—நுதலை - அவளதுநெற்றியை—வெண்பிறையென்னான் - மூன்றாம்பிறையென்றுன்னாதவனாய் —வில்லெனும்படிநினைத்தனன் - வில்லென்றுசொல்லும்படியாகநினைத்தான் —தனக்ககப்படுமடந்தையாய் - தனக்கெளிதிற்கிடைக்கும்பெண்ணாக—துணிந்து-தீர்மானித்து—சொல்லுவன்-வாயினாலும்வதறுவன். எ.- று. வல்லி; உவமையாகுபெயர். மன்னவன் காமமீக்கால் கொங்கையைக்குடமெனவும், நுதலைவில்லெனவும், நினைப்பதுமன்றி வாயினாலும்வதறுவனெனமுடிக்க. (உ௮)

அருள்செய் தென்னைநீ யளித்திடு மதற்குநான் செய்வ
துரைசெய் நானது செய்வனென் றரசர்கோ னுரைப்ப
வரைசெய் தோளினா யென்னைநீ வலிந்துபுல் லாமைக்
கொருசொ லுண்மைசொல் லென்றன ளொருபுடை யொதுங்கி.

(இ - ள்.) அருள்செய்து-கிருபைகூர்ந்து—என்னைநீயளித்திடுமதற்கு - நீயென்னையிரட்சிப்பதற்கு —நான்செய்வதுரைசெய்-நான்செய்யவேண்டியதைச்சொல்லு —நானதுசெய்வனென்று-நானதைத்தவறாதுமுடிப்பனென்று—அரசர்கோனுரைப்ப - ராஜாதிராஜன்சொல்ல—வரைசெய்தோளினாய் - மலைபோன்றபுசங்களையுடையவனே —என்னைநீவலிந்துபுல்லாமைக்கு-நீயென்னைப்பலவத்கார்ரமாகத்தழுவாமைக்கு —ஒருசொலுண்மை - ஒருசொல்லுண்டு—ஒருபுடையொதுங்கி - ஒருபக்கத்திலொதுங்கி—

சொல்லென்றனள் - அதற்குயாதுகூறியெனக்கேட்டனள். எ - று. அரசர்கோன் உரைப்பவெனவும், மாதேவி ஒருபுடையொதுங்கி நீவிர்துயில்லாமைக்கு ஒருசொல்லுண்மைசொல்லென்றன ளெனவும் கூட்டிமுடிக்க. அரிந்திடல்; உயிர்போகாதகைத்தல். (உ௯)

நின்கருத் திசை வாலன்றி நின்னையான் வலியே
னென்ப தற்கொரு குறளைக் குவன்முகி லெழுந்த
மின்கொ டிச்சிறு மருங்குலாய் கேளென வொள்வேல்
புன்பு கர்க்கருங் கடாக்களிற் றரசர்கோன் புகல்வான்.

(இ - ள்.) நின்கருத்திசைவாலன்றி - உனதுமனோசம்மதியினாலல்லாமல் —நின்னையான்வலியேனென்பதற்கு - உன்னையநியாயமாகத்துயில்வேனென்பதற்கு—ஒருகுறளைக்குவன் - ஓர்சபதஞ்சொல்லுவன்—முகிலெழுந்த—மேகத்திற்றோன்றிய—மின்கொடி - மின்னற்கொடிபோன்ற—சிறுமருங்குலாய் - சுருங்கியவிடையையுடையவளே —கேளென - யான் சொல்வதைக்கேளென்று —ஒள்வேல் - ஒள்ளியவேலோடு —புன்புகர் - சிறியபுள்ளிகளையும் —கருங்கடாம் - கரியமதசலத்தையுமுடைய—களிறு - யானைகளையுடைய —அரசர்கோன்புகல்வான் - ராஜாதிராஜன்சொல்லுவன். எ - று. அரசர்கோன் மருங்குலாய் நின்னையான்வலியேனென்பதற்கு ஓர்குறளது, அதுகூறுவன், கேளெனப் புகல்வானென முடிக்க. (௩௦)

வேறு.

வந்தநல் விருந்தி ருப்ப மனையினுற் றருந்து வானும்
பந்தியி னுணவு வேறு பண்ணுபா தகனுந் தாயுந்
தந்தையு முணவுண் ணாத சழக்கனு முச்சிப் போதி
னொந்தவர் தமைநோக் காம னுகர்ந்திடு கொடியன் றானும்.

(இ - ள்.) வந்த - தன்னிடத்தில்வந்த—நல்விருந்திருப்ப - நல்லவிருந்தினரிருக்க—மனையினுற்று - தன்னறைவீட்டிற்புகுந்து —அருந்துவானும் - காணாதுண்பானும்—பந்தியின் - பந்தியினிடத்தில்—உணவு - போசனத்தை —வேறுபண்ணுபாதகனும் - பேதஞ்செய்யும்பாவியும் —தாயுந்தந்தையும் - தாய்தந்தையரிருவரும் —உணவுண்ணாத - உணவுண்ணாமற்செய்த—சழக்கனும் - குற்றவாளியும்—உச்சிப்போதில் - நடுப்பகலில்—நொந்தவர்தமைநோக்காமல் - பசியுற்றுநொந்தவர்களைநோக்காமல்—நுகர்ந்திடுகொடியன்றானும் - தான்மாத்திரமுண்ணும்பாதகனும். எ - று. உணவுவேறுபண்ணுதல்; உபசரிக்கும்விகற்பத்தை. உணவு

ண்ணாதசெய்தலென்பது உணவுண்ணாதவென்றபடி, நம்வினைபிரயினையக்கம். (௩௧)

நிந்தைசெய் பவரி றைவ னிருமலன் பூசை யின்றி
வந்தனை யருந்து வானு மறுத்தவூ னுகர்விப் பானுந்
தந்தநல் வினையாற் செல்வஞ் சார்ந்தவர் தம்மைக் கண்டு
சிந்தனை பொறுத லின்றித் தீர்வினை மகிழ்வான் றானும்.

(இ - ள்.) நிந்தைசெய் - பிறரைப்பழிக்கத்தக்க—உரையிறுவானும் - பழிபாவத்தாலுரைவிட்டவனும் —நிருமலன்பூசையின்றி - தேவபூசைசெய்யாது—வந்து - மிருகம்போல்வந்து —உணவருந்துவானும் - உணவுண்பவனும்—மறுத்தவூன் - யாவராயுமறுக்கப்பெற்றமனிதவூனை —நுகர்விப்பானும் - தின்னச்செய்பவனும்—நல்வினையால் - நல்வினையினால்—தந்த - தரப்பெற்ற—செல்வஞ்சார்ந்தவர்தம்மைக்கண்டு - பெருஞ்செல்வமுடைந்தவர்களைக்கண்டு—சிந்தனைபொறுது - மனம்பொறாமல்—அழிந்து - வருந்தி—தீர்வின் - அவர்களது செல்வமுடிவில் —உள்மகிழ்வான்றானும் - மனங்களிப்பவனும். [illegible] நிந்தைசெய்புனவு; பழிபாவக்காரணமாகத்தேமுன்னவை. மறுத்தவூனெனினுமமையும். (௩௨)

கன்றுணை விடாம லான்பால் கறந்துகொள் பவனுஞ் செய்த
நன்றிகொல் பவனுங் கோடி நடுநிலை தவறு வானுங்
கொன்றுயிர் வதைப்ப நோக்குங் கொடியனும் போர்க் களத்திற்
றன்றலை வனைவி டுத்துச் சாய்ந்துபோ மடமை யானும்.

(இ - ள்.) கன்று - ஆவின்கன்றிற்கு—உணவிடாமல் - ஊட்டவிடாமல் - ஆன்பாற்கறந்து கொள்பவனும்-பசுவின்பால்கறந்துகொள்பவனும்—செய்தநன்றிகொல்பவனும் - ஒருவன்செய்தநன்றிக்கு மாறுசெய்பவனும்—கோடி - கோடிபங்கு—நடுநிலை - நடுநிலையினின்று—தவறுவானும் - தவறிப்போகின்றவனும்—கொன்று - ஒன்றைக்கொலைசெய்து—உயிர்வதைப்பநோக்கும்-அந்தவுயிர்வதையைப்பார்க்கும் —கொடியனும்-கொடியபாதகனும்—போர்க்களத்தில் - யுத்தகளத்தில்—தன்றலைவனைவிடுத்து - தனதேசமானைவிட்டு விட்டு—சாய்ந்துபோம் - தெரியாதோடிப்போகின்ற—மடமையானும் - மூடனும். எ - று. நன்றிகொல்; அபகாரஞ்செய்தல். நடுநிலை; நீதியை. (௩௩)

அடைக்கல மெனவந் தானை யளித்திடா தகற்று வானுங்,
கொடுக்குது மெனவு ரைத்துக் கொடாதுமோன் கொடைவி ல

க்கி, விடுக்குறு மவனும் பாவ வினையிடத் துதவி யாகி, நடக் குறு மவனுந் தேர்ந்து நட்டபின் வஞ்சிப் பானும்.

(இ - ள்.) அடைக்கலமெனவந்தானை - நீயேதஞ்சமெனவந்தடுத்த வனை—அளித்திடாது - காப்பாற்றாமல்—அகற்றுவானும் - துறத்திவி டுபவனும் —கொடுக்குதுமெனவுரைத்து-கொடுக்கிறேனென்றுறுதிமொ ழிசொல்லி—கொடானும் - கொடாதுமோசஞ்செய்பவனும் —ஒள்-ஒள் ளிய—கொடைவிலக்கி - ஒருவனுக்கொன்றுகொடுத்தலைத்தடுத்து —விடு க்குறுமவனும் - விடச்செய்பவனும்—பாவவினையிடத்து - பாவமுயற்சிக ளில்—உதவியாகி - உதவிசெய்து —நடக்குறுமவனும் - நடப்பவனும்— தேர்ந்து - ஆராய்ந்துதெளிந்து—நட்டபின் - சிநேகித்தபின் —வஞ்சிப் பானும் - வஞ்சகஞ்செய்பவனும். எ - று. கொடைவிலக்கிவிடுத்தல் ; கொடுக்காதபடி செய்தலை. (௬௪)

குரவர்தம் முரைக டக்குங் கொடியனுந் துறந்து ளார்தம்
வரவெதிர் கண்டெ ழாத மறவனு மறிந்தான் போன்று
கரவினி லருநூல் கற்குங் கயவனும் புதிய ராகி
யிரவினில் வந்த நல்லோர்க் கிடங்கொடா தகற்று வானும்.

(இ - ள்.) குரவர்தம்முரை கடக்கும் - ஆசிரிய வசனங்கடக்கும்— கொடியனும் - கொடியபாபியும் —துறந்துளார்தம் - முற்றத்துறந்தவர து—வரவெதிர்கண்டெழாத - வருதலைக்கண்டெசரியாத —மறவனும் - பாபியும்—அறிந்தான்போன்று - அறிந்தவனைப்போல —கரவினில் - வ ஞ்சகத்தால் —அருநூல்கற்குங் கயவனும் - அரியநூலைக்கிரகிக்குமூடனு ம்—புதியராகி - நூதனராகி—இரவினில்வந்தநல்லோர்க்கு - இரவில்வந் தசத்துக்களுக்கு—இடங்கொடாதகற்றுவானும் - இடங்கொடேனென்று துறத்துபவனும். எ - று. தனக்கெல்லாந்தெரிந்ததுபோல விசாரித்துக் கவர்தலை ; அறிந்தான்போன்றுகரவினிலருநூல் கற்றலென்றார். (௬௫)

முன்புகழ்ந் துரைத்துப் பின்னர் முறுவல்செய் திகழ்வா
ன்றானுந், தன்பெருங் கிளைநல் கூர்ந்து தளர்வுற வாழ்கின்று
னு, மன்புகொண் டொருவன் வைத்த வரும்பொருள் கவர்கின்
றானுந், தன்புறந் தொழில்செய் வித்துச் சொல்பொரு ளிலையெ
ன் பானும்.

(இ - ள்.) முன்புகழ்ந்துரைத்து - ஒருவனுக்குமுன்னவனைப்புகழ்ந் தசொல்லி—பின்னர் - அவனில்லாதவிடத்து—முறுவல்செய்து - நகை

த்து—இகழ்வான்றானும் - தூஷிப்பவனும்—தன்பெருங்கிளை - தனதுபெ ரியசுற்றத்தார்—நல்கூர்ந்து - வறுமைமேலிட்டு—தளர்வுற - சோர்வடை ய —வாழ்கின்றானும் - தான்மாத்திரஞ் சுகித்திருப்பவனும் —அன்பு கொண்டு - மிக்கவாசைகொண்டு—ஒருவன்வைத்த - ஒருவன்பாதுகாக் கவைத்த—அரும்பொருள்கவர்கின்றானும் - அரியதிரவியங்களைவஞ்சிப் பவனும்—தன்புறந்தொழில்செய்வித்து - விசனப்படும்படியான தொ ழில்செய்யும்படிசெய்து—சொல்பொருளிலையென்பானும் - தான்சொன் னகூலிகொடாதவனும். எ - று. (௬௬)

கற்பழி மனைவி யோடு கலந்திருப் பவனு மற்றோர்
பொற்புடை மனைவி தன்னைப் புணர்வதற் கெண்ணு வானுஞ்
சொற்பொரு ளுணர்த்தி னானைத் தொழவுள நாணு வானும்
விற்பன வலாத விற்று மெய்வளர்த் தழிகு வானும்.

(இ - ள்.) கற்பழிமனைவியோடு - விபசாரஞ்செய்யுந்தன் மனைவியோ டு—கலந்திருப்பவனும் - கூடிவாழ்பவனும் —மற்றோர் - வேறொரு— பொற்புடைமனைவி தன்னை - அழகுள்ளமனைவியை —புணர்வதற்கெண் ணுவானும் - தழுவிச்சுகிக்கநினைப்பவனும் —சொற்பொருளுணர்த்தின னை - மஹாவாக்கியார்த்தந்தெரிவித்தவனை—தொழ - வணங்க—உளம் - தனதுள்ளத்தில்—நாணுவானும் - வெட்கப்படுபவனும்—விற்பனவலாதவி ற்று - விற்கத்தகாதவைகளை விற்று—மெய்வளர்த்தழிகுவானும் - தேக த்தைவளர்த்தழிபவனும். எ - று. சொல் - தத்துவமசியை. பொருள் - இலக்கியார்த்தப்பொருளை. இங்ஙனமல்லாததைக் கொள்ளின் மூரணு ம். பதார்த்தமும், வாச்சியார்த்தமும், இங்ஙனஞ்சிறந்தன்றாமையி னென்க. (௬௭)

நலமலி வயலி லாற்றி னந்தனத் தால யத்திற்
சலமல மொழிப் போன் றானுந் தனிவழி விலக்கு வானும்
விலைமொழி பொய்த்து விற்கும் வெய்யவா ணிகனுந் தாழ்ந்த
குலமிலி தன்குற் றேவல் கூலிமேற் கொண்டியற்று வானும்.

(இ - ள்.) நலமலிவயலில் - வளமைமிகுந்தவயலிலும்—ஆற்றில் - நதி யிலும்—நந்தனத்து - பூங்காவனத்திலும் —ஆலயத்தில் - கோவிலிலும்— சலமலம் - சலமலத்தை—ஒழிப்போன்றானும் - ஒழிப்பவனும் —தனிவ ழி - ஒப்பற்றமார்க்கத்தை—விலக்குவானும் - தடுப்பவனும் —விலைமொ ழி - ஒன்றின்விலைமொழியை —பொய்த்துவிற்கும் - பிறழ்த்துவிற்கும்—

வெய்யவாணிகனும் - கொடியவர்த்தகனும்—தாழ்ந்த - இழிவான—குல மிகிதன் - குலங்கெட்டவனது—குற்றேவல் - அற்பப்பணியை—கூலி கொண்டியற்றுவானும் - கூலிக்குச்செய்பவனும். எ - று. (ருஅ)

உறவுசெய் தறிந்த சொல்லை வுவர்த்துழிக் கூறு வானும்
பிறர்பிழை தனையே நாடிப் பிறரொடு பேசுவானும்
முறைவழு வுறுகொ டுஞ்சொன் முனிவிடை மொழிகு வானு
மறிவழி மனைவி சொல்லின் வழிநிற்கு மறிவி லானும்.

(இ - ள்.) உறவுசெய்து - உறவுகொண்டு—அறிந்தசொல்லை - தெரிந்தசொல்லை—உவர்த்துழி - வெறுப்புப்பிறந்தவிடத்து—கூறுவானும் - பிறரறியக்கூறுபவனும்—பிறர்பிழைதனையேநாடி - பிறர்குற்றத்தையேநாடி—பிறரொடுபேசுவானும் - பிறரோடுசந்தோஷித்துப்பேசுபவனும்—முறைவழுவுறு - ஒழுங்கற்ற—கொடுஞ்சொல் - அருவருக்குஞ்சொல்லை—முனிவிடைமொழிகுவானும் - கோபமீக்குற்றவிடத்திற் சொல்லுபவனும்—அறிவழி - புத்திகெட்ட—மனைவிசொல்லின்வழிநிற்கும் - பெண்சாதிசொல்வழிநடக்கும்—அறிவிலானும்-புத்திகெட்டவனும். எ - று. (ருகூ)

கலந்தவர் தமைப்பி ரித்துக் கலகங்கண் டிடவல் லானும்
புலந்தரு நூலி னில்லாப் பொருளினைக் கூறு வானு
நலந்தனை யழுக்கா றெய்தி நகைத்திகழ் கிற்போன் றானு
மெலிந்தவ ரிடத்து மிக்க வெகுளியைப் பெருக்கு வானும்.

(இ - ள்.) கலந்தவர்தமைப்பிரித்து - சிநேகிதரைவேறுபடுத்தி—கலகங்கண்டிடவல்லானும் - கலகம்விளைத்துக்காணவல்லவனும்—புலந்தரு நூலின் - அறிவைவிளைக்குநூல்களில்—இல்லாப்பொருளினைக் கூறுவானும் - இல்லாதவர்த்தத்தைச் சொல்பவனும்—நலந்தனை - ஒருவனதுநலனடக்கையை—அழுக்காறெய்தி - பொறாமைகொண்டு—நகைத்து - சிரித்து—இகழ்கிற்போன்றானும் - பழிப்பவனும்—மெலிந்தவரிடத்து - செல்வங்குன்றியவரிடத்தில்—மிக்க வெகுளியை—மிக்ககோபத்தை—பெருக்குவானும் - வளர்ப்பவனும். எ - று. சுருதிப்பிரமாணத்திற்கு மாறுகப்பொருள்கூறலை - புலந்தருநூலிலில்லாப் பொருளினைக் கூறுவானு மென்றார். (சூ0)

புண்ணியம் பிறர்பொ ருட்குப் புரிபவன் றானு மிந்த
மண்ணிடையின்பத் திற்கா மறுமைசெய் தொழில்வி டுக்குந்

தண்ணிய வறிவி லானுந் தவத்தை யிகழ்கிற் பானும்
பண்ணிய வினையி லென்றும் பாவமே பயில்கின் றானும்.

(இ - ள்.) பிறர்பொருட்கு - அன்னியரதுபொருளுக்கு—புண்ணியம் புரிபவன்றானும் - புண்ணியஞ்செய்பவனும்—இந்தமண்ணிடை - இந்தப்பூமியினிடத்திலுள்ள—இன்பத்திற்கா - சுகத்திற்காக—மறுமைசெய் - மறுமைபற்றிச்செய்யும்—தொழில்விடுக்கும் - புண்ணியகருமங்களை விடுகின்ற—தண்ணியவறிவிலானும் - தக்கவறிவில்லாதவனும்—தவத்தையிகழ்கிற்பானும் - சத்துக்களையிகழ்பவனும்—பண்ணியவினையில் - தான்செய்முயற்சிகளில்—என்றும் - எப்போதும்—பாவமே - பாவசங்கற்பங்களையே—பயில்கின்றானும் - பழகுபவனும். எ - று. கண்டதேகாட்சி கொண்டதேகோல மென்பாரிவரெனவுணர்த்த; இந்தமண்ணிடையின்பத்திற்கா மறுமைசெய்தொழில்விடுக்குந் தண்ணியவறிவிலானென்றார். (சூக)

ஆவனு னுண்மை நீயா தறைந்தனை யதுசெய் தன்றி
மேவுவே னுயி னென்று வேள்விரும் பழகன் கூறக்
காவிநேர் விழிமா தேவி கருத்திசைந் தற்றே யாயிற்
போவம்வா வென்று சொன்னா ளரவல் னுவகை பூத்தான்.

(இ - ள்.) ஆவனுன் - நானுவன்—உண்மை - இதுசத்தியமே—நீயாதறைந்தனை - நீயேதுசொல்கின்றையோ—அதுசெய்தன்றி - அதனைச்செய்துமுடியாமல்—மேவுவேனுயின் - புணர்தற்கிசைவேனாயின்—என்று—என்று—வேள்விரும்பழகன்கூற - மன்மதனுமவாவத்தக்கவழகமைந்தவரசன்கூற—காவிநேர்விழிமாதேவி - நீலோற்பலம்போன்றகண்களையுடையமாதேவியானவள்—கருத்திசைந்தற்றேயாயில் - திரிகரணசுத்தியுடனுஞ்செய்யச் சம்மதிப்பையாயின்—போவம்வாவென்றுசொன்னாள் - அரசனே போகுதும்வாவென்றுசொல்லினள்—புரவலனுவகைபூத்தான் - அரசன் மிகச்சந்தோஷித்தனன். எ - று. வேள்விரும்பழகன் நீயாதறைந்தனை யதுசெய்தன்றி மேவுவனுயினுவனுண்மையென்றுகூற வெனவும், மாதேவி அற்றேயாயின்போவம்வாவென்று சொன்னாளெனவு முடிக்க. கருத்தென்றதனால் திரிகரணமென்றாம். (சூஉ)

கோயிலின் முன்னர் சென்றான் கொற்றவன் சிவிகை யேற்றி
யாயிழை மடந்தை நல்லா ளருகுறூஉ வுற்றுச் செல்லப்

போயின ளரசர் கோமான் புக்குழிப் புக்கா ளொள்வேற்
சேயரி நெடுங்கட் செவ்வாய்த் திலகவா ணுதன்மா தேவி.

(இ - ள்.) கோயிலின்முன்னர் - அரண்மனைக்குமுன்னே—கொற்றவன்சென்றான் - அரசன்போயினன்—சிவிகையேற்றி - பல்லக்கையிலேற்றி—ஆயிழைமடந்தைநல்லார் - சிறந்தவாபரணங்களையுடைய ஸ்திரீகள்—அருகுசூழ்வுற்று - பக்கத்திற்சூழ்ந்து—செல்ல - போக—அரசர்கோமான்புக்குழி - ராஜாதிராஜனுழைந்தவிடத்தில்—ஒள்வேல் - ஒள்ளியவேலாயுதத்தையொத்த—சேயரி - செவ்வரிபடர்ந்த—நெடுங்கண் - நீண்டகண்களையும்—செவ்வாய் - சிவந்தவாயையும்—வாள் - ஒளிவுபொருந்திய—திலகநுதல் - சார்தணிந்தநெற்றியையுமுடைய—மாதேவி - மாதேவியென்பவள்—போயினள்புக்காள் - போய்நுழைந்தனள். எ - று. கொற்றவன் கோயின்முன்னர் சென்றானெனவும்; மாதேவி தன்னைமடந்தையர் சிவிகையேற்றி அருகுசூழ்வுற்றுச்செல்லக்கோமான் புக்குழிப் போயினள் புக்காளெனவுங் கூட்டிமுடிக்க. (முற்றெச்சமாயிற்று.) (௬௩)

மடந்தையைத் தனிக்கண் டங்கி மருவிய வரக்கே போல
வுடைந்துநெக் குருகி யாற்று வுள்ளமோ டிளம்பூங் கொம்பே
கடந்திடற் கரிய காமக் கடல்கடந் தேறக் கொங்கைக்
குடந்தரத் திருவு ளத்திற் கோடியென் றரசி றைஞ்ச.

(இ - ள்.) மடந்தையை - மாதேவியை—தனிக்கண்டு - தனியேகண்டு—அங்கிமருவியவரக்கேபோல - அக்கினிபற்றியவரக்கைப்போல—உடைந்து - நெஞ்சுடைந்து—நெக்குருகி - கரைந்து—ஆற்றுவுள்ளமோடு - சகியாதமனமோடு—இளம் - இளமையாகிய—பூங்கொம்பே - பூங்கொம்புபோல்பவளே—கடந்திடற்கரிய - யாவராலுங்கடத்தற்கரிய—காமக்கடல் - காமமாகியகடலை—கடந்தேற - யான்கடப்பான்வேண்டி—கொங்கைக்குடம் - தனங்களாகியகுடங்களை—தர - எனக்குக்கொடுக்க—திருவுளத்திற்கோடியென்று - திருவுளமிரங்குவாயென்று—அரசிறைஞ்ச - அரசன்வணங்க. எ - று. அரசன் [illegible]டந்தையைத் தனிக்கண்டு உள்ளமுருகி - இறைஞ்சவென முடிக்க. பூங்கொம்பேயென்பது; உவமைத்தொகைப்புறத்துப் பிறந்தவன்மொழித்தொகை. காமக்கடல் கொங்கைக்குடமிவ்விரண்டும் உருவகம். (௬௪)

காவலன் காம மிக்க கழிபடர் கிளவி கண்டு
பாவைபுன் முறுவல் செய்து பண்பெறுந் தொடரால் யாப்புண்

டோவல்செய் யாது நிற்கு மொருகளி றனையா யான்சொ
லேவல்செய் திட்ட பின்ன ரென்னொடு பேசு கென்றாள்.

(இ - ள்.) காவலன் - அரசனது—கழிபடர் - மீக்குற்றப்படர்கின்ற—காமமிக்ககிளவிகண்டு - காமமிகுந்தசொல்லைக்கண்டு—பாவை - பிரதமைபோன்றமாதேவி—புன்முறுவல்செய்து - புன்னகைகொண்டு—பண்பெறுந்தொடரால் - நற்குணமென்னுந்தொடர்பினால்—யாப்புண்டு - கட்டுண்டு—ஓவல்செய்யாதுநிற்கும் - ஒழியாதுநிற்கின்ற—ஒரு - ஒப்பற்ற—களிறனையாய் - யானைபோல்பவனே—யான்சொல் - யானுனக்கிட்ட—ஏவல்செய்திட்டபின்னர் - கட்டளையைமுடித்தபின்பு—என்னொடுபேசுகென்றாள் - என்னோடுபேசென்றுசொன்னாள். எ - று. பேசுக என்றாளென்பது பேசுகென்றாளென்றாயது விகாரத்தாலென்க. பாவை, உவமையாகுபெயர். பாவை காவலன்கிளவிகண்டு புன்முறுவல்செய்து பேசுகென்றாளென முடிக்க. (௬௫)

ஏதுநான் செய்வ தன்ன தியற்றுவ னறைதி யென்ன
வோதினு னரச னோத வொண்டொடி யயன்மா றேடுஞ்
சோதிமா சிவலிங் கத்தைத் தூயையாய்க் காபீ டத்திற்
போதினு லருச்சித் தென்னைப் பொருந்துதி பின்ன ரென்றாள்.

(இ - ள்.) ஏதுநான்செய்வது - யான்செய்யவேண்டுவதியாதோ—அன்னதியற்றுவன் - அதனையான்முடிப்பன்—அறைதியென்ன - அதைச்சொல்லென்று—ஓதினனரசன் - அரசன்சொல்லினன்—ஓத - அவன்சொல்ல—ஒண்டொடி - அழகியவளையலையுடையவள்—அயன்மாறேடும் - அரிபிரமாக்கள்தேடத்தக்க—சோதிமாசிவலிங்கத்தை - சோதிவடிவமாகிய மகத்தான சிவலிங்கத்தை—தூயையாய் - சுபரிசுத்தமுடையவனாய்—காபீடத்தில் - உன்றுகையாகியபீடத்தின்கண்—போதினாலருச்சித்து - புஷ்பங்கொண்டு பூசித்து—பின்னர் - பின்பு—என்னைப் பொருந்துதியென்றாள் - [illegible]னைப்புணர்தியென்றனள். எ - று அரசன் ஓத ஒண்டொடி அருச்சித்து [illegible]னைப் பொருந்துதியென்றாளெனமுடிக்க. ஒண்டொடி அன்மொழித்தொகை. காபீடம், உருவகம். (௬௬)

எல்லையில் காமம் பொங்க விளமுலை ஞெமுங்கத் தோளாற்
புல்லுவ னென்றெ ழுந்த புரவலன் றனைத்த டுத்துச்
சொல்லிய தன்ன மன்னுள் சுரந்துணி முகந்து வாயிற்
செல்லுமொண் கரத்தை யோடிச் சென்றுபற் றுநூலை யொக்கும்.

(இ - ள்.) எல்லையில்காமம்பொங்க - எல்லைகணிக்கப்படாதகாமமேலி ட—(அதனால்) இளமுலைஞெமுங்க - இளமையாகியதனங்களழுந்த—தோளால் - கைகளால் —புல்லுவனென்றெழுந்த - புணருவேனென் றெழுந்திருந்த —புரவலன்றனைத்தடுத்து - அரசனைத்தடுத்து —அன்ன மன்னாள்சொல்லியது - அன்னம்போன்ற மாதேவியென்பவள்சொல்லியது —சுரத்துள் - பாலைவனத்தில் —நீர்முகந்து - நீரையள்ளி —வாயிற்செல்லும் - வாய்க்குக்கொண்டுபோகும் —ஒண்கரத்தை - அழகியகையை —ஓடிச்சென்று - ஓடிப்போய் —பற்றுதலையொக்கும் - பிடித்துக்கொள்ளுதலையொக்கும். எ - று. அன்னமன்னாள் தடுத்துச்சொல்லியது யாதுபோல்வதெனின்; பாலைவனத்திற் குடிப்பான்வேண்டிச் சலத்தையள்ளி வாயிற்செல்லுங்கரத்தை மற்றொருவனோடிப்போய்ப் பிடித்துக்கொள்வதுபொலும். சலமரிதாதல்பற்றிச்சுரத்துளென்றார். (௪௭.)

முகையிடை முருகுண் டாயின் முளையிடை விளைவுண் டாயின்
மகவிடை மதன வின்பம் வருவதுண் டாயிற் சைவப்
பகையொடு மருவி நின்ற பார்த்திபன் றனதுள் ளத்தி
னுகைவிடை யமலன் போற்று மொழுக்கமும் வந்து நண்ணும்.

(இ - ள்.) முகையிடை முருகுண்டாயின் - அரும்பில்வாசனையுண்டாகுமானால் —முளையிடைவிளைவுண்டாயின் - முளையில்விளைவுண்டாகுமானால் —மகவிடை - குழவிப்பருவத்தில் —மதனவின்பம்வருவதுண்டாயின் - காமவின்பம்வருவதுண்டாகுமானால் —சைவப்பகையொடு மருவிநின்ற - சைவப்பகைஞனாகின்றுள்ள —பார்த்திபன்றனதுளத்தில் - அரசனதுள்ளத்தில் —உகைவிடை - வாகனமாகரிஷபத்தை யூருகின்ற —அமலன் - பரமசிவனை —போற்றுமொழுக்கமும் - பூசிக்குமொழுக்கமும் —வந்துநண்ணும் - வந்துசேரும். எ - று. முகையிடைமருகும் முளையிடைவிளைவும் மகவிடைமதனவின்பமும் வருவதுகூடாமையின் இவற்றை யுவமைகூறியதென்க. அமலன்போற்று மொழுக்கமும் என்பதிலு ம்மையிறந்தது தழீஇயவெச்சவும்மை. இ[illegible]தாவது சிவமதத்தையே ற்றலோடெனலை. (௪௮)

செப்புறுங் குணிலைந் தினிடில னாச னின்று
முப்புரஞ் சீறு முங்கண் முதல்வன்பூ சனைதான் யாங்க
ளெப்பொழு துஞ்செய் தக்க தன்றெனா விணையி லாநின்
றுப்புறு தோளும் யாங்க டொடுவதன் றெனப்பு கன்றாள்.

(இ - ள்.) செப்புறுங்குணிலைந்து - தாஞ்சொன்னசபதத்தைநினைந்

து—அரசன் - மன்னவன்—இன்றுநீண்டிலன் - இப்போதுதீண்டாதவனாய் —முப்புரஞ்சீறும் - திரிபுரமெரித்த —உங்கண்முதல்வன் பூசனைதான் - உங்கள்சிவபூசையை —யாங்கள் - நாங்கள் —எப்பொழுதும் - எக்காலத்தும் —செய்தக்கதன்றெனா - செய்யத்தக்கதல்லவென்றுகூற— (அதற்குமாதேவியானவள்) இணையிலா - ஒப்பில்லாத —நின் - உன்னுடைய —துப்புறுதோளும் - வலியுள்ளபுசங்களையும் —யாங்கள்தொடுவதன்றென - நாங்கள்தொடத்தக்கதல்லவென்று —புகன்றாள் - சொன்னாள். எ - று. அரசன் உங்கள்சிவபூசையைச் செய்வதெமக்காகாதெனக்கூற அதற்குமாதேவி அங்ஙனமுடன்படாத நினதுதோள்களைத் தொடுவதெமக்காகாதெனக் கூறினளென்க. தோளுமென்பதிலும்மை இழிவுசிறப்பு. யாங்களென்னுமிரண்டும் தத்தஞ்சமயத் தன்மைப்பன்மையைக்காட்டுகின்றன. நீண்டிலனென்றதை வினையெச்சமாக்குக. (௪௯.)

மட்டவிழ் குழன்ம டந்தை வாயுரை கையும் வாயுங்
கட்டிய தெனவ டங்கிக் காமமித் தனமி றீப்போற்
கெட்டிட வறிதி ருந்தான் கிளர்மணித் தூண்செய் தோளா
னெட்டிலை யயில்வேற் கண்ணா ணீத்தனள் போக வெண்ணி.

(இ - ள்.) மட்டு - தேனையுடைய—அவிழ் - விரிந்தமலர்களையணிந்—குழல்மடந்தை - கூந்தலையுடையமாதேவியின்—வாயுரை - வாய்மொழியானது—கையும் வாயுங்கட்டியதென - கைவாய்களைக்கட்டிவிட்டாற்போல—அடங்கி - பதைப்பற்று—இந்தனமிறீப்போல் - விறகற்றவனலைப்போல—காமங்கெட்டிட - காமங்கெட்டுப்போக—கிளர் - விளங்காநின்ற—மணி - ரத்நங்கள்பதித்த—தூண்செய் - வச்சிரத்தம்பம்போன்ற—தோளான் - தோள்களையுடையவரசன்—வறிதிருந்தான் - சும்மாவிருந்தனன்—[illegible]லை - நீண்டவிலைபோன்ற—அயில் - கூர்மைபொருந்திய—வேல் - வேல்[illegible]ான்ற—கண்ணாள் - கண்களையுடைய மாதேவி—போகவெண்ணி - அ[illegible]லமனைத்தேடிப்போகவெண்ணங்கொண்டு—நீத்தனள் - இல்லறத்தைநீக்[illegible]ாள். எ - று. போகத்தைநீத்தனளென்னுமையும். அவிழென்பதனால் [illegible]மலரவருவித்தாம். தூண்செய்தோளான் அடங்கிவறிதிருந்தானெனவும், அயில்வேற்கண்ணாள் போகவெண்ணி நீத்தனளெனவுங் கூட்டிமுடிக்க. (௫௦)

துறவெனு மரசு நெஞ்சத் தொன்னகர் கொளவ வாவா
மிறைவன தாணை யெல்லா மிரிதல்போற் பூண்கள் யாவு

மறுவையு மகற்றி யோதி யவிழ்த்து வார் மைக்கு ழும்பின்
மறைவுறு மணிப்பொற் பாவை போலுடன் மறைய விட்டாள்.

(இ-ள்.) துறவெனுமரசு - துறவென்னுமரசன்—நெஞ்சம் - மனமென்னும்—தொல் - பழமையாகிய—நகர்கொள - பட்டணத்தைப்பிடித்துக்கொள்ள—அவாவாம் - ஆசையாகிய—இறைவனதானையெல்லாம் - அரசாக்கினையெல்லாம்—இரிதல்போல் - ஓடுவதுபோல—பூண்கள்யாவும் - ஆபரணங்களனைத்தையும்—அறுவையும் - வஸ்திரத்தையும்—அகற்றி - எறிந்து—ஓதியவிழ்த்து - கூந்தலைவிரித்து—வார் - மிகுந்த—மைக்குழம்பின்மறைவுறு-குழம்பான மையினால்மறைவுற்ற—மணி - அழகிய—பொற்பாவைபோல் - பொன்பிரதமையைப்போல—உடல்மறைய - உடல்முழுதும்மறைய—விட்டாள் - மயிரைவிட்டனள். எ-று. துறவெய்தியக்கன் - நெஞ்சத்தவா நில்லாமையின் இங்ஙனமுருவகித்தார். அகற்றி - அவிழ்த்து உடல்மறையவிட்டாளெனக்கூட்டி முடிக்க. சேனையெனப்பொருள்கொண்டு தனதானைகளென்றாற்போல இறைவனதானையெல்லாமெனப்பாடமோதி முடிக்கினுமமையும். இரிதல் பயந்தோடுதலை. துறவை அரசனெனவும், நெஞ்சை நகரமெனவும், அவாவைத் தானையெல்லாமெனவுங் கோடற்குக் கொளவெனும் இரிதலெனவும் இடந்தந்துநின்றன. நெஞ்சு முன்னர்பாசமிருத்தற்கும் அவாக்களை னக்காத்தற்கும் நகரமாகின்றாற்போல; இப்போதவற்றிற்கெதிர்மலையாயவற்றிற்கு நகரமாகின்றதெனக்கொள்க. (௫௩)

மருளடைந் தனள்கொ லென்று மருண்டுமன் னவனிருப்பத்
தெருளடைந் தங்கை கொண்ட சிவலிங்கத் தொடுநினைந்த
பொருளடைந் தெனம கிழ்ச்சி பொங்கமன் னவனை நீங்கி
யருளடைந் தொழுகு கண்ணா ளணிமறு கூடு சென்றாள்.

(இ-ள்.) மருளடைந்தனள்கொலென்று - பித்துமேலிட்டனளோவென்று—மன்னவன் - அரசன்—மருண்டிருப்ப - ஒன்றுந்தோன்றாதிருக்க—தெருளடைந்து - தெளிவுற்று—அங்கைகொண்ட - உள்ளங்கையில்வைத்த—சிவலிங்கத்தொடு - இஷ்டலிங்கத்தோடு—நினைந்தபொருளடைந்தென-தானினைத்திருந்தமெய்ப்பொருளடைந்தாற்போல—மகிழ்ச்சிபொங்க - ஆனந்தமீக்கொள—மன்னவனைநீங்கி - அரசனைவிட்டுநீங்கி—அருளடைந்தொழுகுகண்ணாள் - கிருபைமேலிட்டொழுகுகின்றகண்களையுடையமர்தேவியானவள்—அணிமறுகூடுசென்றாள் - அழகியவீதியிற்சென்றனள். எ-று. அருளடைந்தொழுகு கண்ணாள் இருப்ப பொங்க சென்றாளெனமுடிக்க. மகிழ்ச்சி பொங்கல் பாசமகல்வாலென்க. மன்னவனைவிட்டுத்தான்புறப்படலா னீங்கியெனத்தன்வினைதந்தார். (௫௪)

அன்னையும் பிதாவுங் கேளா ரருமகட் கடுத்த தென்னென்
றுன்னிவந் தழுங்க னீவி ருமமக ளென்று மாழ்கி
யின்னல்கொண் டிரங்கன் மின்போ மென்னைநா னறியத் தேடித்
தன்னிருங் கருணை செய்யுஞ் சற்குர வனைச்சார் கிற்பேன்.

(இ-ள்.) அன்னையும்பிதாவுங்கேளா - தாய்தந்தையரிச்செய்திகேட்டு—அருமகட்கு - அரியபுத்திரிக்கு—அடுத்ததென்னென்று - சம்பவித்ததுயாதுகாரணத்தாலென்று—உன்னிவந்து - நினைத்துவந்து—அழுங்க - விசனப்பட—(அவர்களைநோக்கி) நீவிர் - நீங்கள்—உம்மகளென்று மாழ்கி - உங்கள்புத்திரியென்றுமயங்கி—இன்னல்கொண்டு - துன்பங்கொண்டு—இரங்கன்மின் - விசனப்படாதிருங்கள்—போம் - உங்களிடத்திற்குப்போங்கள்—என்னைநானறிய - எனதுசொரூபத்தையான்காண—தன்னிருங்கருணைசெய்யும் - தனதுபெரியகிருபாநோக்கத்தைவைக்கும்—சற்குரவனைத்தேடி - சற்குருநாதனைத்தேடி—சார்கிற்பேன் - அடைவேன். எ-று. அன்னையும்பிதாவும் கேளா உன்னி வந்து அழுங்க என்னவும்; யான் தேடிச் சார்கிற்பேனெனவுங்கூட்டிமுடிக்க. அல், எதிர்மறைவிகுதி. (௫௫)

என்றவ ளவரை நோக்கா தேதிலர் போல கன்று
சென்றன ணிரும லப்பேர் செல்வனுஞ் சுமதி தானு
மன்னவ ணினைந்த தென்று நம்முடை மரபிற் கெல்லா
நின்றிடும் புகழென் றெண்ணி நிறுவினர் தங்க ணாமம்.

(இ-ள்.) என்று - என்றுகூறி—அவள் - அக்கமாதேவி—அவரைநோக்காது - அவர்களையேறெடுத்துப்பாராமல்—ஏதிலர்போல் - அயலாரைப்போல—அகன்று - அவர்களைவிட்டுநீங்கி—சென்றனள் - போய்விட்டாள்—நிருமலப்பேர் - நிருமலனென்னும்பெயரையுடைய—செல்வனும் - பாக்கியவந்தனும்—சுமதிதானும் - சுமதியென்பவளும்—இவள் நினைந்தது - இவள்நினைத்துச்சென்றகாரியம்—நன்றென்று - உத்தமமென்று—நம்முடைமரபிற்கெல்லாம் - நமதுவமிசத்திற்கெல்லாம்—நின்றிடும்புகழென்றெண்ணி - கீர்த்திநிற்குமென்றெண்ணி—தங்கள்நாமம் - தங்கள்பெயரை—நிறுவினர் - ஸ்தாபித்தார்கள். எ-று. தாய்தந்தையர் எண்ணி நிறுவினர் எனமுடிக்க. நம்முடையவென்பது கடைக்குறை. (௫௬)

கண்டவ ரெல்லா நெஞ்சங் கரைந்துகக் கண்ணீர் மல்கத்
திண்டிற லரசன் பின்னர்ச் சிவிகையூர்ந் தலர்பூங் கோயி [லம்
லொண்டிரு மகள்போற் சென்ற வொண்டொடி யிப்பேய்க் கோ
கொண்டிவண் போகா நின்ற கொள்கையே தறியே மென்பார்.

(இ - ள்.) கண்டவரெல்லாம் - இவளைக்கண்டவர்களெல்லாம்—நெஞ்சம் - மனம் —கரைந்துக - கரைந்துநெக்குருகவும் —கண்ணீர்மல்க - கண்களில்நீர்பெருகவும் —திண்டிறல் - மிக்கவலியையுடைய —அரசன்பின்னர் - அரசனுக்குப்பின்னே —சிவிகையூர்ந்தலர் - பல்லக்கிலேறுதவர்களாய்—பூங்கோயில் - தாமரையாகியவீட்டிற்போரும்—ஒள் - அழகிய —திருமகள்போல் - இலக்குமிபோல —சென்ற - வீதியில்தனிச்சென்ற—ஒண்டொடி - ஒள்ளியவளையலையுடையவள் —இப்பேய்க்கோலங்கொண்டு - இந்தப்பேய்க்கோலம்பெற்று —இவண் - இவ்விடத்து —போகாநின்றகொள்கை - போகின்றகோறிக்கை —ஏது - யாதுகாரணமோ—அறியேமென்பார் - அறிகிலமென்பார்கள். எ - று. கண்டவரெல்லாம் சிவிகையூர்ந்தலர் அறியேமென்பாரெனமுடிக்க. ஒண்டொடி - அன்மொழித்தொகை. (௫௫)

மங்கையை யிவணங் கண்டேம் வயிறெரி தவிழ நின்றே
மிங்கிவ டன்னை யீன்றா ரென்படு வாரோ வென்பார்
மங்கல வடிவங் கண்டு மகிழ்ந்தகண் ணிதுவுங் கண்டு
பொங்குறு துயரங் கூரப் புரிந்ததெப் பாவ மென்பார்.

(இ - ள்.) மங்கையை - பெண்ணை —இவணம் - இக்கோ[illegible]மாக —கண்டேம் - பார்த்தனம்—வயிறு - வயிற்றில் —எரிதவிழ - [illegible]வர்ந்தமிக—நின்றேம் - நின்றனம் —இங்கு - இவ்விடத்தி[illegible] இவடன்னையீன்றார் - இவளைப்பெற்றோர்கள் —என்படுவாரோ[illegible] என்னபாடுபடுவார்களோ —என்பார் - என்றுசொல்லுவார்கள். [illegible]ங்கலவடிவங்கண்டு - அவளதுசுமங்கலவடிவங்கண்டு—மகிழ்ந்தகண் - களிப்புற்றகண்கள் —இதுவுங்கண்டு - இக்கோலத்தையுங்கண்டு—பொங்குறு - கொதிக்கின்ற—துயரங்கூர - துக்கமேலிட —புரிந்தது - செய்தது —எப்பாவமென்பார் - என்னபாவமோவென்றுசொல்லுவார்கள். எ - று. இவ்வண்ணமென்றது; இவணமென்றாயது இடைக்குறை. இதுவுமென்பதிலும்மை, இறந்ததுதழீஇயவெச்ச வும்மை. (௫௬)

இன்னண நகர மெல்லா மிரங்கமா தேவி யம்மை
கன்னலு மமுதுந் தேனுங் கைப்பப்பே ரின்ப நல்குந்
தன்னிகர் குருகு கேசன் றன்னையே தேடிச் சென்றாண்
மென்னிழல் விரும்பி மிக்க வெயில்சுடச் செல்வார் போல.

(இ - ள்.) இன்னணம் - இவ்வாறு —நகரமெல்லாம் - பட்டணமெல்லாம் —இரங்க - விசனப்பட—மாதேவியம்மை - மாதேவியம்மையென்பவள்—கன்னலும் - கரும்பும்—அமுதும் - தேவாமிர்தமும்—தேனும் - தேனும்—கைப்ப - கசக்குமாறு —பேரின்பநல்கும் - பேரின்பத்தைத்தரும்—தன்னிகர் - தனக்குத்தானேயொப்பாகிய —குருகுகேசன்றன்னையே - குருவாகியவல்லமதேவனையே—மென்னிழல்விரும்பி - மெல்லியநிழலைவிரும்பி —மிக்கவெயில் - அதிகவெய்யில்—சுட - சுடும்படி —செல்வார்போல - போகிறவர்களைப்போல—தேடிச்சென்றாள் - தேடிக்கொண்டுபோனாள். எ - று. மாதேவியம்மை வெயில்சுடச்செல்வார்போலக் குருகுகேசன்றன்னையேதேடி இரங்கச்சென்றாளெனமுடிக்க. (௫எ)

அடவிக டோறு மடைந்து மடுக்கல்க டோறுமி வர்ந்துங்
கடிநகர் தொறும்பு குந்துங் காமனை வென்ற வல்லி
மடிவறு மனத்தி லன்பு வளர்தரக் கருணை யாலெங்
குடிமுழு தடிமை கொள்ளுங் குரவனைத் தேடு கின்றாள்.

(இ - ள்.) அடவிகடோறும் - வனங்கள்தோறும்—அடைந்தும் - சேர்ந்தும்—அடுக்கல்கடோறும் - மலைகடோறும் —இவர்ந்தும் - ஏறியும்—கடி - காவலையுடைய —நகர்தொறும் - பட்டணங்கடோறும் —புகுந்தும் - பிரவேசித்தும் —காமனைவென்ற - மன்மதனைச்செயித்த —வல்லி - வல்லிக்கொடிபோன்றமாதேவியென்பவள் —மடிவறு - குற்றமற்ற—மனத்தில் - மனத்தில்—அன்புவளர்தர - அன்புவளர —கருணையால் - கிருபையினால் —எங்குடிமுழுதும் - எமதுகுலமுழுவதும்—அடிமைகொள்ளும் - ஆட்கொள்ளுகின்ற—குரவனை - ஞானசாரியனை —தேடுகின்றாள் - தேடுகின்றனள். எ - று. வல்லி உவமையாகுபெயர். வல்லி யடைந்தும் இவர்ந்தும் புகுந்தும் அன்புவளர்தரக் குரவனைத் தேடுகின்றாளெனமுடிக்க. (௫அ)

அக்கமாதேவிதுறவுகதி முற்றிற்று.

ஆ கதி, க௦ இ விருத்தம் - ௫௦.

பதினோராவது

கொக்கிதேவர்கதி.

(ⅰ)

வேறு.

அருள்செயு மல்லம னநிமி டப்பெயர்
குரவனை மெய்யொடு கலந்து கொண்டுதான்
பரவுறு மடியர்தம் பவந்து றந்துபோய்த்
திரிதரு நிலையினைத் தெரிந்து செப்புவாம்.

(இ - ள்.) அருள்செயும் - கிருபைசெய்கின்ற—அல்லமன் - அல்லமாப்பிரபுதேவர்—அநிமிடப்பெயர் - அநிமிடப்பெயரையுடைய—குரவனை - ஞானாசிரியனை—மெய்யொடுகலந்துகொண்டு - தனதுண்மைவடிவோடு கலந்துகொண்டு—தான் - தான்—பரவுறுமடியர்தம் - பூசிக்கின்றவடியார்களுடைய—பவந்துறந்து - செனனங்களைநீக்கி—போய்-சென்று—திரிதருநிலையினை - சஞ்சரிக்கின்றநிலைமையை—தெரிந்துசெப்புவாம் - அறிந்துசொல்லுதும், எ - று. அல்லமன் கலந்துகொண்டு பவந்துறந்து போய் திரிதருநிலையினைச் செப்புவாமெனமுடிக்க. (க)

சீர்நிலை யல்லம தேவன் சூல்கொளுங்
கார்தனை மயிலெனக் கருதித் தன்னையே
பார்நில மிசையமர் பத்தர் தம்மையா
ளோர்தினை வொடுநடந் துலாவு நாள்களுள்.

(இ - ள்.) சீர்நிலை - சிறந்தநிலையையுடைய—அல்லமதேவன் - அல்லமாப்பிரபுதேவர்—சூல்கொளும் - நீராக்கருப்பமாகக்கொண்ட—கார் - மேகவரவை—நினைமயிலென - சிந்தித்துக்கொண்டிருக்கு மயிலைப்போல—தன்னையேகருதி - தன்னையேசிந்தித்து—பார்நிலமிசையமர் - பூமியிலிருக்கின்ற—பத்தர்தம்மை - அடியார்களை—ஆளோர்தினைவொடு - அடிமைகொள்ளும்படியானவோர்நினைவுடன்—நடந்துலாவுநாள்களுள் - நடந்துசஞ்சரிக்குநாள்களில், எ - று. அல்லமதேவன், நடந்துலாவுநாள்களுள் எனமுடிக்க. (உ)

ஒன்றொரு நாளொரு திசையி னோங்கருட்
குன்றனை யானொரு கோலங் கொண்டுதான்
சென்றன னவனெதிர் சிறந்து தோன்றிற்று
மன்றன்மென் மலரிள வனமொன் றாயிடை.

(இ - ள்.) ஒன்றொருநாள் - ஓர்நாள்—ஒருதிசையில் - ஓர்திக்கில்—ஓங்கு - மிகுந்த—அருள் - கிருபையில்—குன்றனையான் - மலைபோல்பவனாகியவல்லமன்—ஒருகோலங்கொண்டு - ஓர்வேடங்கொண்டு—தான் சென்றனன் - தான்போயினன்—அவனெதிர் - அவனுக்கெதிரில்—ஆயிடை - அவ்விடத்திலதானே—மன்றல் - வாசனைபொருந்திய—மெல் - மிருதுவாகிய—இளமலர்-புதியமலர்கள்மலிந்த—வனமொன்று - ஓர்நந்தவனம்—சிறந்துதோன்றிற்று - அலங்காரமாகக்காணப்பட்டது. எ - று. ஒன்றொருநாள், மீமிசைப்பதம். கோலம், அடியருக்கிசைந்தகோலத்தை.

சிறுபொழு தைந்தினுந் திரிவி லாதபே
ரறுபொழு தினுமித ழவிழ்ந்து தேன்சொரி
நறுமலர் நிறையுமந் நந்த னத்தினைப்
பெறின்மக பதிவளம் பெறவு வந்திடார்.

(இ - ள்.) சிறுபொழுதைந்தினும் - சிறுபொழுதாகியவைந்திலும்—திரிவிலாத - மாறாத—பேரறுபொழுதினும் - பெரிதாகியவாறுபொழுதிலும்—இதழவிழ்ந்து - இதழ்களுடைந்து—தேன்சொரி - தேன்பொழிகின்ற—நறுமலர்நிறையும் - சுகந்தமலர்கணிறைந்த—அந்நந்தனத்தினை - அந்த நந்தவனத்தை—பெறின் - ஒருவரடைந்தால்—மகபதி - தேவேந்திரனுடைய—வளம்பெற - வளப்பத்தையடைய—உவந்திடார் - விரும்பார்கள், எ - று. பொழுதைந்தாவன; மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், என்பன. அறுபொழுதாவன; மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு என்பன. (ங)

படிமிசை தவம்பல பயின்று நொந்தவர்
வடதிசைக் கைலையின் மருவ வேண்டலிக்
கடிமலர்ப் பொழின்மணங் கலந்த தென்றல்வந்
தடன்மிசை தவழ்தர லொன்று முன்னியே.

(இ - ள்.) படிமிசை - பூமியின்மேல்—தவம்பலபயின்று - அரியதவஞ்செய்து—நொந்தவர் - இளைத்தவர்கள்—வடதிசைக்கைலையின் -

வடதிசையிலுள்ளகைலாயமலையில்—மருவவேண்டல் - போகவிரும்புதல்—இ - இந்த—கடி - மணமுள்ள—மலர் - புட்பங்கணிறைந்த—பொழில் - நந்தவனத்தின்—மணங்கலந்த - வாசனைகலந்த—தென்றல்வந்து - தென்றற்காற்றுவந்து—உடன்மிசை - தமதுசரீரத்தின்மேல்—தவழ்தரலொன்று - வீசுதலொன்றையே—முன்னி - நினைத்து. எ - று. கடியதவம்புரிந்தோர் கைலையைச்சாரவிரும்புதல் இந்தநந்தவனத்தின் தென்றற்காற்று தமதுடலின்மேற்படிவான்வேண்டியெனக. ஒன்றுமுன்னியேயென்பதனால் வேறுகருத்துகொண்டதன்றெனப் பெறும். (௫)

கண்ணிறை மலர்பல கண்டு கண்டுபோ
யுண்ணுறு நறுமது கொளவு மூன்றிடு
மெண்ணறு மளியின மிரையுந் தன்மையாற்
றண்ணுறு நந்தனம் வண்டின் சந்தையே.

(இ - ள்.) கண்ணிறை—தேனிறைந்த—மலர் பல - பலவிகற்பமலர்களை—கண்டுகண்டுபோய் - கண்டுகண்டுசென்று—உண்ணுறு - பானஞ்செய்தற்கியைந்த—நறுமதுகொள - நல்லதேனுண்ண—ஊன்றிடும் - அங்குமிங்குமாகவுழலுகின்ற—எண்ணறுமளியினம் - எண்ணிறந்தவண்டினங்கள்—இரையுந்தன்மையால் - கோஷிக்குந்தன்மையினால்—தண்ணுறுநந்தனம் - குளிர்ந்தவந்தநந்தவனம்—வண்டின்சந்தையே - வண்டின்கூட்டமே. எ - று. மலர்களின்மிகுதி யென்றுமகலாமையைக் காட்ட நந்தனம் வண்டின்சந்தையே யெனப்பட்டது. (௬)

நறுமலர் நிறையுமந் நந்த னத்தினைக்
குறைவற வளிப்பவன் கொக்கி தேவனென்
றறைதரு பெயரினு னனைய னாயிடைத்
திறமுறு செயலினைச் செய்து நின்றனன்.

(இ - ள்.) நறுமலர்நிறையும் - நல்லமலர்கணிறைந்த—அந்நந்தனத்தினை - அந்தநந்தவனத்தை—குறைவறவளிப்பவன் - குறைவின்றிக்காப்பவன்—கொக்கிதேவனென்றறைதரு - கொக்கிதேவனென்றுசொல்லப்பட்ட—பெயரினன் - பெயரை[illegible]டையான்—அனையன் - அப்படிப்பட்டவன்—ஆயிடை - அந்தவிடத்தி[illegible]முறுசெயலினை - அதற்கியைந்த திறமையுள்ளமுயற்சியை—செய்துநின்றனன் - செய்துநின்றான். எ - று. அளிப்பவன் பெயரினனெனவும், அனையன் செய்துநின்றனனெனவுமுடிக்க. (௭)

நின்றவன் றனையரு ணினைந்த நெஞ்சொடு
சென்றன னல்லம தேவன் கண்டிவன்
புன்றொழில் விடவரும் பொருளு ணர்த்துவ
லென்றரு கடைந்தைய சரண மென்றனன்.

(இ - ள்.) நின்றவன்றனை - அங்ஙனநின்றகொக்கிதேவனை—அருணினைந்தநெஞ்சொடு - ஆட்கொள்ளவேண்டிநினைந்தமனதோடு—சென்றனனல்லமதேவன் - அல்லமதேவன்போய்—கண்டு - பார்த்து—இவன்புன்றொழில்கெட - இவன்றனதுபுல்லியதொழில்விட்டுநீங்க—அரும்பொருள் - யாவருமறிதற்கரியபொருளை—உணர்த்துவலென்று - தெரிவிப்பேனென்று—அருகடைந்து - அவனிடத்திற்போய்—ஐய - ஐயனே—சரணமென்றனன் - சரணமென்றஞ்சலிசெய்தனன். எ - று. அல்லமதேவன் சென்றனன் உணர்த்துவல் சரணமென்றனனென முடிக்க.

தானெதிர் நிமலனைச் சரணெ னத்தொழாத்
தேனலர் வனத்தனின் செயலி யாதுநின்
மேனியின் பெயரெது விளம்பு கென்றலு
ஞானநல் விளக்கனு னவிறன் மேயினன்.

(இ - ள்.) தேனலர்வனத்தன் - தேன்மலிந்தநந்தவனத்தையுடைய கொக்கிதேவன்—தானெதிர் - தானெதிர்கொண்ட—நிமலனை - அல்லமனை—சரணெனத்தொழா - சரணமென்றுதொழுது—நின்செயல்யாது - உனதுகாரியமென்ன—நின்மேனியின்பெயரெது - உன்தேகத்தின்பெயரென்ன—விளம்புகென்றலும் - சொல்லெனக்கேட்கவும்—நல் - நல்ல—ஞானவிளக்கனன் - ஞானதீபம்போன்றவல்லமன்—நவிறன்மேயினன் - சொல்லத்தொடங்கினன். எ - று. (௯)

பத்தர்தம் மனைதொறும் பத்திப் பிச்சைகொண்
டெத்திற வினையுமின் றிருப்ப னல்லம
னுத்தம வென்பெயர் பெயருனக் கெனென்
றத்தனும் வினவத்தன் பெயர[illegible]ந்தவன்.

(இ - ள்.) பத்தர்தம் - அன்பர்களுடைய—மனைதொறும் - வீடுகடோறும்—பத்தி - அன்போடும்—பிச்சைகொண்டு - பிச்சைவாங்கிக்கொண்டு—எத்திறவினையும் - யாதோர்தொழிலும்—இன்றிருப்பன் - இ

ல்லாதிருப்பன்—உத்தம - உத்தமனே—என்பெயரல்லமன் - என்பெயரல்லமனெனப்படுபவன்—அத்தனும் - அல்லமனும்—பெயருனக்கென்றுவினவ - நின்பெயர்யாதெனக்கேட்க—தன்பெயரறைந்தவன் - தனதுபெயரைச்சொன்னகொக்கிதேவன். எ - று. உத்தமவென்பது, விளி. அத்தனுமென்பதிலும்மை, இறந்ததுதழீஇய வெச்சவும்மை. (௫௦)

அருங்குரு லிங்கசங் கமத்திற் காகமெய்
வருந்துறு தொழிலற வறிதி ருப்பவ
னருந்துறு பிணமென வறையு மாற்றநீ
தெரிந்திலை யோவெனச் செப்பன் மேயினான்.

(இ - ள்.) அரும் - அருமையாகிய—குருலிங்கசங்கமத்திற்காக - குருலிங்கசங்கமாட்டத்த—மெய்வருந்துறுதொழில் - தேகம்வருந்தியற்றுந்தொழில்—அற - சற்றுமின்றி—வறிதிருப்பவன் - சும்மாவிருப்பவன்—அருந்துறுபிணமென - உணவுண்ணும்பிணம்போல்பவனென்று—அறையுமாற்றம் - வேதஞ்சொல்லும்வசனத்தை—நீதெரிந்திலையோவெனச் செப்பன்மேயினான் - நீதெரியவில்லையாவென்றுசொல்லத்தொடங்கினான். எ - று. குரு லிங்கம் சங்கம் எனமுப்பாற்று. இவற்றுள்; குரு ஞானாசிரியன். லிங்கம் ஆன்மா. சங்கம் அதையுணர்ந்தசத்துக்களென்க. சற்கருமமேனுமின்றிவறிதிருத்தல்; அவமெனக்காட்ட, அருந்துறுபிணமென்றார். மாற்றமெனல், சுருதிப்பிரமாணத்தை. (௫௧)

வேறு.

எய்தற் கரிய யாக்கைதனக் கெய்திற் றென்று லதுகொ
ண்டு, செய்தற் கரிய வறங்கள்பல செய்து துயர்கூர் பிறவியி
னின், றுய்தற் கொருமை பெறவொண்ணா துழல்வோ னுடம்பு
பொற்கலத்திற், பெய்தற் குரிய பால்கமரிற் பெய்த தொக்கு
மென்பரால்.

(இ - ள்.) எய்தற்கரியயாக்கை - அடைதற்கரியமானிடவடிவை—தனக்கெய்திற்றென்றால் - தனக்குக்கிடைத்ததென்றால்—அதுகொண்டு - அவ்வுடம்புகொண்டு—செய்தற்கரிய - செய்தற்கருமையாய—அறங்கள்பலசெய்து - பலபுண்ணியகர்மங்கள்செய்து—துயர்கூர்பிறவியினின்று - துன்பமிகுந்தபிறவியினின்று—உய்தற்கு - பிழைத்தற்கு—ஒருமைபெறவொண்ணாது - ஐக்கியநிலையடைதற்குக்கூடாது—உழல்வோனுடம்பு - அவலத்துழல்வோனது, தேகம்—பொற்கலத்திற்பெய்தற்குரிய பால் - பொன்பாத்திரத்தில் விடுதற்கியைந்தபாலை—கமரில் - வெடிப்பில்—பெய்ததொக்குமென்பர் - விட்டதுபோலுமென் றறிஞர்கூறுவர். எ - று. ஆல் - அசை. எய்தற்கரியயாக்கையாவது; சங்கற்பங்களமைத்தற்கியைந்தமானிடவடிவை. உய்தற்கொருமைபெறல்; அன்னியமில்லாமலனைத்துந்தானாகப்பெறலை. இங்ஙனமாயவரியநிலைக்கு இயையாதவுடம்புவிவர்த்தத்திற்கியைதலின் கமரிற்பெய்தபாலையுவமித்தார். (௫௨)

மின்போ லழியு முடல்கொடுநல் வினைசெய் தழியா வுடம்
பெய்தி, யின்போ டமர்த லாயிருப்ப யாக்கை வருந்து மென்
றெண்ணி, யன்போ டறஞ்செய் திளையாம லருந்தி வாளா வி
ருக்கு மவன், றன்போன் மருளா ரிலையென்றான் றண்பூம்பொழி
ல்வைத் தளிக்கின்றான்.

(இ - ள்.) மின்போலழியும் - மின்னல்போனிலையாதழியும்—உடல்கொடு - தேகத்தைக்கொண்டு—நல்வினைசெய்து - சற்கருமஞ்செய்து—அழியாவுடம்பெய்தி - அழியாதவுடம்பைப்பெற்று—இன்போடு - பேரின்பத்தோடு—அமர்தலாயிருப்ப - அமர்ந்திருப்பதற்கு—யாக்கைவருந்துமென்றெண்ணி - உடல்மெலிந்துபோமென்றெண்ணி—அன்போடு - மிக்கவன்புடன்—அறஞ்செய்திளையாமல் - சற்கிருத்தியஞ்செய்திளையாமல்—அருந்தி - காலந்தவறாதுகொழுக்கவுண்டு—வாளாவிருக்குமவன்றன்போல் - அவலத்திற்காலங்கழிப்பவன்போல்—மருளரிலையென்றான் - மூடரில்லையென்றான்—(அவனொனில்) தண் - குளிர்ச்சிபொருந்திய—பூம்பொழில்வைத்து - பூங்காவனத்தைவைத்து—அளிக்கின்றான் - காப்பாற்றுங்கொக்கிதேவன். எ - று. யாக்கையெடுத்ததற்குப்பயன்; யாதனுவுடலழியாமல் சுவர்க்காதி நலனடைதலை. மின்போல்வது; நாலவுடலை.)

உரைத்த மொழியை யல்லமப்பே ருடையான் கேட்டுக்
கைகுலைத்துச், சிரித்து வினைநல் லனசெய்து சிதையா வின்பம்
பெறுவானேல், வருந்த லுறுமும் மலங்களிலோர் மலமா கிய
வா ணவத்தாலும், பொருந்த முறுமே யின்பநாம் புணர லா
மென் றியம்பியே.

(இ - ள்.) உரைத்தமொழியை - சொன்னமொழியை—அல்லமப்பேருடையான்கேட்டு - அல்லமதேவர்கேட்டு—கைகுலைத்து - கைகொட்டி—சிரித்து - நகைத்து—வினைநல்லனசெய்து - புண்ணியகருமங்களசெ

யது — நிறைதயாவின்பம்பெறவானேல் - அழியாவின்பம் பெறவனுயின் — வருத்தலூறும் - வருத்தந்தரற்கியைந்த — மும்மலங்களின் - மும்மலங்களுக்குள் — ஓர்மலமாகியவாணவத்தாலும் — பொருத்தமுறுபேரின்பம் - ஞானகதப்பிரத்தியட்சந்தால்வரற்கியைந்தபேரின்பத்தை — நாம்புணரலாமென்றியம்பி - நாமடையலாமென்றுசொல்லி. எ - று. எ - அசை. கர்மத்தாலெய்தும்பேரின்பம் ஆணவத்தாலு மெய்தலா மென்றல்லமதேவர் கூறியது பொருந்தாமைக்கு, ஆணவத்தாலு மென்றவும்மை இழிவுசிறப்பு. (கச)

தான்செய விளையா லோருடம்பிற் சாருமின்ப மென்றனேயல், ஊன்செ யுடல் மொழியவுட னெழிய மம்மெய் யழியாமல், வான்செய் பதத்தி லிருக்குமெனின் மாயைதந்த தன்றுகுல், கான்செய் மலர்நந் தனஞ்செயது கருவைத் துடைப்ப வென்னுவோய்.

(இ - ள்.) தான்செய்வினையால் - தானியற்றுஞ்சற்கருமத்தால் — ஓருடம்பில் - ஓர்பிறவியிற்றானே — சாருமின்பமென்றனே - பேரின்பமெய்துமென்றாய் — அவ்வூன்செயுடலமொழிய - அர்தமாமிசதேகநீங்க — உடனெழியும் - அவ்வின்பமுமுடனேநசிக்கும் — அம்மெய் - அர்தத்தேகம் — அழியாமல் - நசியாமல் — வான்செய்பதத்திலிருக்குமெனின் - மோட்சத்திலிருக்குமென்றால் — மாயைதந்ததன்றுகும் - மாயாகாரியமன்றுகும் — கான்செய் - வாசனைவீசுகின்ற — மலர்நந்தனஞ்செய்து - பூங்காவனம்வைத்து — கருவைத்துடைப்ப வென்னுவோய் - இனிக்கருவிலுதியாவாறு வென்னுந்தவத்தோனே. எ - று. ஊனுடலும் அதுபற்றிவந்தசுகதுக்கப்பேறும் மாயாகாரியமாதலால் எங்ஙனம் நிலையுறுமென்பார், இங்ஙனங்கூறினரென்க. வினையின்றேனுடலுமதுபற்றிவரும்பயனுமின்றும். ஆன்மாவுக்கெவ்வினையும் புடைபெயர்ச்சியாதலானும், இவைவினைமுதலாகாவாதலானும், இவைபயன்வேண்டி புரிதற்பாலவாதலானும், ஆன்மாவைப்போல் வினையும் பயனும்நிலையுண்மையல்லவாதலானும் மாயாகாரியமெனற்கு முரணென்னை? இன்றுதலால் பற்றுந்தது போல் மாயாசம்பந்தமெனக் குறிப்பித்தார். முத்தனுரகிதம், முத்தி. சகிதம் மாயை. முத்தியல்மாயை யெங்ஙனமிருக்குமெனல் அருத்தாபத்தி. உல்லங்ஙனமெனக்காட்ட அம்மெய்யழியாமல் வான்செய்பதத்தி லிருக்குமெனின் மாயை தந்தன்றுகுமென்றார். இஃதறியார் யாது கூறினுமென்னை. (கரு)

இன்ப நனிசெய் நலவினையி னிறப்பி னிறப்ப வுடம்பினிடைத், துன்ப மதுசெய் தீயவினை தோன்று மத்தீ வினைமாயின், முன்பு செயுநல் வினைவருமிம் முறையா லிரண்டு மாறிவரும் மென்ப வுலகி லொண்பகலு மிரவு மாறி வருதல்போல.

(இ - ள்.) இன்பநனிசெய் - மிக்கசுகத்தைச்செய்கின்ற — நல்வினையினிறப்பின் - நல்வினையின்முடிவில் — இறப்ப - மிகுதியாக — உடம்பினிடை - தேகத்தினிடத்தில் — துன்பமதுசெய் - துன்பத்தையேமிகுவிக்கின்ற — தீயவினைதோன்றும் - தீவினையுண்டாகும் — அத்தீவினைமாயின் - அத்தீவினைமுடிவில் — முன்புசெயும் - முன்செய்த — நல்வினைவரும் - நல்வினைதோன்றும் — இம்முறையால் - இங்ஙனமாயநெறியால் — இரண்டும் - இவ்விரண்டும் — உலகில் - உலகின்கண் — ஒண்பகலும் - ஒள்ளியபகற்காலமும் — இரவும் - இராக்காலமும் — மாறிவருதல்போல் - இடைவிடாதுமாறிவருதல்போல — மாறிவரும் - இடைவிடாதுமாறிமாறிவரும் — என்ப - என்றறிஞர்கூறுவர். எ - று. உடம்பினிடைஎன்றதனுல் ஒருடம்பில்தானே நல்வினைவருதலும், அதுமாறித் தீவினைவருதலும், அதுமாறி நல்வினைவருதலும், அதுமாறித்தீவினைவருதலும் பெறற்கும். இம்முறையாலிரண்டுமாறிவருமென்பதனுல், ஜென்மங்கடோறு மெனக்கண்டாம். இதற்குச்சாட்சியெனக்காட்ட என்பவென்றூர். முன்பின் ஜென்மமில்லை என்பார்; பிரத்தியட்சத்தில் ஒருவனிடத்தில்தானே செல்வமும்வறுமையும், ஒருகால்மாறிவருதலும், இருகால்மாறிவருதலும், முக்கால்மாறிவருதலும் சுபாவமெனின்; பிறவிக்கோ ஆன்மாவுக்கோ? பிறவிக்கெனின், ஆன்மாவுக்கயலன்றே அயலெனின், இதுபோன்றபிறவிகள்வந் தகலுமன்றே வந்துவந்தகல்வதால் சுபாவமெனலொழிக. பிறவிமாறிமாறிவருவதால் செல்வமும் வறுமையுமாறிமாறிவருவதற்கிடையூறென்னை. இவையகர்த்தாவாதலால் ஆன்மாக்கள்செய்நல்வினை தீவினையாலன்றி தாமேவருமெனற்கு யாதோரோதுவுமின்று. உண்டெனின், முரணுக்கேதுவாம். ஆதலின் அல்லமதேவன் கூறினனென்க. வினையைக்காரணமாக வேலாதார் உபயபிரஷ்டத்துவத்திற்குத் தம்மால் தாமே யிடம்பெறுவரெனக்கொள்க. (கசு)

புறத்துக் கருமம் பலசெய்து பொருப்பை யகழ்ந்திட் டெலிபிடித்தாங், கிறப்பச் சிறிய விண்ணின்ப மெய்து மவனே ரோவாமன், மறுத்துச் செயலக வினைகவினையும் வாளா விருந்

து பேரின்பம், பெறத்தக் கவனே மருளன்யார் பேசு கென்று
னெம்பெருமான்.

(இ - ள்.) புறத்து - பகிர்முகத்தில்—கருமம்பலசெய்து - யாகாதிபுண்
ணியகருமம்பலசெய்து—பொருப்பையகழ்ந்திட்டு - மலைகல்லி—எலிபிடி
த்தாங்கு - எலிபிடித்தாற்போல—இறப்ப - மிகவும்—சிறிய - அற்பமா
கிய—விண்ணின்பம் - தேவபோகத்தை —எய்துமவனே - அடைபவ
னே—நோவாமல் - வருந்தாமல்—செயல்களனைத்தினையுமறுத்து - ச
லசங்கற்பங்களையும்விடுத்து—வாளாவிருந்து - சும்மாவிருந்து—பேரின்
பம்பெறத்தக்கவனே - பேரின்பமடையத்தக்கவனே—(இவ்விருவருள்)
மருளன்யார் - மருளனெனப்படுபவன்யாவன் —எம்பெருமான் - அ
லமதேவன்—பேசுகென்றான் - சொல்லென்றுகேட்டனன். எ - று.
றத்துக்கருமம்பகிர்முகமென்றதனால், வாளாவிருந்தெனலை அந்தர்முக
மெனப்பெற்றாம். பகிர்முகம்; அல்லதைப் பொருளாகக்கோடல். அந்
தர்முகம், பொருளைப் பொருளாகக்கோடல். மலைகல்லி எலிபிடித்தாற்
போலப் பகிர்முகத்தாலெய்துபயனென்க. மருளனென்போன் சிறியவி
ண்ணின்பமெய்துபவனே இருவினையுமொருங்கேவிட்டு வாளாவிருந்து
பேரின்பம்பெறத்தக்கவனே யாவனெனமுடிக்க. வாளாவிருத்தல்; அ
னைத்துந்தானாய் விளங்கலை. நோவாமலெனல் இருந்தபடி இருத்தலை.()

பொறியிற் புறத்து மனஞ்செல்லிற் புலனே தோன்றி யி
டுமகத்திற், செறியக் கரணம் பராநந்த சிவமே தோன்றுஞ் சி
வந்தோன்ற, வறிவிற் பரந்த விடயமய மாகு முலகந் தோன்
றாமற், பிறவித்துயரக் கடல்கடந்து பேரின் பஞ்சார் குவரெ
ன்று.

(இ - ள்.) பொறியிற்புறத்து - பகிர்முகத்திற்பொறியினெறியாக—ம
னஞ்செல்லில் - மனஞ்சென்றால்—புலனேதோன்றியிடும் - உலகமே
தோற்றும்—அகத்தில் - அந்தர்முகத்தில்—செறியக்கரணம் - மனமொரு
ங்குபட—பராநந்தசிவமேதோன்றும் - பராநந்தமயமாகியசிவமேவிளங்
கும்—சிவந்தோன்ற - அங்ஙனஞ்சிவம்விளங்க—அறிவில் - அறிவின்க
ண்—பரந்த - பரவிய—விடயமயமாகும் - திரிசியமயமாகிய —உலகந்
தோன்றாமல் - உலகங்காணப்படாமல்—துயரம் - துன்பவடிவமாகிய—
பிறவிக்கடல்கடந்து - ஜனனசாகரநீந்தி—பேரின்பஞ்சார்குவரென்று
பேரின்பக்கரையையடைவரென்று. எ - று. புறம், அகம் என்றதனா

ற் பகிர்முகம் அந்தர்முகமென்றாம். மனஞ்செல்லிலென்றதனால் மனமொ
ருங்குபடவென்றாம். விடயமயமாகுமுலகமென்றதனாற் பராநந்த
மயம்சிவமென்றாம். பகிர்முகத்தில் தோன்றுதல் உலகமென்றாற்போ
ல அந்தர்முகத்தில் தோன்றுதல் சிவமெனக்காட்ட; இரண்டிற்கும்
தோன்றுதலைப் பிரயோகித்தார். பிரயோகிக்கவே அதற்குரிய காட்
சியெனப்பெற்றாம். பிறவிக்கடல் கடந்தென்பதனாற் பேரின்பங்கரை
யென உரைகொண்டாம். புலனேசகமாகத்தோற்றலின், புலனேஉல
கென்றது; காரணத்தைக்காரியமாக உபசரிக்கப்பட்டது. (௧அ)

கண்ணாற் காணக் காட்டியிவன் கருத்தைத் திருத்து வே
மென்ன, வெண்ணாக் கருணைக் கடலனையா னிவணீ யகழ்தி
யென்றுரைப்ப, நண்ணாப் பெரும நன்றென்று நவின்ற நிலத்
தை யகழ்கின்றான், பண்ணாற் சிறந்த பொறிவண்டு பாடு மலர்ப்
பூம் பொழிலுடையான்.

(இ - ள்.) கண்ணாற்காண - நமதுமகிமையைக்கண்ணாற்காணும்படி—
காட்டி - காண்பித்து—இவன்கருத்தை - இவன்கொள்கையை —திருத்
துவேமென்ன - திருந்தச்செய்வேமென்று—எண்ணா - எண்ணி—கருணை
க்கடலனையான் - கிருபாகடல்போன்றஅல்லமன்—இவண் - இவ்விடத்
தில்—அகழ்தியென்றுரைப்ப - தோண்டுதிஎனக்கூற —நண்ணா - அடை
தற்கரிய —பெரும - பெருமையுடையோனே —நன்றென்று - அங்ஙன
மேசெய்குவனென்றுசொல்லி —நவின்றநிலத்தை - அல்லமன்காட்டியவி
டத்தை—அகழ்கின்றான் - தோண்டத்தொடங்கினான்—(அவனாரெனில்) ப
ண்ணாற்சிறந்த - இசையாற்சிறந்த —பொறிவண்டு - பொறிவண்டுகள்—
பாடும் - ரீங்காரஞ்செய்கின்ற—பூ-அழகிய—மலர்ப்பொழிலுடையான் -
நந்தவனத்தையுடையகொக்கிதேவன். எ - று. கருணைக்கடலனையா
ன் காட்டி திருத்துவேமென்ன எண்ணா அகழ்தியென்றுரைப்பவெ
னவும், பொழிலுடையான் நன்றென்று அகழ்கின்றானெனவுங் கூட்டி
முடிக்க. பெருமஎன்பது விளி. (௧௯)

தொடலுஞ் செம்பொற் சிகரமொன்று தோன்றச் செய்யு
ட் பொருள்போலக், கடிதி னகழ்ந்து புகுந்ததனுட் கண்டார்
நிலத்தை யகழ்ந்திட்டு, மிடியன் கண்ட பொருள்போல விடைய
ம் புறத்துக் காணமல், வடிவஞ் சிறிது மசையாமல் வசமற் றிரு
க்கும் யோகியையே.

(இ - ள்.) தொட்டும் - தோண்டவும்—செம்பொற்சிகரமொன்று-செம்பொன்னாலாகியவோர்சிகரம்—தோன்ற - காணப்பட்ட—செய்யுட்பொருள்போல - அருங்கவிக்குரைகண்டாற்போல—கடிநிலைகழ்ந்து-விளாவில்தோண்டி—புகுந்து - பிரவேசித்து—அதனுட்கண்டார் - அதற்குள்கண்டார்—நிலத்தையகழ்ந்திட்டு - நிலத்தைத்தோண்டி—மிடியன்கண்டபொருள்போல-தாரித்திரியன்கண்டபுதையலைப்போல—விடயம்புறத்துக்காணமல் - புறம்பில்விடையங்காணமலும்—வடிவஞ்சிறிதுமசையாமல்-தேகஞ்சிறிதுஞ்சலியாமலும்—வசமற்றிருக்கும்யோகியை - பரவசப்பட்டிருக்குஞ்சிவயோகியை. எ - று. ஏ - அசை. உரைகாணற்கரியசெய்யுளாதலால் அருமைதோன்றச் செய்யுட்பொருள்போலவென்றார். இருவருநிலனகழ்ந்துசிவயோகியைச் செய்யுட்பொருள்போலவும் மிடியன்கண்டபொருள்போலவும் கண்டாரெனமுடிக்க. (௨௦)

கையிற் சிவலிங் கத்தின்மேற் கண்கள் வைத்திட் டெழும்பலான், மெய்யிற் றசையொன் றின்றியே மேவும் புனிதன் றனைநோக்கிச், செய்ய செயலி லாதசெயற் சிவயோ கியைக்கண் டனையோவென், றையத் தடைந்த வவனறிய வறிவித் துயரல் லமதேவன்

(இ - ள்.) கையில் - உள்ளங்கையிலமர்ந்த—சிவலிங்கத்தின்மேல்-இஷ்டலிங்கத்தின்மேல்—கண்கள்வைத்திட்டு - திஷ்டிவைத்து—எலும்பலால் - எலும்பையன்றி—மெய்யில்-தேகத்தில்—தசையொன்றின்றியே-மாமிசஞ்சற்றுமின்றி—மேவும் - யோகநித்திரையிலுறங்கும்—புனிதன்றனைநோக்கி - பரிசுத்தவானாகியவநிமிடமஹாயோகியைப்பார்த்து—செய்யசெயலிலாத - சன்மார்க்கமுமில்லாத—செயல் - அங்ஙனமாயசெயலையுடைய—சிவயோகியைக்கண்டனையோவென்று - சிவயோகியைத்தரிசித்தையாவென்று—ஐயத்தடைந்த—சந்தேககாரணமாகவந்த—அவனறிய - அந்தக்கொக்கிதேவன்காண—உயரல்லமதேவன் - சிறந்தவல்லமாப்பிரபுதேவர்—அறிவித்து - தெரிவித்து. எ - று. அல்லமதேவன் நோக்கி அறிவித்தெனக்கூட்டிமுடிக்க. செய்ய செயலென்பதில் இறந்ததுதழீஇயவெச்சவும்மையெஞ்சிநின்றது. செய்யசெயலிலாதசெயலாவன—பரசிவம் நின்றவாறுநின்றிலகல். சிவலிங்கத்தின்மேற்கண்கள்வைத்திடலாவது; பிறவயப்படாமைக்கு. (௨௧)

கடலின் விழுந்து துயர்பவர்க்குக் கலமொன் றருகு வந்ததெனக், கெடலில் பரம குருவெனக்குக் கிடைத்த தாவா வற்புதமென், றுடலம் விதிர்ப்பக் கண்கணீ ரொழுக வுருகித் தொழுதனனால், விடலின் மரபிற் குருசிட விதியை விளக்க வுளங்கொண்டு.

(இ - ள்.) கடலின்விழுந்து - கடலில்தவறிவிழுந்து—துயர்பவர்க்கு - ஆதரவில்லாமற்கலங்குபவர்க்கு—கலமொன்று - ஓர்கப்பல்—அருகுவந்ததென - பக்கத்திவ்வந்தாற்போல—கெடலில்பரமகுரு - சிதைவின்றிச்சதாதயமாகவிளங்கும்பரமாசிரியர்—எனக்குக்கிடைத்தது - எனக்குக்கிடைத்தது—ஆவா - ஆஆ—அற்புதமென்று - ஆச்சரியமென்று—உடலம்விதிர்ப்ப - தேகமுங்கெங்கவும் - கண்கணீரொழுக-கண்களிலானந்தபாஷ்பம்பெருகவும்—உருகி - நெஞ்சமுருகி—விடலில் - இடையினீங்காதமரபின் - மரபினையுடைய—குருசிடவிதியை - குருசிடநெறியை—விளக்க - விளக்குவிப்பான்வேண்டி—உளங்கொண்டு - எண்ணங்கொண்டு—தொழுதனன் - வணங்கினன். எ - று. கடலில்விழுந்துகலங்குவோனுக்கோர்மரக்கலஞ் சமீபித்தாற்போல எனக்கிவ்வல்லமதேவன்கிடைத்தனனெனவியப்புற்று விதிர்ப்ப ஒழுக உருகி உளங்கொண்டுதொழுதனனெனமுடிக்க. குருசிடவிதியைவிளக்கலாவது; தானேஅவ்விதியாக நிற்றலை. (௨௨)

காந்தங் கண்ட விரும்புபோற் கண்ட பொழுதே யநிமிடன்ற, னேந்துஞ் செங்கைச் சிவலிங்க மெங்கள் பெருமா னங்கைமலர், போந்தங் கிருந்த தப்பொழுதிற் புனிதன் சிவ கலைதானுஞ், சார்ந்தங் கிருந்த சிவலிங்கந் தன்னே டவன்பாற் சார்ந்ததால்.

(இ - ள்.) காந்தங்கண்டவிரும்புபோல்-காந்தத்தைக்கண்டவிரும்பைப்போல—அநிமிடன்றன் - அநிமிடனென்னும்யோகியினது—செங்கையேந்தும் - உள்ளங்கையிலேந்திய—சிவலிங்கம் - இஷ்டலிங்கமானது—எங்கள்பெருமான்-எங்கள்கர்த்தராகியவல்லமதேவரது—அங்கைமலர்-உள்ளங்கையாகியதாமரைமலரில்—போந்து - வந்து—அங்கிருந்தது - அவ்விடத்திலிருந்தது—அப்பொழுதில் - அப்போதே—புனிதன் - அநிமிடனது—சிவகலைதானும் - சிவகலையும்—சார்ந்து—அங்கிருந்தசிவலிங்கந்தன்னோடு - அங்கிருந்தசிவலிங்கத்தோடே—அவன்பாற்சார்ந்தது - அந்தவல்லமதேவரிடத்திற்சேர்ந்துவிட்டது. எ - று. அகங்கையெனலங்கையென்றாயது விகாரம். அங்கைமலர் உருவகம். (௨௩)

வந்து பரம சிவலிங்க மருவப் பெறுமல் லமன்றனையு
மந்த விமல லிங்கமுட னடைந்த ஞான குரவனையுங்
கந்த மலர்நல் வனமுடையான் கண்டு மகிழ்வுற் றிவர்பெருமை
சந்த மறைதேர் நான்முகனுஞ் சாற்றற் கரிதென் றறைகுவான்.

(இ - ள்.) பரமசிவலிங்கம் - இஷ்டலிங்கமானது — வந்துமருவப்பெறு ம் - வந்தடைந்த — அல்லமன்றனையும் - அல்லமதேவரையும் — அந்தவிம லலிங்கமுடன் - அந்தப்பரிசுத்தமானசிவலிங்கத்துடன் — அடைந்த - தி ருந்தருளியிருந்த — ஞானக்குரவனையும் - ஞானசிரியனையும் — நல் - நல் ல — கந்தம் - வாசனைபொருந்திய — மலர்வனமுடையான் - பூங்காவனங் காக்குங்கொக்கிதேவன் — கண்டு - பார்த்து — மகிழ்வுற்று - சந்தோஷித் து — இவர்பெருமை - இவ்விருவரதுமகிமையை — சந்தம் - அழகிய — ம றைதேர் - வேதங்களையுணர்ந்த — நான்முகனும் - பிரமனும் — சாற்றற்க ரிதென்று - சொல்லுதற்கரிதென்று — அறைகுவான் - சொல்லுவான். எ - று.

நின்னற் கண்டேன் சிவலிங்க நிஷ்டை ஞான யோகிதனை
முன்னாட் கரும மனைத்துமினி முடித்தேன் ஞான நிலைநின்றே
னுன்னாற் செய்யப் படுமுதவிக் குதவி வேறு நெடுந்தகா [வார்.
யென்னாற் செய்வ தொன்றுளதோ வெழிலிக் குதவி யார்செய்

(இ - ள்.) சிவலிங்கநிஷ்டை - சிவலிங்கநாட்டத்திலழுந்திய — ஞான யோகிதனை - ஞானயோகியை — நின்னாற்கண்டேன் - உன்னால்தரிசித் தேன் — முன்னாட்கருமமனைத்தும் - பூர்வத்தில்முடிக்கவேண்டிய கருமம னைத்தையும் — இனிமுடித்தேன் - இனிமுடித்துவிடுவேன் — ஞானநிலை நின்றேன் - ஞானயோகத்தினின்றுவிட்டேன் — உன்னாற்செய்யப்படுமு தவிக்கு - நீசெய்தவுதவிக்கு — நெடுந்தகாய் - பெருந்தகையோனே — உ தவிவேறு - பிரதியுபகாரம் — என்னாற்செய்வதொன்றுள்தோ - என்னா ற்செய்யத்தக்கதொன்றுளதா — எழிலிக்கு - மேகத்திற்கு — உதவிசெய் வார்யார் - பிரதியுபகாரஞ் செய்பவர்கள்யார். எ - று. இனிமுடிப்பே னென்னாததும், ஞானநிலைநிற்பேனென்னாததும் விரைவினுமிகவினுமெ ன்னுஞ்சூத்திரத்தில் அறஞ்செயிற்சுவர்க்கம்புக்கானென்றாற்போல எதி ர்கால மிறந்தகால… [illegible] தெளிவினுலென்க. (௨௫)

ஐய நினையு நின்கரத்தி னடைந்த சிவலிங் கந்தனையும் [ன்று
பொய்யில் குரவன் றனையுமொரு பொருளென் றறிந்தே னின்றெ

செய்ய கமலத் திருவடியிற் சென்று தொழுதல் லமனும
மெய்ய னெதிர்நின் றன்பினால் விளம்பும் வனங்கா வலனன்றே.

(இ - ள்.) ஐய - அய்யனே — நினையும் - தேவரீரையும் — நின்கரத்தி னடைந்த - உமதுகையிலெழுந்தருளிய — சிவலிங்கத்தினையும் - இஷ்ட லிங்கத்தையும் — பொய்யில்குரவன்றனையும் - குற்றமற்றவகுமிடனெ ன்னுமாசிரியனையும் — இன்று - இப்போது — ஒருபொருளென்றறிந்தே னென்று — ஒருவஸ்துவாகக்கண்டேனென்று — செய்யகமலத்திருவடியி ல் - செந்தாமரைமலர்போன்றதிருவடியில் — சென்று - போய் — தொழு து - வணங்கி — அல்லமனுமம் - அல்லமனென்னும்பெயரையுடைய — மெ ய்யனெதிர்நின்று - எதார்த்தவானதெதிரிலேநின்று — அன்பினால் - மிக் கவன்பினால் — வனங்காவலன் - நந்தவனங்காப்போன் — விளம்பும் - சொ ல்லுவான். எ - று. உன்னையும் சிவலிங்கத்தையும் அகமிடப்பெயரோனை யும், ஏகப்பொருளெனக்கண்டேனெனமுடிக்க. (௨௬)

என்னை யறிவித் ததுபோலிவ் விஷ்ட லிங்க மகம்புற
மு, மன்னி யிருக்கு நெறியினைநின் மலர்த்தாள் பரவு மடியார்
க்குப், பன்னி யுணர்த்திச் சரமாகிப் பாரிற் சரிப்பா யெனத்
தொழுதான், றன்னி னிலத்தி னரரெல்லாந் தரும்பே ரின்பம்
பெறநினைந்தான்.

(இ - ள்.) என்னையறிவித்ததுபோல் - என்னையெனக்குவிளக்கியது போல — இவ்விஷ்டலிங்கம் - இந்தச்சிவலிங்கம் — அகம்புறமும் - அகத்தி லும்புறத்திலும் — மன்னியிருக்குநெறியினை - நிலையுற்றிருக்குநெறியை — நி ன்மலர்த்தாள் - உனதுமலர்போன்றபாதங்களை — பரவுமடியார்க்கு - வ ணங்குமடியார்களுக்கு — பன்னியுணர்த்தி - நன்றாகத்தெரிவித்து — சர மாகி - சரவுயிர்களைப்போல — பாரிற்சரிப்பாய் - பூமியிற்சஞ்சரிப்பவ னே — எனத்தொழுதான் - என்றுவணங்கினான் — தன்னில் - தன்னைப் போல — நிலத்தினரரெல்லாம் - பூமியிலுள்ளமனிதர்களெல்லாரும் — த ரும் - தருந்த — பேரின்பம்பெற - பேரின்பமடைய — நினைந்தான் - நினை த்தகொக்கிதேவன். எ - று. நினைந்தான் வினையாலணையும்பெயர். அக ம்புறம் அதோமுகமூர்த்தமுகத்தை. (௨௭)

கொக்கி தேவ னிந்தமொழி கொண்டு கிளரல் லமதேவ
ன், றக்க பெரியோர் தமக்கியல்பு தாமபெற் றுள்ள பேறெல்

லா, மிக்க வுலகம் பெறுகவென வேண்டிக் கோட லெனப்புக
ழ்ந்து, செக்கர் மலர்ப்பூக் கைகளாற் றீண்டித் தழுவி யருள்
செய்தான்.

(இ-ள்.) கொக்கிதேவன் - கொக்கிதேவனென்போன் — இரந்த மொழிகொண்டு - இரந்துகேட்டவசனத்தால் — இளர் - விளங்காநின்ற — அல்லமதேவன் - அல்லமதேவனென்போர் — தக்கபெரியோர்தமக்கு - தகுந்தபெரியோர்களுக்கு — இயல்பு - சுபாவமாவது — தாம்பெற்றபேறெல்லாம் - தாம்பெற்றபேறனைத்தும் — மிக்கவுலகம்பெறுகவென - பெரியவுலகத்துயிர்கள்பெறவேண்டுமென்று — வேண்டிக்கோடலென - வேண்டிக்கொள்வதென்று — புகழ்ந்து - துதித்து — செக்கர் - சிவந்த — பூ - அழகிய — மலர்கைகளால் - தாமரைமலர்போன்றதமதுகைகளால் — தீண்டி - தொட்டு — தழுவி - தழுவிக்கொண்டு — அருள்செய்தான் - அநுக்கிரகித்தான். எ-று. அல்லமதேவன் புகழ்ந்து தீண்டி தழுவி அருள்செய்தானெனமுடிக்க.

(௨௮)

அங்கைச் சிவலிங் கத்தினிடை யமைத்த நோக்கு நெஞ்ச
கமுந், தங்கச் சிவயோ கத்தினையே சார்ந்தங் கிருந்தா னோவி
யம்போன், மங்கைக் கிடந்தந் தருளினோன் மலர்த்தாட் கிடுபூ
வனமாக்கிப், பொங்கப் புரந்த தவத்தான்மெய்ப் பொருளா
சிரியன் கண்ணுற்றான்.

(இ-ள்.) அங்கை - உள்ளங்கையிலமர்ந்த — சிவலிங்கத்தினிடை - இஷ்டலிங்கத்தில் — அமைத்த - அழுத்திய — நோக்குநெஞ்சகமும் - பார்வையும்மனதும் — தங்க - பிறழாதுநிலைக்க — சிவயோகத்தினையேசார்ந்து - சிவயோகத்தையேயடைந்து — ஓவியம்போல் - பிரதமைபோல — அங்கிருந்தான் - அங்கிருந்தனன் — மங்கைக்கு - உமையவளுக்கு — இடந்தந்தருளினோன் - இடதுபாகத்தைத்தந்தபரமசிவனது — மலர்த்தாட்கு - மலர்போன்றபாதத்துக்கு — இடு - அருச்சிக்கின்ற — பூவனமாக்கி - பூங்காவனமாக்கி — பொங்க - மிகுதியாக — புரந்த - காப்பாற்றிய — தவத்தான் - தவத்தினால் — மெய்ப்பொருள் - உண்மைப்பொருளாகிய — ஆசிரியன்கண்ணுற்றான் - ஞானாசிரியனைக்கண்டகொக்கிதேவன். எ-று. அகங்கையென்பது அங்கையென்றாயது விகாரம். கண்ணுற்றான் சார்ந்து ஓவியம்போல் சிவலிங்கத்தினிடை நோக்கும்நெஞ்சகமுந்தங்க இருந்தானெனமுடிக்க.

(௨௯)

அடியர் வேண்டிற் றேபுரியு மல்ல மப்பே ரெம்பெருமா
னெடிய விழிக ளருள்சுரப்ப நிமல லிங்கங் கரத்தேந்திப்
படியி லரிய தவஞ்செய்யும் பத்த ருள்ளங் களிகூர
வடிய விளமாத் தழைப்பவரு மந்தா நிலம்போற் சரிக்கின்றான்.

(இ-ள்.) அடியர்வேண்டிற்றே - அடியார்கள்வேண்டியதையே — புரியும் - அநுக்கிரகிக்கின்ற — அல்லமப்பேர் - அல்லமனென்னும்பெயரையுடைய — எம்பெருமான் - எமதாண்டவன் — நெடியவிழிகள் - நீண்டகண்களில் — அருள்சுரப்ப - அருள்பெருக — நிமலலிங்கம் - பரிசுத்தமானவிஷ்டலிங்கத்தை — கரத்தேந்தி — கையிலேந்திக்கொண்டு — படியில் - பூமியில் — அரியதவஞ்செய்யும் - நிட்காமியதவஞ்செய்யும் — பத்தருள்ளம் - அன்பர்களுள்ளத்தில் — களிகூர - பேரின்பமிக — அடிய - பருத்தஅரையினையுடைய — இளம் - இளமையாகிய — மாத்தழைப்பவரும் - மாமரங்கள்பூத்துக்காய்க்கவருகின்ற — மந்தாநிலம்போல் - தென்றற்காற்றைப்போல — சரிக்கின்றான் - சஞ்சரிக்கின்றான். எ-று. எம்பெருமான் ஏந்தி சரிக்கின்றானெனமுடிக்க. அரியதவமென்றதனால் நிட்காமியமென்றாம்.

(௩௦)

கொக்கிதேவர்கதி - முற்றிற்று.

ஆ. கதி - ௧௧ - கு - விருத்தங்கள் - ௩௨௦.

பன்னிரண்டாவது

முத்தாயியம்மைகதி.

வேறு.

கண்டிலே னசகன் னனை யென் றருர்
கொண்டு வாடுங் கொடியிடை யாடுயர்
விண்டு போக விரைந்துவந் தல்லமன்
பண்டு கூறும் பரிசு விளம்புவாம்.

(இ - ள்.) அசகன்னனை - அசகன்னனென்பவனை—கண்டிலேனென்று - பார்த்திலனென்று—அருர்கொண்டுவாடும் - மிக்கதுன்பத்தால்வருந்தும்—கொடியிடையாள் - பூங்கொடிபோன்றவிடையையுடையமுத்தாயியம்மையின்—துயர்விண்டுபோக-துன்பமொழிந்துபோதற்கு —அல்லமன்விரைந்துவந்து-அல்லமதேவர்விரைவாகவந்து —பண்டு-பூர்வத்தில்—கூறும்பரிசு —சொன்னவிதத்தை —விளம்புவாம் - சொல்லுவாம். எ - று. அல்லமன் விரைந்துவந்து கொடியிடையாடுயர் விண்டுபோக பண்டுகூறும்பரிசு விளம்புவாமெனமுடிக்க. (க)

பொடிய ணிந்தெழில் பொங்குறு மல்லம
னடியர் தங்க ளகத்திற் றுயரினை
யுடையி ழந்த வொருவன் கரமெனக்
கடித டைந்து களைந்தருள் செய்யுநாள்.

(இ - ள்.) பொடியணிந்து - விபூதியணிந்து—எழில்பொங்குறும் - அழகுமிகுகின்ற—அல்லமன் - அல்லமதேவன்—அடியர்தங்கள் - அடியார்களுடைய —அகத்தில் - மனதிலுள்ள —துயரினை - பிறவித்துன்பத்தை —உடையிழந்த —வஸ்திரமிழந்த — ஒருவன்கரமென - ஒருவனது கையைப்போல —கடிதடைந்து - விரைவிற்போய் — களைந்தருள்செய்யுநாள் - நீக்கியருளிரக்குநாளில். எ - று. அடியர்தங்களகத்திற்றுயரொன்றதனல் பிறவித்துயரெனப்பெறும். ஒருவன்விரைவிற்செல்லுழி த

னதுவஸ்திரமவிழ்ந்துபோக வதனைவிரைவிற்கட்டுங்கரத்தைப்போல அல்லமன்விரைவி லடியர்பாற்சென்று அவர்கள்துயரினைக்களைவனெனக் கூட்டிப்பொருள்கொள்க. (உ)

மறைத்தி ருந்த மலிசிவ பத்தியைப்
புறத்த றிந்த பொழுதே யுடம்பினை
வெறுத்த கன்று வெளியுரு வாயினு
னறுத்த பந்த வசகன னென்பவே.

(இ - ள்.) மறைத்திருந்த - மறைத்துக்கொண்டிருந்த —மலிசிவபத்தியை - மிக்கசிவபத்தியை —புறத்தறிந்தபொழுதே - புறம்பிற்கண்டவுடனே—உடம்பினைவெறுத்தகன்று - தனதுதேகத்தைவெறுத்துநீங்கி—வெளியுருவாயினுன்-சிதாகாசவடிவமானுன்—(அவனுரெனின்)பந்தமறுத்த - தனதுபந்தமொழிந்த —வசகன்னன்-வசகன்னனென்பவன்—என்ப - என்றறிஞர்கூறுவர். எ - று. ஏ - அசை. முற்றத்துறக்கினுர் தேகபாவமகலாததால் உடம்பினைவெறுத்தகன்றெனவும், இங்கேசிதாகாசத்தையாதலால் வெளியுருவாயினனெனவுங்கூறினார். தனதுல்வந்த பந்தமாதலின் அறுத்தபந்தமென்ருர். (ங)

அறைந்த தூயவ னங்க வுபாதிபோய்
நிறைந்த நீர்மை நினைந்திலள் பேருயி
ரிறந்து போயின னென்னத் தளர்ந்துடன்
பிறந்த மாது பெரிதுள மாழ்கியே.

(இ - ள்.) அறைந்த - இப்போதுசொல்லப்பட்ட—தூயவன் - பரிசுத்தவானுகியவசகன்னனென்பவன் —அங்கவுபாதிபோய் - தேகபாவநீங்கி—நிறைந்த - பரிபூரணவடிவமான—நீர்மை - தன்மையை—நினைந்திலள் - நினையாதவளாகச்சென்று—உயிரிறந்துபோயினனென்ன - மரணமடைந்தானென்று—தளர்ந்து - சோர்ந்து—உடன்பிறந்தமாது - அவனுடன்கூடப்பிறந்தமுத்தாயியம்மை —பெரிதுளமாழ்கி - மிகவும்மனஞ்சோகமுற்று. எ - று. உடன்பிறந்தமாதுபோய் தளர்ந்து மாழ்கியெனக் கூட்டிமுடிக்க. (ச)

புலம்பி னைந்திருக் கின்றவப் போதினி
லிலிங்க முங்கர முந்திகழ் மெய்துற

நலங்கொ ளல்லம னண்ணின னண்ணலுங்
கலங்கி நின்றவக் காரிகை கண்டனள்.

(இ-ள்.) புலம்பி - அழுது — நைந்திருக்கின்றவப்பேதையின் - மனம் வதைந்துகொண்டிருக்குமத்தருணத்தில் — இலிங்கமுங்கரமும் - இஷ்டலிங்கமுமுள்ளங்கையும் — திகழ்வெய்தற - பிரகாசிக்க — நலங்கொளல்லமன் - நன்மையேவடிவமாகக்கொண்டவல்லமதேவர் — நண்ணினன் - அவ்விடத்தில்வந்தனன் — நண்ணலும் - வரவும் — கலங்கிநின்றவக்காரிகை - கலக்கமுற்றுநின்றவந்தஸ்த்ரீ — கண்டனள் - பார்த்தனள். எ-று. அக்காரிகை அல்லமன்நண்ணினதைக்கண்டனளெனக்கூட்டிமுடிக்க. (௫)

கண்ட போதச கண்ணனைக் காண்கிலாள்
கொண்ட பீழை குறைய வழுதடிப்
புண்ட ரீகப் புதுமலர் வீழ்ந்துகண்
மண்டு நீருக வாய்விட் டரற்றினாள்.

(இ-ள்.) கண்டபோது - பார்த்தபோது — அசகண்ணனை - அசகண்ணனென்பவனை — காண்கிலாள் - காணாதவளாய் — கொண்ட - தான்கொண்ட — பீழைகுறைய - துக்கந்தணிவான்வேண்டி — அழுது - கூச்சலிட்டழுது — அடி - அவரதுபாதங்களாகிய — புது - அப்போதுமலர்ந்த — புண்டரீகமலர் - தாமரைமலர்களில் — வீழ்ந்து - விழுந்து — கண் - கண்களில் — மண்டு - மிகுந்த — நீருக - நீர்சொரிய — வாய்விட்டு - வாயைத்திறந்து — அரற்றினாள் - கதறியழுதாள். எ-று. காரிகை பீழைகுறைய கண்ணீருக அரற்றினாளெனக்கூட்டிமுடிக்க. அடிப்புண்டரீகப் புதுமலர் - உருவகம். (௬)

பாவி யேன்முகம் பார்க்கவொண் ணாதென
வாவி யாமச கண்ண னகன்றுசெய்
நோவெ லாமிவ ணூக்க வருளினால்
மேவி னாயென மீண்டும் வணங்கினாள்.

(இ-ள்.) பாவியேன்முகம் - பாவியாகியவெனதுமுகத்தை — பார்க்கவொண்ணாதென - பார்க்கக்கூடாதென்று — ஆவியாம் - உயிர்போல்பவனாகிய — அசகண்ணன் - அசகண்ணனென்போன் — அகன்று - எனதுடல்விட்டகன்று — செய் - என்னைவதைசெய்கின்ற — நோவெலாம் - வதைகளையெல்லாம் — இவண் - இவ்விடத்தில் — நூக்க - ஒழிப்பான்வேண்டி —

அருளினால் - கிருபையினால் — மேவினாயென - வந்தாயென்றுசொல்லி — மீண்டும்வணங்கினாள் - மறுபடியும்வணங்கினாள். எ-று. ஆவியாமசகண்ணன் இணைவழுவமைதி. (௭)

வணங்கு மாதின் மலர்முக நோக்கியே
யணங்க னாய்நல் லசகணன் தன்மையை
யுணர்ந்தி டாம லுளைத லுணர்வுளார்க்
கிணங்கு றாதென் றெந்தை யியம்புவான்.

(இ-ள்.) வணங்குமாதின் - வணங்கியமுத்தாயியம்மையின் — மலர்முகநோக்கி - தாமரைமலர்போன்றவதனத்தைப்பார்த்து — அணங்கனாய் - தேவகன்னிபோல்பவளே — நல் - நல்ல — அசகணன்தன்மையை - அசகண்ணனதுநிலைமையை — உணர்ந்திடாமல் - அறியாமல் — உளைதல் - வருந்துதல் — உணர்வுளார்க்கு - அறிவுடையோர்க்கு — இணங்குறாதென்று - அடாதென்று — எந்தை - எந்தைபோல்பவராகியஅல்லமன் — இயம்புவான் - சொல்லுவான். எ-று. எந்தை மாதின் [illegible] உளைதல் இணங்குறாதென்று இயம்புவான் எனக்கூட்டிமுடிக்க. அன்னாயெனற்பாலது அனாயென்றாயது இடைக்குறை. (௮)

அழிவி லானை யழிந்தன னென்றுநீ
விழியி னான்மிகு வெள்ளம் பெருக்கினை
கழிவி லாதவா காயங் கழிந்ததென்
றொழிவி லாம லுளமெலி வார்கள்போல்.

(இ-ள்.) அழிவிலானை - என்றுமழியாதஅசகண்ணனை — அழிந்தனனென்று - இறந்தானென்று — நீ - நீ — விழியினால் - கண்களினால் — மிகுவெள்ளம் - மிக்ககண்ணீர்பெருக்கை — பெருக்கினை - பெருகச்செய்தாய் — (யாவர்போலவெனின்) கழிவிலாத - வந்துபோகாத — ஆகாயங்கழிந்ததென்று - ஆகாயம்போய்விட்டதென்று — ஒழிவிலாமல் - ஓயாமல் — உளமெலிவார்கள்போல் - மனநோகின்றவர்கள்போல். எ-று. (ஆகாயம் கடமுதலியஉபாதிகளில் புகுவதும் போவதும்) உண்டாயின் ஆன்மாவுந்தேகவுபாதிகளில் புகுவதும் போவதுமுளதாம். இன்றாதலின், மெலிவதெற்றிற்கென்றுரைக்க. ஆன்மாவாகிற அஃறிணையை உயர்திணையாண்பாலாக்கியது இவனைப்பற்றியென்க. (௯)

சச்சி தாநந்த சங்கர னாகவே
யசச நீங்குபு தன்னை யறிந்தவன்

றச்ச மாந்துயர் தோன்மலி யாக்கையை
யிச்சி யானதை யானென வெண்ணியே.

(இ - ள்.) சச்சிதாநந்தம் - சச்சிதாநந்தசொரூபமாகிய —சங்கரனாக
வே - பரமசிவனாகவே—அச்சநீங்குபு - பிறவியச்சநீங்கி—தன்னையறிந்த
வன் - தன்னையுள்ளவாறுணர்ந்தோன்—நச்சமாந்துயர் - துயர்நரகிலை
ந்த—தோன்மலி - தோலால்மூடப்பெற்ற—யாக்கையை - தேகத்தை—
இச்சியான் - விரும்பான்—அதை - அவ்வுடலை —யானென்னெண்ணி-நா
னெனக்கருதி. எ - று. நச்சமாந்துயர் மீமிசைப்பதம். தன்னைச் சச்
சிதாநந்தமாகக் கண்டோன் அநிர்தசடதுக்கமாக்காணுனென்பார், ச
ங்கரனாக அறிந்தவன்யாக்கையையானென வெண்ணியிச்சியானென்றார்.
நச்சமாந்துயர்யாக்கைஎன்றது, தோல்மலியெனமிகைபடக்கூறியது;
எழுவகைத்தோற்றபேதமும், அதில்ஆண்பெண்பேதமுந்தோன்றற்கெ
ன்க. சச்சிதானந்தசங்கரனென்றாற்போல, நச்சமாந்துயர்யாக்கையெ
ன்றார். தோற்றபேதந்தோலாலாதலின் நச்சமாந்துயரைத்தோலுக்கடை
மொழியாக்கனுமிகையும். தோல்மலியாக்கையையானெனவெண்ணியிச்
சியானெனவே; சங்கரனையிச்சிப்பானென்றாயிற்று. தேகோகம் சிவோக
ம் என்பவற்றுள், தானேதானுக்கற்கியைந்தது; சிவோகமாதலால்யா
க்கையையிச்சியானெனக்கோடல், சிறப்பு. (௧௦)

ஒண்ட ளாக்க ணொழிவி லருளுருக்
கொண்ட டுத்த குருவரு ளாற்றனைக்
கண்ட மெய்த்தவன் காயந் தனையன
முண்ட நெட்டிலை யொப்ப விடுப்பனால்.

(இ - ள்.) ஒண்டளாக்கண் - அழகியபூமியில் —ஒழிவில்-என்றுநசியா
த—அருளுருக்கொண்டு - அருளேவடிவமாகக்கொண்டு—அடுத்த - ஆட்
கொள்ளவந்த—குருவருளால்-குருவினதனுக்கிரகத்தினால் —தனைக்கண்
ட - தன்னைத்தானுள்ளவாறுகண்ட—மெய்த்தவன்-நிட்காமியதவத்தோ
ன்—காயந்தனை - தனதுதேகத்தை—அனமுண்ட - சாப்பிட்ட—நெட்டி
லையொப்ப - நீண்டவிலைக்கொப்பாக—விடுப்பன்-சுதந்தரியான். எ - று.
ஆல் - அசை. யாதுமுணர்ந்தும் தன்னாற்றானுணரப்படாமையால் குருவ
ருளாற்றனைக்கண்டமெய்த்தவனென்றார். அன்னமெனற்பாலது அன
மென்றாயது; இடைக்குறை. அனமுண்டநெட்டிலையென்றதனால், எ
ச்சிலையென்றாயிற்று, ஆகவே, மெய்ஞ்ஞானிக்குத்தன்தேகம் அருவருப்
பாயதெனக்கண்டாம். (௧௧)

படியில் வந்த பரம குரவனாற்
றடைய றும்படி தன்னை யறிந்தவ
னுடல்வி டும்பொழு தொன்றொரு மண்மயக்
கடமு டைந்தவா காய நிகர்ப்பனால்.

(இ. ள்.) படியில்வந்த - பூமியிலெழுந்தருளிவந்த — பரமகுரவனால் -
பரமாசிரியனால்—தடையறும்படி - தடைகணீங்கும்படி — தன்னையறிந்
தவன் - தன்னைத்தானுணர்ந்தவன் — உடல்விடும்பொழுது - தேகநீங
கும்போது—ஒன்றொரு - ஒவ்வொரு — மண்மயக்கடம் - மண்மயமாயக
டங்கள்—உடைந்த - உடைந்தஅவசரத்துள்ள — ஆகாயநிகர்ப்பன் - ஆ
காயத்துக்கொப்பாவன். எ - று. ஆல் - அசை. தடை; அஞ்ஞான, சந்
தேக, விபரீதங்களை. மட்கடங்கள் வேறுமயமன்றாதலின் மண்மயக்க
டமென்றார். தோற்றமுநசித்தலுங்கடத்துக்கன்றி ஆகாயத்துக்கன்று
தல்போல, தோற்றலுநசித்தலும்பாகித்திரயத்துக்கன்றி ஆன்மாவாகி
ய சிதாகாயத்துக்கன்றென்பார்; கடமுடைந்தவாகாயநிகர்ப்பனென்
றார். கடநாட்டத்தில் தோற்றமுநசிப்புமுண்டாய் ஆகாயநாட்டத்தின்
று [illegible] இல்லையுண்டாயு [illegible]
பமானத்தாலுபமேயந்தோன்றக் குறிப்பித்ததென்க. ஜீவிக்குங்கால
த்திலென்றது உடல்விடும்பொழுதென்றது; பன்னாட்சாதனத்தைக்கு
றிப்பித்தற்கென்க. (௧௨)

பந்த பாச முழுதும் பரிந்திட
நந்து மோர்சிவ ஞானி நரர்வினை
சிந்து மாறு செறிந்த வுடம்புதான்
வெந்த தூசின் விழியெதிர் தோன்றுமே.

(இ - ள்.) பந்தம் - பந்தத்தைவிளைவிக்கும் — பாசமுழுதும் - பாசங்க
ளனைத்தும் — பரிந்திட - முறிந்திடும்படி — நந்தும் - வளருகின்ற — ஓர்
சிவஞானி - ஒப்பற்றசிவஞானியென்பவன்—நரர்வினை - மிசிரகர்மம்—
சிந்துமாறு - அழியும்வண்ணம்—செறிந்த - தானடைந்த—உடம்புதான்-
அவ்வுடம்பானது—வெந்ததூசின் - வெந்தபுடைவைபோல—விழியெதி
ர்தோன்றும் - எவர்க்குங்கண்ணுக்குக்காணப்படும். எ - று. ஏ - அசை.
பந்தபாசமுழுதுமவுடலையன்றி ஏனைய உடலிரண்டுமின்றெனக்காட்ட
உடம்பரிந்திடநந்துஞானி யென்றார். இப்போதுசியாதுள்ளதால்
வேலோ, வெந்த புடைவைபோற்காண்டலின் வெந்ததூசின் விழியெதிர்

தோன்றுமென்றூர். பிசிரகர்மம் நரர்க்காதலின் நரர்வினையெனப்பட்டது. பிசிரகன்மமுமொழியவெடுக்கவேண்டுவதுடம்பாதலின் ஞானிநரர்வினைசிந்துமாறுசெறிந்த உடம்பென்றூர். உளாயிற்கோடலென்னு முத்தியால் சிவஞானி - சிவஞானிக்கு—நரர் - ஏனிதருடைய—வினை - சஞ்சிதவினை—சிந்துமாறு - நசிக்கும்படி—செறிந்த - வாய்த்த—உடம்புதான் - அல்ல உடம்பென்றுனாகொள்ளினு மமையும். [illegible]

யாவு மாகி யிருக்குஞ் சிவத்தொடு
மேவு ஞான விழியுடை யான்றனக்
கோவு மாறி லுறவு பகையெனும்
பாவ மோவிலை யென்றறி பாவையே.

(இ - ள்.) யாவுமாகியிருக்கும் - சமஸ்தமுமாயிருக்கும் — சிவத்தொடு மேவும் - சிவாகாரமாகவிளங்கும் — ஞானவிழியுடையான்றனக்கு - ஞானக்கண்ணுடையோனுக்கு—ஓவுமாறில் - ஒழிவில்லாத—உறவுபகையெனும் - உறவுபகையென்கின்ற — பாவமோ - பாவனையுமோ — பாவையே - பாவைபோல்பவளே—இலையென்றறி - சற்றுமில்லையென்றுணர். இ-எ - று. சிவத்தொடுமேவு ஞானவிழியுடையானென்பதனால், ஐக்கிய ஞானமெனப்பெற்றும். உடல்நானென்னும்பாவமேயின்றியவிடத்து வினையபாவமெங்ஙன முண்டாமென்பார் ஓவுமாறிலுறவுபகையெனும் பாவமோவிலையென்றறிபாவையேயென்றூர். பாவை உவமையாகுபெயர். ()

யாக்கை தாமென் றிருந்தழி கின்றவ
ரூக்கி லாவறி வாகி யுடம்பொடு
தாக்கிலா தவர் தம்மையுந் தாமென
நோக்கு வாரவ ருண்மையை நோக்குறூர்.

(இ - ள்.) யாக்கைதாமென்றிருந்து - தேகமேதாமென்றிருந்து — அழிகின்றவர் - அதனாற்கெடுகின்றவர் — ஊக்கிலா - நசியாத —அறிவாகி - அறிவேவடிவாகி — உடம்பொடுதாக்கிலாதவர்தம்மையும் - உடம்போடு கூடியிருந்தும்தாக்கற்றிருப்பவர்களையும் — தாமெனநோக்குவார் - தங்களைப்போலேபார்ப்பார்கள்—அவருண்மையை நோக்குறூர் - அவர்களது எதார்த்தநிலையை விசாரித்தறியாதவராகி. எ - று. யாக்கைதாமென்றிருந்தழிதலாவது; உடலையன்றி நானெனற்குப் பொருள் காணாமையினஃதிழப்புழித்தனக்குமன்றே, ஆதலி னழிகின்றவரென்றூர். அஞ்ஞானியர் ஞானியரைத்தம்மைப்போல் கருதுவரென்பதுகருத்து. (கரு)

கூத்த னாடகக் கோல நடிப்பினைப்
பார்த்து வாய்மையென் றெண்ணிலர் பாருளா
ரோர்த்து ஞானிதன் யாக்கை நடிப்பினை
யோர்ந்து மாதவ ருண்மையென் றுன்னுறூர்.

(இ - ள்.) கூத்தன் - ஆன்மா — நாடகக்கோலம் - நாடகக்கோலங்கொண்டு — நடிப்பினை - நடிக்குநடிப்பை — பார்த்து - தரிசித்து — பாருளார் - பூமியிலுள்ளார் — வாய்மையென்றெண்ணிலர் - உண்மையென்றெண்ணூர் — மாதவர் - மிக்கதவத்தினர் — ஓர்த்தும் - யாவராலுந்துதிக்கப்பெற்ற—ஞானிதன் - ஞானவானுடைய—யாக்கைநடிப்பினை - தேகநடிப்பை—ஓர்த்து - அனுபவத்தாலுணர்ந்து—உண்மையென்று - சத்தியமென்று — உன்னுறூர் - நினையார். எ - று. உலகுளார்; எழுவகைத்தோற்றவுடல்களை ஆன்மாவினது, நாடகக் கோலமெனவும், அவற்றின்விவகரிப்பை நடிப்பெனவும், அறியார் அதுபோல; மாதவரும் ஞானியினது யாக்கையைக் கோலமெனவும் விவகரிப்பை நடிப்பெனவும் உண்மையென்றுன்னூரெனக்கொள்க. கொள்ளவே, உலகுளாருக்குப்பகிர்முக நாட்டமும், மாதவர்க்கு அகர்முகநாட்டமுமெனப்பெற்றும். இங்ஙனம் பெறக்கூடியது முத்தாயியம்மையை நோக்கி, உனக்கந்தர்முக நாட்டமின்மையால் புலம்புகின்றனை யெனக்குறிக்கவாதலாலிது திருஷ்டா அருத்தாபத்தி. இதனால் விசாரியாமல் புலம்பலை விடுதி யென்பது கருத்து. [illegible]

அறிந்தி டாம லசகனன் றன்மையை
யிறந்து ளானென் றிரங்கினை யனைநீ
மறந்தி டாயிம் மதியென் றனல்சொல
நிறைந்த ஞானமுத் தாயி நிகழ்த்துவாள்.

(இ - ள்.) அறிந்திடாமல் - தெரியாமல் — அசகனன்றன்மையை - அசகனனது நிலைமையை— இறந்துளானென்று - இறந்தானென்று—அன்னை - தாயே — நீ இரங்கினை - நீயழுகின்றாய் — இம்மதி - இந்த மூடபுத்தியை—மறந்திடாயென்று - மறந்துவிடென்று—அனல்சொல - அலமன்சொல்ல—நிறைந்தஞான - பூரணஞானத்தையுடைய—முத்தாயி - முத்தாயி யம்மையானவள் — நிகழ்த்துவாள் - சொல்லுவாள். எ - று. அசகனன்றன்மையை அனல் சொல இவையிரண்டும் இடைக்குறை. அசகனன்றன்மையையறிந்திடாமல் அன்னைநீ இறந்துளானென்றிரங்கினை எனமுடிக்க. (கஎ)

அரவின் காலர வன்றி யறிபவர்
தரையி னில்லை யசகணன் றன்னைநீ
தெரியி னன்றிச் சிறிய னறிவலோ
பெரும யான்செய் பிழைபொறுப் பாயென்று.

(இ - ள்.) அரவின்கால் - பாம்பின்காலை—அரவன்றி - பாம்பன்றி—அறிபவர் - அறிகின்றவர்கள்—தரையினில்லை - பூமியிலில்லை — அசகண ன்றன்னை - அசகண னென்பவனை—நீதெரியினன்றி - நீயறிவா யல்லாமல்—சிறயன் - அற்பபுத்தியையுடைய னாகியயான்—அறிவலோ - தெரிந்துகொள்வேனோ—பெரும - பெருமையுடையவனே — யான்செய் - நான்செய்த—பிழைபொறுப்பாயென்று - பிழையைப் பொறுத்துக்கொள்வாயென்று. எ - று. பாம்பின்காலைப் பாம்பறியுமன்றி யேனையோரறியார்போல, அசகண்ணனது நிலையை நீயறிவையன்றி யானறியத்தக்கவனோ என இரந்து கூறினனென்க. அசகண்ணன் என்பது, அசகணனென்றாயது இடைக்குறை. பெரும என்பது விளி. (௧அ)

வேறு.

பங்க விருந்த பதிக்கருள் செய்து
கங்கை யடைந்த கணக்கென வென்பா
லிங்குற வந்தனை யெங்குடி யுள்ளார்
தங்க டவந்தரு தன்மையி னென்று.

(இ - ள்.) கங்கை - கங்கையானவள் — அருள்செய்து - பகீரதனுல் அவன்வமிசத்தாருக் கருள்புரிந்து — பங்கன் - அர்த்தபாகத்தையுடைய பரமசிவன் — இருந்த - எழுந்தருளியிருந்த — பதிக்கு - கைலாசத்துக்கு—அடைந்த கணக்கென - சேர்ந்தவிதத்தைப்போல — என்பால் - என்னிடத்தில் — எங்குடியுள்ளார்தங்கள் - எமது வமிசத்திற் பிறந்தவர்களுடைய—தவம் - தவமானது—தரும் - தரப்பட்ட — தன்மையின் - காரணத்தால் — இங்குறவந்தனை - இவ்விடத்தில்வந்தாய் — என்று - என்றுசொல்லி. எ - று. கங்கை பகீரதனது அரியபிரயத்தினத்தால் அவனதுவமிசத்தாருக் கருள்செய்து கைலையை யடைந்தாற்போல, அல்லமதேவரே எமது வமிசத்தார்செய்த அரியதவத்தால் என்பால்வந்தனை எனக்கூட்டிப் பொருள் கொள்க. யாதனுருபிற்கூறிற்றாயினு மென்னும் விதியால் பதியையடைந்த கணக்கென வெனினு மமையும். இங்கேதங்களென்பது சாரியை. (௧௯)

வந்தனை செய்து வழுத்திமு னின்று
பந்த மகன்ற பதம்பெறும் வண்ண
மெந்தை யியம்பி யெனக்கருள் செய்யென்
றந்த மடந்தை யறைந்தன ளன்றே.

(இ - ள்.) வந்தனைசெய்து - பூசனைமுதலிய வழிபாடுகள்செய்து—வழுத்தி - துதித்து — முனின்று - சன்னிதானத்தில் நின்று — பந்தமகன்ற - பந்தநாசமான — பதம்பெறும்வண்ணம் - நிலையடைவான் வேண்டி—எந்தை - எமதுதந்தையே—எனக்கு - அடியேனுக்கு—இயம்பி - உண்மைநிலையைச்சொல்லி—அருள்செய்யென்று - இரட்சியென்று—அந்த மடந்தை - அந்தமுத்தாயியம்மை—அறைந்தனள் - சொல்லினள். எ - று. அன்று - ஏ - அசைகள். அந்தமடந்தை செய்து வழுத்தி நின்று அறைந்தனளெனக் கூட்டிமுடிக்க. முனின்று இடைக்குறை. (௨௦)

தேசிக னல்லம தேவன் மகிழ்ந்து
பாச மகன்று பரம்பொருள் காணு
நேச மடைந்தனை நின்னை நிகர்ப்பார்
காசினி யின்மிசை கண்டில மென்று.

(இ - ள்.) தேசிகன் - குருமூகூர்த்தமாகிய — அல்லமதேவன்மகிழ்ந்து - அல்லமதேவர் களிகூர்ந்து — பாசமகன்று - பாசங்களினின்றுநீங்கி — பரம்பொருள்காணும் - மேலாயபொருளைக் காணவேண்டுமென்னும்—நேசமடைந்தனை - விருப்பத்தையடைந்தாய் — நின்னைநிகர்ப்பார் - உன்னைப்பொப்பாரை—காசினியின்மிசை - பூமியின்மேல் — கண்டிலமென்று - பார்த்திலமென்று. எ - று. தேசிகன் மகிழ்ந்து கண்டிலம் எனக் கூட்டிமுடிக்க. பாசமகன்றெனல் நீங்கற் பொருள். (௨௧)

பிறப்பொரு கோடி பிறந்து பிறந்து
புறக்கரு மங்கள் புரிந்திடி னும்பொய்
மறப்புறு மாணவ வல்லிரு ளின்றிச்
சிறப்புறு முத்தி செறிந்திடு வாரோ.

(இ - ள்.) பிறப்பொருகோடி - கோடிபிறப்பு—பிறந்துபிறந்து - செனித்து செனித்து—புறம் - பகிர்முகமாக — கருமங்கள் - சிவபுண்ணியமுதலிய சற்கருமங்களை—புரிந்திடினும் - செய்தாலும்—பொய் - பொய்யாகிய

ய மாயைகாரணமாக — மறப்புறும் - தன்னுண்மை வடிவைமறக்கத்தக்க — ஆணவ வல்லிருளின்றி - ஆணவமென்னுங்கொடியவிருளின்றி — சிறப்புறும்-சிறப்பாகவடையத்தக்க — முத்தி-முத்தியை — செறிந்திடுவாரோ - அடைவார்களோ. எ - று. ஆணவநசிப்பின்றிமுத்தியை புறக்கருமங்கள்செய்து அடைதற்பாலரோவெனமுடிக்க. புரிந்திடினுமென்னு உம்மை, இழிவுசிறப்பு. மாயைக்குவடிவம்பொய்யாதலால் பொய்யமாயையென்றது காரணவாகுபெயர். மறப்புறுவென்றதனால் தன்னுண்மை வடிவைவருவித்தாம். ஆணவவல்லிருளெனல்,உருவகம். (௬௨)

மரிப்பொ டுதிப்பு மறிக்குது மென்று
கருத்தை வெளிக்கரு மத்தின் விடுத்து
விரிக்குத னெய்யை விடுத்தெரி கின்ற
நெருப்பை யவிப்ப நினைப்பதை யொக்கும்.

(இ - ள்.) மரிப்பொடு - இறப்போடு — உதிப்பு - பிறப்பை — மறிக்குதுமென்று - ஒழிப்போமென்று — கருத்தை - எண்ணத்தை — வெளிக்கருமத்தின்விடுத்து - சிவபுண்ணியகருமங்களில்செலுத்தி — விரிக்குதல் - விரியச்செய்தல் — எரிகின்றநெருப்பை - எரியப்பட்டநெருப்பை — நெய்யைவிடுத்து - நெய்யைவிட்டு — அவிப்ப - தணிக்க — நினைப்பதையொக்கும் - நினைப்பதுபோலும். எ - று. பிறப்பிறப்பொழிக்குதுமென சிவபுண்ணியாதி கருமமியற்ற கருத்தைவிரித்தல், நெருப்பையவிக்க நெய்சொரிவதுபோலுமென்க. ஞானமின்றிமுத்தியெய்தாதென்பதுகருத்து. (௬௩)

மட்டற வோடு மனத்தை நிறுத்திக்
கட்டுதல் வீடு விடுத்திடல் கட்டன்
றொட்டிய பண்பி னுரைத்தல மப்பேர்
சிட்ட னவட்கருள் செய்தன னன்றே.

(இ - ள்.) மட்டற - தடையின்றி — ஓடுமனத்தை-ஓடுகின்றமனதை — நிறுத்தி - சலியாதுநிறுத்தி — கட்டுதல் - தன்வயப்படுத்தல் — வீடு - முத்தியாம் — விடுத்திடல் - அதனிஷ்டப்படிவிட்டுவிடுதல் — கட்டன்று - தன்வயப்படுத்தலன்று — ஒட்டிய - பொருந்திய — பண்பினுரைத்து - குணங்களாற்கூறி — அலமப்பெயர் - அல்லமனென்னும்பெயரையுடைய — சிட்டன் - பிரியமுடையோன் — அவட்கு - அந்தமுத்தாயியம்மைக்கு — அருள்செய்தனன் - அநுக்கிரகித்தான். எ - று. அன்று - ஏ - அசைகள். மனதெனல்,பகிர்முகமாகப் பிரிதிப்லித்தன்றெப்திஸ்புரிப்பை. கட்டுதல்,அந்தர்

முகப்படுத்தல். விடுத்திடல், பகிர்முகப்படுத்தல். கட்டுதல் வீடெனவே, விடுத்திடல்கட்டன்றென்பது பிறப்பென்றாயிற்று. ஒட்டியபண்பென்றதனால் வஸ்துவுக்கியைந்தகுணமெனப்பெற்றாம். இங்கேசிட்டனென்றது தன்னையுள்ளவாறுணர்வார்க்குரியனென்லை. (௬௪)

தத்துவ முற்று மயக்குவ தள்ளி
மெய்த்த தனைப்பெற வேறு கொடுத்தான்
பொய்த்துறு குப்பை கிளைத்தொளி பொங்கு
முத்தை யளித்தென முத்தை தனக்கு.

(இ - ள்.) பொய்த்துறுகுப்பை - வறியகுப்பையை — கிளைத்து - கோழியானதுசெய்த்து — ஒளிபொங்குமுத்தை - பிரகாசமிக்கமுத்தை — அளித்தென - கொடுத்தாற்போல — முத்தை — தனக்கு - முத்தாயியம்மைக்கு — மயக்குவ — விபரீதத்தன்மையவாகிய — தத்துவமுற்றும் - தத்துவக்கூட்டமனைத்தையும் — தள்ளி - ஆராய்ச்சியால் தனித்தனியாகவல்லவல்லவெனத்தள்ளி — வேறு - அவற்றிற்குவேறிருத்தமாக — மெய்த்த - உண்மையாயுள்ள — தனைப்பெற - தனதெதார்த்தநிலையைப்பெற — கொடுத்தான் — அல்லமனனுக்கிரகித்தனன். எ - று. கோழி குப்பைகிளைக்க முத்துவெளிப்பட்டாற்போல முத்தாயி யம்மைமுன் தத்துவக்குப்பையாயத் தானென்பதினிலை வெளிப்பட்டதெனப் பொருள்கொள்க. உபமானத்தில் கோழிவருவித்தாற்போல உபமேயத்தில் அல்லமனெனலைவருவித்தாம். முத்தெனல் குப்பையுளொன்றாக நின்றாற்போல தானெனனும் தத்துவக்குப்பையுள் ஒன்றாகநின்றதெனக் குறிப்பித்தார். கோழிசீய்க்காவிடத்தி லெங்ஙனமுத்து வெளிப்படாதோ அங்ஙனந் தத்துவக்குப்பையை யாயாவிடத்துத் தானெனல் வெளியாகாதென்பது கருத்து. எனவே,தானெனலைத்தவிர ஞானஞ்ஞானமின்றேனும் அவற்றை முற்றுமாயாவிடத்துத்தானெனலெங்ஙனம்விளங்கு மெனப்பெற்றாம். பெறவே தானெனற்கேசலட்சண விலட்சணமெனல் கண்டாம். (௬௫)

வீடு விரும்பி வெறுத்திலன் மெய்யைத்
தாடரு மொண்குர வன்றனை யெங்கு
நாடி யுழன்றில னுய வெனைத்
தேடி யடைந்தருள் செய்தனை யென்று.

(இ - ள்.) வீடுவிரும்பி - ஐக்யமுத்திவேண்டி — மெய்யைவெறுத்திலன் - உடலைவெறுத்தேனல்லன் — தாடரும் - திருவடிதீட்சைதரும் — ஒ

ன்குரவன்றனை - ஞானசிரியனை — எங்குநாடியுழன்றிலன் - எவ்விடத்தும் தேடியலைந்தேனில்லன் — நான் - இங்ஙனமாயநான் — உய - இருதார்த்தனுக — என்னைத்தேடியடைந்து - என்னையொருபொருளாகத்தேடிவந்து — அருள்செய்தனையென்று - அநுக்கிரகித்தாயென்றுசொல்லி. எ-று. உய்யவென்றது உயவென்றாயது இடைக்குறை. தன்னையபாத்திரியெனக்குறிக்க இங்ஙனங்கூறினளென்க. (௨௬)

அல்லம னென்னு மருட்குர வன்றாள்
புல்லி வணங்குபு பொற்கொடி யன்னாள்
செல்ல லகன்று சிதம்பர மெய்தி
யெல்லையி லின்பொ டிருந்தன ளம்மா.

(இ - ள்.) அல்லமனென்னும் - அல்லமதேவனென்கிற — அருள் - திருவைதங்கிய — குரவன் - ஞானசிரியனது — தாள் - திருவடிகளை — புல்லி - தழுவி — வணங்குபு - வணங்கி — பொற்கொடியன்னாள் - பொற்கொடி போன்றவள் — செல்லலகன்று - அல்லவற்றைநிலையெனச்சேறலகன்று — சிதம்பரமெய்தி - சிதப்பரமாகத்தானமைந்து — எல்லையில் - எல்லையற்ற — இன்பொடிருந்தனள் - பேரின்பநிலையாயினள். எ - று. அம்மா வியப்புமொழி. செல்லலகறலாவது; ஆங்காங்கு மெய்ந்நிலைபோற்காணும் சச்சிதானந்தநிலைகளைக்கண்டுகெண்டகறலை. (௨௭)

முத்தாயியம்மை கதி முற்றும்.

ஆ கதி - ௧௨ - இ - விருத்தம் - ௯௭.

பதின்மூன்றாவது

சித்தராமையர்கதி.

வேறு.

காமரு சித்த ராம விடத்தில்,
போமனல் சொற்ற சீர்மை யுரைப்பாம்.

(இ - ள்.) காமரு - அழகிய — சித்தராமனிடத்தில் - சித்தராமனென்பவனிடத்தில் — போமனல் - போகிய அல்லமன் — சொற்ற - சொல்லிய — சீர்மை - மேலாயநிலைமை — உரைப்பாம் - சொல்லுவாம். எ - று. காமருவென்பது பூங்காவனமுதலியவற்றைகளைப்பொருந்தியவெனினுமமையும். அன்னலெனற்பாலது அனலென்றாயது இடைக்குறை. இங்கேசீர்மையெனல் எவற்றிற்குஞ்சிறந்தநிலையை. (௧)

செல்லல் களைந்து, நல்லறி வின்பஞ்,
சொல்லுவ னென்று, மல்லம னென்பான்.

(இ - ள்.) செல்லல் - அல்லாதநெறிகளிற்சேறலை — களைந்து - நீக்கி — நல்லறிவு - மெய்யுணர்வையும் — இன்பம் - பேரின்பத்தையும் — சொல்லுவனென்றும் - உணர்த்தத்தக்கவனென்றும் — அல்லமனென்பான் - அல்லமதேவனென்றுசொல்லப்படுவோன். எ - று. நல்லறிவின்பமென்றதனால் செல்லலென்றது அல்லாதநெறிகளிற் சேறலெனவுரைகொண்டாம். நல்லென்றவடைமொழியால் பேறறிவுபேரின்பமென்றுமாம்.

கரும யோகமுங், கிரியை யாவையுங்,
மருவி ராமன்வாழ் புரியை மேவினன்.

(இ - ள்.) கருமயோகமும் - கருமயோகத்தையும் — கிரியையாவையும் - கிரியாமார்க்கங்களனைத்தையும் — மருவி - பொருந்தி — ராமன் - சித்தராமரென்பேர் — வாழ்புரியை - வாழ்கின்றபட்டணத்தை — மேவினன் - அடைந்தான். எ - று. எனவே, ஞானயோகியன்றெனப்பெறாம். (௩)

வாவி யாலயங், காவி ராமனு,
ரேவ லாளர்செய், தோவி லாமையை.

(இ - ள்.) வாவி - தடாகங்களையும்—ஆலயம் - தேவாலயங்களையும்—கா - பூங்காவனங்களையும்—இராமனுர் - சித்தராமருடைய—ஏவலாளர் - ஏவலாளிகள்—செய்தோவிலாமையை - செய்யும்பணிகள் ஒழிவில்லாமையை. எ - று. வாவிதோண்டலும் ஆலயங்கட்டுதலும் காவனர்த்தலும் என்னுஞ்சிறப்புவினைகளைக்குறிக்கப் பொதுப்படச்செய்தென்றார். ஒவிலாமை எதிர்மறைவினையாலணையும்பெயர். ஒதல், ஒழிதல். (௪)

பார்த்தரு ளண்ணல், மூத்த விராமன்,
வார்த்தை யறிந்த, கூத்தின னென்றே.

(இ - ள்.) பார்த்தருள் - கண்ட—அண்ணல் - அல்லமன்—மூத்த - வியப்பில்மூத்த — இராமன் - சித்தராமனென்னும்பெயருடையவன் — அவ்வார்த்தையறிந்த - விபரீதமொழிகளுணர்ந்த — கூத்தினன் - அவ்வாறுகாட்டுடிப்புடையவன்—என்று - இவனுருமென்றுசொல்லி. எ - று. இவை யிவனைக்காணவடலாலெழுங் குறிப்பாதலால் திருட்டாவருத்தாபத்தி. (௫)

பேரறி வின்னுன், சார விருந்த,
வூரிறு மில்லென், ருரா விகழ்ந்தே.

(இ - ள்.) பேரறிவு - பேரறிவெனல்—இன்னுன் சாரவிருந்த - இத்தகைபோன்சார்ந்திடம்பெறநின்ற —ஊரிறுமில்லென்று - ஊரிலுமில்லையென்று — ஆரவிகழ்ந்து - மிகவுமிகழ்ந்து. எ - று. பேரறிவெனலொன்றுண்டெனலைக்கேட்டுமறியானென்பார் இங்ஙனங்கூறினார். கூறவே, இழாயநெறியையறிவனென்பதாயிற்று. ஊரிலுமென்பதிலும்மை இழிவுசிறப்பு. சமீபித்ததாதலி னின்னுனென்றும். (௬)

இல்ல மகன்றிவ், வல்ல லடைந்தா,
னல்ல பசும்பொன், வல்லி யுவந்தான்.

(இ - ள்.) நல்ல - யாவர்க்குமினிய—பசும்பொன் - பசியபொன்னிறமுள்ள—வல்லி - வல்லிக்கொடிபோன்றவிலக்குமி —உவந்தான் - விரும்பி—இல்லமகன்று - துறவறம்பெற்று — இவ்வல்லல் - இந்தத்தொலையா வல்லலை—அடைந்தான் - அடைந்தனன். எ - று. வினைமுற்றேவினை

எச்சமாகவுமென்றவிதியால் உவந்தென்முக்குக. இவன் துறந்தமிக்க செல்வம் வேண்டியன்றி முத்தியடைதற்கன்றெனப்பெற்றாம். இவ்வல்லலாவது; ஆலயம்புதுக்கல், பூங்காவனமாக்கல், தடாகங்கள் தோண்டல், முதலியவற்றாலாயவல்லலை. எனவே, இல்லந்துறந்தும் பயனின்றென்பதாயிற்று. வல்லி-உவமையாகுபெயர். (௭)

என்று நினைந்து, நன்றுற வாவி,
யொன்றகழ் வாரபாற், சென்றிது சொல்வான்.

(இ - ள்.) என்றுநினைந்து - இவ்வாறுகநினைந்து — நன்றுற - நன்றாக—வாவியொன்று - ஓர்தடாகத்தை—அகழ்வார்பாற்சென்று - தோண்டுபவர்களிடத்திற்போய் —இதுசொல்வான் - இதைச்சொல்லலுற்றான். எ - று. அகழ்வார் அவனதுபணிசெய்வோர். (௮)

வேறு.

ஒட்ட ராம னுளத்தினி
லிட்டம் யாதுகொ லித்தொழி
முட்டி லாமன் முயன்றனன்
கொட்டி வீழு மிகுத்தல்போல்.

(இ - ள்.) ஒட்டராமன் - ஒட்டராமனென்பவன் —உளத்தினில் - தன்மனதில்—இட்டம்யாதுகொல் - இஷ்டம்யாதோ —இத்தொழில் - இங்ஙனமாயதொண்டுகளை — முட்டிலாமல் - யாதோரிடையூறுமின்றி — கொட்டி - நெல்லைக்குத்தி—வீழ் - அதனால்விழுகின்ற—உமிகுத்தல்போல் - உமியைக்குத்துதல்போல் — முயன்றனன் - செய்யாநின்றனன். எ - று. ஒட்டராமனிங்ஙனமாயதொண்டுபுரிதல் நெல்லைக்குத்தி யுமியையுங்குத்துவார்போல்வதென்க. கொல் ஐயம். கொட்டியென்பதனால் நெல்வருவிக்கப்பட்டது. கொட்டிவீழுமிகுத்தல்போல், ஒட்டராமன் இத்தொழில்முட்டிலாமல் முயன்றனனெனக்கூட்டிப்பொருள்கொள்க. அவன் இங்ஙனமாயபயனற்றதொண்டுபுரிதற்கு அவனதுள்ளக்கருத்து யாதோவென்றுரொன்க. (௧)

விழற்கி றைப்ப விடுத்தல்போற்
றொழிற்கு ளெய்த்துழ றொழிலுமை

யிழைக்க விட்டதெ னென்றிட
லொழிக்க லுற்றவ னோதினான்.

(இ - ள்.) விழற்கு - விழலுக்கு—இறைப்ப - தண்ணீர்பாய்ச்ச—விடுத் தல்போல் - கால்வாய்வழியாகவிடுத்தல்போல—தொழிற்குள் - எல்லாத் தொழிலுக்குள்ளும்—எய்த்துறு - சோர்வுறற்கியைந்த—தொழிலிழைக்க - தொழில்செய்ய—நுமைவிட்டது - உங்களையேவியது—என்னென்று - என்ன காரணமென்று—இடர் - துன்பங்களனைத்தையும்—ஒழிக்கலுற்றவன் - ஒழிக்கப்புறப்பட்டவனாகியவல்லமன்—ஓதினான் - சொன்னான். எ - று. எல்லாத்தொழில்களுள்ளும் மிக்ககஷ்டத்தைத்தருமித்தொழிலை விழலுக் குநீரிறைப்பதுபோல இவனேற்றுக் கொண்டகாரணம்யாதென்றானென்க. இடரொழித்தல், சங்கற்பநாசஞ்செய்தலே. என்னென்றதும், நுமை யென்பதும், இடைக்குறை. ஒழிக்கலுற்றவன் - வினையாலணையும்பெயர்.

சார்ந்த னோதிய தாழ்மொழி
காய்ந்த வேலிரு காதினும்
போந்த போன்று புகுந்தன
மாந்த ராகுல மன்னினார்.

(இ - ள்.) சார்ந்தன் - உபசாந்தவடிவனாகிய வல்லமன்—ஓதிய - சொல்லிய—தாழ்மொழி - இரக்கமானவசனங்கள் — காய்ந்த - அனலிற்காய்ந்த — வேல் - வேலாயுதமானது — இருகாதினும் - இரண்டுகாதுகளிலும் — போந்தபோன்று - நுழைந்தாற்போல — புகுந்தன - நுழைந்தன — (இதனால்) மாந்தர் - அங்குள்ளமனிதர்கள் — ஆகுலமன்னினார் - வருத்தமடைந்தனர். எ - று. புகுந்தனவென்றதனால் மொழியைப் பன்மையாக்கினும். இங்கே மாந்தரென்பது - அவனதேவலாளரை. (கக)

அறம ழித்தனை யன்றியு
நெறியு றக்குரு நிந்தனை
பெறவு ரைத்தனை பித்தவென்
றறவு ழுத்தன ரொட்டலர்.

(இ - ள்.) அறமழித்தனை - தருமநெறியை நாசஞ்செய்தாய் — அன்றியும் - இஃதன்றியும்—நெறியுற - முறைவழுவ—குருநிந்தனைபெற - குருதூஷணையுண்டாக—உரைத்தனை - மொழிந்தாய்—பித்தவென்று - பித்துகொண்டவனேயென்று—ஒட்டலர் - யாதோர்தொடர்புமற்ற வவனதே

வலாளிகள்—உறவுழுத்தனர் - மிகச்சீறினர். எ - று. பித்தவென்பது விளி. ஒட்டு, நேசம். அலர், அல்லாதவர். (கஉ)

ஒட்ட னென்றனை யும்பருஞ்
சிட்ட னென்றுகொள் சித்தனைத்
துட்ட வென்று சுளித்தனர்
வெட்டி ருந்தட மேவினோர்.

(இ - ள்.) உம்பரும் - தேவர்களும்—சிட்டனென்றுகொள் - நேசனாகக்கொள்ளத்தக்க—சித்தனை - எங்கள்சித்தராமனை—ஒட்டனென்றனை - ஒட்டாரமனென்றாய்—துட்டவென்று - துட்டனேயென்று—வெட்டு - வெட்டுகின்ற—இரும் - பெரிதாகிய—[illegible] — மேவினோர் - இருந்தவர்கள் — சுளித்தனர் - கோபஞ் சுளித்தார்கள். எ - று. எனையோருமென ஒழிந்துநிற்பதால் உம்பரும் என்பதிலும்மை இறந்தது தழீஇய வெச்சம். துட்டவென்பது, விளி. (கங)

வேறு.

மெய்த்தட மகழ்பவர் வினையை யன்றியே
சித்தர்தஞ் செயலொரு சிறிது மின்மையால்
மத்தர்நுங் குரவனை மண்ணி லும்மினு
முத்தம வொட்டனென் றுரைத்து மென்றனன்.

(இ - ள்) மெய் - நேசத்தினால்—தடம் - தடாகத்தை — அகழ்பவர் - தோண்டுபவர்களுடைய—வினையையன்றி - தொழிலையல்லாமல்—சித்தர்தஞ்செயல் - சித்தபுருஷர்களுடைய செயல்களில் — ஒருசிறிதுமின்மையால் - ஓரற்பத்தொழிலு மில்லாமையால் — மத்தர் - உன்மத்தராகிய—நுங்குரவனை - உமதாசிரியனை—மண்ணிலும் - பூமியிலும்—இனும் - இன்னமும்—உத்தமவொட்டனென்று - உத்தமவொட்டனெனப் பெயர்கொடுத்து—உரைத்தும் - அழைக்கின்றோம் —என்றனன் - என்றல்வமன் சொல்லினன். எ - று. மண்ணிலும் என்பதி லும்மை இழிவு சிறப்பு. இனுமென்பது இடைக்குறை. (கச)

நிகழ்ந்துல கிடைநிலை நிற்கு நல்லற
முகந்துசெய் பவன்றனை யும்ப னெனப்

புகழ்ந்தவர் புண்ணியர் பொறுமை யானிழித்
திகழ்ந்தவர் நரகரொன் றிசைப்பர் நல்லவர்.

(இ-ள்.) நிகழ்ந்து - சான்றோரால்நடந்து — உலகிடை - உலகத்தில் — நிலைநிற்கும் - நிலைநிற்கின்ற — நல்லறம் - நல்லதருமங்களை — உகந்து - விரும்பி — செய்பவன்றனை - செய்கிறவனை — உம்பனேயென - தேவனேயென்று — புகழ்ந்தவர் - துதித்தவர்கள் — புண்ணியர் - புண்ணியவான்களென்றும் — பொறுமையான் - பொறுமையினால் — இழித்து - இழிவுபடுத்தி — இகழ்ந்தவர் - தூஷித்தவர்கள் — நரகரொன்று - பாவிகளென்றும் — இசைப்பர்நல்லவர் - நல்லோர்கள்சொல்வார்கள். எ-று. என்றென்பதைப் புண்ணியரோடுங்கூட்டுக. (கரு)

மறவினை யுடையனை மாற்றித் தூயநல்
லறவினை யுடையனை யறிந்திட் டன்னரோ
டுறவினை யடைந்திலை யொப்பக் கண்டறத்
துறவினை யுளையென வொட்டர் சொல்லினார்.

(இ-ள்.) மறவினையுடையனை - தீச்செயலினனை — மாற்றி - நீக்கி — தூய - பரிசுத்தமாகிய — நல் - நல்ல — அறவினையுடையனை - சன்மார்க்கநெறியினனை — அறிந்திட்டு - தெரிந்து — அன்னரோடு - அத்தகையினரோடு — உறவினையடைந்திலை - உறவுகொண்டாயில்லை — ஒப்பக்கண்டு - சமமாகக்கண்டு — அறத்துறவினை - சன்மார்க்கத்தைத்துறக்கும்வினையை — உளை - உடைத்தானவனாயிருக்கின்றனை — என - என்று — ஒட்டர்சொல்லினார் - ஒட்டர்கள்சொன்னார்கள். எ-று. இருவினையில் தக்கதினையதென்றறியாமல் இரண்டுஞ்சமமென்றுபுண்ணியகன்மத்தை ஒழித்தாயென்றனரென்க. (கசா)

ஓங்கிரு வினைகளு மொப்பக் கண்டவர்
தாங்களென் றனையொரு தமரிற் பேணுவ
ராங்கவை யிரண்டையு மடைந்து போயுழ
லீங்களென் றனையுணர் நெறியிலீ ரென்றான்.

(இ-ள்.) ஓங்கிருவினைகளும் - மிக்கவிருவினைகளையும் — ஒப்பக்கண்டவர்தாங்கள் - சமமாகக்கண்டவர்கள் — என்றனை - என்னை — ஒருதமரில் - உறவினர்களிலொருவனாக — பேணுவர் - ஏற்பார்கள் — ஆங்கவையிரண்டையும் - அங்ஙனமாயவிருவினைகளையும் — அடைந்து - சேர்ந்து — போய் -

பிறவிகடோறுஞ்சென்று — உழல் - மாறிமாறியுழல்கின்ற — நீங்கள் - பாமாராகியநீங்கள் — என்றனையுணர் - என்னையினையனென்றுணர்த்தக்க — நெறியிலீர் - வழியில்லாதவர்கள் — என்றான் - என்றல்லமன்கூறினான். எ-று. என்னை அறிபவர் இருவினையொப்பினரேயன்றி நீங்களல்லரெனத்தெரிவித்தனனென்க. ஆங்கவையிரண்டையுமடைந்துபோயுழனீங்களெனவே, அங்ஙனமுழறல் எங்களுக்கின்றென்பதைக்குறிப்பிக்கப்பெற்றாம். (கஎ)

எனக்கற வினையுமி லென்று கூறினா
யுனக்கொரு கதியிலெ னுண்மை கூறியே
சினத்தனர் நிலனகழ் சிறியர் யாவருந்
தனக்கிணை தானெனுந் தம்பி ரானையே.

(இ-ள்.) நிலனகழ் - நிலத்தைவெட்டுகின்ற — சிறியர்யாவரும் - அறிவீனர்களெல்லாம் — தனக்கிணைதானெனும் - தனக்குத்தானேயொப்பென்ற — தம்பிரானை - அல்லமனைநோக்கி — அறவினையும் - புண்ணியகர்மமும் — எனக்கிலென்றுகூறினாய் - எனக்குடன்பாடன்றெனச்சொல்லினை — (ஆதலின்) உனக்கொருகதியிலென்று - உனக்கொருகதியுமில்லையென்று — உண்மைகூறி - உண்மையைவிளம்பி — சினத்தனர் - கோபித்தனர். எ-று. உனக்கொருகதியும் என்பதிலும்மை எஞ்சியது. நிலனகழ்சிறியரெனவே, ஒட்டரெனப்பெற்றாம். தனக்கிணைதானென்றது அறிவேவடிவாயுளதை. (கஅ)

முற்றிய கல்வியின் மூடர்நீ யிருங்
கற்றறி மூடனுங் கரைமின் னன்னவ
னுற்றன னெனிலவ னுணர்வுஞ் சொல்லினா
லிற்றென வுணர்வமென் றெந்தை கூறினான்.

(இ-ள்.) முற்றியகல்வி - கல்விஞானத்தேர்ச்சி — இல் - இல்லாத — நீவிர் - நீங்கள் — மூடர் - மூடர்களே — (ஆதலின்) நுங்கற்றறிமூடனுக்கு - கற்றறிமூடனாகியவுங்களைசமானுக்கு — கரைமின் - எனதுவரவைத்தெரிவியுங்கள் — அன்னவன் - அத்தகையனானமூடசிரேட்டன் — உற்றனனெனில் - இங்குவருவனாயின் — அவனுணர்வும் - அவன்விவேகத்தையும் — இற்றென - இப்படிப்பட்டதென்று — சொல்லினால் - அவன்வாய்மொழியால் — உணர்வமென்று - அறிவோமென்று — எந்தைகூறினான் - அல்லமன்சொல்லினன். எ-று. எந்தை, எமதுதந்தை. முற்றியகல்

லிபிலென்பே, அற்பகல்வியெனப்பெறும். செயற்கரியசெய்வார்பெரியரொன்பதிவன்கணில்லாமையின்கற்றறிமூடனென்றார். உங்கருணர்வையுணர்த்துமன்றியெனப் பொருட்ரகிற்றலின் அவனுணர்வும் என்பதிலும்மை இறந்ததுதழீஇய வெச்சம். (௧௯)

சேடனும் புகழ்வுறுஞ் சித்த ராமனை
மூடனென் றுரைத்தவம் மொழிக யங்கொடாத்
தோடருங் கொட்டினோர் சீற்றத் துப்பெறு
நீடுவெந் தழல்சொரி நெய்ங் கர்த்தனால்.

(இ - ள்.) சேடனும் - ஆதிசேடனும்—புகழ்வுறும் - துதிக்கத்தக்க—சித்தராமனை - சித்தராமனென்பவனை—மூடனென்றுரைத்த - மூடனென்றுசொன்ன—அம்மொழி - அந்தவார்த்தை—கயம் - தடாகத்தை—தொடா - தோண்டி—தோடரும் - தோளில்வைக்கும்—கொட்டினோர் - மண்வெட்டியையுடையோரது — சீற்றந்துப்பெறும் - கோபவலியென்கின்ற—நீடு - நீண்ட—வெந்தழல் - கொடியவக்கினியில்—சொரி - விடுகின்ற—நெய்ங்கர்த்தது - நெய்க்கொப்பாயது. எ - று. ஆல் - அசை. சேடனுமென்பதிலும்மை உயர்வுசிறப்பு. மொழிநெய்ங்கர்த்ததெனக்கூட்டி முடிக்க. துப்பு பகையெனினுமமையும். துப்பெனுந்தழல் உருவகம். (௨௰)

இறுக்கின ரழுக்குடை யெயிறு மென்றனர்
உறுக்கின ரதிர்த்தன ருயிர்ந் து மீசையை
முறுக்கினர் நகைத்தனர் முருட்டுக் கைகளாற்
பெறுக்கினர் சிலைகளைப் பெருஞ்சி னத்தராய்.

(இ - ள்.) இறுக்கினர் - கடிந்துபேசினர் —அழுக்குடை - அழுக்குநிறைந்த —எயிறுமென்றனர் - பல்லைக்கடித்தனர் —உறுக்கினர் - சினக்குறிப்பைக்காட்டினர்—அதிர்த்தனர் - கூச்சலிட்டனர் —உயிர்த்து - பெருமூச்சுக்கொண்டு —மீசையைமுறுக்கினர் - மீசையைமுறுக்கினார்கள்—நகைத்தனர் - கோபமிகுதியால்சிரித்தனர் —முருட்டுக்கைகளால் - முருட்டுக்கைகளினாலே —பெருஞ்சினத்தராய் - மிக்ககோபமுடையவராய் —பெறுக்கினர்சிலைகளை - கல்லுகளைப்பெறுக்கினார்கள். எ - று. இங்கே நகைத்தல் உவப்பாலன்றென்க. (௨௧)

நங்குர வனையி கழ் நயமி லான்றனை
யிங்கொரு சிலையினா லெறிந்து கொல்லுதல்
பொங்குறு மறமொடு புகழு மாகுமென்
றெங்குர வனையவ ரெதிர்ந்து சூழ்ந்தனர்.

(இ - ள்.) நங்குரவனை - நமதாசிரியனை—இகழ் - தூஷிக்கின்ற—நயமிலான்றனை - பயனற்றவனை —இங்கொருசிலையினால் - இங்கோர்கல்லினால்—எறிந்து - வீசி —கொல்லுதல் - கொலைசெய்தல் — பொங்குறும் மேலாய—அறமொடு - தர்மமும்—புகழும் - கீர்த்தியும்—ஆகுமென்று உண்டாகுமென்று—எங்குரவனை-எமதாசிரியனாகிய அல்லமனை—அவர் அந்த ஒட்டர்கள் —எதிர்ந்து - விரோதித்து —சூழ்ந்தனர் - சுற்றிக்கொண்டார்கள் - எ - று. பொங்குறல் பிரகாசித்த லெனினுமமையும். (௨௨)

கட்டுமின் பிடிமினுங் கரத்திற் கொட்டினால்
வெட்டுமி னிந்தைசொல் வாயின் வெண்பலைத்
தட்டுமி னெறிமின்வன் றலைகு ழைந்திடக்
குட்டுமி னெனவுளங் கொதித்துக் கூடினார்.

(இ - ள்.) கட்டுமின் - கயிற்றாற்கட்டுங்கள் —பிடிமின் - சேர்த்துப்பிடியுங்கள்—நுங்கரத்தில் - உங்கள்கையிலுள்ள—கொட்டினால் - மண்வெட்டியால் —வெட்டுமின் - வெட்டிவிடுங்கள் —நிந்தைசொல்வாயில்-பழிக்கின்றவாயிலுள்ள—வெண் - வெண்மையாகிய—பலைத்தட்டுமின் - பல்லைத்தட்டிவிடுங்கள்—வன்றலை - வலியதலையை —எறிமின் - வெட்டிவிடுங்கள்—குழைந்திட - குழியுண்டாக—குட்டுமின்-குட்டுங்கள்—என - என்று—உளங்கொதித்து - மனங்கொதித்து —கூடினார் - ஒன்றாகக்கூடினார்கள். எ - று. அடிமினெனப்பாடமுண்டு. உளமென்பது இடைக்குறை. (௨௩)

என்மனை விருளற வெழுந்த வல்லமன்
மின்மலி வுறுதிரு மேனி மீதிடச்
சொன்மலி யொட்டலர் சூழ்ந்து தொண்டுவன்
கன்மழை சொரிந்தனர் கைசலிப்பவே.

(இ - ள்.) என் - அடியேனது—மனவிருளற - மனத்தந்தகாரநீங்க—வெழுந்த - எழுந்தருளிவந்த—அல்லமன் - அல்லமதேவரது—மின்மலிவுறு -

பிரகாசமிருந்த—திருமேனிமீது - அழகியவுடலின் மேல்—இடிச்சொல் - இடிபோன்றசொற்களால்—மலி-மிகுந்த—ஒட்டலர் - பகைஞர்கள்—சூழ்ந்துகொண்டு-சுற்றிக்கொண்டு—வல் - கடிய—கன்மழை-கல்மாரிகளை—கைசலிப்ப - கைசலிக்குமளவும்—சொரிந்தனர் - எறிந்தார்கள். எ - று. மன்னவிருள், அல்லதைப்பொருளாகக்கொள்ளுமக்கத்தை. (உ௪)

சாக்கிய னறிறெ தனிக்க லன்றிமெய்
நோக்கிலர் தாமொரு நூறு கோடிகல்
மீக்கிளர் சோதிதன் மீது வீசினுந்
தாக்குறு மோவவை தாக்கு றுவரோ.

(இ - ள்.) சாக்கியனார் - சாக்கியநாயனார்—எறி - முன்னெறிந்த—தனிக்கலன்றி-ஒப்பற்றகல்லாலல்லாமல்—மெய்நோக்கிலர் - கோபத்தாலுடலைப்பாராமல்—தாம் - தாங்கள்—ஒருநூறுகோடிகல்-ஒருநூறுகோடிகற்களை—மீக்கிளர் - வெற்றிநுமேலாவிளங்கும்—சோதிதன்மீது - சுயஞ்சோதியாகிய அல்லமன்மேல்—வீசினும் - எறியினும்—தாக்குறுமோ - படுமோ—அவை-அவற்றால்—தாக்குறுவரோ-படப்பெறுவரோ. எ - று. கல்லும்படாது பட்டுமிடங்கொடார் என்பார், தாக்குறுமோ அவை தாக்குறுவரோ என்றார். இவ்விரண்டோகாரமும் எதிர்மறை: எனவே, சாக்கியனாறெறிந்தகல்லுபட்டும் அதற்கிளைந்தனுமன்றி மற்றொன்றற்குடன்படாரெனப்பெற்றாம். கலன்றி இடைக்குறை. வீசினும் என்பதிலும்மை இழிவுசிறப்பு. (உ௫)

கொடியவ ரெறிந்தகல் குவியக் குன்றென
முடிமிசை நின்றனன் முத்த னல்லமன்
படவியி னுடனிழல் புதைப்ப வந்நிழல்
கடிதினின் மீமிசை காணுந் தன்மைபோல்.

(இ - ள்.) கொடியவரெறிந்த - கொடியபாதகரெறிந்த—கல் - கல்லுகள்—குன்றெனக்குவிய - மலைபோற்குவிய—முடிமிசை - அந்தக்குவியலின்முடிமேல்—முத்தனல்லமன் - முத்தனாகிய அல்லமதேவன்—நின்றனன் - நின்றான்—(யாதுபோல்வதெனின்) படவியின்-பூமியின்கண்—உடனிழல் - தேகநிழலை—புதைப்ப - மூட—அந்நிழல் - அந்தநிழல்—கடிதினின் - மிக்கவிரைவில்—மீமிசை - மேல்மேலாக—காணுந்தன்மைபோல் - காணும்விதம்போல. எ - று. இக்குறி ஞானசொரூபியெனக்

காட்டுகின்றது. அன்றேல், மூரணும் முத்தனல்லமன் இருபெயரொட்டுப்பண்புத்தொகை. (உ௬)

ஒறுப்பவ னிழிந்தவ னொருவன் செய்தநோய்
பொறுப்பவ னடுவுளன் பொறுக்கு நெஞ்சமு
மறப்பவ னுயர்ந்தவ னென்று வாய்மையாற்
சிறப்பவ ரிம்முறை செப்பு வாரரோ.

(இ - ள்.) ஒறுப்பவன் - வெறுப்[illegible]செய்பவன்—இழிந்தவன் - தாழ்ந்தவன்—ஒருவன்செய்தநோய் - ஒருவன் செய்தவருத்தத்தை—பொறுப்பவன் - பொறுக்கத்தக்கவன்—நடுவுளன் - நடுநிலையுள்ளவன்—பொறுக்குநெஞ்சமும்-ஒருவர்செய்தகுற்றத்தைப்பொறு[illegible]னதையும்—மறப்பவன் - மறக்கத்தக்கவன்—உயர்ந்தவனென்று - சிறந்தவனென்றுசொல்லும்படி—வாய்மையாற்சிறப்பவர் - உண்மைமொழியால்மேம்படுவோர்—இம்முறை - இவ்வாறாக—செப்புவார் - ஒட்டார்கள்சொல்வார்கள். எ - று. அரோ - அசை. யாதுசெய்தும் சகியாநிலனுதலின் ஒறுப்பவனெனவும், யாதுவைதும் நாணந்தோன்றிலனுதலின் இழிந்தவனெனவும், யாதிடுக்கமுறச்செய்தும் வருந்திலனுதலின் ஒருவன்செய்தநோய்பொறுப்பவனெனவும், இருவினையுள் ஒன்றன்பாலுஞ்சாய்ந்திலனுதலின் நடுவுளனெனவும், ஒருவர்செய்ததீங்கைப்பொறுக்கத்தக்கமனதையேனும் எண்ணுதலனுதலின் பொறுக்குநெஞ்சமுமறப்பவனெனவும், யாதுசெய்துந்தளர்வுறாததலின் உயர்ந்தவனெனவும், இவனஞ்சாதுவைதது இவன்பாலுண்மையிருத்தல்பற்றியாதலின் வாய்மையாற்சிறப்பவனெனவுங்கூறினார். பொறுக்குநெஞ்சமும் என்றவும்மையால் பொறுக்காதநெஞ்சமும் எனப்பெற்றாம். எதிர்நின்று செப்புவாரெனப் பாடமுமுண்டு. (உ௭)

தீங்கினை யெதிர்நின்று செய்த போதினே
தாங்கிலன் முனிவினை மறந்து தாமரைத்
தேங்கமழ் மலரென முகஞ்சி றப்புறீஇ
யீங்குநின் றிடுமிவன் யாண்டு ளானகொலோ.

(இ - ள்.) தீங்கினை - அனந்தவிடுக்கண்களை—எதிர்நின்று - நேரேநின்று—செய்தபோதினே - செய்தவிடத்தும்—தாங்கிலன்-வலாதவனாய்—முனிவினைமறந்து - தனதுகோபத்தையுமறந்து—தேங்கமழ் - மணம்வீசுகின்ற—தாமரைமலரென - அன்றலர்ந்ததாமரைமலர்போல—முகஞ்சிறப்

புமிஇ - முகஞ்சற்றுஞ்சுளியாது—சங்கு - இவ்விடத்தில் —நின்றிமைய ன் - நிற்கின்றவிவன்—யாவனெனோன்கொலோ - [illegible]ங்கிருப்பவனோ. எ-று. எதிர்நின்றுசெய்த போரினை தாங்கிலனெனவே [illegible]தூரநின்றுசெய்தபோ ரைத்தாங்குவானுமெனவுஞ்சொல்லெஞ்சிநிற்கப்பெ[illegible]ற்றும். முகத்தைத்தா மரைமலருக்குவமித்தலின் இஃதுவமப்புக்குறி. (௨௮)

மலர்மிசை வேதனோ மலர்க்க[illegible]மாயனோ
மலர்புகழ் மழவிடை[illegible]ணிவனோ
வலனிவன் பிழைசெ[illegible]மவரி டத்திலு
நலனுள னென்றுக[illegible]டவர் நவின்றனர்.

(இ - ள்.) மலர்மிசை - தாமரைமலரிலுள்ள —வேதனோ - பிரமனோ— மலர்க்கண் - தாமரைமலர்போன்றகண்களையுடைய—மாயனோ - விட்டுணு வோ—மலர்புகழ் - யாவருந்துதிக்கப்பெற்ற—மழ[illegible] - இளமையாகிய— விடைப்பாகனோ - ரிஷபத்தைவாகனமாகவுடைய ருத்திரனோ—எனில் - என்றால்—அலனிவன் - இவன்யாவனுமல்லன்—பிழைசெயுமவரிடத்திலு ம் - தீங்குசெய்பவரிடத்திலும் —நலனுளனென்று - இதமாகநிற்பவனெ ன்று—கண்டவர் - அங்கேயல்லமனைக்கண்டவர்கள்—நவின்றனர் - சொ ன்னார்கள். எ - று. பிழைசெயாதவரிடத்தும் நலனுளனெனக்காட்டப் பிழைசெயுமவரிடத்திலும்நலனுளனென்றார். ஆதலின் செயுமவரிடத்தி லுமென்பதின்கணுள்ள உம்மை இறந்தது தழீஇயவெச்சஉம்மை. தி ரிமூர்த்திகளும் பிழைசெயுமவரிடத்தில் நலனுள்ள அல்லராதலின் அ லனிவனென்றார். இம்மூன்றோகாரமும் ஐயம். (௨௯)

கல்லெறி படாமையைக் கண்ட வொட்டலர்
சொல்லுறி னிவனொரு சூட்சி மந்திரம்
வல்லவ னிவன்றனை வலிந்து பற்றியே
கொல்லுவ மெனவெதிர் குறுகி னாரரோ.

(இ - ள்.) கல்லெறி - கல்லெறிதலுக்கு —படாமையை - தன்மேனி மேற்படாமையை —கண்டவொட்டலர் - பார்த்தசத்துருக்கள் —சொல் லுறின் - பேசுமிடத்து —இவன் - இந்தப்புருடன் —ஒருசூட்சி - ஓர்தந் திரமான—மந்திரம் - மந்திரத்தில்—வல்லவன் - வல்லவனாகும் — இவன் றனை - இப்படிப்பட்டவனை—வலிந்துபற்றி-பலவந்தமாகப்பிடித்து— கொல்லுவோமென - கொன்றுவிடுவோமென்று—எதிர்-எதிரில்—குறுகி

னார் - குறுகிவந்தார்கள். எ - று. அரோ - அசை. கல்லெறிபடாமை; கல் லுக்குத்தப்பித்துக்கோடலை.வல்லவனென்பதில் ஆக்கவினையெஞ்சியது.()

குறுகலு மவன்பல கோலங் கொண்டன
னிறைபுனற் கடந்தொறு நிலவு தோன்றல்போன்
மறுகினர் நிலனகழ் மனிதர் பற்றுதற்
கறிகில ரினையனெ னஃ[illegible] ரினையன் றன்னையே,

(இ - ள்.) குறுகலும் - அவர்கள்நெருங்கவரவும் —நிறைபுனல் - சலநி றைந்த—கடந்தொறும் - கடங்கடோறும்—நிலவுதோன்றல்போல் - பிர திபிம்பசந்திரன்காணப்படுதல்போல —அவன் - அந்தவல்லமன் —பல கோலங்கொண்டனன் - பலவடிவங்கொண்டான் —நிலனகழ் - பூமியை வெட்டும்—மனிதர் - ஒட்டர்கள் —மறுகினர்-நிலைதெரியாதுசுழன்றனர்— [illegible]னை - அங்ஙனமாநின்றவல்லமனை—இனையனென்று - இவ ன்தானென்று—[illegible] - பிடித்தற்கு—அறிகிலர் - அறியாதுகலங்கி னார்கள். எ - று. குறுகலுமென்பதிலும்[illegible]நிர்மறை. இக்கவி பிம் பப்பிரதிபிம்ப பாவம். நிலன் எழுத்துப்போலி. அ[illegible]

மருண்டனர் சித்தரா மப்பெ ருந்தகை
யிருந்தரு ளிடத்துமெய் யிளைப்ப வோடியே
திருந்திய வடிமிசைச் சென்று வீழ்ந்தெழுந்
தரந்தையோ டனையவ ரறைதன் மேயினார்.

(இ - ள்.) மருண்டனர் - மருள்கொண்டவராய்—சித்தராமப்பெருந்த கை -சித்தராமனென்னும்பெருந்தகையோன்—இருந்தருளிடத்து -எழுந் தருளியிருந்தவிடத்தில்—மெய்யிளைப்ப-தேகமிளைப்புற—ஓடி-மிக்கவிரை வாகவோடி—திருந்திய - சிரேஷ்டமான—அடிமிசை - பாதங்களின்மே ல் —சென்றுவீழ்ந்து - போய்விழுந்து—எழுந்து - எழுந்துநின்று—அரந் தையோடு - மிக்கதுன்பத்தோடு —அனையவர் - அந்தவொட்டர்கள்—அ றைதன்மேயினார் - சொல்லத்தொடங்கினார்கள். எ - று. மெய்யிளைப் பெனல் மிக்கவிரைவைக்காட்டுகின்றது. (௩௨)

யாந்தொழில் செயுமிடத் தேதா வின்றியே
போந்தன னொருமகன் புதிய வின்புக
ழோர்ந்தில னுனைக்கொணு விழிபு னாத்தனன்
மாய்ந்தில முடனசை மருவி யர்ங்களே.

(இ - ள்.) யாம் - நாங்கள் — தொழில்செயுமிடத்து - எங்கள் வேலை செய்துகொண்டிருக்கும்போது — ஏதுவின்றி - யாதோர்காரணமுமில்லாமல் — ஒருமகன்புதியன் - ஒருபுதியமனிதன் — போந்தனன் - வந்தான் — நின்புகழ் - உனதுகீர்த்திகளை — ஓர்ந்திலன் - சற்றுமுணர்ந்திலனாய் — உரைக்கொணா - சொல்லத்தகாத — இழிபு - நிந்தைமொழிகளை — உரைத்தனன் - சொன்னான் — யாங்கள் - நாங்கள் — உடனசை - தேகாசை — மருவி - கொண்டு — மாய்ந்திலம் - இறக்கிலம். எ - று. எனவே, எங்கள் தேகாசை எங்கள் மரணத்துக்குச்சத்துருவாயிற்றென்பது பெறும். மாய்ந்தென்பதில் யகரமும் ரகரமும் ஆசெதுகை. (௩௩)

என்றவ ரறைதலு மிராமன் சிந்தையிற்
புன்றொழி லகன்றுமெய்ப் போதம் பெற்றிட
வன்றரு ளல்லம வடிகள் காட்டுறு
மொன்றொரு சீற்றம்வந் துதித்தெ ழுந்ததே.

(இ - ள்.) என்றவரறைதலும் — அவரறைதலும் - அவர்கள்சொல்லவும் — இராமன்சிந்தையில் - சித்தராமனதுமனதில் — புன்றொழிலகன்று - புல்லியகிரியாமார்க்கங்களொழிந்து — மெய்ப்போதம்பெற்றிட - உண்மைஞானமடைய — அன்று - அப்போது — அருள் - கிருபையையுடைய — அல்லமவடிகள் - அல்லமதேவரதுதிருவடிகளை — காட்டுறும் - காட்டத்தக்க — ஒன்று - பொருந்திய — ஒருசீற்றம் - மிக்கவோர்கோபம் — உதித்துவந்து - தோன்றி — எழுந்தது - மேற்கொண்டது. எ - று. சீற்றம்வந்துதியாவிடத்து, அவர்பாற்சேறலும் மெய்யுணர்வுபெற்றிடலும் கூடாமையின் இங்ஙனங் கூறினரென்க. இங்கேபுன்றொழில் ; சரியை கிரியை யோகங்களை. (௩௪)

யாவனென் றன்னையின் றிகழ்ந்து ளானவ
னுவரிங் கிடுவனென் னெனவெ ழுந்தனன்
மேவுறுந் தவமத வெகுளி தானினி
யோவுறுந் தரத்ததன் றொருவ ராலுமே.

(இ - ள்.) யாவன் - எவன் — என்றன்னை - என்னை — இன்று - இப்போது — இகழ்ந்துளான் - தூஷித்தவன் — அவனுவரிங்கிடுவென் - அவனுக்கையறுத்திடுவேன் — நானென - நானென்று — எழுந்தனன் - எழுந்திருந்தான் — மேவுறும் - பொருந்திய — தவமதம் - தவாங்காரங் காரணமாக

வெழுந்த — வெகுளிதான் - கோபமானது — இனி - இனிமேல் — ஒருவராலும் - ஒருவராலும் — ஓவுறுந்தரத்ததன்று - தணிவதற்கியைந்ததன்று. எ - று. ஓதல் - ஒழிதல். மதம் - அகங்காரம். (௩௫)

வேறு.

என்னை வைதவன் யாரவ னெனமுனிந் தெரிபோன்
முன்ன செய்தினன் சித்தரா மப்பெயர் முதல்வ
னன்னை யன்னநம் மல்லம னவன்சின மறிந்து
சென்னி யொண்கர மசைத்துநல் வகைசெய்து செப்பும்.

(இ - ள்.) என்னைவைதவன் - என்னைநிந்தித்தவன் — யாரவனென - அவன்யாரென்று — முனிந்து - சீறி — எரிபோல் - வடவாக்கினிபோல — முன்னசெய்தினன் - அல்லமனெதிரில்வந்தான் — (அயனுமெனில்) சித்தராமப்பெயர் - சித்தராமனென்னும் பெயரையுடைய — முதல்வன் - எசமான் — அன்னையன்ன - தாய்போன்ற — நம்மல்லமன் - நமதல்லமதேவன் — அவன்சினமறிந்து - அவனதுகோபக்குறிப்பைக்கண்டு — சென்னி - தலையையும் — ஒண்கரம் - அழகியகையையும் — அசைத்து - அசைத்து — நல்வகைசெய்து - நகைத்து — செப்பும் - சொல்லுவன். எ - று. சித்தராமப்பெயர் முதல்வன் முனிந்து முன்னர் எய்தினன் எனவும், அல்லமன் அறிந்து அசைத்து நகைசெய்து செப்புமெனவுமுடிக்க. (௩௬)

அகழ்பவர் தமைத் தாங்குறு மகனில மென்ன
விகழ்பவர் தமைப் பொறுக்குமித் தன்மையெய் தலினு
னிகழ்பவ ருண்மா தவமுடை யோகியென் றுன்
புகழ்பவ ரெனன விகழ்ந்தனன் பின்னரும் புகல்வான்.

(இ - ள்.) அகழ்பவர்தமை - தன்னைத்தோண்டுபவர்களை — தாங்கும் - சுமக்கின்ற — அகனிலமென்ன - விசாலமானபூமியைப்போல — இகழ்பவர்தமை - நிந்திப்பவர்களை — பொறுக்கும் - பொறுக்கத்தக்க — இத்தன்மையெய்தலின் - இக்கோலம்பூண்டிருத்தல் — நிகழ்பவருள் - தவத்தால்மிக்குவிளங்குபவருள் — மாதவமுடை - மகாதவத்தையுடைய — யோகியென்று - யோகியென்று — புகழ்பவரெனன - புகழ்பவனென்ன — இகழ்ந்தனன் - நிந்தித்தவனும் — பின்னரும்புகல்வான் - பின்னுஞ்சொல்லுவான். எ - று. புகழ்பவனென இகழ்ந்தனன் எனல் - இகழ்ந்தான் நிந்தித்தவனைப்போல — இழிந்தனன். (௩௭)

சிறப்புப் பெற்றநல் யோகிதன் மனந்தெழு சினந்த
னறத்தைக் கொன்றிடு முன்புபஞ் சியிற்புரு மழல்போ
லொறுக்கப் பட்டவன் பவம்பினை யொழித்திடு மதனாற்
பொறுத்தற் கொப்பிலை யென்றுநன் றறிந்தனை போலும்.

(இ - ள்.) சிறப்புப்பெற்ற - மேம்பாடமைந்த — நல்யோகிதன் - நல்ல யோகியினது — மனந்தெழுசினம் - மனதின்கணெழுங் கோபமானது — தன்னறத்தைக்கொன்றிடுமுன்பு - தன் தவத்தை நாசஞ்செய்வதற்கு முன்பு — பஞ்சியிற்புருமழல்போல் - பஞ்சியிற்பட்டநெருப்புபோல — ஒறுக்கப்பட்டவன் - வெறுக்கப்பட்டவனது — பவம் - பாவத்தையும் — பினை - பின்னர் — ஒழித்திடுமதனால் - நாசஞ்செய்வதால் — பொறுத்தற்கு - கோபத்தைப்பொறுத்துக்கொள்வதற்கு — ஒப்பிலையென்று - சமானமில்லையென்று — நன்றறிந்தனைபோலும் - நன்குணர்ந்தவன்போலுமிருக்கின்றனை. எ - று. எனவே, யோகியினது கோபம் கோபிக்கப்பட்டவனது பாவத்தை முன்னர்நாசஞ்செய்து பின்னர் கோபித்தவனது தவத்தை நாசஞ்செய்யுமென்று வேதவசனமும் முன்வசனமு மிருப்பதால் பொறுத்துக்கொள்ளுதலே மேன்மையாகும் இஃதுனக்குத் தெரியாததன்றென்றுரைத்தவாறு. யோகிக்குக்கோபமெழாதிருக்கவேண்டும், எழின் தன் தவத்திற்கே நாசமெனக் குறிப்பித்தாரென்க. அழலும் பஞ்சும் உவமானம். சினமும் பவமும் அறமும் உவமேயம். யோகியினது சினம் இங்ஙனமாதற் கையமின்றெனக் குறிப்பித்தாரென்க. (௫௮)

காலனின்முனம் பொறையுளொருவன் கடல்சே
ரால நல்லமு தாகுமென் றவன்றவம் புகழ்வான்
போல வைதனன் கொடியவ னெனும்பொருடோன்றச்
சீல நல்குமோர் தொழில்செயு மல்லம தேவன்.

(இ - ள்.) காலன் - எமன் — நின்முனம் - உனக்குமுன்னே — பொறையுளொருவன் - பொறுமையுடையவனொருவான் — கடல்சேராலம் - கடலிலெழுந்தவாலகாலவிஷம் — நல்லமுதாகுமென்று - உனக்குமுன் தேவாமிர்தமாகுமென்று — அவன் - அந்தச்சித்தராமனது — தவம்புகழ்வான்போல - தவத்தைச்சிறப்பிப்பவன்போல் — கொடியவனெனும் பொருடோன்ற - துஷ்டனென்னும்பொருள்தோன்றும்படி — சீலநல்கும் - தூய்மைதரநிலையந்த — ஓர்தொழில்செயும் - ஒப்பற்றதொழிலைச்செய்யும் — அல்லமதேவன் - அல்லமதேவனென்போன் — வைதனன் - இகழ்ந்தனன். எ - று.

நின்முனமென்பதை ஈரிடத்துமொட்டுக. எனவே, உன்னைப்பார்க்கினும் காலன்பொறுமையிலும் ஆலகாலவிஷம் நன்மையிலும் சிறப்புறுமெனப் பெற்றும். நீகொடியனெனும் பொருள்தோன்ற நிந்தாஸ்துதிசெய்தானென்பதுகருத்து. சீலநல்குமோர் தொழிலாவது; அடியாரதுமனம் நின்மலமாக உபதேசித்தலே. (௫௯)

பொறையு றும்படி யல்லமன் சூட்சியிற் புகலக்
குறையு றுஞ்சின மிருந்தன னெருப்பெனக் கொதித்தே
யறையு றுந்திரள் பந்தெனச் சித்தரா மைய
னிறையு றுந்திரு வருளுடைப் பிரானொடு நிகழ்த்தும்.

(இ - ள்.) பொறையுறும்படி - பொறுத்துக்கொள்ளும்படி — அல்லமன் - அல்லமதேவன் — சூட்சியில் - தக்கதந்திரங்களால் — புகல - சொல்ல — குறையுறுஞ்சினம் - தணிந்துபோதற்கிலையந்தகோபம் — நெருப்பெனக் கொதித்து - நெருப்பைப்போல்சீறி — இருந்தனன் - மேலிட்டானை — அறையுறும் - அறையப்பட்ட — திரள்பந்தென - திரண்டபந்தைப்போல — சித்தராமையன் - சித்தராமையனென்போன் — நிறை[illegible]ரணமான — திருவருளுடை - மிக்கதிருவருளையுடைய — பிரானொடுநிகழ்[illegible] — [illegible]த்தும் - அல்லமனோடுபேசத்தொடங்கினன். எ - று. சினமென்பது குறையுறுஞ்சினமென்றமையால் தணிதற்கிலையந்தசினமென்[illegible] பிரானொடுநிகழ்மன்புகல சித்தராமையர்கொதித்துச் சினமிருந்தோராய் பிரானொடுநிகழ்த்துமெனக்கூட்டிமுடிக்க. நிறையுறுந்திருவருளுடை யென்றடைகொடுத்தது; அவனையிரட்சிப்பான்வேண்டியென்க. பந்தையுவமானித்தது இவனது துடிதுடிப்பைக்காட்ட. புகலக்கொதித்துநிகழ்த்துமெனக்கூட்டிப்பொருள்கொள்க. (௬௰)

குறிப்பில் வைதனை வெளிப்படை யிகழ்வினுங் கொடிதாய
வெறுப்பு முன்செயா வென்னைநீ யிகழ்ந் தமையாற்
பொறுப்ப வல்லன்யா னுதல்விழித் தீயிடைப் பொடிப்ப
வறுப்ப னென்றனை யிகழ்வினுக் காருள மறுகார்.

(இ - ள்.) வெளிப்படையிகழ்வினும் - வெளிப்படையாகநிந்திப்பதினும் — கொடிதாய் - கொடூரமாக — குறிப்பில்வைதனை — முன்செயா - முன்னா[illegible]னை — வெறுப்பு - யான்வெறுக்கத்தக்கவைகளை — என்னைநீயிகழ்ந்தமையால் - என்னை[illegible] செய்து — [illegible] - இவ்விடத்தில் —

வைதமையால்—யான் - நான்—பொறுப்பனல்லன் - சகியேன் —நுதல் விழி - நெற்றிக்கண்ணாகிற —தீயிடை - அக்கினியின்கண் —பொடிப்ப - நீ சாம்பலாகும்படி—வறுப்பனென்றனன் - வருத்துவிடுவேனென்று சித்தராமன்சொன்னான்—இகழ்வினுக்கு - தன்னையொருவன் நிந்ித்ததற்கு—ஆருளமறுகார் - யாவர்தான் மனம்வருந்தார். எ - று. இகழ்வு தொழிற்பெயர். இகழ்வினும் என்பதிலும்மை இழிவுசிறப்பு. வெறுப்பு வினையாலணையும் பெயர். விழித்தீ உருவகம். (௬௧)

தன்னைக் கொல்லினுந் தான்பிறி தொன்றினைக் கோறல்
பன்னிற் பாவமென் றறைகுவர் கற்றுணர் பழையோர்
நின்னைச் சொல்லிய வறத்தினை நிந்தையென் றெண்ணி
யென்னைக் கொல்லுவ னென்றநீ யறவனே யென்று.

(இ - ள்.) தன்னைக்கொல்லினும் - தன்னைக்கொன்றாலும் — தான்பிறிதொன்றினைக்கோறல் - மற்றொன்றைத்தான்கொல்லுதல்—பன்னில் - சொல்லுங்கால் —கற்றுணர்பழையோர் - கற்றுணர்ந்தபெரியோர்கள்—பாவமென்றறைகுவர் - பாவமென்றுசொல்லுவார்கள் —நின்னைச்சொல்லியவறத்தினை - உனக்குயான்கூறியதருமமொழிகளை —நிந்தையென்றெண்ணி - தூஷணைமொழிகளென்றுநினைத்து —என்னைக்கொல்லுவனென்ற - என்னைக்கொல்லுதற்கெழுந்தநீ—அறவனேயென்று - நல்லபுண்ணியவானேயென்று. எ - று. கொல்லினுமென்பதிலும்மை இழிவு சிறப்பு. நினக்கென்பது நின்னையென்றாயது வேற்றுமை மயக்கம். (௬௨)

சாதனங்களு ணீறுமுந் தியதென்பர் சாற்று
மாதவங்களு ளுயிர்செகா மையுமற்று மதிப்பிற்
பாதகங்களிற் கொலைசெயுஞ் சிறந்தனெனப் பார்த்து
நீதெரிந்திலை யரக்கனே யென்றன னிமலன்.

(இ - ள்.) சாதனங்களுள் - இயமமுதலியசாதனங்களுள்—நீறு - தத்துவங்களனைத்தையுநீறாக்கலை—முந்தியதென்பர் - மேலாயசாதனமென்றறிஞர்கூறுவர் —சாற்றுமாதவங்களுள் - சொல்லிய மாதவங்களுக்குள்—உயிர்செகாமையும் - உயிரைக்கொல்லாமையும்—மற்றும் - இதுபோல்பவைகளும்—மதிப்பில் - மதிப்பினுள்ளே—பாதகங்களில் - பாதகங்களுக்குள் —கொலை - கொலைசெய்தலும் —சிறந்தனெனவென்று—பார்த்தும் - வேதாகமங்களைப்பார்த்தும்—அரக்கனே - இராக்கதனே—நீதெரிந்திலை - நீயுணர்ந்தாயில்லை —என்றனனிமலன் - என்று நல்லமன்சொல்லினன். எ - று. நுதல்விழித்தீயிடை பொடிப்பவறுப்பது ; சிறந்தன்றெனமறுக்கச் சாதனங்களுள்நீறுமுந்தியதென்பனெனவும், உயிர்செகாமையும் பொய்களவுமுதலியவைகளும் செய்நன்றிமறத்தல் நடுநிலைகோணல் ஒழுக்கமுரண் பிறனில்விழைதல் பொறையின்மை அழுக்காறு புறங்கூறல் தீவினைக்கஞ்சாமை புலாலுணல் கூடாவொழுக்கம் வாய்மையறுத்தல் முதலியவைகள் பாதகங்களாம். அவைகளில் கொலைசெய்தலும் சிறந்தன்றெனப்பார்த்தும் நீதெரிந்திலை யெனவும் கூறியதை யுணருமிடத்து நீறுபடுத்துவதும் என்னைக்கொலைசெய்வதும் பயனின்றெனக் காணுதியெனக்குறிப்பித்தல் அருத்தாபத்தி. இங்ஙனமிருக்க ...றல் ஆங்காரத்தை நீறுபடுத்தல் கற்பனைகளை. இங்ஙனமிருக்க ... விடுதியென்பது கருத்து. பிறப்பி ...ராமற்கண்டபடிகூறுதல் விதியென்பது கருத்து. பிறப்பித்தற்குப் ...வும் அப்பேதமைக்கு ராகத்துவேஷாதிகள்காரணமாகவும் அந்தராகத்துவேஷாதிகளுக்குக் கொலைகாரணமாகவு மிருக்க கொலையொன்று செய்வதாலுமதனை நிவர்த்திப்பதாலும் யாதுபயனெனக்காட்ட உயிர்செகாமையு, மேனையவும், கொலைபுரிதலுஞ் சிறந்தனென்றார். (௬௩)

செருக்கொழிந்திலை யென்னெதிர் செவிசுடு தீச்சொ
லுரைத்து நின்றனை யுனைவிடு கிலனென வுறுத்து
நெருப்பெ னுந்திரு நுதல்விழி திறந்தன னினைத்து
மரிப்பி னுந்தரு வேனுயி ரென்றிரா மன்றான்.

(இ - ள்.) செருக்கொழிந்திலை - கர்வம்நீங்கினையில்லை —செவிசுடுதீச்சொல் - காதைவதைக்குந்தியசொல்லுகளை — என்னெதிர் - ... — உரைத்துநின்றனை - சொல்லிக்கொண்டேநிற்கின்றாய் —உனைவிடுகிலனென - உன்னைவிடமாட்டேனென்று—உறுத்து - சீறி—நெருப்பெனும் - நெருப்பென்கிற—திரு - அழகிய—நுதல்விழி - நெற்றிக்கண்ணை—திறந்தனன் - திறந்தான்—மரிப்பினும் - இறந்தாலும்—நினைத்து - நினைத்து—உயிர்தருவேனென்று - மீண்டுமுயிரைக்கொடுப்பேனென்று—இராமன்றான் - சித்தராமன். எ - று. சித்தராமன் உறுத்து திறந்தனன் எனக்கூட்டிப்பொருள்கொள்க. (௬௪)

நெற்றித் தீவிழிக் காமனை நீற்றுவ தன்றிப்
பற்றி காமமில் யோகியைப் படுத்திட வற்றோ

செற்றத் தாறுசல் விழியழ லல்லம தேவன்
வெற்றித் தாண்மலர்க் கீழ்ச்சென்று பணிந்தது விரைந்து.

(இ - ள்.) நெற்றி - நெற்றியிலுள்ள—தீவிழி - அக்கினிக்கண்—காமனை நீற்றுவதன்றி - மன்மதனையெரிப்பதன்றி—பற்றி - விஷயங்களைப்பற்றி—காமமில் - இனைத்துணையுங்காமமில்லாத—யோகியை - சிவயோகியை—படுத்திடவற்றோ - வசப்படுத்தக்கூடுமோ—செற்றத்தால் - கோபத்தாற்செலுத்திய—நுதல்விழியழல் - நெற்றியிலுள்ள அக்கினிக்கண்—அல்லமதேவன்—அல்லமதேவருடைய—வெற்றி - செயம்பொருந்திய—தாண்மலர்க்கீழ் - பாதமாகிய தாமரைமலரினிடத்தில்—விரைந்துசென்று - விரைவிற்போய்—பணிந்தது - வணங்கினது. எ - று. நுதல்விழி அழல், தாள்மலரும் உருவகம். படுத்திடவற்றோவெனல்; இங்கேயெரிக்கக்கூடுமோவெனலை. விழியழல் சென்று விரைந்துபணிந்ததெனக்கூட்டிப் பொருள்கொள்க. (௪௫)

பணிந்து மீளுமவ் வழலொரு வீரன்மேற் பாயத்
துணிந்து [illegible] லாற்றல்கண் டுளவலி தொலைந்து
தணிந்து பேடிமேற் செல்லுமா றலைவன சரன்போ
லணைந்தி ராமன்வாழ் நகரினிற் பற்றிய தன்றே.

(இ - ள்.) பணிந்து - வணங்கி—மீளும் - திரும்புகின்ற—அவ்வழல் - அந்தவக்கினி—ஒருவீரன்மேற்பாய - ஒருவீரன்மேற்பாயும்படி—துணிந்துபோய் - தீரமாகப்போய்—அவனாற்றல்கண்டு - அவனதுவீரத்தைக்கண்டு—வலிதொலைந்து - வலிகெட்டு—தணிந்து - சாந்தமாகி—பேடிமேற்செல்லுமாறு - பேடிமேற்செல்லும்படி—அலை - அங்குமிங்குமலைகின்ற—வனசரன்போல - வேட்டனைப்போல—அணைந்து - வந்து—இராமன்வாழ் - சித்தராமன்வாழ்கின்ற—நகரினிற்பற்றியது - பட்டணத்திற்பற்றிக்கொண்டது. எ - று. அன்று - ஏ - அசைகள். பேடியைக்கொல்வான்வேண்டி வேட்டனலைந்துதிரிவதுபோல் அக்கினிக்கண் அல்லமனையெரிக்கவலியின்றி சித்தராமனதுபட்டணத்தை யெரிக்கப்பற்றியதெனப்பொருள்கொள்க. அவ்வழல் துணிந்துபோய் கண்டு தொலைந்து அணைந்து பற்றியதென்முடிக்க. பேடி, வீரனல்லானை. (௪௬)

கங்கை வார்சடைக் கறைமிடற் றிறைநகைக் கனல்போய்த்
துங்க மாமதில் சூழ்தரு புரத்தினைச் சுடல்போ

லெங்க ணாயகன் மேல்விடு மிராமனன் னுதற்க
ணங்கி போயவ்ந கரினைச் சுட்டதை யன்றே.

(இ - ள்.) கங்கை - கங்கைதங்கிய—வார்சடை - நீண்டசடையினையும்—கறை - விஷந்தங்கிய—மிடறு - கண்டத்தையுமுடைய—இறை - பரமசிவனது—நகை - புன்சிரிப்பாலெழும்—கனல்போய் - அக்கினியானதுசென்று—துங்கமாம் - உயர்வாகிய—மதில்சூழ்தரு - மதில்சூழ்ந்த—புரத்தினை - திரிபுரத்தை—சுடல்போல் - எரித்ததுபோல—எங்கணாயகன்மேல் - எமதுகர்த்தனாகியவல்லமன்மேல்—விடு - விட்ட—இராமன் - சித்தராமனது—நல் - நல்ல—நுதற்கண் - நெற்றிக்கண்ணாகிய—அங்கிபோகி - அக்கினிசென்று—அந்நகரினைச்சுட்டது - அவனதுபட்டணத்தை யெரித்தது. எ - று. ஐ - அன்று - ஏ - இவைஅசைகள். நகைக்கனல் கண்ணங்கி உருவகம். கணங்கி இடைக்குறை. (௪௭)

அணியெ ரிந்தன [illegible] லெரிந்தன வாரத்
துணியெ ரிந்தன கலவைக ளெரிந்தன சுதையின்
பணியெ ரிந்தன மனைவள மெரிந்தன பகரு
மணியெ ரிந்தன வெரிந்தன கண்டவா வயிறு

(இ - ள்.) அணியெரிந்தன - ஆபரணங்களெரிந்தன—மென்றுகிலெரிந்தன - மெல்லியவஸ்திரங்களெரிந்தன—ஆரத்துணியெரிந்தன - முத்துமாலைத்துண்டங்களெரிந்தன—கலவைகளெரிந்தன - கலவைச்சாந்துகளெரிந்தன—சுதையின்பணியெரிந்தன - சுண்ணாம்பினாற்செய்தசித்திரப்பணிகளெரிந்தன—மனைவளமெரிந்தன - மனைக்குள்ள [illegible]—பகரும் - விற்கின்ற—மணியெரிந்தன - இரத்தினங்களெரிந்தன—வயிறெரிந்தன—கண்டவர் - இக்கோலங்களைக்கண்டவர் [illegible] எ - று. மனையும் வளமுமெனவுமாம் [illegible]

சேயெ டுப்பவர் விருத்தரை யீர்ப்பவர் சேமம்
போயெ டுப்பவர் புகவரி தாகிமன் [illegible]
வாய டிப்பவர் மனையெரி யவிப்பவர் மறுகிப்
பாய லைக்கட லெனவழு திரங்கினர் பதைத்து.

(இ - ள்.) சேயெடுப்பவர் - குழந்தையெடுப்பவர்களும்—விருத்தரையீர்ப்பவர் - கிழவர்களையிழுப்பவர்களும்—சேமம்போயெடுப்பவர் - விலைப்பொருள்களை [illegible] புகவரிதாகி - உள்ளேநுழைதற்கரிதாகிப்போய்புதையலெடுப்பவர்களும்—

தாகி —மண்புரண்டுவாயடிப்பவர் - மண்ணிற்புரண்டுவாயிலடித்துக்கொள்பவரும் —மனையெரியவிப்பவர் - வீடுபற்றியெரிதணலவிப்பவரும் —மறுகி - மோதி—பாய் - பாய்கின்ற—அலை - அலைகளையுடைய—கடலென - கடலைப்போல—பதைத்து - பதைபதைத்து—அழுதிரங்கினர் - கூச்சலிட்டழுதிரக்கமுற்றனர். எ - று. கடலையுவமானித்தது மிக்கவொலியைப்பற்றியென்க. (௪௯)

உதித்த ஞாயிறு போன்றுசெம் மணியின மொளிரப்
பதித்த மாளிகை மீதுபற் றியவழற் கொழுந்தாற்
கதிர்த்த வாடகச் செங்கம லத்துவான் கங்கை
கொதித்த தாயிடைக் கொதிபொறு தன்னங்கள் குழைய.

(இ - ள்.) உதித்த - உதயமான—ஞாயிறுபோன்று - சூரியனைப்போல—செம்மணியினம் - சிவந்தவிரத்தினக்கூட்டங்கள்—ஒளிர - பிரகாசிக்கும்படி—பதித்த - அவற்றைப்பதித்திருக்கின்ற—மாளிகைமீது - உப்பரிகையின்மேல் —பற்றிய - பற்றிக்கொண்ட —அழற்கொழுந்தால் - அக்கினிக்கொழுந்தினால்—கதிர்த்த - பிரகாசிக்கின்ற—ஆடகம் - சுவர்ணம்போல்விளங்கும்—செங்கமலத்து - செந்தாமரையையுடைய—வான்கங்கை - ஆகாயகங்கையானது—கொதித்தது - கொதித்தது —ஆயிடை - அந்தவிடத்தில் —கொதிபொறாது - கொதிக்குச்சகியாது —அன்னங்கள்குழைய - அன்னப்பட்சிகள்வருந்த. எ - று. அழற்கொழுந்தால் அன்னங்கள்குழைய வான்கங்கைகொதித்ததெனக் கூட்டிப்பொருள்கொள்க. (௫௰)

அன்ன காலையி லருட்கட லல்லம தேவன்
சொன்ன லாபுரத் தவர்துய ரனைத்தையுந் தொலைப்ப
வுன்னி யோர்விழி யழலினை யிமைப்பினி லொழித்தான்
முன்ன மாலமுண் டமரரைக் காத்தருண் முறைபோல்.

(இ - ள்.) அன்னகாலையில் - அத்தருணத்தில்—அருட்கடல் - கிருபாசமுத்திரம்போன்ற—அல்லமதேவன் - அல்லமதேவனென்போன்—சொன்னலாபுரத்தவர் - சொன்னலாபுரத்திலுள்ளோர் —துயரனைத்தையுந் தொலைப்ப - துன்பங்களையெல்லாநீக்க—உன்னி - நினைத்து —ஓர்விழி - ஒருகண்ணின்—அழலினை - அக்கினியை —இமைப்பினில் - இமைப்பளவில்—முன்னம்-முற்காலத்தில்—ஆலமுண்டு-விஷத்தையுண்டு—அமரரை - தேவர்களை —காத்தருண்முறைபோல் - காத்திரக்ஷித்தவாறுபோல —ஒ

ழித்தான் - தணித்தான். எ - று. ஓர்விழியழல் நெற்றிக்கண்ணனலை. அல்லமதேவன் தொலைப்ப ஒழித்தானெனமுடிக்க. (௫௧)

எந்தை யல்லம னருளினு னுதல்விழி யெரியால்
வெந்த வந்நகர் பண்டையின் மும்மடி விளக்கம்
வந்த பல்வள மொடுசிறந் ததுநரர் மகிழ
வுந்து வெவ்வழ லிடைவெந்த வாடக மொத்து.

(இ - ள்.) எந்தையல்லமன் - என்தந்தையாகியஅல்லமதேவன் —அருளினால் - கிருபையினால்—நுதல்விழி - நெற்றிக்கண்ணாகிற —எரியால் - அக்கினியால் —வெந்தவந்நகர் - நீறுயஅந்தப்பட்டணம் —பண்டையின் - பழமைபோலும்—உந்து - வளர்கின்ற —வெவ்வழலிடை - கொடியஅக்கினியில்—வெந்தவாடகமொத்து - வெந்தபொன்னைப்போல—நரர்மகிழ - சனங்கள்களிகூர —மும்மடிவிளக்கம்வந்த - மூன்றுபங்கொளிவந்த —பல்வளமொடு - பலவளப்பங்களோடு —சிறந்தது - சிறப்புற்றது. எ - று. அந்நகர் ஆடகமொத்து நரர்மகிழ முன்னையக்காட்டிலும் மூன்றுபங்குவளப்பங்களோடு சிறப்புற்றதெனக் கூட்டிப்பொருள்கொள்க. (௫௨)

ஒருத்தன் வந்தவா றாக்கிய பொற்பணி யொன்றைத்
திருத்த வல்லவ னழித்ததைச் சிறந்திடச் செயல்போற்
புரத்தை நன்றுற வல்லமன் புரிதலும் புரத்தோர்
கருத்தில் வந்தெழுந் தோங்கிய தார்வமா கடலே.

(இ - ள்.) ஒருத்தன் - ஒருபுருஷன்—வந்தவாறு - கண்டபடி —ஆக்கிய - செய்த—பொற்பணியொன்றை - ஓர்பொன்னாபரணத்தை —திருத்தவல்லவன் - செவ்வையாகச்செய்யவல்லோன்—அதையழித்து - அதையுருக்கி —சிறந்திடச்செயல்போல் - அலங்காரமாகச்செய்தல்போல —புரத்தை-அந்தப்பட்டணத்தை—நன்றுற-செவ்வையாக—அல்லமன்புரிதலும்-அல்லமன்செய்யவும் —புரத்தோர் - அந்தப்பட்டணத்திலுள்ளோரது—கருத்தில் - மனதில்—ஆர்வமாகடல் - ஆனந்தசமுத்திரம்—வந்தெழுந்து - வந்தோன்றி—ஓங்கியது - பொங்கிற்று. எ - று. அல்லமன் அப்பட்டணத்தை முன்னினும் நலனுற வமைத்தலின் இவ்வுவமை கூறப்பட்டது. (௫௩)

இருக ணாற்றல்போ லொழிந்திட வலியறு மிராம
னிருக ணிலங்கண் ணிளச்செருக் கென்பதோன் றினுமிப

பெருகு நாணெனும் புனல்கொளப் பேரழல் விழுந்து
கருகு நாண்மல ரெனமுகங் கரிந்தது கருதும்.

(இ - ள்.) ஒருகணாற்றல் - நெற்றிக்கண்ணினது வல்லமை—போயொழிந்திட - தொலைந்துபோக —வலியருமிராமன் - வலியின்றியசித்தராமன்—இருகணுலுங்கண்டு - எனையிரண்டுகண்களாலுங்கண்டு—உளம் - மனதில் —செருக்கென்பதொன்றின்றி - கர்வமென்பதுசற்றுமில்லாமல் —பெருகுநாணெனும் - மிக்கநாணமென்கின்ற —புனல்கொள - சலம்பெருக—பேரழல்விழுந்து - பெரியநெருப்பில்விழுந்து —கருகும் - கருகிப்போகின்ற —நாள் - அன்றலர்ந்த—மலரென - தாமரைமலர்போல—முகங்கரிந்து-முகஞ்சுருங்கி—இதுகருதும் - இதனைநினைப்பான். எ - று. இங்கே ஒருகணென்றது நெற்றிக்கண்ணை. நாணெனும்புனல் உருவகம்.

வேறு.

என்னொரு நுதல்வி ழித்தீ யிவன்றனை யிறைஞ்ச லாலே
தன்னருள தனு லென்னைத் தடுத்துவந் தாள வேண்டி
பொன்னவிர் சுணங்கு பூத்த புணர்முலை மடந்தை பாக
னிந்நில வரைப்பிற் கோல மிதுகொடு வந்தா னென்று.

(இ - ள்.) என் - என்னுடைய—ஒருநுதல்விழி - ஒருநெற்றிக்கண்ணாகிய—தீ-அக்கினி—இவன்றனையிறைஞ்சலாலே-இவனைவணங்கலால் —தன்னருளதனால் - தனதுகிருபையால்—என்னைத்தடுத்துவந்தாளவேண்டி - என்னைத்தடுத்தாட்கொள்ளவேண்டி —பொன்னவிர் - பொன்னைப்போல்பிரகாசிக்கின்ற—சுணங்குபூத்த - தேமல்படர்ந்த—புணர்முலை - புணர்தற்கியைந்ததனங்களையுடைய—மடந்தை - உமையவளை—பாகன் - அர்த்தபாகத்திற்கொண்டபரமசிவன் —இந்நிலவரைப்பில் - இந்தப்பூமியில் —கோலமிதுகொடு - இந்தக்கோலங்கொண்டு —வந்தானென்று-வந்தனனென்று. எ - று. இந்நிலம் இனவெதுகை. (௫௬)

தீயனே னறிவி லாமற் செய்பிழை பொறுத்தாட் கோடி
பேயனொ ருவன் செய்த பிழையினை யவனை யீன்ற
தாயலாற் பொறுப்பார் யாவர் தானுவே யென்றி ராமன்
போயெனு ரமுதின் செந்தாட் போதினைப் பற்றி வீழ்ந்தான்.

(இ - ள்.) தீயனேன் - கொடியபாதகனாகியயான்—அறிவிலாமல் - புத்தியில்லாமல்—செய்பிழை - செய்தபிழைகளை —பொறுத்தாட்கொடி - பொறுத்தடிமைகொள்ளுதி—பேயனொருவன்செய்த - பேய்போன்றயாரொருவன்செய்த—பிழையினை - தப்பிதங்களை—அவனையீன்றதாயலால்-அவனைப்பெற்றதாயையன்றி—பொறுப்பார்யாவர் - யாவர்தான்பொறுத்துக்கொள்பவர்கள் —தானுவேயென்று - கர்த்தனேயென்று —இராமன்போய் - சித்தராமன்சென்று —எனுரமுதின் - என்னுடையதேவாமிர்தம்போன்றவல்லமனது —செந்தாள் - சிவந்தபாதங்களாகிய—போதினைப்பற்றி - மலர்களைப்பிடித்துக்கொண்டு —வீழ்ந்தான் - வணங்கினான். எ - று. எனுரமுது இடைக்குறை. செந்தாட்போது உருவகம்.

தன்னின மாமி ராமன் சரண்புகி லவன்செய் தீமை
யுன்னுவ னலனெங் கோமா னுடன்றுவந் திலங்கை காக்கு
மன்னவன் கவின்கூர் வெள்ளி மலையெடுத் தலைத்து வந்து
பின்னவன் வணங்கி நிற்பப் பிழையுளங் கொண்ட துண்டோ.

(இ - ள்.) தன்னினமாமிராமன் - தன்னுடையினமாகிய சித்தராமன்—சரண்புகில் - சரணாகதியென்றடையில்—அவன்செய்தீமை - அவன்செய்தகுற்றங்களை—எங்கோமான் - எமதுகர்த்தனாகியவல்லமன் —உன்னுவனலன் - நினையான் —உடன்றுவந்து - கோபித்துவந்து—இலங்கைகாக்கும் - இலங்காபுரியைக்காக்கின்ற —மன்னவன் - இராவணன்—கவின்கூர் - அழகுமிகுந்த—வெள்ளிமலையெடுத்து - கைலையங்கிரியையெடுத்து —அலைத்துவந்து - வருத்தப்படுத்திவந்து —பின் - பின்னர்—அவன் வணங்கிநிற்ப - அவன்தொழுதுநிற்க —பிழை - அவன்செய்தபிழைகளை—உளங்கொண்டதுண்டோ - மனதில்வைத்தனரோ. எ - று. அரக்கனுதலின், தன்னினமாமிராமனென்றார். உடன்றுவந்து பிழையுளங்கொண்டதுண்டோவென முடிக்க. எங்கோமானெனலை உன்னுவனலனென்பதிலும், பிழையுளங்கொண்டதுண்டோவென்பதிலும் இடைநிலைத்தீபமாகக் கூட்டிப்பொருள்கொள்க. ஒருவனே கைலாசபதியாக நின்று இலங்கை இராவணன்செய்தபிழையை பொறுத்தாற்போல, இங்கே அல்லமனாகநின்று சித்தராமன்செய்தபிழையைப் பொறுத்தானெனக் கொள்க. (௫௭)

செய்யதாண் மலரின் வீழ்ந்த சித்தனை யருளா னோக்கி
யையநீ யெழுக நெஞ்சி லஞ்சலை யென்று கூறிக்
கையினு லெடுத்த ணைத்துக் கல்வியுந் தவமு மாய்க்கும்
வெய்யதாம் வெகுளி தன்னை விட்டிடே னென்று சொல்வான்.

(இ - ள்.) செய்ய - செம்மையாகிய — தாள்மலரில் - பாத தாமரையி ல்—வீழ்ந்தசித்தனை - வணங்கியசித்தராமனை — அருளாலேநோக்கி - கிரு பையினாற்பார்த்து — அய்ய - அய்யனே — நீயெழுக - நீயெழுந்திருப்பா யாக—நெஞ்சிலஞ்சலையென்று - மனதிற்பயப்படாதேயென்று — கூறி - சொல்லி — கையினாலெடுத்து - கையினாற்றூக்கி — அணைத்து - மார்போ டணைத்து — கல்வியுந்தவமுமாய்க்கும் - கல்வியையுந் தவத்தையுங்கெடுக் குந்தக்க — வெய்யதாம்வெகுளிதன்னை - கொடியகோபத்தை — விட்டி டென்று - விட்டுவிடக்கடவாயென்று — எந்தைசொல்வான் - எமது தந் தையாகிய வல்லமன்சொல்வான். எ - று. தாள்மலர் உருவகம். (ருஅ)

வலியவ னிடத்து மொத்தான் மாட்டினும் வெகுளி காத்தல்
பொலிவுசெ யறம தென்னப் பொருந்துறா தனையர் தம்பா
னலிவுறு வெகுளி செல்லா தாதலா னலிய லாற்ற
மெலியவ னிடத்திற் காக்கும் வெகுளியே யறம தென்பர்.

(இ - ள்.) வலியவனிடத்தும்-வலியுள்ளவனிடத்திலும் — ஒத்தான்மா ட்டினும் - தனக்குச்சமானமானவனிடத்திலும் — வெகுளிகாத்தல் - கோ பத்தைப்பொறுத்துக்கொள்ளுதல் — பொலிவுசெய் - வளர்தருகின்ற — அறமதென்னப்பொருந்துறாது - தர்மமெனத்தகாது — (ஏனெனில்) அனையர்தம்பால் - அப்படிப்பட்டவரிடத்தில் — நலிவுறு - வருத்துகின் ற — வெகுளி - கோபமானது — செல்லாதாதலால் - செல்லமாட்டாதாத லால் — நலியவாற்ற - வருத்தஞ்சகியாத — மெலியவனிடத்தில் - எளியவ னிடத்தில் — காக்கும்வெகுளியே - செல்லாதுகாக்கத்தக்ககோபமே — அ றமதென்பர் - தர்மமெனத்தகுமென்றறிஞர் கூறுவர். எ - று. சத்திய ற்றவனிடத்தில் கோபஞ்செல்லாதடக்கல் அறமெனவும், தமதுகோபஞ் செல்லத்தகாததால் வலியவனிடத்தும், தனக்கொப்பானவனிடத்தும், கோபஞ்செல்லாதடக்கல் அறமன்றெனவும் அறிஞர் கூறுவரெனக்கொ ள்க. வெகுளியே யென்பதிலேகாரம் சிறப்புப்பொருளைத் தரப்பிரித்துக் காட்டலால் பிரிநிலையெனப்படும். (ருகூ)

வைதவன் றன்னை நன்று வாழ்த்தின னெனவுந் தீய
செய்தவன் றன்னை நல்ல செய்தவ னெனவுங் கொள்வோன்
கைதவ மகன்ற முத்தி கண்டவ னவ்வா றன்றேன்
பொய்தவ னென்ப தென்று புகன்றனர் புலவ ரன்றே.

(இ - ள்.) வைதவன்றன்னை - திரித்தவனை — நன்றுவாழ்த்தினனெ

னவும் - நன்றாகத்துதித்தனனென்றும் — தீயசெய்தவன்றன்னை - தீங்கு செய்தவனை — நல்லசெய்தவனெனவும் - நன்குசெய்தானென்றும் — கொ ள்வோன் - எண்ணிக்கொள்வோன் — கைதவமகன்ற - கற்பனையிறந் த — முத்திகண்டவன் - நிஷ்காமியதவத்தோன் — அவ்வாறன்றேன் - அவ்வாறெண்ணாதோன் — பொய்தவன் - காமியதவத்தோன் — என்ப தென்று - எனவேதஞ்சொல்லுமென்று — புகன்றனர்புலவர் - அறிஞர் கூறுவர். எ - று. அன்று - ஏ - அசைகள். தன்னைவைதவனைத் துதித்தன னெனவும் தனக்குத்தீங்குசெய்தோனை நல்லியற்றினனெனவும், கொள் வோன் நிஷ்காமியெனவும், இவற்றிற்கு மாறாகச்சொல்வோன் காமிய தவத்தனெனவும், வேதங் கூறுமென்றறிஞர் கூறுவர். தீயநல்ல இவையிரண் டும் வினையாலணையும்பெயர். முத்திகண்டவன் பொய்தவன் என்பவற்றி ல் ஆக்கவினை யெஞ்சி நின்றன. (கூ0)

பெரியவர் தம்மைக் காய்ந்தான் பிறங்கல்கல் லியகோ லொப்பான்
புரிவன புரியப் பட்டுப் புலம்புவ னொத்தார் காய்ந்தா
னெரிநரகத்தனில் வீழ்வ னிழிந்தவர் காய்ந்தா னென்று
லொருவர்தம் மிடத்துஞ் சீற்ற முறுமையே நன்று மாதோ.

(இ - ள்.) பெரியவர்தம்மைக்காய்ந்தான் - பெரியோர்களைக்கோபித்த வன் — பிறங்கல்கல்லிய - மலையைக்கல்லிய — கோலொப்பான் - இருப்புக் கோலுக்கொப்பானவன் — ஒத்தார்காய்ந்தான் - தனக்கொத்தவர்களைமே ல்கோபித்தவன் — புரிவன - செய்யத்தக்கதீங்குகளை — புரியப்பட்டு - பிற ரால்செய்யப்பட்டு — புலம்புவன் - விசனமுறுவன் — இழிந்தவர்காய்ந்தா ன் - ஏழைகளைக்கோபித்தவன் — எரிநரகதனில்வீழ்வன் - அக்கினிமய மானநரகத்தில்வீழ்வன் — என்றால் - என்றுவேதாகமங்கூறுமாயின் — ஒ ருவர்தம்மிடத்தும் - ஒருவரிடத்திலும் — சீற்றமுறாமையே - கோபியா மையே — நன்று - நன்மையாம். எ - று. மாது-ஓ - அசைகள். புரிவன வினையாலணையும் பெயர். (கூக)

யாவர்க்கு மொப்ப நன்று மென்னினுஞ் சினமி லாமை
மூவர்க்கு மரிய செய்யு முனிவர்க்குஞ் சிறந்த தென்று
தேவர்க்கு மரிய வின்பஞ் சித்தரா மப்பே ரண்ணல்
மேவற்கு வடிவங் கொண்டு மேவிய விமலன் சொன்னான்.

(இ - ள்.) யாவர்க்குமொப்ப - யாவர்க்குமினியுமாறு — நன்றுமென் னினும் - கோபித்தல்நல்லதாகுமென்றாலும் — சினமிலாமை - கோபியா

மை—மூவர்க்கும் - திரிமூர்த்திகளுக்கும் —அரியசெய்யும் - அரியதவத்தைச்செய்யும்—முனிவர்க்கும் - ரிஷிகளுக்கும்—சிறந்ததென்று - சிறப்புற்றதென்று —தேவர்க்குமரிய - தேவர்களுக்குங்கிடைத்தற்கரிய —இன்பம் - பேரின்பத்தை —சித்தராமப்பேரண்ணல் - சித்தராமனென்னும் பெயரையுடையதலைவன் —மேவற்கு - அடைதற்கு —வடிவங்கொண்டு மேவிய - மானிடவடிவங்கொண்டுவந்த—விமலன்சொன்னான் - அல்லமன்சொல்லினன். எ - று. கோபித்தல் எவர்க்குமொப்பவிவையினும் கோபியாமையே மூவர்க்கும் முனிவர்க்கும் சிறப்புற்றதென் றல்லமன் சொல்லினனெனப் பொருள்கொள்க. (௬௨)

அல்லம னுறைந்த மாற்ற மறிந்துநஞ் சித்த ராமன்
சொல்லுவன் முத்தி யெய்துந் துணையசா தனங்க ளெல்லா
மில்லையென் னிடத்தி லேனு மென்னைநீ வலிந்தாட் கொள்ள
நல்லவ னுக்குச் செய்த நன்மையே நன்மை யென்று.

(இ - ள்.) அல்லமனுறைந்தமாற்றம் - அல்லமன்சொல்லியவசனங்களை —அறிந்து - தெரிந்துகொண்டு — நஞ்சித்தராமன் - நமதுசித்தராமனென்போன் —சொல்லுவன் —சொல்லுவானானான் —முத்தியெய்துந்துணைய - மோட்சத்தையடையுந் துணையாகிய —சாதனங்களெல்லாம் - சாதனக்கருவிகளனைத்தும் — இல்லையென்னிடத்திலேனும் - என்னிடத்தில் இல்லாமற்போயினும்—என்னை - அடியேனை —நீவலிந்தாட்கொள்ள - நீவலிந்தடிமைகொள்வான்வேண்டி — நல்லவனுக்குச்செய்த - பக்குவமுள்ளவனுக்குச்செய்த—நன்மையேநன்மையென்று - நன்மையேநன்மையாகுமென்று எ - று. ஏனையசாதனங்களிருப்பினும் அவையல்லவெனமறுக்க, முத்தியெய்துந் துணையசாதனங்களென்றார். என்னிடத்திலேனு மென்பதிலும்மை இழிவுசிறப்பு. துணையவென்பதைத் துணையாகின்றுள்ள வெனக் குறிப்புப்பெயரெச்சமாக்கினு மமையும். (௬௩)

கருத்தழி கடமி றங்கு கவுட்கரி வலிந்து பற்றித்
திருத்துபு தன்கா லேவுஞ் செயல் செயக் கொள்வ தன்றி
யொருத்தல்வந் தறிந்து தானே யுறவுகொண் டிடுவ துண்டோ
தெரித்திடி லடிய னேனின் றிருவடிக் கத்தி றத்தேன்.

(இ - ள்.) கருத்தழி - யாவரதெண்ணங்களையுங்கலக்குகின்ற—கடமிறங்கு - மதசலம்பொழிகின்ற —கவுள் - கன்னத்தையுடைய —கரி - யானையை —வலிந்துபற்றி - பலவத்காரமாகப்பிடித்து —திருத்துபு - தன

தெண்ணத்தின்படிதிருத்தி — தன்காலேவும் - தனதுகாலாலேவப்பட்ட—செயல்செய - வேலையைச்செய்யும்படியாக —கொள்வதன்றி - ஏற்றுக்கொள்வதன்றி—ஒருத்தல் - யானையானது —வந்து - வலியவந்து—அறிந்து - இவனையறிந்து—தானேயுறவுகொண்டிடுவதுண்டோ - தானேயுறவுகொள்ளுமா —தெரித்திடில் - தெரிவிக்குமிடத்தில் —அடியேன் - அடியேன் —நின்றிருவடிக்கு - உமதுபாதத்தொண்டுக்கு —அத்திறத்தேன் - அத்தன்மையனாயிருக்கின்றேன். எ - று. கடமிறங்கு கவுட்கரியென்றதனால் கருத்தழியென்பதற்குக் கண்டவர்கருத்தைக்கலங்கச் செய்யுமென்றும். காட்டானையைவலிந்துபற்றித் தன்னிஷ்டப்படிதிருத்தித்தான்கற்றுக்கொடுத்தவேலைகளை யதனிடத்திலில்லாமையினாலே தல்லாமல் அதுவேதன்னிடத்திலவலியவந்து இவனிஷ்டப்படி நடக்குமா? அதுபோல யானும் உனக்கத்தகையனாயிருக்கின்றேனெனப் பொருள் கொள்க. தெரித்திடில் பிறவினை. (௬௪)

அடன்மலி வீரன் வீர மவனெதிர் மலைந்து நின்றோன்
படைமிசை கொண்டு காணப் படுமது போலவுன் றன்
கடன்மலி யருளி னாற்றல் கண்டிடப் படுமிங் கென்றன்
கொடுமையின் மிகையா லென்று குடந்தம்பட் டழுங்கிக் கூறி.

(இ - ள்.) அடன்மலி - வெற்றிமிகுந்த—வீரன் - சுத்தவீரனது—வீரம் - வீரத்தன்மை —அவனெதிர் - அவனெதிரில் —மலைந்துநின்றோன் - எதிர்த்துநின்றோனது—படைமிசை - சேனையின்மேல்—கொண்டு - தனதாயுதங்கொண்டு—காணப்படுமதுபோல - காணப்படுந்தன்மைபோல—உன்றன் - உன்னுடைய—கடன்மலி - கடல்போலுமிகுந்த—அருளினாற்றல் - அருளினாற்றல் - என்னுடைய — கொடுமையின்மிகையால் - துஷ்டத்தனத்தின்மிகுதியால்—இங்கு - இவ்விடத்தில் —என்றன் - என்னுடைய —கொடுமையின்மிகையால் - துஷ்டத்தனத்தின்மிகுதியால் —கண்டிடப்படுமென்று - காணப்படுமென்று — குடந்தம்பட்டு - வாதைப்பட்டு—அழுங்கி - மனம்நொந்து—கூறி - சொல்லி. எ - று. சுத்தவீரனது வீரத்தன்மை யெதிர்த்தோனிடத்துக்காணப்படுவதுபோல எனது கொடுமையின்மிகுதியால் உனதருளினாற்றல் காணப்பட்டதெனமுடிக்க. (௬௫)

என்றுரை வினையா தெந்தா யினித்திரு வுளமி ரங்கி
நன்றுறு முத்தி சேரு நன்னெறி காட்டி தென்று

தன்குறை யிரந்து ளைந்து தனைநிகர் சித்த ராமன்
முன்களை யிறந்த வன்பான் முதல்வனை வணங்கி னானால்.

(இ - ள்.) என்குறை - எனதுகுற்றங்களை — நினையாது - நினைக்காமல் — எந்தாய் - என்றந்தையே — இனி - இனிமேல் — திருவுளமிரங்கி - மனதிரங்கி — நன்குறுமுத்திசேரும் - ஐக்யமுத்தியடைதற்கியைந்த — நன்னெறிகாட்டுகென்று - நன்மார்க்கத்தைக்காட்டக்கடவாயென்று — தன்குறை - தனதுகுறைகளை — இரந்து - இரந்துகூறி — உளைந்து - மனம்வருந்தி — தனைநிகர் - தனக்குத்தானேயொப்பாகிய — சித்தராமன் - சித்தராமனென்போன் — முன் - முன்னதாக — களையிறந்தவன்பால் - அளவில்லாதவன்பினால் — முதல்வனை - அல்லமனை — வணங்கினான் - நமஸ்கரித்தனன். எ - று. ஆல் - அசை. முத்தியென்றது நன்குறுமென்னுமடையால் ஐக்யமுத்தியென்றும். தொண்டுபுரிதலில் உவமைகட்கோணாதலின் தனைநிகர்சித்தராமனென்றார். சித்தராமன் இரந்து உளைந்து வணங்கினான் எனக்கூட்டிமுடித்துப் பொருள்கொள்க. (௬௬)

வணங்கிய வவனை ஞான வாரிதி யருளா னோக்கி
யிணங்கிய பருவங் காணு மிவன்றனக் கின்ப முத்தி
யணைந்திடு நெறியீ தென்ன வறைவமென் றுளத்துட் கொண்டு
பிணங்குறு பிறவி யென்னும் பிணிமருந் தனையான் சொல்வான்.

(இ - ள்.) வணங்கியவவனை - வணங்கியவந்தச்சித்தராமனை — ஞானவாரிதி - ஞானசமுத்திரமாகியவல்லமன் — அருளானோக்கி - கிருபையினாற்பார்த்து — இணங்கிய - தக்க — பருவங்காணுமிவன்றனக்கு - பருவத்தைக்காணுகின்றவிவனுக்கு — இன்பமுத்தி - பேரின்பவீடு — அடைந்திடுநெறி - வருதற்கியைந்தமார்க்கம் — ஈதென்ன - இதுவென்று — அறைவமென்று - தெரிவிப்போமென்று — உளத்துட்கொண்டு - நினைத்து — பிணங்குறு - மாறுபாடுள்ள — பிறவியென்னும்பிணி - பிறப்பாகிறவியாதிக்கு — மருந்தனையான் - அமிழ்தம்போல்பவனாகியவல்லமன் — சொல்வான் - சொல்வான். எ - று. ஞானவாரிதி உவமைப்புறத்துப்பிறந்தவன்மொழித்தொகை. பிறவியென்னும்பிணி உருவகம். பிணங்குறல் ஒன்றுபோல்வாராமை. (௬௭)

பருவமுற் றிலர்க்கு முக்கட் பகவனா கமத்தி னுண்மைப்
பெருமையைப் பொருளை யெண்ணிப் பெருமிதத் துரைப்பி லன்னான்

குரவரிற் பதடி யென்ப குறித்துநற் பருவ நோக்கி
யருள்செயிற் குரவ சிங்க மவனென வறைவ னையன்.

(இ - ள்.) பருவமுற்றிலர்க்கு - பரிபாககாலம்நிறைவேறாதார்க்கு — முக்கட்பகவன் - பரமசிவனாற்செய்த — ஆகமத்தின் - ஆகமத்திலுள்ள — உண்மைப்பெருமையை - உண்மையினது பெருமையையும் — பொருளை - அர்த்தத்தையும் — எண்ணி - நினைத்து — பெருமிதத்து - பெருமைநோக்கி — உரைப்பில் - உபதேசித்தால் — அன்னான் - அப்படிப்பட்டவன் — குரவரில் - ஞானாசிரியருள் — பதடியென்ப - பதடியென்றறிஞர் கூறுவர் — குறித்து - சீடனடையைக்குறித்து — நற்பருவநோக்கி - நல்லபரிபாககாலத்தைநோக்கி — அருள்செயில் - அநுக்கிரகஞ்செய்தால் — குரவசிங்கமவனென - ஞானாசிரியரில்சிங்கம்போல்பவனவனென்று — அறைவன் - சொல்லுவன் — ஐயன் - அல்லமதேவன். எ - று. பெருமை பற்றிப்பருவமல்லாதார்க்குபதேசிப்பவன் குரவரிற்பதடியெனவும், தக்க பருவநோக்கி யுபதேசிப்பவன் குரவசிங்கமவனெனவும் அல்லமன்சொல்லினனென்க. ஆகமத்தினுண்மைப்பெருமை, மகாவாக்கியத்தின் மகிமையை. பொருள், வாச்சியார்த்த லட்சியார்த்தங்களை. பெருமிதத்தென்பது, தனக்குப் பெருமைவாய்க்கும்படி யெனப்பொருள்கொள்ளினு மமையும்.

உரைசெயிற் பரம ஞான மொன்றுமே முத்திக் கேது
சரிதைநற் கிரியை யோகந் தாமொரு மூன்று ஞான
மருவுதற் கேது வென்று மறைபுகன் றுரைக்கு மிந்தக்
கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவ ரன்றே.

(இ - ள்.) உரைசெயில் - சொல்லுமிடத்தில் — பரமஞானமொன்றுமே - ஆத்மஞானமொன்றே — முத்திக்கேதுவென்று - ஐக்யமுத்திக்கேதுவென்றும் — சரிதை - சரியையும் — நற்கிரியை - நல்லகிரியையும் — யோகந்தாம் - யோகமும் — ஒருமூன்றும் - ஆகியவிம்மூன்றும் — ஞானமருவுதற்கு - ஆத்மஞானமடைதற்கு — ஏதுவென்றும் - ஏதுவென்று — மறை - வேதங்கள் — புகன்றுரைக்கும் - வகுத்துச்சொல்லும் — (இங்ஙனமிருக்க) இந்தக்கருவியை - சரியையாதியிம்மூன்றுகருவிகளையும் — பொருளென்றெண்ணி - சிறந்தபொருளாகக்கருதி — களிப்பவர் - சந்தோஷிப்பவர்கள் — கயவர் - மூடர்களாவர். எ - று. அன்று - ஏ - அசைகள். முத்திக்கேது ஞானமெனவும், ஞானத்துக்கேது சரியையாதிமூன்றுமெனவுமிருக்கக் கருவிகளைமுத்தியென்றெண்ணிக்களித்தல் மூடமென்ப

ஞ்சுருத்து. என்றென்பதை இருவயினொட்டுக. ஒன்றுமேயென்பதி லே
காரம் பிரிநிலை. என்றுமென்பதிலும்மை வருவித்தது. (௬௯)

கருமமும் யோகந் தானுங் கரணத்தைப் புனித மாக்கிப்
பொருமிடர் வாயி லேறும் புக்குழல் கறங்கு போலத்
தெருமரா துண்ணி றுத்துந் தெளிந்தவக் கரணந் தன்னா
னிருமல னுரு யீச னித்தனென் றுணர்வு திக்கும்.

(இ - ள்.) கருமமும்யோகந்தானும் - கருமமும்யோகமும் —கரணத்தைப்புனிதமாக்கி - மனதைப்பரிசுத்தமாக்கி —பொரும் - வருத்துகின்ற—இடர் - துன்பமயமாயுள்ள —வாயிலேறும் - ஐம்புலவழிகடோறும்—புக்கு - சென்று—உழல்கறங்குபோல - அலையுங்காற்றாடிபோல—தெருமராது - சுழலாது—உண்ணிறுத்தும் - அகத்தில்நிறுத்திவிடும்—தெளிந்தவக்கரணந்தன்னால் - அங்ஙனந்தெளிவுற்றமனதினால்—நிருமலனுரும் - மலரகிதனாகிய—ஈசன் - பரமசிவனே—நித்தனென்று - நித்தியத்துவமுடையனென்று—உணர்வுதிக்கும் - அறிவுதோன்றும். எ - று. கருமமும்யோகமும் புனிதமாக்கி உண்ணிறுத்துமெனவும், தெளிந்தவக்கரணந்தன்னால் உணர்வுதிக்குமெனவுங்கூட்டிப் பொருள்கொள்க. (௭௰)

நித்திய னிமல னென்னு நினைவுறி னனித்த மாகிப்
பொய்த்தழி புடம்பு டம்பைப் பொருந்திய பொருள்வெறுத்து
மெய்த்தருள் குரவன் றன்னை விரும்பினன் சென்று சார்ந்து
தத்துவ முதறி னின்ற தனியறி வினையே காணும்.

(இ - ள்.) நித்தியன் - நித்தியனென்றும் —நிமலனென்னும் - நின்மலனென்றுங்கொள்ளும்—நினைவுறின் - நினைவுதிக்கின் —அநித்தமாகி - அநித்தநிலையுடையதாகி — பொய்த்து - பொய்ப்பட்டு — அழி - நசிக்கின்ற—உடம்பு - உடலையும்—உடம்பைப்பொருந்திய - அவ்வுடல்காரணமாகச்சார்ந்த—பொருள் - பொருளையும் —வெறுத்து - வெறுப்புற்று—மெய்த்தருள் - உண்மையைவிளக்கும்—குரவன்றன்னை - ஞானாசிரியனை —விரும்பினன் - விருப்புற்றவனாய் —சென்று - தேடிப்போய்—சார்ந்து - அவனிடத்திற்சேர்ந்து —தத்துவமுதறினின்ற - தத்துவமனைத்துங்கடந்துநின்ற—தனியறிவினையே - ஏகசைதன்யத்தையே—காணும் - தரிசித்துக்கொண்டிருப்பன். எ - று. நினைவுறின் உடலையும் பொருளையும் வெறுத்து ஞானாசிரியனைவிரும்பிச் சென்று சார்ந்து காணுமெனமுடிக்க.

காணுமெனலை பல்லோர்படர்க்கைமுன்னிலைதன்மையிலென்னும் விதியாலுயர்திணை யாண்பாலாக்குக. (௭௧)

புலன்களை யொழித்த போதே பொறிகளும் பூத மைந்துங்
கலங்குறு கரண நான்குங் கலாதியுஞ் சுத்த மைந்தும்
விலங்குறு மடியில் வைத்த வெறுங்குடந் தள்ளின் மேன்மேன்
மலங்குற வொருங்க டுக்கு மட்கலம் விழுத லேபோல்.

(இ - ள்.) புலன்களை - ஐம்புலன்களையும் —ஒழித்தபோதே - களைந்தவுடன் —பொறிகளும் - ஐம்பொறிகளும் —பூதமைந்தும் - பஞ்சபூதங்களும் —கலங்குறும் - சஞ்சலமுறுகின்ற —கரணநான்கும் - மனமுதலிய நான்குகரணங்களும்—கலாதியும் - கலைமுதலியவைகளும் — சுத்தமைந்தும் - சுத்தமுதலியவைந்தும்—விலங்குறும் - தாமேநீங்கும்—அடியில்வைத்த - அடியில்வைத்திருக்கின்ற —வெறுங்குடம் - வெறுங்குடத்தை—தள்ளின் - இழுத்துவிட்டால் — மேன்மேல் - மேல்மேலாக —மலங்குற - அசையும்படி —ஒருங்கடுக்கு - ஒருமிக்கவடுக்கிய —மட்கலம்விழுதலேபோல் - மண்பானைகள்விழுவதுபோல. எ - று. அடிப்பானையையிழுக்க மேலடுக்குப்பானைகள் தாமேவிழுவதுபோலப் புலன்களைக்களைந்தபொழுதே பொறி, பூதம், கரணம், கலை, சுத்தமுதலியவைகள் தாமேநீங்குமெனப்பொருள்கொள்க. புலன்களைந்தாவன ; சுரோத்திரமுதலானவைகளை. பொறிகளைந்தாவன ; மெய்வாய்முதலியவைகளை. பூதமைந்தாவன ; மண்நீர்முதலியவைகளை. கரணநான்காவன ; மனமுதலியவைகளை. கலாதியைந்தாவன ; கலை, வித்தை, இராகம், புருடன், மாயை, என்பவைகளை. சுத்தமைந்தாவன ; சுத்தம், சுபாவம், சூனியம், ஒழிவு, அதீதம் என்பவைகளை. (௭௨)

இந்திய மோரொன் றாய்விட் டிடின்மற்றை யொன்று சாரு
முந்திய மனம ழிப்ப முற்றும்போ மணிய பாம்பி
னைந்தலை களிறு ளொன்றை யரிந்திடின் மற்றின் றுலஞ்
சிந்திடு மிடற ரிந்தாற் றீர்ந்திடு மொருங்கு மாதோ.

(இ - ள்.) இந்தியம்-பஞ்சேந்திரியங்களையும்—ஓரொன்றாய்விட்டிடில் - ஒவ்வொன்றாகவிட்டுவிட்டால் —மற்றையொன்றுசாரும் - வேறொன்று வந்துசாரும்—முந்திய - முதலாகநின்றுள்ள—மனமழிப்ப - மனதைக்கெடுக்க—முற்றும்போம் - எல்லாப்பற்றுக்களுமொருங்கேபோகும்—மணிய - மணியை ... முடைய—பாம்பின் - பாம்பினைந்தலைகளினுள்

களுக்குள் —ஒன்றையரிந்திடில் - ஓர்தலையையரிந்தால்—மற்றொன்று - வேறோர்தலை —ஆலஞ்சிந்திடும் - விஷத்தைக்கக்கும் —மிடறரிந்தால் - கழுத்தையறுத்தால் —சேர்ந்திடுமொருங்கு - ஒருமிக்கவனைத்தும்போய்விடும். எ-று. மாது-ஓ - அசைகள். ஐந்தலைநாகத்தின் ஓர்தலையறுத்தால் ஏனையதலைகள் விஷங்கக்குமென்று கழுத்தையரிந்தாற்போல, இந்திரியங்களையொவ்வொன்றாய்விடின் ஏனையவிடயங்களிற்சாருமென்று, எவற்றிற்குமுதற்காரணமாய மனத்தையழிக்கச் சகலபற்றுக்களும் போமெனமுடிக்க. மணிய, குறிப்புப்பெயரெச்சம். ஒன்றொன்றுமெனல், ஓரொன்றுமென்றது விகாரம். (௭௩)

ஆதலான் மனம டங்கி லங்கலிங் கங்க டம்முட்
பேதமோ வபேத மோவென் றழிவுறு பித்து நீங்கு
நீதிலா யென்றி யம்பிச் சித்தரா மற்கு நாவா
லோதொணா வுணர்வி னுண்மை யுணர்த்தினன் குருகு கேசன்.

(இ-ள்.) ஆதலால் - ஆகையால் —மனமடங்கில் - மனமடங்குமாயின்—அங்கலிங்கங்கள் - உடலுமுயிரும்—தம்முள் - தங்களுக்குள்—பேதமோவபேதமோவென்று - பேதத்துக்கியைந்ததோவபேதத்திற்கியைந்ததோவென்றுகொண்டு —அழிவுறு - கெட்டுப்போகின்ற —பித்துநீங்கும் - மயக்கநீங்கும் —நீதிலாயென்று - குற்றமற்றவனேயென்று—இயம்பி - சொல்லி—சித்தராமற்கு - சித்தராமையருக்கு —நாவால் - நாக்கினால்—ஓதொணா - சொல்லப்படாத —உணர்விநுண்மை - எதார்த்தவறிவினதுஉண்மையை —குரு - குருவாக —குகை - யாவருள்ளத்திலுமிருக்கின்ற—ஈசன் - அல்லமன்—உணர்த்தினன் - விளக்கினன். எ-று. ஆத்மானுத்மாவைப் பேதமென்போர் மதத்தரும், அபேதமென்போர் வேதாந்தியுமாயினும் ; வஸ்து அங்கலிங்கம்போற்றோற்றினும் ஆரோபமாதலின் ஒன்றுமன்று பலவுமன்று, இதனையறியாதுவாதித்தல் பிராந்தியாதலின் பித்தென்றார். நாவினாலோதொணாமையாவது; அநுபூதிநிலையை. மனமடங்கிற்பித்துநீங்குமெனவே, கிரியாசாதனையின்றியக்கண் சங்கற்பநாசத்திற்கும் பிராந்திநாசத்திற்கும் இடமின்மைபெற்றும். நாவாலோதொணாவென்றதைப்பெற்றது எழுதாமறையெனற்கு. அழிவுறுதலாவது; வஸ்துநிச்சயந்தெரியாதுகலங்கிமாய்தலே. குருகுகேசன் இயம்பி உணர்த்தினனெனக்கூட்டிமுடிக்க. ஒணாவென்பதிடைக்குறை. (௭௪)

மனிதரு ளுரகர் சித்தர் வானவர் கணங்க டம்முண்
முனிவரு ளென்போ னின்றன் முழுதருள் பெற்றா ரில்லை

யினியெனை நிகர்வார் யாவ ரென்றருட் குரவ னார்தம்
பனிமல ரடியில் வீழ்ந்து பணிந்தனன் சித்த ராமன்.

(இ-ள்.) மனிதருள் - மனிதர்களுக்குள்ளும்—உரகர்தம்முள் - நாகலோகத்தாருக்குள்ளும்—சித்தர்தம்முள் - சித்தர்களுக்குள்ளும்—வானவர்தம்முள் - தேவர்களுக்குள்ளும்—கணங்கடம்முள் - சிவகணங்களுக்குள்ளும்—முனிவருள் - ரிஷிகளுக்குள்ளும்—என்போல் - என்னைப்போல—நின்றன் - உன்னுடைய —முழுதருள் - பூரணவருளை — பெற்றாரில்லை - அடைந்தவர்களில்லை—இனி - இனிமேல்—எனைநிகர்வார்யாவரென்று - எனக்கொப்பாவார் யாவரென்றுசொல்லி—அருள் - கிருபையையுடைய—குரவனார்தம் - அல்லமதேவருடைய —பனி - குளிர்ச்சிபொருந்திய—மலர் - தாமரைமலர்போன்ற—அடியில் - உபயபாதங்களில் —வீழ்ந்து - விழுந்து—பணிந்தனன் - வணங்கினன்—சித்தராமன் - சித்தராமனென்போன். எ-று. சித்தராமன் என்றுசொல்லி பணிந்தனனென முடிக்க. (௭௫)

இப்பரி சருளி னாலே யிராமனுக் குபதே சித்துச்
செப்பரு மவன்குற் றேவல் செய்யிய வுளம கிழ்ந்து
கைப்படு மமிர்த மன்ன கருணைவா ரிதியி ருந்தான்
றுப்புர வமைந்த சீர்சால் சொன்னலா புரத்து மாதோ.

(இ-ள்.) இப்பரிசு - இவ்வண்ணமாக — அருளினால் - கிருபையினால்—இராமனுக்கு - சித்தராமனுக்கு — உபதேசித்து - அனுக்கிரகித்து—செப்பருமவன்-சொல்லுதற்கரியவனாகிய சித்தராமன்—குற்றேவல்செய்யிய - தனக்குத்தொண்டுசெய்யும்படியாக—உளமகிழ்ந்து - மனமகிழ்ந்து —கைப்படும் - கையிற்கிடைத்த —அமிர்தமன்ன - அமிர்தத்துக்கொப்பாகிய—கருணைவாரிதி - கிருபாசமுத்திரம்போன்றவல்லமன் —துப்புரவமைந்து - சகலஅலங்காரமுமமைந்து—சீர்சால் - அதனுஞ்சீர்த்திமிக்க—சொன்னலாபுரத்து - சொன்னலாபுரமென்னும்பதியில் —இருந்தான் - இருந்தனன். எ-று. மாது - ஓ - அசைகள். கருணைவாரிதி உபதேசித்து உளமகிழ்ந்து சொன்னலாபுரத்து இருந்தானெனக் கூட்டிமுடிக்க. (௭௬)

சித்தராமையர்-கதி முற்றிற்று.

ஆ - கதி - ௧௩ - இ - விருத்தம் - ௭௨௩.

பதினான்காவது

வசவண்ணர்கதி.

வேறு.

சித்த ராமனோ டாரிய வல்லம தேவன்
பத்த ராகிய பயிர்செய்கல் யாணமாம் பழனத்
துய்த்த நீரெனும் வசவனை யுழவரிற் கண்டு
மெய்த்து மார்வமங் கடைந்தமை யாமினி விரிப்பாம்.

(இ - ள்.) சித்தராமனோடு - சித்தராமனென்பவனுடன் — ஆரியன் - ஆசிரியமூர்த்தனாகிய — அல்லமதேவன் - அல்லமதேவனென்பவன் — பத்தராகிய - அடியார்களாகிய — பயிர் - பயிர்களை — செய் - விளைவிக்கின்ற — கலியாணமாம்பழனத்து - கலியாணபுரியென்னுங்கழனியில் — உய்த்த - பாய்ச்சிய — நீரெனும்வசவனை - நீரென்கின்றவசவண்ணரை — உழவரில் - பயிரிடுவோரைப்போல — கண்டு - பார்த்து — மெய்த்தும் - உண்மையாகிய — ஆர்வம் - ஆசையை — அங்கு - அவ்விடத்தில் — அடைந்தமை - பெற்றதை — யாம் - நாம் — இனி - இனிமேல் — விரிப்பாம் - விரித்துச்சொல்லுதும். எ - று. பத்தராகியபயிர், கலியாணமாம்பழனம், நீரெனும்வசவன்; இவைஉருவகம். (க)

அன்ன மீனுட னிகழ்வறக் கொண்டமை யாமற்
செந்நெ லார்வய றீப்பசி யாற்றுபு சிறந்த
சொன்ன லாபுரந் தவஞ்செய்த தென்றுவான் றுதிப்ப
வென்னை யாளுடை யல்லம னிருந்தரு ணாளில்.

(இ - ள்.) அன்னம் - அன்னப்பட்சிகள் — மீனுடன் - மீன்களுடன் — இகழ்வற - பழிப்புநீங்க — கொண்டு - உறவுகொண்டு — அமையாமல் - இராமல் — செந்நெல் - செந்நெற்பயிர்கள் — ஆர் - பொருந்திய — வயல் - கழனியில் — தீப்பசி - கொடூரமாகியபசியை — ஆற்றுபு - தணித்து — சிறந்த - சிறப்புற்றமையப்பெற்ற — சொன்னலாபுரம் - சொன்னலாபுரமானது — தவஞ்செய்ததென்று - மிக்கதவத்தைச்செய்ததென்று — வான் துதிப்ப - தேவர்கள்துதிக்கும்படியாக — என்னையாளுடையல்லமன் - என்னையடிமைகொண்டவல்லமதேவன் — இருந்தருணாளில் - எழுந்தருளியிருக்குநாளில். எ - று. அல்லமன் சொன்னலாபுரத்தில் சித்தராமனோடு இருக்குநாளிலெனமுடிக்க. (உ)

சந்த மேவு கல்யாணமா நந்தனந் தன்னி
னந்தி நாண்மலர்ப் புகழ்மண நயந்தசொல் வளியால்
வந்து காதெனு நாசியிற் புகமிக மகிழ்ந்த
துந்து வார்திரைக் கருங்கட லுடுத்தபே ருலகம்.

(இ - ள்.) சந்தமேவும் - அழகுபொருந்திய — கல்யாணமாம் - கல்யாணபுரியாகிய — நந்தனந்தன்னில் - பூங்காவனத்தில் — நந்தி - வசவண்ணரென்னும் — நாள் - அன்றலர்ந்த — மலர் - தாமரைமலரின் — புகழ் - அவரதுகீர்த்தியாகிய — மணம் - வாசனை — நயந்தசொல் - அவரதினியமொழியென்னும் — வளியால் - காற்றினால் — வந்து - வந்து — காதெனு நாசியில் - காதென்னுமூக்கில் — புக - நுழைய — உந்து - மோதுகின்ற — வார் - நீண்ட — திரை - அலைகளையுடைய — கருங்கடல் - கருங்கடலை — உடுத்த - ஆடையாகவுடுத்த — பேருலகம் - பெரியவுலகமானது — மிகமகிழ்ந்தது - மிகவுஞ்சந்தோஷித்தது. எ - று. கல்யாணமாநந்தனம், நந்திமலர், புகழ்மணம், நயந்தசொல்வளி, காதெனுநாசி, இவையுருவகம். மகிழ்தலை ஏற்றற்பாலதன்மையின், உலகினரை உலகமென்றது இடவாகுபெயர்.

முக்க ணாயகன் புகழெனு மூரலுண் பதற்குத்
தக்க தீஞ்சுவைக் கறியெனச் சமைந்தது வசவன்
மிக்க வான்புக ழவற்றினை மாதவர் விரவித்
துய்க்கு நாவினிற் றுய்த்தனர் பவப்பசி தொலைய.

(இ - ள்.) முக்கணாயகன் - பரமசிவனது — புகழெனும் - கீர்த்தியென்கிற — மூரல் - சாதத்தை — உண்பதற்கு - சாப்பிடுதற்கு — தக்க - தகுந்த — தீஞ்சுவை - இனியசுவையமைய — கறியென - பதார்த்தமாக — வசவன் - வசவண்ணரது — மிக்க - மிகுந்த — வான் - சிறந்த — புகழ் - கீர்த்தியானது — சமைந்தது - அமையப்பெற்றது — அவற்றினை - அவ்விருவகையினையும் — மாதவர் - மகாதவத்தினர் — விரவி - கலந்து — துய்க்கும் - புசிக்கத்தக்க — நாவினில் - நாக்கினால் — பவம் - செனனமென்னும் — பசி

தொலைய - பசிகெட—நுய்த்தனர் - புசித்தார்கள். எ - று. புகழேறு மூரல் பவப்பசி உருவகம். இங்கேதுய்க்குநரவென்றது, அறிவை. பவப்பசிதொலையத்துய்த்தலாவது; சங்கற்பவயமாகாமையென்க. இவ்விருவர் புகழையும்விரவுதலாவது; ஞானாகாரமாகச்சிந்தித்தலை. முக்கனியுகன் புகழைமூரலென்றது; ஞெப்தியே பிரியமாயதைக்குறித்தற்கும், வசவன் மிக்கவான்புகழ்சுவைக்கறி யென்றது; அதற்கேயங்க சாதனங்களாகிய இயமநியமாதிகளைக் குறித்தற்குமென்க. (௪)

விலக்கு றும்பவச் சித்தரா மற்குமுன் விளம்பு
மிலக்க ணத்தினுக் கருணந்தி யெனுமிலக் கியத்தைக்
கலக்க மற்றறிந் திடுவதற் குதாரணங் காட்ட
மலக்க மற்றநம் மல்லமன் றிருவுளம் வலித்தான்.

(இ - ள்.) உற்பவம் - பிறவியை—விலக்கும் - நீக்கிய—சித்தராமற்கு - சித்தராமனென்பவற்கு—முன்விளம்பும் - முன்னேசொல்லிய—இலக்கணத்தினுக்கு - சச்சிதானந்தமுதலியவிலக்கணங்களுக்கு—அருள் - கிருபைபொருந்திய—நந்தியெனுமிலக்கியத்தை - வசவண்ணரென்னுமிலக்கியத்தை—கலக்கமற்று - சந்தேகமற்று—அறிந்திடுவதற்கு - தெரிந்துகோடற்கு—உதாரணங்காட்ட - உதாரணங்காட்டும்படி—மலக்கமற்ற - விபரீதமற்ற—நம்மல்லமன் - நமதல்லமதேவன்—திருவுளம்வலித்தான் - உறுதியாகத்திருவுளங் கொண்டனன். எ - று. ஐயந்திரிபறத்தெளிந்தவனாதலின் ஆகாமியமுளைத்தற்கிடங் கொடானெனக்காட்ட, விலக்குமுற்பவச்சித்தராமனென்றார். முன்னர்சித்தராமன் ஐக்கியமெய்தற் கியைந்த இலக்கணத்துக்கு இலக்கியமாகிய பரவஸ்துவைப்போல வசவண்ணர் இருத்தலின் அவரை இலக்கியமெனப்பட்டது. (௫)

அடிய வர்க்கெளி யானெனு மவனெம தகத்திற்
குடியி ருக்குமவ் விராமனை யுடன்கொடு குறிலோர்
நெடில டுத்தநன் னிரையென வந்நகர் நீங்கிக்
கொடிம திற்கலி யாணமா நகர்வழிக் கொண்டான்.

(இ - ள்.) அடியவர்க்கெளியானெனும் - அன்பர்க்கெளியனென்று சொல்லப்பட்ட—அவன் - அந்தவல்லமதேவன்—எமதகத்தில் - எமதுள்ளத்தில்—குடியிருக்கும் - வாசஞ்செய்யப்பட்ட—அவ்விராமனை - அந்தச்சித்தானது—ஓர்நெடிலடுத்த - ஓர்நெடிலோடிணைந்த—நல் - நல்ல—நிரை யென - நிரையசையைப்போல—அந்நகர்நீங்கி - அந்தப்பட்டணத்தைவிட்டுநீங்கி—கொடி - கொடிகட்டிய—மதில் - மதில்சூழ்ந்த—கலியாணமாநகர்வழிக்கொண்டான் - கலியாணபுரிமார்க்கமாகச்சென்றான். எ - று. குறிலோர்நெடிலடுத்தநன்னிரையாவது; குறினெடிலிணைந்துவரு நிரையசையென்க. "என்னை குறிலே நெடிலே குறிலிணை குறினெடில், ஒற்றொடுவருதலொடு மெய்ப்பட நாடின், நேருநிரையுமென்றிசிற்பெயரோ" என்றார் தொல்காப்பியனார். குறிலிணையென்னாது குறினெடிலென்றது; குறிலின்துவிகாரநெடிலானதுபோல அல்லமனுற்றெளிவுற்றவனெனக்காட்டற்கும், குறிலிணையெனின் அல்லமனுக் குவமிக்கப்படானெனற்கும், இடங்கொடாமையாலுமென்க. (௬)

நறும்ப ழஞ்செறி தனியிட மொய்த்திட நண்ணு
மெறும்பொ ழுங்கென வரனடி யவர்திர ளெழுந்து
மறந்து மவ்வெஞ்சமணர் குண்டரை யிணங்குறா வசவ
னுறும்பு ரம்புக விருவருங் கண்டுளம் முவந்தார்.

(இ - ள்.) நறும் - இனிய—பழஞ்செறி - பழங்கணிறைந்த—தனியிடம் - தனித்தவிடத்தில்—மொய்த்திட - மொய்க்கும்படி—நண்ணும் - போகின்ற—எறும்பொழுங்கென - எறும்புவரிசைபோல—அரனடியவர் - பரமசிவனடியார்கள்—திரள் - கூட்டமாக—எழுந்து - எழுந்திருந்து—மறந்தும் - மறதியுற்றும்—வெஞ்சமண் - கொடியசமணராகிய—குண்டரை - பாதகரை—இணங்குறா - சேராத—வசவன் - வசவண்ணன்—உறும் - தங்கிய—புரம் - பட்டணத்துக்கு—புகல் - போதலை—இருவருங்கண்டு - அல்லமருஞ்சித்தராமருங்கண்டு—உளமுவந்தார் - மனங்களித்தனர். எ - று. மறந்துமென்பதிலும்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. இனிச்செறிதனியிடமென்றது அடியார்கூடுதல் அவர்மதவயப்படல். ஊன்செறிதனியிடமென்றது அடியாரை யுவமிப்பதுபற்றியென்க. அரனடியவர் திரளெழுந்து புகலெனமுடிக்க. (௭)

தம்பி ரானருள் வசவனுக் கியவறச் சாலைக்
கும்ப வாசநீர் முதலிய வேண்டுவ கொண்டு
வம்பு லாமலர் வனத்தயர் வுயிர்த்துநல் வழிசேர்ந்
தெம்பி ரானடி யவர்திர ளேகுதல் கண்டார்.

(இ - ள்.) தம்பிரான் - அல்லமதேவரது—அருள் - கிருபைபெறுவானவேண்டி—வசவன் - வசவண்ணர்—ஆக்கிய - ஏற்படுத்திய—அறச்

சாலை - தர்மசாலையிலுள்ள—கும்பம் - குடத்தினிறைந்த—வாசகர்முதலி ய - வாசனைகட்டியகர்முதலியவைகளில் — வேண்டுவகொண்டு - தமக்கு வேண்டியவளவுகொண்டு—வம்புலாம் - வாசனைபொருந்திய—மலர்வனத் து - பூங்காவனத்தில்—அயர்வுயிர்த்து - சோபநீங்கி —நல்வழிசேர்ந்து - நன்மார்க்கத்தையடைந்து—வம்பிரான் - பரமசிவனுடைய—அடியவர்தி ரள் - அடியார்கூட்டங்கள் —வருதல்கண்டார் - போதலைக்கண்டார். எ - று. அடியவர்திரள் வேண்டுவகொண்டு அயர்வுயிர்த்து வருதலை இவ்விருவருங்கண்டாரென முடிக்க. முதலிய, வேண்டுவ, இவைவினை யாலணையும் பெயர்கள். (௮)

பாண்டின் மாவளஞ் சிவிகையூர்ந்தெருனர் பரிந்து
[illegible]
ரீண்டு மாறுகண் டுவந்துசென் றெழிலலங் கார
காண்ட மாமெனு மங்கல புரத்தினைக் கண்டார்.

(இ - ள்.) பாண்டில் - வண்டிகளிலேற்றிய—மாவளம் - மிக்கவளப்ப த்தோடு—சிவிகையூர்ந்து - பல்லக்கையிலேறி —வருனர் - போவோர்க ளும் —பரிந்து - விரும்பி —வேண்டுமாறுகொள் - தமக்குவேண்டுமளவு கொண்ட—வேடத்தர் - வேடதாரிகளும்—துறந்தவர் - துறவிகளும்—வி ரதர் - விரதங்காப்பவரும் —ஈண்டுமாறுகண்டு - நெருங்கிப்போதலைக்க ண்டு—உவந்து - சந்தோஷித்து—சென்று - போய்—எழில் - அழகிய— அலங்காரகாண்டமாமெனும் - அலங்காரகாண்டமென்கிற—மங்கலபுரத் தினை-மங்கலபுரத்தை—கண்டார் - பார்த்தனர். எ - று. வேடத்தர் த வவேடம்பூண்டோரை, கல்யாணபுரிக்கு அலங்காரகாண்டமெனப்பெய ரிருத்தலால் அலங்காரகாண்டமாமெனு மங்கலபுரமென்றார். (௯)

கண்டு செல்லுமப் போதிலந் நகர்வளங் கருத்திற்
கொண்ட வல்லமன் றிருவுள மிகக்களி கூர்ந்து
பண்டை நல்லிசைப் புலவர்சொல் லிராமனைப் பார்த்து
மண்டு பல்வளங் காட்டுவன் றனித்தனி வகுத்து.

(இ - ள்.) கண்டு - பார்த்து —செல்லுமப்போதில் - போகுமத்தருண த்தில் —அந்நகர்வளம் - அந்தப்பட்டணத்தின்வளப்பத்தை — கருத்திற் கொண்டவல்லமன் - மனதிற்கொண்டவல்லமதேவன்—திருவுளம் -மன துள்ள—நல் - நல்ல—இசைப்புலவர் - இசைக்ஞானியர்கள்—சொல் - ௗிக்கின்ற—இராமனை - இந்தராமனை—பார்த்து - பார்த்து —மண்டு - மி குந்த—பல்வளம் - பலவளப்பங்களை —தனித்தனிவகுத்து - தனித்தனி யாகப்பிரித்து—காட்டுவன் - காண்பிப்பன். எ - று. இரட்டைமொழித லென்றுமுற்றியால்; பண்டை முன்னுள்ள நல்லிசை நல்லகீர்த்தியைய புல வர் பண்டிதர்களால் சொல் துதிக்கத்தக்கவென்றுமையும். அல்லமன் களிகூர்ந்து பார்த்து வகுத்து காட்டுவெனன முடிக்க. (௧௦)

தனைவி ரும்பிவந் தடைந்தவர் தம்மைமுன் வெறுத்த
தினக ரன்கதிர் விரும்புறச் செய்தளித் திரள்க
ணனிவி ருந்துணும் கடிமலர் சுமந்துபொன் னகரார்
கனிவி ரும்புதண் பொழினிகழ் வதையெதிர் காணாய்.

(இ - ள்.) தனைவிரும்பிவந்து - தன்னைவிரும்பிவந்து —அடைந்தவர்த ம்மை - சேர்ந்தவர்களை —முன்வெறுத்த - முன்னர்வெறுப்புற்ற—தினக ரன்கதிர் - சூரியனதுகிரணத்தை —விரும்புறச்செய்து - விரும்பச்செய் து—அளித்திரள்கள் - வண்டுக்கூட்டங்கள் —நனி - மிகவும் —விருந் துணும் - விருந்துண்ணத்தக்க —கடிமலர் - வாசனைபொருந்தியபுஷ்பங்க ளை—சுமந்து - சுமந்து—பொன்னகரார் - தேவர்கள்—கனிவிரும்பு - பழ ங்களைவிரும்புகின்ற—தண் - குளிர்ச்சிபொருந்திய—பொழில் - பூங்காவ னங்கள்—நிகழ்வதை - விளங்குவதை—எதிர் - எதிரில்—காணாய் - பார்க் குதி. எ - று. வெய்யிலால்வதையுண்டு தன்னையடைந்தவர்களைத் தணிவு செய்து மிக்ககுளிர்ச்சியால் நீண்டுஞ் சூரியகிரணம் விரும்பச்செய்கின்ற பொழிலெனப்பொருள்கொள்க. தண்பொழில் விரும்புறச்செய்து சுமந்து பொழினிகழ்வதை யெதிர்காணாயெனக் கூட்டிமுடிக்க. (௧௧)

பூவி றைஞ்சிடும் [illegible] பொழியுங்
காவி றைஞ்சுவள் ளிதழவிழ்ந் தொழுகுதேங் கமல
வாவி யோடுநல் லிசைபயி லஞ்சிறை வண்டு
பாவி றைஞ்சுவண குழலெனத் திரிதலைப் பாராய்.

(இ - ள்.) பூவிறைஞ்சு - புஷ்பங்களிடத்தும் — சொர்தேன்மழை - இவ ந்தேன்மாரி —ஒழிவறப்பொழியும் - இடைவிடாதுசொரிகின்ற —காவி றைஞ்சு - பூங்காவினிடத்தும்—வள் - வளமைதங்கிய—இதழவிழ்ந்து - இ தழ்கள்விரிந்து—ஒழுகு - ஒழுகாநின்ற—தேன் - வாசனைபொருந்திய— கமலம் - தாமரைமலர்கணிறைந்த—வாவியோடு - தடாகத்தினிடத்தும்— நல்லிசைபயில் - நல்லகீதங்களைப்பாடுகின்ற—அம் - அழகிய—சிறை - இ

ரருகளையுடைய—வண்டு - வண்டுகள்—பாவின் - செய்யும்பாவினிடத்தில்—ஓடி - இடைவிடாதுமாறியோடுகின்ற—வளை - வளமைதங்கிய—குழலென - மூங்கிற்குழலைப்போல—திரிதலைப்பாராய் - அங்குமிங்குமாகத்திரிதலைக்காணுதி. எ - று. பாவிலோடு மூங்கிற்குழலைப்போலப் பூவினிடத்துங் காவினிடத்தும் வாவியினிடத்தும் வண்டுகள் திரிதலைப்பாராயெனக் கூட்டிமுடிக்க. யாதனுருபிற்கூறிற்றாயினு மென்னும்விதியால் பூவினோடு காவினோடு வாவியோடு என்பவற்றிலுள்ள வோடுவுருபுகளை ஏழாம்வேற்றுமையாகத் திரித்ததென்க. (கஉ)

கடிமலர்ப்பசுந் தேன்றுளி பிலிற்றுபைங் காவைக்
குடியிருக்குமவ் வளவெனக் கொண்டுவெண் குருகு
மடியடுத்தவ ரெனவிருந் திளங்கயல் வரலு
நொடியி னிறகவர் தண்பணை மருதமு நோக்காய்.

(இ - ள்.) கடி - வாசனைபொருந்திய—மலர் - புஷ்பங்கள்—பசுந்தேன்றுளி - பசியதேன்றுளிகளை—பிலிற்று - சொரிகின்ற—பைங்காவை - பசியபூங்காவனத்தை—குடியிருக்குமவ்வளவென - தாங்குடியிருப்பதற்கியைந்தவெல்லையாமென—கொண்டு - எண்ணிக்கொண்டு—வெண்குருகு - வெண்மையாகியநாரைகள்—மடியடுத்தவரென - சோம்புள்ளவரைப்போல—இருந்து - அசைவறவிருந்து—இளங்கயல்வரலும் - இளமையாகியசேற்கெண்டைகள்வரலும்—நொடியினில் - நொடியளவில்—கவர் - மூக்காற்கவர்ந்துவிழுங்குகின்ற—தண் - குளிர்ச்சிபொருந்திய—பணை - வயல்கள்சூழ்ந்த—மருதமும் - மருதநிலத்தையும்—பாராய் - காணுதி. எ - று. வெண்குருகு காவைத் தனக் கியைந்தவிடமாமெனக் கொண்டு மிக்கசோம்புடையோரைப்போற் கரையிலசைவறவிருந்து இங்ஙனமிருப்பதனால் அச்சமின்றிச் செல்மீன்களருகுவரலும் நொடியினிற்கவரென முடிக்க. அசைவின்மையைக்குறிக்க மடியடுத்தவரையுவமித்தார்.

குதிரை யங்கதிர் மணிக்குட நீர்குடிப் பதுபோ
லதிரி ளங்கமஞ் சூல்வளை தவழ்வய லணிநெற்
கதிர் வளைந்துசெந் தாமரை வாயுறக் கவிழ்ந்து
நுதிபொ ருந்திய வழகையு மையநீ நோக்காய்.

(இ - ள்.) குதிரை - குதிரையானது—அம் - அழகிய—கதிர் - பிரகாசத்தையுடைய—மணி - இரத்தினங்கள்பதித்த—குடம் - குடத்தில்—நீர்குடிப்பதுபோல் - நீர்குடிக்குமாறுபோன்று—அதிர் - சத்திக்கின்ற—இ

ளம் - இளமையாகிய—கமஞ்சூல் - நிறைந்தகருப்பத்தையுடைய—வளைதவழ் - சங்குகள்தவழப்பட்ட—வயல் - கழனிகளில்—அணிநெற்கதிர் - அழகியநெற்கதிர்கள்—வளைந்து - பாரத்தால்வளைந்து—செந்தாமரைவாய் - செந்தாமரைமலரிடத்து—உற - பொருந்த—கவிழ்ந்து - கவிழ்ந்து—நுதிபொருந்திய - நுனிபொருந்தியிருக்கின்ற—அழகையும் - அழகினையும்—ஐய - ஐயனே—நீநோக்காய் - நீகாணுதி. எ - று. குதிரைகுடிப்பதுபோல் வளைதவழ்தலானுவமையாயிற்று. இன்னுங் குதிரை குடத்தினீர்குடிப்பதுபோல நெற்கதிர்வளைந்து தாமரைமலர்வாயாக விருக்கக்கவிழ்ந்து நுனிதங்கியவழகெனினுமமையும். (கச)

இங்குத் தன்னுள்வாழ் பயிற்சியா லிறந்துயிர் போயு
மங்குப் பொன்னெயில் வட்டத்து ளிருண்மனத் தமணர்
தங்கற் குன்றுமிப் பொன்னெயில் வட்டமுஞ் சடைமேற்
கங்கைப் பெண்ணமர் பரனடிக் கன்பநீ காணாய்.

(இ - ள்.) இங்கு - இவ்வுலகத்தில்—தன்னுள் - தனக்குள்—வாழ் - வாழ்கின்ற—பயிற்சியால் - பழக்கத்தால்—இறந்துயிர்போயும் - இறந்துயிர்நீங்கியும்—அங்கு - அவ்வுலகத்தில்—இருள் - இருள்மயமாய—மனத்து - மனதையுடைய—அமணர் - சமணர்கள்—பொன்னெயில்வட்டத்துள் - பொன்மதில்சூழ்ந்தவட்டநிலத்தில்—தங்கற்குன்றும் - என்றுந்தங்குதற்குநினைக்கின்ற—இப்பொன்னெயில்வட்டமும் - பொன்மதில்சூழ்ந்தவிந்த வட்டநிலத்தையும்—சடைமேல் - சடாமுடியின்மேல்—கங்கைப்பெண்ணமர் - கங்காதேவியமரப்பெற்ற—பரனடிக்கன்ப - பரமசிவனடிக்கன்புடையோனே—நீகாணாய் - நீகாணுதி. எ - று. உயிர்போயும் என்பதிலும்மை இழிவுசிறப்பு. வட்டமும் என்பதிலும்மை எண்ணும்மை. இறந்தபின் உயிர் மேலுலகத்தில் தங்கற்கு அமைத்தபொன்னெயில் வட்டம்போல; உடல்தங்கற்கு இவ்வுலகத்திலமைத்த பொன்னெயில்வட்டமிதுவெனக்காட்ட இங்ஙனங்கூறினார். அன்ப, விளி. அங்கென்பதிலை இங்கென்பதற்கு இவ்வுலகமென்றும். (கரு)

திறந்து மூடுசின் னுதலிமை விழியெனச் சோர்ந்து
பிறங்கு மாமணிக் கதவிரு புடையினும் பெற்றுச்
சிறந்த கோபுர வாய்தலு மலர்மிசைத் தெய்வம்
பறந்து நாடிய முடியிறைக் கன்பநீ பாராய்.

(இ - ள்.) திறந்துமூடும் - விழித்துமூடுகின்ற—சின் - உன்னுடைய—

நுதல் - நெற்றியிலுள்ள — இமைவிழியென - கண்ணிமைபோல — சேர்ந்து - பொருந்தி — பிறங்கு - பிரகாசிக்கின்ற — மாமணி - சிறந்தவிரத்னங்கள்பதித்த — கதவு - கதவுகளை — இருபுடையினும்பெற்று - இரண்டுபக்கத்தினுமமையப்பெற்று — சிறந்த - சிறப்புற்றுநின்ற — கோபுரவாய்தலும் - கோபுரவாசற்படியையும் — மலர்மிசைத்தெய்வம் - தாமரைமலராயிடமாகவுடையபிரமன் — பறந்துநாடிய - பட்சியாகப்பறந்துதேடிய — முடி - சிகரத்தையுடைய — இறைக்கு - பரமசிவனுக்கு — அன்ப - நண்பனே — நீபாராய் - நீகாணுதி. எ - று. பறந்தென்பதினுல் பட்சியாகப்பறந்தென்றாம். (௧௬)

இலங்கு நீறெனுங் கவசமிட் டக்கமென் றியம்பு
மலங்கல் வாகைவேய்ந் தஞ்செழுத் தத்திர மடுத்த
நலங்கொள் வீரரம் பத்தர்த மறுகம ணல்லார்
கலங்கு பாசறை போன்றெதிர் நிகழ்வது காணாய்,

(இ - ள்.) இலங்கு - பிரகாசிக்கின்ற — நீறெனும் - வீபூதியென்கிற — கவசம் - சீராவை — இட்டு - தரித்து — அக்கமென்றியம்பும் - ருத்ராட்சமென்றுசொல்லப்பட்ட — அலங்கல்வாகை - வெற்றிமாலையை — வேய்ந்து - தரித்து — அஞ்செழுத்து - பஞ்சாட்சரமென்னும் — அத்திரம் - பாணங்களோடு — அடுத்த - கூடியிருக்கின்ற — நலங்கொள் - சன்மார்க்கமுள்ள — வீரரம்பத்தர்தம் - வீரசைவர்களாகியவன்பர்களது — மறுகு - வீதி — அமண் - சமணர்களென்னும் — நல்லார் - சத்துருக்கள் — கலங்கு - அஞ்சத்தக்க — பாசறைபோன்று - கூடாரம்போல — எதிர்நிகழ்வது - எதிரேவிளங்குவதை — காணாய் - காணுதி. எ - று. நீறெனுங்கவசம், அக்கமென்றியம்புமலங்கல்வாகை, அஞ்செழுத்தத்திரம், இவையுருவகம். ( )

கட்டு வார்சடைக் கண்ணுதல் பூசனைக் கரும
மட்டு மாதவர் தீப்பசி யாற்றுறு மறமுள்
ளிட்டு மேற்புறங் கண்டவர் கொடியன வென்னப்
பட்டு மாளிகை பற்பல நிகழ்வன பாராய்.

(இ - ள்.) கட்டு - கட்டிய — வார் - நீண்ட — சடை - சடையையும் — கண்ணுதல் - நெற்றிக்கண்ணையுமுடையபரமசிவனது — பூசனைக்கருமமட்டும் - பூசனைக்கருமமட்டுக்காக — மாதவர் - மகத்தானதவத்தோரது — தீப்பசியாற்றும் - கொடியபசியைத்தணித்தற்கியைந்த — அறம் - தர்மத்தை — உள்ளிட்டு - நினைத்து — மேற்புறங்கண்டவர் - மேனுப்பரிகையி

நகண்டவர்களுக்குக்கட்டிய — கொடியனவென்னப்பட்டு - கொடிகளுக்கொப்பாகுமென்றுசொல்லப்பட்டு — மாளிகை - யாவரதுமாளிகையிலும் — பற்பல - பலவேறுபட்டகொடிகள் — நிகழ்வன - அசைகின்றவைகளை — பாராய் - காணுதி. எ - று. தருமஞ்செய்வான்வேண்டிக்கட்டியகொடிகளைப்போல யாவரதுமாளிகையிலும் பற்பலநிகழ்வனபாராயெனக்கூட்டிமுடிக்க. கண்ணுதலென்பது, அன்மொழித்தொகை. (௧௮)

பொறித்த வாழையின் கனியினைக் கடைத்தலை பொருந்தக்
குறித்தி டாதுண வென்கக்றி தலகுநோய் கொண்டு
நிறுத்து வாழையின் கனியுமச் செய்கையாய் நினைந்து
கறித்தி டாதமர் செம்முகப் பசுங்கிளி காணாய்.

(இ - ள்.) பொறித்த - சித்திரமாகவெழுதிய — வாழையின்கனியினை - வாழைப்பழத்தை — கடைத்தலை - முற்றும் — பொருந்தக்குறித்திடாது - நன்குணராமல் — உணவென - உணவென்று — கறித்து - கடித்து — அலகு - மூக்கு — நோய்கொண்டு - நொந்து — நிறுத்து - பந்தலில்நாட்டிய — வாழையின்கனியும் - வாழைப்பழத்தையும் — அச்செய்கையாய்நினைத்து - அந்தவிதமாகநினைத்து — கறித்திடாது - கடிக்காமல் — அமர் - சும்மாவிருக்கின்ற — செம்முகம் - சிவந்தமுகத்தையுடைய — பசுங்கிளி - பசியகிளிப்பிள்ளைகளை — காணாய் - காணுதி. எ - று. பொறித்தவாழை, கற்பிதவாழை. நிறுத்தவாழை, உண்மைவாழை. இஃது மயக்கவணி. (௧௯)

வள்ள னல்வச வன்புகழ் வாயினுல் வழுத்தா
தெள்ளும் வல்லமண் குண்டர்தம் பிறப்பினு மிழிப்பில்
புள்ளு நல்லன வெனவிளம் பூவையோ டிருந்து
கிள்ளை யவ்வச வன்புகழ் சொல்வது கேளாய்.

(இ - ள்.) வள்ளல் - வள்ளலாகிய — நல்வசவன்புகழ் - நல்லவசவண்ணரதுபுகழையும் — வாயினுல்வழுத்தாது - வாயினுற்றுதியாமல் — எள்ளும் - இகழுகின்ற — வல் - கொடிரமாகிய — அமண் - சமணர்களென்னும் — குண்டர்தம் - பாதகர்களுடைய — பிறப்பினும் - ஜெனனத்தைக்காட்டிலும் — இழிப்பில் - இழிவில்லாத — புள்ளும் - பட்சிகளும் — நல்லனவென - நல்லனவாமெனக்கூறும்படி — இளம் - இளமையாகிய — பூவையோடு - நாகணவாய்ப்பட்சியோடு — இருந்து - கூடியிருந்து — கிள்ளை - கிளிப்பிள்ளைகள் — அவ்வசவன்புகழ் - அவ்வசவண்ணனதுபுகழை — சொல்வது -

சொல்லிக்கொண்டிருப்பதைத — கேளாய் - கேளுதி. எ - று. வசவண்ணனது புகழைச் சொல்லிக்கொண்டிருப்பதால், அமண்குண்டர் தம்பிறப்பினும் இழிப்பில் புள்ளு நல்லனவென்றார். (௨௦)

என்று கூறியவ் விராமனை மகிழ்வுசெய் தின்ப
மன்றல் வீதியில் வசவநா யகன்றிரு மனைமுற்
குன்று போலுயர் கோபுர வாய்தலைக் குறுகச்
சென்று மேவின னெம்மையா ளல்லம தேவன்.

(இ - ள்.) என்றுகூறி - என்றுசொல்லி — அவ்விராமனைமகிழ்வுசெய்து - அந்தச்சித்திராமனைச்சந்தோஷப்படுத்தி — இன்பம் - இன்பமயமான — மன்றல்வீதியில் - மங்களகரமானவீதியில் — வசவநாயகன் - வசவண்ணரது — திருமனைமுன் - அழகியமாளிகைமுன் — குன்றுபோலுயர் - மலைபோலுயர்ந்த — கோபுரவாய்தலை - கோபுரவாசற்படியை — குறுக - நெருங்க — எம்மையாளல்லமதேவன் - எம்மையடிமைகொண்டவல்லமதேவன் — சென்றுமேவினன் - போய்ச்சேர்ந்தனன். எ - று. அல்லமதேவன் மகிழ்வுசெய்து சென்று மேவினனெனமுடிக்க. (௨௧)

தொடர்தது ளைக்கைவெண் மருப்புரற் காற்கருந் தோற்றோ
லுடுத்த மெய்ப்பரன் கொலைகுறித் தொடாமழு வொப்ப
வடைத்த லைக்குறித் திடாதசெம் மணிக்கத வடுத்த
கடைத்த லைக்கண்மா தவர்குழா நெருங்குதல் கண்டார்.

(இ - ள்.) தொடர் - இடையில்விடாதுதொடருகின்ற — துளை - ரந்தனத்தையுடைய — கை - துதிக்கையையும் — வெண்மருப்பு - வெள்ளைத்தந்தத்தையும் — உரற்கால் - உரல்போன்றகால்களையும் — கருந்தோல் - கறுத்ததோலையுமுடையயானையின் — தோலுடுத்த - தோலையாடையாகவுடுத்த — மெய்ப்பரன் - உண்மையாகியபரமசிவன் — கொலைகுறித்து - கொலைசெய்தலைக்குறித்து — ஒடா - கையிலெடாத — மழுவொப்ப - மழுவாயுதத்துக்கொப்பாக — அடைத்தலைக்குறித்து - மூடுதலைக்குறித்து — இடாத - போடாத — செம்மணி - சிவந்தரத்னங்கள்பதித்த — கதவடுத்த - கதவைச்சார்ந்த — கடைத்தலைக்கண் - கடைவாயலில் — மாதவர்குழாம் - பெரியோர்கூட்டங்கள் — நெருங்குதல்கண்டார் - ஒருவருக்கொருவர்நெருங்குதலைக்கண்டார்கள். எ - று. துதிக்கை, வெண்மருப்பு, உரற்கால், கருந்தோல், என்றஞெட்டுக்கத்தான் யானையென்றும். மழுவெடுத்தது கோறலுக்கன்றென்மபோல, கதவவைத்தது மூடாமைக்கென்க. (௨௨)

வேறு

அறுசுவை யடிசி லுண்பா னடைகுவா ரடிசி லுண்டு
மறுகிடை வருவார் சான்றோர் வைகிய விடங்க ளூடிக்
கறியொடு மருவு சோற்றுக் காவடி சுமந்து செல்வார்
நறுமலர் சுமந்து தண்ட நாதன்பூ சனைக்குப் போவார்.

(இ - ள்.) அறுசுவை - அறுசுவையோடுகூடிய — அடிசில் - சாப்பாட்டை — உண்பான் - உண்ணும்பொருட்டு — அடைகுவார் - செல்லுங்குரவர்களும் — அடிசிலுண்டு - அங்ஙனமாயுணவுண்டு — மறுகிடைவருவார் - வீதியில்வருபவர்களும் — சான்றோர்வைகிய - பெரியோர்களிருக்கின்ற — இடங்களூடி - இடங்களைத்தேடி — கறியொடுமருவு - கறியோடுகூடிய — சோற்றுக்காவடி - சோற்றுக்காவடியை — சுமந்துசெல்வார் - சுமந்து போகின்றவர்களும் — நறுமலர்சுமந்து - நல்லபூமாலைகளைச்சுமந்து — தண்டநாயகன்பூசனைக்கு - பரமசிவன்பூசைக்கு — போவார் - போகின்றவர்களும். எ - று. அறுசுவை; கைப்பு தித்திப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு. அடிசில் உணவின்பொது. (௨௩)

செஞ்சர ணிறைஞ்சி நல்குஞ் செழுந்துகில் கிழித்துக் கீழ் கொண், டெஞ்சிய மிகையென் றெண்ணி யிட்டவ ணக
ன்றுபோவா, ரஞ்சுடர் மணிப்ப சும்பொன் னணிதுகி லலங்கல்
சாந்தம், வஞ்சியர் தமக்க ளிப்பத் தருகென வாங்கிச் செல்வார்.

(இ - ள்.) செஞ்சரண் - சிவந்தபாதங்களை — இறைஞ்சி - வணங்கி — நல்கும் - கொடுக்கின்ற — செழுந்துகில் - நல்லவஸ்திரங்களை — கிழித்து - துண்டுதுண்டாகக்கிழித்து — கீழ்கொண்டு - கோவணமாக்கி — எஞ்சிய - மீந்தவைகளை — மிகையென்றெண்ணி - அதிகமென்றெண்ணி — இட்டு - அவரவர்க்களித்து — அவண் - அவ்விடத்தினின்று — அகன்றுபோவார் - நீங்கிப்போகின்றவர்களும் — அம் - அழகிய — சுடர் - பிரகாசம்பொருந்திய — மணி - இரத்தினாபரணங்களையும் — பசும்பொன் - பசியபொன்னாற்செய்த — அணி - ஆபரணங்களையும் — துகில் - வஸ்திரங்களையும் — அலங்கல் - பூமாலைகளையும் — சாந்தம் - சந்தனங்களையும் — வஞ்சியர்தமக்களிப்ப - ஸ்திரீகளுக்குக்கொடுக்க — தருகெனவாங்கிச்செல்வார் - கொடுவெனவாங்கிச் செல்பவர்களும். எ - று. (௨௪)

நிந்தைசெய் தெமையெ திர்ந்த நெறியில்புன் சமணர் தங்
கண், மைந்நினை யறியச் சொல்வம் வசவனுக் கென்று செல்

வார், நந்தியை வணங்க வேறு நகர்தொறு நின்று போந்து
சிந்துரம் வயமா வம்பொற் சிவிகைவிட் டிழிந்து செல்வார்.

(இ - ள்.) நிந்தைசெய்து - பழித்து—எமையெதிர்த்த - எங்களோடுவி ரோதித்த—நெறியில் - வரம்புகடந்த—புல் - அற்பமாகிய—சமணர்தங்கள் - சமணர்களுடைய—மைந்நினை - மோசத்தை—வசவனுக்கு - வசவண்ணருக்கு—அறியச்சொல்வமென்று - தெரியச்சொல்வமென்று—செல்வார் - போகின்றவர்களும்—நந்தியைவணங்க - வசவண்ணரைத்தொழ—வேறுநகர்தொறுநின்று - வெவ்வேறுபட்டணங்களிலிருந்து—போந்து - வந்து—சிந்துரம் - யானையும்—வயமா - வெற்றிபொருந்தியகுதிரையும்—அம்பொன் - அழகியபொன்னினாற்செய்த—சிவிகை - பல்லக்குமாகிய—விட்டு - இவற்றைவிட்டு—இழிந்துசெல்வார் - இறங்கிப்போகின்றவர்களும். எ - று. (௨௫)

சீர்கெழு வசவன் பாடத் திவவியாழ் கொண்டு செல்வா
ராகிவின் மதனை வென்றோ னடியவர் குழாநெ ருங்கு
மேர்கெழு மணிப்ப சும்பொ னிருங்கடை நோக்கி நின்றா
ரோகையோ டலம னுமத் தொருவனு மிராமன் றானும்.

(இ - ள்.) சீர்கெழு - அழகுபொருந்திய—வசவன்பாட - வசவனைப்பாட—திவவியாழ்கொண்டு - வலிக்கட்டமைந்த யாழையெடுத்துக்கொண்டு—செல்வாராகி - போகின்றவர்களாகி—வில் - கரும்புவில்லையுடைய—மதனைவென்றோன் - மன்மதனையெரித்தபரமசிவனது—அடியவர்குழாநெருங்கும் - அடியார்கூட்டங்க ணெருங்கிய—ஏர்கெழு - அழகுபொருந்திய—மணி - இரத்தினங்கள்பதித்த—பசும்பொன் - பசியபொன்னினாற்செய்த—இருங்கடை - பெரியகடைவாயலை—நோக்கிநின்றார் - பார்த்துநின்றனர்—ஓகையோடு - மிக்கசந்தோஷத்தோடு—அலமனுமத்தொருவனும் - அல்லமனென்னும்பெயரையுடையவொருவனும்—இராமன்றானும் - சித்தராமரும். எ - று. அலமனுமத்தொருவனும் இராமன்றானும் ஓகையோடு இருங்கடை நோக்கிநின்றாரெனக் கூட்டி முடிக்க. ( )

ஆயிடை நின்றோர் தம்மை யப்பணப் பெயரின் மிக்க
தூயவ னெதிர்கண் டோகை சொல்லுவ லையர்க் கென்று
கோயிலு ளமல பூசை குழாத்தொடு செய்யும் போதிற்
போயினன் வசவ னோடு புகழ்ந்திது புகல லுற்றான்.

(இ - ள்.) ஆயிடை - அவ்விடத்தில்—நின்றோர்தம்மை - நின்றவிவ்விருவரையும்—அப்பணப்பெயரின்மிக்கதூயவன் - அப்பணனென்னும்பெயரையுடையமிக்கபுனிதன்—எதிர்கண்டு - நேரேகண்டு—ஐயர்க்கு - வசவனுக்கு—ஓகைசொல்லுவலென்று - இந்தச்சந்தோஷமானகாரியத்தைச் சொல்லுவனென்று—கோயிலுள் - மடத்தினுள்—அமலபூசை - சிவபூசையை—குழாத்தொடு - அடியார்கூட்டத்தோடு—செய்யும்போதில் - செய்யுங்காலத்தில்—போயினன் - போனவனாய்—வசவனோடு - வசவண்ணரிடத்து—புகழ்ந்து - துதித்து—இதுபுகலலுற்றான் - இதனைச்சொலத்தொடங்கினான். எ - று. அப்பணப்பெயரின்மிக்கதூயவன் இவ்விருவரையுங்கண்டு மடத்துட்சென்று வசவனுக்குத் தெரிவிக்கத்தொடங்கினனெனமுடிக்க. ஓகை, பண்பாகுபெயர். அமலன்பூசையெனல், அமல பூசையென ஈற்றுனகரங்கெட்டது. (௨௭)

மாதவ ரிருவ ரைய மழைமதர் நெடுங்கண் மங்கை
பாகிய னுருவி ரண்டு படைத்துவந் தனனே யென்னச்
சோதிய தாளக் கோவைத் தோரண வாய்தன் முன்னம்
வீதியி னின்றொன் றென்று விளம்பினன் றவத்தின் மிக்கான்.

(இ - ள்.) ஐய - ஐயனே—மாதவரிருவர் - மகாதவத்தையுடையோரிருவர்—மழை - குளிர்ச்சிபொருந்திய—மதர் - மதர்த்த—நெடுங்கண் - நீண்டகண்களையுடைய—மங்கைபாகியன் - உமாதேவியைஅர்த்தபாகத்திலுடையபரமசிவன்—உருவிரண்டுபடைத்து - இரண்டுருவங்கொண்டு—வந்தனனேயென்ன - வந்தானென்றுசொல்லும்படி—சோதிய - பிரகாசம்பொருந்திய—தாளக்கோவை - முத்துமாலைகள்தங்கிய—தோரணம் - தோரணங்கட்டிய—வாய்தன்முன்னர் - வாயலின்முன்னே—வீதியினின்றொன்று - வீதியில்நிற்கின்றாரென்று—தவத்தின்மிக்கான் - அப்பணப்பெயரினோன்—விளம்பினன் - சொல்லினன். எ - று. தவத்தின்மிக்கான், மாதவரிருவர் தோரணவாய்தன்முன்னர் வீதியினின்றாரென்று விளம்பினனெனக்கூட்டிமுடிக்க. (௨௮)

என்றவ னியம்ப நந்தி யெனும்பெயர் கருணைக் குன்றங்
கன்றினை நினைந்து நெஞ்சங் கரைந்துவந் தணையுந் தாயக்கிங்
கொன்றொரு தடையு முண்டோ வொல்லைநீ தருதி யென்னச்
சென்றவ னமல னோடு சித்தரா மனைவ ணங்கி.

(இ - ள்.) என்று - இப்படியென்று—அவனியம்ப - அவன்சொல்ல—கருந்தியெனும்பெயர் - வசவண்ணனென்னும்பெயரையுடைய—கருணைக்குன்றம் - கிருபாமலைபோன்றவர் —கன்றினை நினைந்து - தனதுகன்றைநினைத்து—நெஞ்சங்கரைந்துவந்து - மனமுருகிவந்து—அணையுந்தாய்க்கு - சேரும்பசுவுக்கு—இங்கு - இவ்விடத்தில்—ஒன்றொருதடையுமுண்டோ - யாதோர்தடையேனுமுளதோ—ஒல்லை - சீக்கிரத்தில்—நீதருதியென்ன - நீயவர்களையழைத்துக்கொண்டுவாவென்றுசொல்ல —சென்றவன் - அந்தவப்பனைப்பெயரினேன்போய் —அமலனோடு - அல்லமனோடு —சித்தராமனை வணங்கி - சித்தராமனென்பவனையும்வணங்கி. எ - று. கருணையில்சிறிதும் சலனமில்லாததால் வசவண்ணரைக் கருணைக்குன்றமென்றார். சித்தராமனையும் என்பதில், இறந்ததுதழீஇய எச்சவும்மையெஞ்சியது.

பரசிவ லிங்க பூசை பண்ணிய பயனே யுங்கள்
வரவென வுளம கிழ்ந்தான் வசவனீர் வருக வென்ன
வெருவொடு முளமு ளைந்து மெய்த்தவன் விளம்ப வெங்கள்
குருபரன் முனிவான் போலக் குறுநகை கொண்டு கூறும்.

(இ - ள்.) பரசிவலிங்கபூசை-சிவலிங்கபூசையை—பண்ணியபயனே - செய்தபிரயோசனமே —உங்கள்வரவென - உங்கள்வருகையென்று—வசவன் - வசவண்ணர்—உளமகிழ்ந்தான் - மனமகிழ்ந்தனர்— (ஆதலின்) நீர்வருகவென்ன - நீங்கள்வரக்கடவீர்களென்றுசொல்ல —வெருவொடு - மிக்கபயத்தோடு —உளமுளைந்து - மனநடுங்கி —மெய்த்தவன் - அப்பனைப்பெயரினேன்—விளம்ப - சொல்ல —எங்கள்குருபரன் - எங்கள்குருபரனாகியவல்லமன் —முனிவான்போல - கோபிப்பவன்போற்காட்டி —குறுநகைகொண்டு - புன்னகைகொண்டு —கூறும் - சொல்லுவான். எ - று.

(௩௰)

அரசிய லடைந்தார் தம்பா லையமேற் றருந்து கின்றோர்
வருசெயல் வரிசை யன்று மறித்துநீ போதி யென்று
வுரைசெய வமல னப்ப னுளம்வெரீஇக் கடிது மீண்டு
வரைசெயும் வயிரத் திண்டோள் வசவநா யகற்குச் சொன்னான்.

(இ - ள்.) அரசியலடைந்தார்தம்பால் - அரசுத்தன்மையடைந்தவரிடத்தில் —ஐயமேற்றருந்துகின்றோர் - பிச்சையெடுத்துச்சாப்பிடுகிறவர்கள்—வருசெயல் - வருதல்—வரிசையன்று-முறையன்று—மறித்துநீபோதியென்று - திரும்பிப்போய்விடுவாயென்று—அமலனுரைசெய - அல்லமன்சொல்ல —அப்பன் - அப்பனென்போன் —உளம்வெரீஇ - மனநடுங்கி—கடிது - விரைவில்—மீண்டு - திரும்பி —வரைசெயும் - மலைபோன்ற—வயிரத்திண்டோள் - மிக்கவலியமைந்ததோள்களையுடைய—வசவநாயகற்கு - வசவேசுவரருக்கு—சொன்னான் - சொல்லினன். எ - று. ()

அல்லமன் புகன்ற மாற்ற மப்பனன் சென்று நின்று, சொல்லலுந் துணுக்கென் றுள்ளஞ் சோற்றளர்ந் துடல்வி யர்த்துப், புல்லவந் தணையுந் தாய்முன் பொறுதுதும் பறுத்திட் டோடு, நல்லிளங் கன்றுபோன்முன் னான்செலா திருந்தே னென்று.

(இ - ள்.) அல்லமன்புகன்றமாற்றம் - அல்லமதேவர்சொன்ன வசனங்களை—அப்பனன் - அப்பனனென்போன்—சென்று-போய்—நின்று - எதிரினின்று—சொல்லலும் - சொல்லவும் —உள்ளந்துணுக்கென்று-மனந்திடுக்குற்று —சொற்றளர்ந்து - வசனங்கள்சோர்வுற்று —உடல்வியர்த்து - தேகம்வேர்த்து—புல்லவந்தணையும்—தழுவும்படியாகவந்தணையப்பட்ட—தாய்முன்-பசுவுக்குமுன்—பொறுது - சகிக்காமல் —தும்பறுத்திட்டோடும் - தும்புக்கயிற்றை யறுத்துக்கொண்டோடும் —நல்லிளங்கன்றுபோல் - நல்லவிளமையாகிய கன்றைப்போல —முன் - அல்லமதேவருக்குமுன் —நான்செலாதிருந்தே னென்று - நான்போகாதிருந்தே னென்று. எ - று.

(௩௧)

கரைந்துரு மனமு ளைந்து கவலைகொண் டழுங்க நந்தி
பெருந்தகை மாச்சி தேவன் பெருங்கடற் பிறந்த சாவா
மருந்துதன் னெதிரி டைத்து மற்றதை வாரிக் கையா
லருந்துற வலசு வான்போ லாயினை நீயு மென்றான்.

(இ - ள்.) கரைந்துரும் - கரைந்துருகுகின்ற—மனமுளைந்து - மனம்வருந்தி —கவலைகொண்டு - மிக்ககவலைகொண்டு —அழுங்க நந்தி - வசவண்ணர்விசனமுற—பெருந்தகை - பெருந்தன்மைபொருந்திய—மாச்சிதேவன் - மாச்சிதேவனென்போன்—பெருங்கடற்பிறந்த - பெரியதிருப்பாற்கடலிற்பிறந்த—சாவாமருந்து - தேவாமிர்தம் —தன்னெதிரிடைத்தும்-தனக்கெதிரில்கிடைத்தும் —மற்றதை - அந்தவமிர்தத்தை —வாரிக்கையால் - கையினால்வாரி —அருந்துற - உண்பான்வேண்டி —அலசுவான்போல் - தண்ணீர்விட்டலசுபவனைப்போல—ஆயினைநீயும் - நீயுமானாய்—என்றான் - என்றுசொல்லினன். எ - று. அமிர்தத்தைப்போல அல்லம

னும், அலசுவதுபோல் அவனையிழத்தலுமாதலின் இஃதெடுத்துக்காட்டுவமையணி. (௫௩)

பெருந்தகை மாச்சி தேவன் பேசுசொல்விளக்குத் தூண்டுந், துரும்பென வுதவச் செம்பொற் றூணெனுந் தோளான் மாழ்கி, யிருந்தவப் பிழையென் மேற்றே யென்றடி யிறைஞ்சி யொய்யென், றருந்தவ ரொடுபு றப்பட் டல்லம னருகு வந்தான்.

(இ - ள்.) பெருந்தகை-பெருந்தன்மைபொருந்திய—மாச்சிதேவன் - மாச்சிதேவனென்போன்—பேசுசொல் - சொன்னவசனம்—விளக்குத்தூண்டுந்துரும்பென - விளக்கைத்தூண்டுந்துரும்பைப்போல—உதவ - உதவிசெய்ய—செம்பொன் - சிவந்தபொன்னாலாகிய—தூணெனுந்தோளான் - தூண்போன்றதோளையுடையவசவண்ணர்—மாழ்கியிருந்த - மயங்கியிருந்த—அப்பிழை - அந்தக்குற்றம்—என்மேற்றேயென்று - என்னுடையதேயென்றுசொல்லி—அடியிறைஞ்சி - பாதத்தில்வணங்கி—ஒய்யென்று - ஒய்யென்னும்விரைவோடு—அருந்தவரொடு - அரியதவத்தினரோடுகூடி—புறப்பட்டு - புறம்போந்து—அல்லமனருகுவந்தான் - அல்லமதேவரருகில்வந்தனர். எ - று. ஒய்யெனவ் விரைவுக்குறிப்பொலி. ()

என்குண மறமே யாகி யானதிற் றிரித லில்லேன்
னின்குண மருளே யென்றா னீயதி னிற்றி யெந்தாய்
புன்குண மகவின் றீமை பொறுத்தருள் செய்கை யென்னுந்
தன்குணம் விடுத்தொ ழிக்குந் தாய்விய னுலகி லுண்டோ.

(இ - ள்.) என்குணம் - எனதுகுணமானது—மறமேயாகி - பாபமேவடிவமாகி—யான் - நான்—அதில் - அந்தப்பாபகுணத்தினின்றும்—திரிதலில்லேன் - மாறுகிறேனில்லேன்—நின்குணம் - உனதுகுணம்—அருளேயென்றால் - அருள்மயமேயென்றால்—எந்தாய் - எமதப்பனே—நீயதினிற்றி - நீயதில்மாறுகிறதில்லை—புன்குணம் - அற்பகுணத்தையுடைய—மகவின்றீமை - பிள்ளையின்றீச்செயலை—பொறுத்து - பொறுத்துக்கொண்டு—அருள்செய்கையென்னும் - கிருபைசெய்தலென்னும்—தன்குணம்விடுத்து - தன்குணத்தைஅப்புறப்படுத்தி—ஒழிக்கும் - அத்தீச்செயல்செய்தமகவை ஒழிக்கின்ற—தாய் - தாயானவள்—வியனுலகில் - விரிந்தவுலகின்கண்—உண்டோ - உளதோ. எ - று. இங்கே மறமென்பது, இருமாப்பை. மகவின்றீச்செயலை அறுவாதவும், தன்னிரக்கத்தை மகத்தாகவுங், கொள்ளுந்தாய்போன்று அடியேனை இரட்சிக்கவேண்டுமென்பது, பிறிதுமொழிதலணி. (௫௫)

ருத்திரப் பாவை யானச் ருத்திரி நீய ருட்கண்
பார்த்தெனைக் குறைய கற்றிப் பணிசெயக் கோடி யென்று
வாய்த்தநற் குரவன் செந்தா மரையடி மிசைவி ழுந்தா
னேத்திமெய்ப் பத்தி நீத்த மெனப்படும் வசவ தேவன்.

(இ - ள்.) யான் - நான்—ருத்திரப்பாவை - ருத்திரப்பிரதமை—நீ - நீயோ—அச்ருத்திரி - அந்தச்ருத்திரதாரி— (ஆதலால்) அருட்கண்பார்த்து - கிருபாநோக்கம்வைத்து—குறையகற்றி - எனதுகுற்றங்களைத்தையுமொழித்து—பணிசெய - நினதுதொண்டுசெய்ய—எனைக்கோடியென்று - என்னையடிமையாகக் கொள்ளுதியென்று—வாய்த்த - தனக்கெளிதில்வாய்த்த—நற்குரவன் - சற்குருவாகிய வல்லமனது—செந்தாமரை - செந்தாமரைமலர்போன்ற—அடிமிசை - பாதங்களின்மேல்—மெய் - உண்மையாகிய—பத்திநீத்தமெனப்படும் - பத்திக்கடலென்னத்தக்க—வசவதேவன் - வசவண்ணர்—ஏத்தி - துதித்து—விழுந்தான் - வணங்கினர். எ - று. நீயசைப்பவன் யானசைபவன் எனப்பொருட்டோன்றச் ருத்திரப்பாவையான் அச்ருத்திரி நீ யென்றார். எனவே, எனக்கோர் சுதந்தரம் இன்றெனக்காட்ட இங்ஙனங் கூறினாரெனப் பெறும். (௫௬)

நிலமகள் பொறாது தள்ளி னிறுத்துனர் யாவ ரோதை
மலிகடல் புரளு மாயின் மறிப்பவ ருளரோ வெங்க
டலைவநீ முனிவை யாயிற் றடுப்பவ ருலகில் யாண்டு
மிலையிலை யருள்செ யெந்தா யெனச்சென்ன வசவன் றாழ்ந்தான்.

(இ - ள்.) நிலமகள் - பூமிதேவி—பொறாது - பொறுக்கச்சகியாமல்—தள்ளில் - தள்ளிவிட்டால்—நிறுத்துனர் - தடுப்பவர்கள்—யாவர் - எவர்—ஓதைமலி - சத்தமிகுந்த—கடல்புரளுமாயின் - கடல் அணைகடக்குமாயின்—மறிப்பவருளரோ - தடுப்பவர்களுளரோ—எங்கடலைவ - எங்களுடையகர்த்தனே—நீ முனிவையாயின் - நீ கோபிப்பையாயின்—உலகில் - உலகத்தினிடத்தில்—யாண்டுமிலையிலை - எவ்விடத்துமில்லையேயில்லை—தடுப்பவர் - தடுக்கிறவர்கள்—எந்தாய் - எனதுதந்தையே—அருள்செய்யென - இரங்குவாயென்று—சென்னவசவன் - சென்னவசவேசன்—தாழ்ந்தான் - வணங்கினன். எ - று. அடுக்கு, துணிபு. (௫௭)

சொற்றிடுங் குதலைச் சொல்லிற் சொற்றிறந் தெரிதல் போலிச்
சிற்றிளங் குமர னன்பு செயவடி யிடுமு னோக்கேல்
சற்றுநின் கடைக்கண் வைத்துத் தண்ணளி புரிக வென்று
நற்றவ மாச்சி தேவ னங்குர வனைப்ப ணிந்தான்.

(இ - ள்.) சொற்றிடும் - சிறுவர்பேசுகின்ற —குதலைச்சொல்லில் - மழலைச்சொற்களில்—சொற்றிறந்தெரிதல்போல் - சொல்லினதுதிறத்தைத்தெரிவதுபோல—இ - இந்த—சிற்றிளங்குமரன் - மிக்கவிளையோனாகியசிறுவன்—அன்புசெய - பத்திசெய்யும்படி—அடியிடுமுன் - ஆரம்பிப்பதற்குமுன் —நோக்கேல் - குற்றங்கள்நோக்காதை —சற்று - கொஞ்சம்—நின்கடைக்கண்வைத்து - உனதுகிருபாநோக்கம்வைத்து —தண்ணளிபுரிகவென்று - அநுக்கிரகஞ்செய்வாயென்று —நற்றவம் - நல்லதவத்தினையுடைய —மாச்சிதேவன் - மாச்சிதேவனென்போன் —நங்குரவனை - நமதாசிரியனாகியவல்லமனை—பணிந்தான் - வணங்கினான். எ - று.

உரைமன மெய்யொ ருங்கி யுன்பணி செய்ய வல்லோன்
றரைமிசை யிவ னலாது நாமொரு வரையுங் காணே
மருள்செய வேண்டு மென்ன வல்லம னடிப ணிந்தான்
கிரிமகள் கொழுநற் கன்பன் கின்னரப் பிரம னம்மா.

(இ - ள்.) உரைமனமெய் - வாக்குமனங்காயம் —ஒருங்கி - ஒருங்குற்று—உன்பணிசெய்யவல்லோன் - உனதுதிருப்பணிசெய்யவல்லவன்—தரைமிசை - பூமியின்மேல்—இவனலாது - இவனையன்றி—ஒருவரையுங் காணேம் - ஒருவரையுங்கண்டிலம்—அருள்செயவேண்டுமென்ன - பொறுத்தருள்வேண்டுமென்று —கிரிமகள்-பர்வதராசபுத்திரியினது —கொழுநற்கு - நாயகனாகியபரமசிவனுக்கு —அன்பன் - அன்பனாகிய —கின்னரப்பிரமன் - கின்னரப்பிரமனென்போன்—அல்லமனடிபணிந்தான் - அல்லமரதுதிருவடிகளை வணங்கினான். எ - று. அம்மா, வியப்பிடைச்சொல். கிரி இடவாகுபெயர். தான் சாரியை. (௩௯)

எமையெலா மடிமை வேண்டி யிவன்பிழை பொறுத்தி யென்னு
மமையுலாம் பணைமென் றோட்சே யரிமதர் மழைக்கட் செவ்வா
யுமைமண வாளனை வந்த வொண்டவ ரெலாம்ப ணிந்தார்
சமையுளா ருணரு மெங்க டம்பிரான் சாற்ற லுற்றான்.

(இ - ள்.) எமையெலாம் - எங்களையெல்லாம் —அடிமைவேண்டின் - அடிமைகொள்ளவேண்டின் —இவன்பிழைபொறுத்தியென்று - இவனதுபிழையைப்பொறுப்பாயென்று—அமை - மூங்கில்போலும் —உலாம் - திரட்சியமைந்த—பணை - பருத்த—மெல் - மிருதுவாகிய—தோள்-தோள்களையும்—சேயரி - செவ்வரிபடர்ந்த—மதர் - மதர்த்த—மழை - குளிர்ச்சிபொருந்திய—கண் - கண்களையும் —செவ்வாய் - சிவந்தவாயையுமுடைய—உமை - உமையவளது—மணவாளனை - மருவுவந்த-நாயகனைவிரும்பிய—ஒண்டவரெலாம் - ஒள்ளியதவத்தினர்யாவரும் —பணிந்தார் - வணங்கினார்கள்—சமையுளார் - சாந்தகுணமுள்ளதவத்தினர்—உணரும் - அறியத்தக்க —எங்கடம்பிரான் - எங்கள்தம்பிரானாகியவல்லமன் —சாற்றலுற்றான் - சொல்லத்தொடங்கினான். எ - று. எலாம், இடைக்குறை. ()

சொல்லிய சொற்கள் கற்றீர் சொற்றவந் நெறியி னிற்கு
நல்லிய லில்லை நும்பா னவிறரு மாற்ற மொன்று
புல்லிய செயலொன் றாகப் பொருந்துநர் தம்மி லார்க்கும்
பல்லிய மொடுந டிக்கும் பாதரோ பெரிய ராவார்.

(இ - ள்.) சொல்லிய - இப்போதுபேசிக்கொண்டுவந்த —சொற்களைக்கற்றீர் - சொல்லுகளைக்கற்றுக்கொண்டீர்கள் —சொற்றவந்நெறியினிற்கு - சொன்னவண்ணமந்நெறியினிற்கத்தக்க —நல்லியல் - நல்லொழுக்கம்—இல்லைநும்பால் - உங்களிடத்ததுதினைத்துணையுமில்லை —நவிறருமாற்றமொன்று - பேசுஞ்சொல்லொருவகையாகவும் —புல்லிய - அற்பமாகிய—செயலொன்றாக - நடக்கையேறொன்றாகவும் —பொருந்துநர்தம்மில் - பொருந்தியிருப்பவர்களுக்குள் —ஆர்க்கும் - ஒலிக்கின்ற —பல்லியமொடு - சங்கீதத்தோடு—நடிக்கும் - நடனஞ்செய்கின்ற —பாதரோ - கூத்தாடுபவரோ—பெரியராவார் - சிறந்தோராவர். எ - று. எனவே, உங்களினுங் கூத்தாடிகள்சிறந்தவரெனப் பெற்றும்.புல்லியசெயலென்றதனால் வஞ்சகநடத்தையெனக்கொண்டாம். ஆகவெனலை சரிடத்துமொட்டுக. (௪௧)

ஆதர விலையேல் வேண்டு மறத்தினிற் பொருளோர் செம்பொற்
பூதர வளவ ளித்தும் பொருளழி வளவே யாகு
மாதர வுளதே னல்கும் பொருளணு வளவென் றாலும்
பூதர மெனவ ளர்ந்து புண்ணியப் பொருள ளிக்கும்.

(இ - ள்.) வேண்டுமறத்தினில்-தான்வேண்டிச்செய்யுமறநெறியில் —ஆதரவிலையேல் - அன்பில்லையாயின் —பொருளோர்செம்பொன் - ஒப்ப

ற்றசெம்பொன்னுகியபொருளை —பூதரவளவளித்தும் - மலையளவுகொடுத்தும் —பொருளனுவளவேயாகும் - அப்பொருளனுவளவினதாகச்சுருங்கும் —ஆதரவுளதேல் - அன்புண்டாயின் —நல்கும்பொருள் - அறத்தின்வழிச்செலுத்தும்பொருள்—அனுவளவென்றாலும்-அனுவளவினதெனப்படினும் —பூதரமெனவளர்ந்து-மலைபோல்வளர்ந்து —புண்ணியப்பொருளளிக்கும் - புண்ணியப்பயனைத்தரும். எ - று. ஆதரவோடளித்தல் புண்ணியப்பொருளளிக்குமெனவே, ஆதரவின்றியளித்தல் பாவப்பொருளளிக்குமென்முயிற்று. புண்ணியம் பொருள்வளர்தல். பாவம் பொருள்சுருங்கல். (௪௨)

துறவற மனைய றஞ்சீர் தூய்மைநற் கல்வி நல்லோ
ருறவொடு மகங்க டான மொண்டவம் விரதம் பூசை
யறிவிவை யனைத்து மில்லை யாதர மில்லை யாயிற்
பெறுவன மெய்வ ருத்தம் பெரும்பொரு ளழிவு மாதோ.

(இ - ள்.) துறவறம் - துறவறமும்—மனையறம் - இல்லறமும்—சீர் - சீர்த்தியும்—தூய்மை - பரிசுத்தமும்—நற்கல்வி - நல்லகல்வியும்—நல்லோருறவொடு - சத்துக்களுறவோடு —மகங்கள் - யாகங்களும் —தானம் - ஈகையும்—ஒண்டவம் - ஒள்ளியதவமும் —விரதம் - விரதமும்—பூசை - சிவபூசையும்—அறிவு - ஞானமுமாகிய — இவையனைத்துமில்லை - இவையாவுமில்லை—ஆதரவில்லையாயின் - அன்பில்லையாயின்—மெய்வருத்தம் - தேகவருத்தத்தையும் —பெரும்பொருளழிவும்-மிக்கதிரவியநஷ்டமும்—பெறுவன் - அடைவன். எ - று. மாது - ஓ - அசைகள். அன்பில்லாவிடத்து இவையனைத்தும் பயனின்றியமைவதுமன்றித் தேகவருத்தமும் மிக்க திரவியநஷ்டமு முண்டாமெனப் பொருள்கொள்க. மனைவியோடு கூடியியற்றலால் மனையறமெனப்பட்டது. (௪௩)

ஆதர வுடையான் செய்யு மல்லவு நல்ல வாகு
மாதர விலாதான் செய்யு நல்லவு மல்ல வாகு
மாதர வதனு லாவிக் கருந்துணை யின்ப முத்தி
யாதர வலாது வேறென் றளித்திடக் கண்ட துண்டோ.

(இ - ள்.) ஆதரவுடையான் - அன்புடையான் —செய்யும் - செய்கின்ற—அல்லவும் - தீயனவும் —நல்லவாகும் - நல்லனவாம் —ஆதரவிலாதான் - அன்பில்லாதவன்—செய்யும் - செய்கின்ற—நல்லவும் - நல்லனவும்—அல்லவாகும் - அல்லனவாம் —ஆதரவதனால் - அன்பினால்—ஆவிக்கு - உயிருக்கு—அருந்துணை-அரிய துணையாவது — இன்பமுத்தி - பேரின்பமாகியமுத்தியாம்—ஆதரவலாது - அன்பல்லாமல் —வேறொன்றளித்திட - வேறொன்றைக்கொடுக்க —கண்டதுண்டோ-பார்த்ததுண்டோ. எ - று. அல்லவும், நல்லவும், குறிப்புவினையாலணையும்பெயர். நல்லவாகும், அல்லவாகும், இரண்டும் குறிப்புப்பன்மைவினைமுற்று. (௪௪)

ஆதலா லன்பி னுஞ்சொல் லகமகிழ் வினைசெ யாரென்
றோதினு னடியர் தீமை யொழித்தரு டொழிலி னின்றோன்
காதலால் வணங்கி னோர்நின் கருணையா லன்றி யாங்க
ளேதினு னல்ல ராவே மென்றடி தொழுது நின்றார்.

(இ - ள்.) ஆதலால் - ஆகையால்—அன்பினும்-அன்பைக்காட்டினும்—சொல் - வறுஞ்சொல்லுகள் —அகமகிழ்வினை - உள்ளக்களிப்பை —செயாரென்று - செய்யமாட்டாரென்று —அடியர்தீமை - அடியார்களதுபிழவித்தீமைகளை —ஒழித்தருள் - நாசஞ்செய்யத்தக்க —தொழிலினின்றோன் - தொழிலையேவிரதமாகவுடையவல்லமன்—ஓதினான் - சொன்னன்—காதலால் - அன்பினால் —வணங்கினோர் - வணங்கினவர்கள் —நின்கருணையாலன்றி - உன்னுடையகிருபையினாலல்லாமல் —யாங்கள் - நாங்கள்—ஏதினால் - யாதினால்—நல்லராவேமென்று - நல்லோர்களாவோமென்று —அடிதொழுதுநின்றார் - பாதங்களை வணங்கினின்றார்கள். எ - று. அன்பினும் என்பதிலும்மை உயர்வுசிறப்பு. (௪௫)

காஞ்சிரங் கனியின் றாய்கு கடையனேன் பிழைபொ றுத்தாய்
தீஞ்சுவை யமிர்த மன்ன திவ்விய கறியிற் குற்ற
மாஞ்சுவை யறைதல் போலிவ் வன்பனைச் சீறே லென்று
பூஞ்சரண மிசைவ ணங்கிப் போற்றினன் சித்த ராமன்.

(இ - ள்.) காஞ்சிரங்கனியின்றாங்கு - எட்டிக்கனியின்றற்போல—கடையனேன் - கடைப்பட்டவடியேனது—பிழைபொறுத்தாய் - குற்றம்பொறுத்தனை—தீஞ்சுவை - இனியமதுரமாகிய—அமிர்தமன்ன - அமிர்தம்போன்ற—திவ்வியகறியில் - திவ்வியமாகியபதார்த்தத்தில் —குற்றமாஞ்சுவை - சுவைக்குற்றம்—அறைதல்போல் - சொல்லுதலைப்போல—இவ்வன்பனை - அன்பில்மிக்கவிவ்வசவண்ணனை—சீறேலென்று - கோபியாதிருத்தியென்று—பூஞ்சரண்மிசை - அழகியபாதங்களின்மேல்—சித்தராமன் - சித்தராமனென்போன்—வணங்கிப்போற்றினன் - வணங்கித்துதித்தனன். எ - று. (௪௬

அடைக்கல மென்னை யாளா யண்ணலே யென்று நந்தி
கடிக்கம லங்கள் வென்ற கான்மிசை மீண்டுந் தாழ்ந்தான்
விடுத்திடே லென்று சென்ன வசவனும் வீழ்ந்தி றைஞ்சித்
தொடிக்கரந் தொழுதா னன்பர் துதித்தனர் சூழ்ந்து கொண்டு.

(இ - ள்.) அடைக்கலம் - தஞ்சமாக—அண்ணலே - கர்த்தனே—என்னையாளாயென்று - என்னையடிமைகொள்ளுதியென்று—நந்தி-வசவதேவன்—கடிக்கமலங்கள் - வாசனைபொருந்திய தாமரைமலர்களை—வென்ற - செயித்த—கான்மிசை - திருவடிகளின்மேல்—மீண்டும் - மறுபடியும்—தாழ்ந்தான் - வணங்கினான்—விடுத்திடேலென்று - கைசோரவிடேலென்று—சென்னவசவனும் - சென்னவசவதேவனும்—வீழ்ந்திறைஞ்சி - கீழேவிழுந்துவணங்கி—தொடிக்கரம் - கங்கணமணிந்தகையினால்—தொழுதான் - அஞ்சலிசெய்தனன்—அன்பர் - ஏனையவடியார்கள்—சூழ்ந்துகொண்டு - சூழநின்றுகொண்டு—துதித்தனர் - தோத்திரஞ்செய்தார்கள். எ - று. (௪௭)

அல்லம னெனுமெங் கோமா னருட்கடைக் கண்வைத் தைய
சொல்லுவ னெழுதி யென்று துணைக்கையா லெடுத்த ணைத்து
நல்லருள் புரிந்து தண்ட நாயகன் றிரும டத்து
ளெல்லையி லடியார் சூழ வினிதெழுந் தருளி னானால்.

(இ - ள்.) அல்லமனெனும் - அல்லமனென்கிற—எங்கோமான் - எமதுகர்த்தன்—அருள் - கிருபைபொருந்திய—கடைக்கண்வைத்து - கிருபாநோக்கம்வைத்து—ஐய - ஐயனே—சொல்லுவனெழுதியென்று - சொல்லுகின்றேனெழுந்திருவென்று—துணைக்கையாலெடுத்து - இரண்டுகையினாலுமெடுத்து—அணைத்து - மார்போடணைத்து—நல்லருள்புரிந்து - நன்றாகக்கிருபைசெய்து—தண்டநாயகன் - வசவண்ணரது—திருமடத்துள் - அழகியமடத்தினுள்—எல்லையிலடியார்சூழ - அளவிறந்தவடியார்கள்சூழும்படி—இனிது - மிக்கபிரியத்தோடு—எழுந்தருளினான் - பிரவேசித்தான். எ - று. ஆல் - அசை. அல்லமனெனுங்கோமான் கடைக்கண்வைத்து, எடுத்தணைத்து, அருள்புரிந்து, எழுந்தருளினானெனக் கூட்டிமுடிக்க. ()

வசவண்ணர் - கதி முற்றிற்று.

ஆ கதி - கஅ - ஐ - விருத்தம் - எஎக.

பதினைந்தாவது

மருள்சங்கரதேவர்கதி.

வேறு.

தாணுவி னுயர்பிர சாத குண்டத்திற்
காணரு மருளசங் கரனைக் கண்டருட்
பூணணி யல்லமன் போத நல்கிய
மாணுறு நெறியினை வகுத்துக் கூறுவாம்.

(இ - ள்.) தாணுவின் - மலைபோல—உயர் - உயர்ந்த—பிரசாதகுண்டத்தில் - பிரசாதகுண்டமென்னுமிடத்தில்—காணரும் - காண்டற்கரிய—மருளசங்கரனைக்கண்டு - மருளசங்கரனென்பவரைக்கண்டு—அருள் - அருளை—பூண் - பூணுகை—அணி - அணிந்த—அல்லமன் - அல்லமதேவன்—போதநல்கிய - ஞானோபதேசஞ்செய்த—மாணுறு - மாட்சிமைபொருந்திய—நெறியினை - முறையை—வகுத்துக்கூறுவாம் - தெளிவாகச்சொல்லுதும். எ - று. பிரசாதகுண்டம்; அடியார்களுண்ட மிச்சிலுணவு போடுமிடம். (௧)

மாதவ ரெண்ணிலர் மருங்கு சூழ்தர
வாதுல ரெதிர்பொரு ளாக வல்லம
நாதனை யறிவறி நந்தி கொண்டுத
னேதமின் மனையிடை யெய்தன் மேயினான்.

(இ - ள்.) மாதவரெண்ணிலர் - அளவில்லாதமாதவத்தினர்—மருங்குசூழ்தர - புடைசூழ்ந்துவர—ஆதுலர் - தாரித்தாருக்கு—எதிர் - எதிர்கிடைத்த—பொருளாக - புதையல்போல—அல்லமநாதனை - அல்லமதேவனை—அறிவறி நந்தி - ஞானத்தையுணர்ந்த வசவண்ணன்—கொண்டு - அழைத்துக்கொண்டு—தன் - தன்னுடைய—ஏதமில்மனையிடை - பழுதில்லாதவீட்டில்—எய்தன்மேயினான் - போகத்தொடங்கினான். எ - று. அறிவறிதலாவது; அனைத்தையுமறிகின்றவறிவையறிதல். என்னை "பெறு

மவற்றுள் யாமறிவதில்லை, யறிவறிந்தமக்கட்பேறல்லபிற" என்றார் திருவள்ளுவர். ஏதமிலென்றது ; பழிபாவங் காரணமாக வீட்டியதன்றெனற்கென்க. (உ)

அவத்தைகள் பற்பல வகன்று மெய்ப்பர
சிவத்தினை யடைபவர் செய்கை போற்கடை
தவப்பல கடந்துபோய்ச் சாதருண் டத்தை
யுவப்புட னடைந்தன னொப்பி லல்லமன்.

(இ - ள்.) அவத்தைகள் பற்பலவகன்று - அனந்தபேதமாயுள்ள பற்பல வவத்தைகளையுங்கழன்று—மெய் - உண்மையாகிய —பரசிவத்தினை யடைபவர் - பரமசிவத்தை யிரண்டறக்கலக்க வடைபவரது—செய்கை போல் - செயலைப்போல —கடை - கடைவாயில்முதல் —தவம் - தவம் புரிதற்கியற்றிய —பல - பலவறைகளையும் —கடந்துபோய் - தனித்தனி கண்டு கடந்துபோய் —சாதருண்டத்தை - சாதருண்டமென்னுமிடத்தை—ஒப்பிலல்லமன் - உவமைகடந்தவல்லமதேவன்—உவப்புடனடைந்தனன் - சந்தோஷத்தோடடைந்தான். எ - று. அவத்தைகள் பற்பலவாவன ; சாக்கிரமுதல் மரணமிறுவாக்கிடந்த எழுவகையுள் ஒவ்வொன்றுமெழுவகையாகிற்கும். உதாரணமாகச் சாக்கிராவத்தையை விரித்துணர்த்துதும். சாக்கிராவத்தையிற்சாக்கிரம் ; தனதுண்மைநிலையாகிற்றல். சாக்கிரத்திற்சொப்பனம் ; உண்மைநிலைபோற்காணச் சகத்தாகஸ்புரித்தல். சுழுத்தி ; தனதுண்மைநிலைமுற்றுங் காணாதுமறைதல். துரியம் ; விடயப்பிரியந் தற்பிரியமாகக்காண்டல். துரியாதீதம் ; அன்னதும் மறந்துதற்பிரிய முண்டெனப்பலவேதுக்களானேரேயுணர்த்தினு மங்கீகரியாமை. மூர்ச்சை ; அன்னபகுப்புமின்மை. மரணம் ; ஆன்மா வில்லவேயில்லை யிருந்தாற்காணுறைவென்பது. ஏனையவு மிங்ஙனமே, அறிதெனின் தக்கோர் பாற்கேட்டுத்தெளிக. (௩)

உயர்பிர சாதருண் டத்தி னொண்கடை
மயன்மலி பித்தரின் மருள சங்கரன்
பயிலுதல் கண்ணுறீஇப் பரம யோகிதன்
னியலினை யுணர்ந்தன னெம்பி ரானரோ.

(இ - ள்.) உயர் - உயர்வாகிய —பிரசாதருண்டத்தின் - பிரசாதருண்டத்தினது—ஒண்கடை - ஒள்ளியகடையில் —மயன்மலி - மயக்கமேற்

கொண்ட—பித்தரின் - பித்தரைப்போல —மருளசங்கரன் - மருளசங்கரனென்போன்—பயிலுதல் - சஞ்சரித்தலை —கண்ணுறீஇ - பார்த்து—பரமயோகிதன்னிலையினையுணர்ந்தனன் - இந்தப்பரமயோகியினிலையையுணர்ந்தான் —எம்பிரான் - அல்லமதேவன். எ - று. கண்ணுறீஇ சொல்லிசையளபெடை. உயவொன்றடைகொடுத்தது மகான்களுண்டமிச்சிலுணவைப்பற்றியென்க. (௪)

கண்டரு ளமலனைக் கண்டு தானெதிர்
வெண்டிரை யமுதினை மிடியன் மேவியே
யுண்டன னென்மகிழ்ந் தோடி வீழ்ந்தனன்
வண்டிரு வடிமிசை மருள சங்கரன்.

(இ - ள்.) கண்டருள் - தன்னைக்கண்ட —அமலனைக்கண்டு - அல்லமனைக்கண்டு—மிடியன் - வறியோன்—தான் - நான்—எதிர் - தனக்கெதிரில்கிடைத்த —வெண்டிரையமுதினை - திருப்பாற்கடலிலுதித்தவமிர்தத்தை—மேவி - எடுத்து —உண்டனனென - உண்டான்போல —மருளசங்கரன் - மருளசங்கரனென்போன்—மகிழ்ந்தோடி - சந்தோஷத்துடன்விரைந்தோடி—வள் - வளப்பம்பொருந்திய —திரு - அழகிய—அடிமிசை - பாதங்களின்மேல்—வீழ்ந்தனன் - விழுந்தான். எ - று. மருளசங்கரன் அமலனைக்கண்டு மகிழ்ந்து ஓடி வீழ்ந்தனனென முடிக்க. வெண்டிரை, அடையடுத்த சினையாகுபெயர். (௫)

வணங்கிய வறவனை வந்தெடுத்துமெய்
யணைந்தெழு முவகையோ டருள்செய் தல்லம
னிணங்குற வருணிலை யிராமற் பார்த்தவன்
குணங்களை வியந்திது கூறன் மேயினான்.

(இ - ள்.) வணங்கியவறவனை - தனதுதிருவடியில்விழுந்த மருளசங்கரனை—வந்தெடுத்து - வந்துகையினாலெடுத்து—மெய்யணைந்து - தானவன்மெய்யோடணைந்து—எழுமுவகையோடு - தனக்குள்ளெழுந்த சந்தோஷத்தோடு—அருள்செய்து - உண்மையையனுக்கிரகித்து —அல்லமனிணங்குற - அவரோடல்லமன்கூடியிருக்க —இராமன் - சித்தராமன் —அருணிலைபார்த்து - அனுக்கிரகித்த நிலையைப்பார்த்து —அவன் - அந்தமருளசங்கரனது—குணங்களைவியந்து - குணங்களைக்கண்டதிசயித்து—இதுகூறன்மேயினான் - இதனைச்சொல்லத்தொடங்கினான். எ - று. (௬)

குண்டமே வுறுபிர சாதங் கொள்ளைகொண்
டுண்டுவாழ் மாதவ னுண்மைத் தன்மையைத்
தண்டநா யகன்முதற் சரணர் யாவரும்
கண்டிலர் யாரினிக் காண வல்லவர்.

(இ - ள்.) குண்டமேவுறு - குண்டத்திற்பொருந்திய—பிரசாதம் - பிர சாதத்தை—கொள்ளைகொண்டு - கொள்ளைகொள்ளையாகவேற்றுக்கொண் டு—உண்டுவாழ் - உண்டுவாழ்கின்ற —மாதவன்-மருளசங்கரதேவரது— உண்மைத்தன்மையை - உண்மையினிலையை —தண்டநாயகன்முதல் - தண்டநாயகன்முதலிய—சரணர்யாவரும் - அடியார்கள்யாவரும்—கண் டிலர் - தெரிந்திலர்—இனி - இனிமேல்—காணவல்லவர்யார் - காணவல் லவர்யாவருளர். எ - று. (எ)

சரிதையொண் கிரியைகா றடுக்கும் யோகிவை
புரிபவர் தம்மையப் புரியுஞ் செய்கையாற்
றெரிதர லாகுமோர் செயலு மின்றிவா
ழரியநன் ஞானியை யறிய லாகுமோ.

(இ - ள்.) சரிதை - சரியையும் —ஒண்கிரியை - ஒள்ளியகிரியையும்— காலடுக்கும் - பிராணபந்தனஞ்செய்யும்—யோகு - யோகமுமாகிய—இ வை - இவற்றை—புரிபவர்தம்மை - செய்பவர்களை—அப்புரியுஞ்செய்கை யால் - அங்ஙனமியற்றுஞ் செய்கையால் —தெரிதரலாகும் - அறியக்கூடு ம்—ஓர்செயலுமின்றிவாழ் - ஓர்செய்கையுமின்றி வாழப்பட்ட—அரியந ன்ஞானியை - அருமையாகிய நல்ல ஞானவானை —அறியலாகுமோ - அ றியக்கூடுமோ. எ - று. உலகினர் போல்வாழினும் சகச சமாதியினிற்ற லின், ஓர்செயலுமின்றிவாழ் அரிய நன்ஞானியை யறியலாகுமோ வெ ன்றார். (அ)

நலமுறு மோர்சிவ ஞானி யில்லில்வாழ்
நிலையற மாகினு நீத்து நிற்குமோர்
தலையற மாகினுந் தரித்து ஞாலமே
லிலைமறை காயென விருக்கு மென்பவே.

(இ - ள்.) நலமுறும் - நன்மைமிகுந்த—ஓர்சிவஞானி - ஒப்பற்றசிவ ஞானியென்பவன்—இல்லில்வாழ் - கிரகத்தில்வாழ்கின்ற—நிலையறமாகி

னும் - நிலையானகிரகஸ்தனாயினும் —நீத்துநிற்கும் - நெஞ்சிற்பற்றற்றுநிற் பன்—ஓர் - ஒப்பற்ற—தலையறமாகினும் - துறவறத்தானாயினும் —ஞால மேல்தரித்து - பூமியின்மே லிருந்து —இலைமறைகாயென - இலையால் ம றைவுற்ற காயைப்போல —இருக்கும் - இருப்பன் —என்ப - என்றறி ஞர் கூறுவர். எ - று. ஏ - அசை. ஞானி மிக்க பந்தமுடையனாயினும் சிந்தை சிவப்பிரகாசமா விளங்கலின் நீத்துநிற்குமெனவும், தலையறமாத ல் வருணாசிரமங்கடந்து நிற்றலை. இந்நிலையினர் இனையரெனக் காணப்ப டாராதலின் இலைமறை காயென விருக்குமெனவுங் கூறினர். என்பவெ ன்றது யாம் கூறியதன்றெனக்குறிக்க நின்றதென்க. (௯)

வல்லனென் றிருப்பினு மிருக்கும் வன்மையொன்
றில்லனென் றிருப்பினு மிருக்கு மெள்ளுறப்
புல்லனென் றிருப்பினு மிருக்கும் புண்ணிய
நல்லனென் றிருப்பினு மிருக்கு ஞானியே.

(இ - ள்.) வல்லனென்றிருப்பினும் - பண்டிதனெனப்பெயர்பெற்றிரு ப்பினும்—இருக்கும் - இருப்பன்—வன்மையொன்று-ஓர்வல்லமையும்— இல்லனென்றிருப்பினும் - இல்லாதவனென்று வழங்கப்பட்டிருப்பினு ம்—இருக்கும் - இருப்பன்—எள்ளுற - யாவருமிகழ —புல்லனென்றிருப் பினும்-அற்பனென்றுசொல்லப்பட்டிருப்பினும்—இருக்கும்-இருப்பன்— புண்ணியம் - புண்ணியகாரியங்களில் —நல்லனென்றிருப்பினும் - நற்குண முடையோனெனக்கூறப்பட்டிருப்பினும் —இருக்கும் - இருப்பன்—ஞா னி -ஞானவான். எ - று. ஏ - அசை. ஞானியென்பது கடைநிலைத்தீப மாகலால் வினையமுன்சேறுமொட்டுக. "பல்லோர்படர்க்கைமுன்னிலைத ன்மையி" லென்னும்விதியால் இருக்குமென்னுநான்கு வினைமுற்றையும் உயர்திணை யாண்பாலாக்குக. (௧௦)

அறிவறி ஞானியா லன்றி வன்பவ
மறிவுறு கருமியான் மாய்வு றாதுகா
ணெறிகதி ரவிவந் தெழுந்தி டாவிடிற்
செறியிரு ளகலுமோ சித்த ராமனே.

(இ - ள்.) அறிவறி - எவற்றையுமறியுமறிவையறிகின்ற—ஞானியால ன்றி - ஞானியாலல்லாமல்—மறிவுறு - அறிவுறிதற்குடன்படாத —கருமி யால் - கருமியினால்—வன்பவம் - கொடியசென்மம்—மாய்வுறாது - நசியா

து—எரிகதிர் - கிரணங்களேவீசுகின்ற—இரவிவந்தெழுந்திடாவிடில் - சூரியனுதயமாகாவிடின்—இந்தராமனோ - இந்தராமனோ—செறியிருளகலுமோ - மிக்கவிருணீங்குமோ. எ - று. ஞானியறிவறிதலும், கருமியதனைமறந்தலு முடையாராதலின், அறிவறிஞானி மறிவுறுகருமி என்றார். கற்பனைகட்கிடமறிவாதலால் அதனைக்காண்போன் ஞானியும், காணுதோன்கருமியுமாதல்பற்றி வன்பவம் ஞானியால் மாய்வுறும் கருமியால்மாய்வுறுதெனப்பட்டது. அறிவானது ; ஞானிக்குச்சூரியோதயமும், கருமிக்கு மிக்கவந்தகாரமுமாகிற்றலி னிங்ஙன முவமைகூறினர். ஞானம் கன்மமென்பவற்றுள் அறிவேயுருவுக்குருவாயும், மந்துக்கு மகத்தாயுமிற்பதெனக்காண்போர் அயல்தாறுவரா ? காணுதோராவரா ? காண்போரெனின், அறிவேயனைத்துமாகவிளங்கா திருக்கவேண்டும். அங்ஙனமின்றுதலால் அதுபொருந்தாதென்க. (௧௧)

> சங்கர முனிநிலை தனைக்கண் டாய்கொலென்
> றெங்குரு பான்சொல விராமன் கைதொழு
> திங்கிவன் மருளறி லிருந்த தன்மையென்
> னங்கண வறைகென வறைதன் மேயினான்.

(இ - ள்.) சங்கரமுனி - மருளசங்கரமுனியினது—நிலைதனை - உன்மைநிலையை—கண்டாய்கொலென்று - கண்டனையாவென்று—எங்குருபான்சொல - எமதுகுரு மூர்த்தமாகிய வல்லமதேவன்சொல்ல—இராமன் கைதொழுது - அதற்கிராம னஞ்சலியத்தனாய்—இங்கிவன் - இங்ஙனமாகச் சிறந்துநின்றவிவன்—மருளறில் - பித்தனைப்போல—இருந்ததன்மையென் - இருந்தவிதமென்ன—அங்கண - அழகியகருணையுடையவனே—அறைகென - இதனைத்தெரிவிக்க வேண்டுமெனக் கேட்க—அறைதன் மேயினான் - அல்லமன்சொல்லத்தொடங்கினான். எ - று. அருள், பிறவுயிர்களின்மேல் கண்சென்றவழி அக்கண்ணின்வழி புலப்படுவ தாதலால் அங்கண என விளித்தனன். சொல, கண, இவை யிடைக்குறை. (௧௨)

வேறு.

> தொழிலான் முயன்று நுகர்வமெனிற் றுயரொன் றுயிர்
> க்கு வினையுமென, வொழியா வமல சரமூர்த்தி யுண்ட மிச்சி
> னுகர்வமெனிற், பழியா துமிலை யகன்றுபோம் பவமு மென்னப்
> பிரசாதக், குழியா னதனை யகலாமற் கொண்டிங் கிருந்தான்
> குணமிக்கான்.

(இ - ள்.) தொழிலால் - பொருளீட்டற்கியைந்த தொழில்காரணமாக—முயன்று - முயற்சிசெய்து—நுகர்துமெனின் - புசிப்போமென்றால்—துயரொன்று - துன்பமொன்றே—உயிர்க்குவினையுமென - உயிர்கட்கு விளைவதாகுமென்று—ஒழியா - தமதுகிர்த கிர்த்தியத்தினின்றகலாத—அமலம் - நின்மலமான—சரமூர்த்தி - சரிக்கின்றமூர்த்திகளாகியசத்துக்கள்—உண்டமிச்சில் - உண்டமீதியை—நுகர்வமெனில் - உண்பமாயின்—பழியாதுமிலை - பழிபாவம்யாதுமில்லை—பவமுமகன்றுபோம்-சென்மமுமொழிந்துபோகும்—என்ன - என்று—பிரசாதக்குழியான் - பிரசாதக்குழியிலே—அதனையகலாமல் - அக்குழியைவிட்டு நீங்காமல்—கொண்டு - இதுவே தக்கதெனக்கொண்டு—குணமிக்கான் - குணசிரேஷ்டனாகிய இவன்—இங்கிருந்தான் - இங்கிருந்தனன். எ - று. தன்னையறியாது பழிபாவ மெய்யுளமேனும் வருமென்றிருந்தலின், துயரொன்றுயிர்க்கு வினையுமெனப்பட்டது. அடியார்களுண்ட மிச்சிலாதலால் சரமூர்த்தியெனப்பட்டது. பரமசிவனுக்கு நைவேத்திய நீங்கலாக வேனைய பன்மையாக்கினும். (௧௩)
யவைக ளெனினுமமையும்.

> பந்த மகன்ற சிவபத்தர் பாதம் விளக்கும் புனற்குழியில்
> வந்து பிறந்து மூழ்கியதில் வைகும் புழுவின் பெரும்பேறு
> முந்து கங்கை முதலவா மூற்றும் படிந்து தீவினைகள்
> சிந்து மந்த ணாளருமே சேரா வென்று மறைசாற்றும்.

(இ - ள்.) பந்தமகன்றசிவபத்தர் - பந்தமினையதெனக்கண்டகன்றசிவபத்தரது—பாதம்விளக்கும் - பாதங்களைக்கழுவும்—புனற்குழியில் - சலம்நிற்குங்குழியில்—வந்துபிறந்து - வந்துசெனித்து—அதில்மூழ்கிவைகும் - அதில்தானேமூழ்கிவாசஞ்செய்யும்—புழுவின்பெரும்பேறு - புழுவினது பெரிதாகியபயனை—முந்து - எவற்றினுமேலாய—கங்கைமுதலவாம் - கங்கைமுதலியதீர்த்தங்களனைத்திலும்—படிந்து - மூழ்கி—தீவினைகள்சிந்தும் - தீவினைகளைக்கெடுக்கின்ற—அந்தணாளருமே - பிராமணர்களும்—சேராவென்று - அடையார்களென்று—மறைசாற்றும் - வேதங்கள்முறையிடும். எ - று. அந்தணாளரும், உயர்வுசிறப்பும்மை. வ-பி (௧௪)
ரிகிலே.

> தாய்க்கு வழுவின் மகளிர்க்குத் தந்தை தனக்குப் பசுவிற்குச்
> சேய்க்கு மறையோர் தமக்கிடர்செய் தீர்வில் கொடிய பாதகமும்

போக்கு மிமைப்பிற் கரணத்தைப் புனித மாக்கிச் சிவமாக
ஆக்கு மரன்றன் பிரசாத மாயி னதற்கு நிகருண்டோ.

(இ - ள்.) தாய்க்கு - தாயாருக்கும் —வழுவின் மகளிர்க்கு - குற்றமற்ற பெண்டிர்களுக்கும்—தந்தைதனக்கு - தகப்பனுக்கும்—பசுவினுக்கு - பசுவுக்கும்—சேய்க்கு - சிசுவுக்கும்—மறையோர்தமக்கு - பிராமணர்களுக்கும்—இடர்செய் - துன்பமேசெய்கின்ற —நிரவில் - முடிவில்லாத —கொடியபாதகமும்போக்கும் - கொடியபாதகத்தையுநீக்கும் —இமைப்பில் - இமையளவில்—கரணத்தைப்புனிதமாக்கி - அந்தக்கரணசுத்திசெய்து—சிவமாகவாக்கும் - சிவசொருபமாகவு மாக்கிவிடும் —அரன்றன்பிரசாதமாயின் - பரமசிவத்துக்கிட்டநைவேத்தியமாயின் —அதற்குநிகருண்டோ - அதற்குச்சமானமுண்டா. எ - று. தாய்முதலியோர்க்கு அஞ்சாதுசெயுங் கொடியபாதகருள்பது அரன்றன்பிரசாதமாயின், அப்பாதகங்களொருங்கேயகற்றி யந்தக்கரணசுத்திசெய்து சிவமாகவுமாக்கும். எனவே, பிரசாதகுன்டமகிமைதோன்றக் கூறியதாகப்பெறும். வழுவிலென்பதை இடைநிலைத்தீபமாக்கி யனைத்திற்குமொட்டுக. உம்மைகள் தொக்கன. மூர்த்திமுதலியவற்றில் நம்பிக்கையே திரிகரணசுத்திதருமாறு போன்று, இதிலும் வைத்தால் தாராதோ, தராதெனின், குறிகுணமற்ற பரத்தைக் குறிகுண மாகப்பாவித்து மதத்தர்பயனுறுவதென்னை ? (௧௫)

பசிக்கு மருந்து மாய்வீடு பயக்கும் வண்மை சேர்ந்துபவம்
ஒசிக்கு மரன்றன் பிரசாத மூகி யந்தா னுணர்ந்திங்கு
வசிக்குந் தகைமை சங்கரற்கே வருவ தன்றிப் பசிக்குணவு
புசிக்கு மனிதர் தமக்கென்றும் பொருந்தா தென்றா னெம்பிரான்.

(இ - ள்.) அரன்றன் - பரமசிவனது—பிரசாதமூதியந்தான் - பிரசாதத்தாலெய்து மிலாபமாவது—பசிக்குமருந்துமாய் - பசிக்குமருந்தாயிருப்பதுமன்றி—வீடுபயக்கும் - முத்தியையுந்தரும்—வண்மைசேர்ந்து - சகலவளப்பமுமுண்டாய்—பவமொசிக்கும் - சென்மநாசஞ்செய்யும் —உணர்ந்து - இங்ஙனமாமென்றுணர்ந்து —இங்குவசிக்குந்தகைமை - இங்கேவாசஞ்செய்யுந்தன்மையாம்—சங்கரற்கேவருவதன்றி - இப்பயனுறுவது பரமசிவத்தின் காரணமாகவேயன்றி—பசிக்குணவுபுசிக்குமனிதர்தமக்கு - பசிநிமித்தஞ்சாப்பிடுகின்றமனிதர்களுக்கு—என்றும்பொருந்ாதென்றான் —எப்போது மமையாதென்றனன் —எம்பிரான் - அல்லமதேவனா

எ - று. பசிக்குமருந்துமாய் என்பதிலும்மை, எதிரதுதழீஇயவெச்சவும்மை. வீடென்பதிலும்மை எஞ்சியது. சங்கரற்கேயென்பதிலேகாரந்தேற்றம். (௧௬)

நின்னை யறிவன் சங்கரனே நீயே யவனை யறிகுவாய்
பின்னை யுலகில் யாரறிவார் பேசிற் பாம்பே பாம்பின்கா
றன்னை யறியு மெனவமலன் றாட்டா மரையின் கீழ்ப்பணிந்தா
னென்னை யடிமை யாவுடைய விராம னென்று மிணையில்லான்.

(இ - ள்.) சங்கரனே - பரமசிவமே —நின்னையறிவன் - உன்னையவனேயறிவன்—நீயேயவனையறிகுவாய் - அவனைநீயேயறிவாயன்றி—பின்னை - பின்னர்—உலகில் - உலகின்கண்—யாரறிவார் - யாவர்தானறியவல்லவர்—பேசில் - சொல்லுமிடத்தில் —பாம்பின்கால்தன்னை - பாம்பின்காலை—பாம்பேயறியுமென - பாம்பேயறியுமென்றுசொல்லி—அமலன் - அல்லமதேவரது—தாட்டாமரையின்கீழ் - பாததாமரையின்மேல்—என்னையடிமையாவுடைய - என்னையடிமையாக ஆட்கொண்ட —இராமனென்னும் - சித்தராமனென்கின்ற—இணையில்லான் - ஒப்பில்லாதவன்—பணிந்தான் - வணங்கினான். எ - று. உன்னையவனும், அவனைநீயும், தாட்டாமரை சாரியா தறிந்தமையால் பாம்பின்காலுக் குவமைகூறினார். தாட்டாமரை உருவகம். (௧௭)

அம்பொன் வைப்பின் மீதிருந்து மறியா தல்லற் படுவான்போ
னம்பன் மருள சங்கரனை நானே யறியா திருந்தழிந்தே
னிம்பர் மருவி நிரஞ்சனநீ யெனக்குக் காட்டித் தந்தனையென்
றும்பர் பரவு மல்லமனை யுவந்து பணிந்தா னருணந்தி.

(இ - ள்.) அம் - அழகிய —பொன்வைப்பின்மீதிருந்தும் - பொன்புதையலின்மேலிருந்தும் —அறியாது - சற்றுந்தெரியாமல் —அல்லற்படுவான்போல் - வறுமையாலிடுக்குறுவான்போல்—நம்பன் - கர்த்தனாகிய—மருளசங்கரனை - மருளசங்கரதேவனை—நானே - யானே—அறியாதிருந்து - இதுகாறுமறியாமலிருந்து —அழிந்தேன் - கெட்டேன் —இம்பர் மருவி - இவ்விடத்துவந்து —நிரஞ்சன - களங்கரகிதமானவனே —நீயெனக்குக்காட்டித்தந்தனையென்று - நீயெனக்குக்காட்டிக் கொடுத்தாயென்று—அருணந்தி - கிருபைபொருந்தியவசவண்ணதேவர் —உம்பர்பரவுமல்லமனை - தேவர்கள்வணங்கத்தக்கவல்லமனை—உவந்துபணிந்தான்-

சந்தோஷித்துவணங்கினர். எ - று. யானிதுகாறுமிவனையறிந்தும், இவன்மகிமை தெரிந்திலனெனக்காட்ட இவ்வுவமை கூறினுரென்க. (௧௮)

இணங்கு மிக்க காமிதனக் கின்ப மூடூல் சரலிங்கம், பிணங்கன் முத்தி காமிக்குப் பேரின் பென்ப துணர்த்தற்குக், குணங்கண் மிக்காய் நினைச்சினந்தாங் குறையொன் றுளதோ நினக்கரவின், பணங்கொ ணிலத்திற் பரமசிவ பத்திக் குவானீ யென்றக்கால்.

(இ - ள்.) இணங்கு - இயைந்த—மிக்ககாமிதனக்கு - மிகுந்தகாமியத்தவத்தோனுக்கு—இன்பம் - இன்பமான துகூலுடல் (பிரியநாயகி) ஊடலாம் —சரலிங்கம் - சரலிங்கமாகிய அடியார்களுக்கு —பிணங்கல் - (ஆசிரியர்) சினங்கொண்கெடிதலின்பமாம் —முத்திகாமிக்கு - முந்தகிட்காமியதவத்தோனுக்கு —பேரின்பென்பது - பேரின்பமெனவுஞ்சத்துக்கள்சொல்வதை—உணர்த்தற்கு - தெரிவித்தற்கு —குணங்கண்மிக்காய்- சிறந்தகுணங்களையுடையோனே —நினைச்சினந்தாம் - உன்னைக்கோபித்தனம் —அரவின்பணம் - பாம்பின்படத்தை —கொள் - பணியாகக்கொண்ட—பரமசிவம் - பரமசிவத்துக்குச்செய்யும்—பத்திக்கு-அன்பிற்கு—நிலத்தில் - பூமியில்—வானீயென்றக்கால் - நீயேமேகமென்னுமிடத்து—நினக்கு - உனக்கு —குறையொன்றுளதோ - யாதோர்குறையுளதோ. எ - று. (௧௯)

இங்கு மருள சங்கரன்போ லெண்ணி லார்நின் மனைவாய்தற் கங்குல் பகலு மகலாமற் காப்ப ரென்னி னின்முன்றில் பங்க வினையின் வலிகடந்த பலருந் தாஞ்செய் தவப்பயனால் தங்கு கயிலை மலையன்றோ தண்ட காத வென்றமலன்.

(இ - ள்.) இங்கு - இவ்விடத்தில்—மருள சங்கரன்போல் - மருளசங்கரனைப்போல —எண்ணிலார் - அளவிறந்தவர்கள் —நின்மனைவாய்தல்- உனது வீட்டின்கடைவாயலில் —கங்குல்பகலும் - இரவும்பகலும்—அகலாமற்காப்பரென்னில் - நீங்காமற்காத்திருப்பரென்றால் —நின்முன்றில்- உனதுவாயற்படி—பங்கம் - குற்றம்பொருந்திய—வினையின்வலிகடந்த - இருவினையின்பலங்கடந்த—பலரும் - பலபேரும் —தாஞ்செய் தவப்பயனால் - தாங்கள்செய்த தவப்பிரயோசனத்தினால்—தங்கு - தக்கபடிதங்கிய—கயிலைமலையன்றோ - கைலாயமலையல்லவா—அமலன் - அல்லமன்— தண்டகாதவென்று - வசவண்ணனே யென்றுசொல்லி எ - று. நின்முன்றில், கயிலைமலையன்றோவெனக் கூட்டிமுடிக்க. தவப்பயனாலென்பதுகொண்டு தக்கபடி தங்குமென்றும். இங்கே வலியென்றது; தன்பயனை செய்தோன் அநுபவிக்கும்படி உட்படுக்கும் திறத்தை. அங்ஙனமாய வலிகடந்தோரேனும் நிலைக ளவசரபேதமிருத்தலின் தாஞ்செய் தவப்பயனாலென்றார். (௨௰)

வெம்மை யெதன்க ணிகழ்ந்திடினும் வெந்தீக் குணமென் பதுபோல, மும்மை யுலகின் யாண்டேனு முளைக்கிற் பத்தி யதைநினதென், றிம்மை யுலக மியம்புமெனி லெங்கள் வசவ நின்பெருமை, கொம்மை யிளமென் முலைமடந்தை கூற னன்றி யாரறிவார்.

(இ - ள்.) வெம்மை - வெப்பம்—எதன்க ணிகழ்ந்திடினும் - யாதிடத்துண்டாயினும் —வெந்தீக்குணமென்பதுபோல - கொடிய அக்கினியின் குணமென்று சொல்வதுபோல —மும்மையுலகில் - சுவர்க்காதி மூன்றுலகத்தில் —யாண்டேனும் - எவ்விடத்தேனும் —பத்திமுளைக்கில் - சிவபத்தி உசெனிக்கில் —அதை - அந்தப்பத்தியை—இம்மை - இங்கு—உலகம் - உயர்ந்தோர் —நினதென்றியம்புமெனில் - உன்னுடையதென்று சொல்வாராயின்—எங்கள்வசவ - எமதுபிரியமுள்ள வசவதேவனே—நின்பெருமை - உனதுமகிமையை—கொம்மை - விருத்தமாகிய—இள - இளமை தங்கிய—மெல் - மிருதுவாகிய —முலை - தனங்களையுடைய —மடந்தை - உமையவளை —கூறன் - அர்த்தபாகத்தில்வைத்த பரமசிவன்—அன்றி - அல்லாமல்—யாரறிவார் - யாவர்தானறிய வல்லவர். எ - று. கூறனென்றதனால் மடந்தையெனலை உமையவளென்றும். (௨௧)

பத்திக் கடலே குணக்குன்றே பாசப் பகையே யெம்முறவே முத்திக் கரசே சிவானந்த முதலே ஞான மணிவிளக்கே சித்திப் பொருளே யருணந்தி தேவே நின்னைத் தொழுமடியார் புத்திக் கமுதே யாவர் நினைப் போல்வா ரவனை யறியேமால்.

(இ - ள்.) பத்திக்கடலே - பத்திக்குக் கடல்போன்றவனே —குணக்குன்றே - நற்குணங்களில்மலைபோன்றவனே—பாசப்பகையே - பாசங்கட்குப் பகைபோல்பவனே—எம்முறவே - எமதுறவுபோல்பவனே—முத்திக்கரசே - முத்திக்கரசு போல்பவனே—சிவானந்தமுதலே - சிவான

ந்தத்துக்கு முதற்காரணம்போல்பவனே—மணி - அழகிய—ஞானவிளக்கே - ஞானதீபம்போல்பவனே —சித்திப்பொருளே - அஷ்டமாசித்தியின் பொருள்போல்பவனே—அருள் - கிருபைபொருந்திய—நந்திதேவே- நந்திதேவனே —நின்னைத்தொழுமடியார் - உன்னைவணங்குமடியார்களது—புத்திக்கமுதே - புத்திக்கமுதம் போல்பவனே—யாவர் - எவர்—நினைப்போல்வார் - உன்னையொத்தவர்—அவரையறியேம் - அவரையாமறிகிலம். எ - று. ஆல் - அசை. நினையென்பது, இடைக்குறை கடல், குன்று, பகை, உறவு, அரசு, முதல், விளக்கு, பொருள், அமுது இவை யுருவகப்பொருள். (உஉ)

என்று கூற வெமையுடையா னெனக்குப் புகன்ற நலமெல்லாஞ்
சென்ற நாளி லிலேனது செந்தா மரைத்தா டொழப்பெற்ற
இன்று தொடங்கி யுளவாமெஞ் ஞெந்தை நந்தி வணங்கியெழ
நின்ற வமல சிவசரணர் நெஞ்ச முவகை பூத்தனரால்.

(இ - ள்.) என்றுகூற - என்றுசொல்ல —எமையுடையான் - நம்மையடிமையாக வுடைய வல்லமதேவன் —எனக்குப்புகன்றநலமெல்லாம் - எனக்கிப்போ தருளியநன்மைகளனைத்தும்—சென்றநாளிலிலே - நின்னைக் காணுது கழிந்தநாளிலில்லை—நினது - உனது—செந்தாமரைத்தாள் - செந்தாமரை மலர்போன்ற பாதங்களை —தொழப்பெற்ற இன்றுதொடங்கி - வணங்கக்கிடைத்த இன்றுமுதலாக—உளவாமென்று - உண்டாயினவென்று—எந்தைநந்தி - எந்தந்தையாகிய வசவண்ணர் —வணங்கியெழ - வணங்கியெழுந்திருக்க —நின்ற - அங்கேநின்ற —அமல - பரிசுத்தமாகிய—சிவசரணர் - சிவனடியார்கள்—நெஞ்சம் - மனத்தில் —உவகைபூத்தனர் - சந்தோஷித்தார்கள். எ - று. ஆல் - அசை. எமையுடையானென்றுகூற நந்திவணங்கியெழ சிவசரணரு வகைபூத்தனரெனக் கூட்டி முடிக்க. அந்நலமெல்லாமுளவாமெனப்பன்மை கொண்டு முடிந்தன. ()

அருளான் மருள சங்கரனுக் கமரர் தாமு மறிவரிய
பொருளா கியபே ரின்பவநு பூதி விளக்க மருள்செய்தா
னுரையா னினைவா லருணோக்கா லுலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை யறமாற்ற வெழுந்த ஞான சூரியனே.

(இ - ள்.) அருளால் - கிருபையினால் —மருளசங்கரனுக்கு - மருளசங்கரதேவனுக்கு—அமரர்தாமு மறிவரிய - தேவர்களுமெட்டியறிதற்கரிய—

பொருளாகிய - மெய்ப்பொருளாகிய —பேரின்பம் - பேரின்பமெனப்படும் —அநுபூதிவிளக்கம் - சுவாநுபூதிவிளக்கத்தை —அருள்செய்தான் - அநுக்கிரகித்தான்— (அவனுனெனில்) உரையால் - வார்த்தையாலும்—நினைவால் - நினைவினாலும் —அருணோக்கால் - கிருபாநோக்கத்தினாலும்—உலகருணர்வை - உலகத்திலுள்ளமனிதர்களறிவை—பிணித்து - கட்டி—இருளானதனை - அஞ்ஞானாந்த காரமாயிருப்பதை—அமலம் - நிர்மலமாகும்படி—அறமாற்ற - முழுதுந்தொலைக்க—எழுந்த - எழுந்தருளிவந்த ஞானசூரியன் - ஞானசூரியனாகிய வல்லமதேவன். எ - று. ஞானசூரியன் மருளசங்கரனுக்குப் பேரின்பவநுபூதிவிளக்கம் அருள்செய்தானெனக் கூட்டிமுடிக்க. அமரர்தாமு மறிவரியபொருளாவது; பேதாபேதமாகிய கற்பனைகடந்ததை. உலகருணர்வைப் பிணித்தலாவது; பரிபாகிகளதுணர்வைக் கண்டுபிணித்தலை. உலகரைப்பிணித்தென்னுது உலகருணர்வையென்றதனால் பரிபாகிகளையெனக்கொண்டாம். கற்பனைகடந்ததாவது; மெய்யுணர்வை; பேரின்பம், மெய்யுணர்வையன்றிவேறின்மையின் அறிவரியபொருள் பேரின்பமென்னுது, அறிவரியபொருளாகிய பேரின்பமென்றார். உரையாற்பிணித்தல்; செகத்தோற்றவிரிவிற்கும், அதனையறியும் ஞெப்திஸ்புரிப்பின் சங்கோச விகாசத்திற்கும், இடம்யாதெனக்கேட்டலை. நினைவாற்பிணித்தல்; திரிசியத்துக்கும், திருக்குவிற்கும், எல்லையையறையீதெனக் கண்டுசொல்லுதியெனலை. அருணோக்காற்பிணித்தல்; பிறவிக்குருடனுக்குப்பூதசூரியனை விளக்கிவைத்தாற்போலப் பருவநோக்கி ஞானசூரியனை விளக்கிவைத்தலை யென்க. (உச)

மருளசங்கரதேவர்கதி - முற்றிற்று.

ஆ. கதி - கரு - இ - விருத்தம் - எசுரு.

பதினாறாவது

இட்டலிங்ககதி.

வேறு.

சிட்ட னல்லம தேவ னருளுதீஇ
நட்ட நண்பொடு நந்தி யுணர்வுற
இட்ட லிங்கத் தியல்பு புகன்றமை
கட்டு வல்வினைக் கட்டற வோதுவாம்.

(இ - ள்.) சிட்டன் - யாவர்க்கும்மேலாகிய—அல்லமதேவன் - அல்லமாப்பிரபு —அருளுதீஇ - அருள்சுரந்து—நட்ட - விசுவாசித்த —நண்பொடு - மிக்கபிரியத்தோடு—நந்தி - வசவண்ணர் —உணர்வுற - ஞானோதயமடைய —இட்டலிங்கத்தியல்பு - இட்டலிங்கத்தினிலையை —புகன்றமை - சொல்லிவிளக்கியதை —கட்டு - அனந்தசென்மங்களிற்கட்டுண்ட—வல்வினைக்கட்டு - மிக்கவலியுள்ளகாருவினையின்தொடர்பு —அற - ஒருங்கேநசிக்க—ஓதுவாம் - சொல்லுதும். எ - று. யாவர்பிறவிப்பிணிநோய்க்கிரங்கலால் சிட்டனெனவும், தொண்டினாரியநிலையை நோக்கலால் அருளுதீஇயெனவும் ஆன்மநிலையை இனையதெனக்காட்ட இட்டலிங்கத்தியல்பு புகன்றமையெனவுங் கூறியவாறுகாண்க. இங்கே லிங்கமென லான்மாவை. (க)

சங்க ரற்குத் தனைநிக ரின்பவீ
டங்க ளித்தரு ளல்லம னந்திதன்
மங்க லத்திரு மாளி கைகட்செவிக்
கங்க ணற்கினி யாரொடு கண்டனன்.

(இ - ள்.) சங்கரற்கு - மகாசங்கரதேவனுக்கு —தனைநிகர் - தனக்குத்தானேநிகராகிய—இன்பவீடு - பேரின்பவீட்டை —அங்கு - அவ்விடத்தில்—அளித்தருள் - அநுக்கிரகித்த—அல்லமன் - அல்லமதேவனை —நந்தி - வசவண்ணன் —தன் - தன்னுடைய—மங்கலம் - மங்கலமாயுள்ள —திரு - அழகிய —மாளிகை - உப்பரிகையில் —கட்செவி - கண்ணேசெவியாகவுடைய பாம்பை—கங்கணற்கு - கங்கணமாகவுடைய பரமசிவனுக்கு —இனியாரொடு - அன்பர்களோடு —கண்டனன் - பார்த்தனன். எ - று. வனைய வின்பம்போல்வ தன்றெனக் காட்டப் பேரின்பத்தைத் தனைநிகரின்பமெனவும், பேரின்பத்தையன்றி வீடுவேறின்மையின் இன்பவீடெனவுங் கூறினார். (உ)

மண்டு பேரொளி மாடத்து நாப்பணந்
தண்ட நாதன் றவிசொன் றமைத்திட
அண்ட நாயக னல்லம னாயிடைக்
கண்ட நோக்கங் களிப்ப விருந்தனன்.

(இ - ள்.) மண்டு - நிறைந்த —பேரொளி - மிக்கவொளியையுடைய—மாடத்து - உப்பரிகையின்—நாப்பண் - நடுவில்—அம் - அழகிய—தண்டநாதன் - வசவண்ணன்—தவிசொன்று - ஓராசனத்தை—அமைத்திட - அமைக்க—அண்டநாயகன் - சமஸ்த அண்டங்களுக்கும் நாயகனாகிய—அல்லமன் - அல்லமதேவன்—ஆயிடை - அந்தவாசனத்தில் —கண்டநோக்கம் - இவரைக்கண்டபார்வைகள்—களிப்ப - களிகூரும்படி—இருந்தனன் - எழுந்தருளியிருந்தான். எ - று. அமைத்திட இருந்தனன் எனக்கூட்டி முடிக்க. தண்டநாதனெனவும், அண்டநாயகனெனவுங் காரணவிடுகுறி. சுட்டுநீளின்யகரம் என்னும்விதியால் ஆயிடையென்றாயது. (ங)

ஆதனத்தி லமர்ந்தரு ளல்லமன்
பாத மன்பொடு பன்மலர் தூயிது
மாத வத்தின் வலியெனத் தாழ்ந்தெழு
காதன் மிக்குக் கசிந்துள நந்திதான்.

(இ - ள்.) ஆதனத்திலமர்ந்தருள் - ஆசனத்திலெழுந்தருளிய —அல்லமன் - அல்லமதேவனது—பாதம் - பாதங்களில்—அன்பொடு - மிக்க அன்புகொண்டு—பன்மலர் தூய் - பலமலர்களையருச்சித்து—இது - இங்ஙனமருச்சிக்கப் பெற்றது —மாதவத்தின் - முன்னரியற்றிய மகாதவத்தினது—வலியென - பலமானதென்று—தாழ்ந்து-வணங்கி—எழு நந்திதான் - எழுந்துநின்ற வசவண்ணன்—காதன்மிக்கு - மிக்கவன்புகொண்டு—உளங்கசிந்து - மனமுருகி. எ - று. நந்திதான் தூய், தாழ்ந்து, காதன்மிக்கு, உளங்கசிந்து எனக் கூட்டிமுடிக்க. மாதவத்தின்வலியென்றது முன்னையபிறவி யநேகத்தைக் குறிக்கின்றது; அன்றேல் முரணும். (ச)

அடியனேன்சிவ பத்தி யறிந்தமை
படியி லூமன் கனவெனப் பட்டது
முடியு மாறு மொழிந்தரு ளென்றுபொற்
றொடியு லாங்கை தொழுது விளம்பினான்.

(இ - ள்.) அடியனேன் - அடியேன்—சிவபத்தியறிந்தமை - சிவபத்தியினிலையினையதெனத் தெரிந்தவிதம் —படியில் - பூமியில் —ஊமன்கனவெனப்பட்டது - ஊமைகண்டகனவுபோலும்—முடியுமாறு - இவ்வன்பு இடையூறின்றி முடியும்வண்ணம் —மொழிந்தருளென்று - அநுக்கிரகிக்கக்கடவாயென்று —பொற்றொடியுலாம் - பொன்னாலாகிய கங்கணமமைந்த—கைதொழுது - கைகுவித்து—விளம்பினான் - சொல்லினன். எ - று. அறிந்தமை தொழிற்பெயர். தனதுசிவபத்தியை ஊமன் கனவுக்குவமை கூறியது வாயாலுரைத்துக்கூறக் கூடாமைபற்றி யென்க. (௫)

கேட்ட வாரியன் கேடில் சிவநெறிக்
கூட்ட மேவுறு கொள்கையி னாய்நினைக்
காட்டு வாருள ரோசெங் கதிர்க்கிருள்
ஓட்டு சோதியு முண்டுகொ லோவென்றான்.

(இ - ள்.) கேட்ட - இதனைக்கேள்வியுற்ற—ஆரியன் - ஆசிரியனாகிய அல்லமன் —கேடில் - என்றுஞ்சிதையாத —சிவநெறிக்கூட்டம் - சிவத்தொண்டு நெறியகலாத அன்பர்கள்கூட்டத்தை—மேவுறு - விசுவாசிக்கத்தக்க —கொள்கையினாய் - கொள்கையையுடையோனே—நினைக் காட்டுவாருளரோ - உன்னைவிளக்கு விப்பவருமுண்டோ—செங்கதிர்க்கு - சூரியனுக்கு—இருளோட்டு சோதியும் - இருள் வராமலோட்டத்தக்க சூரியனும்—உண்டுகொலோ - உண்டோ—என்றான் - என்றுசொல்லினன். எ - று. சூரியனைவிளக்கச் சூரியன்வேண்டின், உன்னைவிளக்க ஒருவர்வேண்டுமென்பதாயிற்று. ஆகவே, அறிவுக்கறிவெனல் மூடம். என்னை "அறிவுக்கறிவென்று மாகமங்கள் சுத்த, வறிவென்னும் வேதத்திதம்" என்பதனாற் காண்க. (௬)

வள்ள லின்றெனை வந்து புகழ்ந்தனன்
தெள்ளு தண்புனற் றேக்கு முளைத்தலை
கிள்ளி நின்றெறி கின்றவர் போலெனா
உள்ளு டைந்திட் டுரைக்கும் வசவனே.

(இ - ள்.) வள்ளல் - அல்லமதேவன்—இன்று - இப்போது —வந்து - வந்து—எனைப்புகழ்ந்தனன் - என்னைத்துதித்தனன்— (இஃதெத்தன்மை போல்வதெனின்) தெள்ளு - தெளிவாகிய —தண் - குளிர்ச்சிபொருந்திய—புனல் - சலத்தில்—தேக்கு - தேக்குமரம் —முளைத்தலை - முளையெடுத்தலை—கிள்ளிநின்று - கிள்ளிவிட்டு —எறிகின்றவர்போல் - எறிந்துவிடுவார்போலிருக்கின்றது —எனா - என்று—உள்ளுடைந்திட்டு - மனம்நெக்குருகி —வசவன் - வசவண்ணதேவன் —உரைக்கும் - சொல்லுவன். எ - று. உள்ளுடைந்திடுதல்; நிந்தாஸ்துதி யெனக்கண்டுகொள்க. இங்கே யகங்காரத்தைக் காட்டத் தேக்கென்றார். இது பிறிதுமொழிதலணி. தேக்குக் கிள்ளியென்றது முளைத்தலை யென்றது ; முளையைக் கிள்ளியவிடத்துத் தேக்குவளர்தற் கிடமின்மைபோலப் புகழைக் கிள்ளியவிடத்து என்போன்ற சிவத்தொண்டரில்லையென்று மகங்காரம் வளர்தற் கிடமின்மைபற்றி யென்க. (௭)

வேறு

இகழ்ந்தென துளச்செருக் கினைய கற்றிலாய்
புகழ்ந்தனை விழைபுளிங் கறியிட் டாறுநோய்
மிகுந்தெழ வளர்த்தல்போ லெனவி ளம்புபு
தகுங்கழ லிறைஞ்சினன் றண்ட நாயகன்.

(இ - ள்.) இகழ்ந்து - நிந்தித்து —எனதுளம் - எனதுள்ளத்தின்கணின்ற— செருக்கினை - கர்வத்தை—அகற்றிலாய் - ஒழிக்காமல்—புகழ்ந்தனை - துதித்தனை—விழை - இச்சிக்கத்தக்க —புளிங்கறியிட்டு - புளியிட்டகறியைவைத்து —ஆறுநோய் - நீங்கியவியாதி —மிகுந்தெழ - அதிகப்பட—வளர்த்தல்போல் - வளர்த்தலுக் கொப்பாயிருக்கின்றது—எனவிளம்புபு - என்றுசொல்லி —தகும் - யாவரும் ஏத்தற்குத்தகுந்த —கழல் - அல்லமனது திருவடிகளில்—தண்டநாயகன் - வசவண்ணன் —இறைஞ்சினன் - வணங்கினன். எ - று. அகற்றிலாய் என்னும் வினைமுற்றை "வினைமுற்றேவினையெச்சமாகலும்" என்னும் விதியால் வினையெச்சமாக்குக. தணிந்தநோய் புளியிட்டகறியால் மீண்டு மிகுவித்தாற்போல, இகழ்ந்ததோடு நில்லாது புகழ்ந்தது, குன்றியவகங்காரம் மீண்டு மிக்குவளர்தற்கென்க. விளம்புபு செய்பு என்னும் வாய்பாடு. (௮)

அருளினா னினதடி யருச்சிக் கும்படி
தெருளிலா வெனக்குரை செய்தி யென்றது

மருவளு மெனுமொரு மதிளுற் கீந்தருள்
பொருளினு னிலையன புகறன் மேயினன்.

(இ - ள்.) அருளினால் - கிருபையினால் —நினதடி - உனது திருவடிக ளை—அருச்சிக்கும்படி - பூசிக்கும்படியாக —தெருளிலாவெனக்கு - அறிவுமழுங்கியவெனக்கு —உரைசெய்தியென்றலும் - அனுக்கிரகிக்கவேண்டுமென்றுகேட்கவும் —மருளறுமெனும் - மருளசங்கரதேவனென்னும்—ஒருமதிஞர்க்கு - ஒப்பற்றஅறிவுடையவனுக்கு—ஈந்தருள் - அநுக்கிரகித்த—பொருளினன் - சிறந்தபொருளையுடைய அல்லமன் —இனையன - இத்தகையனவாகிய நிலைகளை —புகறன்மேயினன் - சொல்லத்தொடங்கினன். எ - று. ஈந்தருள்பொருளாவது; தானாகிய மெய்யுணர்வை. (௯)

புன்மர நெளிபுழுப் புள்விலங்கெனும்
பன்மைய துயர்செயும் பவங்க டப்பியே
வன்மைகொ ணிலமிசை மக்க ளாகுதல்
நன்மைகொ ளுயிர்க்கலா லரிது நந்தியே.

(இ - ள்.) புல்மரம் - புல்லும்மரமும்—நெளிபுழு - நெளிகின்றபுழுவும்—புள்விலங்கெனும் - பட்சியு மிருகமுமென்கின்ற—பன்மைய துயர்செயும் - பலவேறுபட்ட துன்பங்களைச்செய்யும்—பவங்கள்தப்பி - செனனங்களுக்குத்தப்பி—வன்மைகொணிலமிசை - வலியபூமியின்மேல்—மக்களாகுதல் - மனிதராகப்பிறத்தல்—நன்மைகொள் - நன்மையேதனக்குத் தொழிலாகக்கொண்ட—உயிர்க்கலால் - உயிர்களுக்கேயல்லாமல்—நந்தியே - வசவண்ணரே—அரிது - மற்றவுயிர்களுக்கரிது. எ - று. பன்மைய, குறிப்புவினையாலணையும்பெயர். இங்கேநன்மையென்றது; புண்ணிய கர்மங்களை. மக்கள், மாந்தரென்றாற்போல பன்மையிலேயே வருபெயர்.

நார்வடி வாயினு நன்மை யாற்றுறு
மரபினி னுலகினில் வருத றப்புதல்
அரிதுநல் லறம்புரி வழிய டுப்பினு
மருவுத லரிதறம் வளர்க்கு மங்கமே.

(இ - ள்.) நரர்வடிவாயினும்-மானிடவடிவாயினும்—நன்மையாற்றுறு - நன்குசெய்யாத—மரபினில் - வமிசத்தில்—உலகினில் - உலகின்கண்—வருதல்தப்புதல் - வந்துபிறவாமலிருத்தல் —அரிது - அருமையாம் —நல்லறம் - நல்லதர்மங்களை—புரிவழி - செய்யுமரபினுள்—அடுப்பினும் - வந்து பிறந்தாலும்—அறம்வளர்க்கும் - அறநெறி வழுவாதுவளர்க்கும் —அங்கமருவுதல் - தேகம்வந்துகிடைத்தல்—அரிது - அருமையாம். எ - று. மானிட வடிவாய்ப்பிறந்தபினும் தீய மரபிற்கு விலகலும், அறம்வளர்த்தற்கியைந்த வடிவமெய்தலும் அரிதெனப்பட்டதென்க. இங்கே வழியென்றது மரபை. நரர்வடிவாயினு மென்பதிலும்மையும், அடுப்பினும் என்பதிலும்மையும் உயர்வுசிறப்பு. (௧௧)

அறந்துறப் பெய்தினு மன்பி னாலறஞ்
சிறப்புறச் செய்தலிங் கரிது செய்யினும்
புறச்சம யங்களைப் போக்கி யாகம
நெறிச்சம யங்களை யரிது நேர்தலே.

(இ - ள்.) அறந்துறப்பெய்தினும் - அறமேற்றற்கியைந்த வங்கமெடுப்பினும்—அன்பினால் - மெய்யன்பினால்—அறஞ்சிறப்புறச்செய்தல் - அறம் வழுவுறாது நிற்கச்செய்தல்—இங்கரிது - இங்கருமையாம்—செய்யினும் - வழுவுறாது நிற்கச்செய்யினும் —புறச்சமயங்களைப் போக்கி - புறச்சமயநெறிச்சேரலைப்போக்கி—ஆகமநெறி - ஆகமநெறிக்கியைந்த —சமயங்களைநேர்தல் - சமயங்களைப் புறக்கணிக்காதுடன்படல் —அரிது - அரிதாம். எ - று. அறத்தை மெய்யன்புகொண் டியற்றலும், ஆகமநெறிக்குடன்படலும் அரிதெனக் கூட்டிமுடிக்க. எய்தினும் செய்யினும் என்பவற்றிலுள்ளவும்மைகள் உயர்வுசிறப்பு. (௧௨)

ஆகமம் புகனெறி யடைவ னாயினுஞ்
சோகமில் சைவநற் றுறைய நன்றெனச்
சேர்குத லரிதது சேர்வ னாயினும்
ஏகலிங் கயிக்யனு குதலன் றெண்மையே.

(இ - ள்.) ஆகமம்புகல் - ஆகமங்கூறுகின்ற —நெறியடைவனாயினும் - நெறியையுடையோனாயினும்—சோகமில் - குற்றமற்ற—நல் - நல்ல—சைவத்துறையை - சைவநெறியை—நன்றெனச்சேர்குதல் - மிக்கநலனென வத்துறையைச் சேர்தல்—அரிது - அரிதாம்—அதுசேர்வனாயினும் - அந்தத்துறையைச் சேர்ந்தாலும்—ஏகலிங்க அயிக்யனாகுதல் - தானுண்மாவாகவிளங்குதல்—அன்றெண்மை - எளிதன்று. எ - று. இக்கவியிலுள்ள இரண்டும்மை யும், உயர்வுசிறப்பு. ஏகமேவாத்வைதம். பிரயோகமெனலும், ஏகலிங்

சயிக்யனாகுதலெனலும் ஒருபொருட்கிளவி. இங்கே லிங்கமெனல், ஆன்மாவை. உபாதித்திரயங்களை ஏகமாக வைக்கியமெய்தல் பிறவிக்கேது, ஆன்மாவை தரிசித்தும் அதுதானாகவும் தானதுவாகவும் ஏகவைக்கியமாதல் அறுதிக்கேது. இங்ஙனமன்றென மறுப்பார் ஞாயஞ் சோதனை பொருத்தங்களை யுணரார்போலும். (௧௩)

புண்ணிய முதிர்வினாற் பொருந்தி யங்கையில்
கண்ணுற நிகழ்வுறு சிவலிங் கத்தினை
எண்ணிய மனமுட னென்றும் வந்தனை
பண்ணிய முயல்பவன் பத்த னென்பவே.

(இ - ள்.) புண்ணியமுதிர்வினால் - புண்ணியங்களைச் செய்துவந்தமுதிர்ச்சியால் —கண்ணுற - பிரத்தியட்சமாக—நிகழ்வுறு - விளங்காநின்ற— சிவலிங்கத்தினை - இஷ்டலிங்கத்தை — அங்கையிற்பொருந்தி - உள்ளங்கையினாற் பொருந்தவைத்து —எண்ணியமனமுடன் - இஷ்டலிங்கமென்றுணர்ந்தமனமுடன்—என்றும் - எப்போதும்—வந்தனைபண்ணிய - அருச்சிப்பான்வேண்டி —முயல்பவன் - விடாதுமுயல்பவன் —பத்தனென்ப - பத்தனென்றறிஞர் கூறுவர். எ - று. ஏ - அசை. அநந்தசென்மங்களி லியற்றிய புண்ணிய முதிர்ச்சியால் அங்கையிற்பொருந்தி நிகழ்வுறு சிவலிங்கத்தை ஒன்றுபட்டமனத்தோடு வந்தனைமுயல்பவன், பத்தனெனப்படுவோ னெனக்கூட்டிப் பொருள்கொள்க. (௧௪)

ஆவுறு பிணிகெட வாவின் பால்கறந்
தாவினை யூட்டல்போ லாண வங்கெட
ஆவியு ளமலனை யங்கை தந்தபின்
ஆவியு ளமைவுற வாக்கு மாரியன்.

(இ - ள்.) ஆவுறு - பசுவுக்குவாய்த்த —பிணிகெட - நோய்கெடுவான்வேண்டி—ஆவின்பால்கறந்து - பசுவின்பாலைக்கறந்து—ஆவினையூட்டல்போல - பசுவுக்குஊட்டல்போல—ஆணவங்கெட - ஆணவநசிப்பான்வேண்டி—ஆவியுளமலனை - உயிரிற்பிரிவறநின்ற பரமசிவத்தை—அங்கைதந்து - உள்ளங்கையில்வரவைத்து—பின் - பின்னர்—ஆவியுள் - உயிரினுள்—அமைவுற - பேதாபேதங்கடந் தமைவுறும்படி—ஆக்குமாரியன் - குருசிரியனாக்குவன். எ - று. ஆவின்பாலே ஆப்பிணிக்குமருந்தானாற்போல, உயிரின் சுத்தபாவமே உயிரின்சுத்தபாவத்துக்கு மருந்தாமெனலைக்காட்ட ஆட்டலெனவும், ஆக்கலெனவும் பிறவினைதந்தார். ஊட்டாவிடத்து ஆவின்பிணிநீங்காவாறுபோன்று, ஆரியனுக்காவிடத்து ஆணவநசிக்காதென்பது கருத்து. பிணிபோல்வது ஆணவம், பால்போல்வது சுத்தபாவம். புறத்தில் அங்கைலிங்கபாவ முதிர்ச்சியின்றேல், புறம்பில் தேகநானென்னு மாணவங்குன்றாது. அகத்தில் சுயம்புலிங்காட்ட விளக்கமின்றேல், அகத்தில் உடலளவு நானென்னும் வாசனைப்பிராந்திநசியாது. தேகநானென்னு மாணவம் இரண்டிடத்து நிற்றலைமாற்றற்குப் புறத்தில் இஷ்டலிங்கபாவமும், அகத்தில் ஆத்மலிங்கபாவமும் வேண்டுமெனத்தனிமையூறென்னை? இரண்டும் பாவமேனும் ஒன்றுபுறப்பற்றையும், ஒன்றகப்பற்றையும், நீக்குதற்குநெறியாதலின் இங்ஙனமாய வுவமைகொண்டுகூறினார். ஆவினை; வேற்றுமைமயக்கம். அகங்கையென்பது, அங்கையென்றாயது விகாரம். ஆவியுளமலனை யங்கைதந்து பின் ஆவியுளமைவுறவாக்குதலாவது; பீடம், சத்தி. லிங்கம், சத்தன். அத்தியாரோபத்தில் சத்தனே சத்தியாகவும், அபவாதத்தில் சத்திபேசத்தனாகவுங் காண்டலினிக்குறிப்பவர்தத்திலாரம்பத்ததெனக் காட்டி முடிவில் குணங்குறியிறந்ததாக விளக்கிக்காட்டலை யென்க. எனவே ஞெப்தி, சத்தி. பிரியம், சிவம். இஃதநோமுகத்தில் ஞெப்திக்குப் பிரியமயலாகவும், ஊர்த்தமுகத்தில் பிரியமே ஞெப்தியாகவும் விளங்குமெனப் பெற்றாம். பெறவே, பேதாபேதமற்றதற்குப், பேதமுற்றதுபோற் காணின் அற்றதாகக் காட்டி யழித்தலெனக் கண்டாம். (௧௫)

கருங்கொடி யிருவிழிக் கண்ணு மோர்மணி
திரிந்திடு செயலெனத் திரித லின்றியே
பொருந்துறு மகமொடு புறமுந் தீர்வற
இருந்தில குறுமரு ளிட்ட லிங்கமே.

(இ - ள்.) கருங்கொடி - கரியகாகத்தினது —இருவிழிக்கண்ணும் - இரண்டுகண்களிடத்தும்—ஓர்மணி - ஒப்பற்றகண்மணியானது—திரிந்திடுசெயலென - திரியுஞ்செயல்போல—திரிதலின்றி - அலையாமல்—பொருந்துறும் - இயல்பாகப்பொருந்திய—அகமொடுபுறமும் - அகமெனலும் புறமெனலும் —தீர்வற - இறக்க—இருந்திலகுறும் - ஒருதன்மைத்தாகநின்றுவிளங்கும்—அருள் - கிருபைபொருந்திய—இட்டலிங்கம் - இட்டலிங்கமானது. எ - று. இட்டலிங்கந் திரிதலின்றி அகம்புறமின்றி யிருந்தில குறு மெனமுடிக்க. இந்தவிட்டலிங்க மகமுகத்தில் நிர்குணலிங்கமேயதெனக் காட்டினாரென்க. (௧௬)

குறிபல பலமுறை கொண்டு பல்வகைப்
பொறிதொறு மருவியொண் புலநுகர்ந் துமாய்ந்
தறிவரு நிலையவா தார மேவியு
நிறைவுறு மங்கையி னிகழு மிட்டமே.

(இ - ள்.) அங்கையின் - உள்ளங்கையில் — நிகழும் - விளங்காநின்ற — இட்டம் - இட்டலிங்கமானது — குறிபல - பலகுறிகளை — பலமுறை கொண்டு - பல அவசரத்திற் பலதிறங்கொண்டு — பல்வகைப்பொறிதொறும் - பலவேறுவகைப்பட்டபொறிதோறும் — மருவி - அந்தந்தநிலைகளவாகத்தங்கி — ஒண்புலநுகர்ந்து - ஒள்ளியபுலன்களை யநுபவித்து — மாய்ந்து - பேருயின்றி யழிந்து — அறிவருநிலைய - அறிதற்கரிய அநுபவநிலைகளுக்கு — ஆதாரமேவியும் - ஆதாரத்தன்மையடைந்தும் — நிறைவுறும் - தனதியல்புத்தன்மைக்குமாறின்றிப் பூரணமாகநிறைந்திருக்கும். எ - று. ஏ - அசை. அங்கையி னிகழுமிட்டம், கொண்டு, மருவி, நுகர்ந்து, மாய்ந்து ஆதாரமேவியும்; நிறைவுறுமெனக் கூட்டிமுடிக்க. இவையெல்லாம் இயம நியமமுதலியவற்றைத் தக்கவாறுசெய்யின் விளங்குமென்க. புலனை நுகர்தலாவது; சுரோத்திரமுதலியவற்றின் குணகுணிகளை யையந்திரிபறத்தெளிதலே. (கஎ)

அடைந்துள வுருச்சுவை யமைதி யென்பன
உடம்பொரு மூன்றினு முற்ற டைந்திடும்
தொடர்ந்துள வினைவலி தொலைந்தி யானெனும்
இடும்பையி லின்பரு ளிட்ட லிங்கமே.

(இ - ள்.) இட்டலிங்கம் - இட்டலிங்கமானது — அடைந்துள - வந்தடைந்தனவாகிய — உருச்சுவை - உருவத்தின்கணைந்துஞ்சுவையின் — அமைதி - அவற்றுலெய்தும் ஆறுதல்களும் — என்பன - என்றுசொல்லப்பட்டவைகளை — உடம்பொரு மூன்றிலும் - மூன்றுடம்பினும் — உற்று - அடைந்து — அடைந்திடும் - இவற்றாலெய்தும் — தொடர்ந்துள - சங்கிலிபோல்தொடர்ந்துள்ள — வினைவலிதொலைந்து - இருவினை வலியையமாய்த்து — யானெனுமிடும்பையில் - யானெனுமகங்காரங்குன்றியவிடத்தில் — இன்பருளும் - பேரின்பப் பேற்றைத்தரத்தக்கதாம். எ - று. இட்டலிங்கம் உற்று, தொலைந்து, இன்பருளுமெனக் கூட்டிமுடிக்க. உடம்பொரு மூன்றாவது; தூலசூக்குமகாரணங்களை. பிறவிதோறுமாறுது பின்பற்றிச் செல்லுதலால் தொடர்ந்துள வினைவலியென்றார். அகங்காரத்

தாலெய்தவதை அகங்காரமெனக் கொண்டது காரணவாகுபெயர். அருளுமென்பது அருளுமென்றாயது இடையில் உகரங்கெட்டுநின்றது. அருளிட்டலிங்கமேயென்ற பாடத்தை யருளுமிட்டலிங்கமே எனப்பாடங்கொண்டு பொருள்கூறுக. (கஅ)

என்றறி வறவறிந் திட்ட லிங்கமாம்
ஒன்றொரு பொருளிலே யுறவி ழித்தவன்
பொன்றுறு சகமெனப் புணர்ந்த மாயையை
வென்றவ னவனென விளம்பும் வேதமே.

(இ - ள்.) என்று - இங்ஙனமாக — அறிவு - அறிவிலக்கண விலக்கியங்களை — அறவறிந்து - ஐயந்திரிபறவுணர்ந்து — இட்டலிங்கமாம் - இஷ்டலிங்கமாகிய — ஒன்றொரு பொருளிலே - ஒப்பற்றவொரு பொருளின் மாத்திரம் — உறவிழித்தவன் - நன்குவிழித்தவன் — பொன்றுறு - அழியத்தக்க — சகமெனப்புணர்ந்த - செகமாகவிகார முற்றுப்புணர்ந்துநின்ற — மாயையை - மாயையென்பதை — வென்றவனவனென - செயித்தவனவனென்று — விளம்பும்வேதம் - வேதமுறையிடும். எ - று. மெய்யுணர்வைவிடாதுகாண்டலை இட்டலிங்கமா மொன்றொரு பொருளிலேயுறவிழித்தவனெனவும், அங்ஙனம்விடாதுகாண்புழி தனதுபுத்திவிகற்பமாகிய மாயையும் அதனதுகாரியமாகிய திரிபதார்த்தங்களும் எங்ஙனமோர் முதலாகநிற்குமென்பார், பொன்றுறு சகமெனப்புணர்ந்த மாயையை வென்றவனெனவுங் கூறினார். இங்கே மாயையென்பது அறியாமையை. புணர்தலென்பது பிரதிபலிப்பை. செகமென்பது பிரதிபலித்த வடிவையென்க. இவ்வேதுக்கள்பற்றிக் கூறியதால் பொன்றுறு சகமெனல் பொருந்தும். (கக)

பொருவில்சற் பத்தியாந் தாரம் பூண்டொரு
வரவயி ராகமாம் வத்தி ரம்புனைந்
தொருவலி லுணர்வெனுஞ் செச்சை யொன்றறப்
பரமனை யிருத்துவோன் பத்த னாகுவான்.

(இ - ள்.) பொருவில் - ஒப்பில்லாத — சற்பத்தியாம் - எதார்த்தபத்தியாகிய — தாரம்பூண்டு - கயிற்றில்பூண்டு — ஒரு - ஒப்பற்ற — வரவயிராகமாம் - சிறந்தவயிராகமென்னும் — வத்திரம்புனைந்து - வஸ்திரத்தையுடுத்து — ஒருவலில் - களைதலற்ற — உணர்வெனுஞ்செச்சை - மெய்யுணர்வெனுஞ்செச்சையில் — ஒன்றற - பேதாபேதமின்றி — பரமனையிருத்

துவோன் - பரமசிவத்தைத்தாபிப்போன் — பத்தனுருவான் - பத்தனெனப்படுவோன். எ - று. சற்பத்திதாரம், வரவயிராகமாம்வத்திரம், உணர்வெனுஞ்செச்சை, இவமூன்றுருவகவணி. பூண்டு, புனைந்து, இருத்துவோன் பத்தனுருவான் எனப்பொருள்கொள்க. தாரமென்பது திசைச்சொல். (௨௦)

ஒன்றினொன் றுள்ளுற வுடம்பு மூன்றையு
மன்றநல் வத்திர மடிய தாக்கியே
என்று மங் கமைவுற விட்டம் வைப்பனேல்
அன்றவன் சிவமய மாகு மென்பவே.

(இ - ள்.) ஒன்றினொன்றுள்ளுற - ஒன்றினொன்றடங்க — உடம்புமூன்றையும் - மூன்றுபாதிகளையும் — மன்ற - நிச்சயமாக — நல் - நல்ல — வத்திரமடியதாக்கி - மடிச்சிலையாக்கி — என்றும் - எப்போதும் — அங்கு - அங்கிலேயில் — அமைவுற - அமைதியுண்டாக — இட்டம்வைப்பனேல் - இட்டலிங்கத்தைவைப்பனாயின் — அன்று - அக்கணமே — அவன் - அங்கிலேயினன் — சிவமயமாகும் - சிவவடிவாவன் — என்ப - என்றறிஞர்கூறுவர். எ - று. ஏ - அசை. உபாதித்திரயவாகார நசித்தற்கு, உடம்புமூன்றையும் வத்திரமடியதாக்கி யங் கமைவுற விட்டம் வைப்பனேலென்றார். சிதாகாரமாய்விடத்துச் சிவமயமாதற்குமுரணென்னை ? மன்ற என்பது தேற்றப்பொருள்தருவதோரிடைச்சொல். (௨௧)

அருளெனும் புனலினை யாட்டிச் சாந்தமாம்
வரைநறுஞ் சந்தொடு மருவ விந்திய
விரைமலர் புனைந்தறி வினைய ருத்துறிற்
பரமனை யவன்சிவ பத்த னுருவான்.

(இ - ள்.) அருளெனும்புனலினை - அருளென்னுநீரை — ஆட்டி - அபிஷேகஞ்செய்து — சாந்தமாம் - உபசாந்தமென்னும் — வரை - அகஸ்தியரது மலையிற்றோன்றிய — நறுஞ்சந்தொடு - வாசனையுள்ளசந்தனத்தோடு — மருவ - பொருந்த — இந்தியம் - பஞ்சேந்திரியமென்னும் — விரைமலர் புனைந்து - வாசனைமலரையருச்சித்து — அறிவினை - ஞானத்திரவை — அருந்துறிற்பரமனை - பரமனையருந்தச்செய்தால் — அவன் - அங்ஙனஞ்செய்தோன் — சிவபத்தனுருவான் - சிவபத்தனென்னப்படுவான். எ - று. ஆட்டி, புனைந்து, அருந்துறில், சிவபத்தனுருவானெனக் கூட்டிமுடிக்க. அருளெனும்புனல், சாந்தமாஞ்சந்து, இந்தியமலர், இவையுருவகம். (௨௨)

ஆசறு மனத்தெழு மன்பை யன்றியே
பூசனை யுவக்கிலென் புராரி சென்னிமேல்
வீசுறு திரையினு மிக்க தோசொலாய்
ஊசல்செய் மனமுடை யொருவ னாட்டுநீர்

(இ - ள்.) ஆசறு - குற்றமற்ற — மனத்தெழு - மனத்திலெழுகின்ற — அன்பையன்றி - அன்பையல்லாமல் — புராரி - பரமசிவனது — பூசனை - பூசையை — உவக்கிலென் - விரும்பிலென் — ஊசல்செய் - உஞ்சலைப்போலலைதல்செய்கின்ற — மனமுடையொருவன் - மனமுள்ளவொருவன் — ஆட்டுநீர் - அபிஷேகஞ்செய்யுஞ்சலம் — சென்னிமேல் - சிவனதுஉச்சியில் — வீசுறு - மோதுகின்ற — திரையினும் - அலைகளையுடையகங்கையைக்காட்டிலும் — மிக்கதோ - மேலாயதோ — சொலாய் - சொல்லுதி. எ - று. கங்கையைத் திரையென்றது சினையாகுபெயர். அன்புள்ளமனத்தால் பூசிப்பதே பூசனையென்பதுகருத்து. (௨௩)

பூப்புனை கையுமெம் புனிதன் றன்புகழ்
பாப்புனை நாவுமே படைத்து ளான்றனைச்
சேப்புனை கொடியுடைத் தேவ னேயெனா
நாப்புனை புகழொடு நாக ரேத்துவார்.

(இ - ள்.) பூப்புனைகையும் - பூவினாலருச்சிக்கின்றகைகளையும் — எம்புனிதன்றன்புகழ் - எமதுபரமசிவனுடையகீர்த்திநாமங்களை — பாப்புனைநாவுமே - பாவாற்புனைந்துரைக்கப்பட்டநாவையுமே — படைத்துளான்றனை - இடைக்கப்பட்டவனை — சேப்புனைகொடியுடை - இடபக்கொடியையுடைய — தேவனேயென - பரமசிவனேயென்று — நாப்புனைபுகழொடு - நாவினாற்புனையப்பட்டபுகழோடு — நாகரேத்துவார் - தேவர்கள்துதிப்பார்கள். எ - று. ஏனைய கை, நாக்களினின்று பிரிந்தலால் ஏகாரம் பிரிநிலை. கொடியுடைத்தேவனென்பதில் அகர ஈறுதொக்கது. கையும் நாவு மென்னுமும்மை. (௨௪)

பூசனை செயாதகை புராந்த கன்புகழ்
பேசுத லிலாதவாய் பெற்று ழன்றிடு
நீசரா னவர்தமி னெடுவ னத்திடைக்
கூசுத லிலாதபுன் குரங்கு நன்றரோ.

(இ - ள்.) பூசனைசெயாதை - பூசைசெய்யாதகையையும்—புராங்கன்புகழ் - பரமசிவனதுபுகழை—பேசுதலிலாதவாய் - நுதியாதவாயையும்—பெற்றுழன்றிடும் - பெற்றுழலப்பட்ட—நீசரானவர்தமில் - சனர்களிலும்—நெடுவனத்திடை - பெருங்காட்டில் —கூசுதலிலாத - நாணமின்றியிருக்கும்—புன்குரங்குநன்று - புல்லியகுரங்குநற்குணமுடையதாம். எ - று. அரோ - அசை. கை வாயென்பவற்றில் என்னும்மைகள்தொக்கன. (௨௫)

குடிப்பன விழுங்குவ கூறொ யிற்றினற்
கடிப்பன நக்குவ வனைத்தும் கைம்மலர்
அடுத்துள சிவன்றனக் கர்ப்பித் துண்பவன்
விடுத்தவன் மேல்வரும் வினைகள் யாவுமே.

(இ - ள்.) குடிப்பன - குடிக்கத்தக்கவைகளும் —விழுங்குவ - மெல்லாது விழுங்கத்தக்கவைகளும் —கூறெயிற்றினற்கடிப்பன - கூரியபற்களாற்கடிக்கத்தக்கவைகளும் —நக்குவ - நக்கத்தக்கவைகளுமாகிய—அனைத்தும் - இவையனைத்தையும்—கை - உள்ளங்கையாகிய—மலரடுத்துள - தாமரைமலரிலுள்ள—சிவன்றனக்கர்ப்பித்து - சிவனுக்கு நைவேத்தியமாக்கி—உண்பவன் - பின்னரதனையுண்பவன்—மேல்வரும் வினைகள் யாவும் - இனிவிளையு மாகாமியவினைகளனைத்தையும் —விடுத்தவன் - ஒழித்தவனுவன். எ - று. குடிப்பன முதலியநான்கும் வினையாலணையும்பெயர். கைம்மலர் உருவகம். அடுத்துள எழுந்தருளியிருக்கின்றவெனினுமமையும். (௨௬)

தானுறு முடன்மனந் தனமென் றுள்ளவை
ஈனமில் குருசிவ சரங்கட் கீந்துதான்
யானென தென்குத லின்றி வைகுவோன்
மேனிகழ் சிவமொடு வேற லானரோ.

(இ - ள்.) தானுறும் - தானடைந்த—உடல் - தேகமும் —மனம் - மனமும்—தனம் - திரவியமும்—என்றுள்ளவை - என்று சுதந்தரமாயுள்ளவற்றை—ஈனமில் - குற்றமற்ற—குருசிவசரங்கட்கு - குருலிங்கசங்கமர்களுக்கு—ஈந்து - கொடுத்து—தான் - தான் —யானெனதென்குதலின்றி - அகங்கார மமகாரங்கோடலின்றி—வைகுவோன் - தானே தானுகவிருப்போன்—மேல் - எவற்றிற்குமேலாக—நிகழ் - விளங்காநின்ற —சிவமொடு - சிவத்தோடு—வேறலான் - வேறுபடான். எ - று. அரோ - அசை. உடலை குருவுக்கும், மனத்தை சிவத்துக்கும், தனம் சரங்கட்குமாதலால் இது நிரனிறைப் பொருள்கோளணி. யானெனதெனல் பிராந்திகாரணமாக வருதலின் இவையின்றி வைகுவோன் சிவமொடு வேறலானென்றார். (௨௭)

குருசிவ சரங்கொளக் கொடுத்த மெய்மனம்
பொருளிவை நமவெனப் புந்தி செய்துகொள்
ஒருவனில் வழிமறித் தொறுத்துக் கொள்வன
சரனனி நல்லன்மெய் தவறி லாமையால்.

(இ - ள்.) குருசிவசரம் - குருலிங்க சங்கமங்கள் —கொள - ஏற்கும்படி—கொடுத்த - தத்தஞ்செய்த—மெய்மனம்பொருளிவை - உடல் மனம் பொருளென்னு மிவற்றை—நமவென - மீண்டு நம்முடையவென்று—புந்திசெய்துகொ ளொருவனில் - நினைப்பவனைக் காட்டிலும்—வழிமறித்து - வழிதடுத்து —ஒறுத்துக்கொள் - பறித்துக்கொள்ளுகின்றவனசரன் - வேடன் —மெய் தவறிலாமையால் - உண்மைதவறுமையினல்—நனிநல்லன் - மிகவும்நல்லவனும். எ - று. குருலிங்க சங்கமங்கட்குத் தத்தஞ்செய்தவைகளை மீண்டுந்தனவெனக் கொள்பவனிலும், வழிபறிக்கும்வேடன் நல்லனென்பதாம். மெய்தவறிலாமை, கொடுத்து வாங்காமை. நமவெனல் தன்மைப்பன்மைக் குறிப்பு வினைமுற்று. (௨௮)

விடுவன காமம்வெவ் வெகுளி மாலிவை
தொடுவன குருசிவ சரங்க டொல்பவம்
கடுவென வெருவிய கருத்து ளார்க்கிவண்
அடுவன வெனப்புல னட்ட வாற்றலாய்.

(இ - ள்.) இவண் - இவ்விடத்தில் —அடுவனவென - போக்கத்தக்கவைகளிவைகளென்று—புலன் - ஐம்புலன்களையும்—அட்ட - வென்ற—ஆற்றலாய் - வலியுள்ள வசவண்ணனே —தொல்பவம் - தொன்றுதொட்டுவருஞ் சனனங்கள்—கடுவென - விஷமாக—வெருவிய - பயந்த—கருத்துளார்க்கு - கருத்துடையோர்க்கு—விடுவன - விடத்தக்கவை —காமம் - காமமும் —வெவ்வெகுளி - கொடியகோபமும் —மால் - பிராந்தியுமாகிய —இவை - இத்தீமைகளாம் —தொடுவன - ஏற்கத்தக்கவை—குருசிவசரங்கள் - குருலிங்க சங்கமங்களாம். எ - று. விடுவன தொடுவன வினையாலணையும் பெயர்கள். (௨௯)

அங்கையி னமர்தரு மானை விட்டொரு
வெங்கட வுளர்தமை விழைந்து போற்றுவார்
கங்கையை யகன்றுவர்க் கழியின் மூழ்குநர்
தங்களின் வேறலர் தரும மூர்த்தியே.

(இ - ள்.) அங்கையினமர்தரும் - உள்ளங்கையி லெழுந்தருளிய—அரனைவிட்டு - பரமசிவனைவிட்டு—ஒரு - மற்ற—வெங்கடவுளர்தமை - கொடியதேவதைகளை—விழைந்து - விரும்பி,—போற்றுவார் - துதிப்பவர்கள்—கங்கையையகன்று - கங்காநதியைவிட்டு—உவர்க்கழியின் - உப்புக்கழியில்—மூழ்குநர்தங்களின்-முழுகுபவர்களைக் காட்டிலும்—தருமமூர்த்தியே - தருமசொரூபியாகிய வசவண்ணனே—வேறலர் - வேறல்லர். எ - று. தனது இட்டலிங்கத்தைவிட்டு அந்நியதேவதைகளைத் தொழுவார், கங்காநதியைவிட்டு உப்பங்கழியில் மூழ்குவானைப் போலுமென்க.

மோகமில் குருசர முனியின் முன்னுள
தாகிய செயிர்முழு தகன்று வன்றுறை
போகிய மடியெனப் புனித னருமேல்
பாகியன் மொழியுமை பாகற் கன்பனும்.

(இ - ள்.) மோகமில் - பிராந்திரகிதமான—குருசரமுனியின்முன் - குருலிங்க சங்கமர்களுக்குமுன்—உளதாகிய - தொன்றுதொட்டுள்ளதாகிய—செயிர்முழுதகன்று - சகலகுற்றமுநீங்கி—வன்றுறை - வளப்பநிலைத் துறைகளினின்றும்—போகிய - இழந்த—மடியென - தரித்திரனைப்போல—புனிதனருமேல் - பரிசுத்தனுவனுயின்—பாகியல் - வெல்லப்பாகுபோன்ற—மொழி - சொற்களையுடைய—உமை - உமையவளை—பாகற்கு - அர்த்தபாகத்திலேற்ற பரமசிவனுக்கு—அன்பனும் - அன்புடையனுவன். எ - று. லிங்கமெனல் எஞ்சிநின்றது. தரித்திரனைப்போலக் குருலிங்க சங்கமங் காரணமாக இருவகைப்பற்றுமகன்றோன் பரமசிவனுக்கன்பனுவனெனப் பொருள்கொள்க. (௬௧)

விள்ளரு நற்சிவ வேடத் தோர்பொருள்
கொள்ளைகொள் ளிற்பினுங் குறைகள் கூறினும்
பிள்ளையை யறுப்பினும் பிழைகள் செய்யினும்
எள்ளுத லிலனெனி லீசற் கன்பனும்.

(இ - ள்.) விள்ளரு - சொல்லுதற்கரிய—நல் - நல்ல—சிவவேடத்தர் - சிவவேடத்தாது—பொருள் - பொருள்களை - கொள்ளைகொள்ளிற்பினும் - கொள்ளைகொண்டாலும்—குறைகள் கூறினும் - பிறர்குற்றங்களை யெடுத்துச்சொல்லினும்—பிள்ளையையறுப்பினும் - சிசுவையறுத்தாலும்—பிழைகள்செய்யினும் - எலாக்குற்றங்களையுஞ் செய்தாலும்—எள்ளுதலிலனெனில் - அத்திச்செய்தசிவசரணராயிகழாதிருப்பனுயின்—ஈசற்கன்பனும் - பரமசிவத்துக்குமிக்க அன்பனுவன். எ - று. கொள்ளை கொள்கிற்பினும், கூறினும், அறுப்பினும், செய்யினும், 'அன்பனுமெனக் கூட்டிப் பொருள்கொள்க. (௬௨)

சங்கமந் தனக்கொரு சாதி யுன்னினான்
அங்கையி னமர்தரு மாற்கு முன்னினான்
சங்கர னொடுசரந் தம்மில் வேறெனும்
அகவ னறிவரு மளற்ற மூழ்குவான்.

(இ - ள்.) சங்கமந்தனக்கு - அடியார்களுக்கு—ஒருசாதியுன்னினான் - சாதிவேற்றுமையொன்றைநினைத்தவன்—அங்கையினமர்தரும் - உள்ளங்கையிலெழுந்தருளிய—மாற்கும் - பரமசிவத்துக்கும்—உன்னினான் - நினைத்தவனுவன்—சங்கரனொடு - பரமசிவத்தோடு—சரம் - அடியார்களை—தம்மில்வேறெனும் - தம்மில்வேறெனப்பேதங்காணும்—அங்கவன் - அத்தகையோன்—அறிவரு - அறிதற்கரிய—அளற்றமூழ்குவான் - நரகத்திில்விழுவான். எ - று. சங்கமரில் சாதிவேற்றுமைகாண்பான் நரகபலனெய்துவனென்பது கருத்து. (௬௩)

தலைமைகொள் குருசிவ சரங்கட் காகவே
உலையிடு மரிசியன் றோங்கன் மத்தெறி
அலையமு தாந்தமக் காக வாக்குறில்
கொலைசெயு நஞ்சினுங் கொடிய தாகுமால்.

(இ - ள்.) தலைமைகொள் - சிறந்த—குருசிவசரங்கட்காகவே - குருலிங்கசங்கமங்கட்காகவே—உலையிடுமரிசி - உலையிற்போட்டவரிசியை—அன்று - அப்போது—ஓங்கல் - மலையை—மத்தெறி - மத்தாகக்கடைந்த—அலை - திருப்பாற்கடலிலுண்டான—அமுதாம் - அமிர்தம்போல்வதாமென்று—(அதனை) தமக்காகவாக்குறில் - தமக்கியைந்தவுணவாக்கிக்கொள்ளில்—(அவ்வுணவு) கொலைசெயுநஞ்சினும் - கொல்லுகின்ற விஷத்

ளைக்காட்டினும்—கொடியதாகும் - தீயதாம். எ - று. ஆல் - அசை. குருலிங்கசங்கமங்கட்காகவென்று சமைக்குமுணவு திருப்பாற்கடலமுதம் போல்வது; தமக்கெனச்சமைக்குமுணவு நஞ்சினுங்கொடிதாகும் எனப் பொருள்கொள்க. (௩௪)

தனுவுள வளவுமோர் தகுநற் செய்கையும்
மனமுள வளவும்பா வனையு ஞானமுண்
டெனவுள வளவுஞே யமுமி யைந்தவன்
பினையுள வளவுநோய் பிறர்க்க கற்றுமே.

(இ - ள்.) தனுவுளவளவும் - தேகமுள்ளவரையும் —தகும் - தகுந்த—ஓர்நற்செய்கையும் - ஒப்பற்றநற்செய்கைக்கும் —மனமுளவளவும் - மனமுள்ளமட்டும்—பாவனையும் - அதநுசிக்கத்தக்கபாவனைக்கும் —ஞானமுண்டெனவுளவளவும் - ஞானமுண்டெனக்கொள்ளுமளவும்—ஞேயமும் - பேதரகிதமானவானந்தத்திற்கும் —இயைந்தவன் - உள்ளவாறுசெய்யவிசைந்தவன்—பினையுளவளவும் - பின்னர்தானுள்ளவளவும்—நோய் - பிறவிநோயை—பிறர்க்கு - அயலவருக்கு—அகற்றும் - நீக்கவல்லவனுவன். எ - று. ஏ - அசை. இங்கேஞேயமெனல் பிரியத்தை. எனவே பிரியஞெப்திக் கயலாகாது நிற்றலைப்பெற்றும். (௩௫)

ஈசனை யிருத்துறு மிதயத் தோர்பொருள்
ஆசையை யிருத்துத லந்த ணாளர்தாம்
வாசமுற் றிடுமொரு மனையிற் புன்செயல்
நீசனை யிருத்துத னிகர்க்கு மென்பரால்.

(இ - ள்) ஈசனையிருத்துறுமிதயத்து - ஈசனைவைக்கத்தக்கவிருதயத்தில் —ஓர்பொருளாசையையிருத்துதல் - ஓர்பொருளின்மே லாசையைவைத்தல் — அந்தணாளர் - பிராமணர்கள் —தாம்வாசமுற்றிடும் - தாம்வாசஞ்செய்யும் —ஒருமனையில் - ஒருவீட்டில் —புன்செயல்நீசனை - அற்பச்செயல் செய்யுநீசனை—இருத்துதல் - இருக்கச்செய்தனுக்கு—நிகர்க்குமென்பர்-ஒக்குமென்றறிஞர்கூறுவர். எ - று. ஆல் - அசை. ஈசனைவைக்கத்தகுந்தவிருதயத்தில் ஓர்பொருளாசையை இருக்கவைத்தல் பிராமணனிருந்த வீட்டில் மிக்கபாதகத் தொழிலாளனை இருத்துதனுக்கொக்கு மெனக்கூறியதென்க. (௩௬)

சினமுத லியமய றீர மாற்றுபு
வினைதபு வாய்மையா மெழுக்கை யன்பெனும்
புனலொடு விரவியே பூசி னல்லது
மனமெனு மனையிடை வராதி லிங்கமே.

(இ - ள்.) சினமுதலிய - கோபமுதலியவாகிய—மயல் - செத்தைகளை—தீரமாற்றுபு - ஒருங்கேதொலைத்து —வினைதபு - வினைகடந்த—வாய்மையாமெழுக்கை - உண்மைஞானமென்னு நறுஞ்சாணத்தை —அன்பெனும்புனலொடுவிரவியே - அன்பென்னுஞ்சலத்தொடுகலந்து —பூசினல்லது - மெழுகினுலல்லாமல்—மனமெனுமனையிடை - மனமென்னும் வீட்டில் —வராதிலிங்கம் - சிவலிங்கம்வராது. எ - று. ஏ - அசை. பொருளல்லவற்றைப் பொருளெனக்கொள்ளும் பிராந்திகாரணமாகச் சினமுதலிய தீவினைகளெழுலின் சினமுதலியமயலெனவும், குடிபுகுவோர் மெழுகியபின்னுதலால், உண்மையை மெழுக்காகவும், அன்பை நீராகவும் உருவகஞ்செய்து கற்பனைலிங்கத்துக்கிட மகங்கையாதல்போல அதிஷ்டானலிங்கத்துக்கிட மன்மன்றி வேறின்மையின் மனமெனுமனையிடையெனக் கூறியவாறுகாண்க. வாய்மையாமெழுக்கு, அன்பெனும் புனல், மனமெனுமனை இவை இயையுருவகம். உண்மைஞானத்தையன்பால் மனத்திற்பூசித்தலாவது; பிறவிபயமேலீட்டில் திரிபுடிநசிக்கக்கனிவுதோன்றும். தோன்றவே, அகத்திற் சிவப்பிரகாசம் விளங்கும். விளங்கவே, நிரதிசயானந்தமதாம். இங்ஙனமாதற் கியைந்த நெறியினிற்றலே. நெறி இயமமாதிகள். (௩௭)

காலமுங் கருமமுங் கடந்த காரணன்
பாலுறும் பரிசறப் பார்ம டந்தையர்
கோலமும் பொருளையுங் குறித்து நச்சுநர்
சீலமும் விரதமுந் தீய வென்பரால்.

(இ - ள்.) காலமுங் கருமமுங்கடந்த - காலத்தையுங் கருமத்தையுங்கடந்துநின்ற—காரணன்பாலுறும் - எவற்றிற்குங் காரணகர்த்தனுயிருப்பவனிடத்தில் வைத்த—பரிசற - பிரியநீங்க —பார்மடந்தையர் - பூமியிலுள்ளஸ்திரீகளின்—கோலமும் - அழகையும்—பொருளையும் - அவர்களைப் புணர்வான்வேண்டி ஈட்டும்பொருளையும் —குறித்து - பற்றி—நச்சுநர் - விரும்புகின்றவர்களது—சீலமும் - ஆசாரமும்—விரதமும் - நோன்பும்—தீயவென்பர் - தீச்செயலினவாமென்று சத்துக்கள் சொல்லுவார்கள். எ - று. ஆல் - அசை. காலமுங் கருமமுங்கடந்த காரணனெனவே இவற்றிற்கதீதனெனப்பெற்றும். (௩௮)

வெங்கொலை களவுபொய் வெகுளி யாசையென்
றிங்கிவை யொடுமரீஇ யிருக்கின் றூர்தமக்
கங்கையி னெல்லிபோ லவிர்ச டைப்பிரான்
செங்கையி லிருப்பினுஞ் சேயன் சேயனே.

(இ - ள்.) வெங்கொலை - கொடியகொலைத்தொழிலும்—களவு - திருடு தலும்—பொய் - பொய்சொல்லுதலும்—வெகுளி - கோபித்தலும்—ஆசை - பிறர்மனைநயத்தலும்—என்றிங்கிவையொடு - என்றுசொல்லப்பட்ட இத் தீச்செயலோடு—மரீஇயிருக்கின்றூர்தமக்கு - கூடியிருப்பவர்களுக்கு—அ ங்கையினெல்லிபோல் - உள்ளங்கைநெல்லிக்கனிபோல —அவிர்சடைப் பிரான் - விளங்காநின்ற சடையையுடைய பரமசிவன் —செங்கையில் - உள்ளங்கையில்—இருப்பினும் - இஷ்டலிங்கமாக விருப்பினும் —சேயன் சேயனே - தூரத்தன் தூரத்தனே. எ - று. கொலையாதிகளினின் றகலார்க்கு இஷ்டலிங்கபூசையால் யாதுபயனுமின்றென்பது கருத்து. உள் ளங்கை நெல்லிக்கனிபோலெனல் ; அகம்புறமொத்திருத்தலைக் காட்டுங் குறியென்க. அகம்புறமொத்தலாவது ; நெல்லிக்கனியின் இரேகை அகம் புறமொத்திருக்கு மாறுபோன்று சிவத்தொண்டு அகம்புறமொத் திருத்த லையென்க. (௩௯)

பத்தரைப் புகழ்வுறப் பணிய வுண்டவர்
வைத்தன கொளவுடன் மருவப் பெற்றவர்
சித்தியுங் கடவுளர் சிறப்பும் வேறொரு
முத்தியும் பொருளென முன்னு மூர்களால்.

(இ - ள்.) பத்தரை - பத்தரை—புகழ்வுற - புகழும்படி —பணியவுண் டவர் - பணியப்பெற்றவர்களும் —வைத்தன - வைத்தவாஸ்திகளை— கொள - அவர்கள் அநுபவிக்க—உடன்மருவப்பெற்றவர் - அவரோடுமரு வியிருக்கப் பெற்றவர்களும்—சித்தியும் - அஷ்டமாசித்திகளையும் —கடவு ளர்சிறப்பும் - தேவர்களுக்குச் சிறப்புச்செய்தலையும்—வேறு - தமக்குவே றாயிருக்கின்ற—ஒரு - ஒப்பற்ற—முத்தியும் - மோட்சத்தையும்—பொரு ளென - ஓர்பொருளாக—முன்னுமூர்கள் - நினையார்கள். எ - று. ஆல் - அசை. பத்தரைப்போலத் தம்மைப் பணியவிரும்புகிறவர்களும், வைத்தி ருக்கின்ற செல்வங்களை தாமேயநுபவிக்க விரும்புகின்றவர்களும், சித்தி முதலிய மூன்றையும் ஓர்பொருளாக இலக்குவையா ரென்பதுகருத்து. வைத்தன வினையாலணையும் பெயர். (௪௦)

இன்னண நன்னெறி யாவு மாயிடை
துன்னிய சிவகணந் துணிந்து கொள்ளவே
மன்னவ னெனுமருள் வசவ நாயகன்
தன்னொடு புகன்றனன் றலைவ னல்லமன்.

(இ - ள்.) இன்னணம் - இவ்வாறு —நன்னெறியாவும் - சன்மார்க் கங்களனைத்தையும்—ஆயிடைதுன்னிய - அவ்விடத்திநெருங்கிய —சிவ கணம் - சிவகணங்கள்—துணிந்துகொள்ள - துணிந்தங்கீகரிக்குமாறு—ம ன்னவனெனும் - அரசனென்னத்தக்க—அருள் - கிருபைபொருந்திய— வசவநாயகன்றன்னொடு - வசவண்ணதேவரோடு—தலைவனல்லமன் - எ வர்க்குந் தலைமையாநின்றுள்ள அல்லமதேவன்—புகன்றனன் - சொன் னான். எ - று. தலைவனல்லமன் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ()

பாடினன் பரவினன் பணிந்த சொல்லுரை
யாடினன் பன்முறை யல்ல மன்றிருத்
தாடலை புனைந்தனன் றண்ட நாயகன்
மூடிய வுவகையின் மூழ்கி னானரோ.

(இ - ள்.) தண்டநாயகன் - வசவண்ணன் —பாடினன் - துதித்தன ன்—பரவினன் - வணங்கினன்—பணிந்தசொல் - வணக்கமாயவசனங் களை—உரையாடினன் - சொல்லினன் —பன்முறை - பலதரம் —அல்ல மன் - அல்லமனது —திருத்தாள் - அழகியபாதங்களை —தலைபுனைந்தன ன் - தனதுசிரசிற்கொண்டனன்— (இதன்றியும்) மூடியவுவகையில் - தடையற்றவானந்தத்தில்—மூழ்கினான் - முழுகினன். எ - று. அரோ - அசை. பணிபவை வெளிப்படுத்துஞ் சொல். (௪௨)

திருந்தவிவ் வகையுப தேசித் தெண்ணிலா
அருந்தவர் குழாத்தொடு மருணந் திப்பெயர்ப்
பெருந்தகை மகிழ்வுறப் பிரிவி லாரியன்
இருந்தனன் மலிகலி யாணத் தென்பவே.

(இ - ள்.) திருந்த - திருத்தமாக —இவ்வகை - இவ்வண்ணம் —உப தேசித்து - உபதேசஞ்செய்து—எண்ணிலா - அளவிறந்த—அருந்தவர்கு ழாத்தொடும் - பெரியோர் கூட்டத்தோடும்—அருள் - கிருபைபொருந்

தியை—நந்திப்பெயர் - வசவன்னனென்னும் பெயரையுடைய—பெருந்தகை - பெருந்தன்மையுடையோன் —மகிழ்வுற - சந்தோஷிக்கும்படி—பிரிவில் - நீங்காத —ஆரியன் - அல்லமதேவன்—மலி - வளப்பங்கணிறைந்த—கலியாணத்து - கலியாணபுரியில்—இருந்தனன் - இருந்தான்—என்ப - என்றறிவுடையோர் கூறுவர். எ - று. ஏ - அசை. பிரிவிலாரியன் உபதேசித்து இருந்தனன் எனக்கூட்டிப் பொருள்கொள்க. பெருந்தகை பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. (௩௩).

இட்டலிங்க கதி - முற்றிற்று.

ஆ. கதி - கரு - இ - விருத்தம் - அகஅ.

பதினேழாவது

கதலிவனகதி.

வேறு.

வரையிற் புண்ணிய வனத்தினில் வளங்கெழு நதியின்
கரையிற் பன்னெடு நாளருட் குரவனைக் காண்பான்
றிரிதற் குற்றுலாய் வந்துமா தேவிகல் யாண
புரியிற் கண்டுவந் தேகிய முறையினிப் புகல்வாம்.

(இ - ள்.) வரையில் - மலைகளிலும் —புண்ணியவனத்தினில் - புண்ணியவனங்களிலும்—வளங்கெழு - வளப்பம்பொருந்திய—நதியின்கரையில் - நதிக்கரைகளிலும்—பன்னெடுநாள் - பலநெடுநாளாக—அருட்குரவனை - கிருபைபொருந்திய ஞானாசிரியனை—காண்பான் - காணும்பொருட்டு—திரிதற்குற்று - திரியத்துணிந்து —உலாய்வந்து - எங்குந்தேடிவந்து—மாதேவி - மாதேவியென்பவள் —கலியாணபுரியில் - கலியாணபுரியென்னுமூரில்—கண்டுவந்து - பார்த்துவந்து—ஏகியமுறை - போனவிதத்தை—இனிப்புகல்வாம் - இனிமேல்சொல்லுதும். எ - று. மாதேவி திரிதற்குற்று உலாய்வந்து கண்டுவந்தேகியமுறையை இனிச்சொல்லுதும் எனமுடிக்க. (௧)

காட்டி னும்பெருங் குன்றினுந் தேடினள் காணாள்
வாட்டு றும்பிறப் பெனும்பிணி மாய்வுற வீட்டில்
கூட்டு நன்மருந் திருப்பதை யறிஞராற் கூறக்
கேட்டு வந்துமா தேவியந் நகரினைக் கிடைத்தாள்.

(இ - ள்.) காட்டினும் - காடுகளிலும் —பெருங்குன்றினும் - பெரியமலைகளிலும்—தேடினள்காணாள் - தேடியுங்காணாதவளாய் —வாட்டுறும் - வருத்துகின்ற—பிறப்பெனும்பிணி - பிறவியென்னும்வியாதி —மாய்வுற - நசிக்க—வீட்டில்கூட்டும் - முக்தியிற்சேர்க்கும்—நன்மருந்திருப்பதை - ந

ல்லமருந்திருக்கிறதை—அறிஞராற்கூறக்கேட்டு - சத்துருக்களாற் சொல்ல க்கேட்டு—வந்து - வந்து—மாதேவி - மாதேவியென்பவள்—அந்நகரினை - அந்தப்பட்டணத்தை—கிடைத்தாள் - அடைந்தாள். எ - று. பிறப்பெனும்பிணி உருவகம். (௨)

தலையில் வெண்கலை யொன்றுற வெற்றரை சமைந்து
பலிகொ ளும்படி மனைதொறு முலகெலாம் பழிச்ச
அலம ரும்பரற் கினியவள் வெற்றரை யாய்க்கட்
புலன்வி ருந்துறுங் கடிநகர் வீதியுட் புகுந்தாள்.

(இ - ள்.) தலையில் - சிரசில்—வெண்கலை - வெள்ளிய ஒருகலையை—ஒன்றுற - பொருந்த —வெற்றரைசமைந்து - வஸ்திரமுடுக்காமல் —பலிகொளும்படி - பிட்சைவாங்கும்படி—மனைதொறும் - வீடுகள்தோறும்—உலகெலாம்பழிச்ச - உலகமெல்லாந்துதிக்க —அமலரும் - திரிகின்ற—பரற்கு-பரமசிவனுக்கு—இனியவள்-அன்புடையமாதேவி —வெற்றரையாய் - வஸ்திரந்தரியாதஅரையை யுடையவளாய் —கட்புலன் - கண்ணறிவு—விருந்துறும்-விருந்தாகவுண்ணத்தக்க—கடி - காவலுள்ள—நகர்வீதியுள் - பட்டணவீதியில்—புகுந்தாள் - பிரவேசித்தாள். எ - று. நாணமுதலிய நான்கில் மெய்யுணர் வெழுதற்கியைந்தது நாண விழப்பாதலால் அரற்கினியவளெனவும், விநோதக்காட்சிகளை விளக்கக் கட்புலன் விருந்துறுங்கடிநகர் வீதியெனவுங்கூறினர். வெண்கலை வஸ்திரமென்பதைச் சிலேடையிற் கொள்க. (௩)

நாற்கு ணங்களுள் முதற்குண மாகிய நாணைத்
தீர்க்கு மிம்மட முடையவள் யார்கொலோ தெரியேம்
பார்க்கி லின்னவள் பித்துடை யாளெனப் பலரு
நோக்கும் வண்ணம்வந் துற்றன ளுலகிய லேக்காள்.

(இ - ள்.) நாற்குணங்களுள் - மாதர்க்கியைந்த நாற்குணங்களுள்—முதற்குணமாகியநாணை - முதற்குணமாகிய நாணமெனலை—தீர்க்கும் - நீக்கிய —இம்மடமுடையவள் - இங்ஙனமாயபேதைமையுடையவள் —யார்கொலோதெரியேம் - யாரோதெரிகிலம்—பார்க்கிலின்னவள் - யோசிக்குமிடத்திவள் —பித்துடையாளென - பித்துமேற்கொண்டவளென்று—பலருநோக்கும்வண்ணம் - யாவரும்பார்க்கும்படி —உலகியலேக்காள் - உலகாசாரத்தை மறந்தவளாகிய மாதேவியானவள்—வந்துற்றனள் - வந்

துசேர்ந்தாள். எ - று. அடிதோறும் நாற்குணம் இனவெதுகை, பின்னுள்ள தீர்க்கும் பார்க்கில் என்பன ஆசெதுகை. இஃதுண்மைத் துறவென்றற் கையமென்னை? (௪)

உலகு ளார்தமைப் பேதையென் றுணர்ந்தன ளோதான்
உலகு ளார்தனைப் பேதையென் றுணர்குவ ரென்றே
உலகு ளார்தமை நாணில ணீங்கிய வுடையாள்
உலகு ளார்தொழுந் தண்டநா யகன்மடத் துற்றாள்.

(இ - ள்.) உலகுளார்தமை - உலகத்தாரை —பேதையென்றுணர்ந்தனளோ - மூடரென்றெண்ணினளோ—உலகுளார் - உலகத்தார்—தன்னை —பேதையென்றுணர்குவரென்றே - பேதைமையுடையவளென்றெண்ணிக் கொள்வாரென்வேண்டியோ —உலகுளார்தமை - உலகத்தாரை—நாணிலள் - சற்றுநாணமில்லாதவளாய் —நீங்கியவுடையாள் - வஸ்திரமிழந்த மாதேவியம்மை—உலகுளார்தொழும் - உலகத்தாரால்வணங்கப்பெற்ற —தண்டநாயகன்மடத்து - வசவண்ணராதுமடத்தில் —உற்றாள் - வந்துசேர்ந்தனள். எ - று. இவ்விரண்டேகாரமும் ஐயம். (௫)

தண்ட நாயக னொடுபலர் நெருங்குறத் தவிசின்
அண்ட நாயக னல்லமன் வீற்றிருந் தருளக்
கண்டு போயரு கிறைஞ்சின ளாண்டமர் கணங்கள்
பண்டு தாமறி யாவியப் படைந்தனர் பார்த்து.

(இ - ள்.) தண்டநாயகனொடு - வசவண்ணருடன் —பலர்நெருங்குற - சகல அடியார்பலருநெருங்க—தவிசின் - ஆசனத்தில்—அண்டநாயகன் - சகல அண்டங்களுக்கும் நாயகனுகிய—அல்லமன் - அல்லமதேவன்—வீற்றிருந்தருள - எழுந்தருளியிருக்க —கண்டுபோய் - போய்க்கண்டு—அருகு - சமீபத்தில்—இறைஞ்சினள் - வணங்கினள்—ஆண்டமர்கணங்கள் - அங்கிருந்தசிவகணங்கள்—பண்டுதாமறியா - முன்னரென்றுங்கண்டறியாத—வியப்படைந்தனர்பார்த்து - மிக்கவதிசயமடைந்தனர் மாதேவியைப்பார்த்து. எ - று. சிவகணங்கள் மாதேவியைப்பார்த்து வியப்படைந்தனரெனமுடிக்க. (௬)

நெஞ்ச மாரழ லரக்கென நெக்குநெக் குருகச்
செஞ்சொல் வாய்துடி மாறவான் விழிபுனல் சிந்தக்

கஞ்ச நாண்மலர்க் கைதொழு தனங்கனைக் காணுள்
அஞ்சி னேன்பவப் பிணியினி யருள்செயென் றழுதாள்.

(இ - ள்.) நெஞ்சம் - மனம் — ஆரழல் - மிக்கவெப்பத்தினிற்பட்ட — அரக்கென - அரக்கைப்போல — நெக்குநெக்குருக - நெகிழ்ந்துருகவும் — செஞ்சொல் - நடுங்கிக்கூறுமினியமொழிகள் — வாய்தடுமாற - வாயிற்றடுமாறவும் — வாள்விழி - வாள்போன்றவிழிகளில் — புனல்சிந்த - நீர்பெருகவும் — நாள் - அன்றலர்ந்த — கஞ்சமலர் - தாமரைமலர்போன்ற — கைதொழுது - அஞ்சலிசெய்து — அனங்கனை - காமரோயை — காணுள் - காணுதமாதேவியம்மை — பவப்பிணி - செனனவியாதிக்கு — அஞ்சினேன் - பயந்தேன் — (ஆதலின்) இனிக்கிருபைசெய்யவேண்டுமென்று — அழுதாள் - அழுதனள். எ - று, பவப்பிணி - உருவகம். (எ)

வீடு வப்பவ ராணெனப் பெண்ணென வேறு
ஏட லர்க்குழ லுமைகலை யேயிவ ளிவள்போல்
நாடி றிம்பரு வம்பெரு மவரிலை ஞானம்
கூடு தற்குரி யாரென வல்லமன் குறித்தான்.

(இ - ள்.) வீடு - மோட்சத்தை — உவப்பவர் - இச்சிப்பவர்கள் — ஆணென - ஆணென்றும் — பெண்ணென - பெண்ணென்றும் — வேறு - வேற்றுமையுளரோ — ஏடு - இதழ்களையுடைய — அலர் - மலர்களையணிந்த — குழல் - கூந்தலையுடைய — உமை - ஈசுவரியின் — கலையே - சாத்துவிதகலையே — இவள் - இவளாகும் — இவள்போல் - இவளைப்போல — நாடில் - நாடுமிடத்தில் — பருவம்பெறுமவரிலை - பக்குவப்பருவமடைந்தவரில்லை — ஞானங்கூடுதற்கு - ஞானமடைதற்கு — உரியரென - உரியவளென்று — அல்லமன் - அல்லமதேவன் — குறித்தான் - கருதினான். எ - று. முத்தியடைவதிற் பேதமின்மையைக்காட்ட வீடுவப்பவராணெனப்பெண்ணென வேறுளரோவென்றார். (அ)

தான லாதொரு பொருளிலைச் சகமென வென்றும்
ஞான மேலலாற் காமவின் பந்தனை நண்ணுள்
தான லாதர வாற்றனைத் தழுவியின் புறுநர்
ஏனை மாந்தரு ளுணர்கொலோ வென்றனை ரிருந்தார்.

(இ - ள்.) தானலாது - தன்னைத்தவிர — சகமென - சகமென்று — ஒரு பொருளிலை - முடிவாகவொருபொருளுமில்லை — என்றும் - என்றுணர்ந்த

போல — இலையென - தக்கதோரில்லையென்று — எம்மான் - எமதுயர்க்குத் துணையவல்லமன் — நின்ற - எவற்றிற்குமேலாகநின்ற — ஞானமூலந்தனை - ஞானத்துக்கு மூலமாயிருப்பதை — உணர்த்துவானினைந்தான் - உபதேசிக்கநினைத்தான். எ - று. நாம் தேடிப்போய் உபதேசிக்கும் சிடரைப்போலாகாது இவளெம்மைத் தேடிவரலால் இவளுக்குபதேசிக்கத் தொடங்கினுரென்பது கருத்து. (௪௨)

பூத நீயலை பொறிகளு மலையலை புந்தி
யேது நீயலை யிவற்றினை மயங்கியா னென்னும்
போத நீயலை யென்றிவை யனைத்தையும் போக்கிச்
சோதி யாகிய பிரமமே நீயெனச் சொல்லி.

(இ - ள்.) பூதநீயலை - பஞ்சபூதங்களுநீயல்லை — பொறிகளுமலை - ஐம்பொறிகளுநீயல்லை — அலைபுந்தி - புத்தியுநீயல்லை — ஏதுநீயலை - மற்றவெதுவுநீயல்லை — இவற்றினைமயங்கி - இவற்றைமெய்யெனமயக்கமுற்று — யானெனும் - நானென்றுகொள்ளும் — போதநீயலை - அறிவுநீயல்லை — என்று - என்றாராய்ந்து — இவையனைத்தையும்போக்கி - இவைகளையெல்லாமொருங்கேயொழித்து — சோதியாகியபிரமமே - சோதிவடிவமாயபிரமஸ்வரூபமே — நீயெனச்சொல்லி - நீயென்றுவிளக்கி. எ - று. நீயாகிறவிவையன்றிச் சுயஞ்சோதியும், சுயஞ்சோதியையன்றிப் பிரமமெனவும் வேறின்மையின் சோதியாகியபிரமமே நீயெனச்சொல்லியென்றார். குணகுணியெனப்பேதிப்பாரைமறுக்கச் சோதியாகியபிரமமென்றார். காலைமாலையால் ஒளிகுன்றியதுபோற்றோற்றினுஞ் சூரியனுக் கியல்பன்றுதல்போன்று பருவத்தாலான்மா வொளிகுன்றியதுபோற் றோற்றினுமதற்கியல்பன்றென்க. இங்கே போதமெனல்சுட்டறிவை. (௪௩)

ஞேய ஞானஞா துருவெனு மிவைபல விருந்து
மாயின் வேறுமுத் தியென் றதுசக மாமென்
றேயு மாறிய வதுவெனுஞ் சுட்டிலா வியல்பை
மாயை மாறிய தெளிபா ரருளினன் வள்ளல்.

(இ - ள்.) ஞேயஞானஞாதுருவெனும் - ஞேயஞானஞாதுருவென்கின்ற — இவை - இவைகள் — பலவிருந்துமாயின் - பலவாகவென்றுமிருக்குமாயின் — வேறுமுத்தியென்று - ஐக்யமுத்தியென்று — அது - அம்முத்தி — சகமாமென்று - கிரியையாகியபத முத்தியாமென்று — ஏயுமாறு - பொருந்தும்வண்ணம் — இதுவதுவெனுஞ்சுட்டிலா - கூடஸ்தபிரமமென்று

ஞ்சுட்டிநந்த — இயல்பை-என்றுமிருந்தபடியிருக்குமியல்புவடிவை — மாயைமாறியதேவிபால் - மாயாசம்பந்தங் கடந்தமாதேவியினிடத்தில் — வள்ளலருளினன் - அல்லம னநுக்கிரகித்தான். எ - று. இவைபலவிற்றல் இவைபலவிற்றலெனல் திரிபுடியல்லாத காட்சிப்பொருள் கருத்துப்பொருளின்றெனக்காட்டற்கென்க. வேறறுமுத்தியென்றதனல் ; ஐக்யமுத்தி என்றுங்கற்பனையிறந்தவிடத்தாதலின் இதுவதுவெனுஞ்சுட்டெனலைக் கடஸ்தபிரமமென்றுங்கொண்டாம். இங்கேயியல்பெனல் அதிஷ்டான வாரோபங்கடந்ததிலையை. ஏயுமாறெனல் தக்கசிந்தனை இன்மைக்கியைந்தநெறியை. (௧௪)

தேறு நீரென வெனதுளந் தெளிந்ததேசிகனைம்
மாறு காண்கிலே னுடல்பொரு ளாவிகண் மதிப்பில்
வேறு போய்கின வாயின வென்றவள் விழிக
ளூறு நீரொடு மல்லமன்ற டொழு துனைந்தாள்.

(இ - ள்.) தேறுநீரென — தேற்றாங்கொட்டையாற்றெளிவித்தநீரைப்போல — எனதுளந்தெளித்த-எனதுள்ளத்தைத்தெளிவித்த — தேசிக-ஆசிரியருகூர்த்தமே — கைம்மாறுகாண்கிலேன் - இதற்குப்பிரதியுபகாரந்தெரிகிலன் — உடல்பொருளாவிகள்மதிப்பில் - உடல்பொருளாவிகளைமதிக்குமிடத்தில் — வேறுபோய்கினவாயின - வெவ்வேறாகச்சிதைந்தகினைவாய்கின்றன — என்று - என்றுசொல்லி — அவள் - அந்தமாதேவியென்பவள் — விழிகள் - கண்களில் — ஊறுநீரொடும் - பெருகாநின்றசலத்தோடும் — அல்லமன்றாள் - அல்லமதேவரதுபாதங்களை — உனைந்து-வருந்தி — தொழுதாள் - வணங்கினள் எ - று. வேறுபோய்கினைவாதல் பலவாறாகச்சிதைந்தசங்கற்ப வடிவாதலே. தெளித்தவென்பதில் விவ்விகுதி தொகுக்கப்பட்டது. தொழுதுனைந்தாளென்பதுமுன் பின்னாகமாற்றியுரைக்கப்பட்டது. (௧௫)

அன்னை நீயினிக் கதலிமா வனத்தினை யடைந்திட்
டென்னை மேவினை கேட்டவிப் பொருளினை யெல்லா
நின்னி னீதெளிந் துறுநிகொ ணிதிநியா சனத்தில்
மன்னு வாயென வேவினன் றற்கொடை வள்ளல்.

(இ - ள்.) அன்னை - தாயே — நீயினி - நீயினிமேல் — கதலிமாவனத்தினை - பெரிதாகியவாழைத்தோப்பை — அடைந்திட்டு - சேர்ந்து — என்னை மேவினை - என்னையடைந்தாய் — கேட்டவிப்பொருளினையெல்லாம் - நீ கேள்வியுற்றவிந்தஅர்த்தத்தையெல்லாம் — நின்னில் - உனக்குள் — நீதெ

ஐமயங்காதுவஸ்து சோதனைப்படியங்கெதிரிற்றில் மனமென்பதின்றிக்கலங்காநிலைவாய்க்கும் ; வாய்க்கிலதுக்க நிவிர்த்தியுந்தடையற்ற வானந்தமுமாமெனக்கண்டாம். (௯)

மனமொ ருத்தன் வசப்படு மேலவன்
பினைவ ருந்தும் பிறப்பை யடைந்திடான்
மனமொ ருத்தன் வசப்படா தோடுமேல்
நனிபி றப்பிடை நாளுஞ் சுழலுமே.

(இ - ள்.) மனம் - மனமானது — ஒருத்தன்வசப்படுமேல் - ஒருவன் சொன்னவாறு கேட்கப்படுமாயின் — அவன் - அந்தமனத்தையடக்கியவன் — பினை - பின்னும் — வருந்தும்பிறப்பை - வருத்தப்படுத்தும்பிறவியை — அடைந்திடான் - அடையான் — மனம் - அந்தமனமானது — ஒருத்தன்வசப்படாது - ஒருவன்வசத்திலடங்கியில்லாது — ஓடுமேல் - கண்டபடியோடுமாயின் — நனிபிறப்பிடை - அளவிறந்தபிறப்பில் — நாளுஞ்சுழலும் - எப்போதுஞ்சுழன்றுகொண்டிருப்பன். எ - று. பிறப்பையடைந்திடானென்றதனல் நனிப்பிறப்பிடை நாளுஞ்சுழலுவன் என்றார். (௧௦)

அறவி னைக்கு மரும்பொரு ளின்பொடு
பெறுவ தற்கும் பெருங்கல்வி கற்றுயர்
விறலி னுக்குநல் வீரந் தனக்குமொண்
டுறவி னுக்குந் துணைமன மென்பவே

(இ - ள்.) அறவினைக்கும் - அறத்தின்வழிச்சேறற்கும் — அரும்பொருள் - அரியதிரவியங்களையும் — இன்பொடு - சிற்றின்பத்தையும் — பெறுவதற்கும் - அடைதற்கும் — பெருங்கல்விகற்று - மிக்ககல்விகற்று — உயர் - மேம்பாட்டையும் — விறலினுக்கும் - வல்லமைக்கும் — நல்வீரந்தனக்கும் - ஒள்ளியதுமவமத்திற்கும் — சுத்தவீரத்துக்கும் — ஒண்டுறவினுக்கும் - என்ப - என்றறிஞர் கூறுவர். எ - று. ஏ - அசை இன்பொடு வேற்றுமை மயக்கம். துணை - துணையாகிற்பது — மனம் - மனமாகும் — (௧௧)

நல்ல செய்து நரரை யுயர்த்தவும்
அல்ல செய்தங் களற்றிடை யாழ்ப்பவும்
வல்ல திந்த மனமல தையனே
இல்லை யென்ன வியம்பு மறையெலாம்.

(இ - ள்.) நல்லசெய்து - நற்கருமங்களைச்செய்து—நரரையுயர்த்தவும்—மனிதரையுயர்வுபடுத்தற்கும்—அல்லசெய்து - தீவினைகளைச்செய்து—அங்கு - மறுமையில்—அளற்றிடை - நரகத்தில்—ஆழ்ப்பவும் - ஆழ்த்துதற்கும்—வல்லது - வல்லமையுள்ளது—இந்தமனமலது - இந்தமனத்தையன்றி—ஐயனே - ஐயா—இல்லையென்ன - வேறில்லையென்று—மறையெலாம் - வேதங்களெல்லாம்—இயம்பும் - சொல்லும். எ - று. நல்ல அல்ல என்பனகுறிப்பு வினையாலணையும்பெயர். உயர்த்தவும் ஆழ்ப்பவும் என்பன நிகழ்காலவினையெச்சம். (கஉ)

நெஞ்ச மாதுமை நேசனை நண்ணுமேல்
விஞ்சு பாதகங் கோடி விளைப்பினும்
அஞ்சு மானவ னவ்வினை யாவையும்
பஞ்சு தீயிடைப் பட்டென மாயுமே.

(இ - ள்.) நெஞ்சம் - மனம்—மாதுமைநேசனை - உமையவளுக்கன்பனாகியபரமசிவனை—நண்ணுமேல் - அடையுமாயின்—விஞ்சு - மிக்க—பாதகங்கோடிவிளைப்பினும் - அநேககோடி பாதகஞ்செய்யினும்—அஞ்சுமான் - பயப்படான்—அவன் - அவன்பாற்பட்ட—அவ்வினையாவையும் - அந்தத்தீவினைகளனைத்தும்—பஞ்சு - பஞ்சானது—தீயிடைப்பட்டென - அக்கினியிலகப்பட்டாற்போல—மாயும் - நசிக்கும். எ - று. ஏ - அசை. விளைப்பினும் என்பதினும்மை இழிவுசிறப்பு. யாவையும் என்பதினும்மை முற்று. நெஞ்சம் மாதுமைநேசனை நண்ணுதல் தனக்காதாரமாகப்பற்றுதலே. (கங)

மக்கள் மானிட னென்று மனத்தினன்
மிக்க மேன்மை விளங்கின நில்லெனில்
பொக்க மேவும் பொறிகளோ ராங்கினல்
ஒக்கு மாவினை யொத்துயர் வுற்றிடார்.

(இ - ள்.) மக்கள் - மக்கட்பிறப்பில்—மானிடனென்று - மனிதத்தன்மையுடையவனென்று—மனத்தினன் - மனத்தினல்—மிக்கமேன்மை - மிக்கசிறப்போடு—விளங்கினனில்லெனில் - விளங்காதிருப்பாராயின்—பொக்கமேவும் - பாசங்களிற்செல்லுகின்ற—பொறிகளோராங்கினல் - ஐம்பொறிகளினும்—ஒக்குமாவினை - ஒத்திருக்குமிருகங்களை—ஒத்து - அருந்தல்பொருந்தல்களாலொத்து—உயர்வுற்றிடார் - மேலாயநிலையைய

ல் - அனந்தசென்மங்களி லியற்றியநல்வினையினுல்—தன்னைத்தொழும் பெறும் - தன்னைத்தொழுதற்கியைந்த—அடியர்தம்பால் - அடியார்களிடத்தில்—செல்லுவனென்று - போவன்றேனென்று—சென்றேன்செயல் - சென்றவல்லமனதுசெயலை—இனித்தெரிக்கலுற்றும் - இனித்தெரிவிக்கத் தொடங்குவாம். எ - று. நல்லன; குறிப்பு வினையாலணையும் பெயர். (சு)

எரிபுரை தளிர்த ளிர்ப்ப விளமரக் காவிற் றென்றல்
மருவுதல் போல வன்பர் மனமொடு கண்க ளிப்பத்
திருவுரு வொன்ற டைந்து சென்றவக் கருணை வள்ளல்
கருமுகி றவழ்ப ராரைப் பருப்பதங் கண்டு சென்றுன்.

(இ - ள்.) எரிபுரை - அக்கினியையொத்த—தளிர்தளிர்ப்ப - துளிர் தளிர்க்கும்படியாக—இளமரக்காவில் - இளமையாகியமரங்களையுடைய சோப்பில்—தென்றல்மருவுதல்போல - தென்றற்காற்றுவருதல்போல—அன்பர் - அடியார்கள்—மனமொடுகண்களிப்ப - மனமுங்கண்ணுங்களிக்கும்படி—திருவுருவொன்றடைந்து - திருக்கோலமொன்றுகொண்டு—சென்ற - அடியார்களிடத்திற்சென்ற—அக்கருணைவள்ளல் - கிருபாமூர்த்தமாகிய அந்தவல்லபதேவன்—கருமுகிறவழ் - கரியமேகங்கள்தவழ்கின்ற—பராரை - பருத்தவரையையுடைய—பருப்பதங்கண்டு சென்றுன் - ஸ்ரீசைலத்தைக்கண்டுசென்றனன். எ - று. கருணைவள்ளல் களிப்பக் கண்டு சென்றுனெனக் கூட்டிமுடிக்க. மனமொடுகண்களித்தலாவது அகம்புறமொத்துக்களித்தலே. (எ)

அல்லமன் கண்டு செல்லு மப்பருப் பதத்தின் மேன்மை
சொல்லுத லறியா ராகிச் சுரர்முனி வரர்க டம்முள்
வல்லவ ரெனவி ருக்கு மதிஞரு மயங்கி நிற்ப
புல்லறி வாண்மை கொண்டு புகலுவென் சிறிதஞ் சாமல்.

(இ - ள்.) அல்லமன்கண்டுசெல்லும் - அல்லமதேவன்கண்டுபோகின்ற—அப்பருப்பதத்தின்மேன்மை - அந்த ஸ்ரீசைலத்தின் சிறப்பை—சொல்லுதலறியாராகி - சொல்லத்தெரியாதவர்களாகி—சுரர்முனிவரர்கடம்முள் - தேவர்களுக்குள்ளும்ரிஷிகளுக்குள்ளும்—வல்லவரெனவிருக்கும் - வல்லவரெனப்பெயர்பெற்றிருக்கும்—அதிஞரும் - அறிவுடையோரும்—மயங்கிநிற்ப - தோன்றுதியங்கிநிற்பார் — புல்லறிவாண்மைகொண்டு -

அற்பவறிவுகொண்டு—அஞ்சாமல் - பயப்படாமல்—புகலுவென்சிறிது—கொஞ்சஞ் சொல்லுவேன். எ - று. ல்லறிவாண்மைகொண்டென்பதனால் புகலுவன்சிறிதென்றார். அஞ்சாமலெனல் மூடச்செருக்கைவிளக்கநின்றது. (௮)

நாடொறு முதித்தெழு மெங்கு ஞாயிறு தனைச்சு மக்கும்
கோடுறு வரைகு ணக்குங் குடக்குமாய்த் திகைத்து நிற்பக்
கூடுதல் பிரித லின்றிக் குறைமதி தலைச்சேர்ந் தின்பம்
நாடருங் கதிரைச் சென்னி தரிப்பதக் குன்ற மாதோ.

(இ - ள்.) நாடொறும் - தினந்தோறும் —உதித்தெழுமெங்குஞாயிறு - தோன்றிமறைகின்றசூரியன் —தனைச்சுமக்கும் - தன்னைச்சுமக்கின்ற—கோடுறுவரை - சிகரம்பொருந்தியமலையினையதென் றுணராமல் —குணக்குங்குடக்குமாய் - கிழக்குமேற்காக —திகைத்துநிற்ப - திகைத்துநிற்க—(இதனைக்கண்டு) கூடுதல்பிரிதலின்றி - அவனொடு கூடுதலும்பிரிதலுமில்லாமல்—அக்குன்றம் - அந்தஸ்ரீசைலம்—குறைமதிதலைசேர்ந்து - மூன்றாம்பிறையைச்சிரசில்வைத்து—இன்பம் - பேரின்பத்தை —நாடரு - திருவடியால்தரப்பட்ட —கதிரை - ஞானசூரியனை —சென்னிதரிப்பது - சிரசில்தரித்துக்கொண்டிருக்கின்றது. எ - று. மாது - ஓ - அசைகள். ஸ்ரீசைலமலையானது தனதுசிகரந்தெரியாது பூதசூரியன் திகைத்து நிற்பதைக்கண்டு இவனுக்கிடங்கொடாமல் ஞானசூரியனாகியசிவனுக்கிடங்கொடுத்ததென்பது கருத்து. அக்குன்றமெனலை வெள்ளியங்கிரியென்பாருமுளர். (௯)

பொன்னிற்குன் றெழுவா யாகப் பொருப்பள விறந்து நிற்பச்
சென்னிக்கட் டவழ்வெண் டிங்கட் சிலாதரன் குழவி வெற்புத்
தன்னைக்கண் டவரை யென்றோர் தலைமிசை யேற்று மென்னின்
தின்னாற்கட் படிந்தன் றேவவ் விறைமலை விளர்ந்த தம்மா.

(இ - ள்.) பொன்னிற்குன்று - மேருபர்வதம்—எழுவாயாக - ஆதியாக—பொருப்பு - மலைகள் —அளவிறந்துநிற்ப - அளவில்லாமலிருக்க—சென்னிக்கண் - உச்சியில் —தவழ் - தவழுகின்ற —வெண்டிங்கள் - வெண்மையானசந்திரனையுடைய —சிலாதரன் - சிலாதரனென்பவனுடைய—குழவிவெற்புதன்னை - குழந்தையாகிய ஸ்ரீசைலமலையை—கண்டவரை - தரிசித்தவரை —என்றோர்தலைமிசை - என்னுடையதலைமேல்மாத்திரம்—

னீர்ந்து - நீங்கிவெளிவந்து —உறைகொள் - இடங்கொண்ட —சித்தியாசனத்தில் - சித்தியாசனமென்னுநிலையில் —மன்னுவாயென - நிலைபெற்றிருப்பாயென்று—தற்கொடை - தன்னைக்கொடுக்கத்தக்க —வள்ளல் - வள்ளலாகிய அல்லமதேவன்—ஏவினன் - அனுப்பிவிட்டனன் எ - று. சித்தியாசனமெனல் ஐயந்திரிபறத்தெளிதலை. (௧௬)

வள்ள லணிமலர்த் திருவடி வணங்கியம் மருங்கில்
கொள்ளை மாதவர் தாடொழு தருள்விடை கொண்டு
வெள்ள மாகிய வன்புமின் றய்த்திட மேவித்
தெள்ளு மாரமு தனையவள் பருப்பதஞ் சேர்ந்தாள்.

(இ - ள்.) வள்ளல் - அல்லமருடைய—தாள் - அன்றலர்ந்த —மலர்த்திருவடிவணங்கி - தாமரைமலர்போன்றபாதத்தைவணங்கி —அம்மருங்கில் - அதற்குப்பக்கத்திலுள்ள—கொள்ளை - பேரின்பத்தைக்கொள்ளைகொள்ளையாகவனுபவிக்கும் —மாதவர் - பெரியோர்களது—தாடொழுது - அடிகளைவணங்கி—அருள் - கிருபையோடும்—விடைகொண்டு - விடைபெற்றுக்கொண்டு—வெள்ளமாகியவன்பு - வெள்ளம்போற்பெருகியஅன்பு—பின்றய்த்திட - பின்றொடர்ந்து—மேவி - இருந்து —தெள்ளும் - தெளிவாகிய—ஆர் - நிறைந்த—அமுதனையவள் - அமுதம்போல்பவள்—பருப்பதஞ்சேர்ந்தாள் - ஸ்ரீசைலத்திற் சேர்ந்தாள். எ - று. வணங்கி தொழுது விடைகொண்டுமேவி அமுதனையவள் எனக்கூட்டிமுடிக்க. (௧௭)

வசவன் பாலரு ளல்லம னுற்றென வானோர்
பசுவின் பானிறை சுனையிடை நழுவிவீழ் பழத்தை
மிசையும் பூங்கிளி மிழற்றொலி கடலென விரவ
விசையும் பாசிலைக் கதலியங் காடதி லிலங்கும்.

(இ - ள்.) வசவன்பால் - வசவண்ணரிடத்தில்—அருள் - கிருபைபொருந்திய—அல்லமனுற்றென - அல்லமன்வந்ததுபோல—வான் - சுவர்க்கத்திலுள்ள —ஓர்பசுவின்பானிறை - ஒப்பற்றபசுவின்பால்நிறைந்த —சுனையிடை - சுனையினிடத்தில் —நழுவிவீழ்பழத்தை - தானேநழுவிவிழுகின்றபழத்தை—மிசையும் - உண்ணுகின்ற —பூங்கிளி - அழகியகிளிகள்—மிழற்றொலி - சொல்லிரைச்சல் —கடலெனவிரவ - கடல்போற்கலந்தொலிக்க—இசையும் - அதற்கிசைந்த—பாசிலை - பசியஇலைகணிறைந்த —கதலியங்காடதில் - கதலிவனம் அம்மலையில் —இலங்கும் - பிரகாசிக்கும் எ - று. (௧௮)

விரிந்த வாழையி னெட்டிலை மிசைநிறை மதியம்
பொருந்து மாறுவிண் முழுதையு மளித்தருள் புத்தேள்
அருந்த வாய்மடைத் தொழிற்றிற நிரம்பிய வடிசில்
சொரிந்த தாமென மனங்களி கூர்தரத் தோன்றும்.

(இ - ள்.) விரிந்தவாழையின் - தலைவிரிந்தவாழைமரங்களின் —நெட்டிலைமிசை - நீண்டவிலைகளின்மேல் —நிறைமதியம்பொருந்துமாறு - பூரணசந்திரகிரணங்கள்பொருந்தும்விதம் —விண்முழுதையும் - ஆகாயமுதலியவனைத்தையும் —அளித்தருள்புத்தேள் - படைத்தபிரமன் —அருந்தவாய் - வாயினுலுண்பான்வேண்டி —மடைத்தொழிற்றிறம் - சமையல்பாகவகை —நிரம்பிய - நிறைவேறிய —அடிசில் - சாதத்தை —சொரிந்ததாமென - போட்டதுபோலிருக்கின்றதென்று —மனங்களிகூர்தர - மனஞ்சந்தோஷிக்கும்படி —தோன்றும் - தோற்றும். எ - று. வாழைவனத்தில் இலைகளின்மேல் பூரணசந்திரகலைகளிலறந்து காணப்படுதல் பிரமன்றனது வாயாலருந்தும்படி வாழையிலைகளின்மேலிட்டசாதத்தைப்போலிருக்கின்றதெனப்பொருளமையக்கண்டாம். பொருந்துமாறுதோன்றுமென முடிக்க. இங்கேநிறைமதியம் சந்திரனது பூரணகலையை. (கூ)

இனைய வாழையங் காடுகண் டெங்கண்மா தேவி
முனிவர் வானவ ரியாவரு முறைமுறை போற்றத்
தனிய ளாயொரு புறம்பசந் தளசுவை தருசெங்
கனிய வாவிய வுளமொடு மிருந்தனள் களித்து.

(இ - ள்.) இனைய - இந்தவகையாகிய —வாழையங்காடுகண்டு - அழகியவாழைவனத்தைக்கண்டு —எங்கண்மாதேவி - எமதுமாதேவியென்பவள் —முனிவர் - ரிஷிகளும் —வானவர்யாவரும் - தேவர்முதலியவனைவரும் —முறைமுறைபோற்ற - ஒழுங்காகத்துதிக்க —தனியளாய் - ஒன்றியாய் —ஒருபுறம் - ஒருபக்கத்தில் —பசந்துள - பசுமையாகின்றுள்ள —சுவைதரு - மிக்கமதுரரசந்தருகின்ற —செங்கனி - சிவந்தபழங்களை —அவாவியவுளமொடும் - விருப்புற்றமனத்தோடும் —இருந்தனள்களித்து - சந்தோஷித்திருந்தனள். எ - று. மாதேவி கண்டு களித்து தனியளாயிருந்தனளென முடிக்க. (உo)

கதலிவனகதி - முற்றிற்று.

ஆ கதி - கஎ க இ - விருத்தம் - அஙிஅ.

இஷ்டலிங்கந்தரித்தும் —இலையிலை - சற்றும்பயனிலை —என - என்று —இணையிலியாகமம் - ஒப்பற்ற பரமசிவன்சொல்லியஆகமம் —இயம்பும் - சொல்லும் —நினைவு - தனதுசிந்தையை —அரன்கழல் - பரமசிவனுடைய திருவடியில் —நிற்க - அழுந்த —நிறுத்திடுய் - பிறழாது நிறுத்திய வசவண்ணனே. எ - று. மனம் இலிங்காகாரமாகாவிடத்து உடலிற்தரித்த இலிங்கத்தாற் பயனின்றென்பது கருத்து. (ரு)

தாவி லாத மனமொடு சார்கிலாத்
தோவு மாயி னுலகிற் புனலுமொண்
பூவு நாடொறும் போக்குறு பூசனை
ஆவி போகிய வாக மொக்குமால்.

(இ - ள்.) உலகில் - உலகின்கண் —புனலும் - அபிஷேகஞ்செய்யுஞ்சலமும் —ஒண்பூவும் - அருச்சிக்கின்றவழகியபூவும் —நாடொறும் - தினந்தோறும் —போக்குறு - விதிவழுவாதுசெய்கின்ற —பூசனை - பூசையானது —தாவிலாத - ஒன்றிலும்பற்றாத —மனமொடுசார்தரா - மனத்தோடுசேராமல் —ஒவுமாயின் - நீங்குமாயின் —ஆவிபோகிய - உயிர்நீங்கிய —ஆகமொக்கும் - பிணத்தையொப்பாகும். எ - று. ஆல் - அசை. மனமிலையுறுவிறும்பூசை பிணம்போலுமென்க. (சு)

புறம்பு காண்குவன் புல்லிய னீசனை
அறிந்த ஞானி யகமுறக் காணபனால்
எறும்பி காணுறி னின்கரும் பேகொளும்
செறிந்த வாடிலை தின்பன வென்பவே.

(இ - ள்.) புறம்பு - பகிர்முகத்தில் —புல்லியன் - அறிவீனன் —ஈசனை - பரமசிவனை —காண்குவன் - தரிசிப்பன் —அறிந்தஞானி - தன்னைத்தானுள்ளவாறறிந்தஞானவான் —அகம் - அந்தர்முகத்தில் —உற - ஐக்கியமுற —காண்பன் - தரிசிப்பன் —(யாதுபோலுமெனின்) எறும்பியானையை —காணுறில் - நோக்குமிடத்தில் —இன்கரும்பேகொளும் - இனியகரும்பையேதின்னும் —செறிந்தவாடு - மயிர்களாணிறைவுற்ற ஆடுகள் —இலைதின்பன - இலைகளைத்தின்பனபோலும் —என்ப - என்றறிஞர் கூறுவர். எ - று. ஞானியென்றதனுல் புல்லியன் கருமியென்றதாயிற்று. அகமுறக்காண்டல் சிந்தை சுயஞ்சோதியாக விளங்கக்காண்டலை. புறம்புகாண்டல் பாவாபாவங்களி லொன்றை. அந்தர்முகம்பொன் பகிர்முகம் பணி எனவே சொப்பிரகாசமே சேஈமாதியாகத் தோற

றலெனப்பெறும். பாவமிருவகைப்படும் அவை; கிரியாபாவம் மனோ பாவமெனத் தன்னைத் தானறிந்தஞானி சகளனையகமுறக்காண்பன்; தன்னைத்தானறியாத புல்லியன் சகளனைப் புறம்புகாண்பன் எங்ஙனமெனில் ஒருவன் தன்னையுபாதியாகக்காணவும் சிவமுபாதியாகவும் அதிஷ்டானமாகக்காணவு மதிஷ்டானமாகவும் விளங்குவதைப்பற்றி யென்க. அறிந்தவென்ற விசேஷணே யிங்ஙனங்கொள்ளப் பெறும். கரும்பு ருசி போல்வன் ஞானிக்கீசனெனவும் அதன் தழை ருசிபோல்வன் அஞ்ஞானிக்கீசனெனவுங் கொள்ளக்கிடந்தன. இதனையனுபவத்திற் காண்க.

காங்க ளல்ல கருமஞ் செயாநிற்பத்
திரிந்து செல்லுஞ் செலாதவி டத்துநெஞ்
சொருங்கு றாத வொருமனந் தன்னினும்
பரந்த வல்லற் படுக்கும் பகையிலை.

(இ - ள்.) காங்கள் - கைகள் — நல்லகருமம் - சிவபூசைமுதலியபுண்ணியகருமங்களை — செயாநிற்ப - செய்துகொண்டிருக்க — (அக்கணத்தில்) நெஞ்சு - மனமானது — திரிந்து - இதரக்குமாருக — செலாதவிடத்து - செல்லத்தகாதவிடங்களில் — செல்லும் - போயலையாநிற்கும் — ஒருங்குறாத - ஒன்றுபட்டிசையாத — மனந்தன்னினும் - மனத்தைக்காட்டிலும் — பரந்த - மிகுந்த — அல்லற்படுக்கும்பகை - துன்பத்தைவிளைவிக்கும்பகைமை — இலை - வேறெங்கணுமில்லை. எ - று. மனமொருங்குறாதவிடத்துப்புண்ணிய கருமம்யாசிறந்தியற்றினும் பயனின்றென்க.

துயிலை யின்பெனச் சொல்லுத லிந்திய
நியலு நெஞ்ச மிலாமையி னலன்றே
பயிலு நெஞ்சம் பரந்து திரிதருஞ்
செயலி லில்லைச் சிறிதுஞ் சுகமரோ.

(இ - ள்.) துயிலை - நித்திரையை — இன்பெனச்சொல்லுதல் - சுகமெனவெவருங்கூறுதல் — இந்தியத்தியலும் - இந்தியவயப்பட்டுநடக்கும் — நெஞ்சம் - மனம் — இலாமையினலன்றே - அப்போதில்லாமையினலல்லவா — பயிலும் - சொல்லப்பட்ட — நெஞ்சம் - மனம் — பரந்து - பலவாகுமென்பது — பரவி — திரிதருஞ்செயலில் - அலைந்துதிரியுஞ்செயலில் — சிறிதுமில்லை - இனைத்துணையுமில்லை. சுகம் - சுகக்ஷேமமில்லையோ அங்கேசுகமெனப்பெறும். எ - று. எனவே பெறவேசகலத்தி

***

பதினெட்டாவது

சாதகாங்ககதி.

வேறு.

வினைய டுத்த விழுமந் துடைத்தெமக்
கனைய டுத்த வருளுடை யல்லமன்
மனன டக்கம் வசவற் குணர்த்துதல்
தனையெ டுத்தினிச் சாற்றுது நாமரோ.

(இ - ள்.) வினையடுத்த - வினைகாரணமாகவந்த — விழுமந்துடைத்து - துன்பத்தைநீக்கி — எமக்கனையடுத்த - நமக்குத்தாய்போலும்வந்த — அருளுடையல்லமன் - கிருபைபொருந்திய வல்லமதேவன் — மனனடக்கம் - மனோநாசத்தை — வசவற்கு - வசவண்ணருக்கு — உணர்த்துதல்தனை - அறிவித்ததை — இனி - இனிமேல் — நாமெடுத்துச் சாற்றுதும் - நாமெடுத்துச்சொல்லுதும். எ - று. அரோ - அசை. இங்கேவிழுமமென்பது பிறவித்துன்பத்தை; வினையென்றது இருவினைகளை. அன்னையென்பது இடைகுறைந்தது. (௧)

காவி னீடுங் கதலி வனத்தமா
தேவி போதத் திருவருள் செய்தவன்
மேவி ஞான விளக்குற வெம்முடை
ஆவி போலும் வசவ னறைகுவான்.

(இ - ள்.) காவில் - பூங்காவனத்தில் — நீடுங்கதலிவனத்து - நீண்டவாழைவனத்தில் — மாதேவி - மாதேவியென்பவளுக்கு — போதத்திருவருள்செய்து - ஞானோபதேசஞ்செய்து — அவன்மேவி - அவ்விடத்திற்றங்கி — ஞானவிளக்கு - ஞானதீபம்போன்றவல்லமன் — உற - இருக்க — எம்முடையாவிபோலும் - நம்முடையுயிர்போலிருக்கின்ற — வசவனறைகுவான் - வசவண்ணன் சொல்லுவான். எ - று. ஞானவிளக்கு உருவகம். ()

மத்தர் வாத மயக்க மிலாதுயர்
முத்தி சாதன மொன்று மொழிந்தருள்
அத்த நீயென் றடிக டொழுதெழப்
பத்தி வேண்டும் பரமன் பகருமால்.

(இ - ள்.) மத்தர் - உன்மத்தர்களாற் — வாதமயக்கம் - வாதஞ்செய்த லின்மயக்கம் — இலாது - இல்லாமல் — உயர்முத்திசாதனமொன்று - மேலாயவோர் முத்திசாதனத்தை — அத்த - கர்த்தனே — நீமொழிந்தருளென்று - நீயனுக்கிரகிப்பாயென்று — அடிதொழுதெழ - பாதங்களில் வணங்கியெழுந்திருக்க — பத்திவேண்டும்பரமன் - அன்பர்களதுபத்தியை விரும்புமல்லமதேவன் — பகரும் - சொல்லுவான். எ - று. ஆல் - அசை. நிலைதெரியாது மயங்கிவாதிப்போர் மதத்தராதலின் மத்தவாத மயக்க மெனப்பட்டது. உயரொன்ற விசேசானே ஐக்கியமுத்தி யென்பது பெறும். (௯)

பரம முத்தி பதம்பெறு மேதுவுட்
கரண சத்தி யதனா காரணம்
அரனெ ரித்த வமலற் குறித்தநற்
கிரியை யித்திறம் வேதங் கிளக்குமால்.

(இ - ள்.) பரமமுத்திபதம் - ஐக்கியமுத்திபதத்தை — பெறுமேதுவுள் - அடைதற்கியைந்த காரணங்களுள் — கரணசத்தி - கிரிகரணசத்தியே — அதனாகாரணம் - அதனாமுக்கியகாரணமாம் — அரனெரித்த - திரிபுரத்தையெரித்த — அமலன் - பரமசிவன் — குறித்த - ஏற்படுத்திய — நற்கிரியை இத்திறம் - நல்லகிரியையாகியவிக்கிலைத்திறத்தை — வேதங்கிளக்கும் - வேதஞ்சொல்லும். எ - று. ஆல் - அசை. கரணசத்தி; கிரிகரணமொருங்குபடலை. (௪)

மனமி லிங்க மருவிலே யேயுட
றனிலி லிங்கந் தரித்து மிலையிலை
யெனவி யம்பு மினையிலி யாகம
வினைவ ரனகழ னிறக திறத்தினுய்.

(இ - ள்.) மனம் - மனமானது — இலிங்கம் - இலிங்ககாரமாக — மருவிலேயெல்லாத்காதிருக்கில் — உடலதனில் - தேகத்தில் — இலிங்கந்தரித்தும்

டையார். எ - று. மக்கட்பிறவியின் மானிடரென்பார் ஐயந்திரிபற த்தன்னைத்தானுணர்ந்தஞானியரை. மக்களிற்றேவர் சித்தர்கள் மக்களில்விலங்கு வனையமானிடர். "புருடராய்ச்சென்னமமெடுத்தபேர் - மெய்ஞ்ஞானபோதத்தையுறிவதொன்று,, என்பதனானும் "பெறுமவற்றுள்யாமறிவதில்லையறிவறிந்தமக்கட்பேறல்லபிற,, என்பதனானுங்காண்க. தன்னைத்தானுணராவிடத்து வனையமிருகாதிகளைப்போல் ஐயறிவிருப்பினும் பயனின்றென்பார் இங்ஙனங்கூறினரென்க. மக்களென்பதில் வழாவதுதொருக்கப்பட்டது. மக்களிலெழுவகைத் தோற்றநிலையெய்தல் வெவ்வேறன்றாகன்மையின் மனத்திறலென்றார். மிக்கவெனவடைகொடுத்ததாலும் விளங்குதலென்னுஞ் சிறப்பீந்ததாலும் ஞானியரென்றும் மக்கள்தத்தமனத்திறல் மானிடரென விளங்காதுநிற்பாராயின் வனைய ஐயறிவுயிரோடொத்து உயர்வற்றிடரெனக்கூட்டி முடிக்க. (௧௪)

கெடுக்க வல்லதுங் கெட்டவர் தங்களை
எடுக்க வல்லது மிம்மன மென்றதை
அடக்க வல்லவ னைய பவக்கடல்
கடக்க வல்லவ னாவன் கடிதரோ.

(இ - ள்.) கெடுக்கவல்லதும் - தலையெடுத்தோரைக்கெடுக்கவல்லதும் — கெட்டவர்தங்களை - அங்ஙனங்கெட்டவர்களை — எடுக்கவல்லதும் - தலையெடுக்கச்செய்யவல்லதும் — இம்மனமென்றதை - இந்தமனமேயென்றுஅம்மனத்தை — அடக்கவல்லவன் - தன்வயப்படுத்தற்குவலியுடையோன் — ஐய - ஐயனே — பவக்கடல்கடக்க - சனனசாகரத்தைக்கடக்க — கடிது - விரைவில் — வல்லவனாவன் - வலியுடையோனாவன். எ - று. அரோ. அசை. மனம் இருவினைக்குடன்படலைக்கெடுக்கவல்லதெனவும் பொருள்கொளவிருவினையொப்புக்குடன்படலை எடுக்கவல்லதெனவும் இம்மனமுடையோனுக்கர்ள்க. இவ்விருவினைப்புடைபெயர்ச்சியின்பயன் இம்மனமென்பதையடக்கவல்லவன் பவக்கடல்கடக்கவல்லவனெதலின் இம்மனமென்பதையடக்கவல்லவன் இருவினைக்குள்ளாகன்றார். ஒருவன் மனத்தின்வழித்தன்னைநடத்தின் இருவினைவொப்புக்குள்ளாகவும் ஆவவும் தன்வழிமனத்தைநடத்தின் இருவினைவொப்புக்குள்ளாகன். உம்மையிரண்டும் எண். (௧௫)

ஆயின் மிக்கோ ரரிய செயலெலா
மேய மிக்க மனத்தை திருத்தல்கா

வாயு நிற்க மனமு முடனிற்கும்
நோய நிற்குறி னிற்குந் தரும்புமே.

(இ - ள்.) ஆயின் - தாயைப்போல — மிக்கோர் - பெரியோர்களின்
மிக்கசத்துக்களது — அரியசெயலெலாம் - செய்தற்கரியசெயல்களெல்லா
ம் — நேயமிக்க - நேயமிக்குற்ற — மனத்தைநிறுத்தல்காண் - மனத்தையசை
வறநிறுத்துதற்காகும் — (ஆதலின்) வாயுநிற்க - உசுவாசமுதலியவையடங்
கியிக்க — மனமுமுடனிற்கும் - மனமுமொருங்கேநின்றுவிடும் — நோயநிற்
குறில் - நோய்நீர் நின்றுவிடின் — நிற்குந்தரும்பும் - அதன்மேலுள்ளதிர
ணமும்திரியாதுநிற்கும். எ - று. ஏ - அசை. அரியசெயலாவன இயமமு
தலியவைகளை. பிரியத்திற்கேயங்காந்துநிற்றலின் நேயமிக்கமனமென்
றார். வாயுநிற்க மனமுமுடனிற்குமென்றதனால் யோகாநுஷ்டானமென
ப்பெறும். (௬௬)

ஓடு மாவை நிறுத்துறி னுள்ளுறக்
கோடும் வாய்க்க லினத்தினைக் கொள்ளுவார்
நீடு மாமன நிற்க நிறுத்துறில்
ஓடும் வாயுவை யுள்ளுற வீர்ப்பரால்.

(இ - ள்.) ஓடுமாவை - விரைவினோடுங்குதிரையை — நிறுத்துறின் — நி
றுத்தக்கருதின் — உள்ளுறக்கோடும் - உள்ளேகொண்டிருக்கும் — வாய்க்
கலினத்தினை - வாயிலுள்ளகடிவாளத்தை — கொள்ளுவார் - இழுப்பார் -
(அதுபோல) நீடு - புலங்களிலோடி நின்ற — மாமனநிற்க - பெரிதா
னமனநிற்கும்படி — நிறுத்துறில் - நிறுத்தக்கருதில் — ஓடும்வாயுவை - ஓடி
த்திரியும் பிராணவாயுக்களை — உள்ளுறவீர்ப்பர் - உள்ளேபந்தனம்
பண்ணுவர். எ - று. ஆல் - அசை. மனநிற்கவென்பது தன்வினை. நிறு
த்துறிலென்பது பிறவினை. (௬௭)

அடுத்த நாடிக ளாங்கொரு மூன்றினும்
விடுத்து வாங்கி மேவ நிறுத்தியும்
தடுத்தும் வாயுவைத் தன்வச மாக்கில்வாய்
மடுத்தி டாது மனமும் வசப்படும்.

(இ - ள்.) அடுத்த - பிறவிக்கியலாகவடுத்த — நாடிகளாங்கொருமூன்றி
னும் - நாடிகள்மூன்றையும் — விடுத்துவாங்கியும் - விட்டுவாங்கியும் — மே
வநிறுத்தியும் - பொருந்தவசைவறநிறுத்தியும் — தடுத்தும் - அதனிடத்

தின்வழி போகாதுதடுத்தும் — வாயுவை - பிராணவாயுவை — தன்வசமா
க்கில் - தன்வயப்படுத்தின் — வாய்மடுத்திடாது - மாறாது — மனமும்வச
ப்படும் - பகைப்பற்றுமனமுந் தன்வயப்படும். எ - று. நாடிகள் மூன்
றுவன இடகலை பிங்கலை சுழிமுனைகளை. விடுத்தல் வாங்கல் நிறுத்தல்
தடுத்தல் இவைசாதனங்களின்மேனின்றன. விடுத்து வாங்கி நிறுத்தித்
தடுத்து வாயுவைத் தன்வயமாக்கில் மனம் வசப்படுமெனமுடிக்க. மனம்
என்பதிலும்மை இறந்தது தழீஇயது. மூன்றினும் என்பதிலும்மைமுற்று.

ஓடும் பொன்னு முறவும் பகையுமோர்
கேடுஞ் செல்வமுங் கீர்த்தி நிந்தையும்
வீடுங் கானமும் வேற்ற நோக்குதல்
கூடுந் தன்மை கொளுமன நன்மனம்.

(இ - ள்.) ஓடும்பொன்னும் - ஓட்டையும் பொன்னையும் — உறவும்ப
கையும் - உறவையும் பகையையும் — ஓர்கேடுஞ்செல்வமும் - ஒப்பற்ற
வறுமையையுஞ் செல்வத்தையும் — கீர்த்திநிந்தையும் - கீர்த்தியையு
மபகீர்த்தியையும் — வீடுங்கானமும் - வீட்டையும் காட்டையும் — வேற்ற
நோக்குதல் - வேற்றுமையின்றிக்காண்டல் — கூடுந்தன்மை - இசையுந்த
ன்மையை — கொளுமனம் - ஏற்றுக்கொண்டமனமே — நன்மனம் - நல்ல
மனமெனப்படும். எ - று. உடன்பாடும் எதிர்மறையுமாநிற்குமிவைக
ளில் பேதியாது நிற்குமனமே நல்லமனமெனப்படுமென்க. (௬௮)

மன்னு காம வெகுளி மயக்கமென்
றின்ன கூடி யெறிவளி முற்கடா
என்ன வாடு மியல்மனந் தீமனம்
தன்னை யாருந் தடுக்கத் தகாதரோ.

(இ - ள்.) மன்னு - நிலைபெற்ற — காமவெகுளிமயக்கமென்று - காமவெ
குளிமயக்கமெனக்கூறும் — இன்னகூடி - இன்னநிலைகளோடுகூடி — எறி
வளிமுன் - அலைகாற்றின்முன்னின்ற — சுடரென்ன - தீபத்தைப்போல —
ஆடும் - அலைந்துகொண்டிருக்கும் — இயல்மனம் - இயல்பினையுடையமன
மே — தீமனம் - தீயமனமெனப்படும் — தன்னை - இங்ஙனமாயமனத்
தை — யாருந்தடுக்கத்தகாது - யாவராலுந் தடுத்தற்கொண்ணாது. எ - று.
அரோ - அசை. என்று சொல்லெச்சம். இன்னகுறிப்பு வினையாலணையும்
பெயர். என்ன உவமவுருபு. காமவெகுளி மயக்கமெனல் அபவாதமு

றை. மயக்கங் காமவெகுளியென்ல் அத்தியாரோபமுறை. இன்னகூடி ஆடும் இயல்மனம் இமனமெனமுடிக்க. (௨௦)

மறிந்தி டாது மனபவ னங்கடாம்
செறிந்த வாயிற் சிவமய மாகுமால்
அறிந்து வாயுவை யவ்வண மெய்தினேன்
இறந்தி டாத விலிங்கப் பிராணியாம்.

(இ - ள்.) மறிந்திடாது - மடங்காமல் — மனபவனங்கடாம் - மனமும் பிராணவாயுக்களும் — செறிந்தவாயின் - அடங்கிவிடுமாயின் — சிவமயமாகும் - சிவவடிவாகும் — அறிந்து - இன்னவாறறிந்து — வாயுவை - பிராணவாயுக்களை — அவ்வணமெய்தினேன் - அவ்வாறடக்கினேன் — இறந்திடாத - என்றுமழியாத — இலிங்கப்பிராணியாம் - இலிங்கப்பிராணியாவன். எ - று. ஆல் - அசை. இலிங்கப்பிராணியாதல் இலிங்கவடிவாவிளங்கல்; எனவே மனம்பலவாச்சிதைந்து நகற்றலின் அவற்றையடக்கல் சிவமயமாதலெனவும் பிராணபந்தனஞ்செய்யில் இலிங்கப்பிராணியாதலெனவும் பொருளமையப்பெற்றும். (௨௧)

இன்ன வாறு பலவு மியம்பினன்
அன்னை போலுமம் மல்லம தேசிகன்
தன்னை நேர்தரு சைவம் வளர்க்குமோர்
மன்ன னாகும் வசவனை நோக்கியே.

(இ - ள்.) இன்னவாறு - இந்தப்பிரகாரம் — பலவும் - அந்தரங்கமான பலவற்றையும் — இயம்பினன் - சொன்னான் — அன்னைபோலும் - தாய்போலுமிருக்கின்ற — நம்மல்லமதேசிகன் - நமதல்லமனாகியகுருமூர்த்தி — தன்னைநேர்தரு - தனக்குத்தானே யொத்திருக்கின்ற — சைவம்வளர்க்கும் - வீரசைவத்தைவளர்க்கின்ற — ஓர்மன்னனாகும் - ஒப்பற்றவரசனாகிய — வசவனைநோக்கி - வசவதேவனைப்பார்த்து. எ - று. ஏ - அசை. அல்லமதேசிகன் வசவனைநோக்கி இன்னவாறு பலவுமியம்பினனெனக் கூட்டிமுடிக்க. (௨௨)

நின்னை நோக்கவு நின்னை யிறைஞ்சவும்
நின்னை வாழ்த்தவு நின்மொழி கேட்கவும்
என்ன மாதவ மெய்தின வோவெனப்
பன்னி நாதற் பணிந்தனன் நந்தியே.

(இ - ள்.) நின்னைநோக்கவும் - நின்னைத்தரிசிக்கவும் — நின்னையிறைஞ்சவும் - உன்னைவணங்கவும் — நின்னைவாழ்த்தவும் - உன்னைத்துதிக்கவும் — நின்மொழிகேட்கவும் - உனதரியவசனங்களைக் கேட்கவும் — என்னமாதவம் - என்னமகத்தான தவங்கள் — எய்தினவோ - செய்யக்கிடந்தனவோ — எனப்பன்னி - என்றுசொல்லி — நந்தி - வசவண்ணதேவன் — நாதன் - அல்லமதேவனை — பணிந்தனன் - வணங்கினன். எ - று. நந்தி பன்னி பணிந்தனன் எனமுடிக்க. ஏ - ஈற்றசை. (௨௩)

சித்த ராமனுஞ் சென்ன வசவனும்
முத்த னுமருண மாச்சன் முதலிய
பத்த ராகும் பலருமென் புன்றலை
வைத்த நாதன் மலரடி வாழ்த்தினார்.

(இ - ள்.) சித்தராமனும் - சித்தராமரென்பவரும் — சென்னவசவனும் - சென்னவசவரென்பவரும் — முத்தனும் - எல்லாஞ் செய்துமுடிந்தவனாகிய — மருணமாச்சன்முதலிய - மருணமாச்சன்முதலாகிய — பத்தராகும்பலரும் - அன்பர்களாகியபலரும் — என்புன்றலைவைத்த - எனதுபுல்லியதலைமேல்வைத்த — நாதன் - அல்லமனது — மலரடி - தாமரைமலர்போன்றபாதங்களை — வாழ்த்தினர் - துதித்தார்கள். எ - று. பலரும்வாழ்த்தினரெனமுடிக்க. (௨௪)

ஆன காலையி லல்லம னாகிய
ஞான வாரி நடந்துல கெங்கணும்
ஏனை மாதவர்க் கின்ப மளிக்குவல்
யானென் றுளத் தெண்ணின னென்பவே.

(இ - ள்.) ஆனகாலையில் - அவ்வாறானகாலத்தில் — அல்லமனாகிய - அல்லமனென்றுசொல்லப்பட்ட — ஞானவாரி - ஞானவெள்ளம் — உலகெங்கணுநடந்து - உலகமுழுவதும்போய் — ஏனைமாதவர்க்கு - மற்றையடியார்களுக்கு — யான் - நான் — இன்பமளிக்குவல் - பேரின்பந்தருவேனென்று — உளத்தெண்ணினன் - மனத்தினினைத்தனன் — என்ப - என்றறிஞர்கூறுவர். எ - று. ஏ - அசை. அல்லமனாகிய ஞானவாரி உருவகம். ()

சாதகாங்ககதி - முற்றிற்று.

ஆ. கதி - கஅ - இ - விருத்தம் - அஅ.

***

பத்தொன்பதாவது

கோரக்கர்கதி.

வேறு.

வசவனை முதலா யுள்ள மாதவர் தமைய கன்று
பசுமதி தவழுஞ் சுவட்டுப் பருப்பத மலையை நண்ணிக்
குசைசுடு மறையோர் போற்றுங் கோரக்க னெனும்பேர்ச் சித்தன்
இசைவுற வுண்மை யெந்தை யியம்பிய வாறு சொல்வாம்.

(இ - ள்.) வசவனைமுதலாயுள்ள - வசவண்ணையரதியாகப் பெற்றுள்ள—மாதவர்தமையகன்று - மகத்தானதவத்தினரைவிட்டுநீங்கி —பசுமதிதவழ் - இளம்பிறைச் சந்திரன்தவழ்கின்ற —சுவடு - சிகரத்தையுடைய—பருப்பதமலையைநண்ணி - ஸ்ரீசயிலமாகிய மலையையடைந்து—குசைசுடு - தருப்பையையெரிக்கின்ற—மறையோர்போற்றும் - பிராமணர்களாற் றுதிக்கப்பெற்ற —கோரக்கனெனும்பேர் - கோரக்கனென்னும் பெயரையுடைய—சித்தன் - சித்தபுருஷன் —இசைவுற - ஐயமின்றியே—உண்மை - உண்மைநிலையை —எந்தை - எமதுகர்த்தனாகிய அல்லமன் —இயம்பியவாறு - தெரிவித்தவண்ணம் —சொல்வாம் - யாமெடுத்துச்சொல்லுவாம். எ - று. குசைசுடுதல் ; யாகம்வளர்த்தல். எந்தை அகன்று நண்ணி இயம்பியவாறு சொல்வாம் எனக்கூட்டி முடிக்க. பருப்பதமலை ; இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (க)

பொறிவழி செலாது நெஞ்சம் புனிதமாம் வகைபு கன்ற
நெறிமுறை வழாதி யற்றி நீவிரோ நீவிர் மிக்க
அறவரை யுலகிற் கண்டிங் கடையுமென் றுடையோர் கட்
கிறையவ னினிதி யம்பி யெழுந்துமின் னெனம றைந்தான்.

(இ - ள்.) பொறிவழிசெலாது - ஐம்பொறிவழிப்படாது—நெஞ்சம் - மனம்—புனிதமாம்வகை - பரிசுத்தமாதற் கியைந்தவகையை—புகன்ற - சொல்லிய —நெறிமுறைவழாது - வேதவிதிக்கிடுக்கணுறாது —இயற்றி -

திரிகரணமொத்துச்செய்து —நீவிர் - நீங்கள் —மின்மின்கள் - மிளிருங்கள்—மிக்கஅறவரை - மேலாயநெறிச் செல்வோரை—உலகிற்கண்டு - உலகத்திற்பார்த்து—இங்கடையுமென்று - இங்கேவருவோமென்று—உடையோர்கட்கு - அங்கிருந்தஅன்பர்களுக்கு—இறையவன் - அல்லமன்—இனிதியம்பி - இனியமொழியைச்சொல்லி—எழுந்து - எழுந்திருந்து—மின்னெனமறைந்தான் - மின்னலைப்போல மறைந்துவிட்டனன். எ - று. மின்கள் என்பது வந்தார்களென்றாற்போல விகுதிமேல் விகுதிபெற்றது. இனிது ; பண்படியாகப்பிறந்த பெயர். (உ)

கன்றின்வாய் முலைநெ கிழ்த்துக் கறவைவிட் டகன்ற தென்னச்
சென்றன னைய னென்று திசைதொறு நோக்கி மாழ்கி
வன்றழ லிழுது போல மனமுகக் கண்ணீர் மல்கி
நின்றனர் வசவ னாதி நிகரில்சற் பத்த ரெல்லாம்.

(இ - ள்.) கன்றின்வாய் - கன்றின்வாயிலுள்ள —முலைநெகிழ்த்து - தனதுமுலையைத்தளர்த்தி—கறவை - பசுவானது—விட்டகன்றதென்ன - தானின்றவிடம் விட்டகன்றதுபோல—சென்றனனையனென்று - அல்லமன்போய்விட்டானென்று —திசைதொறுநோக்கி - திக்குகடோறும் பார்த்து—மாழ்கி - மயங்கி—வன்றழல் - கொடியஅக்கினியிற்பட்ட—இழுதுபோல - வெண்ணெய்போல்—மனமுக - மனநெக்குருக—கண்ணீர் மல்கி - கண்ணீர்பெருகி—வசவனாதி - வசவண்ணன்முதலாகிய—நிகரில் - ஒப்பில்லாத—சற்பத்தரெல்லாம் - உண்மையடியார்களனைவரும்—நின்றனர் - அழுதுநின்றனர். எ - று. சற்பத்தரெல்லாம் நோக்கி மாழ்கி கண்ணீர்மல்கி நின்றனரெனக் கூட்டிமுடிக்க. (௩)

காணுத லொழிக நல்லார்க் காணினங் கவர்பா னட்புப்
பேணுத லொழிக பேணிற் பிரிவுற லொழிக வுற்றால்
மாணுயி ருடம்பில் வாழும் வாழ்க்கைபோ யொழிக வென்று
ஊணொடு மொருதாய் நீத்த பார்ப்பென வுளங்கு லைந்தார்.

(இ - ள்.) காணுதலொழிகநல்லார் - நல்லோரைக்காணுதலை விட்டுவிடுக—காணின் - காணவிருப்புறின்—அங்கவர்பால் - அங்கேயவர்களிடத்தே—பேணில் - நட்புப்பேணுதலொழிக - விசுவாசம்வைத்தலை விட்டுவிடுக—பேணில் - விசுவாசங்கொள்ளில் —பிரிவுறலொழிக - விட்டுநீங்குதலொழிக—உற்றால் - பிரிவுறுதுன்றால்—மாணுயிர் - மாட்சிமைப்பட்டவுயிர்—உடம்பில்வாழும்வாழ்க்கை - உடம்போடுகூடி வாழும்வாழ்க்கையினின்

று—போயொழிக - பற்றுமலொழிக—என்று - என்றுசொல்லி—ஊணிடுமொருதாய் - உணவைக்கொடுக்கு மொப்பற்றதாய்—நித்தபார்ப்பெனநீக்கிவிட்ட குஞ்சுகளைப்போல —உளங்குலைந்தார் - மனவருத்தமுற்றார். எ - று. மானுயிருடம்பில்வாழும் வாழ்க்கைபோயொழிதலாவது ; தாமரையிலைநீர்போலும் ஓட்டோடுபெற்றுப் புளிக்கனிபோலும் உடம்போடுபற்றறிருத்தலையென்க ; எனவே அறிவே யுடலாயிருத்தலெனப் பெற்றும். (௭)

தண்டநா யகன்க ரத்திற் றம்பிரான் றன்னைக் கண்டு
பண்டுபோ லுவகை பூத்துப் பத்திசெய் தாங்கி ருந்தான்
தொண்டரு கியசி ராமன் சொன்னலா புரத்தி னெஞ்சிற்
கொண்டவா ரியனை யேகிக் கொடுவழி தப்பி நின்றான்.

(இ - ள்.) தண்டநாயகன் - வசவண்ணன் —கரத்தில் - தனதுள்ளங்கையில்—தம்பிரான்றன்னைக்கண்டு - இஷ்டலிங்கத்தைக்கண்டு —பண்டுபோல் - முன்போலவே—உவகைபூத்து - மிக்கவன்புகொண்டு—பத்திசெய்து - பூசித்து—ஆங்கிருந்தான் - அவ்விடத்திருந்தனன் —தொண்டருகியசிராமன் - அல்லமனுக்குத் தொண்டனுயிருந்த சித்தராமன்—சொன்னலாபுரத்தில் - சொன்னலாபுரமென்னும்பதியில்—நெஞ்சிற்கொண்ட - மனத்திற்பதித்த —ஆரியனை - அல்லமதேவனை—ஏகி - போய்—கொடுவழி - முன்தானின்ற கொடுவழிகளினின்றும் —தப்பிநின்றான் - விலகித்தன்னிலையினின்றனன். எ - று. நெஞ்சிற்கொண்ட வாரியனையேகலாவது ; அல்லமன்விளக்கிய விளக்கமாகநிற்றலையும்; கொடுவழிதப்பிநிற்றலாவது ; இவ்விளக்கத்துக்குமாறுகாது நிற்றலையுமெனக் கொண்டாம். (௮)

அல்லம னுரைத்த மாற்ற மகங்கொடு பிறருந் தாஞ்செய்
நல்லன புரிந்து தத்த மிடந்தொறு நணுகி வாழ்ந்தார்
தொல்லைநல் வினையாற் றன்னைத் தொழப்பெறு மடியர் தம்பாற்
செல்லுவ னென்று சென்றான் செயலினித் தெரிக்க லுற்றாம்.

(இ - ள்.) அல்லமனுரைத்தமாற்றம் - அல்லமனுபதேசித்த வுயர்நிலைமொழிகளை—அகங்கொடு - உளத்திலவிடாதுகொண்டு—பிறரும் - ஏனையோரும்—தாம்செய் - தாங்கள்செய்துகொண்டிருந்த—நல்லனபுரிந்து - சற்கிருத்தியங்களைச்செய்து—தத்தமிடந்தொறுநணுகி - தங்கள் தங்களிடங்களிற்சென்று—வாழ்ந்தார் - வாழ்ந்திருந்தனர் —தொல்லைநல்வினையா

கியைந்த—ஞானமேவலால் - அறிவையடைதலால் —காமவின்பந்தனை - காமவின்பத்தை—நன்னாள் - அடைந்திலள்—தான் - தான்—நல் - நல்ல—ஆதரவால் - அன்பினுல்—தனைத்தழுவி - தன்னைத்தான்றழுவி—இன்புறுநர் - அதற்கியைந்தவின்பநுகர்வோர் —எனைமாந்தருள் - எனையமனிதருள்—உளர்கொலோ - உண்டோ—இருந்தார் - அவ்விடத்திருந்தவர்கள்—என்றனர் - என்றுசொல்லினர். எ - று. தானென்னுநிலையையன்றி அன்னியமெனல்சற்றுமில்லை யெனத்துணிபுறச்செய்யு நிச்சயஞானத்தை இவளடைந்திருத்தலால் அயலின்பமாக இவளையெய்துவதென்னு மென்பார், தானலாலொருபொருளில்லை சகமெனவென்னுஞான மேவலாற்காமவின்பந்தனை நன்னாளெனவும், சகமுதலியவனைத்துந் தோன்றி விளங்கி யழிதற் குபாதானமாகநிற்றலன்றித் தானமாகவுநிற்பது அறிவாகிய தன்னைத்தவிரச் சோதனைமுகத்தால் வேறின்றெனத் தெளிந்தார் தன்னைத்தழுவி யின்புறுதற்குத்தக்கோர் எனைய ரரியரெனக்காட்டத் தானலர்தரவாற்றனைத் தழுவியின்புறுநரெனைமாந்தருளார்கொலோ வெனவுங்கூறினார். எனவே ; தன்மருளே சகமெனவுந் தன்றெருளே சிவமெனவு முணர்தற்பாலது அறிவெனப்பெற்றும். உளர்கொலோவென்பதி லோகாரம் எதிர்மறை. தானெனவையன்றி அறிவும், அறிவையன்றி அறியாமையும், அறியாமையன்றிச் சகமும், இன்றெனத்தெளிவிக்கற்பாலதுசாவிரஞானமெனக் கண்டாம். (௯)

இன்று காமனை வென்றவ ளினையளா யிழையோ
டொன்று மேனிய னுதிக்கண னுதலொருவன்
வென்று ளானென வுலகினி லெடுத்தசொன் மெய்ம்மை
யன்று போலுமென் றியம்பினர் சிலரவ ணமர்ந்தோர்.

(இ - ள்.) இன்று - இப்போது—காமனைவென்றவள் - மன்மதனைவென்றவள்—இனையள் - இத்தகையினளாகிய இவளொருத்தி —ஆயிழையோடு - சிறந்தவாபரணமணிந்தவுமையவளோடு —ஒன்று - அர்த்தபாகமாகப்பொருந்திய—மேனியனுகிய - திருமேனியையுடையானுகிய —கண்ணுதலொருவன் - நெற்றிக்கண்ணையுடையபரமசிவனொருவன்—வென்றுளானென - செயித்தவனென்று —உலகினில் - உலகின்கண்—எடுத்தசொல் - யாவருந்துணிந்தெடுத்தமொழி—மெய்ம்மையன்றுபோலும் - மெய்ம்மையல்லபோலும்—என்றியம்பினர் - என்றுசொன்னார்கள்—அவணமர்ந்தோர் - அவ்விடத்திருந்தோர்களில் —சிலர் - சிலபெயர். எ - று. இன்றுகாமனைவென்றவளிவள் அன்றுகாமனைவென்றவன் பரன் இது

மெய்ம்மையல்லவாவென்பார், மெய்ம்மையன்றுபோலுமென்றார். ஆயிழை யோடொன்றுமேனியனாகிய கண்ணுதலொருவன் அன்றுகாமனைவென்றானென்னக்கூட்டிமுடிக்க. இதனால் உலகின்வெளித்தசொல்மெய்ம்மை போலுமென்றிசைக்கினும் பெரும்பாலும் பொருந்தும். ஆயிழை வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. (௧0)

உடல மானமற் றிவளென வினைத்தையு மொருங்கு
விடவ லார்க்கலா விளமையுஞ் செல்வமும் விரும்பி
நடலை வாழ்வினில் வெறுப்புறாப் புல்லிய நரர்க்குத்
தொடரு மாவினை தொலையுமோ வெனச்சிலர் சொன்னார்.

(இ - ள்.) உடலமானம் - தேகாபிமானம்—அற்றிவளென - அற்றிருக்கின்றவிவளைப்போல—வினைத்தையும் - இருவினைப்பற்றையும்—ஒருங்கு-ஒருமிக்க—விடவலார்க்கலால் - விடவல்லுயோர்க்கன்றி—இளமையும் - இளமைப்பருவத்தையும்—செல்வமும் - மிக்கபாக்கியத்தையும்—விரும்பி - அபிமானப்பலவாகவிச்சித்து—நடலைவாழ்வினில் - வஞ்சகமான வாழ்வினில்—வெறுப்புறா - இயற்கையில்வெறுப்புவராத—புல்லியநரர்க்கு - அற்பபுத்தியுடையமனிதர்க்கு—தொடரும் - தொன்றுதொட்டுவிடாதுதொடருகின்ற—மாவினை - மகத்தாகியவிருவினைச்சம்பந்தம்—தொலையுமோ - ஒழியுமோ—என - என்று—சிலர்சொன்னார் - சிலபெயர்சொல்லினர். எ - று. எனவே இவள்தேகாபிமானமற்றவளாதலின் அருவினைத்தொடர்பாசம் இவளுக்கேயெனப்பெற்றாம். அற்றவிவளெனல் அற்றிவளென்றாயது புகழ்புரிந்இல்லிலோர்க் கென்றிருத்தல்போன்று ஈறு தொக்கப்பட்டது. நடலை துன்பமெனினுமமையும். (௧௧)

சென்று தேடிநாந் தத்துவ மருள்செயுந் தேட
ரன்றி ஞானதே சிகனுள னோவென வாய்ந்திட்
டின்று மேவுமா தேவிபோ லிலையென வெம்மா
னின்ற ஞானமு லந்தனை புணர்த்தவா ளிவளைந்தான்.

(இ - ள்.) நாம் - யாம்—தேடிச்சென்று - தேடிப்போய்—தத்துவம் - ஞானத்தை—அருள்செயும் - உபதேசிக்கத்தக்க—தேடரன்றி - தேடரெல்லாமல்—ஞானதேசிகன் - ஞானாசிரியன்—உளனோவென - இருக்கின்றானென்று—ஆய்ந்திட்டு - பலவிடத்துந்தேடியலைந்து—இன்று - இப்போது—மேவும் - இங்குவந்த—மாதேவிபோல் - மாதேவியென்பவளைப்

ஏற்றும் - சிவனேற்றுகின்றான்—என்னென்று - இஃதென்னவதியாய மென்று—இன்னற்கட் படிந்தனரே - துன்பத்தின்மூழ்கியல்லவா—அவ்விறைமலை - அந்தக்கைலையங்கிரி—விளர்த்தது - வெள்ளையாயது. எ - று. அம்மா - ஆசை, அல்லது வியப்புக்குறி. தரிசிக்கவந்தவர்களை யலைகளிலேற்றாது என்றலைமேல்மாத்திரஞ்சிவ னேற்றுகின்றானெ ன்றழுதழுது முகம்வெளுத்துப் போனதுபோலக் கைலையங்கிரியினது வெண்மைகாணப்படுகின்றதெனப் பொருள்கொள்க. இதுதற்குறிப்பேற்றவணி. சிலாதரன் மேருவை வில்லாகவுடைய சிவனென்பாருமுளர். ()

பரசிவ லிங்க மொன்று பருப்பதம் போற்ற ரிப்பத்
துரிசற வடைந்தே னில்லை யென்னுமச் சோகத் தீயால்
உருகுறு மமையத் தோடி யொருமலை குழைத்தா னன்றிக்
குருகமர் தளிரி யற்குக் குழைந்தவன் குழைக்கு மோதான்.

(இ - ள்.) பரசிவலிங்கம் - பரசிவலிங்கத்தோடு—ஒன்று - பொருந்திய—பருப்பதம்போல் - ஸ்ரீசைலம்போல—தரிப்ப - அவ்விலிங்கத்தையான்தரித்துக்கொள்ள—துரிசற - குற்றநீங்க—அடைந்தேனில்லை - அடைந்தேனில்லை—என்னும் - என்றுவருத்தப்படுதப்பாக்கியத்தையானடைந்தேனில்லை—என்னும் - என்கிற—அச்சோகத்தீயால் - அந்தச்சோகமென்னுமக்கினியால்—உருகும் - உருகும்—அமையத்து - சமயத்தில்—ஓடி - விரைவிலோடி—ஒருமலை - ஒருமலையைக்குழைத்தானன்றி - மேருவாகியமலையை வில்லாகவளைத்தானல்லாமல்—குருகமர் - வளையலணிந்த—தளிரியற்கு - தளிர்போன்றமெல்லியதன்மையுள்ளவுமையவளுக்கு—குழைந்தவன் - மனங்குழைந்துபோனசிவன்—கைலைமலைகுழைக்குமோ - என்னைவளைப்பனோ. எ - று. தான் - அசை. கைலைமலையானது இங்ஙனஞ்சொல்வதுபோலக் காணுந்தோற்றத்ததெனக்காட்டக்குறிப்பித்தாரென்க. உமையவளுக்குப் பரமன்மனங்குழைந்ததாவது; இராவணன் கைலையங்கிரியை யெடுப்பானசைக்க வதனாலுமையவள் வெருவி மனங்குழைய அதற்குச்சகியாமற் பரமன் இராவணனை நெருக்கி விறுகச்செய்தவிதமெனக். குழைக்குமோவென்பதில் ஓகாரம் எதிர்மறை. தளிரியல்; உவமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இருகுழமையும் வளைத்தற்கியைந்தபகுவம். (௧௨)

பொருப்பிறை மகனை னெற்குப் பெரநந்தது நீசனும்
நெருப்பனை யான்சார்ந் தாங்கு நிகழ்தொடர் மொழியி னன்றிப்

பருப்பத மெனவே கூறப் படுமிது வென்னு நாணால்
திரைப்பொலி கடலிற் சென்று வீழ்ந்தது சிலம்பொன் றம்மா.

(இ - ள்.) பொருப்பிறை - மலைகளுக்குத்தலைமையாகியமேருவின் — மகனுன் - புத்திரன்யான் — எற்கு - எனக்கு — பொருந்துறு - பொருப்பென்னும் பெயர்வாய்க்காமல் — நகனும் - நகனென்னும்பெயர் — நெருப்பனையான் - நெருப்புக்கொப்பாகியபரமசிவனைமாத்திரம் — சார்ந்தாங்கு - சார்ந்ததுபோல — நிகழ் - வழங்குகின்ற — தொடர்மொழியினன்றி - தொடர்மொழியினாலல்லாமல் — பருப்பதமெனவே - பர்வதமென்றே — கூறப்படும் - யாவராலும்வழங்கப்படும் — இதுவென்று — ஸ்ரீசைலமென்று — நாணால் - வெட்கத்தால் — திரைப்பொலி - அலைகணிறைந்த — கடலிற்சென்று - கடலிற்போய் — சிலம்பொன்று - மைநாகமென்னுமோர்மலை — வீழ்ந்தது - வீழ்ந்துவிட்டது. எ - று. அம்மா - அசை. மைநாகமென்னுமலை மேருவின்மகனுகிய எனக்குப் பருப்பத மென்னும் பெயர்வாராமல் சைலமலை, விந்தமலை பொதியமலை என்றூற்போல மைநாகமலை எனத்தொடர் மொழியினால் வந்தபெயருக்கு நாணத்திற்சகியாமல் கடலில்விழுந்ததாகக் கற்பித்தாரென்க. இஃது ஏதுவணி. நகனும் பிரமன்முதலியோர்க்குப் பொதுவாயினும் பரமசிவனையேசார்ந்தாற்போல, பர்வதமென்னுநாமம் எல்லாமலைக்குப்பொதுவாயினும் ஸ்ரீசைலத்துக்கே சார்தலின் பருப்பதமெனவே கூறப்படு மெனத் தேற்றேகாரந்தந்தார். நெருப்பனையானெனவல் செம்மை நிறங்காரணமாகவுவமித்தது.

(௧௨)

தன்னையோர் கையால் வீழப் பிலத்திடைத் தள்ளி வந்தோன்
சென்னியால் வணங்கி யேத்துஞ் சிலம்பினை விந்த மொக்கும்
என்னலா மென்ன லாமோ விணையறு பருப்ப தத்தைப்
பின்னுவார் திரையி விட்டுப் பெயர்ந்தபுன் மத்தோ வொக்கும்.

(இ - ள்) தன்னை - தன்னை — ஓர்கையால் - ஒரேகையினால் — பிலத்திடைவீழ - பாதாளத்தில்விழ — தள்ளிவந்தோன் - தள்ளிக்கொண்டுவந்த அகஸ்தியன் — சென்னியால் - தனதுசிரத்தினால் — வணங்கியேத்தும் - வணங்கித்துதிக்கத்தக்க — சிலம்பினை - ஸ்ரீசைலமலையை — விந்தம் - விந்தமலை — ஒக்குமென்னலாம் - தோற்றத்தாலொக்குமெனக்கூறலாம் — ஒக்குமென்னலாமோ - மகிமையாலொக்குமெனக்கூறலாமோ — இணையறு - ஒப்பில்லாத — பருப்பதத்தை - ஸ்ரீசைலத்தை — பின்னு - பின்னிக்கொண்டெழாநின்ற — வார் - நீண்ட — திரையிவிட்டு - அலைகளையுடைய சமுத்திரத்திற்போட்டு — பெயர்ந்த - கடைந்த — புன் - அற்பமாகிய — மத்தோ - மந்தரகிரியாகியமத்தோ — ஒக்கும் - ஒப்பெனப்படும். எ - று. இங்கே தன்னையென்றது விந்தமலையை. மத்தோவென்பதில் ஓகாரம் வினா. கர்வங்கொண்டதால் அகத்தியனால் பிலத்திடைத்தள்ளப்பட்டது. விந்தமலையெனல் ஐதிகம். மத்துப்போன்றதை மத்தெனல் உவமையாகுபெயர். தள்ளிவந்தோன் அகத்தியனென்க.

(௧௩)

நகைமதிப் பிள்ளை போல நரைத்தகூன் கிழவன் சென்றோர்
முகைமலர்ச் சுனையின் மூழ்கி முருகுகொப் புளிக்குந் தோட்டுப்
பகைமலர்க் குழன்ம டந்தை பகர்ந்தவோ ராணை காத்து
மகிழ்மனத் தன்ப னேபோல் வந்துமே லெழுவ னன்றே.

(இ - ள்.) நகை - பிரகாசம்பொருந்திய — மதிப்பிள்ளைபோல - மூன்றாம்பிறைபோல — நரைத்த - வெண்மையைக்கொண்ட — கூன்கிழவன் - கூனையுடையவோர்கிழவன் — சென்று - போய் — முகை - மொட்டுகள் — மலர் - மலர்கின்ற — ஓர்சுனையில்மூழ்கி - ஒருசுனையினிடத்தில்மூழ்கி — முருகு - தேன் — கொப்புளிக்கும் - பொங்குகின்ற — தோடு - இதழ்களையுடைய — பகை - நீர்ப்பூக்குப்பகையாகிய — மலர் - புஷ்பங்களையணிந்த — குழல் - கூந்தலையுடைய — மடந்தை - திருநீலகண்டனார்பத்தினியார் — பகர்ந்த - சொல்லிய — ஓராணைகாத்து - ஓராணையைவழுவாதுகாத்து — மகிழ் - களிக்கின்ற — மனத்து - மனத்தையுடைய — அன்பனேபோல் - திருநீலகண்டநாயனாரைப்போல — வந்துமேலெழுவன் - வந்துமேலெழுந்திருப்பன். எ - று. அன்று - ஏ - அசைகள். இந்த ஸ்ரீசைலச்சுனையில் மூழ்கி எழுந்திருப்போன் திருநீலகண்டனைப்போல் குமாரப்பருவமெய்துவனெனவே, மலையின்மகிமையைச் சிறப்பித்ததாகக்கண்டாம். நாயகனோடு ஊடியபின் கூந்தலிலம்மலரையணியாமையால்பகைமலர்க்குழல்மடந்தை யென்றுஉமையும் அன்பனெனலைத் திருநீலகண்டநாயனாரெனவும், மடந்தையெனலை அவர்பத்தினியாரெனவுங் கொண்டது; புராணசம்மதம். பகர்ந்தவோராணையாவது என்னைத்தொடாதை திருநீலகண்டமெனல்.

(௧௪)

சினைமலர் புதன்மென் போது செழும்புனற் பசுந்தாட் செந்தே
னனைமலர் தமது தண்பூ நனைணியீர்ங் கொடிகள் குன்றிச்
சுனைமலர் விழிகள் போலத் தோன்றும்ப் பாராக் குன்றிற்
புனைமலர் பலவுங் காட்டும் புரிகுழன் மகளிர் போலும்.

(இ - ள்.) சினைமலர் - சினைமலர்களும் — மெல் - மிருதுவாகிய — புதல்போது - குத்துச்செடிமலர்களும் — செழும்நனை - செழுமையாகிய சிறு அரும்புகளும் — பசுந்தேன் - பசியதன்மையுடைய — செந்தேனின் - சிவந்த தேனுடன்கூடினின்ற — மலர் - சீர்ப்பூக்களும் — (இவற்றோடு) தண்கொடிகட்டு - குளிர்ச்சிபொருந்திய பூங்கொடிகளுடைய — தண்பூ - குளிர்ந்த புட்பங்களும் — நல்வளி - சேர்ந்து — குண்டு - ஆழமாகிய — சுனைமலர் - சுனையிலுள்ள நீலோற்பலமலர்களும் — விழிகள்போலத்தோன்றும் - மாதர்களின் கண்போலத் தோன்றுகின்றன — பராரை - பருத்தவாரையையுடைய — அக்குன்றின் - அந்த ஸ்ரீசைலமலையில் — புனை - தரிக்கத்தக்க — மலர்பலவும் - புட்பங்களைத் தரும் — காட்டும் - மூடித்தக்காட்டுகின்ற — புரிகுழல் - சுருண்ட கூந்தலையுடைய — மகளிர்போலும் - ஸ்திரீகளைப்போலத் தோற்றும். எ - று. அம்மலை பல்வகைமலர்களையுமுடைமையினால் மலர்களணிந்த மகளிர்போலத் தோற்றுமென்பது; அம்மலையை வர்ணித்ததாகக் கொள்க. இதனால் ஸ்திரீகளுக்குப் பிரியமான மலர்களும் மணமுமிருப்பதும் இயல்பாதலின் மலர்களையும் அணிந்துகொண்ட தென்பது. (௪௫)

தூங்கிசை யருவி பாயத் தொளைக்கைவெண் கோட்டு நற்கா
லீர்ங்கவு ளெனேல யானை யேற்பவெந் தழல லாமற்
றேங்குதண் புனன்மே னோக்கா தெண்டிசை திரச் சென்று
பூங்கதிர் பனிவெண் டிங்கள் போன்றெனத் திவலை செய்யும்.

(இ - ள்.) தூங்கிசை - தூங்கென்னுமிசையோடு — அருவிபாய - மலைக்கண்ணுள்ள அருவிகள்விழ — தொளைக்கை - தும்பிக்கையையும் — வெண்கோடு - வெள்ளைத் தந்தங்களையும் — உரற்கால் - உரல்போன்றகால்களையும் — ஈர்ங்கவுள் - குளிர்ச்சிபொருந்திய கன்னத்தையுமுடைய — நெடுநல்யானை - நீண்டநல்ல காட்டானைகள் — ஏற்ப - அந்தஇயைக்கையினுலேந்த — வெந்தழலலாமல் - கொடியஅக்கினியேயல்லாமல் — தேங்கு - தேங்கிநிற்கும் — தண்புனல் - குளிர்ச்சிபொருந்தியசலம் — மேனோக்காது - மேற்செல்லாது — என்பது - என்றுகொள்ளுஞ் சித்தாந்தம் — திர - பூர்வபட்சமாக — சென்று - மேற்சென்று — பூங்கதிர் - அழகியகிரணங்களையுடைய சூரியனை — பனி - குளிர்ச்சிபொருந்திய — வெண்டிங்கள்போன்மென - வெண்டிங்கள்போன்றிருக்கின்றதென யாவருங்கூறும்படி — திவலைசெய்யும் - பூரணச்சந்திரனைப் போலச்செய்யும். எ - று. மேலிருந்தொழுகும் மலையருவியை யானை கையிலேந்தவர்தகிர் தருக்க சாத்திரத்துக்குமாருக மேற்சென்று திவலைகளாகச் சிதறுவதால் பூரணசந்திரனைப்போலுஞ் சூரியன் என்பதெடு

த்துக்காட்டுவனையணி. தொளைக்கை யானைக்கன்றி யின்மையின் தும்பிக்கையென்றும். பாய ஏற்ப சென்று திவலைசெய்யுமெனக் கூட்டி முடிக்க. (௪௬)

விஞ்சைய ருளர்ந ரம்பின் வீணையா ழெழுமின் னோசை
குஞ்சர மனைய வென்றிக் குன்றவர் புறத்தி லென்றுந்
தஞ்செவி மடுத்துக் கேட்பார் தனிநிலை யோக முற்றோ
ரஞ்செவி நிறைய வுள்ளே யரியயா ழோசை கேட்பார்.

(இ - ள்.) விஞ்சையர் - வித்யாதரர்கள் — உளர் - வாசிக்கப்பெறுகின்ற — நரம்பின் - நரம்பினையுடைய — வீணையாழ் - பெரியவீணையிலும் யாழிலுமிருந்து — எழும் - தொனிக்கின்ற — இன்னோசை - இனியவோசையை — குஞ்சரமனைய - யானைபோன்ற — வென்றிக்குன்றவர் - வெற்றிபொருந்தியமலைக்குறவர் — புறத்தில் - புறம்பினின்று — என்றும் - எப்போதும் — தஞ்செவி - தமதுசெவிகளால் — மடுத்து - பருகல்போற்சாய்த்து — கேட்பார் - இனிதாகக்கேட்பார்கள் — தனிநிலை - தனியாகநிலைத்த நிலையுடைய — யோகமுற்றோர் — யோகத்தையுடையோர் - அஞ்செவிநிறைய - செவிக்குணிறைய — உள்ளே - தமக்குளெழும் — அரியயாழ் - அரியயாழ் போன்ற — ஓசைகேட்பார் - ஓசைகளையினிதாகக் கேட்பார். எ - று. மலைக்குறவர்கள் விஞ்சையர் வீணையாழோசையையும் யோகிகள் தமக்குள்ளெழும் யோகத்தொனிகளையுங் கேட்பரெனவே, அங்குள்ளாரின் மேன்மையைக் காட்டப்பெற்றும். அகஞ்செவியெனல் அஞ்செவியென்றாயது விகாரம். வீணையாழ் உவமைத்தொகை. (௪௭)

பீடுறு கருவி னோடு பெயரிய வில்லி னும்ப
ரோடுறு பசும்பொ னூற்செய் தோங்குறு சிகர மொன்று
நீடுறு நிலாத ரன்ற னெடுந்தவப் பின்னைக் குன்றின்
மோடுறு முடியின் மீது கவிழ்த்தபொன் முடியை யொக்கும்.

(இ - ள்.) பீடுறு - பெருமைபொருந்திய — கருவினோடு - கர்ப்பத்தோடும் — பெயரிய - பெயர்பெற்றிருக்கின்ற — இல்லின் - கிரகத்தின் — உம்பர் - மேலே — ஓடுறு - உருகியோடத்தக்க — பசும்பொனூற்செய்து - பசியபொன்னூற்செய்யப்பட்டு — ஓங்குறு - மேலோங்கின்ற — சிகரமொன்று - ஒர்முடியானது — நீடுறு - மேலோங்கிய — நிலாதரன்றன் - நிலாதரனென்பவனுடைய — நெடுந்தவம் - மிக்கதவத்தாற்செனித்த — பின்னைக்

குன்றின் - பின்னைக்குன்றென்னுஞ் ஸ்ரீசைலமலையின்—மோடுறு-மேலாக வோங்கிய—முடியின்மீது - சிகரத்தின்மேல்—கவித்த-தரித்த—பொன்முடியை - பொன்னினாற்செய்தமுடியை—ஒக்கும் - ஒத்திருக்கும். எ-று. சிகரமொன்று முடியையொக்குமெனக் கூட்டிப்பொருள்கொள்க. கருவிறேறுபெயரிய இல்லென்பது கர்ப்பக்கிரகமெனப் பொருடாநின்றது. பெயரிய - குறிப்புப்பெயரெச்சம். (௧௮)

செங்கதி ரவனெ ழுந்த திவாவிடைக் குடம்பை தெற்றிப்
பொங்கொளி மரத்திற் சீர்சால் புள்ளினம் பொறையு யிர்த்துக்
கங்குலி னடைகி டப்பக் கருதிவந் ததனைக் கண்டு
வெங்கனல் கொளுந்திற் றென்று மிமிசைச் சுழன்றி ரங்கும்

(இ - ள்.) செங்கதிரவன் - சூரியன்—எழுந்த - தோன்றிய—திவாவிடை - பகற்காலத்தில்—குடம்பைதெற்றி - கூண்டமைபின்னி—பொங்கொளிமரத்தில் - சோதிமரத்தில்—சீர்சால் - சிறப்பமைந்த—புள்ளினம் - பட்சிக்கூட்டங்கள்—பொறையுயிர்த்து - முட்டையிட்டு - கங்குலின் - இராக்காலத்தில்—அடைகிடப்ப - அவயங்காக்க—கருதிவந்து - நினைத்துவந்து—அதனைக்கண்டு - அம்மரத்தைக்கண்டு—வெங்கனல்கொளுந்திற்றென்று - தீப்பற்றிக்கொண்டதென்று—மிமிசை - மேலே—சுழன்று - சுற்றிவந்து—இரங்கும் - வருந்தும். எ - று. சோதிமரமென் றதெரியாது அம்மரத்தில் புள்ளினம், பகலிற் குடம்பைதெற்றி பொறையுயிர்த்து இரவில் அடைகிடக்க வந்துழி அம்மரம் நெருப்புப்பற்றியது போற்காண்டலின், வெருவி மிமிசைச் சுழன்றிரங்குமெனக்கூட்டிப் பொருள்கொள்க. சோதிமரமெனல் ஓர்வகை ஒளியுள்ளமரம். தானேபற்றி யெரிவதாகக்காண்டலின் வெங்கனல் கொளுந்திற்று எனத் தன்வினையாக்கிய தென்க. (௧௯)

நறுமலர்க் குழல்வெண் முத்த நகையுமை மடந்தைக் கிக்க
அறம்வளர்ப் பதற்கு நெற்சிற் றளவிரு நாழி யென்று
கறையிடற் றிறைய ளப்ப வொருபெருங் கருவி தானிவ்
வெறிமலர்க் குடுமிக் குன்றின் வேய்களு ளொன்றிற் பெற்றான்.

(இ - ள்.) நறுமலர் - மணமுள்ளமலர்களையணிந்த—குழல் - கூந்தலையுமுடைய—வெண்முத்தம் - வெண்மையாகியமுத்தையொத்த—நகை - பற்களையுமுடைய—உமை - பார்வதியாகிய—மடந்தைக்கு - மகளாகியவுமையவ

ள்—மிக்கவறம்வளர்ப்பிதற்கு - மேலாகியமுப்பத்திரண்டறம்வளர்ப்பதற்கு—நெல் - நெல்லை—கறையிடற்று - விஷந்தங்கியகண்டத்தையுடைய—இறை - பரமசிவன்—அளப்ப - அளப்பதற்கு—இருநாழி - இரண்டுபடி—சிற்றளவென்று - குறைந்தவளவினதென்று—ஒருபெருங் கருவிதான் - ஒருபெரியபடியாக—இ - இந்த—வெறி - வாசனைபொருந்திய—மலர் - புட்பங்கணிறைந்த—குடுமி - சிகரத்தையுடைய—குன்றின் - மலையிலுள்ள—வேய்களுள் - மூங்கில்களுள்—ஒன்றில் - ஒருமரத்தில்—பெற்றான் - அடைந்தான். எ - று. உமையவள் அறம்வளர்க்கப்படிசிறியதென்று இந்தச் ஸ்ரீசைலமலையில் ஒருபெரிய மூங்கிற்படிசம்பாதித்தான் எனப்பொருள் கொள்க. (௨௰)

நெடியவன் குறுகி யப்பா னின்றுகை தொழுமவ் வெற்பின்
மிடியுடை யொருவன் விற்கும் விறகினைக் குறித்துச் சென்று
வடியுடை நவியங் கொண்டோர் மரத்தினைத் துணித்த லோடும்
படியுறு பசும்பொ னுரும் பரிசுகொண் டுவந்து செல்வான்.

(இ - ள்.) நெடியவன் - விஷ்ணு—குறுகி - வந்து—அப்பானின்று - ஆரத்தினின்று—கைதொழுமவ்வெற்பில்-வணங்கத்தக்கவந்தச் ஸ்ரீசைலமலையில்—மிடியுடையொருவன் - ஒருதரித்திரன்—விற்கும்விறகினைக் குறித்து - விற்கின்றவிறகுக்காக—சென்று - போய்—வடியுடை - கூர்மையுடைய—நவியங்கொண்டு - கோடாரியினால்—ஓர்மரத்தினைத் துணித்தலோடும் - ஒருமரத்தைவெட்டவும்—படியுறு - நல்லுருவமுள்ள—பசும்பொனுரும்பரிசுகண்டு - பசும்பொன்னுருவிருத்தலைக்கண்டு—உவந்து - இன்புற்று—செல்வான் - தனதிடத்திற்குப் போய்விடுவான். எ - று. மிடியுடையொருவன் சென்று நவியங்கொண்டு ஓர்மரத்தினைத் துணிக்கப் பசும்பொனுருவிருத்தலைக்கண்டு வந்துசெல்வானெனக் கூட்டிமுடிக்க. இது வியப்புத்தற்குறிப்பணி. (௨௧)

கொண்டல்கண் முழவி னார்க்குங் கோதைவெள் ளருவி
வெற்பில், வண்டுபாண் முரன்று சூழி மலர்தினைந் தாறு சேந்
தே, தண்டுகள் மயில்பூங் கொடிப ருகுமாத் திவர்ந்தி ராசி,
கொண்டுகண டஞ்சி மந்தி குரோவென விழிபு மன்றே.

(இ - ள்.) கொண்டல்கள் - மேகங்கள்—முழவினார்க்கும் - பேரிகைபோற்சத்திக்கின்ற—கோதை - பூமாலைபோலொழுகுகின்ற—வெள்ளருவி - வெண்மையானவாறுகளையுடைய—வெற்பில் - மலையில்—வண்டு -

வன்றிகள் — பான்மூன்று - இராகம்பாடி — ஆதி - மொய்த்து — மலர்தி றந்து - மலர்களைக்கிண்டி. — சுரும் - அதனுலொழுகுகின்ற — செந்தேனுண்டு - சிவந்தநிறமுடைய கண்ணு — கண்ணியில் - உறங்குகின்ற — பூங்கொம்பர் - அழகியகிளைகளையுடைய — உயர்மரத்து - உயர்ந்தவிருட்சத்தில் — மந்தி - பெண்குரங்கு — இவர்ந்து - ஏறி — இராசிரெண்டு - கர்க்கடகவிராசியை — கண்டு - பார்த்து — அஞ்சி - பயந்து — ஒருசேவலொடு இட்டொன்று — இழியும் - இறங்கிவிடும். எ - று. அன்று. ஏ - அசைகள். மந்தியுயர்மரத்து இவர்ந்து கண்டு அஞ்சி இழியும் எனக்கூட்டிப்பொருள்கொள்க. (௨௨)

தளிர்க்குள மினைத்தேன் றோய்த்துத் தனதுவாய் கொடுக்
குஞ் செய்கை, பளிக்கறை யதனுட் கண்டு பரிந்தவே றொன்றி
னுக்கிங், களித்ததென் றுளம யங்கி யரும்பிடி யொருகூர்ங்
கோட்டுக், களிற்றினை முனிந்து செல்லுங் கம்பலை யுடைத்தக்
குன்றம்.

(இ - ள்.) தளிர்க்குளமினை - தளிராகியவுணவை — தேன்றோய்த்து - தேனிற்றோய்த்து — தனதுவாய்கொடுக்குஞ்செய்கை - தனதுவாயிற்கொடுக்குஞ்செயலை — அரும்பிடி - அரிதாகியபெண்யானை — பளிக்கறையதனுள் - பளிங்குக்கல்லறையாலியற்றியவறைக்குள் — கண்டு - பார்த்து — பரிந்து - சமீபமாயிருந்து — வேறொன்றினுக்கு - வேறோர்பெண்யானைக்கு — இங்களித்ததென்று - இங்கேகொடுத்ததென்று — உளமயங்கி - மனமருண்டு — கூர்ங்கோட்டு - கூர்மையாகியகொம்பையுடைய — ஒருகளிற்றினை - ஓராண்யானையை — முனிந்து - கோபித்து — செல்லும் - போகும்படியான — கம்பலையுடைத்து - ஆரவாரத்தையுடையது — அக்குன்றம் - அந்தஸ்ரீசைலமலை. எ - று. தனக்கு ஆண்யானை கொடுக்குமுணவின் செயலைப் பளிக்கறையிற் றோற்றக்கண்டு பரிந்து மயங்கி முனிந்து செல்லும் கம்பலையுடைத்து அக்குன்றம் எனக்கூட்டிப் பொருள்கொள்க. (௨௩)

நன்னுதல் மதியின் மானைப் பிடித்துநீ நல்கு கென்
று, வொண்ணுதன் மடந்தை வேண்ட வொருகுற மகன்கேட்
டன்று, பெண்ணுனை கொண்டி ராமன் பிடிப்பதற் கென்னு
மாபோ, லென்னவிவ் வினைமுடிக்க ளெய்வ வென்றுள்ள நைந்து
நிற்பான்.

(இ - ள்.) நன்னுதல் மதியின் - சந்திரனிடத்திலுள்ள — மானைப்பிடித்து நீ நல்குகென்று - மானைப்பிடித்துநீகொடுவென்று — ஒண்ணுதல் - அழகிய நெற்றியையுடைய — மடந்தைவேண்ட - ஓர்குறப்பெண் வேண்ட — ஒருகுறமகன்கேட்டு - ஓர்குறவன்கேட்டு — அன்று - முற்காலத்தில் — பெண்ணுனைகொண்டு - சீதையின்வார்த்தையைக்கேட்டு — இராமன் - இராமனை போல — என்னிலவ் - பிடிக்கவென்னைக்கொண்டு செய்வேனென்று - இந்தவிபரீதபுத்தியென்னைச் செய்வேனென்று — உள்ளநைந்து - மனம்வருந்தி — நிற்பான் - நிலைகலங்கிநிற்பான். எ - று. மதியின் மானைப்பிடித்துக் கொடுக்கும்படி தன் மடந்தை வேண்ட குறமகன் இராமனைப்போல் ... அவனுக்குப் பிடிக்கமாட்டாதென்று இடமின்றி நைந்து நிற்பான் எனப்பொருள்கொள்க. ()

மேருமந் தரமே யாகி வெற்பெலா மெனவெ றுப்பச்
சாருமென் மாட்டே முக்கட் டம்பிரா னெனநி னைந்து
சேருமொன் னலரை யஞ்சிச் சிலம்பழு மாறு போல
வாரவெள் ளருவி பாயு மழகினை யுடைத்து மாதோ.

(இ - ள்.) மேருமந்தரமேயாகி - மேருகிரியுமந்தரகிரியுமாகிய — வெற்பெலாம் - மலைகளெல்லாம் — முக்கட்டம்பிரான் - மூன்றுகண்களையுடையபரமசிவன் — சாருமென்மாட்டேயென - என்னிடத்தேதங்கியிருக்கிறுனென்று — நினைந்து - நினைத்து — எனவெறுப்பச்சேரும் - என்னை வெறுக்கும்படிசேருவதால் — ஒன்னலரையஞ்சி - இங்ஙனமாயசத்துருக்களுக்கஞ்சி — சிலம்பழுமாறுபோல - ஸ்ரீசைலமழுவதுபோல — ஆர - நிறைய — வெள் - வெண்மையாகிய — அருவிபாயும் - விடாதுமலையாறுகளொழுகிக்கொண்டிருக்கும் — அழகினையுடைத்து - அழகையுடையதாம். எ - று. மாது. ஓ - அசைகள். ஸ்ரீசைலமானது விடாதொழுகுமருவிகளையுடையது எங்ஙனம்போல்வதெனின், யான்மாத்திரம் பரமசிவனையுடையேனென்று மேருவாதிமலை என்னை வெறுப்பதால் அதற்குச்சகியேனென்று அழுதல்போன்றுள தெனப்பொருள் கொள்க. (௨௫)

இனையன வளமி குத்த வெந்திருச் சயிலத் தன்னை
யனையினு மினிய னெச்சோ னல்லமன் சென்று நண்ணித்
தனியுடல் சித்தி பெற்றுத் தருக்குமக் கோரக் கன்று
ளனியுள மகிழ்ந்தி ருக்கு நல்லிடத் தனைய டைந்தான்.

(இ - ள்.) இனையன - இத்தன்மையனவாகிய—வளம்பயிருந்த - வளப்பமிருந்த —எழிற்றிருச்சைலந்தன்னை - அழகியவெமதுசைலமலையை —அ னையினுமினியன் - தாயினுமிகப்பிரியமுள்ள—எங்கோனல்லமன் - எமது கர்த்தனுமியவல்லமதேவன்—சென்றுநண்ணி - போய்ச்சேர்ந்து—தனி - தனியாகவின்று —உடலந்திரிப்பெற்று - காயந்திரிப்பெற்று —தருக்கும் - செருக்கின்ற—அக்கோரக்கன்றுன் - அந்தக்கோரக்கனென்பவன்— களியுளமகிழ்ந்திருக்கும் - மிகவுமனமகிழ்ந்திருக்கின்ற —நல்லிடத்தினை யடைந்தான் - நல்லஇடத்தைநோக்கிச்சேர்ந்தான். எ - று. அல்லமன் சென்று நண்ணி அடைந்தானென்க்கூட்டிப்பொருள்கொள்க. (௨௬)

அத்தனோர் வருதல் கண்ணுற் றப்பெருஞ் சித்தன் றன்னே
டொத்தவோர் சித்த னுக வுன்னுபு தனிவி யந்து
சித்தனுண் மலர்த்தா டாழா நின்றுகை குவித்து ஞான
சித்தநீ வருக வென்றோர் தவிசிடைச் சேர்த்திச் சொல்வான்.

(இ - ள்.) அத்தன் - அல்லமதேவன்—சேர்வருதல்கண்ணுற்று - சேர்வருதலைப்பார்த்து—அப்பெருஞ்சித்தன் - அந்தப்பெரியசித்தனென்பவன்—தன்னோடொத்த - தனக்கொப்பாகிய—ஓர்சித்தனுகவுன்னுபு - ஒருசித்தனுகநினைத்து—தனிவியந்து - தன்னைத்தானேயதிசயித்து—சித்தன் - சித்தனுகியவல்லமனது —தாள் - அன்றலர்ந்த —மலர்த்தாள் - தாமரைமலர்போன்றபாதங்களை —தாழாநின்று - வணங்கிநின்று—கைகுவித்து - அஞ்சலிசெய்து—ஞானசித்த - ஞானசித்தனே —நீவருகவென்று - நீயெழுந்தருளுகவென்று—ஓர்தவிசிடைச்சேர்த்தி - ஓராசனத்திலுட்கா ரவைத்து—சொல்வான் - சொல்லுவன். எ - று. அப்பெருஞ்சித்தன் கண்ணுற்று உன்னுபு வியந்து தாழாநின்று கைகுவித்துச்சேர்த்திச்சொல்வானெனக் கூட்டிமுடிக்க. (௨௭)

வேறு.

இரவி வானவ னெழுந்தது மின்றெனக் கதா அன்று
தெரிவ வாயின கண்களு மின்றுநின் சிறந்த
வரவு நானெதி ரின்றுபெற் றனமையினின் வரவு
பொருவின் மாதவம் புரிந்திடார்க் கெளியதோ புகலின்.

(இ - ள்.) இரவிவானவன் - சூரியன்வந்தானேவெனில் —எழுந்தது மின்று - அவனெழுந்துவந்தது மில்லை—அதா அன்று - அதுவுமன்றி—

(ஒருவேளைவந்தால்) தெரிவவாயின - பார்த்தற்கிசைய்த கண்களோடு கூடியபோதெனில் —கண்களுமின்று - அங்ஙனமாயகண்களுமுண்டோவெனக்கில்லை —நின்சிறந்தவரவு - உனதுசிறந்தவருகையை —இன்று - இப்போது —எதிர் - பிரத்தியட்சத்தில் —நான்பெற்றனமையின் - நான் அடைந்ததால் —நின்வரவு - உனதுவருகை —பொருவில் - ஒப்பில்லாத —மாதவம்புரிந்திடார்க்கு - மகத்தானதவஞ்செய்யாதார்க்கு — புகலின் - இதைப்பற்றிப்பேசுமிடத்து —எளியதோ - எளிதில்லாய்க்கு மோ. எ - று. சூரியோதயமின்றுதானென்றும் அதைக்காணப்பெற்றகண்களுமின்றுதானென்று முறைகொள்ளினுமமையும். உனதுவரவை நோக்குமிடத்தில் சூரியன் இவ்விடத்தெழுந்தனனெனில், அவன்வானத்திருப்பதால் வந்ததும் இன்றெனவும், ஒருவேளையின் பார்க்கும்படியான கண்களுற்றனவெனில் அவைகளுமக்கில்லையெனவும், காணப்படுவதால் தோன்றுத் திறந்தவரவெனவும், அந்தவரவு வினையோர்க்கெளி தன்றாமையின் நின்வரவுபொருவின் மாதவம் புரிந்திடார்க் கெளிய தோவெனவும் கூறியவாறுகாண்க. அன்றியே, உன்னைக்காணுமிடத்துச் சூரியன்உதயமானதுபோற் காணப்படுவதாகப் பெறும். (௨௮)

மதலை யாகிய நற்குண ஞ் சார்ந்தநல் வாய்மை
சிதைவி லா வடி யாரினுஞ் சேர்ந்திடா தவனைக் கண்
இது தவி றுனையுஞ் சேர்ந்திடா னென்பவெத் தூநூ
முதலி லானெபெறு மூதியம் யாதுகொல் மொழியில்.

(இ - ள்.) மதலையாகிய - குழந்தைப்பருவத்துக்குரியதாகிய —நற்குணஞ்சார்ந்து - நற்குணங்களையடைந்து —நல்வாய்மை - நல்லவுண்மை— சிதைவிலா - மாறாத —அடியாரினுஞ்சேர்ந்திடாதவன் - அடியாரினத்தி லடைக்கலம்புகாதவன்—கண்ணுதலினுனையும் - பரமசிவனையும்—சேர்ந் திடான் - அடையான்—என்பவெத்தூலும் - என்றெந்தசாத்திரங்களுஞ் சொல்லுகின்றனவாம்—முதலிலான் - கையில் முதலில்லாதவன்—மொ ழியில் - அவனைப்பற்றிச்சொல்லுமிடத்தில்—பெறுமூதியம் - அடையுமி லாபம்—யாதுகொல் - யாதானுமுளதோ. எ - று. இவ்வுபமானம்; சிவ னடியார்களை அடைக்கலம் புகாவிடத்துச்சிவனைப்பூசித்தும் பயனின்றெ னக் காட்டற்கென்க. நன்கு தீதுபகுப்பின்மையின் மதலையாகியநற்குண ஞ்சார்ந்தென்றார், மதலைப்பருவத்தையன்றி நற்குணம் வேறின்மையின் மதலையாகியநற்குண மெனப்பட்டது. (௨௯)

ஒருவி ருந்தினர்க் குரைசெயு முகமனோ டொப்பக்
குருப ரன்றனக் கினையன வின்மொழி கூறி
வருபெ ருந்தகை யார்கொலி யுரைமினீ வாழ்த்தி
யருளி னங்கட னிணவிறுப் பின்றனன் மன்னோ.

(இ-ள்.) ஒருவிருந்தினர்க்கு - வந்தவொருவிருந்தாளிக்கு — உரை செயும் - சொல்லவேண்டிய — முகமனோடொப்ப - உபசாரவார்த்தைக் கொப்பாக — குருபரன்றனக்கு - குருவாகியவல்லமதேவனுக்கு — இனைய ன - இத்தன்மையவாகிய — இன்மொழிகூறி - இனியவசனங்களைச்சொ ல்லி — வரு - இவ்விடத்தில்வந்த — பெருந்தகை - பெருந்தன்மையையு டையோனே — யார்கொலி - நீயார் — உரைமின் - சொல்லென்று — வா ழ்த்தி - துதித்து — அருளினங்கடலை - அருளியிருப்பாசமுத்திரமாகிய சி வலிங்கமூர்த்தியைப்பார்த்து — விறுப்பின்றனன் - விறுவிநின்றனன். எ - று. அன்று - எ - அசைச்சொற்கள். பெருந்தகை; அன்மொழித்தொகை. (௩௦)

செறிந்த மூலவாய் காரத்தின் வெளிதனைத் திரத்திட
டிறந்தி டாதுதன் கண்டன னென்னையுங் காண்பான்
மறிந்து போமுடன் மாலினை யுரைப்பதென் மதித்தேன்
றறிந்த ஞானிகள் வேறுற வறிபவ னறைந்தான்.

(இ-ள்.) செறிந்த - ஆதாரநிரோட்டமிடமாகவந்த — மூலம் - பிரவிர்த் தியின் மூலகாரணமாகின்ற — ஆங்காரத்தின் - அகங்காரத்தினின்றும் — வெளிதனை - விலாசனையையென்று — திரத்திட - சோதனையாதிகளாற் றீர்வுசெய்யப்பெற்று — இறந்திடாது - யாதொன்றுக்குங்கலக்காது — தா ன்டவன் - தன்னைத்தரிசித்தவன் — என்னையுங்காண்பான் - அதனாலே யென்னையும் வேறுதக்காண்பான் — மறிந்துபோம் - சலித்துப்போது கியைவந்த — உடன்மாலினை - தேகாபிமானத்தை — மதித்து - நிர்பொரு ளாகமதித்து — உரைப்பதென்னென்று - உரைப்பதற்குக்காரணமென் னவென்று — அறிந்தஞானிகள் - உணர்ந்தஞானிகளே — வேறுற வறிப வன் - தானுமவரிபுமல்லவன் — அறைந்தான் - சொல்லினான். எ - று. மன் னையும் காண்பதிலுண்மை இறந்தொழிந்தழிதலையே வைக்கவும்மை. தற்காண்டவ ன்று; இவர்திரணது பிரதிபலனத்தாதுகைக்காண்டவே. அகங்காரத்தாலவ ளையின் மூலவாங்காரத்தின் வெளியைத்திரத்திட்டிறந்திடாதுதற்கண்ட வன்னென்றும். மறிந்துபோமுடன் மாலினை யுரைப்பதென் மதித்தென் றது; இவனைகதுதிப்பிக்காயதுது வென்க.

(௩௧)

ஆதி நாதனை யருளினாற் குளிகையா திகளான்
மேதை யாமுடல் சித்திபெற் றவனென்னும் விளியா
ஓதல வாலது பெறுதலை யறிபுமென் றறைந்தான்
பூத மேனியே தானெனப் பொருந்துபுத் தியினான்.

(இ-ள்.) ஆதிநாதனை - கடவுளின்னது — அருளினால் - திருவையிருளா ம் — குளிகையாதிகளால் - குளிகைமுதலியவைகளாலும் — மேதையாமு டல் - மாமிசமயமாகியவுடலை — சித்திபெற்றவன் - காயசித்திபெற்றவ ன் — என்னும் விளியான் - எப்போதுமிறவான் — ஆதலால் - ஆசையால் — அதுபெறுதலவன் - அந்தக்காயசித்திபெறுதவன் — அறியுமென்று - மரிப் பனென்று — அறைந்தான் - சொல்லினான் — (அவனுவெனில்) பூதமே னி - பஞ்சபூதகாரியதேகத்தையே — தானெனப்பொருந்து - தானாகவுண ர்ந்த — புத்தியினான் - விகற்பபுத்தியையுடையகோரக்கன். எ - று. என வே, காயசித்தியையே மோட்சமெனக்கருதினனெனப் பெற்றாம். (௩௨)

உடம்பு வாழ்தருஞ் வாழ்தது மூன்பொதிந் தியற்று
முடம்பு சாதருஞ் சாததுமாகவே யுரைத்தா
யுடம்பு தானுயி ரென்னநீ யுன்னினை போது
முடம்பு வேறறி யாவுல காயுத னொத்தாய்.

(இ-ள்.) உடம்புவாழ்தரும் - உடம்பழியின்றிவாழ்தல் — வாழ்தது ம் - காயசித்திபெற்றுவாழ்தலும் — மூன்பொதிந்தியற்றும் - மாயிசவிறை ந்திருக்கும்படிசெய்யும் — உடம்பு - தேகம் — சாதரும் - மரித்தல் — சாத லுமாகவே - காயசித்தியின்றிமரித்தலுமாகவே — உரைத்தாய் - சொல்லி னை — உடம்புதான் - உடம்பே — உயிரென்ன - உயிரென்று — நீயுன்னி னை போதும் - நீநினைத்ததுபோற்காண்கின்றது — (இதுயாதுபோல்வதெ னின்) உடம்புவேறறியா - தனக்குடம்புவேறென்றறியாத — உலகா யுதனொத்தாய் - உலகாயுதனுக்குச்சமானமாக. எ - று. நீ உடம்பேயுயி ரென்றதனால் உலகாயிதனுக்குவமையாயிற்று. (௩௩)

யாக்கை தானெனி லென்னுடம் பென்பதென் கென்னீர்
போக்கு மாடைபொன் முதலிய பொருளுமென் னுடைதன்
னூக்கு வார்தமி லதனையா னென்பவ ரய
பார்க்கில் யாருளர் பகர்தியென் றல்லமன் பகர.

(இ - ள்.) யாக்கைதானெனில் - தேகமேதானெனப்படுமாயின்—இங்கு - இவ்வுலகத்தில் —என்றுடலென்பது - என்றுடலென்று வழங்குவது—என்னை - என்னகாரணம்—போக்கும் - தன்னைவிட்டுநீக்கத்தக்க—ஆடைபொன்முதலிய - வஸ்திரம்பொன்முதலாகிய —பொருளுள் - பொருள்களுள்—ஒன்று - ஒருபொருளை —எனதென்று - என்னுடையதென்று—ஆக்குவார்தமில் - சுதந்தரித்துக்கொள்ளுபவர்களில்—அதனை - அப்பொருளை —யானெனப்படுமவரை - யானென்றுகூறத்தக்கவரை—பார்க்கில் - தேடிப்பார்க்கில்—யாருளர் - யாரிருக்கின்றனர்—பகர்கவென்று - சொல்லுகவென்று —அல்லமன்பகர - அல்லமதேவன்வினவ. எ - று. எனதெனப்படுவது இல்லைகளிழுறைகள் யானெனற்கியையின், உடலும் தானெனற்கியையும். அங்ஙனமநுபவம் இல்லாமைச் செதென்னை யென்றனனென்க. ஒன்றினைமுடித்தவென்பதனுள் தங்கிழமைவருவித்தாம். என்னை, யாருளர், என்பனவிரண்டும் குறிப்புவினைமுற்று. (௧௪)

யானினைந்தன னுடைனெ னென்றியம் புதலாற்
றனெனப்படு கின்றதே தெனக்கது தன்னை
நீநிகழ்த்துக வென்றுகோ ரக்கனின் றியம்ப
ஞான நற்குரு பரனிது நவின்றன னயந்து.

(இ - ள்.) யானினைந்தனனென்று - யானினைத்தேனென்றும் —உடலனென்று - யானுடலனென்றும்— இயம்புதலால் - வழுங்சொல்லுகின்றமையால்—(அப்போது) தானெனப்படுகின்றதேது - தானென வழங்கப்படுகின்றதியாது —எனக்கதுதன்னை - எனக்கவ்வயத்தை —நீநிகழ்த்துகவென்று - நீதெளிவிக்கவேண்டுமென்று —கோரக்கனின்றியம்ப - தோரக்கனின்றுவினவ—ஞானநற்குருபரன் - அதற்குஞானதேசிகனுகியவல்லமன்—நயந்து - விரும்பி —இதுநவின்றனன் - இதனைச்சொல்லினன். எ - று. நினைத்தல் காரணமும், உடைதல் தேகமும்பற்றிவினைவினையொடு முதலொடுஞ்செறியமொன்னும்வழியால், யானினைந்தனன், யானுடலனென் எனவழங்கல் அத்தியாசமெனக் குறிப்பிக்கச் சான்றோர் வழங்கிவருவதை விவஞ்ஞானாமல் இங்ஙனங்கேட்டனனெனக. என்றனை இருவயிலுமொட்டிக. (௧௫)

நானினைந்தன னெனல்கா ரணத்தினை யன்று
மான தன்மையா லுடல்பொறி கரணங்க ளனைத்து

நானெ னும்படி வருமவராத் தான்பல வதனு
லீங வின்றதத் தியாசமென் றறிகென நிகழ்த்த.

(இ - ள்.) நானினைந்தனனெனல் - நானினைத்தேனெனக்கூறுதல்—காரணத்தினை - அந்தக்காரணப்புடைபெயர்ச்சியில்—அன்றும் - பொருந்தும்—ஆனதன்மையான் - ஆகிவழங்குந்தன்மையால்—உடல் - தேகமும்—பொறி - ஐம்பொறியும் —கரணங்கள் - அந்தக்கரணங்களுமாகிய—அனைத்தும் - இவையாவும் —நானெனும்படிவரும் - நானென்றுகூறும்படிவழங்கிவரும்—வா - அங்ஙனம்வழங்கிவா—தான் - தானென்பது—பல - பலவாகக்காணும் —அதனுல் - அக்காரணத்தால் —ஈங்கவின்றது - ஈங்குசொல்லியது—அத்தியாசமென்று - கற்பனையென்று—அறிகென - அறியக்கடவாயென்று—நிகழ்த்த - அல்லமன்கூற. எ - று. நானினைந்தனனெனல் காரணத்தினைநன்றுமெனவே, யானுடலனெனல் உடலினும், யான்பார்த்தனனெனல் பொறியினும், யானினைந்தனனெனல் கரணத்தினும், நன்றுமெனற்கையமின்றென்பார்; அனைத்தும் நானெனும்படிவருமெனவும், அனைத்தும்தானன்றேனும் தான்பலவாகவழங்கிவருதல்பற்றித் தான்பலவெனவும், இங்ஙனம்வழங்கிவருவது ஒன்றின்புடைபெயர்ச்சியொன்றுக்காதலால் அத்தியாசமெனவும் கூறியதாகக்கொள்டாம். அத்தியாசமெனப் பொதுப்படக்கூறினும், உடல்பொறிகரணமென்றதனுல் மித்தையாத்தியாசம், இதராத்தியாசம், இதராதராத்தியாசம் எனக் கொள்டாம். துலருக்கும காரணங்களாகிய வுபாதித்திரியங்களே அத்தியாசமாய்விடத்து அவற்றின் புடைபெயர்ச்சிகள் யாதாகவேண்டும், வே [illegible] னும். இதனைமறு றுகூறற்கிடமின்மையின் [illegible] ப்பார் [illegible], அன்னிலக்கணங்கல்லாமையின். (௧௬)

ஒழியு மென்னுயி ரொனுமிடத் தவ்வுயி ரொழிய
மொழிய வேறுமோ ருயிருள தோவிதை மொழிநீ
பழியி லல்லருட் குன்றமே யென்றவன் பகரச்
செழிய மென்மலர்ப் பதத்தெமை யாள்பவன் செப்பும்.

(இ - ள்.) ஒழியுமென்னுயிர் - என்னுயிர்நீங்கும்—எனுமிடத்து - என்றுகூறுமிடத்து—அவ்வுயிரொழிய - அவ்வுயிரையன்றி—மொழிய - உனக்கூறுதற்கு—வேறுமோருயிர் - வேறோருயிரும்—உளதோ - உண்டோ—இதைமொழிநீ - இதைச்சொல்லுதி—பழியில் - குற்றமில்லாத—நல்லருட்குன்றமே - நல்லிருபாமலைபோன்றவனே—என்றவன்

பகர - என்றுகோரக்கன்சொல்ல—செறிய - செழுமையாகிய—மெல் - மிருதுவுபொருந்திய—மலர்ப்பதத்து - தாமரைமலர்போன்றதமதுதிருவடிகளால் —எமையாள்பவன் - எம்மையடிமைகோடற்கியைந்தவல்லமன்—செப்பும் - சொல்லுவன். எ - று. வழக்கத்தாலன்றி என்றுயிரொற்றுச்சந்தாநன் வேறின்றெனக்கருதி இங்ஙனம் வினவினனென்க.

உயிரெ னும்பெய ரியங்குகாற் றியற்பெய ருரைப்பி
னயலு மந்தனக் கப்பெய ராகுபெ ராமென்
றியலு ணர்ந்தவ ரியம்புவ ரென்றெமக் கிறையவன்
மயல றும்படி யுணர்ந்திஃ தறைந்தனன் மன்னோ.

(இ - ள்.) உயிரெனும்பெயர் - உயிரென்றுசொல்லப் பட்டபெயர்—இயங்குகாற்று - அருத்திபோலியங்கும் பிராணவாயுவிற்கு —இயற்பெயர் - இயற்பெயராக—உரைப்பின் - சொன்னால்—அயலுறும் - இதனோடுகலப்புறுதயலாகநிற்கும்—தனக்கு - பிரத்யேகாத்மாவாகிறதனக்கு—அப்பெயர் - அந்தவியற்பெயர்—ஆகுபெயராமென்று - ஆகுபேராவருமென்று—இயலுணர்ந்தவர் - முத்தமிழுளியற்றமிழ்நன்குணர்ந்தோர் —இயம்புவரென்று - சொல்லுவார்களென்று —எமக்கிறைவன் - நமக்குக்காரணசிரியனாகியவல்லமன்—மயலறும்படி - ஐயந்தீருமாறு யான்முக்கொள்ளும் பிராந்திநீரும்படி—உணர்ந்து - சிந்தித்து—இஃதறைந்தனன் - இன்னுமிந்நிலையைச்சொல்லினன். எ - று. மன் - ஓ - அசைகள். உலகருவப்பவென்னுமிடத்து இயற்பெயரும், உலகமுவப்பவென்னுமிடத்து ஆகுபெயருமாய் நின்றதுபோல, உயிரென்னும்பெயர் பிராணவாயுவிற்கியற்பெயராயும் பிரத்யேகான்மாவுறகாகுபெயராயும் நற்றலையுணர்பவர் வினையசாரியாதுழி பிராணவாயுவிற்கும், விசாரித்ததையந்தவிர்ந்துழி ஆன்மாவாகிற சுத்தசைதன்யத்திற்குமாகச்சேறலின், உயிரெனவே இயற்பெயரெனவும் ஆகுபெயரெனவுங் கூறினர். அயலிலக்கணத்தில் சொல்லாற்றலும் தன்னிலக்கணத்தில் ஞானகதப்பிரத்யட்சவாற்றலும் இன்றியக்கண் இக்கவியின்கருத்தப்புலப்படாதென்பது இன்னமென்க. ஆகுபெயர் குறிப்பிற்பொருளுணர்த்துவது, இயற்பெயர் அங்ஙனமின்றிப் பொருளுணர்த்துவதென்க. காலெனல் இங்கேபிராணவாயுவை. (௩௮)

தன்னைச் சச்சிதா னந்தமென் றருமறை சாற்ற
மின்னிற் கெட்டிடுந் தசைசினை மென்புதோன் மெய்ந்த

வின்னற் பொய்க்குடி லாகிய வுடம்பினை யானென்
றுன்னிக் கெட்டனை யென்கொலீ தென்றிது மியம்பும்.

(இ - ள்.) தன்னை - ஆன்மாவாகிறதன்னை —சச்சிதானந்தமென்று - சச்சிதானந்தஸ்வரூபமென்று —அருமறைசாற்ற - அரியவேதங்கள்கூறநிற்க—மின்னிற்கெட்டிடும் - மின்னல்போற்கெடுந்தன்மையையும் — தசை - மாமிசங்களாலும் —சினை - கொழுப்பினாலும் —என்பு - எலும்புகளாலும்—தோல் - தோல்களாலும்— மெய்ந்த - இயைந்த—இன்னல் - துன்பங்கட்கும்—பொய் - பொய்க்கும்—குடிலாகிய - வீடாகிய —உடம்பினை - அவ்வுடம்பை—யானென்றுன்னி - நானெனக்கருதி—கெட்டனை - நீ கெட்டுவிட்டாய் —என்கொலென்று - இதென்னமடமையென்று — இதுவுமியம்பும் - இன்னமுஞ்சொல்லுவன். எ - று. பொய்யென்றதனால் அசத்தும், தசைசினைமென்புதோல்மெய்ந்தவென்றதனால் சடமும், இன்னலென்பதனால் துக்கமும் எனப்பெறும். இவ்வடைகள் தேகத்துக்கியையுமென்னுமிடத்தும் சச்சிதானந்தமென்னுமடைகள் தேகிக்கியையுமென்னுமிடத்தும் முரண்யாது. உண்டெனில், தேகத்துக்கு முன்னடையிருக்கவேண்டும். ஆதலின், அதுவமு. மின்னிற்கெட்டிடுமொடும்பென்றதனால், அசத்தெனவேகோரக்கன் குறியெனினும் பொருந்தும். (௩௯)

வெருவு றப்படும் பிறவியை யொழித்துமெய் வீடு
மருவு தற்குள மவைத்தவ னிமமல வடிவைத்
தெருவி னிற்புனி தம்படா வொன்றனைத் தீண்டி
யருவ ருப்பவன் போலரு வருத்தனை யகற்றும்.

(இ - ள்.) வெருவுறப்படும் - யாவரும்பயப்படத்தகுந்த —பிறவியையொழித்து - பிறவிக்குக்காரணமாகியபிராந்தியையொழித்து—மெய்வீடு மருவுதற்கு - உண்மையாகியவீட்டையடைதற்கு —உளம்வைத்தவன் - சித்தத்தைவைத்தவன்—இம்மலவடிவை - மலவடிவமானவிந்ததேகத்தை—தெருவினில் - வீதியில் —புனிதம்படாவொன்றனை - புனிதத்திற்குடன்படாதவமேத்தியத்தை—தீண்டி - மறதியினாற்றீண்டி—அருவருப்பவன் போல் - அருவருப்புகொள்வான்போன்று —அருவருத்தனையகற்றும் - அதனைக் கழிக்கொள்வன். எ - று. அமேத்தியம் தனதுதப்பிற் றீண்டப்பட்டகாலத்து அருவருப்பினின்றகலான். அன்னோன் அதனையொழிக்குமளவும் மிக்கஅருவருப்புடைத்து என்றதனாலிது நிந்திதனுடலை மலமயமெனக்கண்டவிடத்து எங்ஙனஞ்சகித்திருப்பன். அதுபோல; நீ மலவுடலை யானெனச்சகித்திருத்தல் எங்ஙனம் பொருந்துமெனக்குறிப்பித்தாரென்க. (௪௦)

மருந்துகொண் டுநோய் தீர்ப்பவர் போற்சிவ மருவி
யிருந்த விவ்வுடம் பினைப்பெரி யவர்விட வென்னை
மருந்துகொண் டுநோ யோடிற மதிப்பவன் போல
விருந்த விவ்வுடம் போடிற வெண்ணினை யையனே

(இ - ள்.) மருந்துகொண்டு - அவிழ்தங்கொண்டு — நோய்தீர்ப்பவர் போல் - நோயைத்தீர்த்துக்கொள்ளுவார்போல — சிவமருவியிருந்த - சிவத்தன்மையிருந்த — இவ்வுடம்பினை - இந்தத்தேகத்தை — பெரியவர் - பெரியோர்கள் — விட - விட்டுவிட — என்னை - என்னைக்கொள்ள — மருந்துகொண்டு - மருந்துபெற்றுக்கொண்டு — நோயோடிற - வியாதியோடேகூடியிருக்க — மதிப்பவன்போல - எண்ணங்கொள்பவன்போல — இருந்த - உனக்குவாய்த்திருந்த — இவ்வுடம்போடிற - இவ்வுடம்போடேகூடியிருக்க — எண்ணினை - எண்ணமுற்றனை — என்றே - இஃதென்னமதியோ. எ - று. மருந்து சிவம். நோய் உடம்பு. எனவே, சிவத்தின் நிலையடைந்து உடம்பாகாரநிலையை விடுதியென்பது கருத்து. (௪௧)

பிறந்த வாகமொன் றிறந்திடாப் பெருமையு முடைத்தோ
வெறிந்த வானிலே வீழ்ந்திடா திருப்பதிங் கில்லை
செறிந்த காரிய மென்பதென் றாயினுஞ் சிதையு
மிறந்தி டாதுகா ரணமெனப் படுமதே யென்றும்

(இ - ள்.) பிறந்தயாகமொன்று - ஜனித்ததேகங்களிலொன்று — இறந்திடாப்பெருமையும் - சாகாதபெருமையையும் — உடைத்தோ - உடையதாகுமோ — வான் - ஆகாயத்தில் — எறிந்ததிலே - எறிந்தகல் — வீழ்ந்திடாதிருப்பது - விழாதிருப்பது — இங்கு - இவ்வுலகத்தில் — இல்லை - அனுபவமில்லை — செறிந்த - சேர்ந்தசில ஞாயங்களால் விகச்செறிந்த — காரியமென்பது - காரியமெனப்படுவது — என்றாயினும் - என்றைக்காயினும் — சிதையும் - நாசமுறும் — காரணமெனப்படுமதே - காரணமென்று சொல்லப்படுவதே — என்றும் - எப்போதும் — இறந்திடாது - நாசமுறாது. எ - று. ஜனனம் ஒன்றிலதே. இஃதன்றியும் பஞ்சபூதங்காரியமெனவும் அவற்றுள் ஆகாயம் காரணமெனவுங்கோடற்கு எவ்வளவும் ஞாயஞ்சோதனையேற்கும். அவ்வுடல்காரியமெனவும் பூதங்காரணமெனவும், உடல் அழியுமெனவும் இதனாற்பூதமழியாதெனவுங்கருதின். செறிந்தகாரியமென்பதென்றாயினுஞ்சிதையும் இறந்திடாதுகாரணமெனப்படுமதேயென்றும் எனக்

கூறினரெனக. உடைத்தோவென்பது வோகாரம் எதிர்மறை. எறிந்தவானிலேவீழ்ந்திடாதிருப்பதிங் கில்லையென்றவுமானம் பஞ்சபூதகாரியமாகப் பிசிதப்பவித்தவுடல் பஞ்சபூதமாகாதிருப்ப திங்கில்லையெனவே புணர்த்தற்கு நின்றதெனக. (௪௨)

மருந்தி னுடலி னித்தமா மென்று நீ வருத்த
மிருந்து வாழுநாட் பன்மையொன் றன்றிவே றில்லை
பொருந்தி நீயுட லழிந்திடா தெனப்படும் பொருந்தா
தருந்த வாவினி வீடுவேண் டென்றனன் னையன்.

(இ - ள்.) மருந்தினால் - காயசித்திக்குரியமருந்தினால் — உடலினித்தமாமென்று - தேகத்துக்குநித்தியத்தன்மையாய்க்குமென்று — நீ வருந்தி - நீ யேற்படுத்திக்கொண்டது — இருந்து - உடலோடிருந்து — வாழுநாள் - வாழுங்காலம் — பன்மையொன்றன்றி - பலமையின்றுமெண்ணிக்கைகொண்டன்றி — வேறில்லை - வேறென்னாற்கேதில்லை — நீ பொருந்தி - நீவுடலோடு சம்பந்தித்து — உடலழிந்திடாதென்பது - தேகநசிக்கமாட்டாதென்னு நின்கொள்கை — பொருந்தாது - ஞாயமுகத்தினுடன்படாது — (ஆதலின்) அருந்தவா - அரியதவத்தையுடையகோரக்கரே — இனி - இனியாவது — வீடுவேண்டென்றனன் - மோட்சமடையவிரும்புதியென்றுசொல்லினன் — ஐயன் - அல்லமதேவன். எ - று. மருந்தினால் உடல் நித்தமெனவும் அதனோடுகூடிவாழுநாள் பன்மையெனவுங் கூறவே, மருந்தின்றியவிடத்து அநித்தமெனவும் வாழுநாட்சின்மையெனவுங் கொள்ளப்பெறும். உடலினைக்கன்னியமாதலின் அதனை நித்தியத்திற்கு நீகாத்திருத்தலேவாதென்பார்; பொருந்தியுடலழிந்திடாதென்பது பொருந்தாதென்றார். உடலுக்கியற்கையன்றெனக்காட்ட நீவருந்தவெனப்பட்டது. (௪௩)

ஏது சொல்லினு மென்னுட லழிவுறா தென்றும்
வாது செய்வதென் காட்டியா னுனைத்தவர் வலியின்
ஆதி நாதன தருளினா லென்றுகோ ரக்கன்
நீதி லாவருள் வாளொடு மோதித்து செய்யும்.

(இ - ள்.) ஏதுசொல்லினும் - யாதுகூறினும் — என்றும் - எப்போதும் — என்னுடலழிவுறாது - என்தேகமழியாது — (இங்ஙனமிருக்க) வாது செய்வதென் - வீண்வழக்கிடுவதால்யாதுபயன் — ஆதிநாதனதருளினால் - ஆதிநாதனென்னுஞ்சற்குருவினருளினால் — இன்று - இப்போது — வலி - வலிமையை — காட்டியான் - பிரத்தியட்சக்காரணமாக — உனக்

நவன் - உனக்குநான்தெரிவிப்பன் — என்று - என்றுசொல்லி — கோரக்கன் - கோரக்கனென்போன் — நிறிவா - குற்றமற்ற — அருண்மாரியோடு - இருபாசமுத்திரமாகியவல்லமரோடு — உணர்ந்து - சொல்லி — இறைசெயப்படும் - இதனைச்செய்வன். எ - று. (௬௪)

இன்னி யங்களின் முழங்குறுவெள் ளருவிவெற் பெறிந்த
மன்னன் வன்படை யன்னதோர் சொளிரயில் வாய்வா
ளன்னை யெம்பிரான் கைகொடுத் தனையனென் னானை
யின்னி ரும்புய வலியினு லெறிகென விகழ்ந்தே.

(இ - ள்.) இன்னியங்களின் - இனிமையாகிய வாத்தியங்களைப்போல — முழங்கு - முழங்குகின்ற — வெள்ளருவி - வெண்மையாகியவாறுகளையுடைய — வெற்பு - மலைகளினிறகை — எறிந்த - அறுத்த — மன்னவன் - தேவேந்திரனுடைய — படையன்னது - வச்சிராயுதத்தைக்கொப்பாகிய — ஓர் - ஒப்பற்ற — ஒளிர் - பிரகாசிக்கின்ற — அயில் - கூர்மையாகிய — வாய் - முனையினையுடைய — வாளினை - வாளாயுதத்தை — எம்பிரான்கைகொடுத்து - அல்லமனாதனெமக்குக்கொடுத்து — அனையன் - அந்தகையனுகியகோரக்கன் — என்றனை - என்னை — நின்னிரும்புயவலியினால் - உனது பெரியபுஜவலிமையினால் — எறிகென - வீசென்று — இகழ்ந்து - சொல்லி, எ - று. அனையன் கொடுத்து இகழ்ந்தெனக் கூட்டிமுடிக்க. வெற்பினிறகை வெற்பென்றது - ஆகுபெயர். (௬௫)

அத்த வீச்சிற கன்னதோர் தோலது மெனுஞ்
சித்த னானென வென்றுமுன் னின்றனன் செருக்கு
சித்தன் யானிவன் கருதிய தேசெய்து நெஞ்சின்
வைத்த மாதருக் கொழிப்பனென் றருளம் வலித்தான்.

(இ - ள்.) அத்த - கர்த்தனே — ஈச்சிறகன்னது - ஈச்சிறகுக்கொத்ததாகிய — ஓர்தோல் - அந்தத்தோல் — அதுமெனும் - அறுமெனும் - அறுமெனப்படாத — சித்தனானேனென்று - நான்சித்தனானேனென்று — சொல்லி — முன்னின்றனன் - எதிர்நின்றனன் — செருக்கு - செருக்குடைய — சித்தன் - அல்லமன் — யான் - நான் — இவன்கருதியதேசெய்து - இவன்கருதியதனையேசெய்து — நெஞ்சில்வைத்த - நெஞ்சிலெண்ணியிருக்கின்ற — மாதருக்கு - மிக்கசெருக்கை — ஒழிப்பனென்று — அருள் - திருவுளத்தில் — உளம் - தன்உள்ளத்தில் — வலித்தான் - உறுதிகொண்டான். எ - று. அவன்செருக்கினின்றதை யல்லமன்கண்டு அச்செருக்கை யொழிக்கத்துணிந்தனனென்க. (௬௬)

வாங்கு வாளினை மின்னென விதிர்த்தருண் மாரி
யோங்கி வானுரு மேறென வதிர்ந்தவ னுடம்பிற்
றேங்க மால்வரை யிடிதெறித் தாலெனத் தாக்க
வாங்கொ ரோசைதன் னென்றுமே லெழுந்ததையன்றே.

(இ - ள்.) வாங்கும்வாளினை - அவன்கையிலிருந்துவாங்கியவாளை — மின்னெனவிதிர்த்து - மின்னலைப்போலவிளக்கி — அருண்மாரி - இருபாவெள்ளமாகியவல்லமதேவர் — ஓங்கி - கையையோங்கி — வான் - மேகத்திலெழும் — உருமேறென - அசனிபோல — அதிர்ந்து - சத்தித்து — அவனுடம்பிற்றாங்க - அவனுடம்பிற்பட — மால்வரைமீதெறிந்தாலென - பெரியமலையின்மேற்போல — தாக்க - வெட்ட — ஆங்கு - அவ்விடத்தில் — ஓரோசை - ஒருசத்தம் — டின்னென்றுமேலெழுந்தது - டின்னென்றவொலிக்குறிப்போடுமேலெழுந்தது, எ - று. ஐ - அன்று - ஏ - அசைகள். அருண்மாரி விதிர்த்து ஓங்கி அதிர்ந்து தாக்க அதனால் ஓரோசை டின்னென்றவொலிக்குறிப்போடு மீக்கெழுந்ததெனக் கூட்டிமுடிக்க. (௬௭)

திருப்ப ருப்பத நடுங்கிய தவ்விறற் சீற்றத்
தரக்க னுற்றிது தனையுமின் றெடுத்தன னுமென்
றுரைப்ப தற்கரி தாகிய வச்சமுற் றோடிப்
பொருப்பி றைக்கொரு மகளரன் புயங்கள்புல் லினளால்.

(இ - ள்.) திருப்பருப்பதம் - அழகியஸ்ரீசைலமலை — நடுங்கியது - அதிர்ந்தது — அ - அந்த — விறல் - பலத்தையும் — சீற்றத்து - கோபத்தையுமுடைய — அரக்கனுற்று - இராவணன்வந்து — இதுதனையும் - இம்மலையையும் — இன்றெடுத்தனனுமென்று - இப்போதெடுத்தான் போலிருக்கின்றதென்று — உரைப்பதற்கரிதாகிய - சொல்லற்கரிய — அச்சமுற்றோடி - பயந்தோடி — பொருப்பிறைக்கு - பர்வதராசனுக்கு — ஒருமகள் - ஒருபுத்திரியாகவவதரித்தவுமையவள் — அரன்புயங்கள்புல்லினள் - சிவனதுதோள்களைத்தழுவிக்கொண்டனள். எ - று. ஆல் - அசை. இராவணன் முன்னர்வந்து அசைத்ததுபோல் அசைத்தானென்று எண்ணங்கொண்டு உமையவள் அச்சமுற்றோடி அரன்புயங்கள் புல்லினள் எனமுடிக்க. இது தொற்றக்குறிப்பணி. (௬௮)

விஞ்சை மாதர்தம் யாழொலி கேட்டமா வோட-
ரஞ்சி லோதியர் பதலைகேட் டயரசு ணம்போ
னெஞ்சு மாழ்கினர் புள்ளின மெழுந்தகா ளிமிர்த்துத்
துஞ்சு மாவெழுந் தோடின வான்றுளி துளித்த.

(இ - ள்.) விஞ்சைமாதர்தம் - வித்யாதரப்பெண்களின் — யாழொலி கேட்ட - வீணையினிசைகேட்ட — மாவேடர் - மகத்தாகியவேடர்கள் — அம் - அழகிய — ஓதி - சடைப்பின்னலையணிந்த — ஓதியர் - கூந்தலையுடையமாதர்களின் — பதலைகேட்டு - இனியமொழிகளைக்கேட்டு — அயரசுணம் போல் - வருந்துகின்றவசுணப்பட்சியைப்போல — நெஞ்சுமாழ்கினர் - மனமயங்கினர் — புள்ளினம் - பட்சிக்கூட்டங்கள் — கானிமிர்த்து - காலூன்றி — எழுந்த - எழுந்திருந்தன — துஞ்சுமா - உறங்குகின்றமிருகங்கள் — எழுந்தோடின - அச்சமுற்றெழுந்தோடின — வான்றுளிதுளித்த - மேகங்கள்மழைபெய்தன. எ - று. அயரசுணம்போலென்றது ; அசுணப்புள் இன்பண்ணிரண்டினுள் ஒன்றுகூட்டிடும் ஓரொலிக்குள் அழுதகாலிட்டுத் துயர்வு தியல்பாதலைக்குறிக்கவென்க. அஞ்சிலோதியர்பதலை ; அசுணப்பெருகுரல்போறகாண்டலின் பதலைகேட்டயரசுணம்போலென்றார். பதலை மத்தளமெனினுமமையும். (௯௯)

இன்ன வாறொலி யெழவுட லூறின்றி யிருப்ப
முன்ன மேவிய செருக்கினு மும்மடங் கெய்தி
யென்னை நேர்பவ ரிலையென வவனுளத் தெண்ணித்
தன்னை யேதனி வியந்தமை யறிந்தனன் றலைவன்.

(இ - ள்.) இன்னவாறு - இவ்வண்ணம் — ஒலியெழ - சத்தமெழவும் — உடல் - தேகம் — ஊறின்றியிருப்ப - சற்றும்பழுதின்றியிருக்கவும் — முன்னமேவிய - முன்னர்தானடைந்திருந்த — செருக்கினும் - கெர்வத்தைக்காட்டிலும் — மும்மடங்கெய்தி - மூன்றுபங்கதிகமுற்று — என்னைநேர்பவரிலையென - என்னையொத்தவரில்லையென்று — அவனுளத்தெண்ணி - அவனுளத்திலெண்ணி — தன்னையே - தன்னைத்தானே — தனிவியந்தமை - மிகவுமெச்சிக்கொண்டதை — அறிந்தனன்றலைவன் - அல்லமனறிந்தனன். எ - று. அவன் எய்தி எண்ணி வியந்தமைதலைவனறிந்தனனெனக்கூட்டிமுடிக்க. (௱)

ஒலியெ ழுந்திட வின்னண நினதுபே ருடம்பு
வலிய டைந்ததின் னெப்பவ ரிலைவளி வழங்கு

முலகி லென்றுகை குலைத்தினி நகைபுரிந் தொருகைம்
மலர்பொ ருந்துவா னவன்கையிற் கொடுத்திது வருத்தான்.

(இ - ள்.) ஒலியெழுந்திட - அதிசத்தமெழ — இன்னணம் - இவ்வாறு — நினதுபேருடம்பு - உனதுபெரியதேகத்தினால் — வலியடைந்தது - மிக்கபலமடைந்தது — நின்னெப்பவர் - உன்னையொத்தவர்கள் — வளிவழங்கும் - காற்றுசஞ்சரிக்கின்ற — உலகில் - உலகின்கண் — இலையென்று - எங்குமில்லையென்று — கைகுலைத்து - கைகொட்டி — இனிநகைபுரிந்து - புன்னகைகொண்டு — ஒருகைம்மலர் - ஒருகையாகியமலரில் — பொருந்துவான் - இருந்தவாளை — அவன்கையிற்கொடுத்து - கோரக்கன்கையிற்கொடுத்து — இது வருத்தான் - இதனைச்சொல்லினன். எ - று. நின்னைப்போல தேகவலியினரெங்கணுமில்லையென்று கைகுலைத்து நகைபுரிந்து தமதுகைவாளை அவன்கையிற்கொடுத்து இதுவருத்தானெனக்கூட்டிமுடிக்க. (௱௧)

வாங்கும் வாளினு னின்வலி யொடுநமர் வலியுந்
தாங்கி யென்னைநீ யெறிந்திடா யெனத்தாங் தலைவ
னாங்கு நின்றனன் சித்தனு மஞ்சில னொப்பி
லோங்கி வாளினு லெறிந்தன னொட்டுமுன் னாகுருவை.

(இ - ள்) வாங்கும்வாளினால் - என்கையிலிருந்துவாங்கியவாளினால் — நின்வலியொடு - உனதுபலத்தோடு — நமர்வலியுந்தாங்கி - உனதுசுற்றத்தார்வலியும்பெற்று — என்னைநீயெறிந்திடாயென்று - என்னைநீவெட்டிப்பாரென்று — தலைவன் - நமதுதலைவனாகியவல்லமன் — ஆங்குநின்றனன் - அவ்விடத்திருந்தனன் — சித்தனும் - கோரக்கனும் — அஞ்சிலனாகி - பயப்படாதவனாய் — ஓங்கி - மேலோங்கி — ஒப்பிலாகுருவை - ஒப்பற்ற வல்லமனதுதேகத்தை — வாளினுலெறிந்தனன் - வாளினால்வெட்டினன். எ - று. உனதுவலிபோதாவிடத்து நமர்வலியுந்தாங்கி யெறிந்திடாயெனென்றார். (௱௨)

அனுமை யங்குமின் னுமைநகை யெறிந்தவா ளாக
நினைமை யங்குமெய்ப் படாதவாள் வறிதுபோ யிறது
பனிமை யங்குதோன் மாயைதன் படாமுலை படாத
மனமை யுங்குதன் சோதிமேல் வாள்பட வருமோ.

(இ - ள்.) அனுமயக்கும் - பரமாணுவும்பின்னிடத்தக்க — மின்னுமைழ - மின்னலைக்காட்டிலும் நுட்பமாகிய — தகிரெறிந்த - சூரியகிரணவெ...

ட்டிய—வாளாக - வாள்போல—இணையங்கு - உவமையும்பின்னிடச்சிக்க—மெய்ப்படாது - அல்லமன்மேனியிற்படாது—வாள் - வீசியவாள்—வறிதுபோயிற்று - ஒன்றிலுந்தாக்காதுபோயிற்று—பணையங்கு - மூங்கிலும்பின்னிடத்தக்க —தோள் - தோள்களையுடைய —மாயைதன் - மாயையினது—படாம் - வஸ்திரமணிந்த —முலைபடாத - தனங்கள்படாத—மணமயங்கு - யாதொருநற்கந்தமும்பின்னிடத்தக்க—தன் - உபசாந்தநிறைந்த—சோதிமேல் - சுயஞ்சோதியாகியவல்லமன்மேல் —வாள்படவற்றே - வாள்படுந்தகுதியதோ. எ - று. சூரியகதிர் பரமாணுவினுநன்னியதெனற்கு அணுமயங்குமின்னுழைகதிரெனவும், இவரதுதிருமேனி யாதோருவமைக்கும் இணங்காதமேலுமதெனற்கு இணையங்குமெய்யெனவும், மாயையினதுதோள்மூங்கிலிறும்பாரித்திருப்பதால் பணைமயங்குதோளெனவும், எல்லாச்சுகந்தமும் பின்னிடத்தக்கவாறு வீசுஞ்சோதியெனற்கு மணமயங்கு தன்சோதியெனவும் கூறியதாகப் பெறும். (௩௩)

வேறு.

வானெறிந்து கையிழந்த கோரக்க னுணர்மிக மனம்வி
யந்து, நானிறைஞ்சும் பரஞ்சுடரே யிவனென்று மெய்விதிர்ப்ப
நடுநடுங்கித், தானடைந்த செருக்கொழிந்து தலையன்பி னெறி
நடப்பத் தலைப்பட் டெங்கோன், றேனடைந்த செழுங்கமலத்
திருவடியில் வீழ்ந்தெழுந்து செப்பு கின்றான்.

(இ - ள்.) வானெறிந்து - ஆகாயத்தைவெட்டி—கையிழந்த - கையிழந்துபோன—கோரக்கனுதன் - கோரக்கதேவன் —மிகமனம்வியந்து - மிகவுமனதில்வியப்புற்று —நானிறைஞ்சும் - நான்வணங்கத்தக்க—பரஞ்சுடரேயிவனென்று - பரஞ்சோதியேயிவனாமென்று —மெய்விதிர்ப்ப - மெய்குலுங்க—நடுநடுங்கி - நடுநடுக்கமெய்தி—தானடைந்தசெருக்கொழிந்து - தான்கொண்டகெர்வத்தினின்றுநீங்கி—தலையன்பினெறி - மேலாயவன்பினெறியில்—நடப்பத்தலைப்பட்டு - முந்திநடக்கத்துணிந்து—எங்கோன் - அல்லமனது—தேனடைந்த - தேனிறைந்த—செழுங்கமலம் - அழகியதாமரைமலர்போன்ற —திருவடியில்வீழ்ந்தெழுந்து - திருவடியில்வணங்கியெழுந்து —செப்புகின்றான் - சொல்லுகின்றான். எ - று. கோரக்கனுதன் வியந்து நடுநடுங்கி ஒழிந்து தலைப்பட்டு வீழ்ந்தெழுந்து செப்புகின்றானெனக்கூட்டிமுடிக்க. அல்லமன் ஆகாசமாதலால் வானெறிந்தென்றார். கமலத்தைக் கமலமெனல் ஆகுபெயர். (௩௪)

நின்னையறி யாதுமது வுண்டவன்போன் மனஞ்செருக்கி
நினைந்த பாவம், பின்னரெதிர் நின்றுநின துரைமறுத்துப் பித்த
னெனப் பிதற்றுந் தீமை, யின்னுயிர்கொன் றுடல்கவரு மறவன்
போற் செய்தபிழை யெல்லா மெந்தாய், மன்னியநின் பேரரு
ளாற் றீர்த்தெனையாட் கோடியென மறித்துந் தாழ்ந்தான்.

(இ - ள்.) நின்னையறியாது - உனதுமகிமையையறியாமல்—மதுவுண்டவன்போல் - கள்குடித்தவன்போல—மனஞ்செருக்கி - மனதிற்கெர்வங்கொண்டு—நினைந்தபாவம் - உன்னைஅற்பமாக நினைத்தபாவமும்—பின்னர் - பின்பு—எதிர்நின்று - உனக்குச்சமானமாக நானெதிர்நின்று—நினதுரைமறுத்து - உனதுவசனத்தைத்தடுத்து—பித்தனென - பித்துகொண்டான்போல—பிதற்றுந்தீமை - பிதற்றியதீமையும் —இன்னுயிர்கொன்று - இனியவுயிர்நீங்கச்செய்து—உடல்கவருமறவன்போல் - உடலையெற்குமறவனைப்போல—செய்தபிழையெல்லாம் - செய்தகுற்றமுமாகியவெல்லாவற்றையும் —எந்தாய் - எந்தகர்த்தனே—மன்னிய - நிலைபெற்ற —நின்பேரருளாற்றீர்த்து - உனதுபெருங்கருணையால்நீக்கி—எனையாட்கோடியென - என்னை அடிமைகொள்ளுதியென்று —மறித்துந்தாழ்ந்தான் - மீண்டும்வணங்கினன். எ - று. என்னையென்றது எனையென்றாய இடைக்குறை. (௩௫)

செய்தபிழை போகவினிப் பிழைசெய்யா துடம்புநசை
தீர்ந்து நின்றன், மெய்தெரியி னெனக்குநீ யினியனெனப் பெரு
ங்கருணை வெள்ளங் கூற, வுய்தவிலென் பிழைபொறுத்திட் டடி
த்தரிய வானமுது மூட்டி னின்றாய், கைதருசெம் மணியனையா
யான்செய்வ தேதுளது கைம்மா றென்று.

(இ - ள்.) செய்தபிழைபோக - செய்தகுற்றநீங்கவாக —இனிப்பிழைசெய்யாது - இனிமேலும்பிழைசெய்யாமல் —உடம்புநசைதீர்ந்து - தேகப்பற்றகன்று —நின்றன்மெய்தெரியின் - உனதெதார்த்தவடிவை நீதெரிவிக்கின் —எனக்குநீயினியனென - எனக்குநீபிரியவடிவனெனவென்று —பெருங்கருணைவெள்ளம் - மிக்ககிருபாசமுத்திரமாகிய அல்லமன்—கூற - சொல்ல—உய்தவில் - பிழைத்தற்கிடங்காணாத —என்பிழைபொறுத்திட்டு - எனதுகுற்றத்தைப்பொறுத்துக்கொண்டு—அடித்து - தண்டித்து—அரியவானமுதம் - அரியதேவாமிர்தத்தை—ஊட்டினின்றாய் -

உன்னைச்செய்கின்றனை—கைதரு - கையிற்கொடுத்த —செம்மணியனை யாய் - செம்மையாகியமாணிக்கம்போல்பவனே—கைம்மாறு - பிரதியுபகாரம் —யான்செய்வதேதுளதென்று - யான்செய்தற்குயாதுளதென்று சொல்லி. எ - று. (௫௬)

முற்றுமருள் செய்துநீ யானறிய வேண்டுபொருளை மொழிதி யென்று, பற்றுடல நசைதீர்ந்து கோரக்க னிற்பவவன் பருவங்கண்டு, கற்றறியு மறிவிறு லறிவரிய பரஞ்சோதி கருணை கொளப், பெற்றதிரு வுளமகிழ்வுற் றன்பொடுகேண் மதியென்னுப் பேச லுற்றான்.

(இ - ள்.) முற்றுமருள்செய்து - பூரணகிருபைவைத்து—யானறியவேண்டுபொருள்-யானறியவேண்டுவதெப்பொருளோவப்பொருளை—நீமொழிதியென்று - நீ யநுக்கிரகிக்கக்கடவாயென்று—பற்று - யாதுகப்பற்றிய—உடலநசைதீர்ந்து - தேகாபிமானநீங்கி — கோரக்கனிற்ப - கோரக்கன்சேர்ந்துநிற்க —அவன்பருவங்கண்டு - அவனதுதிவரபருவங்கண்டு - கற்றறியுமறிவினுல் - பூர்வசன்மஞானத்தினலும் —அறிவரியபரஞ்சோதி - எட்டியறிதற்கரியபரஞ்சோதியாகியவல்லமதேவன்—கருணைகொளப்பெற்ற - கிருபைகோடற்கியைந்த — திருவுளமகிழ்வுற்று - மனமகிழ்ந்து—மதி - யான்சொல்லும்புத்தியை —அன்பொடுகேளென்று - மிக்கவன்போடுகேளென்று —பேசலுற்றான் - சொல்லத் தொடங்கினன். எ - று. பரஞ்சோதி கண்டு மகிழ்வுற்று பேசலுற்றான் எனமுடிக்க. கற்றறியுமறிவென்றதனுல் கல்விஞானமென்றும். கற்றறியுமறிவினுல் என்றவிடத் தும்மையெஞ்சியது. (௫௭)

இருந்தபடி குகேசனைநீ யறிவையெனி னின்பிறவி யெனுநோய் தீர்ந்து, பொருந்துறுவை பேரின்ப மென்றமலன் கூறவவன் போற்றி யெந்தாய், பரிந்தருள்செய் குகேசனெனு மொழிப் பொருளே ததுகூறப் படுவோன் யாவன், றெரிந்துணர வருள் செய்வா யென்றுதொழ வெம்பெருமான் செப்புகின்றான்.

(இ - ள்.) இருந்தபடி - இருந்தவண்ணம் —குகேசனை - குகேசனென் பவனை—நீ அறிவையெனின் - நீயுணர்வாயாயின்—நின்பிறவியெனுநோய் - உனதுபிறவியென்னுநோயினின்று—தீர்ந்து - நீங்கி—பேரின்பம் - கிரதிசயானந்தத்தை —பொருந்துறுவையென்று - அடைவாயென்று—அமலன்கூற - அல்லமன்சொல்ல—அவன் - அக்கோரக்கன்—போற்றி - துதித்து—எந்தாய் - எமதுகர்த்தனே—பரிந்தருள்செய் - மிக்கவன்போடருள்செய்கின்ற —குகேசனெனுமொழிப்பொருள் - குகேசனென்னுமொழிக்கருத்தம்—ஏது - யாது—அதுகூறப்படுவோன்யாவன் - அதனையுணர்ந்தபவன்யாவன் —தெரிந்துணர - யான்தெரிந்துகொள்ளும்படி—அருள்செய்வாயென்று - அநுக்கிரகிக்கக்கடவையென்று—தொழ - வணங்க—(அதற்கு) எம்பெருமான் - அல்லமன்—செப்புகின்றான் - சொல்லுகின்றான். எ - று. (௫௮)

குகையிதய மதன்கணமரிறையீச னென்றுபொருள் குறித்துக் கொண்மோ, நிகழனைய குகேசமொழி யுடையன்யானென்றனவே நிமலன் கூற, வதமகிழ முகமலர்ந்து சித்தனறை குவனீயே யாகி லுன்றன், முகையவிழ்மென் மலர்க்கரத்திற் சிவலிங்கங் கொண்டதென்கொன் மொழிதி யென்றான்.

(இ - ள்.) குகை - குகையெனப்படுவது—இதயமென்று - இருதயமென்றும்—அதன்கணமரிறை - அதிலெழுந்தருளியசோதியை—ஈசனென்று - ஈசனென்றும்—பொருள் - அர்த்தமாக—குறித்துக்கொண்மோ - குறித்துக்கொள்ளுதி—நிகழ் - விளங்காநின்ற—அனைய - அத்தகையதாகிய—குகேசமொழியுடையன் - குகேசனென்னுமொழியை யுடையவன்—யானென்றனவே - யானேயென்று—நிமலன்கூற - அல்லமன்சொல்ல—அகமகிழ - மனமகிழும்படி—முகமலர்ந்து - முகமலர்ச்சிகொண்டு—சித்தனறைகுவன் - கோரக்கன்சொல்லுவன்—நீயேயாகில் - குகேசனென்னும்பொருள் நீயேயானால்—உன்றன் - உன்னுடைய—முகையவிழ் - முகையென்னு மொட்டுக்கவிழ்ந்த—மென்மலர் - மெல்லியதாமரைமலர்போன்ற—கரத்தில் - உள்ளங்கையில் —சிவலிங்கங்கொண்டது - சிவலிங்கத்தையேற்றிருப்பது—என்கொல் - யாதுகாரணம் —மொழிதியென்றான் - சொல்லென்றுகேட்டனன். எ - று. நீயே குகேசனாயின் கையிற் சிவலிங்க மிருப்பானேனென்று வினவினனென்க. (௫௯)

பிறந்தபயன் பெறவுலக ரனைக்கண்டு கொண்டுமனம் பிறழ்தலின்றிச், சிறந்தசிவ லிங்கமலர்க் கரங்கொண்டு பூசனை யாஞ் செய்யவேண்டி, நிறைந்தவெமை அருவாகு மிக்குறிகைக் கொண்டனம்யா மிங்கா தென்று, மறிந்துதெளி குதிமனமேனறருள்செய்தெங் குருதேவ னறைய லுற்றான்.

(இ - ள்.) பிறந்தபயன்பெற - பிறந்ததற்கெய்தும் பயன்பெறவேண்டி — உலகர் - உலகத்தார் — எளிக்கவென்று - எளிதெனத்தார்த்தநிலையைக்கண்டு — மனம்பிறழ்தலின்றி - மனஞ்சலியாமல் — இறந்தசிவலிங்கம் - மேலாகியசிவலிங்கத்தை — மலர்க்கரங்கொண்டு - தாமரைமலர்போன்ற கையிலேந்திக்கொண்டு — பூசனையாஞ்செய்யவேண்டி - நாம்பூசித்தற்கு — நிறைந்த - பூரணமான — உருவாகும் - எனதுசொரூபமாகிய — இக்குறிகைக்கொண்டனன் - இந்தவடையாளத்தைக் கையிற்கொண்டனன் — யான் - நான் — ஈசுரனென்றும் - எப்போதுமீசுரனாகு — அறிந்துதெளிகுவாயென்று - மனத்தாலறிந்து தெளிவாயென்று — அருள்செய்து - அநுக்கிரகித்து — எங்குருதேவன் - எமதுகுருவாகிய அல்லமதேவன் — அறையலுற்றான் - சொல்லத்தொடங்கினான். எ - று. பிறந்தபயன் பெறுதலாவது, தானவனைத் தவிர்தலே. (௧௦)

போதகனு மியகுரவ னென்ஞான்று நற்கருமம் புரிகவென்று, வேதமுத லாகியநூன் முழுதுமொருங் கொருவந்தம் விதித்த லாலே, சாதகனு மியபருவ மாணக்கன் பாசவலி தணிக்க வல்லான், மேதினிமே லுடலொடுநற் செயல்விடுவ தன்றி யிடை விடலா காதால்.

(இ - ள்.) போதகனுமியகுரவன் - போதிக்கத்தக்கஞானாசிரியன் — என்ஞான்றும் - எப்போதும் — நற்கருமம்புரிகவென்று - சற்கருமஞ்செய்யவேண்டுமென்று — வேதமுதலாகியநூல்முழுதும் - வேதமுதலியசகலகலைகளும் — ஒருங்கு - ஒருமிக்க — ஒருவந்தம் - தனித்திருத்தலை — விதித்தலால் - சொல்லுதலால் — சாதகனுமியபருவம் - சாதகனுகியபருவத்தையுடைய — மாணக்கன் - சீடன் — பாசவலிதணிக்கவல்லான் - பாசத்தினது வலியைக் கெடுக்கவல்லவன் — (அவன்) மேதினிமேல் - பூமியின்மேல் — உடலொடு - தேகமுள்ளவரையோடு — நற்செயல்விடுவதன்றி - சற்கிருத்தியம்விடவேண்டியதன்றி — இடைவிடலாகாது - நடுவில்விடக்கூடாது. எ - று. ஆல் - அசை. ஞானசிரியனேனும் மாணக்கனேனும் எடுத்துக்கொண்ட சற்கிருத்தியத்தை உடலோடன்றி இடையில்விடலாகாதென்பது கருத்து. (௧௧)

என்றுதனை யியலுணர்த்தி யுடம்புநா னென்றிருந்த வியல்புபோல, நின்றவினை புணர்ந்துநீ சோகம்பா வனைகொண்டு நிற்பை யாயிற், பொன்றலுறு விடங்கலுழன் றனைநினைப்பப்

போதல்போற் போமவிச்சை, நன்றறிதி யெனவறிவித் தனனெங்கோன் கோரக்கனுதன் றன்னை.

(இ - ள்.) என்று - இப்படியென்று — தனையியலுணர்த்தி - தனதிலக்கணத்தைத்தெரிவித்து — உடம்புநானென்றிருந்த - தேகமேநானென்றிருந்த — இயல்புபோல - நிலைமைபோல — நின்றவினை - நின்றவென்னை — நீபுணர்ந்து - நீதெரிந்து — சோ - அவனே — அகம் - நானென்னும் — பாவனைகொண்டு - ஐக்கியங்கொண்டு — நிற்பையாயின் - இரண்டற நிற்பையாயின் — பொன்றலுறு - சாதற்கேதுவாகிய — விடம் - விஷமானது — கலுழன்றனைநினைப்ப - கருடத்தியானஞ்செய்ய — போதல்போல் - நீங்குமாறுபோன்று — போமவிச்சை - அவித்தைநீங்கும் — நன்றறிதியென - நன்குணர்தியென்று — எங்கோன் - எமதல்லமன் — கோரக்கனுதன்றன்னை - கோரக்கதேவனுக்கு — அறிவித்தனன் - விளக்கிவித்தனன். எ - று. கோரக்கனுதன்றன்னை விளக்கிவித்தனனெனக் கொள்ளினுமமையும். பாவனையாவது; அவனேநான் நானேயவன் என்றுருமைக்கியத்தை. எனதுவடிவமாகியசோதியைப் பழுதறக்கண்டு உடல் நானயிருப்பதுபோல அதுநானுக விருக்கவேண்டுவதாதலால் சோகம்பாவனைகொண்டு நிற்பையாயி லென்றார். (௧௨)

ஞானகுரு பரனருளாற் றனக்குரைத்த மொழிப்பொருளை நன்றறிந்திட், டூனைவடி வென்பதுவிட் டுண்மையலா வனைத்தையுநீத் துண்மை கண்டு, தானதனை யடைந்துதா னதுவென்னு மருளகன்று தானே யாகி, வானவரு மறிவரிய பெரும்புகழ்கோ ரக்கனவண் மன்னி னானல்.

(இ - ள்.) ஞானகுருபரனருளால் - ஞானசிரியனருளினால் — தனக்குரைத்த - தனக்குணர்த்திய — மொழிப்பொருளை - மகாவாக்கியார்த்தத்தை — நன்றறிந்திட்டு - ஐயந்திரிபறத்தெளிந்து — ஊனை - மாமிசவுடலை — வடிவென்பதுவிட்டு - தனதுடலென்பதைவிட்டு — உண்மையலாவனைத்தையும் - உண்மையெனற்கியையாத வெல்லாவற்றையும் — நீத்து - நீக்கி — உண்மைகண்டு - உண்மைநிலையினையதெனக்கண்டு — தானதனையடைந்து - தானதைச்சேர்ந்து — தானதுவென்னுமருளகன்று - தானதுவெனக்காணுமயக்கநீங்கி — தானேயாகி - தானே தானுகி — வானவருமறிவரிய - தேவர்களுமறிதற்கரிய — பெரும்புகழ் - மிக்ககீர்த்தியையுடைய — கோரக்கன் - கோரக்கனென்போன் — அவண் - அவ்விடத்துத்தானே — மன்

வினான் - நிருவிகற்பசமாதியினிலைத்தனன். எ - று. ஆல்-அசை. உடலை வடிவென்பதுவிட் டுண்மையலாவனைத்தையு நீத்தெனப்பதனால் சர்வம் மித்தையெனலையும், உண்மைகண்டு தானதனையடைந்தெனப்பதனால் சர்வம்பிரமமெனலையும், தானதுவென்னுமருளகன்று தானேயாகியென்பதனால் சர்வம்நானெனலையும் பெற்றாம். கோரக்கன் அதிர்த்திட்டு விட்டு நீத்து கண்டு அடைந்து அகன்று தானேயாகி மன்னினன் எனக்கூட்டிமுடிக்க. தானதனையடைந்தென்றதாவது; தானதுவாகப்பழகலே. தானதுவென்பதை மருளெனக்கூறியது; தானுடலானால் தான்சைதன்யமாகலாம் தானிரண்டுமென்மையின் சுத்தவாசனையும் நீங்கற்கென்க. (௯௩)

கோரக்கர்கதி - முற்றிற்று.

ஆ. கதி - ௧௯ - இ - விருத்தம் - ௯௪௯.

இருபதாவது

முனிவர்கதி.

வேறு.

பனிவரை மகளொடு பவள வார்சடைத்
தனிவரை யமர்திருச் சயில நீங்கியே
துனிவரை யல்லமன் சுருதி மெய்ப்பொருண்
முனிவரை யுணர்த்திய முறைமை கூறுவாம்.

(இ - ள்.) பனிவரை - இமயமலைராசனது—மகளொடு - மகளாகிய உமையவளோடு—பவளம் - சிவந்த—வார் - நீண்ட—சடை - சடையையுடைய—தனி - ஒப்பற்ற—வரை - மலைபோன்றபரமசிவன்—அமர் - எழுந்தருளிய—திருச்சயிலநீங்கி - ஸ்ரீசைலத்தைவிட்டுநீங்கி—துனிவரை - பிறவித்துன்பமகன்ற—அல்லமன் - அல்லமதேவன்—சுருதி - வேதமுடிவாகிய—மெய்ப்பொருள் - உண்மைப்பொருளை—முனிவரை - இருஷிகளுக்கு—உணர்த்தியமுறைமை - தெரிவித்தவகையை—கூறுவாம் - சொல்லுவாம். எ - று. பனிவரை இடவாகுபெயர். தனிவரை உவமையாகுபெயர். பிறவியின் மிக்கதுன்பமின்மையின் துனியென்றார். (௧)

அருந்தவ முயன்றகோ ரக்கற் கம்முறை
விரிந்தறி வுருவமா மெய்ம்மைத் தன்மையைப்
பரிந்தரு ளமலனப் பாலு முத்தரம்
பொருந்துநர் தமக்கருள் புரியப் போயினான்.

(இ - ள்.) அருந்தவமுயன்ற - அரியதவத்தைச்செய்த—கோரக்கற்கு - கோரக்கதேவருக்கு—விரிந்து - வியாபித்து—அறிவுருவமாம் - அறிவேவடிவாகிநிறைந்துள்ள—மெய்ம்மைத்தன்மையை - உண்மையியல்பை—பரிந்தருள் - விரும்பியனுக்கிரகித்த—அமலன் - அல்லமன்—அப்பாலும் - அதற்கப்புறமும்—உத்தரம்பொருந்துநர்தமக்கு - வடக்கிலுள்ளமுனிவர்களுக்கு—அருள்புரியப்போயினான் - அனுக்கிரகிக்கப்போயினன். எ - று.

நல்லன தீயன நாடு றுகொள்
வல்லழ லெனவருண் மழையெ னப்படு
மல்லம னெதிர்ந்தவ ரறமு ளாரற
மில்லவ ரெனுதறி வியற்றி னனரோ.

(இ - ள்.) நல்லன தீயன - இவை நல்லனவென்றுந் தீயனவென்றும் — நாடுறுகொள் - என்னுதெரிக்கின்ற — வல்லழலென - கொடியவக்கினி போல — அருண்மழையெனப்படும் - கிருபாமாரியென்னப்பட்ட — அல்லமன் - அல்லமதேவன் — எதிர்ந்தவர் - எதிரேகாணப்பட்டவர்கள் — அறமுளார் - ஒழுக்கமுடையோர், — அறமில்லவர் - ஒழுக்கமில்லாதவர் — என்று - என்றுபாராது — அறிவியற்றினன் - ஞானோபதேசஞ்செய்தான். எ - று. அரோ - அசை. அக்கினிபோற் பருவம் பாராதனுக்கிரகித்தனனென்க. இங்கே கொள்ளுதல் எரித்தலை. (௩)

யாவருந் தனதருட் கேற்று ளாரெனப்
பாவவன் றளையறப் பரிந்து நன்னெறி
மேவவந் தருள்புரி விமல னாயிடை
மாவழங் குறுமொரு வனத்திற் போயினான்.

(இ - ள்.) யாவரும் - எவர்களும் — தனதருட்கு - தனதுகிருபைக்கு — ஏற்றுளாரென - பாத்திரராவரென்று — பாவம் - பாவமென்னும் — வன்றளையற - வலியபந்தநீங்க — பரிந்து - விரும்பி — நன்னெறிமேவ - மேலாயநிலையடைய — வந்தருள்புரிவிமலன் - வந்தநுக்கிரகஞ்செய்யுமல்லமன் — ஆயிடை - அவ்விடத்தில் — மாவழங்குறும் - மிருகங்கள் சஞ்சரிக்கின்ற — ஒருவனத்திற்போயினான் - ஒருகாட்டிற்பிரவேசித்தான். எ - று. ஞானிகள் ஞானங்கள் சுத்தாசுத்த பாவமாதலானும் அவையகலாக்காலுந் தனதுண்மைநிலை யினையடைதனக்காணப்படாதாதலானும் பாவவன்றளையறவெனவும், அங்ஙனமகற்றியைந்த நெறியளித்தலால் நன்னெறிமேவ வந்தருள்புரியெனவுங் கூறினாரென்க. யாவருந்தனதருட் கேற்றுளா ரென்றது சிவகாருண்யத்தைக் காட்டற்கென்க. (௪)

அக்கொடு வனத்தெதி ரன்பென் கின்றதுட்
புக்கறி விலாவொரு புளினன் கூன்புறக்
கொக்கென நாடொறுங் கொலைகு றித்தவன்
கைக்கொடு மரமொடு கடிது தோன்றினான்.

(இ - ள்.) அக்கொடுவனத்து - அந்தக்கொடியகாட்டில் — எதிர் - தனக்கெதிரில் — அன்பென்கின்றதுள் - இரக்கமென்னுமிலேயுள் — புக்கறிவிலா - என்றும்போயறியாத — ஒருபுளினன் - ஒருவேடன் — கூன்புறம் - கூனைப்புறமாகவுடைய — கொக்கென - கொக்கைப்போல — நாடொறும் - நாள்தோறும் — கொலைகுறித்தவன் - கொலையையேவிரதமாகக்குறித்தவனாய் — கைக்கொடுமரமொடு - கையிற்கொண்டவில்லோடு — கடிதுதோன்றினான் - விரைவிற்காணப்பட்டான். எ - று. இங்கே அன்பென்பது இரக்கத்தை. கூன்புறமென்றது முதுகைவேறும் எழுத்தைபேறும் பொருந்தும். (௫)

அன்பனுக் கண்ணிடந் தப்பும் வேடனுக்
கின்பமீ குதல்புகழ்க் கேற்ற தன்றுநான்
வன்பனுய்த் திரியுமிம் மறவற் காப்பலென்
றென்பொலா நெறிமன மிரங்கிற் றென்றனன்.

(இ - ள்.) அன்பனாய் - அன்பிற்சிறந்தவனாய் — கண்ணிடந்தப்பும் - தனதுகண்ணைப்பிடுங்கிப் பரமசிவன்முகத்திலப்பிய — வேடனுக்கு - கண்ணப்பநாயனாருக்கு — இன்பமீகுதல் - பேரின்பத்தைத்தருதல் — புகழ்க்கேற்றதன்று - கீர்த்திக்கியைந்ததன்று — நான் - யான் — வன்பனாய்த்திரியும் - கொடியபாவியாய்த்திரிகின்ற — இம்மறவன்காப்பலென்று - இந்தமறவனை யிரட்சிப்பேனென்றுசொல்லி — என்பொலா - எனதுபொல்லாத — நெறிமனம் - நெறியுள்ளமனம் — இரங்கிற்று - இரங்கியது — என்றனன் - என்றல்லமன்கூறினான். எ - று. ஏ - அசை. அன்பனாய்க்கண்ணிடந்தவனைக் காத்தலினும் வன்பனாய்த்திரியும் இம்மறவனுக்குப் பேரின்பந்தந்துகாத்தல் புகழாதலின், அன்பனாய்க்கண்ணிடந்தப்பும் வேடனுக்கின்ப மீகுதல் புகழ்க்கேற்றதன் றென்றார். எனவே, அன்பனுக்கின்ப மீதலெளிது வன்பனுக்கின்பமீதலரிதெனப்பெறும். பெறவே, அப்குருவினையும் பக்குவனுக்கும் வலியுடைமையைக் குறிப்பிக்கக்கண்டாம். (௬)

நல்லறி வவனுள நடுதற் கொப்பிலா
வல்லமன் வினையற வருட்கண் வைத்தனன்
கொல்லையின் விதையிடக் கொழுப்புக் காமுனி
புல்லெரி யுறவழற் போகட் டென்னவே.

(இ - ள்). நல்லறிவு - உண்மைஞானத்தை — அவனுளநடுதற்கு - அவனுளத்தினடுதற்கு — ஒப்பிலாவல்லமன் - உவமைகடந்தவல்லமதே

வன்—வினையற - இருவினையுமற —அருட்கண்வைத்தனன் - திருபார்நோக்கம்வைத்தான் —கொல்லையின் - கொல்லையின்கண்—விதையிட - விதையிடுவான்வேண்டி—கொழுப்புக்கா - எருவுக்காக—முளி - முள்ளிச்செடிகளும்—புல் - புல்லுகளும்—எரிவுற - தீமூள —அழல் - நெருப்பை—போகட்டென்ன - போட்டாற்போல. எ - று. ஏ - அசை. நல்லறிவென்றதனுண்மை ஞானமெனவும், வினையென்றதனுல் இருவினையெனவும் கொண்டாம். மூளியென விடைக்குறை. (௭)

மேவுதீ வினையெலாம் விளிந்து நாயனுய்ப்
பாவியே னுய்வகை பகர்தி யென்றனன்
மாவலால் வழங்குறு வனத்தில் வேட்டுவன்
யாவர்தா மிறையரு ளெய்தி னுய்ந்திடார்.

(இ - ள்.) மேவுதீவினையெலாம் - தொன்றுதொட்டுவந்த தீவினையனைத்தும்—விளிந்து - நசித்து—நாயனுய் - புனிதனாய் —பாவியேன் - பாவியாகியயான்—உய்வகை - பிறவிகடக்கும்வகையை—பகர்தியென்றனன் - தெரிவிக்கவேண்டுமென்றுகேட்டனன்—மாவலால் - மிருகங்களின்றி—வழங்குறு - யாவருஞ்சஞ்சரித்தற்கிடம்பெருத —வனத்தில் - காட்டில் —வேட்டுவன் - வேடன் —யாவர்தாம் - எவர்கள்தாம்—இறையருளெய்தின் - சிவத்தினருள்கிடைக்கில்—உய்ந்திடார் - பிழைக்கமாட்டார்கள். எ - று. தன்னைமறந்த மறதிகாரணமாக வெய்தும் வினைகள் பிறவி நோய்க்கேதுவாதலின் மேவுதீவினையெலாமென்றார். யாவர்தாமென்ற தாபசனைக்குறிக்க. (௮)

அறிவெனும் வேலினு லைம்பு லன்களா
மறியின மருளெனும் வலையைத் தப்புறு
நெறிகுவை யெனினுனக் கில்லை துன்பெனு
நெறியினை வழுவற நிமலன் கூறினான்.

(இ - ள்.) அறிவெனும்வேலினுல் - அறிவென்னும்வேலாயுதத்தால்—ஐம்புலன்களாமறியினம் - ஐம்புலன்களாகிய மானினங்கள்—அருளெனும் வலையை - அருளாகியவலையினின்றும் —தப்புறா - தப்பிப்போகாமல்—எறிகுவையெனின் - எறிவையாயின் —உனக்கில்லைதுன்பெனு—உனக்குத்துன்பமில்லையென்று —நெறியினை - இனிப்பிறவாநெறியை—வழுவற - ஐயந்திரிபற—நிமலன்கூறினான் - அல்லமன்விளக்கினான். எ - று. அறிவெனும்வேல், ஐம்புலன்களாமறியினம், அருளெனும்வலை, இவை யுருவகம். (௯)

அறிவொடு மனந்தனை யம்ப தாகநான்
குறியெனு மெய்மையே நுமர வென்றனைப்
பொறிமதி லிலங்கைமுன் புரந்து ளான்றலை
பறிபட வெய்தவன் பணியு மென்றுமே.

(இ - ள்.) அறிவொடுமனம் - அறிவும்மனமும் —சிலையம்பதாக - வில்லாகவு மம்பாகவும்வைத்து—நான்குறியென - எல்லையிலக்காக—மெய்மையே - விடுவையாயின்—நுமர - ஆண்டகையோனே—நின்றனை - உன்னை—பொறி - சித்திரங்களமைந்த—மதில் - மதிலையுடைய —இலங்கை - இலங்காபுரியை —முன்புரந்துளான்றலை - முன்னேயாண்டவிராவணனது தலைகளின்—பறிபட - துணியுமாறு—எய்தவன் - பாணமெய்தவிராமன்—பணியுமென்றும் - எப்போதும்வணங்குவன். எ - று. ஏ - அசை. அறிவொடுமனந்தனையம்பதாக; நேர்நிரனிறை யுருவகம். (௰)

இப்பரி செறுழ்வலி யெயின னுய்வகை
செப்பினன் னிலையருள் செய்தி ருத்தியே
யப்புற மருளுடை யமலன் போம்பொழு
தொப்பறு தவவன மொன்று தோன்றிற்றே.

(இ - ள்.) இப்பரிசு - இவ்வண்ணம் —எறுழ்வலி - மிக்கவலியையுடைய—எயினன் - வேடன்—உய்வகைசெப்பி - துன்பத்தினின்றகலு நெறியைச்சொல்லி —நன்னிலையருள்செய்து - திரநிசயானந்தவாழ்வையநுக்கிரகித்து—இருத்தி - நிலைகலங்காதிருக்கச்செய்து—அப்புறம் - அவ்விடத்தினின்று—அருளுடையமலன் - கிருபாமயமானவல்லமன்—போம்பொழுது - போகும்பொழுது—ஒப்பறு - ஒப்பில்லாத—தவவனமொன்று - ஓர்தபோவனம் —தோன்றிற்று - எதிர்க்காணப்பட்டது. எ - று. ஏ - அசை. எறுழ்வலி; மீமிசைப்பதம். (௧௧)

கோடமை கரிகளுங் கொடிம டங்கலும்
பாடமை பகைதவிர் பரிசி னுனதற்
காடர வொடுமதி யமர்பி ரான்சடைக்
காடல தமைமையாங் கண்ட தில்லையே.

(இ - ள்.) கோடமைகரிகளும் - கொம்புள்ளயானைகளும் —கொடிமடங்கலும் - கொடியசிங்கங்களும் —பகைதவிர் - பகைதவிர்ந்து—பாடமைபரிசினால் - மேம்பாடமைந்ததன்மையால்—அதற்கு - அந்நிலைமைக்கு

கு — ஆடரவொடு - ஆடுகின்ற பாம்போடு — மதியமர் - சந்திரனமர்ந்த — பிரான் - பரமசிவனது — சடைக்காடலது - சடாடவியேயன்றி — உவமை - உபமானம் — யாங்கண்டதில்லை - யாமெவ்விடத்துங்கண்டதில்லை. எ - று. வ - அசை. யானையுஞ்சிங்கமும் பகையின்றித் திருங்காடாதலால் அக்காடு பாம்புஞ் சந்திரனும் பகையின்றி அமர்ந்த பரமசிவனது சடாடவிக்கு உவமைகூறப்படுவதல்லது வேறின்றென்க. (௧௨)

பெயர்க்குறு காலகன்னை யாகப் பெற்றவு
முயிர்க்குறு நாசிகை யாக வுள்ளவு
மயக்குறு தீயினை வளர்த்து வான்புனல்
பயக்குறு முனிவரர் பணிகள் செய்பிரால்.

(இ - ள்.) பெயர்க்குறு - நடக்கற்கேதுவாய — காலகள் - காலகளை — கையாகப்பெற்றவும் - கைகளாகப்பெற்றிருப்பவைகளும் — உயிர்க்குறு - சுவாசம்விடுதற்கேதுவாய — நாசி - மூக்கை — கையாகவுள்ளவும் - கையாகப்பெற்றிருப்பவைகளும் — மயக்குறு - குற்றமில்லாத — தீயினைவளர்த்து - யாகம்வளர்த்து — வான்புனல்பயக்குறும் - மழைபெய்யச்செய்யும் — முனிவரர் - ரிஷிகளுடைய — பணிகள்செய்யும் - குற்றேவல்களைச்செய்யும். எ - று. ஆல் - அசை. புலிமுதலியவைகளைப் பெயர்க்குறுகால்கள்கையாகப் பெற்றவுமெனவும், யானை யாளிமுதலியவைகளை உயிர்க்குறுநாசிகையாகவுள்ளவுமெனவுங் கூறினாரென்க. மயக்குறுதீயென்றது; வேதவிதிக்கு முரணுதிற்றும்யாகத்தைப் பெற்றவுமுள்ளவுமெனல் வினையாலணையும்பெயர். (௧௩)

மறைபல வோதுநர் மகம்வ ளர்க்குநர்
கறைமிட றுடையநங் கடவுள் பூசனை
முறைவழி புரிகுநர் மூச்ச விந்தொரு
தறிபோல வசைவற விருக்குந் தன்மையார்.

(இ - ள்.) மறைபலவோதுநர் - பலசாகைகளையுடைய வேதங்களை யோதுபவர்களும் — மகம்வளர்க்குநர் - யாகம்வளர்ப்பவர்களும் — கறைமிடறுடைய - நீலகண்டத்தையுடைய — நங்கடவுள்பூசனை - நமது கடவுளாகிய சிவபூசையை — முறைவழிபுரிகுநர் - விதிப்படி செய்பவர்களும் — மூச்சவிந்து - மூச்சடக்கி — ஒருதறிபோல - ஒரு தம்பத்தைப்போல — அசைவறவிருக்கும் - அசைவின்றியிருக்கும் — தன்மை

விதிமார்க்கநெறிச்சேறலை க
யார் - நிலையையுடையவர்களும். எ - று. (௧௪)
றையிடனுடைய நங்கடவுள்பூசனை முறைவழிபுரிகுநர் என்றார்.

வேறு.

ஆயி ருக்கு மருந்தவர் தங்கள்பாற்
போயி வர்க்குறு போதனை யாற்பவ
நோய கற்றுவ லென்று நுவன்றனன்
றாயெ னக்கொரு தாயொ ருமல்லமன்.

(இ - ள்.) ஆயிருக்கும் - இங்ஙனமாகவிருக்கும் — அருந்தவர்தங்கள் பாற்போய் - அரியதவஞ்செய்பவர்களிடத்திற்போய் — இவர்க்குறுபோதனையால் - இவர்களுக்கியைந்தவாறு போதிக்குந்தன்மையால் — பவநோய் அகற்றுவலென்று - அவர்கள்சென்னநோயை நீக்குவனென்று — நுவன்றனன் - சொல்லினன் — எனக்கு - அடியேனுக்கு — ஒருதாய்தானெனும் - தாய்போல்வருமென்றுகோடற்கியைந்த — அல்லமதேவன் - அல்லமன். எ - று. அவரவர்க்கியைந்தவாறு போதித்து விளக்கவேண்டியதாதலால் இவர்க்குறுபோதனையா லென்றார். (௧௫)

நோற்று நோன்புட னைந்து வருந்துவீர்
பாற்று நீர்மக மாதி வினையினுள்
மாற்று மாயை மலஞ்செறு விற்படு
சேற்றி னுங்கழுஞ் சேறு நிகர்க்குமால்.

(இ - ள்.) நோற்றுநோன்பு - பலவாறுயவிரதங்களைச்செய்து — உடனைந்து - தேகமிளைத்து — வருந்துவீர் - வருந்தப்படுவீர்களே — ஆற்றுநீர்மகமாதி - யாகாதிகிரியைகளைச்செய்தீர்கள் — வினையினுள் - கருமத்தால் — மாற்றும் - நீக்கற்கியைந்த — மாயைமலம் - மாயாமலமானது — செறுவிற்படு - வயலிலுள்ள — சேற்றினும் - சேற்றினிலே — கழுஞ்சேறு - கழுவும் சேற்றை — நிகர்க்கும் - ஒத்திருக்கும். எ - று. ஆல் - அசை. வருந்துவீர் கருமத்தால் நீக்கற்கியைந்த யாகாதிகிரியைகளாலும் பலவாறுயநோன்புகளாலும் உடல்மெலிந்து மாயாமலம்போக்கநினைதல் சேற்றைச் சேற்றாற்கழுவுதல்போலுமென்க. எனவே, மாயாமலம் விசார ஞானத்தாலன்றி யகலாதெனப் பெறும். (௧௬)

ஞானங் கொண்டு நனுகுநு மெய்யது
மூனங் கொண்ட கருமந் தழுவுது

ஞானங் கொண்டு வளர்த்தல் புகையதா
மானங் கொண்டு வளர்த்தலை போக்குமால்.

(இ-ள்.) ஞானங்கொண்டு - விசாரஞானங் காரணமாக — ஈறும் - அடைதற்கியைந்த — சிவபதம் - சாயுச்சியபதவியை — எனைக்கொண்ட - இழிவுள்ள — கருமத்து - யாகாதிசெயபுண்ணியகருமங்களால் — உறுவது - அடைவது — வானங்கொண்டு - உலர்ந்தமரங்கொண்டு — வளர்த்தல் - வளர்த்தலாலுறுவது — புகை - புகைப்படலம் — (அதுவே) அநுமானங்கொண்டு - அநுமானங்காரணமாக — வளர்த்தலைபோக்கும் - வளர்த்தலைக் கொப்பாகும். எ-று. ஆல் - அசை. விசாரஞானத்தா லெய்தற்கியைந்த சிவபதம் சிவபூசைமுதலியகருமங்களா லெய்துமென்க்கோடல்; விறகு கொண்டு வளர்த்தலாலெய்தும்புகை சந்தேகத்தால் வளர்த்ததுக்கொப் பாகும் எனப்பொருள்கொள்க. கருமமென்றது ஞானங்கொண்டவென் றடைகொடுத்தது இழிபுடைமைகாட்டற்கென்க. இழிபுடையதாகருமத் தால் சிவபதமெய்துமாயின் அநுமானங்கொண்டு வளர்த்தலால் புகையெ ய்தும், இங்ஙனமின்றேல் அஃதனையுமின்றாம். வானங்கொண்டு வளர்த் தல் புகையெனல் ஞாயஞ்சோதனை பொருத்தங்கட் கியையுமாறுபோ ன்று ஞானங்கொண்டு சுருமஞ் சிவபதமெனவிசையயும். (கஎ)

ஞெமியி யங்கிரி யொப்பக் குவித்தபுற்
சுடுதல் கொண்டு பிறவி சுடப்படா
தைம்பு லன்க ளறிவெனு மங்கியிற்
சுடுதல் கொண்டு பிறவி சுடப்படும்.

(இ-ள்.) ஞெமியி - மிகத்தையுடைய — அம் - அழகிய - கிரியொப்ப - மலைக்கொப்பாக — குவித்தபுல் - ராசியாகக்குவித்தபுல்லின — சுடுதல் கொண்டு - சுடுதல்காரணமாக — பிறவி சுடப்படாது - பிறவியெரிக்கப்ப டாது — அபி - உயிர்களைவதைக்கின்ற — புலன்கள் - ஐம்புலன்களையும் — அறிவெனுமங்கியில் - அறிவென்னுமக்கினியில் — சுடுதல்கொண்டு - எரித் தல்காரணமாக — பிறவிசுடப்படும் - பிறவியெரிக்கப்படும். எ-று. இங் கே புல்லென்றது தருப்பையை. பிறவிநாசம் யாகாதிகருமத்தாலன்றெ னவும் மெய்யுணர்வுமேலிட்டாலாமெனவும் அவ்வைப் பொருள்கிடந்தவெ ன்க. யாகாக்கினிவளர்த்தல் இழிபுடைதாகத் துக் கிடபின்மையின் பிறவிவ ளர்த்திடமாமெனவும் ஞானக்கினிவளர்த்தல் இழிபுநீருதற் கிடமாதலி ன் பிறவிநசித்தற் கிடமாமெனவுங்கொள்க. அறிவெனுமங்கி உருவகம். புலி

யியங்கிரியொப்பக் குவித்தபுல்லென்றதனால் மிக்கபெரிதாகிய யாகமெ னப் பெற்றும். யாகாக்கினிமுதலியவற்றாற் பயனின்றென்பது கருத்து.

போத மாரும் புனிதத் தழலினுட்
பேத பாவனைப் பேரவி பெய்வனே
லாதி சேருடை மாசி யவனென
வேதம் யாவும் விளங்க விளம்புமே.

(இ-ள்.) போதமாரும் - மெய்யுணர்வென்னும் — புனிதத்தழலினுள் - பரிசுத்தமாகியவக்கினியில் — பேதபாவனை - பேதபாவனையென்னும் — பேரவி - மிக்கநெய்யை — பெய்வனேல் - சொரிவனாயின் — ஆதி - மூலப் பிரகிருதியென்னும் — சோ - அரணை — உடை - உடைக்கின்ற — மாசி - மேகம் — அவனென - அவனேயென்று — வேதம்யாவும் - வேதங்களனை த்தும் — விளங்க - யவர்க்கும்புலப்படுமாறு — விளம்பும் - சொல்லும். எ-று. ஏ - அசை. போதமாரும்புனிதத்தழல், பேதபாவனைப்பேரவி, இவ்வுருவகம். பேதபாவனை; சிவம்வேறு தான்வேறெனக்கோடலை. தான்விளங்காமைக்குக்காரணம்; மூடாக்காரணமாக வெய்தியபஞ்சகோ சவரணதலினும் அதனைநீக்கிரக்காவிடத்துத் தான்விளங்குறுமெனு மையினும் ஆதிசேருடையெனவும், சத்தமேகங்களை ஒருங்குகூடிப் பெய்யுதி நசிவுறுத வரனொன்றுமின்று இன்மையின் இவனை மாசியெ னவுங் கூறியதாகப் பெற்றும். (கஅ)

மறையி னுள்ள கரும மனவினை
வறியர் கொள்ளுதல் போல மதியருஞ்
சிறியர் கொள்வர் தெளிதத் துவமசி
யறிஞர் கொள்வ ரணிகொளுஞ் செல்வர்போல்.

(இ-ள்.) மறையினுள்ள - வேதத்திலுள்ள — கருமம் - கர்மானுஷ் டானத்தை — மனவினை - மனோசாஞ்சல்யத்தை — வறியர்கொள்ளுதல் போல - தாரித்திரியர்கொள்ளுமாறுபோன்று — மதியருஞ்சிறியர் - புத் திகெட்டமூடர் — கொள்வர் - ஏற்றுக்கொள்வர் — அணிகொளும் - சிறப்பு வாய்ந்த — செல்வர்போல் - பாக்கியவான்களைப்போல — தெளி - ஐயந்தி ரிபகற்றதெளிந்த — தத்துவமசி - தத்துவமசியென்னு மகாவாக்கியசாம்பி ராச்சியத்தை — அறிஞர்கொள்வர் - அறிவுடையோரேற்பர். எ-று. மன வினை வறியர்கொள்ளுதல்போல மறையிலுள்ள கர்மஞ் சிறியர் கொள்வ

ரெனவும் அணிகொளுஞ்செல்வர்போல் தெளிதத்துவமசி அறிஞர்கொ ள்வரெனவும் பிரித்துக் கூட்டிப் பொருள்கொள்க. (௨௰)

என்று கூற விருந்தவ ரன்பொடு
நின்று ஞான நெடுந்தகை தாண்மிசை
யின்று நீவர வெத்தவஞ் செய்தன
மன்ற யாமென வாழ்த்தி வணங்கினர்.

(இ-ள்.) என்றுகூற - என்றல்லமன்சொல்ல—இருந்தவர் - அங்கிருந்தவடியார்கள்—அன்பொடுநின்று - மிக்கவன்போடெதிரினின்று—ஞானநெடுந்தகை - ஞானமென்னும் பெருந்தன்மையையுடைய அல்லமனது—தாண்மிசை - திருவடிகளின்மேல்—யாம் - நாம்—மன்ற - மிகவும்—இன்று - இப்போது—நீவர - தேவரீரெழுந்தருளிவருதற்கு—எத்தவஞ்செய்தனமென - என்னமகாதவஞ் செய்தனமோவென்று—வாழ்த்திவணங்கினர் - துதித்துவணங்கினர். எ-று. பெருந்தகை; அன்மொழித்தொகை. இருந்தவர் நின்று வாழ்த்திவணங்கினர் எனக்கூட்டி முடிக்க. (௨௧)

மாயை தோன்றிய ஞான்று மனத்தினை
மூய மோக முடிந்திடச் செம்மலர்
வாயி னாற்றுரு வாசன சொலப்படுந்
தூய னுமிவ னென்று துதித்தனர்.

(இ-ள்.) மாயைதோன்றியஞான்று - மாயையென்பவள்பிறந்தகாலத்தில்—மனத்தெழுமூய - மனதிலெழுந்துமூடிய—மோகமுடிந்திட - பிரார்த்திக்க—செம்மலர்வாயினால் - செந்தாமரைமலர்போன்றவாயினால்—துருவாசன் - துருவாசனென்னுமுனிவன்—சொலப்படும் - முன்னேசொல்லியிருக்கின்ற—தூயனுமிவனென்று - பரிசுத்தவானிவனேயென்று—துதித்தனர் - துதிசெய்தனர். எ-று. துருவாசனால் சொல்லப்பட்டவன் இவனேயெனத்துதித்தனரென்க. (௨௨)

இன்ன வாறிங் கிருந்தவ ரின்புற
மன்னு ஞான மறைமொழி கூறியே
தன்னை மேவுந் தலைமை புரிந்தன

(இ-ள்.) இன்னவாறு - இவ்வண்ணம்—இங்கிருந்தவர் - இவ்விடத்திருந்தவர்கள்—இன்புற - இன்பமடைய—மன்னு - நிலைபெற்ற—ஞானமறைமொழி - ஞானமாகியரகஸ்யமொழிகளை - கூறி - சொல்லி—அன்னைபோலும் - தாய்போலுகின்றுள்ள—நம்மல்லமதேவன் - நமதல்லமதேவனென்போன்—தன்னைமேவும் - தன்னைத்தானடையும்—தலைமைபுரிந்தனன் - தலைமையைச்செய்தனன். எ-று. அல்லமதேவன் கூறித் தலைமைபுரிந்தனன் எனக்கூட்டிப் பொருள்கொள்க. (௨௩)

முனிவரர்கதி - முற்றிற்று.

ஆ. கதி - ௨௰ - இ - விருத்தங்கள் - ௯௯௯.

இருபத்தோராவது

சூனியசிங்காதனகதி.

வேறு.

அல்லமனை யறிதற்கோ ரறிகருவி யாகவுனிச்
சொல்லரிய வெழுநிலைப்பொற் சூனியசிங் காதனமொன்
றில்லையென வில்லையெனு மெங்கள்குரு வசவேசன்
மல்லலுற வினிதாற்றி வைகுமுறை வகுத்துரைப்பாம்.

(இ - ள்.) அல்லமனையறிதற்கு - அல்லமனிவரயனென்றறிதற்கு — ஓரறிகருவியாக - ஓரடையாளமாக — உனி - நினைந்து — சொல்லரிய - சொல்லுதற்கரிதாயுள்ள — எழுநிலை - எழுநிலைமையுடைய — பொன் - அழகிய — சூனியசிங்காதனமொன்று - ஒருசூனியசிங்காதனத்தை — இல்லையெனவில்லையெனும் - பொய்யெனத்தகையவதைப் பொய்யென்றுகூறும் — எங்கள்குரு - எமதுகுருவாகிய — வசவேசன் - வசவேசனென்போன் — மல்லலுற - அலங்காரந்தங்க — இனிதாற்றி - நன்றாகச்செய்து — வைகுமுறை - தங்கும்விதத்தை — வகுத்துரைப்பாம் - வகுத்துச்சொல்லுவாம். எ - று. வினையர்போலப் பொய்யைமெய்யெனக்கொள்ளாதவனென்பதுதோன்ற இல்லையெனவில்லையெனு மெங்கள்குருவசவேசனென்றார். இல்லையெனல்; தனக்கெனச்சொரூபமொன்றில்லாதசகவியபரங்களை; இதனை வஸ்துபரிசோதனையாற்காணலாம். இல்லையெனல் என்பது அறிவின்பிரிதிபலனமாகிய வபிப்பிராயமை. எழுநிலையாவது; சப்தச்சைசுமூகலிபவுத்தை.

ஒடுக்குமனம் விட்டுவெளிக் கொருதுணையா கும்புறந்து (௧)
நடக்குமன நிரயவழி நடப்பதற்குத் துணையாமென்
றிடக்கர்மன மடக்கும்வகை யெம்பிரா னியம்பியவா
றடக்கமன முறுநெறியி னருணந்தி தலைப்பட்டான்.

(இ - ள்.) ஒடுக்குமனம் - மனோநாசம் — வீட்டுவெளிக்கு - முத்திமார்க்கத்துக்கு — ஒருதுணையாகும் - ஒருதுணைக்கருவியாம் — புறந்துநடக்கும்

மனம் - பகிர்முகமாகச்செல்லுமனம் — நிரயவழிநடப்பதற்கு - நரகநெறிச்சேறற்கு — துணையாமென்று - துணைக்கருவியாகுமென்று — இடக்கர்மனம் - ஒருங்குபடற்கிடக்காயுள்ளமனத்தை — அடக்கும்வகை - அடக்குந்தரும்விதத்தை — எம்பிரானியம்பியவாறு - அல்லமன்சொன்னபடி — அடக்கமனமுறுநெறியின் - மனமடக்கற்கியைந்தமார்க்கத்தில் — அருணந்தி - கிருபைபொருந்திய வசவண்ணன் — தலைப்பட்டான் - பிரவேசித்தான். எ - று. மனத்தையொடுக்கல்; எப்பொருளைத்தன்மைத்தாயினும் அவ்வப்பொருளைக் காரணகாரியமிறக்கச்செய்தலாலும், மனதைப்புறத்து நடத்தல் அவ்வப்பொருளைச் சோதனைசெறிந்தாராது அங்ஙன மங்ஙனங் காண்டற்கியைவதாலும் எய்துமென்க. காரணகாரியமிறக்கச் செய்தலாலெய்துபயன் மனதுக்குப் புடைபெயர்ப்புக் கிடமின்மையின் வீட்டினெறிக் கொருதுணையாகுமெனவும், காரணகாரிய மிறக்கச்செய்யாமையாலெய்துபயன் மனதுக்குப் புடைபெயர்ச்சி தவிர்தற்கிடமின்மையின் நிரயவழிநடப்பதற்குத் துணையாமெனவுங் கூறியதாகப் பெறும். பொருளல்லாததைப் பொருளாகச்சேறலின் இடக்கர்மனமென்றார். இன்னனம் பொருள்கொள்ளாது யோகநெறித்தாரும். அவர்கருத்திஃதன்று. புறத்துநடக்குமனம் பகிர்முகமென்றதனால் ஒடுக்குமனமென்பது அந்தர்முகமாகக்கொள்க. கையை வைகுந்தருத்தலாகக்கூறு மெய்வெப்பதலிகளும் அந்தர்முகத்ததெனற்கியையாமையின் அவற்றைநிரயவழியெனக் குறிப்பித்தார். தன்னைமறந்த மறதியாகிய காரணசரீரத்திற்கிடமின்மையின் நிரயமெனலே பொருந்தும். அன்றெனில், சேதனாசேதனங்களாற் கூறுக. ஒழியின்மேல் முரணாக. (௨)

நில்லாது போமனத்தைக் கால்பிடித்து நிறுத்தியே
வில்லாரு மதியமுதம் விருந்திட்டு நட்புநீஇப்
பொல்லாத புலனுகரப் புறத்துநிலை தடுமாறிச்
செல்லாம லுடன்கொண்டு சித்திரமொத் திருந்தனனால்.

(இ - ள்.) நில்லாதுபோமனத்தை - தனதுவசத்தடங்காதுசெல்லுமனத்தை — கால்பிடித்து - பிராணவாயுவினிலக்கணத்தைக்கடைப்பிடித்து — நிறுத்தி - அதனைச்சலியாதுநிறுத்தி — வில்லாரும் - பிரகாசம்பொருந்திய — மதி - குண்டலிசத்தியென்னும் பூரணமதியின் — அமுதம்விருந்திட்டு - அமுதத்தைத்துறைகொண்டு — நட்புநீஇ - அதன்கண்பற்று — பொல்லாதபுலனுகர - பொல்லாதபுலன்களினெறித்தாவிடயங்களையநுபவிப்பான் வேண்டி — புறத்து - புறம்பிற்செல்லும் — நிலைதடுமாறி - நிலைபிறழ்ந்து —

செல்லாமல் - மாறிச்செல்லாமல்—உடன்கொண்டு - மனைத்தன்வயப் படுத்தி —சித்திரமொத்திருந்தனன் - சித்திரப்பிரதமைபோ லிருந்த னன் எ - று. ஆல் - அசை. பிராணவாயுவைப் பற்றவேண்டியவாறு பற்றலைக் கால்பிடித்தென்றும், பூரணசந்திரனைப்போல் சீதளிரனைந் ந்து வுபசாந்தப்படுத்தலின் குண்டலிசத்தியை யில்லாருமதியமுதமென் றும், அன்னமாய வோரநுபூதிமேலாய வனுஷ்டானத்ததாதலின் பொ ல்லாதபுலனுகரப் புறத்துநிலைதமொறிச் செல்லாமலென்றும், இந்தச்சு வாநுபூதி நிலையினின் றகலாமையால் உடன்கொண்டு சித்திரமொத்திருந் தனனென்றுங் கூறினர். (௩)

நின்றமனங் கொண்டுதா னித்தமாந் தனையுணர்த்த
வென்றுவரு ஞானகுரு வெனவெழுந்து வளர்காத
லொன்றுமொழி வறநிற்ப வுவப்பதுல கிற்பொருள்வே
றின்றியரு ணந்திபிரா னெந்தைவர வினைநோக்கி.

(இ - ள்.) நின்றமனங்கொண்டு - சித்திரமொத்துநின்ற மனஞ்சாரண மாக—ஞானகுருதான் - ஞானாசிரியன்—நித்தமாந்தனையுணர்த்த - நித்தி யமாகின்றுள்ள வாத்மஸ்வரூபத்தைத்விளக்க —என்றுவருமென - என் னைக்குருவருவாரேவென்று—எழுந்துவளர் - விசாரமேலீட்டாலெழுந்து வளர்கின்ற—காதலொன்றும் - ஆசைமாத்திரம்—ஒழிவறநிற்ப - ஒழியா திருந்து—உவப்பது - விரும்பத்தருவதாகிய—பொருள் - வஸ்து—உல கில் - உலகின்கண்—வேறின்றி - வேறில்லாமல்—அருள் - கிருபையையு டைய—நந்திபிரான் - வசவண்ணன்—எந்தை - அல்லமன்றுவரவினை நோக்கி - வரவையெதிர்நோக்கி. எ - று. மனம்பதைப்பற நில்லாவிட் த்து ஆத்மாவை விளக்கற் கொண்ணாமையால் நின்றமனங்கொண்டு தா னித்தமாந்தனை யுணர்த்தவெனவும், அறிவன்றி அயலின்றெனத் தேர் தலின் உவப்பதுலகிற் பொருள்வேறின்றி யென்வுங்கூறினர். (௪)

எவ்வுருவி னெடுவருமோ வெம்பிரான் றெளியகிலேன்
செவ்வியவோர் தவிசமைத்துச் சேர்ந்ததன்மே லிருப்பவனை
யவ்வியமி லல்லமனென் றறிவன்யா னென்றுதுணிந்
திவ்வுலக முளமவியப்ப விதுசெய்தா னருணந்தி.

(இ - ள்.) எம்பிரான் - அல்லமன்—எவ்வுருவினொடு - எத்தமாறுவேட ங்கொண்டு—வருமோ - வருவானோ—தெளியகிலேன் - தெளியேன்— செவ்விய - செம்மையாகிய —ஓர்தவிசமைத்து - ஒருசிங்காதனஞ்செய்

து—அதன்மேற்சேர்ந்திருப்பவனை - அதன்மேல்வந்திருப்பவனை —அவ் வியமிலல்லமனென்று - குற்றமற்றவல்லமதேவனென்று —அறிவன்யா னென்று - யானறிவேனென்று—துணிந்து - நிச்சயித்து—இவ்வுலகம் - இவ்வுலகத்திலுள்ளாரது—உளம்வியப்ப - மனமதிசயிக்கும்படி—அருண ந்தி - கிருபைபொருந்தியவசவண்ணன்—இதுசெய்தான் - இதனைச்செய் தனன். எ - று. இவ்வுலகம் இடவாகுபெயர். வருமோவென்பதி லோ காரம் ஐயம். (௫)

வேறு.

ஆதியா தார மாதி யடுக்கெனப் பன்னி றத்த
சோதியேழ் நிலைக ளோங்கச் சூனிய பீட மொன்று
போதினோ ருளம்வி யப்பப் பொன்மணி பளிங்கு கொண்டு
சாதிநான் மறைகள் போற்றுஞ் சைவநா யகன்செய் வித்தான்.

(இ - ள்) ஆதியாதாரமாதி - மூலாதாரமுதலியவைகளை—அடுக்கென- அடுக்காக —பன்னிறத்தசோதி-பற்பலநிறத்ததாயசோதியுருவாயுள்ள— ஏழ்நிலைகளோங்க - ஏழுநிலைகளுமேலோங்கும்படியாக—சூனியபீடமொ ன்று - ஒருசூனியாசனத்தை—போதினோர் - பிரமனாதி —உளம்வியப் ப - மனமதிசயிக்க—பொன் - பொன்னையும்—மணி - ரத்னங்களையும்— பளிங்கு - பளிக்குக்கற்களையும்—கொண்டு - ஆதாரமாகக்கொண்டு—சா தி - ஒளிமயமாகிய—நான்மறைகள்போற்றும் - நான்குவேதங்களாலுந் து திக்கப்பெற்ற—சைவநாயகன் - சைவத்துக்குத் தலைமையாகின்றுள்ள வசவண்ணன்—செய்வித்தான் - செய்வித்தனன். எ - று. பலநிறத்த, தாதவிளங்கலின் சோதியைப்பன்னிறத்தவென்றார். ஏழ்நிலைகளாவன; மூலாதாரமுதல் சோதிநிறுவாக்கிடந்தவைகளை. இவைகட்கெல்லா மப் பிபாரஞ் சூனியமாதலின் சூனியபீடமெனப்பட்டது. அதுநினைப்பு மறப் பற்றவிட்டததாதலின் சூனியபீடமொன்றெனப்பட்டது. அதனைப்பாமெ ன்பாருமுளர். திருக்கையேனும் கிரிஸ்யத்தையேனும் ஆராய்ந்துசெல்லு மிடத்தும் ஆசானருட்கண்படாதவிடத்தும் யாமன்றுமுடிதலினானும், அ வ்வன்மை இரண்டிபட்டிருத்தலினானும் அதனையேநினைப்புமறப்பற்ற வி டமென்றும். இச்சூனியபீடம் மணிகளானும், பொன்மணி பளிங்குகொண் டென்பதனால் செய்கையினானு மியற்றப்பட்ட தெனப்பெற்றும். சூனி யபீடம் பளிங்குபீடத்துக்கு மேனிலைய தென்க. (௬)

காரண வுபாதி யேழ்மேற் கண்டிடு ஞானி போலச்
சீரணி நுதலின் மீது சென்றுகாண் யோகி போலப்

பூரண ஞான நந்தப் போதக னிருப்பு காண்பா
னோரணி நிலைக ளேழ்மே னிகழ்வெளித் தவிச மைந்தான்.

(இ - ள்.) காரணம் - காரணமாகின் றுள்ள — உபாதியேழ்மேல் - ஏழு பாதிகளுக்குமேல் — கண்டிகொனிபோல - நல்லோர்த்தான் தரித்திருக் கொண்டிருக்குஞானிபோலவும் — ஏரணி - நெப்புள்ள — நுதலின்மீது - நெற்றியின்மேல் — சென்றுகாண் - நிலைகள்கடந்துதெரிசிக்கின்ற — யோகிபோல - யோகிபோலவும் — பூரணம் - பரிபூரணமாகிநிறைந்துள்ள — ஞானாநந்தபோதகன் - ஞானாநந்தபோதகனது — இருப்புகாண்பான் - நிலை காணும்படி — ஏரணி - அழகுள்ள — நிலைகளேழ்மேல் - ஏழுநிலைகளின்மேல் — நிகழ் - விளங்காநின்ற — வெளித்தவிசு - சூனியசிம்மாசனத்தை — அமைத்தான் - ஏற்படுத்தினன். எ - று. காரணவுபாதியேழாவன; ஈசன், முற்றறிவான், வியாபி, எவைக்குமேது, மாகாசகன், நிருபாதி, பாவனை என்பன. பாவிற்குமேலாதிற்றலாம் ஈசனெனவும், எவற்றை யுமறிபவனாதலின் முற்றறிவானெனவும், வியாபகத்துக்கெல்லாம் வியாப கமாகிற்றலின் வியாபியெனவும், எல்லாவுபாதானத்திற்கு மூபாதானமா கிற்றலின் எவைக்குமேதுவெனவும், சர்வத்தையும் ஈட்டிப்பவனாதலின் மாகாசகனெனவும், சமஸ்தத்தையு மழிப்பவனாதலின் நிருபாதியெனவும், எவற்றையுஞ் சிருட்டிப்பவனாதலின் பாவனையெனவுங் கொள்கவென்று தவசரம்பற்றியென்க. இதுயோகநெறித் தன்மைவிலக்கக் காரணவு பாதியேழ்மேற் கண்டிகொனிபோலவென்றார். அவிசிற்சகலகற்பனை களையுங் கண்டு களைந்து நாளுக்குதல் ஞானம். உடலி லாறுதாரங்களையுங் கண்டப்பாலுதலி லொளிர்தல் யோகம். இதனையாங்காங் குணர்க. (எ)

துளங்கமின் மதியம் போலக் கண்டவர் மனம லர்த்தும்
பளிங்குசெய் நிலையுள் வந்து பார்ப்பவர் மெய்ந்நி ழற்போய்
விளங்குத றன்மேற் றோன்ற வெந்நெறி பசும்பொ னாற்செய் [ம்.
துளங்கொளி நிலையைச் சென்னி சுமத்தல்போற் செய்த வொக்கு

(இ - ள்.) களங்கமின்மதியம்போல - களங்கமற்றசந்திரனைப்போல — கண்டவர்மனம் - கண்டவரதுமனதை — மலர்த்தும் - விகசிக்கச்செய்யு ம் — பளிங்கு - பளிங்குகற்களினால் — செய்யுநிலையுள் - செய்திருக்கின்றநிலை களுக்குள் — வந்துபார்ப்பவர் - வந்துபார்ப்பவர்களுடைய — மெய்ந்நிழல் - தேகசாயை — தன்மேற்றோன்ற - தன்மேற்றோன்றும்படி — போய்விள ங்குதல் - சென்றுவிளங்குதல் — வெந்நெறி - மிக்கபிரகாசத்தையுடை

ய — பசும்பொனாற்செய் - பசும்பொன்னினாற்செய்த — துளங்கொளிநி லையை - கேட்டைநட்சத்திரநிலையை — சென்னிசுமத்தல்போல் - முடிசு மத்தல்போல — செய்தவொக்கும் - செய்தாலெத்தகைத்தோ வதனையொ க்கும். எ - று. பளிங்கறையுள் வந்துபார்ப்பவரது தேகச்சாயை தன் மேற்றோன்றுதல் கேட்டைநட்சத்திரத்தைச் சென்னிமேற்செய்தனுக் கொப்பாகும் எனப்பொருள் கொள்க. (அ)

திருந்திய பளிங்கு கொண்டு செய்தவந் நிலையின் வாய்தல்
பொருந்துத றெரிகி லாராய்ப் புகுந்துகாண் மனித ரெல்லாங்
கரங்கொடு தடவிக் கண்டு கண்டெரி யார்கள் போல
வருந்திய மனம கிழ்ந்து வசவனை வியப்ப ரன்றே.

(இ - ள்.) திருந்தியபளிங்குகொண்டு - களங்கமற்றபளிங்குகற்களினா ல் — செய்த - செய்திருக்கின்ற — அந்நிலையின்வாய்தல் - அந்தப்பளிங்கறை யின்வாசற்படி — பொருந்துதறெரிகிலாராய் - இருப்பதைக்காணத்தெ ரியாதவர்களாய் — புகுந்துகாண் - உள்ளேபோய்க்காண்கின்ற — மனிதரெ ல்லாம் - மனிதர்கள்யாவரும் — கரங்கொடுதடவிக்கண்டு - கையினாற்றடவி வாயிலைக்கண்டு — கண்டெரியார்கள்போல - குருடர்களைப்போல — வரு ந்தியமனம் - வாயில்தெரியாததால்வருத்தமுற்றமனம் — மகிழ்ந்து - சந் தோஷித்து — வசவனைவியப்பர் - வசவண்ணனைப்பற்றியதிசயிப்பர். எ - று. அன்று - ஏ - அசைகள். மனிதரெல்லாம் தடவி கண்டு மகிழ் ந்து வியப்பர் எனக்கூட்டிப் பொருள்கொள்க. (கூ)

நினைவினா லொருவன் செய்த நெஞ்சுளா லயமே யன்றி
வினையினா லுலகர் செய்து விளங்கிய பணிக டம்முள்
ளினையதோ டுவமை யாத லில்லையென் றும்ப ரெல்லாந்
தனையலா னிகரி லாத தவிசினை வியந்து நின்றார்.

(இ - ள்.) ஒருவன் - ஒருபுருடன் — நினைவினாற்செய்த - சங்கற்பத்தி னாற்செய்த — நெஞ்சுளாலயமேயன்றி - மனக்கட்டிடமேயல்லாமல் — வி னையினால் - கிரியையினால் — உலகர்செய்து - உலகத்தாராற்செய்யப்பட் டு — விளங்கியபணிகடம்முள் - விளங்காநின்றகட்டடங்களுள் — இனைய தோடுவமையாதல் - மனக்கட்டடத்தோடுவமைகூறப்படுதல் — இல்லை யென்று - எங்குமில்லையென்று — உம்பரெல்லாம் - தேவர்களனைவரு ம் — தனையலால் - தனக்குத்தானே நிகராயிருப்பதேயல்லாமல் — நிகரி லாத - தனக்கொப்பிடுதற்குவேறொன்றில்லாத — தவிசினை - சூனியசிங்

காசனத்தைக்கண்டு—வியந்துநின்றார் - அதிசயித்துநின்றனர். எ - று. செஞ்சுடராலயம்; இயமகியமருந்திய வற்றுஞ்செய்தகட்டடத்தை. அக்கட்டடம் அகத்திலன்றிப் புறத்திலன்றாமையின் தனக்குத்தானே நிகரெய்துமென்றார். செஞ்சுடராலயமே தவிசாதலால் உம்பரெல்லாந் தவிசினை வியந்துநின்றாரெனப்பட்டது. (௧௦)

அம்பரா சனமி யன்ற வதிசயங் கேளா முக்கட்
டம்பிரா னடிய ராகத் தரையுளா ரெல்லாஞ் சென்று
செம்பொனா லியன்ற வந்தச் சீர்கெழு பீட நோக்கி
யெம்பிரான் வசவ தேவ னிணையடி தொழுதி ருந்தார்.

(இ - ள்.) அம்பராசனம் - சூனியசிம்மாசனம் —இயன்றவதிசயங்கேளா - அமைக்கப்பட்டவதிசயங்கேட்டு—தரையுளாரெல்லாம் - பூமியிலுள்ளவரனைவரும்—முக்கட்டம்பிரான்-திரிநேத்திரத்தையுடையபரமசிவனது—அடியாராகச்சென்று - அடியார்களாய்ப்போய் —செம்பொனாலியன்ற - சிவந்தபொன்னாற்செய்த—சீர்கெழு - மகிமைவாய்ந்த—அந்தப்பீடநோக்கி - அந்தப்பீடத்தைப்பார்த்து—எம்பிரான்வசவதேவன் - எமதுகர்த்தனுகியவசவண்ணனது —இணையடி - உபயபாதங்களையும்—தொழுதிருந்தார் - தொழுதவிட்டிருந்தனர். எ - று. தரையுளாரெல்லாம் கேளா சென்று நோக்கி தொழுதிருந்தார் எனக்கூட்டிப் பொருள்கொள்க. (௧௧)

கலையிது கல்விக் கென்னக் கற்றவர் பலரு மேத்தத்
தலையிசை யமைந்தி ருந்த சாரதா பீட மேபோ
லுரைமன மிறந்த தாமிவ் வொருதனி ஞான பீட
மருட்டுரு குருகு கேச னன்றியே யிடுதற் காமோ.

(இ - ள்.) கலையிதுகல்விக்கென்ன - கல்விக்கிதுவேகலையாமென்று—கற்றவர்பலருமேத்த - எல்லாக்கலைவல்லவருந்துதிக்க—தலையிசை - பூமியின்மேல்—அமைந்திருந்த - செய்திருந்த—சாரதாபீடமேபோல் - சரஸ்வதிபீடத்தைப்போல—இ - இந்த—தனி - ஒப்பற்ற—ஒருஞானபீடம் - ஒருஞானபீடமானது—உரைமனமிறந்ததாம் - வாக்குமனமிறந்ததாம்— (இந்தஞானபீடத்தில்) அருட்டுரு - அநுக்கிரகத்துக்கு—குருகுகேசனன்றி - அல்லமனையன்றி—இடுதற்காமோ - ஏறுதற்குத்தகுமோ. எ - று. வேறொருவர்க்கு மிடமின்மையின் ஒருவாற்றுஞ் சாரதாபீடத்தை யுவமையிட்டார். (௧௨)

இப்பெரும் பீட மேறி யிருந்திட வல்லோ னென்றும்
வைப்பெனும் படிம றைந்தெம் மனத்திருப் பதற்கு வல்ல
வப்பெருங் கருணைக் குன்ற மாகுமல் லமனே யென்று
செப்புறு பரிசி லானுய்ச் சிந்தைசெய் திருந்தா னந்தி.

(இ - ள்.) இப்பெரும்பீடமேறி - இந்தப்பெரியபீடத்தின்மேலேறி—இருந்திடவல்லோன் - இருக்கவல்லவன் —என்றும் - எப்போதும்—வைப்பெனும்படி - புதையலென்னும்படி—எம்மனத்து - நம்முடையமனதில்—மறைந்திருப்பதற்குவல்ல - மறைந்திருத்தற்குவலியுள்ள—அ-அந்த—பெரும் - பெரிதாகிய—கருணைக்குன்றமாகும் - கிருபாமலைபோல்பவராகிய—அல்லமனேயென்று - அல்லமதேவனேயென்று —செப்புறுபரிசிலானுய் - சொல்லுந்தன்மையற்றவனாய்—நந்தி - வசவண்ணன்—சிந்தைசெய்திருந்தான் - சிந்தித்துக்கொண்டிருந்தான். எ - று. எல்லாருள்ளத்திலும் நிரதிசயானந்தவாழ்வாக மறைந்திருத்தலின் என்றும்வைப்பெனும்படி மறைந்தெம்மனத்திருப்பதற்கு வல்லவல்லமனென்றார். அல்லமனேயென்பதி லேகாரம் பிரிநிலையெனினு மமையும். (௧௩)

கரைபொரு கங்கை யாற்றிற் கண்ணிவைத் தரச வன்னம்
வருதலை நோக்கி நிற்கும் வாறுபோ லிருள்வி ழுங்கி
பெருகொளி விரிக்கு ஞான பீடமொன் றமைய வாக்கிக்
குருபரன் வரவு நோக்கிக் கொண்டிருந் தனனெங் கோமான்.

(இ - ள்.) கரைபொரு - கரையில்மோதுகின்ற—கங்கையாற்றில் - கங்காநதிதீரத்தில்—கண்ணிவைத்து - கண்ணியைவைத்து—அரசவன்னம்வருதலைநோக்கி - ராசவன்னம்வரப்பார்த்து—நிற்கும்வாறுபோல் - காத்துக்கொண்டிருக்கும் நிலைமைபோல—இருள்விழுங்கி - இருளைவிழுங்கி—பெருகொளிவிரிக்கும் - மிக்கவொளியைவீசுகின்ற—ஞானபீடமொன்று - ஓர்ஞானபீடத்தை—அமையவாக்கி - விலக்கச்செய்து—குருபரன்வரவு - அல்லமனதுவரவை—எங்கோமான் - எமதுதலைவனாகியவசவண்ணன் —நோக்கிக்கொண்டிருந்தனன் - பார்த்துக்கொண்டிருந்தான். எ - று. எங்கோமான் ஆக்கி நோக்கிக்கொண்டிருந்தனன் எனமுடிக்க. கங்கையாற்றில்; விட்டவிலக்கணை. (௧௪)

ஏட்டலைப் புகலீ ராற்றி லெதிர்பிழித் தேற விட்டோன்
பாட்டுடைத் தலைவ னன்பர் பலருநம் வசவன் றன்னை

நாட்டமுற் றடையு மாசா னமக்குமா மென்றி ருந்தார்
வீட்டினுக் கேற்றுஞ் சோதி விருந்திற்கு முதவு றுதோ.

(இ - ள்.) எட்டினை - எட்டை — புதுநீராற்றில் - வெள்ளமாகப்பெருகி யவையையாற்றில் — எதிர்கிழித்தேற - எதிரேகிழித்தேறும்படி — விட்டோன் - விட்டசம்பந்தனது — பாட்டுடைத்தலைவன் - பாட்டுக்கிசைந்த பரமசிவனது — அன்பர்பலரும் - சகலவடியார்களும் — நம்வசவன்றன்னை - நமதுவசவண்ணனை — நாட்டமுற்று - நாடி — அடையுமாசான் - வருகின்றவாசானே — நமக்குமாமென்று - நமக்குமாசானுகுமென்று — இருந்தார் - எண்ணியிருந்தனர் — வீட்டினுக்கேற்றுஞ்சோதி - வீட்டிற்காகவேற்றப்பட்டவிளக்கு — விருந்திற்குமுதவுறுதோ - அங்கேவந்தவிருந்தினருக்குமுதவாதோ. எ - று. ஏறவிட்டோனைச்சம்பந்தனென்றது ஐதிகம். வீட்டுவிளக்கே விருந்திற்கும்போதுமாறுபோன்று வசவண்ணனுக்கினியர்தவாசானே நமக்கும்போதுமென்றிருந்தனரென்க. (௧௫)

சூனியசிங்காதனகதி - முற்றிற்று.

ஆக கதி - ௨௧ - க்கு - திருவிருத்தங்கள் - ௬௮௪.

இருபத்திரண்டாவது

சூனியசிங்காதனத்திருந்தகதி.

வேறு.

பள்ளம்புகு புனல்போனெறி பட்டருஞ்சிவ னடியா
ருள்ளம்புகு மருணந்தியிவ் வுலகோரறி யாமற்
கள்ளங்கொளு மனமோடுசெய் யணைமேலொரு கருணை
வெள்ளங்கடி தேறுஞ்செயல் விருப்பாலெடுத் துரைப்பாம்.

(இ - ள்.) பள்ளம்புகுபுனல்போல் - பள்ளத்தில்விழும்நீரைப்போல — நெறிபட்டருஞ்சிவனடியார் - நன்னெறிச்செல்லுஞ்சிவனடியார்களது — உள்ளம்புகும் - உள்ளத்திற்குடிகொண்ட — அருள் - கிருபையையுடைய — நந்தி - வசவண்ணன் — இவ்வுலகோரறியாமல் - இவ்வுலகத்தாரறியாமல் — கள்ளங்கொளுமனமோடு - கள்ளமுள்ளமனதோடு — செய்யணைமேல் - செய்தசூனியசிங்காதனத்தின்மேல் — ஒருகருணைவெள்ளம் - ஒப்பற்றகருணாசமுத்திரம்போன்றவல்லமன் — கடிதேறுஞ்செயல் - விரைவிலேறுஞ்செயலை — விருப்பால் - மிக்கவிருப்போடு — எடுத்துரைப்பாம் - எடுத்துச்சொல்லுவோம். எ - று. அடியாருளத்திற்புகுதல் இன்னமாதல்பற்றிப் பள்ளம்புகுபுனல்போலென்றார். கள்ளங்கொளு மனமென்றது அதனியற்கை புணர்த்தற்கென்க. கருணைவெள்ளம்; உவமையாகுபெயர். (௧)

சிரானுடுறு கயலாடல்செய் செய்ந்நாடுடை யுழவ
ரானுடுறு மொருகாவிரி யறனுடுறு முறைபோற்
பரானுடுறு மடியார்வினை பரியத்திரி குரவன்
வரானுடுறு முருகும்பர வசவன்புறு வசவன்.

(இ - ள்.) சிரல் - சிச்சிலிக்குருவி — நாடுறு - தேடுகின்ற — கயல் - கெண்டைமீன் — ஆடல்செய் - குதிக்கின்ற — செய் - வயல்கள்சூழ்ந்த — நாடுடை - நாடுகளையுடைய — உழவர் - பயிரிடுவோர்க்கு — அரனுடுறும் - பரமசிவனுடல்விரும்பத்தக்க — ஒருகாவிரி - ஒருகாவிரியாற்றுல் — அறனுடுறும் -

சிவபுண்ணியாதியறத்தையோதுகின்ற —முறைபோல் - வரிசைபோல —பரநாடுறும் - பரத்தையேநாடுகின்ற —அடியார்பரிய - அடியாரது வினைகணீங்க —திரிகுரவன் - தேடித்திரிகின்றவாசிரியன் —வரனுறும் - வரவையெதிர்நோக்கிநாடுகிறவன் —பரவசம் - பரவசமாகும்படி —உருகும் - உருகத்தக்க —அன்புறு - அன்புள்ள —வசவன் - வசவண்ணன். எ - று. உழவர்நெறியைநாடுதல்போன்று வசவண்ணன் குரவன்வாறுறுமெனமுடிக்க. (உ)

பொன்னுனமை கதிர்வீசணை புரிந்தீரறு பருவம்
பின்னுயின யான்செய்தொழில் பிள்ளைத்தொழி லாயிற்
றெந்நாளவரு மெனையாளுடை யெம்மானறி யேனென்
றுன்னுவரு துயரோடுள முனைந்தான்வினை களைந்தான்.

(இ - ள்.) பொன்னுனமை - பொன்னாலியற்றப்பட்டு —கதிர்வீசு - கிரணங்களைவீசுகின்ற —அணைபுரிந்து - சூனியசிம்மாசனஞ்செய்து —ஈராறு பருவம் - பன்னிரண்டுமாதம் —பின்னுயின - கழிந்தன — இதனுல் யான்செய்தொழில் - யான்செய்தவிந்தவேலை —பிள்ளைத்தொழிலாயிற்று - சிறுபிள்ளைவேலையாயிற்று —எனையாளுடையெம்மான் - என்னையாளாகவுடையவல்லமன் —எந்நாள்வரும் - என்றைக்குவருவனே —அறியேனென்று - தெரிகிலனென்று —உன்னு - நினைந்து —வருதுயரோடு - மிக்கதுயரோடு —உளமுனைந்தான் - மனநலிந்தனன் —வினைகளைந்தான் - இருவகைவினையொழித்த வசவண்ணன். எ - று. உன்னு - செய்யாவென்னும் வாய்பாடு. (௩)

இவ்வாறமர் நாளோர்பக லெமையாளுடை வசவன்
செவ்வாறுசென் மனத்தல்லம தேவன்வர ருேன்றிற்
றவ்வாறது நிகழ்வுற்றவ னார்வந்தனை யொருநா
னெவ்வாறுநா செய்வன்பணி யிறையுஞ்சொல வரிதால்.

(இ - ள்.) இவ்வாறமர்நாள் - இவ்வாறிருக்குநாளில் —ஓர்பகல் - ஓர்தினம் —எமையாளுடைவசவன் - எம்மையாளாகவுடைய வசவண்ணன் —செவ்வாறுசெல்மனத்து - செவ்வையாகச்செல்லுமனதினுல் —அல்லமதேவன்வரவுேன்றிற்று - அல்லமதேவன்வரவுகாணப்பட்டது —அவ்வாறுநிகழ்வுற்றவன் - அவ்வாறுநடந்தவன் —ஆர் - எவனே —வந்தனை - அவனதுவழிபாட்டை —ஒருநான் - யானொருவனே —எவ்வாறுநாசெய்வ

ன் - எங்ஙனந்தெரிந்துசொல்லுவன் —பணியிறையும் - ஆதிசேடனும் —சொலவரிது - சொல்லுதற்கரிதாம். எ - று. ஆல் - அசை. வசவண்ணனதுவழிபாட்டையறிந்து கூறுதலெவராலுங் கூடாதென்பதுகருத்து. (௪)

வலமாடின விழிதோளருள் வசவற்கதி தூரஞ்
செலுமாடவன் வருநாள்விழி யிடமாடிய செயல்வாய்
குலமாதுள மெனவேமகிழ் கொண்டன்புநி றைந்து
மலமாயைக ளரக்குஞ்சென்ன வசவற்கிது புகல்வான்.

(இ - ள்.) அருள்வசவற்கு - கிருபையுள்ளவசவண்ணனுக்கு —விழிதோள் - கண்களுந்தோள்களும் —வலமாடின - வலந்துடித்தன —அதிதூரஞ்செலுமாடவன் - அதிதூரஞ்சென்றநாயகன் —வருநாள் - திரும்புகாலையில் —விழி - கண்கள் —இடமாடியசெயல்வாய் - இடதுபக்கந்துடித்தசெய்கையில் —குலமாது - குலத்திற்பிறந்தநாயகியின் —உளமெனவே - மனம்போல —மகிழ்கொண்டு - மகிழ்ந்து —அன்புநிறைந்து - அன்பதிகரித்து —மலமாயைகளரக்கும் - மலத்தையும்மாயையுமொழித்த —சென்னவசவற்கு - சென்னவசவதேவனுக்கு —இதுபுகல்வான் - இதனைச்சொல்லுவான். எ - று. பொருள்கவர்வான் அதிதூரஞ்சென்ற நாயகன்திரும்புழி விழியிடந்துடித்த குலமாது மகிழ்வாள்போன்று வசவண்ணன் தனதுவிழி தோள் வலமாடினமைதச் சென்னவசவனுக்கு வியப்புறவிதனைச் சொல்லினனென்க. (௫)

வேறு.

நற்குறி பலவு மிற்றை நாணிகழ் கின்ற வென்பால்
வற்கலை முனிவர் போற்றும் வசவவந் நிகழ்ச்சி யாலும்
பிற்பெறு பயன்யா தென்று பெருந்தகை வினவ நின்ற
சிற்பர முணர்ந்த சென்ன வசவதே சிகனு ரைப்பான்.

(இ - ள்.) நற்குறிபலவும் - நல்லபலசகுனங்களும் —இற்றைநாள் - இன்றுகாறும் —நிகழ்கின்றவென்பால் - என்னிடத்தில் நடந்துவருகின்றன —வற்கலை - மரவுரியணிந்த —முனிவர்போற்றும் - ரிஷிகளால்துதிக்கப்பெற்ற —வசவ - வசவண்ணதேவனே —அந்நிகழ்ச்சியால் - அங்ஙனம் நடந்துவருதலால் —நாம்பிற்பெறுபயன் - நாம்பின்னுலடையும்பிரயோசனம் —யாதென்று - என்னவென்று —பெருந்தகைவினவ - வசவண்ணன் கேட்க —நின்ற - இவர்க்கெதிரினின்ற —சிற்பரமுணர்ந்த - உண்மைநிலையையுணர்ந்த —சென்னவசவதேசிகன் - சென்னவசவேசனென்பே

ன்—உரைப்பான் - சொல்லுவன். எ - று. அங்கிகழ்ச்சியாலெனச் சுட்டுதலால் நிகழ்கின்றவெனலை அஃறிணைப் பன்மைவினைமுற்றாக்கினும். (௬)

ஐயவிந் நிமித்தந் தன்னா லல்லமன் காண்பை யின்று
மெய்யுரை யிதுகா ணென்னா விடுத்தனன் மருக னெங்கள்
கையுறு மமுத னென்றான் கருதிய படியின் னப்பஞ் [றுன்.
செய்யவுண் மகிழ்வு பூத்துச் செயல்செய்வார்க் குரைக்க லுற்

(இ - ள்.) ஐய - ஐயனே—இந்நிமித்தந்தன்னால் - இந்தவேதுவினால்—இன்று - இப்போது—அல்லமன் காண்பை - அல்லமதேவனைக்காண்பாய்—மெய்யுரையிதுகாணென்னா - இது சத்தியவசனமென்று—மருகன் - மருமகனாகியசென்னவசவேசன்—விடுத்தனன் - விடைகொடுத்தனன்—எங்கள்கையுறும் - நமதுகையிற்கிடைத்த—அமுதனான் - தேவாமிர்தம் போல்பவனாகிய வசவண்ணன்—தான்கருதியபடி - தானினைத்தவண்ணம்—விண்ணப்பஞ்செய்ப - விடைகொடுக்க—உண்மகிழ்வுபூத்து - உள்ளமகிழ்ந்து—செயல்செய்வார்க்கு - ஏவல்புரிபவர்களுக்கு—உரைக்கலுற்றான் - சொல்லத்தொடங்கினன். எ - று. சென்னவசவேசன் நினைத்தபடி இன்றேநடக்குமெனக்கூற வசவண்ணன் வியப்புற்றுத் தனதேவலாளிகளுக்குத் தெரிவித்தனனென்க. (௭)

உடம்பெனும் வனத்தி னின்ற வுயிரெனுங் கன்னி தன்னைத்
தொடர்ந்திசை மணத்தாற் சேர்ந்த துணைவனல் லமனின் றெய்து
மடைந்தருள் கல்யா ணத்தை யணிமினென் றெந்தை கூற
நடந்தனர் நன்றென் றன்னோர் நகரியோர்க் குணர்த்தி னரால்.

(இ - ள்.) உடம்பெனும்வனத்தில் - தேகமென்னுங்காட்டில்—நின்ற - உதித்துநின்ற—உயிரெனுங்கன்னிதன்னை - உயிரென்கின்றகன்னிப்பெண்ணை—தொடர்ந்து - சம்பந்தங்கொண்டு—இசைமணத்தால் - வேதவிதிக்கிசைந்த செய்தமணத்தால்—சேர்ந்த - புணர்ந்த—துணைவனல்லமன் - நாயகனாகியஅல்லமதேவன்—இன்றெய்தும் - இன்றேவருவன்—அடைந்தருள் - அவனெழுந்தருளத்தக்க—கல்யாணத்தை - கல்யாணபுரியை—அணிமினென்று - அலங்கரியுங்களென்று—எந்தைகூற - எமது தந்தையாகிய வசவண்ணன்சொல்ல—நன்றென்று - அங்ஙனஞ்செய்வோமென்று—நடந்தனர் - போய்விட்டார்கள்—அன்னோர் - அங்ஙனம்போயினோர்—நகரியோர்க்கு - பட்டணத்திலுள்ளவர்களுக்கு—உணர்த்தினர் -

தெரிவித்தனர். எ - று. ஆல் - அசை. உடம்பெனும்வனம், உயிரெனுங் கன்னி, துணைவனல்லமன், இவை உருவகம். இங்கே உடம்பெனல் உபாதித்திரியத்தையும், உயிரெனல் பிரியத்தையும், துணைவனெனல் ஞப்தியையுமெனப் பொருள்கொள்க. காமக்குரோதாதி கள்ளர்வசித்தற்கிடமாதலின் உடம்பை வனமெனவும், தற்பிரிய மென்னுங் குன்றாததனால் உயிரைக் கன்னியெனவும், தற்பிரியத்தை யறிந்துபுணர்வோன் பிரத்தியகாத்மா வாதலின் துணைவனல்லம னெனவும் கருதிக் கூறியதாகப் பெறும். (௮)

அலர்கதிர் ஞாயி றூரு மணிநெடுந் தேர்க்கொ டிஞ்சி
யிலகுற வதிற்றாக் காமன் மேலளா வொருசா ணிற்பப்
பலர்புகழ் மணிமா டத்துப் பறக்குமொண் கிளியொ ழுங்கி
னிலைசெரு கியப சும்பூந் தோரண மிசைய வார்த்தார்.

(இ - ள்.) அலர் - பரவிய—கதிர் - கிரணங்களையுடைய—ஞாயிறு - சூரியன்—ஊரும் - தவழ்கின்ற—மணி - மணிகட்டிய—நெடுந்தேர் - நீண்டதேரின்—கொடிஞ்சி - முகடு—இலகுற - பிரகாசிக்க—அதிற்றாக்காமல் - அதில்தாக்கவொட்டாமல்—மேல் - அதற்குமேல்—அளாவொருசாணிற்ப - ஒருசாணளவுநிற்க—பலர்புகழ் - பலராலும்புகழப்பெற்ற—மணிமாடத்து - அழகியவுப்பரிகையில்—பறக்கும் - பறக்கின்ற—ஒள் - அழகிய—கிளியொழுங்கில் - கிளிவரிசையைப்போல—இலை - இலைகளினாற்செய்து—செருகிய - சொருகியிருக்கின்ற—பசும் - பசிய—பூந்தோரணம் - பூந்தோரணங்களை—இசைய - அலங்காரத்துக்கிசைய—ஆர்த்தார் - கட்டினார்கள். எ - று. கொடிஞ்சி மேற்பரப்பெனினுமமையும். ஒழுங்கில் ஐந்தாம்வேற்றுமை யுவமைப்பொருள். (௯)

போதக குருநம் மூருட் புகக்கொடி கட்ட னன்றென்
றாதர வொடும சைந்தா ரவிர்கொடி மாடத் தும்பர்
சோதிதன் னிரத மென்னுஞ் சுழன்மென நகுதல் போல
வீதியு ளாடி யோடு விளங்குற நிலைத்தேர் செய்தார்.

(இ - ள்.) போதககுரு - போதகாசிரியர்—நம்மூருட்புக - நமதூரிற்பிரவேசிக்க—கொடிகட்டனன்றென்று - கொடிகட்டுதல்நல்லதென்று—ஆதரவொடும் - ஆசையோடு—அவிர்கொடி - விளங்குகின்றகொடிகளை—மாடத்தும்பர் - உப்பரிகைகளின்மேல்—அசைந்தார் - கட்டினார்க

ள் — சோதிதன்னிரதம் - சூரியனதிரதம் — என்றுஞ்சுழன்றென - வழியில்லாமலெப்போதுஞ்சுழன்றுகொண்டிருக்குமென்று — நகுதல்போல - அவமதிப்பதுபோல — வீதியுள் - தெருவில் — ஆடியோடு - விளையாடிக்கொண்டோடுகின்ற — விளங்குறு - பிரகாசம்பொருந்திய — நிலைத்தேர் செய்தார் - நிலைத்தேரைச்செய்தனர். எ - று. சூரியனதுரதம்நிலையின்றிச்சுழல்வதால்வீதியினிலைத்தேர் செய்தனரென்க. (௧௦)

குங்கும நறிய சந்தங் குழைத்ததண் பனிநீர் சிந்திப்
பொங்கெழின் மறுக னைத்தும் புதைசெழுஞ் சேறு செய்தார்
மங்கல மனைமுன் பந்தர் மணப்பந்த ருண்மை யாகக்
கொங்கவி ழிதழ்ந றும்பூங் கோதைக டூக்கி னாரால்.

(இ - ள்.) குங்குமம் - குங்குமத்தையும் — நறியசந்தம் - மணமுள்ளசந்தனத்தையும் — குழைத்த - கலந்த — தண்பனிநீர் - குளிர்ச்சிபொருந்திய பன்னீரையும் — சிந்தி - இறைத்து — பொங்கெழில் - மிக்கவழகையுடைய — மறுகனைத்தும் - வீதிகளையெல்லாம் — புதை - கால்புதையத்தக்க — செழும் - செழுமையாகிய — சேறுசெய்தார் - சேறுக்கினார் — மங்கலம் - மங்கலகரமுள்ள — மனைமுன்பந்தர் - தலைவாயிலுள்ளபந்தலில் — மணப்பந்தர் - கல்யாணப்பந்தலைப்போல — உண்மையாக - நிசமாக — கொங்கவிழ் - வாசனைவீசுகின்ற — இதழ் - இதழ்களையுடைய — நறும்பூங்கோதைகள் - நல்லபூமாலைகளை — தூக்கினார் - கட்டினார்கள். எ - று. ஆல் - அசை. அந்தப்பட்டணத்தார் சுகந்தகலவைநீரால் வீதிகளைச்சேறுக்கித் தங்கள்தங்கள் வீட்டுத்தலைவாயிலில் மணப்பந்தலைப்போலப் பூமாலைகளாலலங்கரித்தாரென்க. (௧௧)

வயலிடஞ் சேர்ந்து நின்ற வாழையுங் கரும்பும் பாளை, யுய
ரிளங் கமுகு மொன்றோ டொன்றுநின் றுசாவித் தாமெல், லியர
ருந் தொடைதோள் கண்ட மெனமுறப் பழகி ரக்குஞ், செய
லில்வந் தடைந்த வென்னச் செழுங்கடைத் தலைமு னார்த்தார்.

(இ - ள்.) வயலிடம் - வயல்களில் — சேர்ந்துநின்ற - விளைந்துநின்ற — வாழையும் - வாழைமரங்களையும் — கரும்பும் - கரும்புகளையும் — பாளை - பாளைகளையுடைய — உயர் - உயர்வாகிய — இளங்கமுகும் - இளமையாகிய பாக்குமரங்களையும் — ஒன்றோடொன்றுநின்று - ஒன்றோடொன்றுகூடி நின்று — உசாவி - பேசிக்கொண்டு — தாம் - தாங்கள் — மெல்லியர் - ஸ்த்

ரீகளின் — அருந்தொடை - அரியதொடைகளும் — தோள் - தோள்களும் — கண்டமெனும் - கண்டமுமென்கின்ற — உறுப்பழகு - அவயவங்களினழகை — இரக்குஞ்செயலில் - இரந்துகேட்குஞ்செயலினால் — வந்தடைந்தவென்ன - வந்தடைந்தாற்போல — செழுங்கடைத்தலைமுன் - செழுமையாகிய கடைத்தலைவாயிலின்முன் — ஆர்த்தார் - கட்டினார்கள். எ - று. வாழை, கரும்பு, கமுகு, இவைகள் மாதர்களது தொடை தோள் கண்டங்களின் அழகையிரந்துகேட்டற்கு வந்தடைந்தாற்போற்கான இவற்றைக் கடைத்தலைவாயிலின்முன் கட்டினதாகக் குறிப்பித்தார். வாழை கரும்பு கமுகும், தொடை தோள் கண்டமும், நேர்நிரனிறையணி. (௧௨)

இலையினாற் பொலிந்த வாழை தொடையினா லெய்தும் பேறு
முலையினாற் பெறுவ மென்று முன்னிவந் திருத்தல் போலக்
கலையினாற் சிறந்த வல்குற் கயற்கணார் நிறைகு டங்கள்
விலையினாற் சிறந்த செம்பொன் வேதிகை மீது வைத்தார்.

(இ - ள்.) இலையினாற்பொலிந்தவாழை - இலைகளினாற்றலையினிறைவுற்றவாழையானது — தொடையினால் - மாதரது தொடைகளினால் — எய்தும் பேறு - அடையும்பயனை — முலையினால் - தனங்களினால் — பெறுவமென்று - அடைவமென்று — முன்னிவந்திருத்தல்போல - நினைத்துவந்திருத்தல்போல — கலையினால் - வஸ்திரங்களினால் — சிறந்தவல்குல் - சிறப்புற்றுக் கானிதம்பத்தையும் — கயற்கணார் - சேற்கெண்டைபோன்ற கண்களையுமுடையமாதர்களது — நிறைகுடங்கள் - நீர்நிறைந்தகுடங்களை — விலையினாற்சிறந்த - விலைகாரணத்தாற்சிறப்புற்ற — செம்பொன் - சிவந்தபொன்னாற்செய்த — வேதிகைமீது - திண்ணைகளின்மேல் — வைத்தார் - வைத்தனர். எ - று. மாதரதுதொடையாலாயபயனை வாழைமரங்களெய்தாற்போல யாமும் மங்கையரதுதனங்களாலாய பயனையெய்துவமென்றெண்ணி வந்ததுபோலத் தோற்றுமாறு மாதர்கள் நிறைநீர்க்குடங்களைக் கடைத்தலைத்திண்ணைகளில் வைத்தனரெனக் கொள்க. (௧௩)

மனத்திரு ளகற்று நின்ற மணிச்சுடர் வரவு பார்ப்ப
தினைத்துவந் திருத்தல் போல நெடுமணிக் கதவு வாய்தன்
முனைத்திரு விளக்கு வைத்தார் முகிழ்முலைக் கருநெ டுங்கட்
டனிச்சிலை நுதற்பூங் கோதைச் சரிகுழற் றளிர்க்கை நல்லார்.

(இ - ள்.) மனத்திருள் - மனப்பிராந்தியை — அகற்றுநின்ற - நீக்கத்தக்க — மணிச்சுடர் - அழகியதீபம்போன்றவல்லமணவாளன் — வரவுபார்ப்ப - வ

ரவைப்பார்க்கும்படி — நினைத்துவந்திருத்தல்போல - நினைத்துவந்திருப்பதுபோல — நெடு - நீண்ட — மணி - இரத்தினங்கள்பதித்த — கதவு - கதவுகளையுடைய — வாய்தன்முனை - கடைத்தலைவாய்தலுக்குமுன்னே — திருவிளக்குவைத்தார் - தீபமேற்றினார்கள் — (அவர்களாரெனில்) முகிழ்முலை - தாமரைமுகைபோன்றதனங்களையும் — கருநெடுங்கண் - கருத்தநீண்டகண்களையும் — தனிச்சிலைநுதல் - ஒப்பற்றவில்போன்ற நெற்றியையும் — பூங்கோதை - பூமாலைகளையணிந்த — சரிகுழல் - சரிந்தகூந்தலையும் — தளிர்க்கை - துளிர்போன்றகைகளையுமுடைய — நல்லார் - மாதர்கள். எ - று. நல்லார் தலைவாயிலின்முன் தீபம்வைத்தது; அல்லமன்வரவு நோக்கிப் பார்க்கவந்திருத்தல்போன்றிருக்கின்றதென்க. மணிச்சுடர்; உவமையாகுபெயர். (கச)

அல்லம குரவன் றன்னை யருணந்தி யோடு காணச்
செல்லுவ மென்று செம்பொற் சீர்கெழு விமானத் தேரு
மொல்லையி னிலத்தி ழிந்த வும்பர்வாழ் மகளிர் போல
வில்லெனு மருங்குன் மாத ரிருந்தனர் நிலத்தே ரேறி.

(இ - ள்.) அல்லமகுரவன்றன்னை - அல்லமனென்னுமாசிரியனை — அருள் - கிருபைபொருந்திய — நந்தியோடுகாண - வசவண்ணனோடுகாணும்படி — செல்லுவமென்று - போகுதுமென்று — செம்பொன் - செம்பொன்னாலாய — சீர்கெழு - அலங்காரமுள்ள — விமானத்தேரும் - தாமேறியவிமானத்தேரும் — ஒல்லையில் - அதிசீக்கிரமாக — நிலத்திழிந்த - பூமியிலிறங்கிய — உம்பர்வாழ் - தேவலோகத்தில்வாழ்கின்ற — மகளிர்போல - தேவஸ்திரீகளைப்போல — இல்லெனும் - இல்லையென்றுசொல்லத்தக்க — மருங்குல் - இடையினையுடைய — மாதர் - ஸ்திரீகள் — நிலத்தேரேறி - நிலையாயுள்ளதேரின்மேலேறி — இருந்தனர் - இருந்தார்கள். எ - று. இவ்வதிசயத்தைக்காணத் தேவமாதர் விமானத்தோடு நிலத்திறங்கினாற்போல இப்பூமியிலுள்ள மாதர்கள் தேரின்மேலேறி யிருந்தனரென்க. (கரு)

திருநக ரிதனை யின்று திருந்தவே யலங்க ரிப்ப
னொருநனுள் ளனக ழித்து நீத்தவை யமரர் கோமா
னொருநக ரலங்க ரித்தற் குரியன வென்னி னந்தி
பெருநக ரணியின் மிக்க பெருமையார் கூற வல்லார்.

(இ - ள்.) திருநகரிதனை - இந்தவழகியபட்டணத்தை — இன்று - இன்றைக்கு — திருந்த - செவ்வையாக — வேறலங்கரிப்ப - அதனமாகவலங்க

ரிப்பான்வேண்டி — ஒருநனுள்ளன - ஏற்றலங்கரித்தவைகளை — கழித்துநீத்த - கழித்துநீக்கிவைத்த — அவை - அவற்றை — அமரர்கோமான் - தேவேந்திரன் — ஒருநகர் - தனதொப்பற்றபட்டணத்தை — அலங்கரித்தற்கு - அலங்காரஞ்செய்தற்கு — உரியன வென்னில் - உரியனவாயிருக்குமென்னில் — நந்தி - வசவண்ணனது — பெருநகர் - பெரியகல்யாணபுரியின் — அணியின்மிக்கபெருமை - அலங்காரத்தாலிருந்தபெருமையை — யார்கூறவல்லார் - யாவர்சொல்லவல்லார். எ - று. கல்யாணபுரியை இன்றலங்கரிப்பான்வேண்டி ஏற்றலங்கரித்தவைகளைக்களைய வவற்றைத் தேவேந்திரனெடுத்துக் கொண்டுபோய்த் தன்னகரையலங்கரிப்பனெனில் கல்யாணபுரியினலங்காரமகிமையை யெடுத்துச்சொல்லவல்லார் யாவருளரென்க. அங்கீகாரத்தார் இன்று திருந்தவேறலங்கரிப்பான்வேண்டி ஒருநனுள்ளனகழித்து நீத்தவையெனினுமமையும். நீத்தவை வினையாலணையும்பெயர். (கசு)

இன்னண மலங்க ரித்த வெழின்மணி மறுகி னூடு
மன்னவர் மன்ன னுய்ய மந்திரிக் கிழமை பூண்டோன்
றன்னொரு குரவன் றன்னைத் தானெதிர் கொள்ள வேண்டிப்
பொன்னவிர் கோயி லின்றும் புறப்படப் போத லுற்றான்.

(இ - ள்.) இன்னணம் - இவ்வாறு — அலங்கரித்த - அலங்காரஞ்செய்திருக்கின்ற — எழில் - அழகிய — மணி - இரத்தினங்கள்பதித்த — மறுகினூடு - வீதியில் — மன்னவர்மன்னன் - ராஜாதிராசனும் விச்சலனென்னும் — உய்ய - பிழைக்கும்படி — மந்திரிக்கிழமைபூண்டோன் - மந்திரித்தன்மைகொண்டவசவண்ணன் — தன் - தன்னுடைய — ஒருகுரவன்றன்னை - ஒப்பற்றவாசிரியனாகியவல்லமனை — தானெதிர்கொள்ளவேண்டி - தானெதிர்கொள்ளவேண்டி — பொன்னவிர் - பொன்னிறஞ்செய்யப்பட்டுவிளங்குகின்ற — கோயிலின்றும் - தனதுமாடத்தினின்றும் — புறப்பட - புறப்பட்டு — போதலுற்றான் - போகத்தொடங்கினான். எ - று. மந்திரிக்கிழமைபூண்டோன் எதிர்கொள்ளவேண்டி மறுகினூடு கோயிலின்றும் புறப்பட்டுப் போதலுற்றான் எனக்கூட்டிப் பொருள்கொள்க.

பதியுமப் பதியாற் காணும் பசுவுமப் பசுவின் றுணைம
பொதியுமைம் பாசந் தானும் பொருளென வுரைக்கிற் கூறும்
விதியுமப் பாசம் பொய்யாய் வேறுறும் வீடு மோதி
மதியுமக் கருத்துஞ் சென்னா வசவனு மருங்கு சென்றார்.

(இ - ள்.) பதியும் - பரமும் — அப்பதியாற்காணும்-அந்தப்பரத்தாற்காணத்தக்க—பசுவும் - சீவனும்— அப்பசுவின் ஞானம் - அந்தவுயிரின்வுணர்வால்—பொதியும் - நிறையப்பெற்ற— ஐம்பாசந்தானும் - ஐந்துவிதபாசமும் — பொருளென - பொருளாக—வழக்கிற்கூறும் - வழக்கிடுகின்ற—விதியும் - நியமங்களும்— அப்பாசம்பொய்யாய் - அப்பாசமும்பொய்யாய்ப்போமாறு—வேறாம் - பேதபாவனைக்கத்தக்க—வீடும் - முத்தியையும்—ஓதி - போதித்து—மதிமயக்கறுத்த - சித்தப்பிராந்தியைநீக்கிய—சென்னவசவனும் - சென்னவசவதேவனும்— மருட்குசென்றான் - கூடப்போயினன். எ - று. பதி, பசு, பாசம், விதி, வீடு என்பவற்றின் வழக்கையறுத்துச் சித்தநிலையுறச்செய்யத்தக்க சென்னவசவனெனப் பொருள்கொள்க. பதியையன்றிப்பசுவும் பசுவையன்றிப்பாசமும் இன்றெனவமைத்து மூன்றும் பொருளாகவழக்கிடுவார் தீர்ப்பையும் முத்திநிலையுந்தெரிவித்து இவையனைத்துஞ் சித்தப்பிராந்தியெனக்காட்டி ஐயந்திரிபு அகற்றினதாகக் கோடல் சிறப்பு. பதியு மப்பதியாற்காணும் பசுவுமென்றதனுல் பிம்பப் பிரதிவிம்பமாகப்பெற்றும். பசு பதியையன்றித் தானேர்முதலன்றென வுணருங்காறும், பந்தமும் வீடுந் தவிர்தலொன்றுதெனவே மதிமயக்கென்னு மமையும். பாசமித்தையாகாவிடத்து, பேதபாவனைகாறு. அதனீங்காவிடத்து முத்தியெய்தல் கூடாமையின், அப்பாசம் பொய்யாய் வேறாம் வீடென்றார். இங்ஙனமிருக்க முத்தியிது மும்முதலுமென்றெனல் மூடம். அன்றேல், "தனியேயிருப்பதற்கெண்ணினேனென்னைமிதுசாயிலேயறியாததோ." எனச்சான்றோர் கூறுதற்கேதென்னை. விரிக்கிற்பெருகுமாதலிற் சுருக்கியுரைத்தாம். உடன்பாடெதிர்மறையை விதிவாக்கியமென்றதற்கு விதியென்றார். இங்கேபாசமெனல் கிரியைத்தை. அத்திரிபமே சகசிவபாவமென்க. ஐம்பாசமாவன; தமம், மாயை, மோகம், அவித்தை, பொய்யுருவி என்பன. பதிமுதல் வீடுகாறும் உண்மைசொடுத்தது மதிமயக்கென்றது. (௧௮)

எம்மடி மாசு முக்க ணிறைபவ னடிமை பூண்டோர்
தம்மடி மாக நீக்குந் தன்றொழி னெறிவ ழாத
செம்மடி வால மாச்ச தேவனு மன்பு தாயின்
மும்மடி யாகு நந்தி முதல்வனோ டருகு சென்றான்.

(இ - ள்.) எம் - நம்முடைய—அடி - மூலமாகின்றவன்—மாசும் - அ...ஞானத்தையும்—முக்கண - திரிநேத்திரத்தையுடைய—இறைவன் - பரமசிவனது—அடிமைபூண்டோர்தம் - அடியார்களுடைய—மடிமாசு - வஸ்திரவழுக்கை—நீக்கும் - நீக்குகின்ற—தன்றொழில் - தனதுதொழிலின்—நெறிவழாத - நெறியின்நகலாத—செம் - நல்ல—மடிவாலமாச்சதேவனும் - மடிவாலமாச்சதேவனென்பவனும்—அன்பு - அன்பில்—தாயின் - பெற்றதாயினும்—மும்மடியாகும் - மூன்றுபங்குள்ள—நந்திமுதல்வனோடு - வசவண்ணனோடு—அருகுசென்றான் - பக்கத்திற்சென்றனன். எ - று. எனவே, மடிவாலமாச்சனுங் கூடப்போயினனென் றாயிற்று. ( )

சங்கரன் சடையிற் பாம்புந் தவழ்ந்தெதிர் கிடந்த பிள்ளைத்
திங்களுஞ் செய்த வொப்பச் செங்கைமா னசைவ மாகக்
கங்கையுந் திரைய டங்கக் கானமுன் பாடி யீச
கிங்கரன் றனது பாங்கர் கின்னரப் பிரமன் சென்றான்.

(இ - ள்.) சங்கரன் - பரமசிவனது—சடையிற்பாம்பும் - சடையிலுள்ளபாம்பும்—தவழ்ந்தெதிர்கிடந்த - எதிரில்தவழ்ந்திருக்கின்ற—பிள்ளைத்திங்களும் - மூன்றாம்பிறையும்—செய்தவொப்ப - செய்ததுபோலவிருக்கின்ற—செங்கைமான் - சிவந்தகையிலுள்ளமானும்—அவசமாக - பரவசப்படவும்—கங்கையும் - கங்காநதியும்—திரையடங்க - அலையடங்கிற்கவும்—கானமுன்பாடி - முன்னேயிசைக்ஞானநயங்களைப்பாடிக்கொண்டு—ஈசகிங்கரன்றனது - ஒருவகைச்சாதியடியானது—பாங்கர் - பக்கத்தில்—கின்னரப்பிரமன் - கின்னரப்பிரமனென்போன்—சென்றான் - போயினன். எ - று. கானம்; இசைக்ஞானம். பாம்பும் பிள்ளைத்திங்களும் மானும் பரவசமாகவும் கங்கையலையடங்கவும் பாடிக் கின்னரப்பிரமன் சென்றானென முடிக்க. இவை யெல்லாமுண்மை. (௨௰)

தண்டினர் கரகக் கையர் சடையருத் தூளை நந்தர்
புண்டர நுதலர் கற்றோய் பூந்துகி லுடையர் நீல
கண்டனை யகம்பு றத்துங் கண்டவர் வினையி னீங்கித்
தொண்டுறு நெறியி னின்றோர் குழுந்தன ரெண்ணி லாரே.

(இ - ள்.) தண்டினர் - திரிதண்டமுடையோரும்—கரகக்கையர் - கமண்டலமேந்திய கரமுடையோரும்—சடையர் - சடையையுடையோரும்—புனைத்தூளை நந்தர் - அங்கமுழுதும் விபூதிதாரிதமுடையோரும்—புண்டரநுதலர் - திரிபுண்டரமணிந்த நெற்றியையுடையோரும்—கற்றோய் - காவிக்கல்லிற்றோய்ந்த—பூந்துகிலுடையர் - அழகியவஸ்திரமுடையோரும்—நீலகண்டனை - நீலகண்டமுடையபரமசிவனை—அகம்புறத்துங் ...

டவர் - அகம்புறத்திலொருபடித்தாக்கண்டவர்களும் — விளையினிகழ் - இருவினையினின்றுநீங்கி — தொண்டுநெறியினின்றோர் - சிவதொண்டு நெறியினின்றவர்களும் — என்னிடார் - அளவிறந்தவர்கள் — சூழ்ந்தனர் - சூழ்ந்துகொண்டனர். எ - று. புண்டரம்; விபூதியாலிடும் மூன்றுகீறாக நெற்றியிலணிவது. அகம்புறத்திசைவைக் கண்டவராவது; சொப்பிரகாசமாதலை யென்க. (௨௧)

தோள்வலத் தடித்த தின்று சுடரிலை வெற்பு தொன்று [பேம் கோள்வலங் கொண்டுஞ் செய்பொற் குன்றென மார்பிற் காண் வேள்வலங் கொண்ட நெற்றி விழியிறை யருளா லென்றும் வாள்வலங் கொண்ட சேனை மறவர்வா ரிதிபோற் சூழ்ந்தார்.

(இ - ள்.) இன்று - இன்றைக்கு — தோள்வலத்தடித்தது - வலதுதோளடித்தது — சுடர் - பிரகாசம்பொருந்திய — இலை - இலைபோன்ற — வெற்புதொன்று - வேலாயுதமெய்தியவோர்புண்ணை — கோள்வலங்கொண்டும் - வலக்கிரகம் ... செம் - சிவந்த — பொற்குன்றெனும் - பொன்மலையென்னத்தக்க — மார்பிற்காண்பம் - மார்பினிடத்திற்காணும் — வேள்வலங்கொண்ட - மன்மதனது வலியையக்கவர்ந்த — நெற்றிவிழி - நெற்றிக்கண்ணையுடைய — இறையருளால் - பரமசிவனதருளால் — என்றும் - என்றைக்கும் — வாள்வலங்கொண்ட - வாளைவலது கையிலேந்திய — சேனைமறவர் - மறவர்சேனைகள் — வாரிதிபோற்சூழ்ந்தார் - சமுத்திரம்போற்சூழ்ந்தனர். எ - று. தோள்வலத்தடித்ததாம் நம்மோடெதிர்த்தோர்மார்பில் இறையருளால் வேற்புண்ணென்றுகாண்பமென்று சொல்லுகின்ற மறவர்சேனை சமுத்திரம்போற் சூழ்ந்தன வென்க. (௨௨)

எங்கள்வாழ் வனைய நந்தி யெழுந்தருள் மறுகி னூடு மங்குல்வா னிரவிப் புத்தேள் மணிநெடுந் தேர்ப்பைங் கிள்ளை தங்கள்காற் றாட்கு டைந்து தரிப்பரி தாகி யோட வெங்கண்மா ஞால மெல்லா மதிர்தர நடந்த வம்மா.

(இ - ள்.) எங்கள்வாழ்வனைய - எங்கள்வாழ்வையொத்த — நந்தியெழுந்தருள் - வாகனங்களாகப்புறப்பட்ட — மறுகினூடு - வீதியில் — மங்குல் - மேகங்கள்தங்கிய — வான் - ஆகாயத்திலுள்ள — இரவிப்புத்தேள் - சூரிய பகவானது — மணி - மணிகட்டிய — நெடுந்தேர் - நீண்டதேரிலுள்ள —

பைங்கிள்ளை - பசியகிளிப்பிள்ளைகள் — தங்கள்காற்றாட்கு - தங்களகாலி லெழுந்தாசுகளுக்கு — உடைந்து - மெலிந்து — தரிப்பரிதாகி - சகிக்கக்கூடாமல் — ஓட - ஓடும்படியாகவும் — வெங்கண் - அழகியவிடத்தையுடைய — மாஞாலமெல்லாம் - பெரியபூமிமுழுவதும் — அதிர்தர - அதிரும்படியாகவும் — நடந்த - நடந்தன. எ - று. சேனைகள்; தோன்றுவெழுவாய். அம்மா; வியப்புக்குறிப்பு. (௨௩)

அரவொடு மண்சு மக்கு மதிகளி றெட்டோ டிப்போர் பொரவொரு களிநல் யானை போதுமென் றெண்ணி லாத விரவொடு புனைகி டந்த வீர்ங்கவுட் கிறுகட் டீங்கு கரவிளை வெண்ம ருப்புக் கடாக்களி றெழுந்த வன்றே.

(இ - ள்.) அரவொடு - ஆதிசேஷனோடு — மண்சுமக்கும் - பூமியைச்சுமக்கின்ற — அடு - கொல்லுகின்ற — களிறெட்டோடும் - அஷ்டதிக்கஜங்களோடும் — போர்பொர - யுத்தஞ்செய்தற்கு — களி - களிப்புபொருந்தி — நல் - நல்ல — ஒருயானைபோதுமென்று - ஒருயானையேபோதுமென்று — எண்ணிலாத - அளவிறந்த — இரவொடுபுரை - இரவுக்கொப்பான — கிடந்த - மிகுந்த — ஈர்ங்கவுள் - குளிர்ச்சிபொருந்தியகன்னத்தையும் — சிறுகண் - சிறியகண்களையும் — தூங்குகரம் - தொங்குகின்ற துதிக்கையையும் — வளை - வளைந்த — வெண்மருப்பு - வெண்மையாகியதந்தங்களையும் — கடாம் - மதஜலத்தையுமுடைய — களிறு - யானைச்சேனைகள் — அன்றே - அசைகள். எழுந்த - எழுந்திருந்தன. எ - று. அன்று ஏ - அசைகள். அஷ்டதிக்கஜங்களையும் எங்களிலொருயானையே வென்றுவிடும் என்றுசொல்லும்படியான தோற்றந்தோடு யானைச்சேனைகளெழுந்தனவென்க. யானைகளை, கவுள், கண், கரம், மருப்பு, கடாம், என்னும் விசேஷியத்துக்கு இரவு, ஈர், சிறு, தூங்கு, வளை, வெண்மை விசேஷணமென்க. எழுந்தவென்னும் அஃறிணைப்பன்மை வினைமுற்றால் களிறென்பதை அஃறிணைப்பன்மைப் பெயராக்குக. (௨௪)

ஆனைமேற் கொண்டு வாவு மாடல்வெம் பரிமி வார்த்துங் கூனல்வெய் னொடுங்கு ஞாயிற குச்சடைச் சிவிகை யூர்ந்துஞ் சேனைகா வலரெண் ணில்லார் சிலைமதன் கோல மென்ன மானவென் புன்னர் மன்னன் மந்திரி மருங்கு சென்றார்.

(இ - ள்.) ஆனைமேற்கொண்டு - ஆனைகளின்மேலேறியும் — வாவும் - அதிகவேகமுள்ள — பரி தாவாநின்ற — ஆடல் - ஆடுதலையுடைய — வெம் - அதிக

யிவர்ந்தும் - குதிரைகளின்மேலேறியும்—கூன் - வளைவாகிய—நல்வேய் தொடுத்த - நல்லமூங்கிலைத்தொடுத்த—ஞான்ற - தொங்குகின்ற—குச்சுடை - குச்சுகளையுடைய—சிவிகையூர்ந்து - பல்லக்குகளின்மேலேறியும்—சேனைகாவலர்-சேனாதிபதிகள்—எண்ணில்லார் - அளவிறந்தபெயர்—கிலை - கருப்புவில்லையுடைய—மதன் - மன்மதனது—கோலமென்ன - அழகைப்போல—மானம் - வலியுள்ள—வேல் - வேலைத்தாங்கிய—மன்னர்மன்னன் - ராஜாதிராஜனாகிய விச்சலனது—மந்திரி - மந்திரியாகியவசவண்ணனையுடைய—மருங்குசென்றார் - பக்கத்திற்சென்றனர். எ - று. மேற்கொள்ளலும் இவர்தலும் ஏறுதலையென்க. (உ௫)

நலங்கிளர் மதன்கு டைக்கு நகைமணிக் காம்பி லென்ன [மூந்த
விலங்குறு பசும்பொற் காம்போ டெண்ணில்வெண் குடையெ
புலன்களை வென்ற வீரன் போகிய மறுகி லெங்கும்
விலங்கினை யன்றி யந்த விலங்கின்வா லாடிற் றன்றே.

(இ - ள்.) நலங்கிளர் - அழகுமிகுந்த—மதன்குடைக்கு - மன்மதனது குடைக்கு—நகை - பிரகாசம்பொருந்திய—மணி - ரத்னங்கள்பதித்த—காம்பிலென்ன - காம்பில்லையென்று—இலங்குறு - பிரகாசிக்கின்ற—பசும்பொன் - பசியபொன்னாலாகிய—காம்போடு - காம்புகளோடு—எண்ணில்வெண்குடை - அளவிறந்தவெள்ளைக்குடைகள்—எழுந்த - வந்தன—ஐம்புலன்களைவென்ற - ஐம்புலன்களையுஞ்செயித்த—வீரன்போகிய - வசவண்ணன்போகின்ற—மறுகிலெங்கும் - வீதிகளிலெங்கும்—விலங்கினையன்றி-மிருகங்களையல்லாமல்—அந்தவிலங்கின்வால்-அந்தமிருகங்களினதுவால்—ஆடிற்றன்று - ஆடாது. எ - று. ஏ - அசை. மிருகத்தினதுசங்கற்பத்தையன்றி அதன்வாலாடாததுபோல வசவண்ணனதெழுச்சியன்றி இவ்வளவுமெழாதென்பது கருத்து. (உ௬)

மாயைதன் றேல்வி யெல்லா மாதர்க்கும் வந்த வன்றே
நாயகன் றன்னைப் பற்றி நாம்வென்றி கொள்வ மென்று
போயுறு தன்மை போலப் புணர்முலைக் கருநெ டுங்கட்
டேயுநுண் மருங்குன் மாதர் திரள்பல வெழுந்த வன்றே.

(இ - ள்.) மாயைதன்றேல்வியெல்லாம்-மாயையினதுதோல்விகளைத்தும்—மாதர்க்கும்வந்தவன்றே - ஸ்திரீகளுக்கும்வந்தனவல்லவா—நாயகன்றன்னைப்பற்றி - நாயகனைவயமாக்கிக்கொண்டு—நாம்வென்றிகொள்வோமென்று - நாம்வெற்றியடைவோமென்றெண்ணி—போயுறுதன்மைபோல - போகும்விதம்போல—புணர்முலை - புணர்ச்சியைத்தனங்களையும்—கரு - கறுத்த—நெடுங்கண் - நீண்டகண்களையும்—தேயும்-சுருங்கிய—நுண் - நுட்பமாகிய—மருங்குல் - இடையினையுமுடைய—மாதர்திரள் - ஸ்திரீகூட்டங்கள்—பலவெழுந்த - பலவாகவெழுந்திருந்தன. எ - று. அன்று ஏ - அசைகள். மாதரென்னும் விசேஷியத்துக்கு முலை, கண், மருங்குல், விசேஷணமென்க. (உ௭)

பரிகளின் முழக்கு மிக்க பல்லிய முழக்கும் பூட்கைக்
கரிகளின் முழக்கும் வீரக் கழலொடு செல்லும் வெங்கோ
ளரிகளின் முழக்கு மாத ரணிகளின் முழக்குஞ் செங்கைச்
சரிகளின் முழக்கும் விம்மித் தடங்கடல் போன்ற வன்றே.

(இ - ள்.) பரிகளின்முழக்கும் - குதிரைகளின்சத்தமும்—மிக்க - மிகுந்த—பல்லியமுழக்கும் - வாத்தியசத்தமும்—பூண் - பூணைத்தரித்த—கை - தும்பிக்கையையுடைய—கரிகளின்முழக்கும் - யானைகளின்சத்தமும்—வீரக்கழலொடுசெல்லும் - வீரகண்டயத்தோடுசெல்லும்—வெங்கோள் - கொடியவலியையுடைய—அரிகளின்முழக்கும் - சிங்கங்களின்சத்தமும்—மாதர் - ஸ்திரீகளின்—அணிகளின்முழக்கும் - ஆபரணசத்தமும்—செங்கை - சிவந்தகைகளிலணிந்த—சரிகளின்முழக்கும் - வளையல்களின்சத்தமும்—விம்மி - மேற்கொண்டு—தடங்கடல்போன்ற - விரிந்தகடல்முழக்கம்போன்றன. எ - று. அன்று ஏ-அசைகள். அரிகள் புலிகளெனினு மமையும். (உ௮)

ஆடுவ கவரி யெங்கு மசைவன சிவிறி யெங்கு
மூடுவ குடைக ளெங்கு முழங்குவ வியங்க ளெங்கும்
பாடுவ கின்சைக ளெங்கும் பாய்வன கரிக ளெங்கு
மோடுவ புரவி யெங்கு முயர்வன தூளி யெங்கும்.

(இ - ள்.) கவரி - சாமரைகள்—ஆடுவவெங்கும் - எங்குமாடுகின்றன—அசைவன—சிவிறி-விசிறிகள்—அசைவனவெங்கும் - எங்குமசைகின்றன—மூடுவ—குடைகளெங்கும் - குடைகளெவ்விடத்தும்மூடுகின்றன—முழங்குவவியங்களெங்கும்-வாத்தியங்களெங்குமுழங்குகின்றன—பாடுவகின்சைகளெங்கும் - எவ்விடத்துமிராகங்கள்பாடப்படுகின்றன—பாய்வனகரிகளெங்கும் - யானைகளெவ்விடத்தும் பாய்கின்றன—ஓடுவபுரவியெங்கும்-

குதிரைகளெவ்விடத்துந் தாவியோடுகின்றன—உயர்வன தூளியெங்கும் - எவ்விடத்துந் தூசுகள்மேலோங்கிச் செல்கின்றன. எ - று. (௨௯)

கரிகல மசையா நின்ற கவரிக ணுரைகண் மொக்குள்
விரிகுடை மதுகை வீரர் விதிர்க்கும்வா ளுகண்மீன் பாயும்
பரிதிரை முழக்க மார்க்கும் பல்லிய முழக்க மாகப்
பொருகட லெனவெ ழுந்து போயது வசவன் சேனை.

(இ - ள்.) கரி - யானைகள்—கலம் - கப்பலாகவும்—அசையாநின்றக வரிகள் - அசைகின்றசாமரைகள்—நுரைகள் - நுரைகளாகவும்—விரிகுடை - விரித்தகுடைகள்—மொக்குள் - குமிழிகளாகவும்—மதுகைவீரர் - வலியுள்ளவீரர்கள்—விதிர்க்கும் - அச்சமுண்டாக்கும்—வாள் - கத்திகள்—உகள்மீன் - குதிக்கின்றமீன்களாகவும்—பாயும்பரி - பாயத்தக்ககுதிரைகள்—திரை - அலைகளாகவும்—ஆர்க்கும் - விடாதுசத்திக்கின்ற—பல்லியமுழக்கம் - வாத்தியவொலிகள்—முழக்கமாக-கோஷமாகவும்—வசவன்சேனை - வசவண்ணனது சேனை—பொருகடலென - மோதுகின்றகடல்போல—எழுந்துபோயது - எழுந்துபோயிற்று. எ - று. ஆகவெனல் கடைநிலைத்தீவகம். இக்கவி விரியுருவகம். சேனை தொகையொருமை. (௩௰)

வேறு.

இன்ன வாறெழுந் திரளொடு நந்தியெம் பெருமான்
றன்னை நேர்குரு பரனெதிர் சென்றவன் றுளைச்
சென்னி யால்வணங் குவனெனு மோகையாற் சென்றான்
முன்னும் விண்ணவர் தொகுதியும் வியப்பொடு துதிப்ப.

(இ - ள்.) இன்னவாறு - இவ்வாறு—எழுந்திரளொடு - எழுந்தசேனைத்திரளோடு—நந்தியெம்பெருமான் - வசவண்ணதேவன்—தன்னைநேர் - தனக்குத்தானேயொப்பாகிய—குருபரனெதிர்சென்று - அல்லமனையெதிர்கொண்டுபோய்—அவன்றாளை - அவனதுதிருவடிகளை—சென்னியால்வணங்குவனெனும் - எனதுசிரசினால் வணங்குவேனென்கிற—ஓகையால் - ஆசைப்பெருக்கால்—முன்னும் - மிருந்த—வானவர்தொகுதியும் - தேவர்கள்கூட்டமும்—வியப்பொடுதுதிக்க - ஆச்சரியத்தோடுதுதிக்கும்படி—சென்றான் - போயினன். எ - று. நந்தியெம்பெருமான் சென்று வானவர்துதிப்பச் சேனைத்திரளோடு வீதியிற்சென்றானெனப்

பொருள்கொள்க. சென்றென்பதனை வணங்குவ னென்பதனோடு முடிக்க. (௩௧)

அத்தி றஞ்செலுஞ் செலவினை யகங்குருட் டமணர்
புத்தர் கண்டிவ ரென்கொலோ வறிதெதிர் போதல்
பித்த னென்றுதம் மிறைவனைச் சொல்லுமிப் பேய
ரெத்தி றஞ்செயா ரெனச்சிவ சரணரை யிகழ்ந்தார்.

(இ - ள்.) அத்திறஞ்செலும் - அவ்வாறுபோகும்—செலவினை - போக்கை—அகங்குருட்டமணர் - அறிவிழந்தசமணரும்—புத்தர் - பௌத்தரும்—கண்டு - பார்த்து—இவர் - இந்தவசவண்ணதேவர்—என்கொலோ - என்னமதிகொண்டோ—வறிது - வீணாக—எதிர்போதல் - எதிர்கொண்டுபோதல்—பித்தனென்று - பித்துகொண்டோனென்று—தம்மிறைவனை - தங்களரசனை—சொல்லுமிப்பேயர் - சொல்லுகின்ற விப்பேயர்கள்—எத்திறம் - எவ்வளவுகொடுமைத்திறம்—செயாரென - செய்யமாட்டார்களென்று—சிவசரணரை - சிவனடியார்களை—இகழ்ந்தார் - தூஷித்தார்கள். எ - று. சமணரும் புத்தரும் இங்ஙனம்போதலைக்கண்டு இதென்னமதியென்றும், இங்ஙனமிருக்க நமதரசனை பித்தனென்று சொல்லி யிம்மூடர்கள் என்னகொடுமைதான் செய்யமாட்டார்களென்றும் சிவனடியார்களையும் வசவண்ணனையும் நிந்தித்தனரென்க. பொறாமையுடையோர்க்கு எங்ஙனமுண்மை காட்டினும் அப்பொறாமையே தடுக்குமெனக் கொள்க. (௩௨)

மன்னன் விச்சலன் பாலடைந் தருகரெம் மன்னு
கின்ன கர்க்கொரு புதுமையொன் றுற்றதுகேள்
ணன்னி மித்தமொன் றெய்திய தேகொடு நந்தி
தன்னி டத்தொரு வன்வரு மென்றெதிர் சாரும்.

(இ - ள்.) மன்னன்விச்சலன்பால் - விச்சலவரசனிடத்தில்—அருகரடைந்து - சமணர்கள்போய்—எம்மன்னு - எமதரசனே—நின்னகர்க்கு - பொனுடபட்டணத்திற்கு—ஒருபுதுமை - ஓரதிசயம்—ஒன்றுற்றது - பொருந்தியது—நீகேள் - நீகேளுதி—நன்னிமித்தமொன்று - நல்லவொருசகுனம்—எய்தியதேகொடு - வாய்த்ததையே உண்மையாகக்கொண்டு—நந்தி - வசவண்ணன்—தன்னிடத்தொருவன்வருமென்று - தன்னிடத்திலொருவன் வருவானென்றெண்ணி—எதிர்சாரும் - எதிர்கொண்டுபோகின்

றான். எ - று. ஒன்றுறுதலை ஓர்பதமாக்குக. வரும், சாரும், என்பவற்றை "பல்லோர்படர்க்கை முன்னிலைத்தன்மையி" லென்னும்விதியால் உயர்திணை யாண்பாலாக்குக. (௩௩)

தண்ட நாயகன் றோள்வலந் துடித்தது தன்னைக்
கொண்டு தான்வருங் குருபர னென்றெதிர் கோடல்
கண்ட வோர்கன விற்பெறு மடிசிலைக் கருதி
யுண்டு போம்விருந் தினர்தமைத் தேடுத லொக்கும்.

(இ - ள்.) தண்டநாயகன் - வசவண்ணன்—தோள்வலம் - வலதுதோள்—துடித்ததுதன்னைக்கொண்டு - துடித்ததுகாரணமாக—வருங்குருபரனென்று - அல்லமன்வருவனென்று—தானெதிர்கோடல் - தானெதிர்கொண்டுபோதல்—கண்டவோர்கனவில் - ஒருவன் தான்கண்டவொரு சொற்பனத்தில்—பெறுமடிசிலைக்கருதி - காணப்பெற்றவுணவை மெய்யெனக்கருதி—உண்டுபோம் - சாப்பிட்டுப்போகத்தக்க—விருந்தினர்தமை - விருந்தினரை—தேடுதலொக்கும் - தேடுவதற்கொப்பாகும். எ - று. தோள்வலந் துடித்தலைக்கண்டு அல்லமனை எதிர்நோக்கிப்போதல் ; ஒருவன் தன்கனவிற்கண்ட சாப்பாட்டை விருந்தினர்க்கிடத் தேடுதல்போலு மென்க. (௩௪)

ஒருவன் வந்திடு மெனவெதிர் கடற்படை யொருங்கு
பரவி வந்திடச் செலுமிவன் றன்னைநீ பார்த்துப்
பொருவின் மந்திரக் கிழமைநல் கியவுனைப் போல்வா
ரரவின் வன்றலைப் படிமிசை யிலையென வறைந்தார்.

(இ - ள்.) ஒருவன்வந்திடுமென - ஒருவன்வருவானென்று—எதிர் - அவனுக்கெதிரில்—கடற்படை - கடல்போன்றசேனைகள்—ஒருங்கு - ஒருமிக்க—பரவிவந்திட - தன்னைப்பரவிவரும்படி—செலுமிவன்றன்னை - போகின்றவிந்தவசவண்ணனை—நீபார்த்து - நீயொருபொருளாகமதித்து—பொருவில் - ஒப்பில்லாத—மந்திரக்கிழமை - ஆலோசனையுரிமையை—நல்கிய - கொடுத்த—உனைப்போல்வார் - உன்னையொத்தவர்—அரவின் - ஆதிசேடனுடைய—வன்றலை - வலியதலைமேலுள்ள—படிமிசை - பூமியின்மேல்—இலையெனவறைந்தார் - இல்லையென்றுசொல்லினர். எ - று. அரவின் வன்றலைப்படியென்றது ஆதிசேடனாற் சுமக்கப்பட்ட பூமியெனக் கொள்க. உனைப்போல்வா ரிலையென்றதனால்

யோசனையில்லாதவனெனக் குறிப்பிக்கின்றதென்க. ஆலோசனை யுரிமை ; மந்திரிப்பட்டத்தை. (௩௫)

அருகர் வாசகங் கேட்டலு முளம்வியந் தடிகேள்
விரகி னின்மிகு தண்டநா யகனுமெவ் வினைவு
கருதி னன்கொலோ வறிகில முடிவுறக் காண்பம்
வருக நீரிரு மின்களென் றிருந்தனன் மன்னன்.

(இ - ள்.) அருகர்வாசகங்கேட்டலும் - சமணர்வசனங்களைக்கேட்கவும்—உளம்வியந்து - மனமதிசயித்து—அடிகேள் - சுவாமிகளே—விரகினின்மிகு - ஆலோசனையின்மிகுந்த—தண்டநாயகனும் - வசவண்ணனும்—எவ்வினைவுகருதினன்கொலோ - எவ்வாறுபிரயோசனத்தையெண்ணினனோ—அறிகிலம் - யாந்தெரிகிலம்—முடிவுறக்காண்பம் - முடிவுபரியந்தங்காண்பம்—வருக - வரட்டும்—நீரிருமின்களென்று - நீங்களுங்களாச்ரமத்திற்போயிருங்களென்றுசொல்லி—இருந்தனன்மன்னன் - அரசன் பேசாதிருந்தனன். எ - று. அடிகேளென்றதனால் அரசன்பால் வந்த வமணர்கள் குருபீடத்தரெனப் பெறும். (௩௬)

தண்ட நாயகன் றனதுளந் தங்குறத் தானத்
தண்ட நாயகன் றன்மனந் தங்கிய தலைவன்
றண்ட நாயகன் றனையிகழ் சமண்செருக் கழியத்
தண்ட நாயக னெதிர்செல நினைந்தனன் றனித்து.

(இ - ள்.) தண்டநாயகன் - வசவண்ணன்—தனதுளந்தங்குற - தனதுள்ளத்திற்றங்கும்படி—தானத்தண்டநாயகன் - தீரனாந்தவசவண்ணனை—தன்மனந்தங்கிய - நல்லவிருதயத்திற்றங்கிய—தலைவன் - அல்லமதேவன்—தண்டநாயகன்றனை - வசவண்ணனை—இகழ் - நிந்திக்கின்ற—சமண்செருக்கழிய - சமணரதுகெர்வநசிக்கும்படி—தண்டநாயகனெதிர்செல - வசவண்ணனெதிர்கொண்டுசெல்ல—நினைந்தனன்தனித்து - தானே நினைத்தனன். எ - று. வசவண்ணனுளத்தில் தானும் தனதுளத்திலவனும் இருக்கச்செய்த அல்லமன் தன்னைத்தேடிவரும் வசவண்ணனெதிரில் தானேசெல்லத் துணிந்தனனென்க. (௩௭)

என்னைக் காண்குவ னெவ்வகை செல்லினு மென்று
துன்னற் கோவண மொடுவிரி குஞ்சியுந் தோன்றத்

தன்னைக் காண்குநர் பித்தனென் றெள்ளவென் றனக்குப்
பொன்னைப் போலுநல் வசவனு யகனெதிர் போனான்.

(இ - ள்.) எவ்வகைசெல்லினும் - யானென்தெந்தக்கோலங்கொண்டு நடிக்கினும் —என்னைக்காண்குவனென்று - வசவண்ணனென்னைக்கண்டுபிடிப்பானென்று —தன்னற்கோவணமொடு - தனக்கியைந்தகோவணத்தோடு —விரி - சடைசடையாகவிரிந்திருக்கின்ற —குஞ்சியுந்தோன்ற - ஆண்மயிருந்தோன்றவும் —தன்னைக்காண்குநர் - தன்னைப்பார்ப்பவர்கள் —பித்தனென்றெள்ள - பித்துகொண்டோனென்றிகழவும்—என்றனக்கு - அடியேனுக்கு—பொன்னைப்போலும் - பொன்போன்றுவிளங்குகின்ற—நல் - நல்ல —வசவனுயகனெதிர் - வசவண்ணனுக்கெதிரில்—போனான் - போயினன். எ - று. அல்லமன் தோன்ற எள்ளப் போனான் எனக்கூட்டிமுடிக்க. செல்லினும் என்பதிலும்மை இழிவுசிறப்பு.

வேறு.

மருவினின் றவரிவன் மருள னேயென
விரைவி லிங் ககலுக வெனவி லக்கினு
ரொருவருங் கண்டிறை யுருவு ணர்ந்தில
ருருவு கண்டுளாநா ருணர வல்லரோ.

(இ - ள்.) மருவினின்றவர் - நெருங்கிநின்றவர்கள் —இவன்மருளனேயென - இவன்பித்துகொண்டவனேயென்று—விரைவில் - சீக்கிரத்தில்—இங் ககலுகவென - இவ்விடத்தைவிட்டுப்போபோவென்று —விலக்கினர் - விலக்கினார்கள்—கண்டு - அவரவர்கள்கண்டும்—இறையுரு - அல்லமன துண்மைவடிவை—ஒருவருமுணர்ந்திலர் - ஒருவருமறிந்திலர் —உருவு கண்டுளாநர் - உருவத்தைக்கண்டிகழ்பவர்கள் —உணர - அறியவல்லரோ. எ - று. இங்கேவிலக்குதல் சனங்களை. கண்டும் என்பதிலும்மையெஞ்சியது. உருவுகண்டுளாநர் ரென்பதனால் இறையுருவுணர்ந்தவரெனப்படுபவர் புகழுநரெனப்பெறும். வல்லரோவென்பதிலோகாரம் எதிர்மறை. (௫௯)

அல்லம னயிடை யாட லுன்னியே
பல்லெழு வாயுடைப் பால னாகுவன்
கொல்லிள வேறெனக் குமர னாகுவன்
வில்லென வுடல்வளை விருத்த னாகுவன்.

(இ - ள்.) அல்லமன் - அல்லமதேவன் —ஆயிடை - அவ்விடத்தில்—ஆடலுன்னி - விளையாடவெண்ணி —எழுவாயுடை - உருவெழுதற்காதியாகவுடைய —பல்பாலனாகுவன் - பலவிதபேதக்குழந்தையாகுவன் —கொல் - கொல்லுகின்ற—இளம் - இளமையாகிய—ஏறென - ஆண்சிங்கத்தைப்போல—குமரனாகுவன் - குமரப்பருவமாகுவன்—வில்லென - வில்லைப்போல —உடல்வளை - கூன்கொண்ட —விருத்தனாகுவன் - கிழவனாகுவன். எ - று. பல்லெழுவாயுடையென்பதற்கு பல்முளைக்கும் வாயையுடைய பாலனென்பாருமுளர். வில்லெனவுடல்வளை விருத்தனென்றதனால் கூனெனக்கொண்டாம். (௬௦)

விஞ்சையர் மகிழ்வுற வீணை யொன்றுகைக்
கஞ்சமென் மலர்கொடு கானம் பாடுவ
னஞ்சன விழிமணி யரிச்சி லம்படி
வஞ்சியர் மனமயல் வளர வாடுவன்.

(இ - ள்.) விஞ்சையர்மகிழ்வுற - வித்தியாதரர்மகிழும்படி —வீணையொன்று - [illegible] வீணையை—கைக் - கையாகிய —மெல் - மெல்லிய —கஞ்சமலர் கொடு - தாமரைமலரிலேந்திக்கொண்டு —கானம்பாடுவன் - இனியராகம்பாடுவன் —அஞ்சனம் - மைதீட்டிய—விழி - கண்களையும்—மணி - ரத்னங்களை —அரி - பருக்காங்கற்களாகவுடைய—சிலம்பு - நூபுரமணிந்த—அடி - பாதங்களையுமுடைய—வஞ்சியர் - ஸ்திரீகளின்—மனம் - மனதில்—மயல்வளர - மோகம்வளர—ஆடுவன் - நடனம்புரிவன். எ - று. கைக் கஞ்சமென்மலர் ; உருவகம். விழி, அடி, இவைவிசேஷணம். வஞ்சியர் ; விசேஷியம். (௬௧)

இந்திர னிவனென யானை மேற்கொளா
வந்தொரு புடைநரர் மருளத் தோன்றுவன்
பைந்தொடி பெயர்தரு பாணி போலவே
பந்திமுன் முடங்குளைப் பரிந டத்துவன்.

(இ - ள்) இந்திரனிவனென - தேவேந்திரனிவனென்று —யானை மேற்கொளா - வெள்ளையானையின்மேலேறி—வந்தொருபுடை - ஒருபக்கத்தில்வந்து—நரர்மருளத்தோன்றுவன் - மனிதர்மருண்டுபோகும்படி காணப்படுவேன்—பைந்தொடி - பசியவளையல்—பெயர்தரும் - அசையப்பட்ட —பாணிபோல - கையைப்போல—பந்திமுன் - வசவண்ணனுக்கு முன்னே—முடங்கு - முடங்கிய —உளை - கழுத்துமயிரினையுடைய—ப

ரிடத்துவன் - குதிரையின்மேலேறிநடத்துவன். எ - று. இந்திரனி வனெனத்தோன்றுவன் பாணிபோலப்பரிநடத்துவன் எனமுடித்துப் பொருள்கொள்க. (௪௨)

வானிடைக் கண்டன னனையிற் கண்டனன்
சேனையுட் கண்டனன் றெருவிற் கண்டனன்
யானெனக் கடிநக ரெங்குந் தோன்றுவன்
ஞானநற் கண்ணினுற் காணு நம்பனே.

(இ - ள்.) நல் - நல்ல —ஞானக்கண்ணினாற்காணும் - ஞானக்கண்ணி னல்மாத்திரங்காண்டற்கியைந்த—நம்பன் - அல்லமதேவன்—வானிடைக்கண்டனன்யான் - யானாகாயத்திற்கண்டனன்—மனையிற்கண்டனன் - யான்வீட்டிற்பார்த்தனன்—சேனையுட்கண்டனன் - சேனைகளுக்குட்பார்த்தனன் —தெருவிற்கண்டனன் - யான்வீதியிற்பார்த்தனன் —என - என்றுசொல்லும்படி—கடி - காவலுள்ள—நகரெங்கும் - பட்டணமுழுதும் —தோன்றுவன் - காணப்படுவன். எ - று. யானென்பதை கடைநிலைத்தீபமாக்குக. (௪௩)

ஆடுநர் தம்முட னாடு நல்லிசை
பாடுநர் தம்முடன் பாடு மென்மலர்
சூடுநர் தம்முடன் சூடும் வாள் விதிர்த்
தோடுநர் தம்முட னோடு மல்லமன்.

(இ - ள்.) அல்லமன் - அல்லமதேவன் — ஆடுநர்தம்முடனாடும் - கூத்தாடுபவர்தம்மொடுகூடியாடுவன் —நல்லிசை - நல்லவிசைக்ஞானத்தை — பாடுநர்தம்முடன்பாடும் - பாடுபவர்களோடுகூடிப்பாடுவன் —மென்மலர் - மெல்லியமலர்மாலைகளை —சூடுநர்தம்முடன்சூடும் - சூடிக்கொள்பவர்களோடுகூடிச்சூடிக்கொள்வன் —வாள்விதிர்த்து - வாளால்நடுங்கச்செய்து—ஓடுநர்தம்முடனோடும் - ஓடுபவர்களோடுகூடியோடுவன். எ - று. அல்லமன் கடைநிலைத்தீபகம். ஆடும், பாடும், சூடும், ஓடும், இவற்றைப் பல்லோர்படர்க்கையென்னும்வினையால் உயர்திணையாண்பாலாக்குக. வினைத்தொகை உருவியெனப்பொருள் கொள்வாருமுளர். (௪௪)

பொருவிலா வளநகர் பொருந்து மானிடர்
வரைவிலா வாடலின் வகைசெய் கிற்பவ

ரொருவரோ பலர்கொலோ வுணர்கி லோமென
வெருவின ரல்லமன் விநோத நோக்கியே.

(இ - ள்.) பொருவிலா - ஒப்பில்லாத—வளநகர் - வளப்பம்பொருந்திய பட்டணத்தில் —பொருந்துமானிடர் - இருக்கின்றமனிதர் —வரைவிலா - அளவில்லாத—ஆடல் - ஆடல்களில்—இவ்வகைசெய்கிற்பவர் - இவ்வாறுசெய்கின்றவர்—ஒருவரோபலர்கொலோ - ஒருவரோபலரோ—உணர்கிலோமென - அறியேமென்று— அல்லமன்விநோதநோக்கி - அல்லமனதுவிநோதங்களைநோக்கி —வெருவினர் - பயந்தனர். எ - று. மானிடர் அல்லமன்விநோதநோக்கி வெருவினர் எனமுடிக்க. (௪௫)

மண்ணிடை மறைவுறு நிதிய வைப்பினைக்
கண்ணிடு மஞ்சனக் காரன் காண்கைபோ
லெண்ணிடு முணர்வுடை நந்தி யெம்பிரா
னண்ணலை யறிந்தன னையமின்றியே.

(இ - ள்.) மண்ணிடை - பூமியில்—மறைவுறு - மறைந்திருக்கின்ற—நிதியவைப்பினை - தனப்புதையலை —கண்ணிடும் - கண்ணிற்போட்ட—அஞ்சனக்காரன் - மையுடையவன் —காண்கைபோல் - காணுமாறுபோல - எண்ணிடும் - அங்கிருந்த—உணர்வுடைநந்தி - விக்கவிவேகமுள்ளவனாகிய—எம்பிரான் - எமதுகர்த்தன் — ஐயமின்றி - சந்தேகமில்லாமல்—அண்ணலையறிந்தனன் - அல்லமனையறிந்தனன் எ - று. நிதியவைப்பு இருபெயரொட்டுப்பண்புத்தொகை. (௪௬)

உடம்பெலா முள்ளமா யுருகிக் கண்கணீ
ரடங்குறு தொழுகமெய் விதிர்ப்ப வன்பினற்
றொடர்ந்தெலா வுயிரையுந் தொண்டு கொண்டரு
ணெடுந்தகா யருளென வீலத்தி றைஞ்சினன்.

(இ - ள்.) உடம்பெலாமுள்ளமாயுருகி - தேகமுழுதுமுள்ளமாகநெக்குருகி—கண்கணீர் - கண்களினின்றுநீரானது —அடங்குறுதொழுக - தடைபடாதுபெருகவும்—மெய்விதிர்ப்ப - தேகநடுங்கவும்—அன்பினற்றொடர்ந்து - அன்பினற்றொடர்வுற்று —எலாவுயிரையும் - எல்லாவுயிர்களையும்—தொண்டுகொண்டருள் - அடிமைகொண்டருளப்பட்ட—நெடுந்தகாய் - சிறந்தகுணமுடையவல்லமனே—அருளென - அனுக்கிரகிப்பா

யென்று — நிலத்திறைஞ்சினன் - பூமியில்விழுந்துவணங்கினன். எ - று. உருகுதல்; உடம்புமுழுதுமாகக்கண்டவின் உடம்பெலாமுள்ளமாயுருகி யென்றார். நெடுந்தகாயென்பது பண்புத்தொகைப் புறத்துப்பிறந்தவன் மொழித்தொகை. (௪௭)

தண்டநா யகனிலந் தண்டிற் றாழ்ந்தெழுந்
தொண்டரா யவனொடு துன்னி னோரெலாங்
கண்டுநீர் விரிபுகக் கசிந்த வன்பின
லண்டநா யகன்றிரு வடிப ணிந்தினர்.

(இ - ள்.) தண்டநாயகன் - வசவண்ணன் — நிலம் - பூமியில் — தண்டில் - அடிபற்றபனைபோல — தாழ்ந்தெழ - விழுந்தெழுந்திருக்க — தொண்டராய் - அவனடியர்களாய் — அவனொடு துன்னினோரெலாம் - வசவண்ணனைக் கூடியிருந்தவர்களனைவரும் — கண்டு - பார்த்து — நீர்விரிபுக - கண்களினீர்பெருக — கசிந்த - மனநெக்குருகிய — அன்பினல் - அன்பினல் — அண்டநாயகன் - அல்லமனது — திருவடிபணிந்தினர் - திருவடியைவணங்கினர். எ — று. தண்டநாயகன், அண்டநாயகன், இவைகாரணவிடுகுறி. (௪௮)

நந்திதன் னன்பையு நந்தி பால்வரு
மெந்தைதன் னருளையு மென்சொல் வாமெனச்
சிந்தினர் மலர்மழை தேவர் யாவருந்
அந்த யதிர்த்தனர் தொண்ட ரார்ப்பவே.

(இ - ள்.) நந்திதனன்பையும் - வசவண்ணனதன்பையும் — நந்திபால்வரும் - வசவண்ணனிடத்துவந்த — எந்தைதன்னருளையும் - அல்லமனது திருவருளையும் — என்சொல்வாமென - என்னவென்றுசொல்வோமென்று — தேவர்யாவரும் - தேவர்களனைவரும் — சிந்தினர்மலர்மழை - புஷ்பமாரிசொரிந்தனர் — தொண்டரார்ப்ப - அடியார்களதிமுழக்குமேலிட — துந்துமியதிர்ந்தன - தேவதுந்துமிமுழங்கின. எ - று. அதிர்ந்தன என்பது படர்க்கைப்பன்மை வினைமுற்றாதலின் துந்துமியெனலே படர்க்கைப்பன்மைப்பெயராக்குக. தொண்டரார்ப்பவெனலே "பிறவுமேற்கும் பிற வென்னும்" விதியால் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சமாக்குக.

மயலிலா நங்குரு வசவன் வாழ்தரு
மியலினு லல்லம னென்னனி வந்தருள்

செயலினு லடியவர் திரள்க ளித்தலாற்
கயிலையே வளங்கெழு கல்வி யாணமே.

(இ - ள்.) மயலிலா - மயக்கமிறந்த — நங்குருவசவன் - நமதுகுருவாகியவசவண்ணன் — வாழ்தருமியலினல் - வாழுந்தன்மையினலும் — அல்லமனென்னனிவந்தருள் - அல்லமதேவனென்னனிவந்த — செயலினல் - செய்கையினலும் — அடியவர்திரள் - அடியார்களதுகூட்டம் — களித்தலால் - இவற்றைக்கண்டுகளித்தலாலும் — வளங்கெழு - மிக்கவளப்பமுள்ள — கல்[illegible] - கல்யாணபுரியே — கைலையே - கைலையெனப்படுவதேயாம். எ - று. பேதங்கொண்டு [illegible] இரண்டிடத்தும் ஏகாரத்தனர். இஃதிவனே [illegible] னென்றுற்போதும். (௫௦)

தெரியநற் றண்டநா யகன்றன் செய்கையும்
பெரியவக் குருபரன் பெருமை தன்னையுங்
கரியமெய்ச் சமணர்தாங் கண்டு மன்பில
ரரியவற் றரிதருக் காறு வெல்வதே.

(இ - ள்.) கரிய - கறுப்பான — மெய் - உண்மையையுடைய — சமணர் - சமணர்கள் — நல் - நல்ல — தண்டநாயகன்றன் - வசவண்ணனது — செய்கையும் - செயலையும் — பெரிய - சிறந்த — அக்குருபரன் - அந்தவல்லமனது — பெருமைதன்னையும் - மகிமையையும் — தெரியத்தாங்கண்டும் - தாங்கள்பிரத்தியட்சமாகக்கண்டும் — அன்பிலர் - சற்றுமன்பிலராயினர் — அழுக்காறுவெல்வது - பொறாமையைவெல்வது — அரியவற்றரிது - அருமையானவைகளுக்கெல்லா மருமையானது. எ - று. ஏ - அசை. சமணரென வழிதுகூறுது கரியமெய்ச்சம[illegible] அவர்களது சித்தாந்தபட்சமனைத்தும்[illegible]சமர்க்கர்களாயவதினலும், அவர்களது மெய்ச்சடங்குகளனைத்தும் பிறர்வியக்கக்காண்டலாலும், காமவெகுளி மயக்கங்கள் தாமொளித்தற்கிடமின்றிய கல்விஞானத்தாலென்க. பொதுநீதியற்றி அரியவற்றரிதழுக்காறு வெல்வதேயென்றார். (௫௧)

தந்திர முடிவெனுஞ் சைவ தேசிகன்
வந்தெதிர் தனதுநாள் வணங்கி னேரொடு
செந்திரு மகளுலாந் தெருவுட் போகியே
நந்திதன் மந்திர நணுகி னனரோ

(இ - ள்.) தந்திரம் - எல்லாத்தந்திரங்களினும்—முடிவெனும் - சைவதந்திரமேமுடிவென்றுகூறும் —சைவதேசிகன் - சைவத்துக்குக்குருபீடமாகியவல்லமதேவன்—வந்தெதிர் - எதிரேவந்து—தனதுதாள்வணங்கினரொடு - தனதடிகளைவணங்கினவர்களோடு —செந்திருமகளுறைவாம் - இலக்குமிவாசஞ்செய்கின்ற—தெருவுட்போகியே - வீதியிடமாகச்சென்று—நந்திதன்மந்திரம் - வசவண்ணனதுமடத்தில்—நணுகினன் - பிரவேசித்தனன். எ - று. அரோ - அசை. சைவதேசிகன் போகி நணுகினன் எனக்கூட்டிப் பொருள்கொள்க. சரியை கிரியை யோகநெறிக்கா விதிக்கேதங்கள்முரணுறு பரஞானம், அபரஞானம், மிசிரஞானம் இவையெனவிளக்கித் தாமேதானுக்கறமையைந்த தந்திரமாதலின் சைவதந்திரமே முடிவெனக்கூறுமெனப் பெற்றும். (௫௨)

தேவரு முனிவருஞ் சித்த ராகிய
யாவரு மிதனியல் இன்ன தென்றுணர்ந்
தாய்வரு நிலையுடை யம்ப ராதனை
மூவரு மடிதொழு முதல்வ னோக்கினன்.

(இ - ள்.) தேவருமுனிவரும் - தேவர்களும்ரிஷிகளும்—சித்தராகிய யாவரும் - சித்திநிலையையடைந்தவரெவரும்—இதனியல் - இந்தச்சிம்மாசனத்தினிலக்கணத்தை —இன்னதென்று - இத்தன்மையதென்று—உணர்ந்து - மனதிலறிந்து—ஆய்வரும் - ஆராய்ந்தறிதற்கரிய—நிலையுடை - நிலைமையுடைய—அம்பராதனம் - சூனியசிங்காதனத்தை —மூவருமடிதொழும் - திரிமூர்த்திகளுந்தனது திருவடிகளைத்தொழப்பெற்ற—முதல்வன் - அல்லமன் —நோக்கினன் - பார்த்தனன். எ - று. அல்லமன் அந்தச் சூனியசிம்மாசனத்தைக் கண்டனனென்க. (௫௩)

அசைவறு மறிவுரு வாகு மல்லமன்
திசையுறு மணியணைச் சென்னி மீமிசை
வசையறு வழிநடை வசவ தேசிக
னிசையம ருலகிடை யேற வேறினன்.

(இ - ள்.) அசைவறும் - அசைவற்ற —அறிவுருவாகும் - அறிவேவடிவாகவிளங்கும்—அல்லமன் - அல்லமதேவன்—திசையுறு - திக்குகளடங்கிய—மணி - ரத்னங்கள்பதித்த—அணை - சூனியசிம்மாசனத்தின் —சென்னிமீமிசை - உச்சியின்மேல் —வசையறுவழி - குற்றமற்றவழியை—

நடை - தனக்குநெறியாகவுடைய—வசவதேசிகன் - வசவண்ணனது—இசை - கீர்த்தி—அமருலகிடை - என்றும்நிலையாயுள்ளவுலகத்தில்—ஏற - மேற்கொள்ள—ஏறினன் - ஏறினன். எ - று. அல்லமன் அணைச்சென்னிமீமிசை வசவன் தேசிகன்புகழ்மீக்கூர ஏறினன் எனமுடிக்க. பூரணமாதலின் அசைவறுமறிவெனவும், அறிவுருவையன்றி வேறுருவமின்மையின் அறிவுருவாகுமல்லமனெனவுங்கூறினார். சமஸ்ததிக்குகளும் பித்தையெனற்குத் திசையுறுமணியணை யெனக்கூறியதாகப்பெறும்.

கூறரு மொளியுடைக் குதிரைத் தேரினன்
வேறொரு மணிமய வெற்பி வர்ந்தெனத்
தேறரு மணிமிசை தேசி கோத்தம
னேறலு மலர்மழை யிழிந்த வென்பவே.

(இ - ள்.) கூறரும் - சொல்லற்கரிய —ஒளியுடை - பிரகாசத்தையுடைய—குதிரை— குதிரைகட்டிய —தேரினன் - தேரையுடையசூரியன்—மணிமயம் - ரத்தினங்கள்மயமாயுள்ள—வேறொருவெற்பு - வேறோர்மலையில்—இவர்ந்தென - ஏறினாற்போல—தேறருமணிமிசை - தெளிதற்கரியசிம்மாசனத்தின்மேல் —தேசிகோத்தமன் - தேசிகோத்தமனாகியவல்லமன்—ஏறலும் - ஏறவும்—மலர்மழை - புஷ்பமாரிகள் —இழிந்த - பொழிந்தன—என்ப - என்றறிஞர்கூறுவர். எ - று. வே - அசை. சூரியன்வேறோர்மலையிலேறினாற்போல அல்லமன் சூனியசிம்மாசனத்திலேறினதாகக்காணின்றதென்க. என்பவெனல் இடைச்சொல்லடியாகப் பிறந்தவுயர்திணைப்பன்மைவினைமுற்று. (௫௫)

முரசொடு பல்லிய முழக்கெ ழுந்தன
துரிசறு மடியவர் தொகுதி கைகுவித்
தரகர வெனுமொலி யண்ட கூடமட்
டொருகண மொடுங்குமுன் னோடிற் றென்பவே.

(இ - ள்.) முரசொடு - பேரிகையோடு —பல்லியம் - வாத்தியங்களின்—முழக்கு - சத்தங்கள்—எழுந்தன - மேலோங்கின—துரிசறும் - குற்றமற்ற—அடியவர்தொகுதி - அடியார்கள்கூட்டம்—கைகுவித்து - கைகளைக்குவித்து —அரகரவெனும் - அரகரவென்றிசையும்—ஒலி - சத்தமானது—அண்டகூடமட்டு - மேலேயண்டகூடமளவும்—ஒருகணமொடுங்குமுன் - ஒருகணநேரந்தோன்றியொடுங்குதற்குமுன்னரே— ஓடிற்று.

விரைவிலோடியது—என்ப - என்றறிஞர்கூறுவர். எ - று. ஏ - அசை. ஒலி தோகையொருமையாதலின் ஓடித்தென வடிமியொருமையாக் கிறதென்க. (௩௬)

வேறு.

மூதனிலை முதலா மூவிரு நிலையின் மூலமா முதலவா தார, விதழயிழ் கமலப் பொகுட்டினு ணின்ற விலிங்கமோ ராறெனு கின்று, அதன்மிசை யிலகு நிட்களம் போல நவன்றவே ழாநிலை யாகு, மதன்மிசை யமல னல்லம தேவ னமர்ந்தன னமரரும் வியப்ப.

(இ - ள்.) மூதனிலைமுதலாம் - மூதனிலைமுதலாகிய—மூவிரு நிலையில் - ஆறுநிலையினுள்—மூலமா முதலவாதாரம்-மூலமாகிய முதலவாதாரமென்னு ம்—இதழயிழ்-ஆயிரயிதழ்களவிரிந்த—கமலப்பொகுட்டினுள்-தாமரைப் பொகுட்டில்—நின்ற-எழுந்தருளிய—இலிங்கமோராறெனு - ஆத்மாவே யாறுதாரமாயிருக்கின்றதென்று—நின்று - அந்தந்தத்தானங்களினின் று—நுதல்மிசையிலகும் - நெற்றியின்மேற்பிரகாசிக்கும்—நிட்களம்போ ல - நிட்களவடிவம்போல—நவன்ற - முன்சொல்லிய—ஏழாநிலையாகு ம் - ஏழாநிலையாகிய—அதன்மிசை - அந்தச்சூனியசிம்மாசனத்தின்மே ல்—அமலன் - பரிசுத்தனுகிய—அல்லமதேவன் - அல்லமப்பிரபு—அம ரரும்வியப்ப - தேவர்களும்திசயிக்க—அமர்ந்தனன் - எழுந்தருளியிருந்த னன். எ - று. ஆத்மசங்கற்பமே ஆறுதாரமாகவும் தேவதைகளாகவும் நிற்றலின் இலிங்கமோராறென நின்றென்றார். நவன்றவேழாநிலையாகு மதன்மிசையென்றதனால் ஆறுதாரத்துக்குமேலாயது சூனியசிம்மாசன மெனப் பெற்றாம். நுதன்மிசை யிலகுநிட்களம்போல நவன்ற வேழா நிலையாகு மதன்மிசை யமலனல்லமதேவ னமர்ந்தனனென முடித்துப் பொருள் கொள்க. (௩௭)

உடம்பொடு பொறிநாற் கரணமற் றுயிரெனு றுரைத்தி டப் படுமுபா திகளைக், கடந்துள நிலையிற் சோதியா யிலங்கக் கண்டிடு துரியனைப் போல, நெடுந்தவி சமைய வமைத்தசெம் மணிப்பொன் னிலைகளோ ரேழையுங் கடவா, விடந்தனி வசும் பென் றல்லம னிருப்ப விருந்தவர் யாவருங் கண்டார்.

(இ - ள்.) உடம்பொடு - தேகமும்—பொறி - ஐம்பொறிகளும்—நாற்க ரணம் - நான்குகரணங்களும்—மற்று - பின்னும்—உயிர் - சீவனும்—என்

னுரைத்திடப்படும் - என்றுசொல்லப்படும்—உபாதிகளைக்கடந்துள - உ பாதிகளைக்கடந்துள்ள—நிலையில் - முடிவாயநிலையில்—சோதியாயிலங்கக் கண்டிடு - சோதிவடிவாகப்பிரகாசிக்கக் கண்டுகொண்டிருக்கும்—துரிய னைப்போல - துரியநிலையையுடையோன்போல—நெடுந்தவிசு - பெரியசி ம்மாசனம்—அமைய - பொருந்த—அமைத்த - ஏற்படுத்திய—செம்மணி - சிவந்தரத்னங்கள்பதித்த—பொன்-பொன்னுலாகிய—நிலைகளோரேழை யும் - ஏழ்நிலைகளையும்—கடவா - கடந்து—இடம்-இடமானது—தனிவசு ம்பென்று - தனித்தசூனியாசாசமென்று—அல்லமனிருப்ப - அல்லம னெழுந்தருளியிருக்க—இருந்தவர்யாவரும் - பெரியநபோதனர்களனை வரும்—கண்டார்-பார்த்தனர். எ - று. கண்டிடுதுரியனைப்போல இரு ந்தவர்யாவருங் கண்டாரெனப் பொருள்கொள்க. உடம்புமுதலுயிரீறாய வை உபாதியமுறி நிற்றலின் அவற்றையுபாதிக ளென்றார். அவற்றைக் கடந்தலாவது; அவற்றை யொவ்வொன்றாகக் கண்டு நீபதிகளைதலை. ( )

ஆடினர் சிலவ ரங்கைகள் கொட்டி யல்லமன் பெரிய தோர் புகழைப், பாடினர் சிலவர் விழிபொழி வெள்ளம் பாய் வுறக் குவித்தகை தலைமேற், சூடினர் சிலவர் நிலமிசை வீழ்ந்து தொழுதனர் சிலவர்மெய்ப் புளக, மூடினர் சிலவர் பரவினர் சிலவர் முக்கணு னடியவ ரன்றே.

(இ - ள்.) ஆடினர்சிலவர் - சிலராடினூர்கள்—அங்கைகள்கொட்டி - உள்ளங்கைகளைக்கொட்டி—அல்லமன் - அல்லமதேவனது—பெரிய தோர்புகழைப்பாடினர் - ஒருபெரியபுகழைப்பாடினூர்கள்—சிலவர் - சி லபேர்—விழிபொழி - விழியினின்றொழுகும்—வெள்ளம் - ஆனந்தபா ஷ்பவெள்ளம்—பாய்வுற - பாயும்படி—குவித்தகை - குவித்தகைகளை— தலைமேற்சூடினர் - தத்தந்தலைமேற்கொண்டனர்—சிலவர் - சிலபேர்— நிலமிசைவீழ்ந்து - பூமியின்மேல்வீழ்ந்து—தொழுதனர் - வணங்கினூர்க ள்—சிலவர் - சிலபேர்—மெய் - தேகத்தில்—புளகமூடினர் - புளகாங்கித முடைப்பெற்றனர்—சிலவர் - சிலபேர்—பரவினர் - வணங்கினூர்கள்—சில வர் - சிலபேர்— (இவர்களாரெனில்) முக்கணுனடியவர் - சிவனடியார் கள். எ - று. அன்று-ஏ - அசைகள். அங்கையெனல் இடைக்குறை. ( )

இந்திரியம் விடயங் கரணமெய் யென்னு மியாவையுங் கா ணகில னெங்கு, மந்தர வனைமே லிவர்ந்திருந் தருளு மன்னை லைக் கண்டவப் பொழுதே, முந்திய பரமா னந்தவா ரிதியுள

மூழ்கினனழுந்தினனம்மா, தந்திரமெவற்றுஞ் சிறந்தது சைவ தந்திரமெனுமருணந்தி.

(இ - ள்.) இந்திரியம் - சுரோத்ரமுதலியவிந்திரியங்களும் — விடயம் - சத்தமுதலியவிடயங்களும் — கரணம்-மனமுதலியகரணங்களும் — மெய் - உடலும் — என்னும் - என்கின்ற — யாவையுங்காண்கிலன் - எவற்றையுங் கண்டிலன் — ஒக்கும் - மேலோங்கிய — அந்தரவணைமேல் - ஞானசிங்காசனத்தின்மேல் — இவர்ந்திருந்தருளும் - ஏறிய — அண்ணலை - அல்லமனை — கண்டவப்பொழுதே - கண்டவக்கணத்திற்றானே — மூழ்கிய - எவற்றிற்குமேலாய — பரமானந்தவாரிதியுள் - பிரமானந்தசமுத்திரத்தில் — மூழ்கினனழுந்தினன் - மூழ்கியழுந்திவிட்டனன் — அம்மா - ஆச்சரியம் — (இவனுமெனில்) தந்திரமெவற்றும் - எல்லாத்தந்திரங்களிலும் — சிறந்தது - சிறப்புற்றது — சைவதந்திரமெனும் - சைவதந்திரமெனக்கூறும் — அருணந்தி - அருளையுடையவசவண்ணனென். எ - று. நந்தி காண்கிலன் மூழ்கினன் அழுந்தினன் எனக்கூட்டிப் பொருள்கொள்க. (௬௦)

மண்டல மவத்தை குணமபி மான மலமிவை யனைத்தையுங் கடந்துட், கண்டிடும் வண்ணம் புறத்துநீ யெம்மைக் காணிய வமைத்தவிச் செய்கை; வெண்டிரை சுருட்டுங் கருங்கட லுலகில் வேறுளர் செய்வதன் றென்று, தொண்டர்க டுதிக்கும் வசவனைத் துதித்தான் சுரரெலாந் துதிக்குமெம் பெருமான்.

(இ - ள்.) மண்டலம் - பூமியும் — அவத்தை - அவஸ்தைகளும் — குணம் - குணங்களும் — அபிமானம் - அபிமானங்களும் — மலம் - மும்மலங்களு மாகிய — இவையனைத்தையுங்கடந்து - இவற்றையெல்லாங்கடந்துபோய் — உட்கண்டிடும்வண்ணம் - உள்ளேதெரிக்கும்விதமாக — புறத்து - புறத்தில் — நீ யெம்மைக்காணிய - நீயெமதுண்மையுருக் காண்பான்வேண்டி — அமைத்த - செய்த — இச்செய்கை - இந்தச்செயலை — வெண்டிரை - வெண்மையானவலைகளை — சுருட்டும் - சுருட்டுகின்ற — கருங்கடலுலகில் - பெருங்கடல்சூழ்ந்தவுலகத்தில் — வேறுளர்செய்வதன்றன்று - செய்யத்தக்கவர்கள் வேறேயில்லையென்று — தொண்டர்கள் துதிக்கும் - அடியார்கள் துதிக்கத்தக்கவசவண்ணனை — சுரரெலாந்துதிக்கும் - தேவர்களெல்லோருந் துதிக்கத்தக்க — எம்பெருமான் - அல்லமதேவன் — துதித்தான் - புகழ்ந்தனன். எ - று. எம்பெருமான் வசவனைத் துதித்தா னெனப் பொருள்கொள்க. அகத்திற்காணத்தக்க வென்னைப் [illegible]

செய்த செயல்பற்றித் துதித்ததாகக்கண்டாம். காணியவென்பது செய்யியவென்னும் வாய்பாடு. (௬௧)

உன்னருளுளதேற் கமலன்மா றொழிலு மொருசிறு துரும்புசெய் திற்கு, மென்னநல் வசவன் புகன்றனைக் கூப்பி யிணைவிழி புனலுக வுருகித், தன்றுணர் விலனாய் வசமறநிற்பத் தண்கதிர்ச் செம்மணிக் குயின்ற, பொன்னரி யணைமேல் விசும்புறவிருந்தான் புல்லரு மல்லம தேவன்.

(இ - ள்.) உன்னருளுளதேல் - உனதருள்பெறுமாயின் — கமலன்மால் - பிரமாவிஷ்ணுக்களுடைய — தொழிலும் - சிருஷ்டிமுதலியதொழில்களையும் — ஒருசிறுதுரும்பு - ஓர்அற்பதுரும்பு — செய்திற்கும் - செய்யும் — என்ன - என்று — நல்வசவன்புகன்று - நல்லவசவண்ணன்சொல்லி — கைகூப்பி - கைகளைக்குவித்து — இணைவிழிபுனலுக - இரண்டுகண்களினுநீர் பெருக — உருகி - மனநெக்குருகி — தன்றுணர்விலனாய் - தன்னைமறந்து — வசமறநிற்ப - பரவசப்பட்டுநிற்க — தண்கதிர் - குளிர்ந்தகிரணங்களையுடைய — செம்மணிகுயின்ற - சிவந்தரத்னங்கள்பதித்த — பொன் - பொன்னாலாகிய — அரியணைமேல் - சிம்மாசனத்தின்மேலுள்ள — விசும்பு - ஞானபீடத்தில் — உற - பொருந்த — புல்லரும் - தழுவப்படாத — அல்லமதேவன் - அல்லமதேவனென்போன் — இருந்தான் - இருந்தனன். எ - று. வசவன் வசமறநிற்ப அல்லமதேவன் அரியணைமேல் விசும்புறவிருந்தானெனக் கூட்டிப் பொருள்கொள்க. அருளினதுமகிமையைச் சிறப்பிக்க உன்னருளுளதேல் கமலன்மாறொழிலு மொருசிறுதுரும்பு செய்திற்குமென்றார். (௬௨)

ஞானசிங்காசனத்திலிருந்தகதி - முற்றிற்று.

ஆ. கவி - ௨௨ - ஆ - திருவிருத்தங்கள் - ௲௬௪.

இருபத்துமூன்றாவது

ஆரோகணகதி.

வேறு.

ஒருவ ருண்ண வொருவர் பசிகெடார்
தரையி லென்னுந் தருமொழி பொய்த்திட
வருளி னல்லம ரும பசிகெட
விரவி யுண்ட மிகுதி விளம்புவாம்.

(இ - ள்.) ஒருவருண்ண - ஒருவர்சாப்பிட—ஒருவர் - மற்றொருவர்—பசிகெடார் - பசிநீங்கார்—தரையில் - பூமியில்—என்னுந்தருமொழி - என்றுசொல்லுந்தருந்தபழமொழி—பொய்த்திட - பொய்த்துப்போகும்படி—அருளின் - கிருபையினால்—அல்லமரும் - அல்லமதேவரும்—பசிகெட - அடியார்கள்பசிநீங்க—விரவியுண்ட - கலந்துண்ட—மிகுதி - மகிமைப்பெருக்கை—விளம்புவாம் - சொல்லுவாம். எ - று. அல்லமன் உணவுண்டதால் அடியார்கள் பசிநீங்கியதுபற்றி ஒருவருண்ணவொருவர்பசிகெடார் தரையிலென்னுந் தருமொழிபொய்த்திடவென்றார். (க)

தண்ணந் திங்களிற் றன்னொளி தண்கதிர்
வண்ணங் குன்றுற ஞாயிறு வார்சிலைப்
பண்ணங் குன்றுறு பான்மையி னாசனத்
தெண்ணந் தேவ னிருந்தருள் காலையில்.

(இ - ள்.) தண் - குளிர்ச்சிபொருந்திய—அம் - அழகிய—திங்களில் - சந்திரனிலும்—தன்னொளி - தேஜோமாக—தண்கதிர்வண்ணம் - சீதளகிரணத்தன்மை—குன்றுற - குறுங்காத—ஞாயிறு - சூரியன்—வார் - நீண்ட—சிலை - பாஷாணக்கல்லுகளால்—பண் - செய்த—அம் - அழகிய—குன்றுறுபான்மையின் - மலையில்வந்ததன்மைபோல—ஆசனத்து - சிம்மாசனத்தில்—எண் - யாவருஞ்சிந்திக்கத்தக்க—அந்தேவன் - குளிய தேவன்—இருந்தருள்காலையில் - எழுந்தருளியிருக்குங்காலத்தில்—நந்தேவன் - நமதல்லம எ - று.

சந்திரனிலுமிக்க சீதளகிரணமமைந்த சூரியனொருவனுண்டாய் ஓர்மலையின்மேலின்று விளங்குகைத்தோ அந்தவகைத்தாக வல்லமன் குளிர்பாசனத்தின்மேலெழுந்தருளியிருந்த நிலைமையேயன்க. இல்பொருளுவமையணி. இங்ஙனம்; ஐந்தாம்வேற்றுமை நீங்கற பொருள். (உ)

வேலை யுள்ளம் வயல்புகு நீரெனா
விசய னல்லமன் மேனி வடிவமாம்
பசைவி லன்பிறி தொன்று மழிந்தில
விசைய மேயிய மென்ன விருந்தனன்.

(இ - ள்.) வசவனுள்ளம் - வசவனென்பவனதுள்ளம்—வயல்புகுநீரெனா - வயலிலோடாகச்செல்லுநீரைப்போல்—விசயனல்லமன் - மாயையைக்கெலித்தவிஜயனாகியவல்லமதேவனது—மேனி - திருமேனியே—வடிவமாய் - தனக்குருவாகக்கொண்டதாக—அசைவிலன் - சலனமற்றவனாய்—பிறிதொன்றுமழிந்திலன் - வேறொன்றுமறியாதவனாயும்—இசைய - விசிந்த—ஓவியமென்ன - சித்திரப்பிரதிமைபோல—இருந்தனன் - அசைவற்றவனாயிருந்தான். எ - று. வேலைபுகாது வயல்புகுநீரென்றதனால், அயல்புகாது அல்லமன்மேனியையிலக்காக்குவித்தனனென்பெறும்.

கழும ணித்தவி சென்றுங் கலத்திடை
யழிவ றந்திக மல்லம னுகிய
செழிய நற்சுவை சென்ன வசவனும்
விழிய வர்க்கு விருந்திட் டனனரோ.

(இ - ள்.) கழு - கழுவிய—மணித்தவிசென்னும் - ரத்தினங்களைப்பதித்த சிம்மாசனமென்னும்—கலத்திடை - பாத்திரத்தில்—அழிவறந்திகழ் - அழிவின்றிவிளங்கும்—அல்லமனாகிய - அல்லமதேவனென்னும்—செழிய - வளமுள்ள—நல் - நல்ல—சுவை - தேவாமிர்தத்தை—சென்ன வசவனும் - சென்னவசவதேவனும்—விழியினுக்கு - கண்களுக்கு—விருந்திட்டனன் - விருந்துசெய்தனன். எ - று. அரோ - அசை. குளிய சிம்மாசனமென்னும்பாத்திரத்திலுள்ள அல்லமனெனுமமிர்தத்தைச் சென்னவசவன் தனதுகண்களுக்குவிருந்திட்டானென்க. எனவே, இமையா தப்பாதுபார்த்தனனென்பதாயிற்று. தவிசென்னுங்கலம் அல்லமனெனுஞ்சுவை. இவையுருவகம். (௩)

முனிவி னைக்கொலு மொளிகை மாரனும்
வினையி னைத்தெறு மெய்ம்மடி வாலனுந்
தனைநி கர்க்குந் தவிசமர் பூவினை
மனமெ னப்படும் வண்டுற விட்டனர்.

(இ - ள்.) முனிவினை - கோபத்தை—கொலும் - எழாமற்காக்கும்—ஒளி - பிழையின்றிய—கைமாரனும் - கைமாரனென்பவனும்—வினையினைத்தெறும் - இருவினைகளையும்நாசஞ்செய்யும்—மெய் - மெய்யறிவினையுடைய—மடிவாலனும் - மடிவாலமாச்சனும் —தனைநிகர்க்கும் - தனக்குத்தானேயொப்பாகிய —தவிசமர் - சூனியசிம்மாசனத்திலெழுந்தருளிய—பூவினை - அல்லமனாகியபூவை—மனமெனப்படும்-மனமென்கின்ற—வண்டு - வண்டுகள்—உற - மொய்க்க—விட்டனர் - விடுத்தனர். எ - று. தவிசமைபூவென்றதனால் அல்லமனைவருவித்தாம். அல்லமனாகியபூ - மனமெனப்படும்வண்டு-இவையுருவகம். (௫)

முன்னி ருந்த முதுக்குறை வாளரும்
பின்ன டைந்த பெரியரு மாகிய
மன்னி ருந்த மணித்தவி சின்புடைத்
துன்னி யெங்கணுஞ் சூழ்ந்தனர் தொண்டரே.

(இ - ள்.) முன்னிருந்த - பூர்வத்திலிருந்த —முதுக்குறைவாளரும் - பேரறிவுடையோரும்—பின்னடைந்த - பின்புவந்த—பெரியருமாகி - பெரியோர்களுமாகி —மன்னிருந்த - அல்லமனெழுந்தருளியிருந்த —மணித்தவிசின்புடை - அழகியவாசனத்தின்பக்கத்தில் —துன்னி - நெருங்கி—எங்கணும் - எவ்விடத்தும்—சூழ்ந்தனர்தொண்டர் - அடியார்கள்சூழ்ந்திருந்தனர். எ - று. ஏ - அசை. (௬)

புண்ட ரந்திரு நெற்றியிற் பூசிமெய்க்
கண்டி யென்னுங் கலனணி வார்சிலர்
பண்டை நான்மறை யின்பய னாகவே
கொண்ட வஞ்செழுத் துங்குறிப் பார்சிலர்.

(இ - ள்.) புண்டரம் - திரிபுண்டரத்தை—திருநெற்றியிற்பூசி - அழகியநெற்றியிற்பூசி—மெய் - தேகத்தில் —கண்டியென்னும் - கண்டியென்கின்ற—கலன் - ஆபரணத்தை —அணிவார்சிலர் - சிலரணிந்துகொள்

வார்கள்—பண்டை - பழமையாகிய—நான்மறையின்பயனாகவே - நான்குவேதங்களையு மோதுவதாலெய்தும்பயனாகவே—கொண்ட - கொள்ளப்பெற்ற—அஞ்செழுத்தும் - பஞ்சாட்சரத்தையும்—சிலர் - சிலபேர்—குறிப்பார் - தியானஞ்செய்யக் குறித்துக்கொள்வார்கள். எ - று. (௭)

நந்த னந்தரு நாண்மலர் மஞ்சனஞ்
சந்த னஞ்சுடர் தண்புகை யாதிகொண்
டிந்தி யங்களெ லாமடங் குள்ளமோ
டந்தி வண்ணனை யர்ச்சிப்ப ரோர்சிலர்.

(இ - ள்.) நந்தனம் - நந்தவனம்—தரு - கொடுக்கின்ற—மலர் - புஷ்பங்களும்—மஞ்சனம் - அபிஷேகநீரும்—சந்தனம் - சந்தனமும்—சுடர் - தீபமும்—தண்புகை - மணமுள்ளபுகையுமாகிய—ஆதிகொண்டு - முதலியவற்றைக்கொண்டு—இந்தியங்களெலாம் - இந்தியங்களனைத்தும்—அடங்குள்ளமோடு - அடங்கியமனதோடு—அந்திவண்ணனை - செந்நிறமுள்ள அல்லமனை—ஓர்சிலர் - சிலவடியார்—அர்ச்சிப்பர் - பூசிப்பர். எ - று. ( )

தாவில் பூசனை தாம்புரி கிற்பதிற்
பாவெ லாஞ்சொலப் பட்டிடு மைம்புலக்
காவல் செய்யுங் கருத்துடை யார்தமக்
கேவல் செய்தனன் றென்றுசெய் வார்சிலர்.

(இ - ள்.) தாவில்பூசனை-கெடாதபூசையை—தாம்புரிகிற்பதில் - தாங்கள்செய்வதிலும்—பாவெலாஞ்சொலப்பட்டிடும் - சான்றோர்நூல்களாற்கூறப்படும்—ஐம்புலம் - ஐம்புலன்களையும்—காவல்செய்யுங் கருத்துடையார்தமக்கு - தத்தமிட்டப்படிசெல்லாமற் காக்குமெண்ணமுடையோர்க்கு—ஏவல்செய்தனன்றென்று - தொண்டுபுரிதலே யுத்தமமென்று—செய்வார்சிலர் - சிலர்செய்வார்கள். எ - று. இடையினீங்காமையைத் தாவிலென்றார். பாவாலாயது நூலாதலால் பாவெலாமென்றது காரணவாகுபெயர். (௯)

பூசனைத் தொழில் பூண்பதி னெண்மடங்
கீசனைத் துதித் தேத்துத னன்றென
வூச லோதத வுளமில ராய்ப்புலத்
தாசி றிப்பத் துதிப்பவ ரோர்சிலர்.

(இ - ள்.) பூசனைத்தொழில் - பூசிக்குந்தொழிலை—புன்பதின் - கொள்வதிலும்—எள்ளளவுங்கூட - எட்டிப்பங்கு—ஈசனைத்துதித்தேத்துதல் - ஈசனைத்துதித்துப்புகழ்தல்—நன்றெனை - நல்லதென்று—பாசவொத்த - ஊஞ்சலையொத்தலைகின்ற—உளமிலராய் - மனமில்லாதவர்களாய்—புலம் - ஐம்புலன்களென்னும்—நாசி - புறநி—நிற்ப - அடங்கிநிற்க—ஓர்சிலர் அதிப்பவர் - அதிப்போர்கள்சிலராயவர், எ - று. புன்பதின் ஐந்தாம்வேற்றுமை நீங்கற்பொருள். புலந்தாசி ; உருவகம். (௧௦)

அங்க லிங்க மயிக்க மிதுவெனா
மங்க லந்தரு மாமறை யின்முடித்
தங்கு மந்தத் துவமசி தன்பொருள்
பங்க மின்றிப் பகர்பவ ரோர்சிலர்.

(இ - ள்.) அங்கம் - உடலும்—லிங்கம் - ஆத்மாவுமாகியவிவற்றின்—ஐயிக்கமிதுவெனா - ஐக்கியமாவதிதுவென்று—மங்கலந்தரு - சுபத்தைத்தருகின்ற—மாமறையின்முடி - மகத்தானவேதங்களின்முடிவில் —தங்கும் - தங்கிய—தத்துவமசிதன்பொருள் - தத்துவமசிப்பொருளை—பங்கமின்றி - அவிதபாவமின்றி—பகர்பவர் - உச்சரிப்பவர்—ஓர்சிலர் - சிலபேர். எ - று. அறிவையன்றி யானென்பதும் அறியாமையன்றியுடலும் இன்மையாலும்; அறிவையன்றி அறியாமையோர்முதலன்றாமையாலும் ஐக்கிய மெய்த்தற்கு யாதுமுறைகள். இன்மையின் அங்கலிங்கமயிக்கமிதுவென்றும் இவ்வைக்கியத்தை யுணர்த்தும்பாலது சாமவேத மகாவாக்கியமாதலின் "மங்கலந்தருமாமறையின் முடிதங்குந் தத்துவமசிதன்பொருளென்றுங் கூறினார்". பதம்; தத், துவம், அசி. பதார்த்தம்; அது - நீ - ஆனாய். வாச்சியார்த்தம்; சிவன், ஈசுவரன், பிரமம். லட்சியார்த்தம்; பிரமம், கூடஸ்தன். தான் எனக்கொண்டு உபாதிரகிதபிரமம் எனவறிபதத்தா லயிக்கியங் கொள்க. பாரதலின் தேற்றோகாரங் கொடுத்துப் பிரமமே கூடஸ்தன் கூடஸ்தனே (௧௧)

பாச மேது பசுவெனப் பட்டதே
தீசன் யார்பதி யெவ்வகை யாருயிர்க்
காச நீர வருளு மருளுடைத்
தேசி காவெனத் தேர்பவ ரோர்சிலர்.

(இ - ள்.) பாசமேது - பாசமென்பதியாது—பசுவெனப்பட்டதேது - பசுவென்பதியாது—ஈசன்யார் - ஈசனென்பவன்யாவன்—பதியெவ்வ

கையார் - மாயாரகிதவீசனெவ்வகைப்பட்டவன்—உயிர்க்கு - உயிர்களுக்கு—ஆசுநீர - மலங்கணீங்க—அருளும்-அநுக்கிரகிக்கின்ற—அருளுடை - கிருபையையுடைய—தேசிகாவெனா - குருமூர்த்தியேயென்று—தேர்பவர் - விசாரித்துத்தெளிபவர்—ஓர்சிலர் - சிலபேர். எ - று. ஈசன்யார் பதியெவ்வகையார் என்றிரண்டெந்தது; மாயாசகிதவீசனையும் மாயாரகித வீசனையுங் குறிக்கற்கென்க. (௧௨)

புறந்தி னஞ்செயும் பூசையி னன்றெனச்
சிறந்த கஞ்செய் தியான மருவிமெய்
மறந்தி ருந்த மனஞ்சிவ லிங்கமுற்
றிறந்தி ருந்திற மெய்தின ரோர்சிலர்.

(இ - ள்.) புறம் - புறத்தில்—தினஞ்செயும்பூசையின் - தினமுஞ்செய்யும்பூசையினும்—நன்றெனா - நல்லதென்று—சிறந்து - சிறப்புற்று—அகஞ்செய்தியானம் - மானதபூசையை—மருவி - அடைந்து—மெய்மறந்திருந்த - உடல்மறந்திருந்த—மனம்-மனமானது—சிவலிங்கமுற்று - சிவலிங்கத்தையடைந்து —இறந்திருந்திறம் - அதீதயாகவிருந்திறத்தை—எய்தினரோர்சிலர் - சிலபேரடைந்தனர். எ - று. இங்கே சிவலிங்கமென்றது ஆத்மப்பிரகாசத்தை. (௧௩)

ஓடிமீளு முயிர்கின் றிடா தெனி
னீடு மாமன நிற்ப தன் றுதலால்
வீடு மேவரி தென்று விதிமுறை
நாடி வாயு நவிபவ ரோர்சிலர்.

(இ - ள்.) ஓடிமீளும் - ஓடித்திரும்புகின்ற—உயிர் - பிராணன்—நின்றிடாதெனில் - அசைவறநில்லாதாயின்—நீடுமாமனம் - சங்கற்பத்தால மிக்குவளர்ந்தமகத்தாகிய மனமானது—நிற்பதன்றுதலால் - அசைவறநிற்கமாட்டாதாதலால் —வீடுமேவரிதென்று - முத்திசாம்ராச்சியங்கிடைத்தலரிதென்று—விதிமுறைநாடி - விதிவொழுங்கைநாடி —வாயுநவிபவர் - வருந்திப்பிராணபந்தனஞ்செய்பவர்கள் —ஓர்சிலர் - சிலபேர். எ - று. இக்கவியில் யோகிகளைக்கூறலின் இங்கேயுயிரென்றது பிராணவாயுவையென்க. இங்கே விதிமுறையாவது யோகவிதிநெறியை. இவர்கள் ஞானநெறிச் சேர்தலரிதாதலி னிங்ஙனங் கூறினாரென்க. (௧௪)

இனைய ராகி யிருந்தவக் காலையி
லனைய ருஙிய வல்லமன் றன்னிடை

நினைவெ லாமுற நின்று தமதிடை
மனமி லாத வசவனைக் கண்டனர்.

(இ-ள்.) இனையராகி - இத்தன்மையராகி—இருந்தவக்காலையில் - இருந்தவத்தருணத்தில் —அனையருகிய - அத்தன்மையுடையோருகிய — அல்லமன்றன்னிடை - அல்லமதேவனிடத்தில் —நினைவெலாமுறநின்று - நினைவனைத்துமொருங்குபெறநின்று —தமதிடைமனமிலாத - அடியார்களிடத்தில் வைத்தஸ்மரணைசற்றுமில்லாத—வசவனைக்கண்டனர் - வசவதேவனைப்பார்த்தார்கள். எ-று. ஞானமெய்து மதிநீவரகுமியாதலால் "நினைவெலாமுற நின்று தமதிடை மனமிலாதவசவனென்ருர்" -அடியார்கள் தோன்ருவெழுவாய். (௧௫)

வேறு.

பெரியவர் சிறியவ ரென்னும் பெற்றிமை
யரவணி கடவுட னடியர் தம்முளே
தெரிபவ னெவனவன் சிறிய னேயென
விரிவுறு மறையெலாம் விளம்பு மென்பவே.

(இ-ள்.) பெரியவர்சிறியவரென்னும் —பெரியோர்சிறியோரென்கின்ற—பெற்றிமை - தன்மை—அரவணிகடவுள் - பாம்பையணியாகவணிந்தபரமசிவனது —அடியர்தம்முளே - அடியார்களுக்குள்ளே—தெரிபவனெவன் - எவன்பேதங்காண்பானே—அவன் - அப்புருடன்—சிறியனேயென - இழிஞனேயென்று —விரிவுறுமறையெலாம் - பலசாகைகளாக விரிந்துள்ளவேதங்களனைத்தும்—விளம்பும் - சொல்லும்—என்ப - என்றறிஞர் கூறுவர். எ-று. ஏ - அசை. சிவதொண்டிற் கல்வியுடைமையும் கல்வியின்மையுங் கருதற்க வென்க. (௧௬)

ஆவுரித் திடினுநீ றணியு மன்பனம்
மாவுரித் தவனென வணங்கத் தக்கவன்
பூவுரித் தவன்பதம் புனையப் போற்றுற
நாவுரித் தெனமறை நான்கு மோதுமால்.

(இ-ள்.) நீறணியுமன்பன் - அன்புகொண்டுநீறணிவோன்—ஆவுரித்திடினும் - ஆவதைசெய்யினும்—நம் - நம்முடைய—மாவுரித்தவனென - யானையுரித்தோனுகிய சிவனென்று—வணங்கத்தக்கவன் - யாவராலும் வணங்கற்குப்பாத்திரன்—அவன்பதம்புனைய - அவனது திருவடியையருச்சிக்க—பூவுரித்தென - புஷ்பந்தகுதியதென்றும—போற்றுற - அவனைத்துதிக்க—நாவுரித்தென - நாக்குரியதென்றும்—மறைநான்கும் - நான்குவேதங்களும்—ஓதும் - சொல்லும். எ-று. ஆல் - அசை. ஆவதையினு மிக்கதீமையின்மையின் ஆவுரித்திடினுமெனவும், அவன்பால் சிவதொண்டு மேலிட்டவிடத்தில் அத்தீச்செய்கை யெவரதுள்ளத்திலு மெய்தற்கிடமின்மையின் வணக்கத்தக்கவன் பூவுரித்து நாவுரித்து எனப்பட்டது. மறைநான்கு மோதுமென்றதனுல் ஈஸ்வரவாக்கியமாதலால் அவனுமதிபெற்றவனெனக் குறிப்பித்ததாகப் பெறும். எனவெனலை யீரிடத்து மொட்டுக. (௧௭)

வந்தவர் வருபவர் வருகின் ருர்களா
மந்தமி லடியர்மாட் டாற்றுஞ் செய்கையைச்
சிந்தனை செய்கிலன் றேசி கன்செயு
மிந்திர சாலமுற் றிருந்து நந்தியே.

(இ-ள்.) வந்தவர் - வந்தவர்களும்—வருபவர் - இனிவரப்போகிறவர்களும்—வருகின்ருர்களாம் - வருகின்றவர்களுமாகிய—அந்தமிலடியர்மாட்டு - எண்ணிறந்தவடியார்களிடத்தில்—ஆற்றுஞ்செய்கையை - செய்யுந்தொண்டினை—சிந்தனைசெய்கிலன் - நினையாதவனுய்—தேசிகன்செயும் - அல்லமன்செய்கின்ற—இந்திரசாலமுற்று - இந்திரசாலத்தில் மனமுறைந்து—இருந்து நந்தி - வசவண்ணனிருந்து. எ-று. ஏ - அசை. அல்லமன்செய்யும் இந்திரசாலவித்தையில் வித்துவானைக்கண்டு வக்கமுற்றிருக்கையில் அடியார்கள் தொண்டை மறந்தனனென்க. (௧௮)

பத்தியிற் றவறிலேன் பாலி ருந்துநாந்
துய்த்துடற் சுமப்பதிற் றுறத்த னன்றெனா
மெய்த்தவக் குழாமெலாம் வெகுண்டு போயின
வத்தனற் றண்டநா யகனை விட்டரோ.

(இ-ள்.) பத்தியிற்றவறிலேன்பால் - அடியார்தொண்டிழந்தவனிடத்தில்—இருந்துநாம் - நாமிருந்து—துய்த்து - புசித்து—உடல்சுமப்பதில் - தேகஞ்சுமப்பதிலும்—துறத்தனன்றெனா - விடுதனன்றென்று—மெய்த்தவக்குழாமெலாம் - உண்மையானவடியார்கூட்டமனைத்தும்—அத்தன் - கர்த்தனுகிய—நல் - நல்ல—தண்டநாயகனைவிட்டு - வசவண்ணனை

விட்டு—வெகுண்டுபோயின - கோபித்துக்கொண்டுபோயின. எ - று. அடியார்களை மறந்தால் அவர்கள்கோபித்து அவ்விடம்விட்டுப் போயின ரென்க. (௧௯)

ஆன்றிய மெய்த்தவர் அறந்து போயபின்
மன்றல்செய் மற்றைநாண் மனையை யொத்தொரு
தன்றனி நற்புறந் தனிப்பக் கண்டன
னன்றுறி நற்செய னந்தி தேவனே.

(இ - ள்.) ஆன்றியமெய்த்தவர் - மிக்கமெய்த்தவக்குழாங்கள்—அறந்துபோயபின் - விட்டுநீங்கியபின்னர்—மன்றல்செய் - கல்யாணஞ்செய்த—மற்றைநாள் - மறுநாள்—மனையை - அந்தக்கல்யாணஞ்செய்த வீட்டிற்கு—ஒத்து - ஒப்பாகி—நன் - தன்னுடைய—நல் - நல்ல—தனி - தனியாக—ஒருபுறம் - ஒருதேகம்—தனிப்ப - ஒன்றியாயிருக்க—நன்றுறி - உண்மைநெறியறிந்த—நற்செயல் - சன்மார்க்கத்தையுடைய —நந்திதேவன் - வசவண்ணன்—கண்டனன் - பார்த்தனன். எ - று. கல்யாணங்கழிந்த மறுநாள் அவ்வீடு ஒருவருமின்றித் தனியேயிருக்குமாறுபோன்று மடத்திலொருவருமின்றித் தான்மாத்திரமிருக்க வசவண்ணன் கண்டனனென்க. (௨௰)

வழுவினை னன்புசெய் வழியை யின்றுநான்
குழுவுறு மடியவர்க் குறித்துச் செய்தவிவ்
வொழிவறு மடிசிலுண் டொழிந்தி டாதுநீர்ந்
தழிவுறு மேயென வகந்த ளர்ந்தனன்.

(இ - ள்.) குழுவுறும் - திரளாயுள்ள—அடியவர்குறித்துச்செய்த - அடியார்களைக் குறித்துச்செய்துவந்த—அன்புசெய்வழியை - அன்புவிஷேசத்தையர்த நெறியை—இன்றுநான்வழுவினன்- இன்றைக்குநான்வழுவி விட்டனன்—இவ்வொழிவறுமடிசில் - யாதானுங்குன்றுதலைவையுடைய இவ்வுணவை—உண்டொழிந்திடாது - உண்டுசெலவழியாமல்—நீர்ந்து - நீங்கி—அழிவுறுமேயென - கெட்டுப்போகுமேயென்று —அகந்தளர்ந்தனன் - மனநொந்தனன். எ - று. அடியார்கள் சென்றுவிட்டதால் அவர்கள் தொண்டில் வழுவினேனென்றும், உண்பாரில்லாமல் இவ்வடிசில்மிகை அழிந்துவிடுமே யென்றும் விசனமுற்றனனென்க. (௨௧)

சங்கம பத்திசெய் தண்ட நாதனே
சங்கம பத்திசெய் தகைமை பூண்டுநான்

சங்கம பத்தியிற் றவறினே னென்றுற்
சங்கம பத்திசெய் தன்மை யென்னையோ.

(இ - ள்) சங்கமபத்திசெய் - சங்கமபத்திசெய்கின்ற—தண்டநாதனே - வசவண்ணனே—சங்கமபத்திசெய் - சங்கமபத்திசெய்கின்ற—தகைமைபூண்டு - விரதமேற்கொண்டு—நான் - அடியேன்—சங்கமபத்தியில் - சங்கமபத்தியினிடத்தில்—தவறினேனென்றால் - வழுவினேனென்னையாயின் —சங்கமபத்திசெய் - சங்கமபத்திசெய்கின்ற—தன்மை - ஒழுக்கம்—என்மையோ - எளிமையதோ. எ - று. சங்கமபத்தி; அடியார்களுக்கன்புசெய்தல் எளிதன்று. என்மையோவென்பது வேகாரம் அருமையென மறுத்தலா லெதிர்மறை. (௨௨)

இழிப்பினும் வெறுப்பினு மில்லி னுள்ளன
வழிப்பினு முடம்பினை யரிந்து கொல்லினும்
பழிப்பறு சங்கம பத்தி செய்பவன்
ஒழிப்பது பிறவியென் றுலக மோதுமே.

(இ - ள்.) இழிப்பினும் - மானக்கேடெய்தியவிடத்தும்—வெறுப்பினும் - எவற்றினும்வெறுப்பெய்தியவிடத்தும்—இல்லினுள்ளன - மனையிலுள்ளவைகளை—அழிப்பினும் - நாசமெய்தியவிடத்தும் —உடம்பினை - தனதுதேகத்தை—அரிந்து - துண்டுதுண்டாகவரிந்து —கொல்லினும் - பிறர் கொலைசெய்தவிடத்தும்—பழிப்பறு-குற்றமற்று—சங்கமபத்திசெய்பவன் - இவற்றாற்கலங்காது சங்கமபத்திசெய்தோன்—ஒழிப்பது - ஒழித்தது—பிறவியென்று - சனனமென்று—உலகம் - பெரியோர்கள்—ஓதும் - சொல்லுவார்கள். எ - று. ஏ - அசை. இங்கே வுலகமென்றது உயர்ந்தோர்மாட்டு. இன்னமாதலின் ஒழிப்பது பிறவியென்றார். (௨௩)

இம்முறை சங்கம பத்தி யெய்திய
வெம்முடை நந்திநு னென்னை முற்றுற
வம்மடை யடிசிலுண் டமைவ மாதவர்
தம்முறு பசியெலாந் தனிப்ப வென்னினான்.

(இ - ள்.) இம்முறை - இவ்வாறு—சங்கமபத்தி - சங்கமபத்திநெறியை—எய்திய - அடியாருமேற்கொண்ட —எம்முடைநந்திதன் - எம்மையாளாகவுடைய வசவண்ணனது—என்னைமுற்றுற - என்னைநிறைவேற—அ - அந்த—மடை - சோறுமுதலிய—அடிசிலுண்டு - உணவையுண்டு

முண்டு—அலமன் - அல்லமதேவன்—மாதவர்தம் - அடியார்களுடைய—உறுபசியெலாம் - மிக்கபசியெல்லாந்தும்—தணிப்ப - தணித்துபோமாறு—உன்னினன் - நினைத்தனன். எ - று. அலமன்; இடைக்குறை. (௨௪)

ஒருவன்யான் சிறுபசி யுடையன் சிற்றுணா
விரைவுற விடுதிநீ வேண்டு மாறுபின்
பரிவுள வடியவர் பாற்செ யென்றனன்
பொருவறு வசவனை நோக்கிப் போதகன்.

(இ - ள்.) ஒருவன்யான் - யானொருவன்—சிறுபசியுடையன் - கொஞ்சம்பசியுடையவன்—சிற்றுணா - அற்பவுணவாக—விரைவுறவிடுதி-முன்னேவிரைவிற்கொடு—நீவேண்டுமாறு - உன்னிஷ்டப்படி —பின் - பின்னே—பரிவுள - அன்புள்ள —அடியவர்பாற்செய் - அடியார்களுக்குவுணவிடுதி—பொருவறு - ஒப்பற்ற—வசவனைநோக்கி - வசவண்ணனைப்பார்த்து—போதகன் - அல்லமன்—என்றனன் - என்றுசொல்லினன் எ - று. எனது சிறுபசியைத் தணித்துப் பின்னை யடியார்கள் பசியைத் தணித்திடு தி யென்றல்லமன் கூறினனென்க. (௨௫)

ஐயனு முனிவுறா தருளும் வண்ணமியான்
செய்யுநல் வினையென மகிழ்ந்து தேவனைப்
பையவுண் மனையிடைப் பணிந்து கொண்டுபோய்ப்
பெய்யுமென் மலர்மணிப் பீடத் தேற்றினான்.

(இ - ள்.) ஐயனும் - வசவண்ணனும்—முனிவுறாது - கோபியாமல்—அருளும்வண்ணம் - கொடுக்கும்வண்ணந்தணிவது —யான்செய்யு நல்வினையென - நான்செய்யுநன்மார்க்கமென்று—மகிழ்ந்து - சந்தோஷித்து—தேவனை - அல்லமனை—பணிந்து - வணங்கி—பைய - மெதுவாக—உண்மனையிடைக்கொண்டுபோய் - மனைக்குள்ளழைத்துக்கொண்டுபோய்—பெய்யும் - பரப்பிய—மென் - மிருதுவாகிய—மலர் - மலர்களையுடைய—மணி - அழகிய—பீடத்து - ஆசனத்தில்—ஏற்றினான் - ஏறச்செய்தனன். எ - று. ஐயனும் மகிழ்ந்து பணிந்து கொண்டுபோய் ஏற்றினானெனமுடிக்க. (௨௬)

ஏற்றிய வருள்வச வேச னெம்பிரான்
காற்றுணை மலர்களைக் கந்த மஞ்சன

நாற்றமென் மலர்நறும் புகைவி ளக்கெனப்
போற்றிய விவைகொடு பூசை செய்தனன்.

(இ - ள்.) ஏற்றிய - ஏறச்செய்த—அருள் - கிருபைபொருந்திய —வசவேசன் - வசவண்ணன்—எம்பிரான் - அல்லமனது —கால் - திருவடிகளாகிய—துணைமலர்களை - உபயதாமரைமலர்களை —கந்தம் - சுகந்தமும்—மஞ்சனம் - அபிஷேகநீரும்—மென் - மிருதுவாகிய—நாற்றமலர் - வாசனையுள்ளபுஷ்பங்களும்—நறும்புகை - வாசனைப்புகைகளும்—விளக்கு - தீபமும் - எனப்போற்றிய - என்றாகமங்களாற்சொல்லப்பட்ட—இவை கொடு - இங்ஙனமாயவபிஷேகாதிகளைக்கொண்டு—பூசைசெய்தனன் - பூசித்தான். எ - று. காற்றுணைமலர் ; உருவகம். (௨௭)

பூசனை செய்தபின் போற்றி நின்றுபொற்
பாசன மமைத்துமென் பதம்ப டைத்துமேல்
போசனை கைகமழ் கறியு மொள்ளிய
போசன முறையிடப் புரிந்து நந்தியே.

(இ - ள்.) பூசனைசெய்தபின் - பூசைசெய்தபின்னர் —போற்றிநின்று - துதித்துநின்று —பொற்பாசனமமைத்து - அழகியபோசனம்படைத்தற்கியைந்தவாழையிலையைப்போட்டு —மென்பதம்படைத்து - மெல்லியசாதம்படைத்து—மேல் - அதன்மேல் —போசனை - போசனைதாரம்—கைகமழ் - கைமணம்வீசத்தக்க—கறியும் - கறிகளையும்—ஒள்ளிய - அழகிய—போசனம் - போஜனவகைகளை —முறையிடப்புரிந்து - முறையேபடைக்கச்செய்து—நந்தி - வசவண்ணன். எ - று. ஏ - அசை. நந்தி போற்றிநின்று அமைத்து படைத்து முறையிடப்புரிந்தெனக் கூட்டிப் பொருள்கொள்க. (௨௮)

அருந்துக வெனவடி தொழுது மக்கலங்
திருந்திய வமுதுகோளா ரமிழுஞ் சேடியா
தருந்தின னொரிமைப் போது வல்லமன்
பொருந்திய வயிறுமம் பூ ராகவே.

(இ - ள்.) அருந்துகவென - புசித்தருளவேண்டுமென்று—அடிதொழுதும் - திருவடிகளைவணங்கவும் —அக்கலம் - அந்தவுண்கலத்தில்—திருந்திய - நிறையப்படைத்துள்ள—அமுதுள் - சாப்பாட்டில்—ஓரமிழுஞ்சேடியாது - ஓர்சாதமுமீதியாகாமல்—அல்லமன் - அல்லமதேவன்—பொ

குந்தியவர் - அங்கிருந்தவர்கள் — இறும்பூதாக - அதிசயிப்பாக — ஒழிமைப்போதின் - ஒழிமையாலில் — அருந்தினன் - உண்டனன். ப - று.

பின்னரு மம்முறை பெய்ய வையனவ்
வன்னமு மம்முறை யருந்திப் பின்னரும்
பின்னரு மம்முறை பெய்ய வுண்டனன்
றன்னுளம் வியந்தனன் றண்ட நாயகன்.

(இ - ள்.) பின்னரும் - பின்னும் — அம்முறை - அந்தமுறைப்படி — பெய்ய - படைக்க — ஐயன் - அல்லமன் — அவ்வன்னமும் - அந்தச் சாப்பாட்டையும் — அம்முறையருந்தி - முன்னுண்டவாறுண்டு — பின்னரும் பின்னரும் - பின்னும்பின்னும் — அம்முறைபெய்ய - அவ்வாறு படைக்க — உண்டனன் - சாப்பிட்டனன் — தண்ட நாயகன் - பசவண்ணன் — (இதைக்கண்டு) தன்னுளம் - தனதுள்ளத்தில் — வியந்தனன் - அதிசயித்தனன். எ - று. (௬௦)

சிறக்கிறி தனையிந்த செய்கை யாவரு
மிறைக்கெழி முதரவெந் நெருப்பெ ழுந்ததால்
விறற்கன லம்முறை விறவி டக்கனன்
றறப்பெரி தெனவெழுந் தோங்கல் போலவே.

(இ - ள்.) சிறக்கிறிது - சிறிதுசிறிதாக — அனையிந்த செய்கையவன் - யோசனையிந்த செய்கையிதால் — அருளிறைக்கு - பெருமைபொருந்தியவல்லமனுக்கு — எழில் - அழகிய — உதரவெந்நெருப்பு - கொடியவுதராக்கினி — விறற்கனல் - விறவிறனிலைக்கினி — அம்முறை - முன்னிட்டமுறைப்படி — விறவிட - அதில்விறகுவைக்க — கனன்று - கிறி — உற - பொருந்த — பெரிதென - பெரிதாக — எழுந்தோங்கல்போல எழுந்தெரிந்தாற்போல — எழுந்தது - அதிகரித்தது. எ - று. ஆல் - ஏ - அசைகள். விறகைக் கனலில் மேலுமேலும்விறகிட அவ்வக்கினிமேலிமேலதுபோன்று அல்லமனுக்கும் உதராக்கினிமேலிட்டதென்க. அனமென்னிடைக்குறை. (௬௧)

என்னிய வெண்ணரியாங் கியற்று மேவல
ரன்னை னும் வருகென வழைத்து நம்மனோர்
பண்ணிய பதமெலாம் படையி னென்றுநந்
தன்னென வனமிடத் தொழிறொ டங்கினார்.

(இ - ள்.) எண்ணியவெண்ணியாங்கு - பசவண்ணனெண்ணியவெண்ணப்படி — இயற்றுமேவலர் - செய்யுமேவலாளிகளை — அன்னனும் - பசவண்ணனும் — வருகெனவழைத்து - வாருங்களென்றுகூப்பிட்டு — நம்மனோர் - நம்மவர் — பண்ணிய - நமதாமடத்திற்சமைத்த — பதமெலாம் - படையின் - சாப்பாடெல்லாமியீருக்குப்படையுங்கள் — என்றலும் - என்றுபசவண்ணன் சொல்லவும் — தன்னென - நிகிக்கென்று — அனமிடத்தொழில்தொடங்கினார் - சாப்பாடுவெட்டிக்கத்தொடங்கினார்கள். எ - று. தன்னெனல்; விரைவுக்குறிப்பு. (௬௨)

வேறு.

அளவறு மடியார்க் கெல்லா மாக்கிய வடிசிற் குன்றம்
கொளவுறு கூடை யோடு கூடைகூ டாக்கக் கொண்டு
வளமுறு கயிலைக் குன்றம் பெயர்த்திவன் வைத்த தென்னத்
தளவுற முடிமி லெங்க டம்பிரா னெதிர்கு வித்தார்.

(இ - ள்.) அளவறுமடியார்க்கெல்லாம் - அளவிறந்தவடியார்களுக்கெல்லாம் — ஆக்கிய - சமைத்த — அடிசிற்குன்றம் - குன்றுபோன்றசாதராசிகளை — கொளவுறுகூடையோடு - வாரிக்கொள்ளத்தகுந்தகூடைகளோடு — கூடைகூடாக்கக்கொண்டு - கூடைகளிடமொழுவாரிக்கொண்டு — வளமுறு - வளப்பமுள்ள — கைலைக்குன்றம் - வெள்ளியங்கிரியை — பெயர்த்து - அடியோடுபெயர்த்து — இவண்வைத்ததென்ன - இவ்விடத்திற்கொண்டுவைத்தாற்போல — தளவுறமுடிமில்-மல்லிகையரும்புபோன்ற நகைத்தங்களை — எங்கடம்பிரானெதிர் - எமதுகர்த்தருடையவல்லமனெதிர் — குவித்தார் - குவையல்செய்தார்கள். எ - று. அடிசிற்குன்றம்; உருவகம். அக்கயிலைமலைவடிவுபோற்காட்டச் சாதக்குவையலைக்குறித்தலால் இது தற்குறிப்பணி. (௬௩)

பருப்பொரு பொருப்பெ னத்தாம் படைத்தனர் சிலரொ டுத்து
விரைப்புது நெய்க விழ்த்து விடுத்தனர் சிலர்ம ணக்கும்
பொரிக்கறி பனிதம் பாகு புளிங்கறி பலவு மெல்லா
நிரைத்தொரு சிலர்செ றிந்து நின்றனர் முகில்கள் போல.

(இ - ள்.) பருப்பு - சமைத்தபருப்புகளை — ஒருபொருப்பென - ஒருமலையைப்போல — தாம்படைத்தனர் - தாங்கள்வட்டித்தார்கள் — சிலரெடுத்து - சிலர்கையாலெடுத்து — விரை - வாசனைபொருந்திய — புது - புதிய — நெய் - நெய்களை — சிலர் - சிலபேர் — கவிழ்த்து விடுத்தனர் - கவிழ்த்

அவிட்டார்கள்—சிலர் - சிலபேர்—மனக்குப்பெருகித்தி - மனக் பெருகிக்கறிகளையும்—பலிதம் - பச்சடிகளையும்—பாகு - சொழுக் கும்—புளிக்கறி - புளிவிட்டபதார்த்தங்களையும்—பாலும் - இவை யெல்லாவற்றையும்—எல்லாம் - சமைத்தவற்றையும்—நிறைத்து - வரிசையா முகிலர் - சிலபேர்—முகில்கள்போல - மேகங்களைப்போல—சொ ரின்றனர் - சொரிந்தனர்கள். எ - று. சிலசெறித்தப்படைத்து விக்கவிழ்த்து விரித்தனர் ஒருவர் சொரிந்து நின்றனரென முதலா னதெனப்படு ஆசையினையெனிலும்யாவும். பலிதமெனத்தப்பொருள் கற் றுமெனல் பொருத்தமையின் பச்சடியென்றும். ஒன்றன்பி றொன்றா னமை விளக்கியதெனக் கொள்க. (௪௯)

வடைபடு நிதிபு யாக மாங்கனி கவின்கல் லாக
வடைபடு கழைக்க ரும்பங் கொள்கனு யாகக் கொண்டு
கடைபடு முனிநிற் செல்லா காரிய கருந்தம் முன்னர்ப்
படைபடை யெனச்சொ ரிந்தார் படைமுகத் திவரும் போல.

(இ - ள்.) வடை - வடைகள்—படு - பொருந்திய—நிதியாக - சக்கர யுதங்களாகவும்—மாங்கனி-மாம்பழங்கள்—கவின்கல்லாக - கவண்கற்களா கவும்—உடைபடு - முறியத்தக்க—கழைக்கரும்பு - மூங்கில்போன்ற கரும்புகள்—அங்கு - அவ்விடத்தில்—நன்கதையாக - பலமுள்ளகதைக ளாகவும்—கொண்டு - எடுத்துக்கொண்டு—கடைபடுமுனிவிற்செல்லாத - தீ ர்ப்பட்டவைகளுக்கெல்லாம்—காரியம் - காரியமடைந்தவர்கள்—கருந் தன்முன்னர் - தலைவருமெயவல்லமைக்குமுன்னே—படைமுகத்திவரும் போல - யுத்தகளத்தெதிர்த்த சத்துவீரர்களைப்போல —படைபடையெ னச்சொரிந்தார் - படைபடையென்று சொரிந்துவிட்டனர். எ - று. வடை, மாங்கனி, கரும்பு, வெற்றில நிதி, கவண்கல், நன்கதை, இவ ற்றையாரோபித்தலால் விரியுருவகவணி. (௫0)

குளங்குறை யாக வந்தக் குளத்திடைப் பசுவின் நெய்பால்
விளங்குறு மமுத வேலை விடுத்தென விட்டார் சில்லோர்
உளங்கனி மூவர் செய்யு ளொத்தமுக் கனியு மேனோர்
வளங்கெழு தொடர்பு போலு மற்றைய பழமுந் தூர்த்தார்.

(இ - ள்.) குளம் - குளமானது—குறையாக - எல்லையாக—அந்தகுள த்திடையின் - அந்தக்குளத்தில்—பசுவின்நெய்பால் - பசுமாட்டினுடைய பா லை—விளங்குறும் - விளங்காநின்ற—அமுதவேலைவிடுத்தென - திருப்பா

மற்றிது கனவு மென்றோர் மாட்டலை மொழிய வேறு
மற்றிலை யென்று கற்றித் திருமுகம் பார்த்துச் சென்றார்.

(இ - ள்.) சற்று - கொஞ்சம்—இதனைக்கனவென்று - இன்றுகுசாப் பிகெயென்று—தமருபசரியாவன்னம் - உரவின ருபசரியாதிருக்குவ ன்னம் —சற்றிதுகிமெயென்று - இன்றுக்கொஞ்சப்போடென்று— தம்பிரான் - ஆன்மாக்—உள்ளுறுமின்முன் - யினைவிக்கப்பிட்டிக்கொ ண்டிருக்கின்றனன் —மற்றிதுகன்றி - இவ்விதமத்தைக்கன்றி —யின் றோர் - அங்குநின்றவேலையாளர்கள் —மட்கலமொழிய - சமைத்தபாத் திரத்தையன்றி—வேறுமற்றிலையென்று - வேறுமற்றொன்றுமில்லையென் று—கற்றி - வசனமாறாது —திருமுகம்பார்த்துச்சென்றார் - அறிவ முறைத்துக்கொண்டு சென்றனர். எ - று. உபசாரக்கொண்டாடல் வி [illegible] மட்கலத் தைக் காட்டின ரென்க. (௬௯)

உடன்விளை யாடல் செய்யு மொருவனைக் கண்டு மேன்மேற்
கடன்விளை யாடு மெற்றிக் கடவுள்மெய் யடியா ரெல்லாம்
விடன்விளை யாடுஞ் சோலை வியனகர் நீத்துச் செல்வப்
படன்விளை யாடுந் தம்மிற் பேரண மிதிநற் செல்வரி.

(இ - ள்.) உடன் - உடனில்—விளையாடல்செய்யும் - திருவிளையாடல் செய்கின்ற—ஒருவனைக்கண்டு - ஒருவனுடையவனைக்கண்டு—மேன் மேல் - மன்மதன்மேல்—விளையாடு - விளையாடல்செய்த—கண்ணெற் றி - நெற்றிக்கண்ணையுடைய—கடவுள் - பரமசிவனது —மெய்யடியா ரெல்லாம் - மெய்யடியார்களெல்லாரும் —[illegible] - ஆகாயமளா விய—சோலை - தோப்புகள்சூழ்ந்த—வியனகரிடத்தில் - பெரிதாகியபட் டணத்தில்—செல்வம் - [illegible] —[illegible] - [illegible] —[illegible] - ஆன்று [illegible] - படைக்கின்றது. எ - று. மேன்மேற் கன்விளையாடல் [illegible] அக்கினிநன்னெல்லையென் [illegible] விளையாடலைச்செய்த [illegible] படைத்தகொண் டனரென்க. [illegible] பட்டுறாமன்றி. இவர் [illegible] சோலை யென்றது. (௭௦)

பாண்டின்மே லேற்றி வந்தும் பானையிற் சுமந்து வந்தும்
வேண்டிய பாக முற்று வேறுவே றுய வன்னம்
மாண்டகைக் குரவ னன்ன னளவிலர் சொரிந்து யர்ந்தார்
ஆண்டுழக் கொறுக்கு மன்ன மூட்டுவ மென்பார் போல.

(இ - ள்.) பாண்டின்மேல் - வண்டிகளின்மேல்—ஏற்றிவந்தும் - ஏற் றிக்கொண்டுவந்தும்—பானையிற்சுமந்துவந்தும் - பானைகளிற்சுமந்துகொ ண்டுவந்தும்—வேண்டியபாகமுற்று - அவரவர்வேண்டியபாகங்களிற்பெற் று—வெறுவேறுயவன்னம் - வெவ்வேறுபொசச் சமைக்கப்பெற்ற வன்னங்களை—ஆண்டகை - ஆண்தன்மையையுடைய—குரவனுன்ன - அல்லமதேவன்பான் வேண்டி —ஆண்டுழல் - உதராக்கினி—வெறுக்கும் வன்னம் - வெறுத்துப்போகும்படி—ஊட்டுவமென்பார்போல - உணவு ன்னைச்செய்வமென்று சொல்லுவார்போல—அளவிலர் - அளவில்லாத பேர்கள்—சொரிந்து - குவையல்குவையலாகச்சொரிந்து—உயர்ந்தார் - மலைபோலுயர்த்தினர்கள். எ - று. (௭௧)

மலையென வமல ஞான வாரிமுன் சொரிந்து யர்ப்ப
கிலைமலர் பசுங்காய் கந்த மிளஞ்செழுந் தண்டாற் செய்த
வுலையமை பல்கா யம்பெய் பொன்கறி யமுது வேறு
பல்பல முறைம யங்கப் படைப்பார்வல் விரைந்து வந்து.

(இ - ள்.) மலையென - மலைகளைப்போல—அமலம் - பரிசுத்தமாகிய— ஞானவாரிமுன் - ஞானசமுத்திரமாகிய வல்லமதேவனுக்குமுன்—இலை - இ லைக்கறிகளையும்—மலர் - மலர்க்கறிகளையும்—பசுங்காய் - பசியகாய்க்கறி களையும்—கந்தம் - வாசனையும்—இளம் - இளமையும்—செழும் - செழு மையுமுள்ள—தண்டாற்செய்த - தண்டுகளாற்செய்த—உலையமை - அக்கினியிற்பாகமாகிய —பல்காயம்பெய் - மூளகுமுதலியபலகாயங்கள் பெய்யப்பெற்ற—பொன்கறி - மணமுள்ளகறிகளையும்—அமுது - சாதங் களையும்—வேறு - வேறுவேறாக —பலபல்முறை - பலபலவிதமாக—மய ங்க - முன்னும்பின்னுமாகமாற—வல்விரைந்துவந்து - மிகவும்வேகமா கவந்து—சொரிந்துயர்ப்பார் - சொரிந்துயரச்செய்வோர்—படைப்பார் - இவர்கள். எ - று. ஞானவாரி, உவமையாகுபெயர். (௭௨)

தூய்கமழ் கறிக ளிட்டுக் குவிப்பவர் சிலரி மைத்து
நெய்கவிழ்க் கைய ராகி நிற்பவர் சிலர்நி ரம்பப்

பொய்கவிழ் சொரிபவர் முன்பால் பெய்பவர் சிலரனைத்து
மைகவழ் தயிர்குடத்தைக் கவிழ்ப்பவர் சிலரங் கம்மா.

(இ - ள்.) [illegible] — குவிப்பவர்சிலர் - அம்பரம்போற் குவிப்பவர்சிலரும் — [illegible] — பெய்யக்கவிழ்க்கின்ற — [illegible] — சிலரும் — [illegible] — கவிழ் - கவிழ்த்தலை — சொரிபென்று - [illegible] — பெய்பவர் - பகலின்பாலைப்பெய்பவர்கள் — சிலரும் — [illegible] — மைகவழ் - [illegible] — தயிர்குடத்தைக் கவிழ்ப்பவர் - [illegible] — சிலருமாக — அங்கு - அவ்விடத்தில். எ - று. அம்மா; வியப்புக்குறிப்பு. குவிப்பவர்சிலர் பெய்பவர்சிலர் கவிழ்ப்பவர்சிலர் எனப்பொருள்கொள்க. (௪௫)

இட்டவர் மதிய வெள்ள மிகுந்தது வினைக்கு வெல்லார்
முட்டில ரெதிர்த்த டங்கு மூரல்கை வாங்கி வாங்கிக்
கொட்டிய ரழகி நந்த கடைகள் கவிழ்த்தெ ழிந்து
தட்டில ரனைய படைக்குந் தம்பிரா னருளா லம்மா.

(இ - ள்.) இட்டவர் - [illegible] — [illegible] — அன்னமிகுந்தது - அன்னம்படைத்தற்கு — வினைக்கு - [illegible] — ஊரல் - [illegible] — [illegible] — எதிர்த்து - [illegible] — முட்டிலர் - [illegible] — [illegible] — கொட்டிலர் - [illegible] — [illegible] — கடைகள் கவிழ்த்தெழிந்து — தட்டிலர் - [illegible] — [illegible]. எ - று. [illegible]. தம்பிரானருளால் [illegible]. அம்ம - இடைச்சொல். (௪௬)

இன்னண மடைந்த வெல்லா மிமைப்பினி லயின்று தேவ
மன்னவன் வயிற்றின் வெந்தீ வளர்த்தினிர் நீவி ரெல்லா
மென்னநல் லசவ தேவ னிருந்தபல் பண்டங் கொண்டு
முன்னவன் பசியை யாற்ற முன்னிமற் றிதனைச் செய்தான்.

(இ - ள்.) இன்னணம்படைத்தவெல்லாம் - இவ்வாறுபடைத்தவுணவனைத்தையும் — இமைப்பினிலயின்று - இமையக்கவிழுமளவிற்புசித்து — தேவமன்னவன் - அல்லமதேவனது — வயிற்றின் - வயிற்றில் — வெந்தீவளர்த்தினிர் - உதராக்கினியைவளர்த்துவிட்டீர்கள் — நீவிரெல்லாம் - நீங்களெல்லாம் — என்ன - என்றுசொல்லி — நல்லசவதேவன் - நல்லசவன்னன் — இருந்தபல்பண்டங்கொண்டு - அங்கிருந்தவுணவுக்கியைந்த பலபண்டங்களைக்கொண்டு — முன்னவன்பசியையாற்ற - அல்லமனது பசிதணிக்க — முன்னி - நினைத்து — மற்றிதனைச்செய்தான் - பின்னிருக்கக்காரியத்தைச்செய்தான். எ - று. அயின்று தன்வினைபிறவினை மயக்கம். (௪௭)

அவரையும் பயறு மெள்ளு மரிசியு மவலுங் கொள்ளுந்
துவரையுங் கடலை யுஞ்செஞ் சோளமு நெல்லும் புல்லுங்
குவளையுங் கயிலை யும்பொற் குன்றமும் போல ஞாலத்
தெவரையுங் களிப்பு செய்ய வெங்கணுங் குவிப்பித் தானால்.

(இ - ள்.) அவரையும் - அவரையையும் — பயறும் - பயறையும் — எள்ளும் - எள்ளையும் — அரிசியும் - அரிசியையும் — அவலும் - அவலையும் — கொள்ளும் - கொள்ளையும் — துவரையும் - துவரையையும் — கடலையும் - கடலையையும் — செஞ்சோளம் - செம்மையாகியசோளத்தையும் — நெல்லும் - நெல்லையும் — புல்லும் - புல்லையும் — குவளையும் - குவளையென்னுமோர்வகைதானியத்தையும் — கயிலையும் - கைலயங்கிரியையும் — பொற்குன்றமும்போல - மேருகிரியையும்போல — ஞாலத்து - பூமியிலுள்ள — எவரையும் - யாவரையும் — களிப்புசெய்ய - சந்தோஷப்படுத்தும்படி — எங்கணும் - எவ்விடத்திலும் — குவிப்பித்தான் - குவையாக்கும்படிசெய்தான். எ - று. ஆல் - அசை. (௪௮)

குன்றெனக் குவித்த வெல்லாங் கொள்ளெனக் கொண்டு நம்பன்
மென்றனைக் கணத்தி னின்று மெல்லன கொணர்மி னென்ன
வன்றிறற் றண்ட நாதன் மனத்திறு லவை யியற்றி
நின்றிடத் தம்பி ரானு நினைவிறு லவைய யின்றான்.

(இ - ள்.) குன்றெனக்குவித்த - மலைபோலக்குவியலாக்கிய — எல்லாம் - இவையனைத்தையும் — கொள்ளென - உண்ணென்றுசொல்ல — நம்பன்கொண்டு - அல்லமனவற்றையுட்கொண்டு — அணைக்கணத்தின்கண் — நின்று - அணைக்கணத்தில்நின்றுவிட்டு — இன்னும் - இன்னமும் — மெல்லன - மென்றுதின்னத்தக்கவைகளை — கொணர்மினென்ன - கொண்டு

[illegible] — [illegible] உண்டாகாதன் - [illegible] — [illegible] - [illegible] [illegible] கம்பிரானும் - [illegible] [illegible] - [illegible] [illegible]. எ - று. (௩௪)

நோக்கிறு வளித்த வெல்லா நோக்கிறுந் தெரிந்தா னந்தி
வாக்கிறு வளித்த வெல்லாம் வாக்கிறல் வல்லா னன்றே
போக்கிறு மிருவ ரன்ன வென்றுயப் பொறிக ளைந்தே
யாக்கிறு மிருவர் தாமுந் தொல்லியுத் தடைந்த தில்லை.

(இ - ள்.) நோக்கிறுவளித்தவெல்லாம் - [illegible] [illegible] — நோக்கிறுந்தெரிந்தான் - [illegible] — [illegible] — வாக்கிறுவளித்தவெல்லாம் - வாக்குக்கு [illegible] [illegible] — வாக்கிறல்வல்லானன்றே - வாக்குக்காரணமாக [illegible] — போக்கிறுன் - [illegible] — இருவர் - படைத்[illegible] — [illegible] - [illegible] — [illegible] - [illegible] — இப்பொறி[illegible] — [illegible] - [illegible] — இருவர்தாமும் - இவ்விருவரும் — தொல்லியுத்து - தொல்லியடைந்தது — அடைந்ததில்லை - [illegible]. எ - று. [illegible], நோக்கிறும், வாக்கிறும், அளித்தலும், உண்டாமென்ற இருவகைமையும் விளக்கின்றது. [illegible] [illegible] [illegible] அளித்தலிறுதல் [illegible] இருவர்தாமுந் தொல்லியுத்தடைந்ததில்லையென்றது [illegible] அளித்தல் இடுதல் படைத்தல் [illegible] [illegible], [illegible] [illegible] தொடுத்தல் [illegible] [illegible] முறைமையையும் ஒருபொருட்கேற்றி. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. (௩௫)

படைத்திடுந் தொழின் மூன்றையத் தனை நியல்பு மல்லை
யடைத்திடுந் தொழிலி லின்றா தாயவ னியது நோக்கி
யடுத்தகப் பத்த ரெல்லா மன்பரை மிருவர் நீரு
நெடுத்தாரைத் தனைத்து வியப்புற்றிறைஞ்சின ரொருங்கு மாதோ.

(இ - ள்.) படைத்திடுந்தொழில் - படைக்குந்தொழிலின்—[illegible] — [illegible] [illegible] — அந்த - அத்

[illegible] — [illegible] தொழிலில் - அழிக்குந்தொழிலில் — இன்றா - பின்னிடாதுநின்ற — தூயவனியதும் - வசவண்ணனது வல்லமையையும் — நோக்கி - பார்த்து — அடுத்தகப்பத்தரெல்லாம் - அவ்விருவின் றமிலனடியார்களனைவரும் — அன்பரைமிருவர் - அத்தன்மையாய இயலிருவரின் — நீரும் - சேர்த்திகளையும் — எடுத்துரைத்து - எடுத்துத்துதி[illegible]து — உளம் - மனதில் — வியப்புற்று - அதிசயங்கொண்டு — ஒருங்கு - ஒருமிக்க — இறைஞ்சினர் - வணங்கினார்கள். எ - று. மாது - ஓ - அசைகள். (௩௬)

இடுதற்கு வல்லா னந்தி யிம்பொரு ளனைத்து மன்னை
தொடுதற்கு வல்லா னிந்தத் தூயவ னென்ப ரிவ்வா
றிடுதற்கு வல்லா ரில்லை யென்பரின் வாறு நாங்கை
தொடுதற்கு வல்லார் தம்மைச் சொல்லவுங் கேளே மென்பார்.

(இ - ள்.) இடுதற்குவல்லான் - படைத்தற்குவல்லவன் — நந்தி - வசவண்ணனும் — இம்பொருளனைத்தையும் - அங்ஙனம்படைக்கும்பொருவன்னனையும் — கைதொடுதற்குவல்லான் - நசிக்கச்செய்தற்குவல்லமையுடையோன் — இந்தத்தூயவன் - [illegible] — என்பர் - என்றுசிலர்கூறுவர் — இவ்வாறிடுதற்குவல்லார் - இவ்வாறுகொடுத்தற்குவலியுளோர் — இல்லையென்பர் - இலரில்லையென்றுசொல்வார்கள் — இவ்வாறு - இவ்வண்ணம் — நாங்கைதொடுதற்குவல்லார்தம்மை - நாங்கையிறுக்கட்டிக்காட்டற்கியையவல்லாரை — சொல்லவுங்கேளேம் - பிறர்சொல்லவுங்கேட்டிலேம் — என்பார் - என்றுசிலர்சொல்லுவர். எ - று. இங்கே கைதொடுதல் அழித்தல். கைதொடுதற்குவல்லார்தம்மை - அழித்தற்குவல்லாரை — சொல்லவும் - பிறர்சொல்லவும் — நாங்கேளேம் - நாங்கள் கேட்டிலேம் — எனப்பதப்பொருள் கொள்ளினுமமையும். (௩௭)

கன்னப்ப னன்பி னுனே கதியென வமைத்த வூனை
யுன்னப்ப னூனின் வேறு முயிருணின் றமைவ னென்று
மன்னைப்போ னனைய செய்ய வசவனே நிகர்வ ணங்கி
வின்னைப்பந் செய்தான் றங்க விடைமுகங் காந்தா ரன்றே.

(இ - ள்.) கன்னப்பன் - கண்ணப்பனென்போன் — அன்பினுனே - மிக்கவன்பினால் — கதியெனவமைத்தவூனை - கதியாகச்சமைத்தமாமிசத்தை — உன்னப்பன் - உன்டபரமசிவன் — ஊனின்வேறும் - தேகத்திற்குவேறாகிய — உயிருணின்றமைவனென்று - உயிருக்குயிராயிருப்பனை

ன்று—வண்ணம் - அழகிய—பொன்னனைய - பொன்போன்றுவிளங்குகின்ற—சென்னவசவதேசிகன் - சென்னவசவன்னென்—வணங்கி - கண்டு களித்து—தங்கம் - பரிசுத்தமாகிய—விடைமுகக்கரத்தோடு - விருஷப வடிவமமைந்தவாத்தவசவன்னைநோக்கி—விண்ணப்பஞ்செய்தான் - சொல்லினன். எ - று. ஈணவே, கண்ணப்பருஅவதாரத்தின்பின் ஈணுடையி னின்றும் பற்றுவிராகிற்றலின் அல்லமைவலிக்காணுவருதியென்று சென்னவசவன் குறிப்பித்ததாகப் பெற்றாம். (௩௰)

வேறு.

செல்ல வசவன் சொல்லியசெய்ய செய்யுஞ் செய லென்று, மன்று மருவிய மடவாள மாசிலி தேவன் வந்துரைப்ப, வெல்லி யுடைய யம்மொழியே யென்று மனத்தைத் தேற்று மது, பின்னை புனிதோர கதகமலாற் பெருகீர் தெளித்தற் கென்றுரைத்து.

(இ - ள்.) சென்னவசவன்சொல்லிய - சென்னவசவதேவன்சொல்லியசொல்—அந்தச்செயல்லே—செய்யுஞ்செயலென்று - யாருஞ்செய்யத்தக்கசெய்கையென்று—மடிவாளமாசிதேவன் - மடிவாளமாசிதேவனென்பவன்—மன்றுமருவின் - சிவபெருமானுடையகோயிலுக்கு ஒருப்ப - வந்துசொல்ல—என்னையுடையான் - என்னையாளாகவுடைய வசவன்னன்—நம்மொழியே - தேவரீர்வசனமே—மனத்தைத் - என்னுடையமனதை—தேற்றுமது - தேற்றுவது—பெருகீர் தெளித்தற்கு - மிக்கவலங்கரிசைத்தெளிவித்தற்கு—கதகமலாம்-தேற்றுங்கொட்டையன்றி—பின்னையுமதோ - வேறுமதோ—என்றுரைத்து - என்றுசொல்லி. எ - று. (௩௧)

பொறிகள் கரணம் பூதங்கள் புலன்கள் மற்றும் பல் வகைய, கதிக ளாக வாருயிரோ கலந்தவன் பதமா நீயுன்னைப், பெறுக இலன்யா னொன்றின்று பிறவிப் பிணிநீர் மருந்து வன்று, னறிய மலர்மெல் லடிய ணிந்தா னமையா ருடைய வருளாகுநீ.

(இ - ள்.) பொறிகள் - ஐம்பொறிகளும்—கரணம் - அந்தக்கரணங்களும்—பூதங்கள் - பஞ்சபூதங்களும்—புலன்கள் - ஐம்புலன்களும்—மற் றும்பல்வகைய - இன்னும்பலவகையாகவிரிந்தனவாகத்தனவும் —கதிக [illegible]

கதிகளோடுகலந்துள்ளனத்தக்க—பதமா - சாதமாகவும்—நீயுன்னைப்பெறுகஇலன் - நீயுன்னும்படியானபாக்கியமடைந்தேனில்லன்—யானொன்று - யானொன்று—இன்று - இசைத்தநின்று—பிறவிப்பிணிநீர் - பிறவிநோயைத்தீர்க்கத்தக்க—மருந்துவன்றன் - வயித்தியனுகியவல்லமனது—அறியமலர் - வாசனையுள்ளதாமரைமலர்போன்ற—மெல்லடி - மிருதுவா கிருவடிகளை —நமையாருடைய - நம்மையாளாகவுடைய—அருளாகி - கிருபைபொருந்தியவசவன்னன்—பணிந்தான் - வணங்கினான். எ - று. பல்வகைய, வினையாலணையும்பெயர். கதிகளாக உன்பதமா [illegible] விரிபுருவகவணி. பிறவிப்பிணி, தொகையுருவகம். (௩௨)

பசவ னீங்கள் படுன்றான வொல்லமய்பெயரான், பசியின் வந்தே னலன்பொருட்டுப் படர்கா மக்கு வந்திலன் யான், கனியு நினது மனந்தன்பு காண வந்தே னென்றேத்தி, யிசையின் மலியு மரனடியார் யாரு மகிழ வெடுத்தணைத்தான்.

(இ - ள்.) அருள் - கிருபைபொருந்திய—ஞானவள்ளல் - ஞானதாதாவாகிய—அல்லமப்பெயரான் - அல்லமனென்னும்பெயருடையோன்—வசவனிலைகண்டு - வசவன்னனதுபரிபாகநிலையைக்கண்டு—யான் - நான்—பசியின்வந்தேனலன் - பசிதணிப்பான்வந்தவனல்லன்—பொருட்பொருளிட்டற்கும்—படர்காமக்கு - மிக்ககாமந்தணித்தற்கும்—வந்தேனில்லன்—நினது - உன்னுடைய—கனியும் - நெக்குருகுமனத்து - மனதிலுள்ள—அன்புகாண - அன்புபெருக்கைக்காணவந்தேனென்று - வந்தனனென்று—ஏத்தி - துதித்து—இசையினும் - கீர்த்தியின்மிக்க—அரனடியார்யாரும் - சிவனடியாரனைவருமகிழ - களிக்கும்படி—எடுத்தணைத்தான் - எடுத்துமார்போடணைத்தான். எ - று. காமத்துக்கெனல் விகாரந்தாற்றுக்கது. ஈண்டே இடைநிலைத்தீபகமாக்குக. (௩௩)

கண்போ லுயிர்கள் கண்டறியக் கதிர்போற் காட்டும்பெருமை, யுண்போ னியானு மூட்டுமெனக் கூட்டு வேனென்று மயா, தென்போ லென்போற் பேதைகமை யாரில்லை யில்லை யென்றனன்பின், பண்போ டமல னெதிர்நின்று பத்தி வாடிவைநான்.

(இ - ள்.) கண்போல் - உலகையறியுங்கண்போல—உயிர்கள்கண்ட [illegible] கதிர்போற்காட்

டும் - சூரியனைப்போல்விளக்கிக்காட்டும்—பெருமானே - நந்திதேவ—உன்போன்யாரை - போகமுன்போன்யாரை —யாட்கொண்டு - ஆட்கொ ருமனக்கு —யாட்கொள்ளேன்று - உன்னைச்செய்வதென்று—எழுத் தமையால் - யான்முழுந்தபடியால் —என்போது - போலிக்குமபோது— என்போந்பேதமையர் - என்னைப்போலநுடன்தன்மையுடையோர்— பன்போடு - நற்குணங்களோடு —அம்மலையைவிட்டுநின்று - அவ்வமர் நிர்கின்றவருடைய—பத்திமையுடையவர்கள் - பத்தியையுடையமக்கள் சாய னைன்— இல்லையில்லையென்றனன் - இல்லையில்லையெனச்சொல்லின ன்—பின் - அதன்பின்னர். எ - று. உலையிற்கொடவென்பதாந்திய ல் உயிர்கள்கண்டறிய உயிக்கு..., என்போல் யாம்போல சூம், அலர்போல் சூரியனைப்போ...காட்டும்பெருமானே என்றிலக காட்டுகத்தனே என்றுமைக்கொள்ளுதலையும். உரைத்தலைப்புத்திக கன்னையும், விளக்கலிப்பாந்திச்சூரியனையுறவமைத்தார். சூரியத்தி லிவிருதன்மையு பெருக்குடையானைக் கிதலைக்காட்டும்பெருமானே யென்றுரைக்க. அன்றேல், சக்திதாரைத்தலைக்காட்டுவெளியில ரும். என்றும்போதெனல் விகாரத்தாற்றொக்கது. (௩௪)

செம்மைநெறியா ளருணந்தி தேவன் றன்னைப் புகழ்வ மோ, பொய்ம்மை திருமல்லமனைப் புகழ்வ போயிகன்றிடி வர், தம்மை விழியாற் காண்பதற்குத் தவஞ்செய் துடலு பெற்ற, வெம்மை யாமே புகழ்வபோ வெனவின் றனர்த னடியார்.

(இ - ள்.) செம்மைநெறியான் - செந்நெறிச்செல்வோனாகிய ன் - திருவைபொருந்திய—நந்திதேவன்றன்னை - வசவண்ணனை வமோ - துதிப்பமோ —பொய்ம்மைதிரும் - கற்பனைகட்டிய— னை - அல்லமதேவனை—புகழ்வபோ - துதிப்பபோ—இங்கன்றி - தமன்றி—இவர்தம்மை - இவர்களை —விழியாற்காண்பதற்கு - க ற்காண்பதற்கு—தவஞ்செய்து - தவத்தைச்செய்து —உடலைபெ இந்தத்தேகத்தையடைந்த—எம்மையாமே - நம்மைநாமே—புகழ்வ வென - துதிப்பபோவென்று—தம்பிரானடியார் - சிவதொண்டர்க ன்றனர் - சொல்லினர். எ - று. இக்கூற்றொன்றிருநாதர மலை. செம்மைநெறி திருத்தொண்டை. (௩

பரிந்த நந்தி முகநோக்கிப் பசித்தா ரென்று நீநா பிரிந்த வந்த வடியார்தமைப் பிறங்க லனைய நின்மாடத்து

வணங்கிக் கொணர்தியெனை வறிவா ளந்த மயன்கூற, விரை ந்து விடைகொண் டெழுந்தன்பு வெள்ளஞ் சென்ற தவரிட த்தில்.

(இ - ள்.) பரிந்த - அன்புகொண்ட —நந்திமுகநோக்கி - வசவண்ண னதுமுகத்தைப்பார்த்து —பசித்தாரென்று - பசியாயிருரென்று—நீநா ளாக - நீவருந்த—பிரிந்த - உன்னைவிட்டுநீங்கிய—அந்தவடியார்தமை - அந் தவடியார்களை —பிறங்கலனைய - மலைபோன்ற —நின்மாடத்து - உன் னுடையவீட்டில்—அருந்த - சாப்பிடுதற்கு—வணங்கி - நமஸ்காரஞ்செய் து—கொணர்தியென - அழைத்துக்கொண்டுவாவென்று —அறிவாளந்த மயன்கூற - அறிவாளர்தலைவனாகியவல்லமன்சொல்ல—விரைந்துவிடை கொண்டு - விரைவிலுத்தரவுபெற்றுக்கொண்டு —எழுந்து - எழுந்திருந் து—அவரிடத்தில் - அடியார்களிடத்தில் —அன்புவெள்ளஞ்சென்றது - அன்புப்பெருக்குச்சென்றது. எ - று. வசவனை அன்புவெள்ளமென்றுரு வகமாக்கலின் சென்றதென்றஃறிணைமொருமையதாக்கியதென்க. ()

சென்ற வசவ னருட்குரவன் றிருமே னியிற்று ளங்க ளிந்த, மன்றன் மலருஞ் சந்தனமும் வடிவிற் றிகழ மடிநிமிர் ந்து, நின்றன் முதல கறிமணக்கத் தேக்கு விடுத்து முகமலர்ந் து, கொன்றை கமழ்வே ணியனடியார் குழாங்க ளிருப்பக் கண் டனனால்.

(இ - ள்.) சென்றவசவன் - போயவசவண்ணன்—அருட்குரவன் - அருளையுடையவல்லமனது—திருமேனியில் - உடலில்—தாளங்கனிந்த - தாளங்கேதரித்த—மன்றன்மலரும் - வாசனையுள்ளமலர்களும் —சந்தன மும் - சந்தனமும்—வடிவிற்றிகழ - திருமேனியில்விளங்கவும் —மடிநிமிர் ந்து - மடிதளர்ச்சிநீங்கி—நின்றன்முதல - நின்றன்முதலாகியபுடைபெய ர்ச்சிக்கியைந்தனவாகிய—கறிமணக்க - பதார்த்தங்கள்மணக்கவும்—தே க்குவிடுத்து - ஏப்பங்கொண்டு—முகமலர்ந்து - முகமலர்ச்சியோடே—கொ ன்றைகமழ் - கொன்றைமலைமணக்கின்ற—வேணியன் - சடையையு டையபரமசிவனது—அடியார்குழாங்களிருப்ப - அடியார்கூட்டங்களிரு க்க—கண்டனன் - பார்த்தனன். எ - று. ஆல் - அசை. உணவில்லா மையால் மடிதளர்ந்தமடி நிமிர்ந்தென்றார். (௩௭)

கண்ட நந்தி யடிபணிந்து கடையேன் செய்த பிழைபொல் லா, மூண்டு பெருமிபின் வருகவென வுள்ளங் களிப்புற் றுயர்

ருந்து, தொண்டர் வசவ நின்பெருமை சொல்ல வெளிதோ வயி
றாப், பண்டு போல வாய்கைதொழிற் படாம லயின்றோ மின்
றென்று.

(இ - ள்.) கண்ட - போய்க்கண்ட — நந்தியடிபணிந்து - வசவன்னனை தடிகளைவணங்கி — கடையேன்செய்தபிழையெல்லாம் - நாயினுங்கடையேன்செய்த பிழையனைத்தையும் — உண்டு - சாப்பிட்டு — பொறுமின் - பொறுத்துக்கொள்ளுங்கள் — (ஆதலால்) வருகவென - வாருங்களென்றுவசவன்னனென்வேண்ட — உள்ளங்களிப்புற்று - மனமகிழ்ந்து — அங்கிருந்ததொண்டர் - அங்கிருந்தவடியார்கள் — வசவ - வசவன்னதேவனே — நின்பெருமை - உனதுமகிமையை — சொல்லவெளிதோ - எம்மாலெடுத்துச்சொல்லவெளிதாமோ — பண்டுபோல - முன்போல — வாய்கைதொழிற்படாமல் - வாய் கைகளாலெய்துந்தொழில்படாமல் — வயிறார - திருத்தியாக — இன்று - இன்றைக்கு — அயின்றோமென்று - உண்டனமென்று. எ - று. வாய் கை தொழிற்படாமையாவது; மெல்லல், நக்கல், பருகல் முதலிய வாய்த்தொழிலும், பிசைதல் எடுத்தூட்டல் முதலிய கைத்தொழிலும் இல்லாமலுண்டலை. எனவே, வியப்புதொனிக்கப் பெற்றும்.

(௯௮)

தேவ ருண்ண வவியுணவு செந்தீ முகத்தி லிடுதல்போ
லோவில் யாங்க ளெல்லேமு முண்ண வடிகி லல்லமன்ற
னுவின் மருவ விருத்தினையோர் நாவோ புகழுந் தரத்ததென
வாவி யனைய நந்திசீ ரமல னடியார் புகன்றேத்தி.

(இ - ள்.) தேவருண்ண - தேவர்களுண்பான்வேண்டி — அவியுணவு - அவிர்ப்பாகத்தை — செந்தீமுகத்தில் - யாககுண்டத்தில் — இடுதல்போல் - கொடுப்பதுபோல — ஓவில் - நீங்காத — யாங்களெல்லேமும் - யாங்களனைவரும் — உண்ண - உண்டிருத்தியடைய — அடியில் - உணவு — அல்லமன்றனுவில் - அல்லமனாதாவின்கண் — மருவ - பொருந்த — இருத்திட்டவுன்னை — ஓர்நாவோ - ஓர்நாக்கா — புகழுந்தரத்தது - அறிக்கையதா — என - என்று — ஆவியனைய - உயிருக்கொப்பாகிய — நந்திசீர் - வசவன்னனாதனைத் திருமங்களை — அமலனடியார் - சிவனடியார்கள் — புகன்றேத்தி - சொல்லித்துதித்து. எ - று. செந்தீமுகமாகத் தேவர் திருத்தியடையுமாறுபோன்று அல்லமன்காரணமாக யாங்கள் திருத்தியடையுமாறுசெய்தனை எனப்புகழ்ந்தாரென்க.

(௯௯)

உலகி லொருவன் சிவயோகி யுண்ட தம்ம சராசரமா
மலகி லுயிர்க ளெலாமுண்ட தாகு மென்ன மறைகூறு
மிலகு முறையைக் காட்டியா னின்றிங் குணர வுணர்த்தினன்
கலக வினைக டீர்க்குமருட் கண்ணன் னிகழல் லமதேவன்.

(இ - ள்.) உலகில் - உலகத்தினிடத்தில் — ஒருவன் - ஒருபுருடனாகிய — சிவயோகி - சிவயோகியென்போன் — உண்டது - புசித்தது — அம்ம - ஆச்சரியம் — சராசரமாம் - சராசரமாகின்றன — அலகில் - அளவில்லாத — உயிர்களெலாம் - சகலவுயிர்களும் — உண்டதாகும் - புசித்ததாகும் — என்ன - என்று — மறைகூறும் - வேதங்கள்சொல்லாநிற்கும் — இலகுமுறையை - அங்ஙனம்விளங்கும்வார்த்தையை — காட்டியான் - பிரத்தியட்சத்தால் — இன்று - இப்போது — இங்கு - இவ்விடத்தில் — உணர - யாவரும் உணர — உணர்த்தினன் - நேரேகாட்டினன் — (அவனுரெனில்) கலகவினைகள் - விடாதுகலகஞ்செய்யுமிருவினைகளையும் — தீர்க்கும் - நீக்கத்தக்க — அருட்கண்ணன் - அருட்கண்ணையுடைய — இகழ் - சொப்பிரகாசமாகவிளங்குகின்ற — அல்லமதேவன் - அல்லமதேவனென்போன். எ - று. அம்மவுரையசையெனினுமமையும். உண்டது உண்டதாகுமெனமுடிக்க. வினைகட்குக்கலகமென் நடைமொழித்தது இன்பதுன்பங்களின் விடாது மொத்தலைச்செய்தலினென்க.

(௱)

ஆத லாலவ் வல்லமனை யருத்த லெம்மை யெலாமருத்தல்
பாத மவனைப் பணிதலெமைப் பணித லாகு மெஞ்ஞான்றும்
பேத மில்லை நல்வசவப் பெயரோய் செல்க வென்னமலை
மாது தழுவக் குழைந்ததோள் வள்ள லடியார் தமைவணங்கி.

(இ - ள்.) ஆதலால் - ஆகையால் — அவ்வல்லமனை - அந்தவல்லமதேவனை — அருத்தல் - உண்ணச்செய்தல் — எம்மையெலாம் - எங்களையெல்லாம் — அருத்தலாகும் - அருந்தச்செய்தலாகும் — பாதமவனைப்பணிதல் - அவனதுதிருவடிகளைவணங்கல் — எமைப்பணிதலாகும் - எங்களைவணங்கியதாம் — எஞ்ஞான்றும் - எப்போதும் — பேதமில்லை - பிரிதும்பேதமென்பதில்லை — நல்வசவப்பெயரோய் - நல்லவசவனென்னும்பெயரையுடையோனே — செல்கவென்ன - போகக்கடவாயென்றுசொல்ல — மலைமாது - உமையவள் — தழுவ - தழுவாநிற்க — குழைந்த - அழுந்தக்குங்கிய — தோள் - தோள்களையுடைய — வள்ளல் - பரமசிவனது — அடியார்தமைவணங்கி - அடியார்களைநமஸ்கரித்து. எ - று. அருமெனவே எரி—

த்தபொய்கை. அருந்தல் பிறவினை. விப்பிரலிப்பையவையின் மையின் பேதமில்லையென்றார். எனவே, வினையர்க்குச் சிவபாவமகலாமையின் பேதமில்லையென்றற்கு ஏராளெய்துமெனப் பெறும். மலையாதுதமுவக்குழைந்ததோளொனல் பூரணசம்மதம். குழைந்தவென்பது தன்வினையாதலின் அதனுலெனவருவித்தாம். பாதமலரென்பது வேற்றுமையயக்கம். (௬௧)

மீண்டு நந்தி யல்லமனர் மென்பூங் கமல வடியிறைஞ்சி,
யாண்ட பெருமா னடியார்க ளன்னை யுண்ட வுணவுகரு,
மகவு முண்ணல்போ லெவ்வை யுண்ட வெலாமுண்டு, நீ யுண்ட
மகிழ்வோ டிருந்தனர்நீ புனைந்த மலரும் புனைந்தென்றான்.

(இ - ள்.) மீண்டு - அவ்விடத்தினின்று திரும்பிவந்து—நந்தி - வசவண்ணன்—அல்லமனர் - அல்லமனது—மென் - மிருதுவாகிய—பூ - அழகிய—கமலவடி - தாமரைமலர்போன்றவடிகளை—இறைஞ்சி - வணங்கி—ஆண்ட - எம்மையடிமைகொண்ட—பெருமானடியார்கள் - சிவனடியார்கள்—அன்னையுண்ட - தாயுண்ட—உணவு - உண்டியை—கரு - கருவாக—நின்று - பொருந்திய—மகவு - சிசு—உண்ணல்போல் - உண்பதுபோல—எவ்வையுண்ட - தேவரீருண்ட—எலாமுண்டு - உணவனைத்தையுமுண்டு—நீ புனைந்த - நீசூடிய—மலரும் புனைந்து - புஷ்பங்களையுஞ்சூடிக்கொண்டு—பூண்டமகிழ்வோடு - நீபூண்டசந்தோஷத்தோடு—இருந்தனர் - இருந்தார்கள்—என்றான் - என்றுசொல்லினன். எ - று. கமலமலர்க்கமலமென்றது ஆகுபெயர். கருப்பமுடையாளுண்டவுணவு அக்கருவுக்குமாதல்போலத் தேவரீருக்கினியந்தவுணவுமுதலியவை தேவரீரடியார்களுக்கினியத்ததாகக் கண்டனனென்றானென்க. மகவுமென்பதிலும்மை இறந்ததுதழீஇயவெச்சவும்மை. எலாமென்பதிடைக்குறை. தாயுண்டவைக் கருவுமுண்டதற்கொப்பிட்டால் இஃதோப்பணி. (௬௨)

மாறன் அடித்த வடிபட்ட மன்னு முயிரின் றிறமெல்லா
மீறில் புகழ்க் கணவசவ னிட்ட வடிசி லுண்டுபசி
யாறி யிருந்த வாதலினு லல்லமன்பூ ரணனென்னக்
கூறு மொழிமெய் மெய்யென்று கூறி யுலகங் களித்ததால்.

(இ - ள்.) மாறன் - பாண்டியன்—அடித்தவடி - அடித்தவடியை—பட்ட - தாங்கிய—மன்னும் - நிலைபெற்ற—உயிரின் திறம் - உயிர்களின்றிரளைபோல—ஈறில்புகழ் - முடிவில்லாதபுகழை—கணங்கள் - கணங்

மைகவுடைய—வசவனிட்ட - வசவண்ணனல்லமனுக்கிட்ட—அடிசில் - உணவை—உண்டு - புசித்து—எல்லாம் - அடியார்கூட்டமனைத்தும்—பசியாறியிருந்தவாதலினால் - பசிதணிந்திருந்தபடியால்—அல்லமன் - அல்லமதேவன்—பூரணனென்ன - பரிபூரணனென்று—கூறுமொழி - சொல்லுகின்றவேதமொழி—மெய்மெய்யென்று - சத்தியஞ்சத்தியமென்று—கூறி - சொல்லி—உலகங்களித்தது - உலகங்களிப்புற்றது. எ - று. ஆல் - அசை. சான்றோரெனப்படினும் உலகமெனப் பொதுப்படக் கூறலால் களித்ததெனவஃறிணை யொன்றன்பாலாக்கினார். அன்று பிட்டுக்கு மண்சுமந்தபோது பாண்டியன் சிவனையடித்தவடி எல்லாவுயிர்களுக்குந் தாங்கியதுபோன்று, இன்று அல்லமனுக்கிட்டவுணவு எல்லாவடியார்களுக்குமாயினதால் அல்லமனைப் பூரணனென்றற்குயாதுமுரண்? என்பதுகருத்து. மெய்மெய்யெனல் அடுக்கு. (௬௩)

இவ்வா றருந்தி யமைதிபெறு மெங்கள் பரம யோகியர
ன், றெவ்வா கியவைம் புலன்வென்ற திறல்கூர் வசவன் றனை
மகிழ்ந்து, சைவா கமமு நான்மறையுஞ் சாற்றும் பொருளை யுண
ர்த்துதற்குச், செவ்வாய் மலரத் திருவுள்ளஞ் செய்து தனிவீற்
றிருந்தனனால்.

(இ - ள்) இவ்வாறருந்தி - இவ்வாறுணவுண்டு—அமைதிபெறும் - சும்மாவிருந்த—எங்கள்பரமயோகிதான் - எங்கள்பரமயோகியாகியவல்லமன்—தெவ்வாகிய - சத்துருக்களாகிய—ஐம்புலன்வென்ற - ஐம்புலன்களையுஞ்செயித்த—திறல்கூர் - வலிமிகுந்த—வசவன்றனை - அல்லமனைநோக்கி—மகிழ்ந்து - சந்தோஷித்து—சைவாகமமும் - சைவாகமங்களும்—நான்மறையும் - நான்குவேதங்களும்—சாற்றும்பொருளை - பிரிதிவாதிக்கும் பரம்பொருளை—உணர்த்துதற்கு - தெரிவித்தற்கு—செவ்வாய்மலர - செவ்விதாகவாய்திறக்க—திருவுள்ளஞ்செய்து - நினைத்து—தனிவீற்றிருந்தனன் - தனித்திருந்தனன். எ - று. ஆல் - அசை. வேதாகமமெனப் பேதமுறினும் எடுப்பதுமுடிப்பது மோர்பொருளேயாதலால் சைவாகமமு நான்மறையுஞ் சாற்றும்பொருளை யென்றார். தானேயொன்றையுபதேசியாது வேதாகமப்பொருளைத் துணிதல், துணிபுநவிற்சியணி. (௬௪)

ஆரோகணகதி - முற்றிற்று.

ஆக் - கதி - ௨௰ - ௩ - திருவிருத்தம் - ௲௰.

இருபத்துநான்காவது

மனோலயகதி.

வேறு.

மயங்குத லின்றி மனோலய மெய்திற்
சயந்தரு முத்தி தலைப்படு மென்றார்
நயந்தரு மல்லமை நாதன் விளங்க
வியம்பிய வண்ண மியம்புது மன்றே.

(இ-ள்.) மயங்குதலின்றி - மயங்காமல்—மனோலயமெய்தில் - மனோநாசமடைந்தால்—சயந்தரும் - வெற்றிதரத்தக்க—முத்திதலைப்படுமென்று - முத்திகிடைக்குமென்று—நயந்தரும் - நிரதிசயானந்தவாழ்வைத் தரத்தக்க—அல்லமநாதன் - அல்லமதேவன்—விளங்க - நன்குவிளங்குமாறு—இயம்பியவண்ணம் - போதித்தவழியே—இயம்புதும் - யாம்சொல்லுதும். ஏ - று. அன்று - ஏ - அசைகள். மயங்குதலின்றிமனோலயமெய்தலாவது; உபாதானம் உபாதேயமாகாவண்ணம் காட்சிப்பொருள் கருதப்பொருள்களைத் தக்கவிசாரத்தாற்றெளியில் தனக்கெனச்சொரூபமொன்றின்றியகலும், அகறலே மனோலயமென்க. சயந்தருதலாவது; சுசாதிகமுதலிய மூன்றையும் வென்று தனித்தரசாங்கஞ்செய்தலை. பிராணபந்தனஞ்செய்தலாலாய மனோலயமன்றெனக்காட்ட மயங்குதலின்றியென்றார், அல்லமதேவைத்தம்பயன் நிரதிசயானந்தமன்றி வேறின்மையின் நயந்தருமென அடைகொடுக்கப்பட்டது. விளங்கவெனலை இயம்பியவென்பதோடு முடிக்க. (க)

பத்தர்க டங்கள் பசிக்குறு மையன்
றத்துவ நல்கு கருத்தொடு தங்க
வத்தலை யன்பொ டகங்குழை கின்ற
வித்தக நந்தி விளம்புவ னன்றே.

(இ-ள்.) பத்தர்கடங்கள் - அடியார்களுடைய—பசிக்கு - பசிதணிதற்கு—உறும் - தாவண்ட—ஐயன் - அல்லமதேவன்—தத்துவம் - மெய்

புணர்வினிலையை—நல்குகருத்தொடு - வசவண்ணனுக் கநுக்கிரகிக்கவேண்டுமென்னுங் கருத்தொடு—தங்க - இருக்க—அத்தலை - அவ்விடத்தில்—அன்பொடகங்குழைகின்ற - மிக்கவன்போடுமனநெக்குருகுகின்ற—வித்தகநந்தி - விவேகமுள்ளவசவண்ணன்—விளம்புவன் - சொல்லுவன். எ - று. அன்று - ஏ - அசைகள். தன்பசிக்கன்றெனக்காட்டப்பத்தர்கடங்கள் பசிக்குறுமையனெனவும், உண்மைவடிவமாக்குதலைத் தத்துவநல்குமெனவுங் கூறினரென்க. தத்துவம் உண்மை. (உ)

விருப்பு வெறுப்புரு வாம்விட யத்தோ
டிருக்கு மயற்சக மென்பதி லாமற்
பரப்பிர மத்தியல் பார்ப்ப தெனக்குத்
தெரித்தரு ளென்றுரை செய்து துதித்தான்.

(இ-ள்.) விருப்புவெறுப்புருவாம் - விருப்புவெறுப்பேவடிவாயுள்ள—விடயத்தோடிருக்கும் - விடயத்தோடுகூடிநிற்கின்ற—மயல் - பிராந்திரூபமாகிய—சகமென்பது - சகமெனப்படுவது—இலாமல் - காணப்படுதலின்றி—பரப்பிரமத்து - பரப்பிரமத்தின்—இயல் - உண்மைநிலையை—பார்ப்பது - தெரிசிப்பதாகியநிஷ்டையை—எனக்குத்தெரித்தருளென்று - எனக்குத்தெரிவிக்கவேண்டுமென்று—உரைசெய்து - சொல்லி—துதித்தான் - துதித்தனன். எ - று. விருப்புவெறுப்புக் குடன்படாநிற்றசத்தப்பிசாதிவிடயமும் அவ்விடயமன்றிச்சகமும் இல்லாதிருக்க அச்சகத்தை யோர் முதலாகவுஞ் சுயம்பாகவுங்கொண்டு அநுதினத்தியத்தவன் கற்பித்தல் தனதுமருட்சியாலாதலின் மயற்சகமெனவும், இதுமித்தையாகக்காணும் மெய்யுணர்வைக் காண்டல் கூடாமையின் அச்சகமென்பதிலாமற் "பரப்பிரமத்தியல்பார்ப்பதெனக்குத் தெரித்தரு"ளெனவுங் கூறினரென்க. செகத்தினதுண்மைநிலையை விளக்கலின் மெய்ம்மை நவிற்சியணி. (௩)

அன்ன துமார்வ மடைந்தரு ணந்தி
மன்னுல கோர்தனை மாறுபு ஞானக்
கண்ணுறு மாறு கடாவினை னென்று
புண்ணிய னோடு புகன்றிடு கின்றான்.

(இ-ள்.) அன்னதும் - அவ்வண்ணம்—ஆர்வமடைந்து - களிப்புற்று—அருணந்தி - அருளையுடையவசவண்ணன்—மன்னுலகு - பிருதிவண்டமாகியவுலகென்னும்—ஓர்தனை - ஒப்பற்றபந்தத்தினின்றும்—மாறுபு -

சிக்கி—ஞானக்கண்ணுமாறு - ஞானதிருட்டியடைவான் வேண்டி—கடாவினனென்று - வினவினனென்றுணர்ந்து —புண்ணியனேறு - புண்ணியமூர்த்தியாகியயசவண்ணரேறு—புகன்றிடுகின்றான் - சொல்லுகின்றான். எ - று. எல்லாந்தனகருப்பிறவிகடோறுமாறும் யாதிலும், உலகமுண்டென்னுஞ் சித்தப்பிராந்தி யகலாக்காறும் எத்தனிப்பினேதக்கிடமாதலினாலும், இதனினும் பந்தமேலொன்றின்மையானும், மன்னுமல கோரத்தினையென்றார். மன்னுமதெனல் பிருதிவண்டமுதலாகக் காணப்பட்ட வெண்ணிறந்த வண்டகோடிகளெனினு மமையும். (௪)

யாவென்ன தென்ப திருந்திடு காறு
ஞான முறுனது நண்ணில துயிர்
முனிலை யாத சகந்திகழ் திற்கு
தின மிலாத சிவந்திக ழாதே.

(இ - ள்.) யாவென்னதென்பது - யாவென்னதென்னுமகமமதை—இருந்திடுகாறும்-இருக்குமளவும் —ஞானமுறுன்-ஞானமடையான்—அதுநண்ணிலதுயின் - அந்தஞானத்தையடையானுயின்—நாலிலையாது - நானேர்முதலாகநிலைபுறுத—சகந்திகழ்கிற்கும் - சகங்காணப்படும்—(இதனுல்) தினமிலாத - மாசற்ற—சிவந்திகழாது - சிவம்விளங்காது. எ - று. ஏ - அசை. யாவென்னதென்பது; யாவென்னதெனக்கோட்டுமையாதலாறை. யாவென்னதென்பது தொகைபொருமை, இங்ஙனமாகப் பொருள் கோடலைமறந்து யானுடை தற்போதங்கெடவேண்டுமெனின்; ஞானமுறுவதுயாது? சகந்திகழ்வதும் சிவந்திகழாதும் யாருக்கு? என்னுங்கடாவுக்கு விடையின்றிப்போம். ஆதலின்வழு. தானெனல் இங்கேசகத்தைச்சுட்டிநிற்றலால் சுட்டுப்பெயராக்குக. யாவெனல், சோபாதிகமுமன்று நிருபாதிகமுமன்று. சோபாதிகம்பற்றி நிருபாதிகம்வந்தமையானும் யாவெனற்குவிவ்விரண்டுங் கற்பனையாதலானும், இவ்விபரீதமுன்னர்தொலையின் எனதென்னுமமதை தொலைதற்குச் சற்றும் பலவேண்டுவதின்று, ஆதலின்யாவென்னதென்பதை முன்னும் பின்னுமாகக் கூறினர். இங்ஙனமியாதார்யானுகூறினுமென்பயன். பொருத்தாதென்க. (௫)

கறங்கெனு மாறுழல் கின்ற கருத்துப்
பிறந்திற வாத பெரும்பிர மத்தி
லிறந்திடில் யாவென தென்னு மகந்தை
மறைந்திடு மன்றி மறைந்திடு மோதான்.

(இ - ள்.) கறங்கெனுமாறு - காற்றாடியென்றுசொல்லும்படி—உழல்கின்ற - விடாதலைகின்ற—கருத்து - மனது—பிறந்திறவாத - உதித்தழியாத—பெரும்பிரமத்தில் - பெரிதாகியவொப்பற்றசைதன்யத்தில்—இறந்திடில் - நசிக்கில்—யாவெனதென்னுமகந்தை - யாவெனதென்னுமகந்தையானது—மறைந்திடும் - மழுங்கிப்போம்—அன்றி - இம்முறையாலன்றி—மறைந்திடுமோ - வேறொன்றான்மழுங்கிப்போமோ. எ - று. தான் - அசை. மறைந்திடுமோவென்பதி லோகாரம் எதிர்மறை. "ஆறைதவுலகமெலாந்தனதுசோதி" என்பதைமறந்தமறதியே மனமெனப்படும். அம்மனதிற்குத் தத்தெரிசனமின்மையால் தனதுபிரதிபலனமாகியசகத்தை சத்தெனக்காணப்படும். காணப்படில், தற்பிரீதியயலாகக்காணப்படும். காணுங்காறும், நித்தியநிருத்திக்கிடமின்மையின் கறங்கெனுமாறுழல்கின்றகருத்தெனவும், அக்கருத்து அந்தர்முகத்துக்கியையுங்கால் அச்சைதன்யத்தையன்றித் தானேர்முதலன்றாகமுடிதலைப் பெரும்பிரமத்திலிறந்திடிலெனவும், அங்ஙனமிறக்கு மதுவ்டானயேலீட்டில் யாவெனதென்னுஞ்சோபாதிக மநுபவனுமாகக் கரையுமாதலின் யாவெனதென்னுமகந்தை மறைந்திடுமெனவும், இங்ஙனமழுங்கல் வேறோர்நெறியாலன்றாதலின் அன்றிமறைந்திடுமோ வெனவுங் கூறினர். வேறோர்நெறியாவது; சரியை, கிரியை, யோகநெறித்தாச்சேறலே. (௬)

யானிது செய்வ னெனக்கிது செய்வ
ரேனைய ரென்ன விருந்த கருத்தான்
மேனிகழ் முத்தி விரும்ப லிருட்டாற்
பானுவை மேவுறு பற்றை நிகர்க்கும்.

(இ - ள்.) யானிதுசெய்வல் - யானிதனைச்செய்வன்—ஏனையர் - இவ்வுதவிபெற்றோர் —எனக்கிதுசெய்வரென்ன - எனக்கின்னவுதவிசெய்வார்களென்று—இருந்த - எண்ணியிருந்த—கருத்தால்-எண்ணத்தால்—மேனிகழ் - இனிப்பூர்வபட்சப்படுத்தற்கிடமின்றி மேலாகவிளங்கும்—முத்திவிரும்பல் - மோட்சத்தையடையவிரும்புதல்—இருட்டால் - துணைக்கருவியாகக்கொண்டவிருட்டினுல் —பானுவை - சூரியனை—மேவுறுபற்றை - அடையவேண்டுமென்னுமாசையை—நிகர்க்கும் - ஒக்கும். எ - று. எனவே, இக்கருத்திருந்து முத்திவேண்டல் பானுவால் இருட்டைமேவுறும்பற்றைநிகர்க்கு மெனக்குறித்ததால் தற்குறிப்பணி. இருட்டாற்பானுவை மேவுதலெங்கனுமின்மையின் இல்பொருளுவமையணி. பிறருதவிக்கவாவுங்கருத்து இருள். அக்கருத்தால்மறுமையிலடையுமுத்தி பானு

எனக்கொள்க. இருட்டாற்பாலுணவையடைதற்கியையின் பிராருதவியவா வுங்கருத்தால் முத்தியடைதற்கியையு மென்க. (எ)

இருவினை தாம்வரும் யானென லாலவ்
விருவினை யால்வரு மின்பொடு துன்ப
மிருவினை யானென லின்றெனி லில்லை
யிருவினை யில்லெனி லில்லை பிறப்பே.

(இ - ள்.) யானெனலால் - அல்லதையானெனக்கோடலால்—இருவினை தாம்வரும் - நல்வினை தீவினைகள்தாமே வந்தவினையும்—அவ்வினையால் - மெய்யெனக்கொண்ட அவ்வினைகளால் —வருமின்பொடுதுன்பம் - சுகதுக்கங்கள்தாமேவந்தமையும்—யானெனலின்றெனில் - சைதன்யத்தையன்றி யானெனக்கோடற்கிடமின்றெனின்—இருவினையில்லை - இருவினைகள் வினைதற்கிடமில்லை —இருவினையில்லெனில் - இருவினைகள் வினைதற்கிடமில்லை யென்றேற்பின்—இல்லைபிறப்பு - பிறவிகளில்லையாம். எ - று. ஏ - அசை. இல்லையென்னுமிரண்டிடல் ஆமென்னு மாக்கவினைக டொக்குகின்றன. முதலிரண்டடியும் அத்தியாரோபமெனவும், ஏனைய விரண்டடியும் அபவாதமெனவுங்கொள்க. யானலதை யானெனக்கோடல் பிறவிசம்பந்தம். தவிர்தல் விடுதிசம்பந்தம். எனவே, சலட்சண விலட்சண விலக்கணமாகிப்பது யானெனக்குறிக்கப்பெற்றும். இல்லையென்னும் மூன்றும் பன்மைக்குறிப்பு வினைமுற்றாதலின், இவற்றிற்கு வினைமுதல் களைப் பன்மைப்பெயராக்குக. (அ)

மனத்தை யடக்க மனத்துணை யாரும்
பினைத்துணை யின்றது பெற்றன னையிற்
றனிச்சிவ மேயொரு தானென வாழ்வ
னினைத்து மறந்து நிலத்துழ லானே.

(இ - ள்.) மனத்தையடக்க - அசுத்தமனத்தைக்கெடுக்க—மனத்துணையாரும் - சுத்தமனத்துணைக்கருவியாரும்—பினைத்துணையின்று - வேறோர் துணைக்கருவியின்று—அதுபெற்றனனையின் - அதனையுமறியாதப்பெறு வானாயின்—தனிச்சிவமே - ஒப்பற்றசிவமே—ஒருதானென - ஒருதானாக—வாழ்வன் - வாழ்ந்துகொண்டிருப்பன்— (இவ்வாறன்றியும்) நினைத்துமறந்து - பிறப்பிறப்புற்று —நிலத்துழலான் - பூமியிற்றிரிந்து கொண்டிரான், எ - று. ஏ - அசை. அசுத்தசங்கற்பத்தைச் சுத்த

சங்கற்பத்தாலன்றிமாய்த்தலொண்ணாது. அஃதெங்ஙனமெனின், இரிபுடியாகப்பரிணமித்ததுயாதோ வதனைவிசாரத்தாற்கண்டுதெளிதல் சுத்தமனமெனவும், அங்ஙனந்தெளியாது திரிபுடியைச்சுபாவமெனக்கொண்டுழலல் அசுத்தமனமெனவுங்கோடற்கியைதலினென்க. அங்ஙனந்தெளிவுருவிடத்துச் சிவந்தானாகவும், தெளிவுற்றவிடத்துப் பிறவிகட்குத் தானிடமாகவு மெய்தலொன்றாமையின் வாழ்வனெனவும், உழலானெனவுங் கூறினர். இவ்வாறு நயங்கருதியன்றியுரைகொள்ளின் ஞாயஞ், சோதனை பொருந்தங்கட்குமாறாம். அந்தந்தப்பிறவியையமாதல் நினைத்தெனவும், உழலல் மறந்தெனவுங்குறிப்பித்தது செனனமரணங்களைக்காட்டெனமெடுத்துழலல், இன்னதிலமென்றெவர்க்குங் கணிக்கக்கூடாமையின் பொதுப்படநிலமென்றார். மேல்மேலாகவுழலலாவது; உயர்திணையாகவேனும், அஃறிணையாகவேனும் விடாதுசெனித்திறத்தலே. (௯)

வாரண மாகு மனத்தை யடக்கிற்
காரண மாயை கழிந்தொழி யாது
பூரண மாகிய போத மடைந்திட்
டாரண மோது மரும்பொரு ளாவான்.

(இ - ள்.) வாரணமாகும் - மதயானைபோலடங்காததாகும் —மனத்தையடக்கில் - மனத்தைத்தன்வயப்படுத்தில்—காரணமாயை - எல்லாற்றிற்கு முதற்கருவியாகின்றமாயையென்பதை —கழிந்து - வேறோவிகழிந்து—ஒழியாது - ஒருகாலத்தும்விட்டுநீங்காது —பூரணமாகிய - பரிபூரணமாகிநிறைந்துள்ள —போதமடைந்திட்டு - ஞானத்தையடைந்து—ஆரணமோதும் - வேதங்களாற்சொல்லப்பட்ட—அரும்பொருளாவான் - அரியபரம்பொருளாவன். எ - று. மனத்தைவாரணமென்றது; மடமேலீபெற்றியும், காரியமாயையென்றது காரணமாயையென்றது; அறிவுக்கயனுண்டெனல் பற்றியும், பூரணமாகியபோதமென்றது; போலிபோதங்களை மறுத்தல்பற்றியும், ஆரணமோது மரும்பொருளென்றது; யுத்தி யநுபவத்திற்கு மாறாது பற்றியுமென்க. கழிதலாவது; காரணமாயையானது தன்னையன்றி யின்றெனவும், தானன்றெனவு முள்ளவாறு கோடலே. போதமாவ தென்றது போதமடைந்திட்டெனல், பிராந்தி தொலைத்ததென்க. அரும்பொருளாதல்; தானேதானாதலே. அன்றேல் முரணும். ஒருபொருளே விபரீதமாகவுமன்றாகவ முடிந்தமையினென்க. வாரணமாகு மனத்தையடக்கல்; இந்திரியமின்றிச்செய்தலே. அடக்கிலாவா ரெனமுடிக்க. (௧௦)

வேறு.

விரிந்த நெஞ்சங் கருவியாம் விடய முணர விரியாம
லொருங்கு நெஞ்சங் கருவியாந் தன்னை யுணர வொருங்காமல்
விரிந்த நெஞ்ச முடையவனை விடாது பிறவி யென்றுணர்க
வொருங்கு நெஞ்ச முடையானை யுறாது பிறப்பென் றுணர்கவே.

(இ - ள்.) விடயமுணர - விடயமுணர்தற்கு—விரிந்தநெஞ்சம் - பலவாகச்சிதைந்துள்ளமனம்—கருவியாம் - காரணமாகும்—தன்னையுணர - தன்னையுள்ளவாறுணர்தற்கு—விரியாமல் - பலவாறாகச்சிதையாமல்—ஒருங்குநெஞ்சம் - ஒன்றுபட்டமனம்—கருவியாம் - காரணமாகும்—ஒருங்காமல் - ஒன்றுபடாமல்—விரிந்தநெஞ்சம் - பரந்தமனத்தை—உடையவனை - உடையபுருடனை—விடாதுபிறவியென்றுணர்க - பிறவியவனைவிட்டு நீங்காதென்றுணர்க—ஒருங்குநெஞ்சமுடையானை - ஒன்றுபட்டமனமுடையோனை—உறாதுபிறப்பென்றுணர்க - பிறவிவந்துறாதென்றுணர்க. எ - று. ஏ - அசை. இரியமுன்னளவு மனமென வுண்டு. அதின் விரிவு குவிவை மனதின்மேலேற்றல் மயக்கவணி. மேகமோடுதலைச் சந்திரனோடுதலாகக் காண்டல்போலுமென்க. (௧௧)

அந்தக் கரண சுத்தியே யறிவை யறிதற் சாதனமவ்
வந்தக் கரண சுத்திதனக் கேதுவுங் கரும மாரணங்க
ளந்தக் கரண சுத்திதா னவ்வ வாவற் றிடுதலே
யந்தக் கரண சுத்தியினு லடைவன் பிண்டப் பெயரன்றே.

(இ - ள்.) அந்தக்கரணசுத்தியே - மனசுத்தியே—அறிவையறிதற்சாதனம் - ஆன்மாவை யுள்ளவாறுணர்தற்குச்சாதனமாம்—அவ்வந்தக்கரணசுத்திதனக்கு - அவ்வந்தக்கரணஞ்சுத்தியாதற்கு—ஆரணங்கள் - வேதங்கள்—கருமமறையும் - கருமஞ்செய்யச்சொல்லும்—அந்தக்கரணசுத்திதானவது - அந்தக்கரணசுத்தியென்பது—அவாவற்றிடுதல் - ஆசையற்றிருத்தலாம்—அந்தக்கரணசுத்தியினால் - இங்ஙனமவாவற்றிருத்தலால்—அடைவன் - தப்பாதடைவன்—பிண்டப்பெயர் - பிண்டப்பெயனா லியற்கையாகவுடையபிரமத்தை. எ - று. அன்று, ஏ - அசைகள். திரிதில் "கன்றுமுறை விரும்பிறுகென்னுங் கலியிறும், அவ்வவாவறுதற்குமுறை; கைவல்லியத் மகங்கள் செய்யென்னுங் கவியினுங் காண்க. "மனைமறங்கள்செய் இதனை வேதங் கருமகாண்ட

த்திற பிரதிவாதிப்பதினுல் அவையுங்கரும மாரணங்களென்றார். பிண்டப் பெயனெனல் பிரமத்திற்செய்தியது காரணவிகுதி. அவாவற்றிடுதலே யென்னுந் தேற்றேகாரமெய்தியது; அந்தக்கரணசுத்தியெனல் வேறென் றுலன்றெனற்கு. அறிவையன்றி யின்மையின் அறிவை யான்மா வென்றும். (௧௨)

ஆசை யறுதல் வீட்டின்ப நேரே யடையாக் காரணமா
மாசை யறுத லலதில்லை பலநூ லனைத்து மாய்ந்திடினு
மாசை யறுவோன் சிவனாத லின்னண மெனநன் றறிந்திருந்து
மாசை யறுத லென்கொண்டோ வந்தோ மனித ரறியேமே.

(இ - ள்.) ஆசையறுதல் - அவாவொழிதல்—வீட்டின்பம் - பேரின்பத்தை—நேரேயடையாக்காரணமாம் - முட்டின்றிநேரேயடைதற்குக் காரணமாம்—ஆசையறுதலலது - அவாநீக்கத்தாலன்றி—பலநூலனைத்தும் - பலவாகவிரிந்துள்ளசகலகலைகளையும்—ஆய்ந்திடினும் - ஆராய்ந்து தெளியினும்—இல்லை - பயனில்லை—ஆசையறுவோன் - அவாநீக்கமுடையோன்—சிவனாதல் - சிவமயமாதல்—இன்னணமென - இஃதிவ்வென்று—நன்றறிந்திருந்தும் - ஐயந்திரிபறத்தெரிந்திருந்தும்—ஆசையறுதல் - ஆசையிழுலல்—என்கொண்டோ - என்னவுறுதிகொண்டோ—மனிதர் - மனிதர்கள்—அந்தோ - ஐயோ—அறியேம் - தெரியேம். எ - று. ஏ - அசை. மனிதர் நன்றறிந்திருந்தும் ஆசையறுதல் என்கொண்டோ அந்தோ வறியேமெனக் கூட்டிப்பொருள்கொள்க. நன்றறிந்திருந்து மென்பதிலும்மை இழிவுசிறப்பு. (௧௩)

ஆசு தீர்ந்த மனத்தினிடை யன்றி யுணர்வு தோன்றாது
மாசு தீர்ந்த வாடியிடை யன்றி வதனந் தோன்றுமோ
பாச நீங்கு பரஞ்சுடரை நினைக்கு நினைவாற் பற்றுமனங்
காச நீங்கு கண்போலத் தன்னைக் காண விளங்குமால்.

(இ - ள்.) ஆசுதீர்ந்த - குற்றமற்ற—மனத்தினிடையன்றி - மனதின் கணன்றி—உணர்வுதோன்றாது - அறிவுதயமாகாது—மாசுதீர்ந்த - களங்கமற்ற—ஆடியிடையன்றி - கண்ணாடியிடத்தல்லது—வதனந்தோன்றுமோ - முகங்காணப்படுமோ—பாசநீங்கு - பாசரகிதமான—பரஞ்சுடரை - பரஞ்சோதியை—நினைக்குநினைவால் - நினைக்கத்தக்கசுத்தநினைவால்—பற்றுமனம் - பற்றற்றவாவியமனம்—காசநீங்குகண்போல - காசமென்னுநோயினின் நீங்கினகண்ணைப்போல—தன்னைக்காண - தன்னை

யுள்ளவாறுதரிசிக்க—வேண்டும் - பிரகாசிக்கும். எ - று. சும் - அசை. அகநிர்த்தமனமாவது; நிஷ்பிரபஞ்சத்திக்குமனமை. பிசைக்குஷ்டையமவ து; பிரவிர்த்திக்கிலையமாறடையுடையசுசீலம. காசமெனல்; கன்மேவம றைக்குமோர்விதமோயை. காசகிம்கதாமிட்டுங் காட்சிகொண்டு மன ணமாகக்காணும். ஒவ்வொருமெலக்குக் கொள்ளும் பிராந்திமகலாவிட்டு த் தரிசியமோர்ந்து மன்னமாகத்தொன்றும், ஆசவிலிக்ஷணப் கூறிஞ ரென்க. (௧௭)

வானமல்லேன் வளியல்லே னழலி னல்லேன் மண்ணல்லேன்
ஞானமல்லேன் வினையல்லே னுடலே னிலனெயன் றெண்ணிநின்று
ஞானமல்லா வொருசிவமே யானே யல்லா மன்றுநா
னின வெல்லா முடையமுடன் பெறுதுயர் முறுநன் மெய்ஞ்ஞானியர்.

(இ - ள்.) வானமல்லேன் - ஆகாயமல்லன் —வளியல்லேன் - காற்று மல்லன் —அழனிரல்லேன் - அக்கினியுமல்லன் —மண்ணல்லேன் - பிருதிவியுமல்லன்—ஞானமல்லேன் - ஞானமுமல்லன் —வினையல்லேன் - இருவினைகளினொன்றுமல்லன்— (ஆதலின்) நானேசிவமென் றெண்ணி நின்றேன் - நானே சிவவடிவமென்றுநிட்டைகொண்டோன் —ஏனையில்லா மாசற்ற —ஒருசிவமேயானவன் - ஒப்பற்றசிவவடிவாகவிளங்குவன்— இவ்வாறன்றுநான் - இவ்வாறறியாதவன் —எனவெல்லாமுடைய - இருவினைத்தொடர்புடையவனாகவுடைய—உடம்பெடுத்துப்பெருந் துக முறுமெஞ்ஞான்றும் - எப்போதுந்துன்பமடைந்திருப்பன். எ - று. தன்னையன்றி ஞானஞ்ஞானமெனவேறுமில்லையாதலும், வினைமுதலியன்றி வினையில்லாமையுமாதலும், எதிர்மறையாக இவையல்லவெனப்பட்டது. இதி விலக்கணி. இவற்றின்றுடன்பாடாக ஐயந்திரிபகன்று தெளிவுபெற்றும் விட்டுச் சிவமெனவு நானென்னவுமின்றித் தானுமிலக்காட்டவும் நானேசிவமென்றும் சிவமேநானென்றுந்தொனிக்கவும் இரண்டு தேற் றொராந்தந்தனதென்க. அல்லவென்றெதிர்மறை முதலா லேகமெனக் கொள்க. நானேயெனப்படுதலைத்தலைநிறுத்தலே. எனவென்றேயென்ன ன்பதை அவனெனப்படுதலுமுடைத்து. இங்கேயென்றதல்; பிரத்யக்ஷ மாகக்கண்டோன்றதல், அன்றேல், பாவனையாகமுடியும். முடியின், துக்கநிவிர்த்திக்குக்காரணமாகுமானந்தத்துக்கு ஞானப்பிரவேசத்துமெய் தும். எய்துவதாற்கொள்ளற்க. இதனைப்பொருந்திமுடிவென்பர். (௧௮)

தன்னைச் சிவமென் றறிந்தவனே யறிந்தான் றன்னை யுள்ள மையாற், தன்னைச் சிவமென் றறியாதானறியா னென்றுந் தன்

ரைமை, தன்னைச் சிவமென் றென்றறிவ னன்றே பாசந் தனை நீப்பன், தன்னைச் சிவமென் றறியாதான் றனக்குப் பிறப்பே துணையாகும்.

(இ - ள்.) தன்னைச்சிவமென்று - தனதெதார்த்தநிலையேசிவமென்று—அறிந்தவனே - அறிந்தான்யாவனேவனோ—உண்மையா - உள்ளவாறு—அறிந்தான்றன்னை - தன்னைத்தானறிந்தவனெனப்படுவான்—தன்னைச்சிவமென்று - தன்னைச்சிவவடிவமென்று —அறியாதான் - அறியாதான்யாவனேவனோ—தன்னுண்மை - தனதெதார்த்தநிலையை—அறியானென்றும் - எப்போதுமறியமாட்டான்—தன்னைச்சிவமென்று - தனதெதார்த்தநிலையைக்கண்டுதானேசிவவடிவமென்று—அறிந்தவன்றே - அறிந்தவக்கணத்திலதானே—பாசந்தனை - இருவினையபாசத்தை—நீப்பன் - நீக்கிவிடுவன் —தன்னைச்சிவமென்று - தன்னைச்சிவவடிவமென்று—அறியாதான்றனக்கு - அறியாதவனுக்கு —பிறப்பேதுணையாகும் - பிறவியேதுணையாகநிற்கும். எ - று. நானெனல்; அறிவு. சிவமெனல்; ஆனந்தம். தன்னையறிவாகவுள்ளவாறுகண்டுழி யானந்தம்வேறன்மை யின் தன்னைச் சிவமென்றறிதலெனவும், தன்னையபாதியாகக்கண்டுழி யானந்தந்தானன்மையின் தன்னைச் சிவமென்றறியாமையெனவும், இவ ற்றிற்கு முறையே பாசங்களனைத்துமகலாமையும் பயனாதலின் பாசந்தனை நீ ப்பனெனவும், அவனுக்குப்பிறப்பே துணையாகுமெனவுங் கூறினாரென்க. மந்திரங்கூறுமெல்லாப்பயன்களுங்கைகூடுமன்றேல் தவம், விரதம், யாகமுதலியவற்றாலன்றி மெய்ந் வொன்றுமெனவிதிப்பதற்கேதென் னை? அங்ஙனம்விதித்தவழிச்செய்தெய்துவும் தானாயதனுவுடலாலன்றி யனுபவித்த லொன்றுமென்பானேன்? அறிவே யானந்தமாகாதுழி லயக்கியமென்னல்பொருந்தாமையின் மறுத்தலென்னுமதம். (௧௯)

தன்னைப் பெத மாக்காண்கை சகத்திற் காணப் பட்டதாந் தன்னைப் பேத மறச்சிவமென் றறிவோன் ஞானி தானொருவ னென்னக் கருதி யறையு நீயாறு பொன்னை யகத்தானிற் தன்னைப் புகறுங் கண்டனைச் சாற்றன் மறையின் கருத்தன்றே.

(இ - ள்.) தன்னை - அறிவாகியதன்னை—பேதமாக்காண்கை - உபா திவடிவாக்காண்டல்—சகத்தில் - சகத்தைப்போல—காணப்பட்டதாம் - திரிசியமெனப்பட்டதாம்—தன்னை - அறிவை—பேதமற - உபாதியென் றுன்றுப்பேதநீங்க—சிவமென்றறிவோன் - அறிவேயானந்தமென்றுணர்

வோன்—ஞானிதானொருவனென்ன - ஞானியொருவனேயென்று—க ருதி - நினைந்து—மறை - வேதங்கள்—அறியாதுயென்ன - அறியாது ரைக்கும்—அத்துவிதத்தன்னைப்புகலும்- அத்துவிதத்தையே பிரிதிவாதிக் யென்று—அத்துவிதத்தன்னைப்புகலும்- அத்துவிதத்தையே பிரிதிவாதிக் கும்— (இதனையறியார்) கண்டதெனச்சாற்றல் - கண்டபடியைக்கியதிலே யைக்கூறுதல்—மறையின்கருத்தன்று - வேதத்தின்கருத்தன்று. எ - று. ஏ - அசை. தன்னை யுடலாகக்காண்கை திரிசியமெனற்குமாறென்னை? இன்றேல், ஞெப்திப்பிரியம்வேறுரும். வேறுமின், பிறவி கடத்தற்கேதின் று. ஆதலின், "தன்னைப்பேதமறச்சிவமென்றறிவோன் ஞானிதானொரு வ" னென்றார். இங்கேமறையென்பது; சாமவேதமகாவாக்யத்தையென வும், அறியாதுயென்பது; தத்துவமசியெனற்குப் பதப்பொருளெனவும், அத்துவிதமெனல்; லட்சியார்த்தத்தையேவுக்கொள்க. கண்டதெனச் சாற்றல்; உபாதிசகிதமெனவும், உபாதிரகிதமெனவும், இவைபரம்பொ ருளுக்குரியனவெனவுந், தனதுதிருஷ்டிபேதங்களெனவுஞ் சற்குணர்த் தற் கியைபினரல்லராய் முன்பின்முரணுறத் தம்போலிகள் கனிக்கக் கண்டபடி பிதற்றலையென்க. எனவே, சரியை, கிரியை, யோகநெறித்தா லொரு பரம்பொருளையுடையப் பேதஞ்சொல்லினு மறு முத்திநெறிக் குக் கொண்டெருந்திரமாதலின் அதுமறையின் கருத்தெனப்பெற்றும். சகத்திலென்பது ஐந்தாம் வேற்றுமை யுவமைப்பொருளில் வந்தது. (கஎ)

ஆய்தா கியநெஞ் சுடையார்க்குத் தாமே சிவமாத் தோ ன்றுமாற், றீதா கியநெஞ் சுடையார்க்குத் தெளிய வபேத மிகலி ன்றி, வேதா கமங்கள் விளம்பிடினும் விளங்கா தென்றும் வே றென்னும், வாதா லழிவ ரவர்மாயை மயக்க மயங்கு மதியினர்.

(இ - ள்) ஆய்தாகிய - ஆசகடந்த—நெஞ்சுடையார்க்கு - மனமு டையார்க்கு—தாமேசிவமாத்தோன்றும் - தாமேசிவமாகவிளங்குவர்—தீ தாகிய - மலசகிதமான—நெஞ்சுடையார்க்கு - மனமுடையவர்களுக்கு— தெளிய - தெளிவுபெற—அபேதம் - அபேதநிலையை—இகலின்றி - சுரு தியாதிகட்குமாறின்றி—வேதாகமங்கள் - வேதாகமமுதலிய பிரபலசுரு திகள்—விளம்பிடினும் - விடாதுபோதிக்கினும்—விளங்காதென்றும் - அ பக்குவிசட்கென்றும்விளங்காது—வேறென்னும்வாதாலழிவர் - பேதவா தமேபயனுறக்கொண்டவ்வாதத்தாற் பயனின்றியழிவர்—அவர் - அவர்க ளெனில்—மாயைமயக்கம் - மாயாமயக்கத்தில்—மயங்கும் - எல்லோரா ளுதவியங்கும்—மதியினர் - மதியையுடையவர்கள். எ - று. ஆய்தாகிய தீதாகிய என்றவடைகளால் நெஞ்சை மலரகிதமென்றும், மலசகித

மென்றுங் கூறினும். இந்தச்சுத்ராசுத்தம் நெஞ்சுடையாரைச்சார்தலால், "இனைவினைமுதலொன்றுசெறிய" மென்றவிதிகண்டாம். உடையார்க் கென் நான்காம்வேற்றுமை கொடுத்தமையானும் தோன்றுமெனல் அம்மி னைப்பன்மையில் வருமாதலானுந், தாமேயென்பதை அவர்களெஞ்சங் களே யெனப்பொருள்கொள்ளின் வழுவக்கிடமின்றெனக்காண்க. அபே தமென்றதனுல், வேறென்னும் வாதாலென்பதைப் பேதவாதமென்றுணா கொண்டாம். பேதவாதம் ஆறெனலையும், அபேதவாதம் ஐந்தெனலையும் வேதாந்தசூடாமணியில் (கஉகூ-கஉஎ) வது கவிகளிற்காணுக. சகசிவப ரங் தனக்கெனச் சொரூபமொன்றின்மையின் அதனையறியாது அநாதிநித் தியத்வஞ் சாதித்தல் மாயைமயக்கமெனவும், சாதித்தல்மாத்திரமன்றித் தாமே முன்மையாக மயங்கு மதியினராதலால் மயங்குமதியினரெனவுங் கூறினரென்க. ஆய்தாகியவென்னும் பதத்தில் யகரவொற்றுத் தோன் றியது ஆசெதுகை. பேதவாதிகட்குத் தெளியவபேதமிகலின்றி வேதா கமங்கள் விளம்பிடினுஞ் சற்றும் விளங்காதெனவே அருமை நவிற்சியணி.

நெஞ்சஞ் சோகம் பாவனையி னிற்க நிறுத்தி விடயங்க ளஞ்சுந் துறவாத் துறந்தசிவ யோகி யொருவ னடியிணையிற் றஞ்சந் திருமான் முதலமரு ருள்ள மவனைத் துதித்திறைஞ்சா நெஞ்சுந் தவமா முனிவரிலை யெனநான் மறையு மியம்புமால்.

(இ - ள்.) நெஞ்சம் - மனம்—சோகம்பாவனையில் - சோகம்பாவனை யென்னுநிலையில்—நிற்க - சலங்காதநிற்க—நிறுத்தி - நிறுத்திவிட்டு—வி டயங்களஞ்சும் - ஐந்துவிடயங்களையும்—துறவாத்துறந்த - துறவாமற்றுற ந்த—சிவயோகியொருவன் - ஒருசிவயோகியினுடைய—அடியிணையில் - உபயபாதங்களில்—திருமான்முதல் - விஷ்ணுமுதலிய—அமரருள்ளம் - தேவர்களுடையமனம்—தஞ்சம் - ஆனந்தித்திறைசெய்யும்—அவனை - அங்ஙனமாகியசிவயோகியை—துதித்திறைஞ்சாது - துதித்துவணங்கா மல்—எஞ்சும் - மீதியாநின்ற—தவமாமுனிவர் - தவத்தையுடையமகத் தானரிஷிகள்—இலையென - இல்லையென்று—நான்மறையுமியம்பும் - நான்கு வேதங்களுமுறையிடும். எ - று. ஆல் - அசை. சோகம்பாவனை யென்னும் பதம், அவன் இவன் தேவதத்தன் எனப்பொருட்டு அந்தகா லத்தி லவ்விடத்திற் குடும்பியாய்நின்ற வவனும் இந்தகாலத்தி லிவ்விடத் திற் சந்நியாசியாய் நின்ற விவனும் தேவதத்தனொருவனே யெனக்காட்ட நின்று வாச்சியார்த்தத்தையும், தேவதத்தனொருவனே அங்கவ்வேடமாக வும் இங்கிவ்வேடமாகவும் நின்றேனுதலானும், அவனையன்றி அகத்துத்

சுட்டிக்கும் புறத்துச்சுட்டிக்கும் வேறுபொருளின்றுதலானும் அவனே இவன் இவனே அவனென்றயிக்கங்காட்ட லட்சியார்த்தத்தையுந் தந்து வுபசாந்த நிலையதாக்குமென்க. இதையேற்றற் பாலதாகிய வுதாரணஞ் சிறிதுகூறுதும். அதாவது, விழிப்பிற் சகலனெனவும், உறக்கத்திற் கேவலனெனவும் பேர்பெற்றுநின்றோன் ஆன்மாவையன்றி வேறலன். சகலமாநின்ற வவ்வேடமும் கேவலமாகின்ற விவ்வேடமும் ஆன்மாவன்று ஆன்மாவை யன்றியுமின்று. எனவே, ஆன்மாவாகியவேடதாரியைக் காண வேண்டுமென்பதாயிற்று. விடயங்களைத்தும் துறவாமல் துறத்தலாவது; இருவகைப்பற்றும் ஆன்மாவையன்றி யின்றாகவும் அன்றாகவுமுள்ளவாறு கண்டுநிற்றலே. சிவயோகியடியிணைகளில் நஞ்சுந்திருமால்முதலிய ரென்றதனால் சிவயோகிதுஞ்சல் வுபசாந்தவேலையெனவும், வினையோர்துஞ்சல் அதனது லேசமெனவும் பெற்றும். இங்ஙனமன்றேல் யுத்தியநுபவத்துக்கு முரணும். (கக)

என்று கருணை பொழிவிழியெங் கோமா னுண்மை யினிதியம்ப, நின்ற வசவ ராயனுள மழல்சேர் மெழுகி னெக்குருகிச், சென்று குரவ னடிபணிந்தான் சென்ன வசவன் முதலாகத், தன்று சரண ருய்ந்தனம்யா மென்று துதித்துத் தொழுதனரால்.

(இ - ள்.) என்று - இங்ஙனமாக—கருணைபொழி - கிருபாவெள்ளம் பொழிகின்ற—விழி - கண்களையுடைய—எங்கோமான் - எமதுகர்த்தனாகியஅல்லமதேவன்—உண்மை - எதார்த்தநிலையை—இனிதியம்ப - நன்குணர்த்த—நின்ற - அங்குநின்ற—வசவராயனுளம் - வசவண்ணனதுமனம்—அழல்சேர் - நெருப்பிற்பட்ட—மெழுகின் - மெழுகைப்போல—நெக்குருகி - கசிந்து—சென்று - போய்—குரவனடிபணிந்தான் - அல்லமனதுதிருவடிகளில்வணங்கினன்—(பின்னர்) சென்னவசவன்முதலாக - சென்னவசவன்முதலினராக—அன்று - அங்கேநெருங்கிய—சரணர் - அடியார்கள்—உய்ந்தனம்யாமென்று - நாங்கள் துன்பக்கடலினின்று பிழைத்தோமென்று—துதித்துத்தொழுதனர் - துதித்துவணங்கினர். எ - று. ஆல் - அசை. இயம்ப பணிந்தான் தொழுதனர் எனக்கூட்டிப்பொருள்கொள்க. (உ0)

இவ்வா றருளாற றனையுணர்த்தி யிருந்த ஞான வியல்வீர, சைவா சிரிய னல்லமனித் தரையிற் பருவந் தலைசிறப்ப, வுய்வா

னினைந்து தனைநோக்கி யுற்ற வடியார்க் குபதேசஞ், செய்வானியன்ற வடிவொடுசென் றருள்செய் செயல்செய் துலாவினான்.

(இ - ள்.) இவ்வாறு - இவ்வண்ணம்—அருளால் - கிருபையினால்—தனையுணர்த்தி - தனது நிசவடிவைத்தெரிவித்து—இருந்த - எழுந்தருளியிருந்த—ஞானவியல் - ஞானவிலக்கணமமைந்த—வீரசைவாசிரியன் - வீரசைவத்துக்குச் சிரேஷ்டாசிரியனாகிய—அல்லமன் - அல்லமதேவன்—இத்தரையில் - இந்தபூமியில்—பருவந்தலைசிறப்ப - பருவகாலமேலிட—உய்வானினைந்து - பிறவிக்கடலினின் றுய்யும்படிநினைந்து—தனைநோக்கி யுற்ற - தன்னையெதிர்நோக்கிக்காத்துக்கொண்டிருக்கின்ற—அடியார்க்குபதேசஞ்செய்வான் - அடியார்களுக்குபதேசஞ்செய்யவேண்டி—இயன்றவடிவொடு - அதற்கியைந்தவேடத்தோடு—சென்று - போய்—அருள்செய்செயல்செய்து - அநுக்கிரகிக்கத்தகுந்தசெய்கையைச்செய்து—உலாவினான் - எங்குந்திரிந்தனன். எ - று. யாதுந்தன்னையன்றியின்மையின் தனையுணர்த்தியெனவும், பரிபாககாலமேலிடலைக்காட்ட பருவந்தலைசிறப்பவெனவும், எல்லாத்துன்பங்களினின் றுநீங்குதலினும் பிறவித்துன்பத்தினின்று நீங்குதலரிதாதல்பற்றி யுய்வானினைந்தெனவுங் கூறினரென்க. இக்கவியில் உய்வான் செய்வான் என்பவை ஆ செதுவைகள். (உக)

மஹேலயகதி - முற்றிற்று.

ஆக கதி - உரு - இ - திருவிருத்தங்கள், கஙக.

இருபத்தைந்தாவது

மான்மியகதி.

வேறு.

வியனில மேவிய விழுமி யோர்க்கெலாஞ்
செயிரறு மல்லமன் செய்த நன்றியைக்
கயிலையி னுதல்விழிக் கடவு டன்புடை
மயிலிய லொடுசொலு மாறு கூறுவாம்.

(இ - ள்.) வியனிலம் - விசாலம்பொருந்தியபூமியில் — மேவிய - இருக்கின்ற — விழுமியோர்க்கெலாம் - அடியார்களுக்கெல்லாம் — செயிரறும் - மலரகிதமான — அல்லமன்செய்தநன்றியை - அல்லமதேவன்செய்யாமற் செய்தநன்றியை — கயிலையில் - கைலாயத்தெழுந்தருளிய — நுதல்விழிக்கடவுள் - நெற்றிக்கண்ணையுடையபரமசிவன் — தன்புடை - தனதிடது பாகத்திலமர்ந்த — மயிலியலொடு - மயில்போன்றவியலையுடைய உமையவளோடு — சொலுமாறு - சொல்லும்விதத்தை — கூறுவாம் - சொல்லுவாம். எ - று. சிவதொண்டின்மேம்பெற்றி விழுமியோரெனப்பட்டார். மயிலியல் உவமைப்புறத்துப்பிறந்தவன்மொழித்தொகை. சொலுமாறு இடைக்குறை. நுதல்விழிக்கடவுள், காரணவிடுகுறி. (க)

ஆயிடை யருணந்தி யாதி மாதவர்
நேயமோ டமர்வுற நிறுவி யல்லமன்
மாயிரு ஞாலமேன் மானிடர்க் கெலாம்
போயருள் செயுந்தொழில் பூண்டி னானரோ.

(இ - ள்.) ஆயிடை - அவ்விடத்தில் — அருள் - கிருபையையுடைய — நந்தியாதிமாதவர் - வசவண்ணர்முதலியவடியார்கள் — நேயமோடு - பிரமானந்தத்தோடே — அமர்வுற - நித்தியதிருத்திபெற்றிருக்க — நிறுவி - நிறுத்திவிட்டு — அல்லமன் - அல்லமதேவன் — மாயிருஞாலமேல் - பெரிதாகியபூமியின்மேல் — மானிடர்க்கெலாம் - பரிபாகமுள்ளமனிதர்களிடத்தி

லெல்லாம் — போய் - சென்று — அருள்செயுந்தொழில் - அநுக்கிரகிக்கக்கருமத்தினை — பூண்டினான் - விரதமாகக்கொண்டனன். எ - று. அரோ - அசை. அல்லமன் நிறுவி பூண்டினான் எனமுடிக்க. மானிடர்க்கெலாம், வேற்றுமைமயக்கமெனினுமமையும். (உ)

இன்னண மல்லம னிருநி லத்துறத்
தன்னிகர் கயிலையிற் சிங்கந் தாங்கிய
பொன்னணை மிசையமர் புராரி தன்னொடு
மின்னனை முலையுமை விளம்பன் மேயினாள்.

(இ - ள்.) இன்னணம் - இவ்வாறு — அல்லமன் - அல்லமதேவன் — இருநிலத்துற - பெரிதாகியபூமியிலிருக்க — தன்னிகர்கயிலையில் - தனக்குத்தானேயொப்பாகியகைலையங்கிரியில் — சிங்கந்தாங்கிய - சிங்கங்களாற்சுமக்கப்பெற்ற — பொன் - பொன்னாலாகிய — அணைமிசை - ஆசனத்தின்மேல் — அமர் - எழுந்தருளியிருக்கின்ற — புராரிதன்னொடு - திரிபுரமெரித்த பரமசிவனோடு — மின் - மின்னல்போன்ற — அணி - அழகிய — முலை - தனங்களையுடைய — உமை - உமாதேவியானவள் — விளம்பன்மேயினாள் - சொல்லத்தொடங்கினாள். எ - று. "பிறவுமேர்க்கும்பிற" வென்னும்விதியால் நிலத்துறவெனலைக்கொள்க. புராரியெனல் வில்லியென்றாற்போல இகரவிகுதியுயர்திணையாண்பாற் படர்க்கையாய்நின்றதென்க. மின்னனை உமையவளோடொட்டுக. (௩)

அல்லம னருள்பெறக் கடைந்த நந்தியோ
டெல்லையி னின்கண மெனது நற்கலை
மெல்லிய னிலமிசை மேவிச் செய்ததென்
சொல்லுதி யெனவுமை யிறைவன் சொல்லினான்.

(இ - ள்.) அல்லமன் - அல்லமதேவரது — அருள்பெறற்கு - அநுக்கிரகம் வாய்த்தற்கு — அடைந்தநந்தியோடு - சென்றநந்திதேவரோடு — எல்லையில் - அளவில்லாத — நின்கணமும் - உனதுசிவகணங்களும் — எனதுநற்கலை - எனதுசாக்ஷாத்துவிதருணப்பெண்ணாகிய — மெல்லியல் - மிருதுவானமேனியையுடையவக்கமாதேவியும் — நிலமிசைமேவி - பூமியிலடைந்து — செய்ததென் - செய்தகாரியமென்ன — சொல்லுதியென - சொல்லுவாயென்று — உமை - உமையவள்கேட்க — இறைவன்சொல்லினான் - பரமசிவன் சொல்லுவன். எ - று. மெல்லியல் அன்மொழித்தொகை. சொல்லுதி

யென வுமையென்பதற்கு, சொல்லுவாயென்று வுமையவள் கேட்கவெ
ன்றுரை கொள்வது சிறப்பு. (௪)

நந்திநல் வசவனு நாமங் கொண்டமர்ந்
தந்தமி லெம்மடி யவரை யாமெனப்
புந்திசெய் தவர்விழை பொருள ளித்தமண்
சிந்திய நிலமிசைச் சிறப்புற் றனரோ.

(இ - ள்.) நந்தி - நந்திதேவர் —நல்வசவனுநாமங்கொண்டு - நல்லவச
வண்ணனென்னுநாமந்தரித்து—அமர்ந்து - இருந்து—அந்தமில் - அளவி
ல்லாத—எம்மடியவரை - எமதடியார்களை—ஆமெனசிவதொண்டர்க்குரிய
ராமென்று—புந்திசெய்து - நினைத்து—அவர்விழை - அவ்வடியார்கள்வி
ரும்புகின்ற —பொருளளித்து - பொருள்களைக்கொடுத்து —அமண்சிந்தி
ய - சமணர்கள்பரவியிருக்கின்ற—நிலமிசை - பூமியின்மேல்—சிறப்புற்
றுன் - மகிமையுற்றனன். எ - று. அரோ - அசை. சிவதொண்டர்க்குரிய
ராமென்றெஞ்சிநின்றதால் இசையெச்சம். சமணர்களாகுநிலைமைநிலை
அமண்சிந்தியநிலமெனக்குறிப்பு. (௫)

அறஞ்செயு நின்கலை யாகு மங்கைபோய்ச்
சிறந்துள வுலகின்மா தேவிப் பேர்பெறீஇ
மறஞ்செயு மதன்வலி மாள மாய்த்தெலாந்
துறந்தனன் குரவனைத் துருவிப் போயினள்.

(இ - ள்.) அறஞ்செயு - முப்பத்திரண்டறங்களையுஞ்செய்த—நின் -
உன்னுடைய—கலையாகும் - சாத்துவிககலையாகிய —மங்கை - பெண்ணு
னவள்—போய் - சென்று —சிறந்துள - சிறப்புற்றிருக்கின்ற—உலகில் -
உலகத்தில் —மாதேவிப்பேர்பெறீஇ - மாதேவியென்னும்பெயரைப்பெ
ற்று—மறஞ்செயு - அடியார்களுக்குத்தீச்செயலையேசெய்யும்—மதன்வ
லிமாள - மன்மதனதுவலிகுன்ற—மாய்த்து - வென்று—எலாந்துறந்த
னள் - எல்லாப்பற்றையும்விட்டவளாய்—குரவனைத்துருவிப்போயினள் -
குருநாதனைத்தேடிப்போயினள். எ - று. மங்கை போய் பெறீஇ மா
ய்த்து துறந்தனள் துருவிப்போயினள் எனக்கூட்டிமுடிக்க. (௬)

நண்ணிய நங்கண நாதர் தாமுமக்
கண்ணகன் ஞாலமுற் றெம்மைக் காணிய

வண்ணநல் வினைகள்பல் வகைபு ரிந்தவ
ரெண்ணிய பலநக ரிடத்து வைகினர்.

(இ - ள்.) நண்ணிய - பொருந்திய —நங்கணநாதர்தாமும் - நமதுசிவ
கணநாதர்களும்—அக்கண்ணகன்ஞாலமுற்று-விசாலமானவந்தப்பூமியிற்
சென்று—எம்மைக்காணியவண்ணம் - எமதெதார்த்தநிலையைக்காணவே
ண்டுதற்கியைந்த—நல்வினைகள் - சற்கிருத்தியங்களை —பல்வகைபுரிந்து -
பலவேறுவகைப்படச்செய்து—அவர் - அந்தக்கணநாதர்கள் —எண்ணி
ய - தங்கள்தங்களுக்கிஷ்டமாகிய—பலநகரிடத்து - பலநாட்டின்கண்—
வைகினர் - தங்கினார்கள் எ - று. நங்கணநாதர்தாமும் உற்று புரிந்து
வைகினரெனக் கூட்டிமுடிக்க. (௭)

அளக்கரும் விரதரா யவரி ருந்திடத்
துளக்கமி னிலையுடைத் தூய னல்லமன்
கொளக்குறை படாதபே ரின்பங் கூட்டுண
விளக்கின னுலகினில் வீர சைவமே.

(இ - ள்.) அளக்கரும் - அளவிடுதற்கரிய—விரதராய் - விரதமுடைய
வர்களாய்—அவரிருந்திட - அவர்களிருக்க —துளக்கமில் - சலனமற்ற—
நிலையுடை - சிறந்தநிலையினையுடைய —தூயனல்லமன் - பரிசுத்தனாகியவ
ல்லமதேவன்—கொள - பருவத்திற்கியைந்தவாறுகொள்ளவும்—குறைப
டாதபேரின்பம் - தடையற்றவானந்தத்தை —கூட்டுண - கொள்ளைகொ
ள்ளவும்—உலகினில் - உலகத்தில் —வீரசைவம் - வீரசைவத்தை—விள
க்கினன் - விளங்கச்செய்தனன். எ - று. ஏ - அசை. அல்லமன் விளக்
கினன் எனக்கூட்டிமுடிக்க. (௮)

வேறு.

எவ்வகைச் சமயத் திறத்து மிறைவனே யெனினு நேயஞ்
சைவநற் சமயத் துற்றான் சைவத்தும் வீர சைவத்
தவ்வவர் பிறவி நீக்கு மல்லமன் விருப்ப முள்ளான்
மைவரிக் கயனெ டுங்கண் மடவரா லென்றான் வள்ளல்.

(இ - ள்.) எவ்வகைச்சமயத்திறத்தும் - பலவேறுவகைப்பட்டுநின்றவெ
வ்வகைச்சமயத்திறத்தும்—இறைவனேயெனினும் - கடவுளேயென்றாலு
ம்—நேயம் - பேரின்பவினைவுக்கியைந்த—சைவநற்சமயத்து - நல்லசைவ
சமயத்தில்—உற்றான் - முக்கியமாகத்தங்கினன் —சைவத்தும் - சைவத்

நில் மூர்த்தியாகத்தங்குவதிலும் — வீரசைவத்து - வீரசைவத்தில் — அவ்
வவர்பிறவிநீக்குமவ்வமன் - அவரவர்பிறவிசனிக்கத்தினையந்த வல்லமையே
வன் — விருப்பமுள்ளான் - தங்கத்துமிக்கவிருப்பமுடையவன் — மை
மைதீட்டிய — வரி-செவ்வரிகருவரிபடர்ந்த — கயல் - சேற்கெண்டைபோ
ன்ற — நெடுங்கண் - நீண்டகண்களையுடைய — மடவரால் - பெண்ணே —
என்றுசொன்னான் - என்றுபரமசிவன்சொல்லினன். எ - று. இறைவ
னே யென்பது லோகர்தோற்றம். எனினும் என்பதிலும்மை யெதிரது
தழீஇய வெச்சவும்மை. சேயமென்கின்றமையால் பேரின்பமென்றும்.
சைவத்தும் என்பதிலும்மை இழிவுசிறப்பு. எவ்வகைச்சமயத்திற்கு மெ
ன்பதிலும்மை முற்றும்மை. (௯)

சமயமெவ் வகையி லுந்தான் சைவமே லாய தெவ்வோ
ரமையுநல் வீர சைவ மதனிலுஞ் சிறந்த தென்கொ
லிமையவர் பரவு முக்க ணெம்பிரா னருள்செய் யென்ன
வுமையவள் வினவ வேறு முரைத்தவன் விளம்பு மன்றே.

(இ - ள்.) சமயமெவ்வகையிலும் - எவ்வகைப்பட்டசமயங்களிலும் —
சைவம் - சைவமானது — மேலாயதென்கொல் - என்னமேலாயது — அ
மையும் - பொருந்திய — நல்வீரசைவம் - நல்வீரசைவமானது — அதனி
லும் - அந்தச்சைவத்தைக்காட்டிலும் — சிறந்ததென்கொல் - எவ்வாறு
சிறப்புற்றது - இமையவர்பரவும் - தேவர்கள்வணங்கத்தக்க — முக்கண் -
மூன்று கண்களையுடைய — எம்பிரான் - எம்நாயகனே — அருள்செய்
யென்ன - இவ்வையத்தைநீக்கியருளவேண்டுமென்று — உமையவள்வின
வ - பரமேஸ்வரிகேட்க — வேறுமுரைத்தவன் - யாவையுமுரைத்தோனாகியபர
மசிவன் — விளம்பும் - சொல்லுவன். எ - று. அன்று - ஏ - தான் - அசை
கள். கொல்லென விரண்டும் ஐயம். (௧௦)

உரைக்குமெச் சமயத் திற்கு முத்தர பாகஞ் சைவந்
தரிக்குமச் சைவத் திற்குத் தரமென வீர சைவந்
தெரிக்குநர் காமி காதி சிரத்தினிற் றிகழுங் கண்டா
பரிக்குரற் சிலம்ப ரற்று மடிமலர்த் தடங்க ணல்லாய்.

(இ - ள்.) உரைக்கும் - சொல்லப்பட்ட — எச்சமயத்திற்கும் - எவ்வ
கைப்பட்டசமயங்கட்கும் — உத்தரபாகம் - மேலாயபாகத்தை — சைவந்
தரிக்கும் - சைவமானதேற்கும் — அச்சைவத்திற்கு - அந்தச்சைவசமயத்
திற்கு — உத்தரமென - மேலாயதென்று — வீரசைவம் - வீரசைவ

னது — தெரிக்கும் - யாவர்க்குந்தெரிவிக்கும் — காமிகாதி - காமிகாதி
யத்தவமுதலியவற்றின் — சிரத்தினில் - உச்சியில் — திகழும் - விளங்கும் —
கண்டாய் - காணுதி — அரி - பருக்கைக்கற்களின் — குரல் - சத்தத்தால் —
சிலம்பரற்றும் - நூபுரங்கள்கோஷிக்கின்ற — அடி - பாதங்களையும் — ம
லர் - தாமரைமலர்போன்ற — தடம் - விசாலமாகிய — கண் - கண்களையு
முடைய — நல்லாய் - பெண்ணே. எ - று. எவ்வகைச்சமயத்திலுமேலா
யது சைவமெனவும், அதனினுமேலாயது வீரசைவமெனவுந் தெரிவி
த்தாரென்க. அடிமலரெனல்; உருவகம். (௧௧)

புறந்தரு சமயம் புக்கும் புறமலாச் சமயந் தெய்வி
யறந்திகழ் சைவ முற்றுஞ் சதிபதி யாதி யாற்றிச்
சிறந்தன வீர சைவஞ் சேர்த்தபின் வீடு பெறுவ
ருறுந்தளிர் கலந்து மேனி யொளிர்வல் லியன்ன தோயாய்.

(இ - ள்.) புறந்தரு - புறம்பாகத்தரப்பட்ட — சமயம்புக்கு - சமயங்
களிலும்புகுந்தும் — புறமலாச்சமயத்து - அகச்சமயங்களில் — தெய்வி - தி
கழ்கின்ற — அறந்திகழ் - நல்லொழுக்கம்விளங்குகின்ற — சைவமுற்றி -
சைவத்தையடைந்தும் — ஆய்ந்தபின் - அதனிலும் — சரியையாதியாற்றி - சரி
யாதிகளைச்செய்து — சிறந்தன - சிறப்புற்றிருக்கின்ற — வீரசைவஞ்சேர்த்
தபின் - வீரசைவநெறிக்கண்வைத்தபின் — உறுந்தளிர் - நல்லதளிர்க
ளை — கலந்தும் - வருத்துகின்ற — மேனி - மேனியையுடைய — வல்லிசாதிக்
கொடியையுடைய — மலர் - புஷ்பங்களைநாற்ற — வல்லியன்னாய் - வீடுபெறுவர் - முத்திநிலையடைகுவர். எ - று.
கொடிபோன்றவளே — வீடென்னும் - ... (௧௨)
புறச்சமயமாறையு மகச்சமயமாறையும் அறாதியிற்காண்க.

அருமறை முடியுஞ் சீர்சா லாகம முடியு மொத்தப்
பொருமற விலாமன் முற்றும் பொருளினை விளக்கக் காட்டித்
தருமுறை யதனுல் வீர சைவமே தலைமைத் தாயிவ்
விருமையு மறுகள் ளாகம் விதிர்ப்பிர மாண மாகும்.

(இ - ள்.) அருமறைமுடியும் - அரியவேதாந்தங்களும் — சீர்சால் - சிற
ப்புமிக்க — ஆகமமுடியும் - ஆகமாந்தங்களும் — ஈசாதிகமுதலிய
யாதொத்து — பொரும் - மாறுபடுகின்ற — மறவிலாமல் - ... — பொருளினை - ப
விகற்பமில்லாமல் — முற்றும் - பூரணமாகவுந்தன்னை — விளங்கும்படிதெரிவித்து — தருமுறை
ரம்பொருளை — விளக்கக்காட்டி -

யதனால் - நிர்விகற்பசமாதிதராத்ததுக்கநெறியால்—வீரசைவமே - வீர சைவமென்பதே—தலைமைத்தாம் - எவற்றிலுந்தலைமையதாம்—இ - இங் த—இரு - பெரிதாகிய—மறுவறு - குற்றமற்ற—நன்னூலும் - நல்லவீர சைவநூல்களும்—இதில் - இந்தச்சுவாநுபூதிநிலைக்கு—பிரமாணமாகும் - சுருதிப்பிரமாணமாகிற்கும். எ - று. சுத்தசைதன்ய மொன்றேயெனல் வேதாந்தமெனவும், அறிவுக்கறிவெனல் ஆகமமுடிபெனவுங் கொள்க. இவ்விரண்டு மொத்தலாவது; அறிவுக்கறிவென்பது வபாதிகாட்டத்தா லன்றிச் சைதன்யகாட்டத்தா லின்மையிற் போலியாமெலன்க. இங்கே பொருளெனல் மதத்தால் விடாதவழக்கிடுதலை. (௧௫)

ஒன்றொரு விடயந் தன்னி லுறுசுவை நிறைவென் றுக்கி
யென்றுமெம் முகத்த ளித்திட் டெம்பிர சாதங் கொண்டு
நன்றுறு கரும முன்றுந் தூய்மையில் வீர சைவந்
தன்றிவே றொருமார்க் கத்தி னடுக்குமோ வடுக்கண் மாதே.

(இ - ள்.) ஒன்றொருவிடயந்தன்னில் - ஒவ்வொருவிடயங்களிலும்—உறுசுவை - உறுவதாலெய்துமினியசுவையை—நிறைவென்றுக்கி - தற் பிரியமாதலின்பரிபூரணமாக்கி—என்றும் - எப்போதும்—எம்முகத்து - எமதுசந்நிதியில்—அளித்திட்டு - நிவேதியஞ்செய்து —எம்பிரசாதங் கொண்டு - அந்தவெமதுபிரசாதத்தைக்கொண்டு —நன்றுறுகருமம் - மிக்க கர்மாநுஷ்டானங்களை—உன்று - நினையாமற் சலனமற்றிருக்கின் ற—தூய்மை - இந்தப்பரிசுத்தமான சுவாநுபூதிநிலை—இவ்வீரசைவத்த ன்றி - இந்தவீரசைவத்தையுமன்றி —வேறொருமார்க்கத்தின் - சைவ முதலிய வேறொருமார்க்கத்தில்—அடுக்குமோ - கிடைக்குமோ—வடு - மாம்பிஞ்சின் பிளப்பையொத்த—கண் - கண்களையுடைய—மாதே - பெ ண்ணே. எ - று. எ - அசை. சோதனையில் ஒவ்வொருவிடயமுந்தனக் கென்ச் சொருபமொன்றின்றி ஞேப்திமாத்திரமாகிற்றலாலும், அந்தஞே ப்தியயன்றி யவ்லாகப்பிரியமொன்றின்மையாலும், இதனால் ஞேப்தியே பிரியம் பிரியமேஞேப்தியென் றுதந்தியைவதிதலும் "ஒன்றொருவிட யந்தன்னி லுறுசுவைநிறைவென்றுக்கி யெனவும்," சாதிகமுதலியவை பிறந்தது வெமதுசந்நிதியாதலால் "எம்முகத்தெனவும்," அங்ஙனமைத்ய நாக்கியதே பிரசாதமாதலாலும் அது நிவேத்தியமாதலாலும் "எம்பிரசா தங்கொண்டளித்திட்டெனவும்," அங்ஙனமாயவசரம் நிருத்தித்தியமுத லிய நான்குமெய்தற்பால நியமாதலா லதனை "நன்றுறுகருமமுன்றுந் தூய்மையெனவும்," இத்தூய்மையெய்தற்கு யோக்கியதையுடையது வீர சைவமன்றி யேனையதல் முதலாய் "இவ்வீரசைவத்தன்றி வேறொரு மார்க்கத்தினடுக்குமோ," வெனவுங்கூறினர். கூறவே, உபசாந்தநிலையது வீரசைவமேயெனப்பெறும். நிருதநித்தியமுதலிய நான்காவன; நிருத நித்தியம், தக்காபாவம், சர்வகாமாப்திகம், பிராப்திப்பிராப்பியம் என் பன. இவற்றை வேதாந்தசூடாமணி முதலிய ஞானநூல்களிற் காண்க. அடுக்குமோவென்பது லோகாரம் எதிர்மறை. (௧௬)

ஆதலால் வீர சைவத் தறிவினை யறியச் செய்தான்
மாதர்மா தேவி யாமுன் வண்கலை மாதி னுக்கு
மேதையாம் வசவனாதி மெய்யடி யவர்க்கு ஞான
போதகா சிரிய னென்னும் பொருவிலல் லமன்வேற் கண்ணாய்.

(இ - ள்.) ஆதலால் - ஆகையால்—வீரசைவத்து - வீரசைவத்தின் கண்—அறிவினை - எல்லாவற்றையுமறியுமறிவை—அறியச்செய்தான் - விளங்கக்காட்டினன்—மாதர் - அழகிய—மாதேவியாம் - மாதேவி யென் னும் பெயருடையவளாகிய—உன் - உன்னுடைய—வண்கலைமாதினுக்கு ம்—சாத்துவிதகலைப்பெண்ணுக்கும்—மேதையாம் - விவேகமயமாகிய— வசவனாதி-வசவன்னன்முதலிய—மெய்யடியவர்க்கும் - மெய்யடியார்களு க்கும் —ஞானபோதகாசிரியனென்னும் - ஞானபோதகாசிரியனென் போ ன்ற—பொருவில் - ஒப்பில்லாத—அல்லமன் - அல்லமதேவனென்போ ன்—வேற்கண்ணாய் - வேல்போன்றகண்களையுடையவளே. எ - று. எல் லாவற்றையுங்காணுங் கண்ணைக்காட்டினான்போன்று எல்லாவற்றையு மறியுமறிவையறியச்செய்தன னென்பதுகருத்து. அல்லமன் கலைமாதினு க்கும் மெய்யடியவர்க்கும் அறிவினையறியச்செய்தானெனக்கூட்டி முடி க்க. மாதினுக்கும் மெய்யடியவர்க்கும் என்பவற்றிலுள்ளவும்மைகள் எச்சவும்மை. கலைமாதென்றது வன்னென்றடைகொடுத்ததனால் சாத்து விதகலையென்றும். அடியவரென்றது மெய்யென்றடையால் நிராகரணி யென்றனர்; ஞானபோதகாசிரிய னென்றனக்காட்டற்கு (௧௭) மொத்தவரெனப்பெறும். ஞானபோதகாசிரிய னென்றது எடுத்துக்காட்டணி.

பிறவயே தத்தத்ற பேதப் பதம்பொருள் பருவந் கண்டு
இரிவின்றி முனிவர் யோகர் சித்தர்கண் முதலா னோர்க்குப்
பொருவிலா வல்ல மப்பேர் புண்ணியன் புகன்றுட் கொண்டான்
குரவரா குமன்ம டந்தா யென்னலாங் குன்ற விலலி.

(இ - ள்.) பருவபேதத்தால் - பக்குவபேதத்தினால்—பேதப்படும்பொருள்—பேதமாகக்காணப்படுமெய்ப்பொருளை —பருவங்கண்டு - ஏற்றதற்குரியபருவங்கண்டு—இரிவில் - மாறுபடாத—மாமுனிவர் - மகத்தானரிஷிகளும்—யோகர் - யோகிகளும்—சித்தர்கள் - சித்தர்களும்—முதலானோர்க்கு - முதலியபேர்களுக்கு—பொருவிலா - ஒப்பில்லாத—அல்லமப்பேர்புண்ணியன் - அல்லமனென்னும் பெயரையுடையபுண்ணியவான்—புகன்று - அநுக்ரகித்து—ஆட்கொண்டான் - அடிமைகொண்டனன்—குரவம் - விளாந்த—வார் - நீண்ட—குழல் - கூந்தலையுடைய—மடந்தாய் - பெண்ணே—என்றனன் - என்றுசொல்லினன்—குன்றவில்லி - மேருவை வில்லாகவளைத்த பரமசிவன். எ - று. பருவபேதத்தாற் பேதப்படும்பொருளென்றதனால் இயல்பாக வென்று மொருபடித்தாயதென்றும், பருவங்கண்டு சித்தர்முதலானவர்க்குப் புகன்றுட்கொண்டானென்றதனால் பருவங்கா(ரு) விடத்தவலமாமென்று முணர்காணப்பெற்றும். குரவ விதியுயிரறு. (௧௪)

அம்மையுண் மகிழ்வு பொங்க வல்லமன் பெருமை கேளா
மம்மர்செய் துளங்க லக்கு மாயையைக் கடந்தா னென்றன்
மெய்ம்மைநின் பவள வாயால் விளம்பநா னறிந்தே னென்று
மும்மதில் வலிதொ லைத்த முக்கணு யகனைத் தாழ்ந்தாள்.

(இ - ள்.) அம்மை - உமையவள்—உண்மகிழ்வுபொங்க - உள்ளத்திலாநந்தம்பெருக—அல்லமன்பெருமைகேளா - அல்லமதேவனதுமகிமையைக்கேள்வியுற்று—மம்மர்செய்து - மோகத்தைவிளைவித்து—உளங்கலக்கும் - மனதைக்கலங்கச்செய்கின்ற—மாயையைக்கடந்தான் - மாயையைவென்றனன்—என்றன்மெய்ம்மை - எனதுண்மைநிலையை—நின்பவளவாயால் - உனதுபவளம்போன்றவாயினால்—விளம்ப - சொல்ல—நானறிந்தேனென்று - நான்தெரிந்துகொண்டேனென்று—மும்மதில்வலி - திரிபுரத்தின்வலியை—தொலைத்த - நாசஞ்செய்த—முக்கணுயகனை - திரிநேத்திரமுடையபரமசிவனை—தாழ்ந்தாள் - வணங்கினள். எ - று. கேளாவென்பது செய்யாவென்னுமவாய்பாட்டுவினையெச்சம். மம்மர் செய்துளங்கலக்கவாது; விரும்பியுமெய்தாதவைகளைப்பற்றி வந்தெய்தமபங்காமையை. மாயையைக்கடத்தலாவது; உண்மைபோற்காண்டலில்லாமை கயிற்றிற்பாம்பு முதலியவைபோல் தோற்றன்மாத்திரமுஞ்சொன்மாத்திரமுமா யிற்குமிலையன்மையை. (௧௫)

அங்குமை மாதி ரேறு மல்லமன் பெருமை கூறித்
திங்கள்வெண் முகிழ்ப்பு ஊர்ந்த செஞ்சடைப் பரமன் மேவ
லிங்கருண் மேக மென்று மிணையிலெங் குருகு கேசன்
மங்கல முத்தி யின்பம் வழங்குமத் தொழிலி னின்றான்.

(இ - ள்.) அங்கு - அவ்விடத்தில்—உமைமாதிரேறும் - உமாதேவியோடும்—அல்லமன்பெருமைகூறி - அல்லமதேவனது மகிமையைச்சொல்லி—வெண் - வெண்மையாகிய—திங்கள்முகிழ்ப்பூர்ந்த - மூன்றாம்பிறைச்சந்திரனையணிந்த—செஞ்சடைப்பரமன் - சிவந்தசடையையுடைய பரமசிவன்—மேவ - சும்மாவிருக்க—இங்கு - இவ்விடத்தில்—அருள்மேகமென்னும் - கிருபாமேகமென்னப்பட்ட—இணையில் - ஒப்பில்லாத—எங்குருகுகேசன் - எமதுகுருவாகிய அல்லமதேவன்—மங்கலம் - சுபமாகிய—முத்தியின்பம் வழங்கும் - வீட்டின்பத்தைத்தரத்தக்க—அத்தொழிலில் - அந்தமுயற்சியில்—நின்றான் - விடாதுசெய்யநின்றனன். எ - று. அங்கு - இங்கு என்றதனால் கைலாயமும் பூமியுமெனக்கொள்க. உமைமாதிரேறும் என்ற உம்மையால் அல்லமன்பெருமையென்பதில் என்னுமும்மைதொக்கியதாகக்கண்டாம். இதனால் உமைமாதின் சிறுமையையும் அல்லமன்பெருமையையுங்கூறியதாகப்பெற்றும். திங்கள் வெண்முகிழெனல் இலக்கணை. அருள்மேகமென்னும் குருகுகேசனைனல்; உருவகவணி. (௧௬)

மூத்தவ ரிளைஞர் நோயர் முகிழ்முலை மாதர் நல்ல
நீத்தொழி லாளர் பொல்லாத் தீத்தொழி லாள ரென்னும்
பார்த்திலன் யாவர் மாட்டும் பரிந்தருண் மாரி பெய்து
காத்தன னமல ஞான காரணன் குருகு கேசன்.

(இ - ள்.) மூத்தவர் - வயதின்மூத்தவர்களென்னும்—இளைஞர் - சிறியவர்களென்னும்—நோயர் - வியாதியையுடையவர்களென்னும்—முகிழ்முலை - முல்லையரும்புபோன்ற தனங்களையுடைய—மாதர் - மங்கைப்பருவமாதரென்னும்—நல்லநீத்தொழிலாளரென்னும் - பொல்லாதீச்செயலுடையோரென்னும்—பார்த்திலன் - பேதம்பாராதவனாய்—யாவர்மாட்டும் - யாவரிடத்தும்—பரிந்து - விரும்பி—அருள்மாரிபெய்து - கிருபாவெள்ளம்பொழிந்து—காத்தனன் - இரட்சித்தனன்—(அவனெவனில்) அமலஞானகாரணன் - பரிசுத்தஞானகாரணனாகியும்—குருகுகேசன் - குருகுகேசனென்னும்பெயரையுடையவனுமிருக்கின்றவல்லமன். எ - று.

முகிழ்முலைமாதரென்றதனால் மங்கைப்பருவமாதரென்றாம். சற்கருமமுந் துற்கருமமும் பிறவிதரற்பாலதின் இரண்டையுந் தீத்தொழிலென்றார். நல்லதீத்தொழில் சிவபுண்ணியாதிகருமங்களையும், பொல்லாத்தீத்தொழில் யாகாதிகிருத்தியங்களையுமெனக்கொள்க. என்றுமெனலைக் கடைநிலைத்தீபமாக்கி யெங்குமொட்டுக. அருள்மாரி; உருவகம். அமலஞானகாரணன், குருகுகேசன், இவை காரணவிகுதி. நல்லதீத்தொழிலும் பொல்லாத்தீத்தொழிலும் நிட்காமியதவத்துக்குமாறாதலின் இவை விலக்கெனற்கு இங்ஙனங்கூறினாரென்க. பருவபேதம்பாராது யாவர்மாட்டுமருண்மாரி பெய்துகாத்தனனென்றதனால் அல்லமனதுகாருண்யம் விளங்கக்கண்டாம். பொறி, புலன், கரணம், அவித்தை யென்னும் மலஞானமிருப்பதால் இவற்றிற்குமாறாக அமலஞானமென்றார். அமலஞானமாவது; பொருளைப் பொருளாகக்காண்டலே. (௧௯)

இன்னவா றருளி னானே யிவருற வவர்வே றென்று
தன்னைபோ லுயிர்கட் கெல்லா மாரரு ளொருங்கு செய்தே
யென்னையா ளெனக்கொண் டாளு மிணையடிக் குருகு கேசன்
மன்னுமா தவர்க ணெஞ்ச மலர்தொறும் வாழா நின்றான்.

(இ - ள்.) இன்னவாறு - இவ்வண்ணம்—அருளினால் - கிருபைபெருக்கால்—இவருறவவர்வேறென்று - இவருறவினரிவரயலாரெனப்பேதஞ்சற்றுங்கொள்ளாது—அன்னைபோல் - தாய்போல—உயிர்கட்கெல்லாம் - எல்லாவுயிர்களுக்கும்—ஆரருள் - பூரணவருளை—ஒருங்குசெய்து - ஒருங்குவிளங்கச்செய்து—என்னையாளெனக்கொண்டு - என்னையடிமையாகக்கொண்டு—ஆளும் - இரட்சிக்கின்ற—இணையடி - உபயபாதங்களையுடைய—குருகுகேசன் - குருகுகேசனுமெயவல்லமன்—மன்னும் - நிலைபெற்ற—மாதவர்கள் - பெரியோர்களுடைய—நெஞ்சம் - மனமாகிய—மலர்தொறும் - புட்பங்கள்தோறும்—வாழாநின்றான் - வாழ்கின்றனன். எ - று. ஏ - அசை. நெஞ்சமலர்; உருவகம். (உ0)

எல்லொளி யிரவி போல விருண்மல மிரித்தி லங்கு
மல்லமன் சரித மோதி லறம்பொரு ளின்பம் வீடாம்
நல்லன பயனோர் நான்கு னன்னுவ னிதனைக் கேட்க
வல்லநல் வினையி னானு மற்றவை மருவி வாழ்வன்.

(இ - ள்.) எல்லொளி - மிக்கவொளியையுடைய—இரவிபோல - சூரியனைப்போல—இருண்மலமிரித்து - இருள்போன்றமும்மலங்களையு
நாசஞ்செய்து—இலங்கும் - பிரகாசியாநின்ற—அல்லமன்சரிதமோதில் - அல்லமனது சரித்திரத்தைவாசிக்கில்—அறம்பொருளின்பம்வீடாம் - அறம்பொருளின்பம்வீடென்னும்—நல்லன - நல்லனவாகிய—பயனோர் நான்கும் - நான்குபயனையும்—நன்னுவன் - அடைவன்—இதனைக்கேட்கவல்ல - இதனைக்காதினாற்கேட்பதற்குவல்லமையுள்ள—நல்வினையினானும் - சற்கிருத்தியத்தினாலும்—மற்றவை - அந்நான்குபயனையும்—மருவி - அடைந்து—வாழ்வன் - வாழாநிற்பன். எ - று. எல்லொளி; மீமிசைப்பதம். இரித்து; பிறவினை. நல்லன; வினையாலணையும்பெயர். வல்ல; குறிப்புப் பெயரெச்சம். நல்வினையினானுமென்பதிலும்மை இறந்ததுதழீஇயவெச்சவும்மை. நல்லனபயன்; இருபெயரொட்டுப்பண்புத்தொகை. (உ௧)

மதியிலார் மதிஞ ராவர் மகவிலா மகவு யிர்ப்பர்
நிதியிலார் நிதிப டைப்பர் நிலையிலார் நிலைத்து வாழ்வர்
பதியிலார் பதிப டைப்பர் பழுதிலிவ் விருபத் தொன்றி
னதியினு நிரம்பு காதை கற்றவர் கூறக் கேட்பின்.

(இ - ள்.) பழுதில் - குற்றமற்ற—இவ்விருபத்தொன்றினதியினால் - இச்சரித்திரத்தைத்துதியினால் - நிரம்பு - நிரம்பிய—காதைகற்றவர் - சரித்திரங்களைக்கற்றவர்கள்—கூறக்கேட்பின் - அவர்கள்சொல்லக்கேட்டால்—மதியில்—மதியிலார் - மூடர்கள்—மதிஞராவர் - விவேகிகளாவார்கள்—மகவிலார் - பிள்ளையில்லாதவர்கள்—மகவுயிர்ப்பர் - பிள்ளைபெறுவர்—நிதியிலார் - செல்வமில்லாதவர்கள்—நிதிபடைப்பர் - செல்வமுடையராவர்—நிலையிலார்-யாதோர்நிலையுமில்லாதவர்கள்—நிலைத்துவாழ்வர் - ஒன்றினிலைபெற்றுவாழ்வார்கள்—பதியிலார் - பட்டணமில்லாதவர்கள்—பதிகிடைப்பர் - தமக்குச்சுதந்தரமாகப்பட்டணம்பெறுவார்கள். எ - று. இந்நால் நிட்காமியபலனைத் தரற்பாலதாயிருக்கக் காமியப்பயனையுந் தருமெனக் கூறியவிக்கவி இடையிற்பாடிச் சேர்த்ததாகக் காணகின்றதென்க. கேட்பவர்க்கே யிவ்வளவுபயனெய்தின் கற்றவர்க் கெவ்வள வென்பம். (உஉ)

பார்கெழு சகாத்த மாயிரத் தைஞ் ஞாற்றெழு பானுன் காவ
தாகிய கரநா மங்கொ ளாண்டு விடைஞா யிற்றிற்
சீர்கெழு மல்லமன்றன் றிருவிளை யாடற் காதை
கார்கெழு மிடற்றெங் கோமான் கருணைகொண் டியம்பினனே.

(இ - ள்.) பார்கெழு - பூமியில்வழங்கும்—சகாத்தம் - சாலிவாகனசகாத்தமென்னும்—ஆயிரத்தைஞ்ஞாற்றெழுபானுன்காவதாகிய - ஆயிரத்

தைந்துநாட்டுெழுபத்துநான்காவதாகவழங்கும்—நாயகன்கொள் - பெயரை க்கொண்ட—ஆண்டுெறவிடை - வருடத்தில்—ஞாயிற்றில் - ஞாயிற்றுக்கிழ மையில்—சீர்செழும் - சிறப்புப்பொருந்திய—அல்லமன்றன் - அல்லமதே வனது—திருவிளையாடற்காதை - திருவிளையாடலமைந்தசரித்திரத்தை— கார்செழு - கருமைதங்கிய—மிடற்று - கண்டத்தையுடைய—எங்கோ மான் - எமதுபரமசிவனுடைய —கருணைகொண்டு - கிருபையையாதர வாகக்கொண்டு—இயம்பினன் - பாடினான். எ - று. வ - அசை. (௨௩)

மாசறு மல்ல மப்பேர் வள்ளறன் சரிதந் தன்னி
லாசறுஞ் செய்யு ளெல்லா மன்புடன் படிப்பார் தம்மை
யேசறு மனித ரென்ன விசைப்பதோ கரித்தோல் போர்த்த
வீசனென் பதுவே யன்றி யேதுமற் றேது வம்மா.

(இ - ள்.) மாசறும் - குற்றமற்ற—அல்லமப்பெயர் - அல்லமனென் னும்பெயரையுடைய—வள்ளறன் - கர்த்தரானவனது—சரிதந்தன்னில் - சரித்திரத்தில்—ஆசறும் - குற்றமற்ற—செய்யுளெல்லாம் - கவிகளனைத் தையும்—அன்புடன்படிப்பார்தம்மை - அன்போடேபடிப்பவர்களை—ஏச று - குற்றமற்ற—மனிதரென்னவிசைப்பதோ - மனிதரென்றுசொல்வ தோ—கரித்தோல்போர்த்த - யானைத்தோலைப்போர்த்த—ஈசனென்பது வேயன்றி - ஈசனெனக்கூறப்படுவதேயன்றி—ஏது - காரணம்—மற்றே து—வேறென்னையுளது. எ - று. அம்மா - அசை. இதுவும் இடையிற் கலப்பு. (௨௪)

புண்ணிய ருலகில் வாழ்க புலஞ்செறு நோன்பு வாழ்க
பெண்ணொரு பாகன் பூசை பேணிவா ழடியார் வாழ்க
கண்ணுத லொருவன் சார்ந்த கற்புடைச் சைவம் வாழ்க
வண்ணலல் லமன்சீர் கேட்கு மாதர வாளர் வாழ்க.

(இ - ள்.) புண்ணியருலகில்வாழ்க - புண்ணியவான்களுலகத்தில்வா ழக்கடவர்—புலஞ்செறு - ஐம்புலன்களையுமாசஞ்செய்யத்தக்க—நோன் புவாழ்க - விரதங்கள்வாழக்கடவன—பெண்ணொருபாகன்பூசை - அர்த்த நாரீசுவரனதுபூசையை—பேணிவாழ் - விரும்பிவாழ்கின்ற —அடியார் வாழ்க - அடியார்கள்வாழக்கடவர்கள்—கண்ணுதலொருவன் - நெற்றிக் கண்ணையுடையபரமசிவனை—சார்ந்த - சேர்ந்த—கற்புடைச்சைவம் - நிலைகலங்காததைசவம்—வாழ்க - வாழக்கடவது —அண்ணலல்லமன் -

கர்த்தனுகியஅல்லமனது—சீர்கேட்கும் - சிறப்பைக்கேட்பதற்கு—ஆதர வாளர் - ஆசையுடையவர்கள்—வாழ்க - வாழக்கடவர். எ - று. இதுவு மிடையிற்கலப்பு. (௨௫)

பொருவரும் பூதி வாழ்க பூதியை யணிவோர் வாழ்க
திருவளர் கண்டி வாழ்க சிறந்தவஞ் செழுத்தும் வாழ்க
குருவருள் வாழ்க மெய்மையைக் கூறுநா வோர்கள் வாழ்க
வெருவரும் பிறவி தீர்க்கும் வித்தகர் வாழ்க வாழ்க.

(இ - ள்.) பொருவரும் - ஒப்பற்ற—பூதிவாழ்க - விபூதிவாழக்கட வது—பூதியையணிவோர்வாழ்க - அதனையணிபவர்வாழக்கடவர் —திரு வளர் - அழகுமிக்க—கண்டிவாழ்க - கழுத்திலணியுங்கண்டிவாழக்கட வது—சிறந்த - சிறப்புற்ற—அஞ்செழுத்தும்வாழ்க - பஞ்சாட்சரம்வா ழக்கடவது—குருவருள்வாழ்க - குருகிருபைவாழக்கடவது—மெய்மை - உண்மைநிலையை —கூறுநாவோர்கள்வாழ்க - சொல்லுநாவுடையோர் வாழக்கடவர்—வெருவரும் - பயத்தரத்தக்க—பிறவிதீர்க்கும் - இனிப் பிறவிவராமற்செய்யும்—வித்தகர் - ஞானவான்கள்—வாழ்கவாழ்க - என்றும்வாழக்கடவர். எ - று. வாழ்கவாழ்கவென்று அடுக்கு உவகை பற்றியது. (உக)

அல்லமன் சரிதச் செய்யு ளதனிலோர் செய்யுள் கற்க
வல்லவ ரருத்த மோத வல்லவர் வுரைய வல்லோர்
செல்வமீ தென்ன வன்பாற் செவிப்புல னிறைக்க வல்லோ
ரெல்லவ ரும்பூ மீதி லென்றும்வாழ்ந் திடுக வன்றே.

(இ - ள்.) அல்லமன் - அல்லமனது—சரிதம் - சரித்திரம்வாய்ந்த— செய்யுளதனில் - கவிகளில்—ஓர்செய்யுள்கற்கவல்லவர் - ஓர்கவிகற்க வல்லவர்களும்—அருத்தமோதவல்லவர் - அர்த்தஞ்சொல்லவல்லவர்களு ம்—வுரையவல்லோர் - உரையெழுதவல்லவர்களும்—செல்வமீதென்ன - செல்வத்திற்செல்வமீதென்று—அன்பால் - அன்பினுல்—செவிப்புலன் - செவிபுலனில்—நிறைக்கவல்லோர் - நிறைக்கவல்லவர்களும்—எல்லவ ரும் - யாவருமே—பூமீதில் - பூமியில்—என்றும்வாழ்ந்திடுக - எப்

போறும்வாழ்க்கடவர். ௬ - ற. அன்று-௪-அசைகள். ஒதல்; ஒலிவடிவம். வரைதல்; வரிவடிவம். செல்வத்துட்செல்வமாவது; திருக்குத்திரியங் கனிலையந்திரியின் மையை. (௨௭)

மான்மியகதி - முற்றிற்று.

ஆக கதி - ௨௫ - இ - திருவிருத்தம் - ௩௫௭.

பிரபுலிங்கலீலையுரை முற்றிற்று.

குறைமங்கலம். சிவப்பிரகாசதேசிகர் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

செய்யுளகராதி.

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
அ.			
அகழ்கின்றார்	௩௪௩	அந்தணனிருங்கலை	௧௧௬
அகழ்ந்திட	௨௬௪	அந்தியண்ணைத்	௨௪0
அக்கொடுவென	௪௭௮	அந்திலேபலம	௧௨௬
அங்கமதினஞ்சி	௧௪௫	அப்பொழுதருகு	௨௩௮
அங்கலிங்க	௫௩௨	அமலையேய	௧௬௪
அங்கியென்றற்	௨௮	அம்பராசனமி	௪௯௪
அங்குமாயைமதமானி	௧௪0	அம்பொன்வைப்பின்	௩௯௫
அங்குமைமாதி	௫௮௧	அம்மையுண்மகிழ்வு	௫௮0
அங்கைச்சிவலிங்	௩௧௪	அயர்ந்துநிற்கு	௨௨௭
அங்கையினமர்	௪௧௪	அயனுமாயனு	௪0
அங்கொருமடவர	௮௫	அரங்கினிடை	௧௧௪
அசைவறு	௫௨௨	அரசியலடைந்தார்	௩௭௮
அசைவிலல்லமற்	௨௨௪	அரத்தமதாறு	௨00
அடலுறு	௧௪	அரவின்காவல	௩௨௪
அடவிகடோறு	௨௩௩	அரவுகொளிய	௩௭
அடன்மலி	௩௫௭	அரவுலாஞ்சடை	௩௩
அடிக்கமலங்கள்	௧௨௬	அரவொடுமென்	௫0௬
அடியர்வேண்டிற்	௩௨௫	அரனடியவர்க்கு	௨௬௮
அடியவர்க்கெளி	௩௬௬	அரிமதர்மழை	௧0௬
அடியனேன்	௪0௨	அரின்மிகுத்திட்	௨௨௬
அடுத்தநாடிக	௪௩௮	அருகர்வாசகங்	௫௧௫
அடுத்தமாதவ	௬௭	அருகிருந்த	௧௬௬
அடைக்கலமென	௨௮௭	அருங்குருலிங்க	௩0௪
அடைக்கலமென்னே	௩௮௬	அருச்சனைமுன்பு	௧௯௯
அடைந்துள	௪0௮	அருந்தவநெமிநான்	௧௫0
அணியெரிந்தன	௩௪௬	அருந்தவமழிக்கு	௧௫௩
அணுமயங்கு	௪௬௬	அருந்தவமுயன்ற	௪௭௭
அண்ணலுமார்வ	௫௫௧	அருந்தவமுனிதீ	௭௨
அண்ணலைம்	௧௬௩	அருந்தவம்பல	௨௩௨
அத்தவீச்சிற	௪௬௬	அருந்துகவெனவடி	௫௩௬
அத்தனேர்	௪௫௬	அருமறைமுடியுஞ்	௫௭௭
அத்திருமாலு	௧௬	அருளான்மருள	௩௯௮
அத்திறஞ்செனுஞ்	௫௧௩	அருளிறைனினதடி	௪0௩
அந்தக்கரண	௫௬௪	அருளொளும்புனலினை	௪௪0

செய்யுள்.	பக்கம்.
அருள்செயுமல்லம	௩௦௦
அருள்செய்தென்னை	௨௮௫
அலர்சதிர்ஞாயி	௫௦௧
அலைந்துபிறப்பி	௧௭௯
அல்லமகுரவன்	௫௦௪
அல்லமனருள்பெறற்	௫௭௩
அல்லமனறிந்து	௧௯௦
அல்லமனறைந்த	௩௫௯
அல்லமனறைந்தமாற்ற	௬௪௪
அல்லமனனைய	௧௩௯
அல்லமனுயிடை	௫௧௯
அல்லமனியல்பறிந்தங்	௫௨
அல்லமனியல்பெலா	௬௩௬
அல்லமனிவன்றன்	௪௬௬
அல்லமனெனு	௩௮௯
அல்லமனென்னுஞர்னை	௨௩௬
அல்லமனென்னுமருட்	௩௨௮
அல்லமனை	௪௮௮
அல்லமன்கண்டு	௪௪௫
அல்லமன்சரித	௫௮௫
அல்லமன்புகன்ற	௩௭௬
அல்லமன்பெருமை	௨௩௯
அல்லமன்வலிகிலை	௧௯௮
அவத்தைகள்	௩௮௮
அவளையும்	௫௪௭
அவனெழின்மனை	௨௪௪
அவிர்சடைமுனிவர்	௧௨௦
அழிவருநிதிய	௨௩௮
அழிவிலாவை	௩௧௬
அழிவுமாக்கமு	௬௧
அழுதுவாய்விட்	௨௩௦
அளக்கரும்விரத	௫௭௫
அளவறுமடியர்க்	௫௬௧
அரியனென்று	௨௧௫
அரிளிக்கொளும்	௧௩௨
அறஞ்செயுநின்கலை	௫௭௪
அறத்தறப்பெய்தினு	௬௦௫
அறமழிந்தனை	௩௩௨
அறவினைக்கு	௬௩௫
அறிந்திடாம	௩௨௩
அறிவருளாதர	௨௪௭
அறிவறிஞானி	௩௬௧
அறிவெனும்	௬௮௦
அறிவொடு	௪௮௧
அறுசுவை	௩௭௫
அனைந்ததாயவ	௩௧௭
அனையகாலையி	௯௫
அனையதேனும	௬௭
அன்புறுய்	௬௭௯
அன்பினுலன்பர்	௨௧௮
அன்பினுளமுருகி	௧௧௩
அன்னகாலையி	௩௫௦
அன்னநடையு	௮௨
அன்னமண்டபத்	௨௯
அன்னமீனுட	௩௯௪
அன்னமொன்றறி	௩௭
அன்றேன்மனைவி	௭௫
அன்னைநீ	௪௨௮
அன்னையும்பிதாவு	௨௯௭
ஆ.	
ஆகமம்புகனெறி	௬௦௫
ஆக்குறுஞ்செய	௨௧
ஆசறுமனத்தெழு	௪௩௧
ஆசுதீர்ந்த	௫௯௫
ஆசைநின்னுள	௧௫௩
ஆசையறுதல்	௫௯௫
ஆடிபொன்றெதிர்	௧௮௩
ஆடினர்சிலவ	௫௨௫
ஆடுவ கவரி	௫௧௧
ஆடுனர்நம்	௫௪௮
ஆட்டுநிற்ப	௨௧௯
ஆனையைவெருவி	௧௯௩
ஆதரவிலை	௩௮௩
ஆதரவுடையான்	௩௮௪
ஆதலாலவ்	௫௫௫
ஆதலாலன்பி	௩௮௫
ஆதலாலெழி	௧௮௩
ஆதலால் வீரசைவ	௫௭௯
ஆதலான்மன	௩௯௨
ஆதனத்தி	௬௦௧
ஆதி பகவன்	௬
ஆதிய வரன்முறை	௧௧௦
ஆதியாதார	௬௯௧

செய்யுள்.	பக்கம்.
ஆதிநாதன	௬௫௯
ஆயகாலையி	௧௯௫
ஆயிடைதின்றேர்	௩௭௯
ஆயிடையருகு	௫௪
ஆயிடையருணந்தி	௫௭௨
ஆயிருக்கு	௪௮௩
ஆயின்மிக்கோ	௪௩௭
ஆயுமின்சுவை	௯௬
ஆய்ந்திருந்தனன்	௯௦
ஆரையாரிருந்	௨௧௭
ஆவனற்றுண்மை	௨௯௧
ஆவுரித்திடினுந்	௫௩௪
ஆவுறுபிணிகெட	௪௦௯
ஆளகாலையி	௬௪௧
ஆனைமேற்கொண்டிம்	௫௦௯
ஆன்றமையல்	௧௮௦
ஆன்றிரட்டுறு	௧௦௩
இ.	
இகழ்ந்தெனதுள	௪௦௩
இக்குழுமகளிருள்	௪௦௮
இங்குத்தன்னுள்	௩௭௧
இங்கு மருள சங்கரன்	௩௯௯
இங்கொருமரையை	௯௯
இடுதற்குவல்லா	௫௪௯
இடையொரு சற்றுயா	௧௦௭
இட்டவர்மறிய	௫௪௯
இணங்குமிக்க	௩௯௯
இணையிலாத	௫௯
இத்தனையாட்ட	௨௦௪
இந்தக்கன்னி	௮௨
இந்தவுலகிற்	௧௭௨
இந்தியமோரொன்	௩௯௧
இந்தியம் விடயங்	௫௨௫
இந்திரிருவிற்	௧௨௩
இந்திர னிவனென	௫௧௭
இந்திரனெதிர்	௨௯௨
இத்துவார்சடை	௨௪௯
இந்தகர்வாழு	௨௫௧
இப்பரி சருளிறுலே	௩௮௩
இப்பரிசெறும்	௪௮௯
இப்பெருப்பீட	௪௯௫
இம்மம காரனு	௯௯
இம்மாநகரிற்	௯௩
இம்முறைநசங்கம	௫௩௭
இம்மைசேர்பயன்	௨௮௧
இயங்கடரங்க	௨௭௫
இயங்குவதிற்ப	௨௩
இரண்டோடிரண்டு	௧௭௩
இரப்பார்வரி	௯௪
இரவி வானவ	௬௫௯
இருந்தபடி	௬௭௨
இருந்த வாறி	௩௦
இருந்தவாரு	௩௯
இருவினைதாய்வரும்	௫௯௨
இலங்கிலைவேன்	௨௧௯
இலங்குந்நெறு	௩௭௨
இலையினுற் பொலிந்த	௫௦௩
இல்ல மகன்றிவ்	௩௩௦
இவண்மனங்	௧௯௫
இவ்வகைகல்பா	௨௯௯
இவ்வணங் கருத்தழிந்	௧௦௯
இவ்வர்நமர்	௬௯௮
இவ்வாறருந்தி	௫௫௭
இவ்வாறருளாற்	௫௪௦
இழிப்பினும்	௫௩௭
இளங்கொடி மருங்கு	௧௧௭
இறங்குதுறையி	௧௩௩
இறுக்கினர்முக்குடை	௩௩௯
இறைவனாங்கணெனு	௩௧
இறைவியொன்று	௧௩௪
இனத்தியல்பாமழி	௧௦௭
இனியான்மறைப்ப	௧௩௪
இனையதிக்கைகலை	௨௯
இனையமாநகரி	௨௫௨
இனையராகி	௧௭௩
இனையராகியிருந்	௫௩௩
இனையவாழை	௪௩௦
இனையனவளயி	௬௫௫
இன்பகனிசெய்	௩௦௭
இன்னுகாமனை	௪௨௫
இன்றேருலவி	௧௪௬
இன்னணஞ்சுளி	௫௧

செய்யுள்.	பக்கம்.
இன்னணநகர	௨௬௯
இன்னணநன்னெறி	௩௧௯
இன்னணமாரசன்றே	௯௩
இன்னணமலங்க	௫0௫
இன்னணமல்லம	௫௭௩
இன்னணமடவை	௪௯
இன்னணமாமை	௧௫௪
இன்னணமையிரு	௯௭
இன்னணம்படைத்த	௫௪௯
இன்னமாதரசன்	௨௫௪
இன்னவாறருளி	௫௮௨
இன்னவாறிங்	௪௮௩
இன்னவாறு	௩௪0
இன்னவாறெழுந்	௫௧௨
இன்னவாறெவி	௪௯௮
இன்னியாங்களின்	௪௩௯
ஈ.	
ஈங்குமாதேவி	௨௪௮
ஈசனளித்த	௯௨
ஈசனூர்மூக	௩௨
ஈசனையிருந்து று	௩௧௯
ஈன்றதாதொடங்கிச்	௨௫௯
உ.	
உங்கள்பாவனை	௧௮௪
உடம்புவாழ்த	௬௫௯
உடம்பெலா	௫௧௯
உடம்பெறும்	௫00
உடம்பொடு	௫௨௪
உடம்பைப்பொறி	௧௭௨
உடலமான	௪௨௯
உடுப்போர்க்	௯௧
உணர்ச்சில	௯௨
உண்விளையாடல்	௫௪௪
உதித்தஞாயிறு	௩௫0
உயர்பிரசாத	௩௮௮
உயிரெனும்பெய	௪௯௨
உயிர்த்தபொழுதே	௧௪௭
உரகர்சித்தர்	௪௧
உரவசைந்திடா	௧௨௪
உருப்பமிகுவன்	௧௪௫
உரைக்குமெச்	௫௭௯
உரைசெயிற்	௩௫௯
உரைத்தமொழி	௩0௫
உரைமனமெய்	௯௮௨
உலகிலொருவன்	௫௫௫
உலருளவிஞ்சை	௧௨௮
உலகுளார்	௪௨௩
உலகெலாமறிய	௧௫௮
உளக்கெளி	௨௭௧
உள்ளமார்வமோ	௨௮௪
உறவுசெய்தறிந்த	௨௯0
உறையில்வாளொடு	௨௮௨
உன்னருளுளதே	௫௨௭
ஊ.	
ஊன்றுஞான	௪௩
எ.	
எங்கள்வாழ்வனைய	௫0௮
எங்குருநந்தி	௨௫௫
எடுத்துவிளைக	௩௮
எண்ணியவெண்ணி	௫௪0
எண்ணிலரிடுவ	௫௪௩
என்னுமன்ப	௨௮
எந்தைபாதுமை	௩௯
எந்தையல்லம	௩௫௧
எமையெலா	௩௮௨
எம்மடிமாக	௫0௯
எய்தற்கரிய	௩0௪
எரிப்புரைதளிர்த	௪௪௫
எல்லையில்காமம்	௨௯௩
எல்லொளியிரவி	௫௮௨
எவ்வகைச்சமயந்	௫௭௫
எவ்வன்னை	௨௨௧
எவ்வுருவி	௪௯0
எள்ளிலெண்	௧௮௯
எனக்கற	௩௩௫
என்குணமறமே	௩௮0
என்குறை	௩௫௭
என்பிழைபொறும	௧௫௯
என்மனவிருளற	௩௩௭
என்றனுமிமைய வல்லி	௪௯
என்றவனவரை	௨௯௭
என்றவரறைதலு	௩௪௨

செய்யுள்.	பக்கம்.
என்றவணியம்ப	௩௭௭
என்றறிவறவறிந்	௪0௯
என்றதுணையை	௨௩௯
என்றிதுகொழுநன்	௪௮
என்றுகருணை	௫௭0
என்றுகூறக்	௨௩௩
என்றுகூறவிருந்	௪௮௯
என்றுகூறவெவ்மை	௩௯௮
என்றுகூறிய	௩௭௪
என்றுநனைறிய	௪௭௪
என்றுநல்விமலை	௧௯௪
என்றுநினைந்து	௩௩௧
என்றுபுலம்பி	௧௪௮
என்றுபொன்று	௧௮௫
என்றுமங்கை	௧௩௯
என்றுமாதரார்	௨௮௨
என்றுமெம்முள்	௭௧
என்னநல்விமலை	௧௯௭
என்னநினைந்தே	௨௭௮
என்னப்பலவு	௧௪௧
என்னமன்மக	௧௯௭
என்னவோதலுகிரு	௨௮௩
என்னவோதலுமல்லம	௨௧௩
என்னைக்காண்குவ	௫௧௫
என்னைநீஞ்கி	௨௨௮
என்னைநீவிட்	௨௩௨
என்னையஞ்சி	௨௧௫
என்னையறிவித்	௩௧௩
என்னைவைதவஞ்	௩௪௩
என்னொருகை	௧௧௫
என்னொருகாதல்	௩௫௨
என்னேவறிக்கு	௧௪0
ஏ.	
ஏட்டினைப்புது	௪௯௫
ஏதுசொல்வினு	௪௯௫
ஏதுநான்செய்வ	௨௯௩
ஏற்றியவருள்	௫௩௮
ஏற்றவார்கொடி	௩௧
ஐ.	
ஐந்தொழிலொருவன்	௨௫௩
ஐம்பெரும்பூத	௭0
ஐயநினையு	௩௧௨
ஐயவன்னதே	௨௮0
ஐயவிந்திமித்	௫00
ஐயனுமுனிவுரு	௫௩௮
ஒ.	
ஒடுக்குமனம்	௪௮௮
ஒட்டராம	௩௩௧
ஒட்டவென	௩௩௩
ஒண்டரைக்	௩௨0
ஒருகரற்றல்	௩௫௧
ஒருங்குமனமோ	௧௭௫
ஒருத்தன்வந்த	௩௫௧
ஒருவருவ	௫௨௮
ஒருவன்யான்	௫௩௮
ஒருவன்வந்திடு	௫௧௪
ஒருவிருந்தினர்க்	௪௫௮
ஒலியெழுந்திட	௪௯௮
ஒழியுமென்	௪௯௧
ஒழுகுமருவி	௨௫
ஒறுப்பவனிழித்தவ	௩௩௯
ஒன்றுனகம்பன்	௯௫
ஒன்றிரண்டொழிய	௧௩௧
ஒன்றினென்	௪௧0
ஒன்றுமில்லே	௧௩௭
ஒன்றையுமுணர்	௧௯௪
ஒன்றெருநாவொரு	௩0௧
ஒன்றெருவிடயந்	௫௭௮
ஓ.	
ஓக்கிருவினை	௩௩௪
ஓங்குவாவுடை	௩௩
ஓடியறிந்தே	௨௭௯
ஓடுமாலை	௩௩௮
ஓடிமீளு	௫௩௩
ஓடும்பொன்	௧௩௯
ஓடுறபருந்	௧௯௮
ஓதியாங்கிய	௯௭

செய்யுள்.	பக்கம்.
க.	
கங்கைவார்சடை	௩௪௮
கடலின்விழுந்து	௩௧0
கடிமலர்ப்பசுந்	௩௭0
கட்டுமின்	௩௩௭
கட்டுவார்சடை	௩௭௨
கண்டகந்தி	௫௫௩
கண்டபோதச	௩௧௮
கண்டருளமலனை	௩௮௯
கண்டவரெல்லா	௨௯௮
கண்டனைனவன்	௨0௪
கண்டனேனுவிலே	௨௭௭
கண்டிலே னச	௩௧௯
கண்டுகொண் மணி	௧௯௮
கண்டு செல்லு	௩௯௮
கண்டுவார்சிலே	௨௨௯
கண்ணைகதிலத்த	௯௩
கண்ணைப்ப	௫௪௯
கண்ணுந்காண	௩0௯
கண்ணிலைறபலர்	௩0௨
கண்ணிற்கமைய	௭௯
கண்ணீருற்கேட்டுருஞ்	௨0௩
கண்ணுதலருளா	௨௪௧
கண்பிசைக்கொரு	௨௪
கண்போலுயிர்	௫௫௧
கதந்தருதிரு	௧௨0
கதிரெழுப்கலெனை	௧௩௯
கதிர்விளா	௫௫0
கயிலையின் விமலை	௨௩௩
கயிலையினுமை	௧௭0
கயிலையென்னிடங்	௧௯௭
கயிலையோலக்கத்	௭௩
கரங்கனைல்	௪௩௪
கரிகவமனைசயா	௫௪௨
கருங்கொடி	௪0௭
கருத்தழிகடபி	௩௫௯
கருத்திலையறியா	௧௯௨
கருமமும்போகங்	௩௯0
கருமமோகமுங்	௩௨௯
கரும்பினுமினிய	௧0௮
கரைருழுக	௨௪௯
கரைக்குருபமழு	௩௭௯
கரைபொருகங்கை	௪௯௫
கரையிதுகல்விக்	௪௯௭
கலந்தவர் தமை	௨௯0
கலையைமதிக்கும்	௮
கல்லெறிப்பட்டமை	௩௪0
கழுமணி	௫௨௩
களங்கயின் மதி	௪௯௨
களங்கவெண்மதி	௫௪
களத்திடை	௪௨௨
கள்ளமாயை	௭௮
கள்ளன் மங்கை	௨௧௪
கறங்கெனு	௫௯0
கறையடிக்கனி	௧00
கறையில்சேர்தி	௪௯௫
கற்பழி மனைவி	௨௮௩
கற்றதன் விஞ்சை	௪௨௯
கற்றைநயங்குழ	௩௮
கன்றிய வைரிகள்	௧௫
கன்றின்வாய்	௪௪௩
கன்றுனைவிடாம	௨௮௭
கன்னற்சிலையா	௧௪௭
கன்னிகையென்று	௪௫௧
கன்னித்தன்மை	௧௩௪
கன்னியத்தம்	௯௩
கா.	
காஞ்சிரங் கனி	௩௮௫
காட்டினும்	௪௨௧
காணுதலொழிக	௪௪௩
காதியாயிர	௪௩
காந்தங்கண்ட	௩௧௧
காந்தம் வலிய	௭௫
காமமுனை	௪௩௩
காமருசித்த	௩௨௯
காம வெந்தழலா	௨0௮
காம வெந்தழல்	௧0௪
காமியாகித்	௨௧௭
காம்புதோளி	௩௯௧
காப்புனிக்குத்	௨௨௫
காரணை மிருலே	௭௩
காரணை வடாதி	௪௯௧
காரிற் சிறந்த	௧௩௮

செய்யுள்.	பக்கம்.
காலநின்முனம்	௩௪௪
காலமும் கருமமு	௪௧௭
காலைய ருப்பி	௧௪௩
காலையின் மாலை	௧௫௨
காவலன் காம	௨௯௨
காவி னீடுங்	௪௩௧
காவி யங்கட்	௨௨௯
கானை னீரெனச்	௨0௯
கு.	
குஞ்சயிதய	௪௭௩
குங்குமநறிய	௫0௨
குடிப்பன விழுங்	௪௪௨
குடுமியங்கிரி	௪௮௪
குண்டமே வுறு	௩௯0
குதிரை யங்கதிர்	௩௭0
குப்கமழ்	௫௪௫
குரவர்தம் முறை	௨௮௮
குரவர்தா மிசைந்து	௧௫௫
குருமெலகரங்	௪௪௩
குருவருண்மொழி	௯௩
குழனும் யாழு	௭௯
குழவிபால்குடிப்	௪௨
குழவி யாயுடற்	௨௭
குளங்கலா	௫௪௨
குறிபல பலமுறை	௪0௮
குறிப்பில் வைதலை	௩௪௫
குறில்வழிலகரந்	௨௫௮
குறுகலு மகன்பல	௩௪௧
குன்றெனக்குவித்	௫௪௭
கூ.	
கூடை யென்மலர்	௪0௪
கூத்தறைடக்	௩௨௩
கூத்தாகுப்புருந்த	௨0௪
கூந்தன்மேல்	௨௪0
கூறருமொளி	௫௨௩
கெ.	
கெடுக்கவல்ல	௯௩௭
கே.	
கேட்டவாரியன்	௪0௨
கை.	
கையிற்சிலைவிங்	௩௪0
கையொடு செல்லா	௨0௧
கொ.	
கொக்கி தேவ	௩௧௩
கொங்கவிழ்	௯௨
கொங்கைப் பாரத்	௨௭௭
கொங்கைப் பொறை	௨௭௨
கொங்கை யங்குவி	௧0௫
கொடியவ ளரிந்த	௩௩௮
கொடிய வாள்வரி	௨௧௧
கொண்டல்கண்	௪௫௩
கொலைகள வழுக்கா	௨௫௫
கொல்லா நோன்பு	௧௪௯
கொள்ளைவன்டிழிந்து	௨௩
கோ.	
கோடமை கரிகளுங்	௪௮௧
கோதையர் மாலா	௨௭௯
கோயிலின் முன்னார்	௨௯௧
கோயிலின் மேவி	௨௭௯
ச.	
சகளையில் வாறு	௧௯௨
சங்கமந் தனக்	௪௪௫
சங்கபத்தி	௫௩௯
சங்குமொன்றுட	௩௯
சங்கந் முனிவிலை	௩௯௨
சங்கற்று	௪00
சங்கரன்சடை	௫0௭
சங்கரிபொருளே	௭௧
சங்குந்தெய்வ	௧௭௮
சங்குலவு மென்கை	௯௧௧
சங்கொடு தன்னுமை	௯௮
சசிதரந்த	௩௧௯
சத்தியால்	௨௩௯
சத்த மேவு	௩௯௫
சமயமெய் வகையி	௫௭௩
சரிதையொன்	௫௪௩
சற்றிலு முனக்	௧௮௪
சற்று தாமை	

செய்யுள்.	பக்கம்.
சா.	
சாக்கிய ஞெறி	௯௯௮
சாத லஞ்சலு	௯௭௯
சாதியுங் குறிய	௨௯௯
சாந்தனேறிய	௯௯௨
சாற்று மச்	௯௯
சி.	
சிங்க மூஞ்சி	௨௩௯
சிட்ட செல்வம	௪௦௦
சித்த ராமனுஞ்	௪௪௧
சித்த ராமனே	௯௭௯
சித்திய மாயுறுஞ்	௧௯௧
சிரனுமிது	௪௯௭
சிலைநுதல் விமலை	௨௦௯
சிலை தற்பகக்	௨௯௯
சிலைமத னின்று	௨௦௫
சிவிகையி னிழிந்து	௧௬௯
சிறப்புப் பெற்ற	௯௪௩
சிறுச்சிறி	௫௪௦
சிறுபொழுதைக்	௯௦௪
சினைமுதலிய	௬௧௯
சினைமலர்	௪௩௯
சீ.	
சீர்கெழுவசவன்	௯௭௯
சீர்மிலை யல்லம	௯௦௦
சு.	
சுத்தமெய்ஞ்ஞானு	௧௨௪
சுரகு வாரியன்	௩
சூ.	
சூத்திரப் பாவை	௯௮௧
செ.	
செங்கதிரவ	௪௫௨
செஞ்சர ணிறைஞ்சி	௯௭௫
செப்பமைந்த	௯௮
செப்புநஞ்சுணி	௨௯௪
செம்மைநெறி	௫௫௨
செய்தமிழை	௪௭௧
செய்யதாண்	௯௫௯
செய்யவல்ல	௮
செருக்கொடுஞ்சிவ	௪௨
செருக்கொழிக்	௯௪௭
செல்லங்களோத்து	௯௯௯
செல்லுறழ்குழலிர்	௧௨௭
செவ்வாய்நுரண	௧௭௯
செறிந்தழூல	௪௫௮
சென்றருளன்மதுரைக்கு	௧௨௪
சென் றவைசவ	௫௫௯
சென்றுதேடி	௪௨௯
சென்னவைசவன்	௫௫௦
சே.	
சேடனும் புகழ்	௯௯௯
சேவெப் பிரமைர்	௯௪௯
சேலு லாவித்	௫௮
சொ.	
சொல்லைந மழகன்	௧௪௯
சொல்லிய	௯௮௯
சொற்போர்செய்து	௧௯௮
சொற்பெர்புரிவர்	௬௦
சொற்றிங்குதலை	௯௮௨
சொற்றெறித்த	௨௯
ஞா.	
ஞானகுருபர	௪௭௫
ஞானங்கொண்டு	௪௮௯
ஞே.	
ஞேயஞான	௪௨௭
த.	
தக்க தந்தைதாய்	௨௨௫
தக்கன் மகத்தி	௧௪௪
தண்டகா யகவிவந்	௫௨௦
தண்டநாயகநெறு	௪௨௯
தண்டநாயகன்கரத்	௪௪௪
தண்டநாயகன்றன்	௫௧௫
தண்ட நாயகன் வெறுள்	௫௧௪
தண்டினர்	௫௦௭
தண்ணைக் இக்கரிற்	௫௨௮
தண்ணளிவபுனைசாரு	௧௯

செய்யுள்.	பக்கம்.
தண்ணுமை விளங்க	௧௧௫
தத்துவ முற்று	௯௨௭
தந்திர முடிவென்று	௫௨௧
தந்தைதாயில	௧௮௫
தந்தை தாயுள	௧௮௯
தமக்க டாதது	௨௮௧
தமிழில்வேலயி	௨௦௨
தம்பிரானருள்	௯௪௭
தயிலமுடனுனிடந்	௧௧௧
தரித்தபின் றனர்	௨௫௯
தருக்கமின்னுட	௧௯௮
தலைமைகொள்	௪௧௫
தலையில் வெண்கலை	௪௨௨
தலைவியின் னவை	௪௭
தளர்ந்தழி	௭௦
தனிரியல் காமத்	௧௯௨
தளிர்க்குள	௪௫௪
தளிர்த்தகன்	௧௨௨
தறிபோ இடல	௧௭௪
தனுவுள	௪௧௭
தலைய ராகிய	௨௨௯
தலைவிரும்பி	௯௪௯
தன்கனி வாய்திறந்	௧௨௮
தன்னன வரியான்	௫௯
தன்னினமாபிரமன்	௯௫௯
தன்னைக்காண	௨௭௨
தன்னைக்கொல்லினுந்	௯௪௭
தன்னைச் சச்சிதா	௬௯௨
தன்னைச்சிவமென்	௫௯௯
தன்னை நிந்தைசெய்	௯௮
தன்னைப் போத	௫௭௭
தன்னை யறிந்இடை	௨௭௪
தன்னையோர்	௬௪௮
தா.	
தாடலை தந்திங்	௨௫௯
தாணுவி னுயர்	௯௮௭
தாமுறு நுகர்வும்	௬௧௯
தாய்க்குலமூவின்	௯௯௯
தாய்வா யடைந்த	௧௯௪
தாலி லாத	௪௯௯
தாவில் புசனே	௫௯௧
தாழ்ந்தோ ருயர்வ	௯௨
தானை வரிதொரு	௪௨௩
தானுறு முடன்	௬௧௨
தானெனிர் நிமலனைச்	௯௦௯
தான்செயுந் தவநுந்	௩௫௯
தான்செய் வினை	௯௦௯
தி.	
திங்கள் வாணுதன்	௧௦௯
திருதக சிதனை	௫௦௪
திருந்தவிய்வசைக	௪௧௯
திருந்திய பளிங்கு	௪௯௯
திருந்திய வினையான்	௨௫௨
திருப்ப குப்பத	௪௯௭
திறந்து மூஸின்	௯௭௧
திறைறதா னைக்கு	௮௪
தீ.	
தீங்கனி பாலொடு	௯௦
தீங்கினை யெறிர்	௯௯௯
தீங்கு சாரனுஞ்	௨௨௪
தீதறு கழைக்க	௭௯௧
தீதுசெய் சமணர்	௨௭௦
தீயவோனறிவி	௯௫௨
து.	
துதிப்ப ரோர்சிலர்	௪௫
துயிலவ யின்பென	௪௯௪
துனிக்கும் வார்மது	௨௯௧
துறவற மனைய	௯௮௪
துறவெனு மாக	௨௯௫
துன்றிய மெய்த்தவர்	௫௯௯
துன்று வெண்படை	௧௦௯
தூ.	
தூங்கிசை	௪௫௦
தூண்டொளி	௯௮
தூது சென்றவர்	௨௮௪
தூது வல்லதன்	௨௮௦
தூதுருமலநு	௨௪௫
தூயசோதிப்	௧௪௯
தூய்தாகியநெஞ்	௫௧௮

செய்யுள்.	பக்கம்.
தெ.	
தெரியநற்றண்ட	௫௨௧
தென்னுவார்தினை	௩௯
தென்னவன்	௯0
தே.	
தேசிகனல்லம	௩௨௫
தேவருன்னை	௫௫௪
தேவருமுனிவரு	௫௨௨
தேறுமென	௬௨௮
தொ.	
தொக்ககமலம்	௧௪௨
தொடர்ந்துபின	௩௭௪
தொடர்ந்துசெப	௩0௯
தொல்லைநெருசடா	௧0௮
தொல்லையின்றிரு	௨௧௩
தொல்லையிறுயர்	௪௩
தொழிலான்	௩௯௨
தோ.	
தோதுடைப்பரன்	௩௪
தோன்வலம்	௫0௮
ந.	
நக்கிருந்தகொடி	௨௯
நகைமதிப்	௪௪௯
நங்குரவினை	௩௩௭
நடம்பயில்வெண்ணை	௨௩௩
நண்ணியாகங்கனை	௫௭௪
நண்ணிவென்னருடை	௧௩0
நன்றுறு	௪௫௪
நந்தனைத்தரு	௫௩௯
நந்திநனைவடி	௫௨0
நந்திகல்லவசல	௫௭௪
நந்தியென்னின்ற	௨௪௧
நந்தியென்றுனை	௨௪0
நார்வடிவாயினு	௪0௯
நலங்கிளர்	௫௩
நலமலியயலி	௨௮௯
நலமுறுமோர்	௩௯0
நல்லசருண	௧௩௯
நல்லசெய்து	௪௩௫
நல்லமதநந்தா	௨௭௯
நல்லறிவவு	௬௭௯
நல்லனறியன	௬௭௮
நல்வெழில்விமலே	௧௯௮
நளிர்கடற்றுயி	௫௯
நன்னாதொழியி	௧௩௭
நறவவிழ்த்த	௫௭
நறியபுகை	௧௧௩
நறுமலர்க்குழல்	௪௫௨
நறுமலர்நிறை	௩0௨
நறும்பழஞ்செறி	௩௯௭
நற்குறிபலவு	௪௩௯
நற்றாமரையமழ்	௮௪௨
நனவொருபுன்	௨௨0
நன்மையென்பன	௨௪௪
நன்றியோராடிக	௧௭
நன்னகமகன்	௨௩௯
நா.	
நாடியபைரடி	௮௪௯
நாடோறு	௪௪௯
நாம்பார்க்குழ	௧௭௯
நாயிறுவிசீர்	௨0௯
நாலுவைக்குதி	௨௯௯
நார்த்திதரு	௯௫
நார்குரை	௪௯௨
நாளினைந்தனள்	௮௩0
நாளியத்தி	௯௮௨
நான்முகவன்டக்	௨௩
நி.	
நிகழ்த்துல	௩௩௩
நித்தியநிமல	௩௯0
நின்றதுசெய்நெறைம	௩௭௫
நினைந்துசெய்யுனைவி	௨௮௭
நிரந்தரமடியார்	௧௯௯
நிலமகள்பொருது	௩௮௧
நில்லாதபோமனை	௯௮௯
நினைவலன்புனைர்	௧௩0
நினைவிருவொரு	௭௫௩
நின்கருத்திசை	௮௫
நின்றுபோதெறிர்	௯௩௩
நின்றமனைக்	௯௩0
நின்றவலெருத்து	௨௯௩

செய்யுள்.	பக்கம்.
நின்றவன்றனை	௩0௩
நின்றன்விம்பமே	௧0௧
நின்றுறத்தகண்டேன்	௩௧௨
நின்னைநோக்கவு	௪௪0
நின்னையறியா	௪௭௧
நின்னையறிவன்	௩௯௫
நின்னையுமதிக்	௩௪௮
நீ.	
நீலவில்லமன்	௧௯௭
நீர்நிலைகோலா	௨0௨
நெ.	
நெஞ்சஞ்சோகம்	௫௩௯
நெஞ்சமரணம	௪௩
நெஞ்சமாரழல்	௪௨௩
நெஞ்சம்யாதினு	௨௧௫
நெஞ்செஞ்சமகலி	௭௪
நெடியவன்	௪௫௩
நெறிபலமுறை	௧௧௫
நெறிமுறைநிருமல	௨௪௩
நெற்றித்தி	௩௪௭
நை.	
நையாமனத்து	௧௭௮
நோ.	
நோக்கிறு	௫௪௮
நோய்ப்பிறப்பிலா	௧௯௨
நோற்றுநோன்பு	௪௮௩
ப.	
பங்கவளற்று	௧0
பங்களிருந்த	௩௨௪
பசிக்குமருந்து	௩௯௪
பஞ்சின்மென்	௨0௭
படிகொண்மாமுடி	௪௪
படிக்குளிரப்	௫௭
படிமிசைதவம்	௩0௧
படியில்கல்யாண	௨௩0
படியில்வந்த	௩௨௧
படியில்வள்ளி	௯0
படைக்கலங்களி	௪௫
படைத்திடுந்	௫௪௮
பணிக்குயிரோருமன்	௩௪௮
பண்டுபோசந்	௧௭௭
பதியுமப்பதியாற்	௫0௫
பதியைமேவுறு	௯௪
பத்தரைப்புகழ்	௪௧௮
பத்தர்கடங்கள்	௫௫௮
பத்தர்தம்மனை	௩0௩
பத்திக்கடலே	௩௯௭
பத்தியிற்றவறிலேன்	௫௩௫
பந்தபாசமுழுதும்	௩௨௧
பந்தமகன்ற	௩௯௩
பயக்குறுமினிய	௨௪௮
பயன்நிலையருக்	௧௯0
பயிலிகல்வினை	௨௩௪
பரிலம்பிரா	௯௮
பரசிவலிங்கபூசை	௩௭௮
பரசிவலிங்கமொ	௪௪௭
பரமமூர்த்தி	௪௩௨
பரமனையிகழ்ந்து	௨௫௯
பரவுபெருஞ்சீ	௮0
பரவைக்கேள்வன்	௧௨
பரற்கண்மென்	௨௨௭
பரிகளின்	௫௧௧
பரித்தநந்தி	௫௫௨
பருப்பொரு	௫௪௧
பருவமேத்தா	௫௭௯
பருவமுற்றி	௩௫௮
பலரொடுவெரினு	௨௩௮
பன்னம்புகு	௪௯௭
பறந்திடாமணி	௩௪
பறையடித்தின்று	௨0௫
பற்றியாயிடை	௨௧௩
பற்றுமனமோ	௧௧௭
பனிவரை	௪௭௭
பா.	
பாகமரகப்போங்கி	௮௩
பாகமொருபெண்	௭
பாருவெள்ளிவெ	௧0௫
பாங்கியர்பகர	௯௫௭
பாசமேது	௫௩௨
பாடிலன்	௪௧௯
பாடியோர்தரும்	௨௩௧

செய்யுள்.	பக்கம்.
பாண்டிண்டா	கூடு௪
பாண்டின்மே	ருசரு
பாயும்வெண்டிரை	௪00
பார்கெழுசகாத்த	ருஅகூ
பார்த்தரு	கூகூ0
பாவமும்பழியும்	உ0எ
பாவியேன்முக	கூகூஅ
பானலங்கருங்	உ0அ

பி.

செய்யுள்.	பக்கம்.
பிணிதபவேண்டி	எச
பிறந்தபயன்	எனகூ
பிறந்தமெய்ஞ்ஞான	உருஎ
பிறந்தவாகமொன்	௪கூ௩
பிறப்பெனுங்	கஅச
பிறன்பொருகோடி	கூஉரு
பிறைதவழுநெடுஞ்	கசஉ
பின்னருமம்முறை	ருச0
பின்னும்வேணி	கூகூ

பீ.

செய்யுள்.	பக்கம்.
பீடுறுகருவி	சருக
பீடுறுமானிட	௩கூக

பு.

செய்யுள்.	பக்கம்.
புகன்றவருளத்தி	எச
புண்டரந்திரு	ருகூ0
புண்ணியமுதிர்வி	௨0௪
புண்ணியம்பிறர்	௩௪0
புண்ணியமுலகில்	ருஅ௪
புத்தனிச்சம்	கூரு
புரஞ்சுடுசிறுநகை	உ௪கூ
புரத்தைதவென்ற	கூ0
புலம்பினைந்	கூகள
புலன்தனை	கூகூக
புறங்கறை	கக
புறத்துக்கருமம்	கூ0எ
புறந்தருசமய	ருஎஎ
புறந்தினைந்	ருகூகூ
புறம்புகான்	சகூகூ
புனைவின்வினையா	கசஉ
புன்மரநெனி	ச0ச

பூ.

செய்யுள்.	பக்கம்.
பூங்கொடியன	உருகூ
பூசனைசெயாநவ	௪கக
பூசனைசெய்தயின்	ருகூகூ
பூசனைத்தொழில்	ருகூரு
பூசைநெகிழ்ந்தனை	௩கூகூ
பூதியிலே	௪உஎ
பூதலத்தைப்பொருந்	ருச
பூர்தொடை	அகூ
பூப்புனைகையு	சகக
பூவாய்நெடுங்	கூ
பூவிரேறு	கூகூ௫

பெ.

செய்யுள்.	பக்கம்.
பெடையொடு	உசகூ
பெடையொடுற்று	ருஅ
பெண்ணிற்கரசு	கஉ
பெயர்க்குறு	சஅஉ
பெய்யுமாமழை	௪௪
பெரியவர்சிறியவ	ருகூச
பெரியவர்தம்மை	கூருரு
பெருகனற்றினி	௩கஉ
பெருந்தகைமாச்	கூஅ0
பெருந்தகைவசவ	கரு

பே.

செய்யுள்.	பக்கம்.
பேரறிவின்றுன்	
பேசானந்தம்	கூகூ0
	கஎஎ

பொ.

செய்யுள்.	பக்கம்.
பொங்குமாரமுல்	
பொடியணிந்	உகஉ
பொருந்தமத்	கூகச
பொருப்பிறை	உஎக
பொருவரும்பூதி	சசஎ
பொருவிலாவள	ருஅரு
பொருவிலியாகமம்	ருகஅ
பொருவிஞ்சற்	கஉஉ
பொலிவழிவதனை	ச0௩
பொழிந்திழிமழை	உகூச
பொழிகள்கரை	கருக
பொறித்தவாழை	ருரு0
	கூஎகூ

செய்யுள்.	பக்கம்.
பொறியிலியேன்	உகூஎ
பொறியிற்புறத்து	கூ0அ
பொறிவழிசெலா	சயஉ
பொறைக்கயிற்றிற்	ருரு
பொறையுறும்படி	கூசரு
பொன்னுணமை	சகூஅ
பொன்னிலங்கிய	௪0கூ
பொன்னிற்குன்	௪௪கூ
பொன்னெயிலி	க௪௪
பொன்னையன்ன	உஉக

போ.

செய்யுள்.	பக்கம்.
போகபூமியினிற்	சஎ
போக்கரும்	உகூரு
போக்கும்பொருளா	எஎ
போதகருரு	ரு0க
போதகனுறிய	எஎச
போதமாளும்	சஅரு

ம.

செய்யுள்.	பக்கம்.
மகனுமல்லனவ்	உஉஅ
மக்கண்மாணிட	ககூகூ
மக்கலத்தொழி	௩00
மங்கைபாலடைந்	உஅகூ
மங்கையீர்கியிர்	கருகூ
மங்கையையிவனைஞ்	உகூஅ
மங்கைவருமத்	ககூகூ
மடற்றைசைய	உ௬உ
மட்டவிழ்குழலன்	உகூரு
மட்டறவேயு	கூஉகூ
மட்டிக்களைவே	அக
மணம்புரிதந்தன்முகன்	கருரு
மணியமைமைந்தபொற்	கூரு
மண்டலமைத்	ருஉகூ
மண்ணெபேரானி	ச0க
மண்ணினிடை	ருககூ
மண்ணுலகி	உகூஅ
மதலையாகிய	சருஎ
மதிபெருகடலென	உஉரு
மதியிலார்மதிக	ருஅகூ

செய்யுள்.	பக்கம்.
மதனைநாதனை	ககூச
மத்தநெஞ்சக	கஅ0
மத்தமதுரு	உகூஎ
மத்தர்வாத	சகூஉ
மத்தளங்கொடு	உஉரு
மந்தரகிரிப்பேர்	எரு
மந்திரதந்திர	ககூச
மந்திரிக்கிழமை	உகூரு
மயக்குமெண்டது	கஉஎ
மயங்குதலின்றி	ருருஅ
மயலளற்றான்	ககூ
மயலிலாங்குரு	ருஉ0
மயிலெழுந்தென	௪0உ
மரிப்பொறிப்பு	உகூக
மருண்டவர்	கூசக
மருந்திறைவட	௪கூரு
மருந்துகொண்டு	௪கூச
மருவிகின்	ருகக
மருளடைந்தனன்	உககூ
மலர்மிசை	கூச0
மலைமகள்குரா	ககூ0
மலையென	ருசரு
மழுவலமுயரிய	கஅஅ
மறவினை	கூகூச
மறித்திடா	சச0
மறைந்திருந்த	கூகஎ
மறைநடல	சஅஉ
மறையினுன்ள	சஅரு
மறையுங்கலைகள்	கூஉ
மனத்திருவாற்	ரு0கூ
மனத்தையடக்க	ருகூஉ
மனமிலிங்க	சகூஉ
மனமொருத்	௪கூரு
மனிதருரைகர்	கூகூஉ
மன்னர்மன்னன்	௪கூஅ
மன்னனதியி	கசக
மன்னவன்வர்தன	கூக

செய்யுள். பக்கம்.

மன்னனன்பிக் ௫௬௬
மன்னுகாம ௪௬௯

மா.

மாசறுகந்தி ௨௪௦
மாசறுமல்லமப் ௫௮௪
மாணைப்புன்புனே ௬௨
மாணுநெடுங்கரி ௨௭௫
மாதரிவ்வகை ௧௦௨
மாதரிவ்வனைந் ௭௧௦
மாதர்கடலமை ௨௯௬
மாதர்வல்வினைந் ௧௨௫
மாதவிருவ ௬௭௭
மாதவரொள்ளவி ௬௮௭
மாதிப்பரிசு ௮௦
மாதருவுருதி ௯௨
மாத்தனிராவிலே ௬௬
மாயையசவிழ ௭௮
மாயைதினை ௨௨௨
மாயைதன் ௫௧௦
மாயைநோன்றிடு ௪௮௬
மாயைபோக ௨௧௨
மாயைப்பெயர் ௭௬
மாயைமுலைக்கிளை ௧௧௪
மாயையாதன் ௧௮௨
மாயையிடையை ௧௬௫
மாயையையகன்று ௧௮௧
மாயைவந்து ௧௬௭
மாரவேள்கிலை ௮௯
மாரனெடுத்து ௫
மாலருந்திப ௨௦௧
மானுதான்முகது ௬௨
மாலைவாய்மனை ௨௦௫
மாறருமலமனே ௨௦௧
மாறனடித்த ௫௫௯
மானமுருயிரு ௧௫௪
மானனையாய் ௧௯௦
மானிடப்பிறவி ௧௫௭

மி.

மிடியடவிநப்ப ௨௬௭
மிடியனொருசெய் ௭௭
மின்போலழிய ௬௦௫

மீ.

மீனசெந்தி ௫௫௯

மு.

முகங்கிளைங்கிறு ௪௦
முகிழ்மதியணிபவன் ௧௮௮
முடையிடை ௨௬௪
முக்கணயகன் ௬௯௫
முடிக்குமனர் ௨௨௧
முதல்விசீயுரை ௧௭௬
முதனிலை ௫௨௪
முத்தளவெய்யலை ௮௭
முரசொலி ௫௨௬
முல்லைக்கொடை ௬௯
முற்றியகல்வியின் ௬௬௫
முற்றுமாறன் ௪௭௨
முனியார்தருவாசு ௭௨
முனிவிலை ௫௬௦
முனிவுதேல் ௫௦
முன்புகழ்ந்தனை ௨௮௮
முன்னியதொன்பு ௯௭
முன்னிருந்த ௫௬௦
முன்றுறநின்ற ௨௦௦

மூ.

மூத்தனிஙருர் ௫௮௪
மூவாதனவோன ௧௯௯

மெ.

மெய்த்தட ௬௬௬
மெய்த்தவம்பயின் ௨௦௯
மெய்மைமிகுமே ௪௭௧
மெய்ம்மையிம் ௫௦

மே.

மேருபங்கர ௪௫௫
மேவுதியின ௪௮௦

மை.

மைத்தடநெடுங் ௧௧௮
மைந்தனையின்று ௨௬௯

மொ.

மொழியிறுனிலைவா ௨௮௭

மோ.

மோதமில்குருசர் ௪௧௪
மோகினிசகலை ௧௫௪
மோகினிதவஞ்செய் ௧௨௮
மோட்டிளமுலையீர் ௧௨௫

யா.

யாக்கைதாமென் ௬௨
யாக்கைகுநிலையினி ௪௫௯
யாக்கொழில் ௬௪௯
யாவருந்தன ௪௭௭
யாவர்க்குமொப்ப ௬௫௫
யாவனென் ௬௪௨
யாவையாமி ௬௨௨
யாவுதுசெய்வ ௫௧௧
யானினைந்தன ௪௯௦
யதுனென ௫௪௦

வ.

வசவுதிலை ௫௫௧
வசவுனுள்ளம் ௫௨௬
வசவனைமுதலா ௪௪௨
வசவன் ௪௨௯
வஞ்சநாடக ௨௧௪
வஞ்சினநடக்கை ௨௭௮
வடைபடி ௫௪௨
வணக்கிமதும் ௧௧௮
வணங்கியவர்வ ௬௮௯
வணங்கியவேலே ௬௫௮
வணங்குமாதின் ௬௧௯
வண்டாழுளாபோ ௧௭௧
வண்டொடாதவர் ௨௭௪
வந்தகல்விருந் ௨௮௯
வந்தீவார்வருபவர் ௫௬௫
வந்தனன்வசவ ௨௬௭
வந்தனைசெய்து ௬௨௫
வந்துபரமசிவ ௬௧௨
வந்துபொன்னெயில் ௧௯௫
வந்துவேந்தன் ௨௬௨
வயங்குமாயை ௧௦௪
வயலிடஞ் ௫௦௨
வரிக்கயல்செங் ௫௯
வருகவென்கட ௧௮௧
வருமுலையினைநக் ௮௯
வளாயில் ௪௨௧
வலமாலை ௪௯௯
வலம்புரிவளை ௧௬௦
வலியவனிடத்து ௬௫௪
வல்லவென் ௬௯௧
வல்லினொங்கை ௨௮௫
வல்லிதன்மனத் ௨௦௬
வல்லியுள்ளமுறிக் ௧௬௫
வழுவினையன்றி ௫௬௯
வள்ளனுன் ௪௨௯
வள்ளவின்றே ௪௦௨
வன்னவல்வசவன் ௬௭௬
வறியனுவன் ௫௯

வா.

வாங்கியமுடங்கு ௨௯௬
வாங்கும்வாளிற ௪௯௯
வாங்குவாளினை ௭௭
வாச்வனரியயன் ௧௯௦
வாடியமருங்கு ௨௪௭
வாதிக்கொன்றே ௨௭௬
வாயின்மவன் ௨௭௯
வாயுதிற்ப ௧௭௫
வாயுளொசெய் ௧௧௯
வாய்த்துளவம் ௮௪
வாரனொகு ௫௯௬
வார்க்குறுங்கும ௧௧
வாவிச்செங்கம ௫௮
வாவியாவுறுதன் ௫௫
வாவியாலயம் ௬௬௦
வானமல்லேன் ௫௯௬
வானிடைக் ௫௧௮
வாவெரிந்து ௪௭௦

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
வி.		**வீ.**	
விஞ்சைமாதர்	௬௯௮	வீடுபுறகீ	௧௩௩
விஞ்சையர்மகிழ்	௫௪௭	வீடுவெப்பவ	௬௨௭
விஞ்சையருனர்	௬௫௧	வீடுவிருப்பி	௩௨௭
விடங்குலாமதர்	௧௦௯	வீரங்குறைவிலர்	௨௭௭
விநயனாகாம	௬௧௩	வீரமாகேச	௨௩௭
விடைக்கொடி	௬௨௯	வீரமாதரும்	௬௩
விண்ணவர்க்குந்தி	௧௫௨	வீரவேள்வனே	௪௦௨
விதலைச்செய்தொ	௯௪	**வெ.**	
வியனிலமெய்ய	௫௭௨	வெற்சொலை	௬௪௮
விரதங்கள்வேறு	௨௭௦	வெண்டிங்கனிலவு	௨௨௨
விரிந்தசெந்தசங்	௫௯௪	வெண்மைபெறுன்	௩௯௭
விரிக்தவரைற	௬௩௦	வெம்மைபொழிந்	௪௭௯
விருந்திறுத்திவா	௨௫௦	வெள்ளவேணி	௯
விருப்புவெறுப்பு	௫௫௯	வெள்ளிமால்	௨௨
விளைந்தெழுந்து	௨௩௦	வெருவறவிவணக	௪௮௯
விலக்குமுறைவ	௩௩௩	வெருவுறப்பயம்	௬௩௩
விளையில்வெள்	௪௨௩	**வே.**	
விலைவரம்பறியாமணி	௯௫	வேண்டியவடிவ	௯௪௭
விலையரம்பறியாவாடை	௪௨௩	வேண்டியவனைத்	௪௪௦
விழுந்துறைப்ப	௩௩௮	வேந்தன்மாமனை	௨௮௪
விழுந்தனகொடிய	௨௬௮	வேயைக்குமென்	௯௩
விழுவன்மீள	௨௩௦	வேளாளித்தனன்	௪௦௬
விளங்கிழை	௬௯	வேறுமொருவ	௪௭௬
விளங்கொளி	௨௫	வேனலம்பதி	௯௭
வி[illegible]ம்புற	௪௨௪	வேனினன்பகலின்	௪௬௮
வி[illegible]று	௬௪௪	வேலொடுங்கண்	௨௨௯
விளைப்பயன்	௨௮௮	**வை.**	
விளையமெத்த	௬௩௯	வைத்தவன்றன்னை	௩௫௬
விளையிறைநொடு	௮௪௯		

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫௨	௩௦	சால்லெக்சய்	சொல்லெச்சய்
௫௭	௧௦	மணிவயி	மணிவெயி
௯௦	௨௪	ஆரோபிக்கப்பட்டன	ஆரோபிக்கப்பட்டன
௭௦	௧௯	காரணமயாதோ	காரணம்யாதோ
௭௨	௨௮	துருவாசகப்பேர்	துருவாசப்பேர்
௭௯	௧	ஒரறு	ஓராறு
௧௨௪	௨௭	முமுக்கலின்	முழக்கலின்
௧௩௫	௩	ஆட்வனது	ஆடவனது
௧௩௫	௨௨	இஷ்டாருத்தாபத்தி	திருஷ்டாருத்தாபத்தி
௧௪௦	௨	ஒருதிரணம்போ	ஒருதிரணம்போ
௧௪௭	௯	முன்டேர்வெண	முன்டோவெண
௧௪௭	௧௭	சேட்டவளவில்	சேட்டவளவில்
௧௬௯	௪	நீலோர்பலத்தை	நீலோற்பலத்தை
௧௯௪	௩	ரஜோகுணவடிவ	ரஜோகுணவடிவ
௧௯௫	௧௧	வென்றதபாலது	வென்றம்பாலது
௧௯௫	௨௧	பாரத்திறல்	பாரத்திறல்
௧௯௯	௨௮	ஓர்	ஓர்
௧௭௨	௨௨	ஒன்றுகிய	ஒன்றுகிய
௧௭௩	௫	ஐம்பொறிகளோ	ஐம்பொறிகளோ
௧௭௮	௨௯	கனவாதிருந்தான்	கனவாளிருந்தான்
௧௮௦	௨௫	குரமளிர்	குரமகளிர்
௧௯௧	௮	பூசையால	பூசையால்
௧௯௨	௧௯	வாப்புற	வாய்ப்புற
௧௯௩	௩	ஒளிக்கவேண்டாம்	ஒளிக்கவேண்டாம்
௧௯௬	௪	ஆனையென்றன்	ஆனையென்றன்
௧௯௭	௨௮	முன்றுறை	முன்றெறை
௨௦௩	௨௧	அழுந்தவிமலை	வந்தவிமலை
௨௦௪	௮	நுன்றது	சேரன்றது
௨௦௫	௨	பாரெவா	பாரெலா
௨௦௬	௪௫	விமலை	விமலை
௨௦௮	௧௯	இனையாருபேர்	இனையாருபெயர்
௨௧௯	௧௦	எஎன்றுசொன்றன்	என்றுசொன்றன்
௨௪௮	௧௧	விரிவ	விரிவு
௨௪௮	௧௫	ஓங்குகாமங்கள்	ஓங்குகாமங்கள்
௨௪௯	௨௩	ஓர்பொருள்	ஓர்பொருள்
௨௭௭	௨௨	பூமிவில்வந்த	பூமியில்வந்த
௨௯௪	௪	கொள்வதுபொலு	கொள்வதுபோலும்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩0௧	௨௫	ஏறபாடு	ஏற்பாடு
௩௨0	௪	சங்ரஞகவே	சங்கரஞநவே
௩௨௪	௮	சிறயன்	சிறியன்
௩௨௫	௨௨	பாத்திலமென்று	பார்த்திலமென்று
௩௨௮	௧௫	சிதப்பரமாகத்தானமை	சிதம்பரமாகத்தானமை
௩௩௮	௧௭	தாக்குறுவரோ	தாக்குறுவரோ
௩௫௫	௩	எஎ்ணிக்கொள்வோன்	எண்ணிக்கொள்வோன்
௪00	௮	இட்டலிங்கத்தினிலையை	இட்டலிங்கத்தினிலையை
௪0௮	௨௩	வந்தடைந்தவனவாகிய	வந்தனைந்தனவாகிய
௪0௮	௨௯	இவற்றுல்லெய்தும்	இவற்றுலெய்தும்.
௪௧௫	௧௩	அகவனறிவரு	அங்கவனறிவரு
௪0௫	௯	அத்திச்செய்த	அத்திசெய்த
௪௨௨	௧௨	அடலரும்	அலமரும்
௪௨௫	௧௬	சாவிரஞான	விசாரஞான
௪௨௯	௧௧	அருவினை	இருவினை
௪௩0	௭	பொருந்துவித	பொருந்தும்விதம்
௪௪0	௧௩	சிதைந்துகற்றலின்	சிதைந்துநிற்றலின்
௪௪௫	௨௮	சுரார்முனிவரர்கடம்முன்	சுரார்முனிவரர்கடம்முன்
௪௪௭	௨௬	இருகுறு	உருகுறு
௪௪௯	௮	நகமைதிப்பிள்ளை	நகைமதிப்பிள்ளை
௪௫௧	௮	ஊர்	உளர்
௪௫௩	௨௭	நாறுசேந்தே	நாறுசெந்தே
௪௫௪	௨	மலர்திளைந்து	மலர்திளைத்து
௪௯௮	௧௪	ஆண்பெண்ணிரண்டிலுள்	ஆண்பெண்ணிரண்டிலுள்
௪௭௨	௧௪	அதிதீவரபருவங்கன்	அதிதீவரபருவங்கண்டு
௪௮௮	௪	வைகிமுறை	வைகுமுறை
௪௯௫	௨௮	டிருந்தனன்	டிருந்தனன்
௫0௯	௨௭	ணிறைபவ	ணிறையவ
௫0௯	௩௨	இறைவன்	இறையவன்
௫௨௧	௮	கல்யாணமே	கல்வியாணமே
௫௩௧	௧௪	அற்சிப்பர்	அர்ச்சிப்பர்
௫௩[illegible]	௫	ஓர்சிலர்	[illegible]